T. N. L. A. Debates
Official Report
VOL: LIX No: 4 and 5
March, 7 and 8. 1984

C

V211,31 N84
N84.59.4 & 5
136225

வெளியீடு 18-12-84]

[Issued 18-12-84

2761
8 Mar 1985
தமிழ்நாடு அரசு

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 7, 1984 - தொகுதி LIX எண் 4
Wednesday, the 7th March 1984 - Volume LIX No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 paise

N811, 31 1984

N84-59-4-4

136225

சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

7—3—1984


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள் :** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 517—545 |
| **2. ஒத்திவைப்புத் தீர்மானம் :** | |
| விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பெற்ற சைதாப்பேட்டை மாணிக்கம் காவல் நிலையத்தில் மரணமடைந்துள்ளது .. .. | 546—558 |
| **3. தகவல் கோரல் (தொடர்ச்சி)—** | |
| (அ) தமிழக பஸ்களும், கார்களும் பெங்களூருக்குப் போகமுடியாமல் இருக்கும் நிலை | 559 |
| (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேதம் .. .. | 721—722 |
| **4. கவன ஈர்ப்பு :** | |
| மழையினால் தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதம் .. .. .. .. | 560—575 |
| **5. அரசினர் சட்ட முன்வடிவுகள் :** | |
| (அ) பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1984—தொடர்ச்சி .. .. .. | 576—640 |
| (ஆ) சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1983 .. .. .. | 640<br>644—692 |
| (இ) பொது விற்பனைவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984 .. .. .. .. | 692—701 |
| **6. அறிவிப்பு :** | |
| பேரவை அலுவல் .. .. .. .. | 641—643 |


D 2 A 326—1

பக்கங்கள்

7. அரசினர் தனித் தீர்மானங்கள் :

(அ) 1974 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை தமிழ்நாட்டில் பின்பற்றுதல் .. 701—711

(ஆ) நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையம், சென்னை அணுமின் நிலையம் இவற்றிலிருந்து உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கு ஒதுக்குதல் 712—722

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 722—723

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 7, புதன்கிழமை.

மாசி 24, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்"

எளிதாகச் செய்து முடிக்கக் கூடிய இடங்களில் எல்லாம் வினையைச் செய்து முடித்தல் நல்லதாகும். இயலாதபோது முடிக்கும் வழிகளை ஆராய்ந்து அதனைச் செய்ய வேண்டும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

உறுக்குறியிட்ட வினாக்கள்.

*Charges levelled against the former Principal, Regional Engineering College, Tiruchirappalli.*

195. **Q.*—No. 16868.—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the findings on each of the charges levelled against the former Principal, Regional Engineering College, Tiruchi;

(b) the action taken on prima facie charges found; and

(c) the mode of enquiry adopted regarding the enquiry into the charges?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ), (ஆ) மற்றும் (இ) அறிக்கை ஒன்று **சட்டமன்றப் பேரவையின் முன் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

**724-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1984 மார்ச் 7

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்லூரி முதல்வர் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டு சம்பந்தமாக இந்த விவர அறிக்கையில் இறுதியாக இந்த கல்லூரிய்ய விட்டு அவர் சென்று விட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை தேவையில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியானால் கல்லூரியை விட்டு சென்றுவிட்ட காரணத்திற்காக மட்டும் தான் அவர் மீது நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா? அல்லது வேண்டுமென்றே இது செய்யப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படவில்லை, ஆதாரம் இல்லை என்ற அடிப்படையில் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அவரும் வெளியே போய்விட்ட காரணத்தால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி முதல்வர் பற்றி இந்த மன்றத்திலேயே பல விவரங்கள் சென்ற காலத்தில் சொன்னது உண்டு. அமைச்சர் அவர்களுக்கு அந்த விஷயங்கள் தெரியும். அப்படிப்பட்டவர் மீது அந்தக் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை செய்து நிரூபிக்கப்படவில்லை என்று இப்போது நமக்கு பதில் வந்துள்ளது. ஆனால் அவர் அந்தக் கல்லூரியை விட்டு சென்றுவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் அவர் அரசாங்கத்தின் சர்விஸில் இன்றைக்கும் இருக்கிறாரா? வேறு எந்த இடத்திற்கு சென்றாலும் இது மாதிரி இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அவர் குற்றம் அற்றவர் என்பது தான் இன்றைக்கு அரசாங்கத்தின் நிலையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இப்போது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை, ஆகவே தேவையில்லை என்ற நிலை இருக்கிறது என்றும் அவர்கள் அங்கே இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தவறு செய்தால் நாம் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. இப்போது இருக்கிற இடத்தில் ஏதாவது தவறு செய்து புகார் வந்து அது நிரூபிக்கப்படுமானால் நாம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.



1984 மார்ச் 7]

## திண்டிவனம் அரசினர் கலைக் கல்லூரிக் கட்டிடம்.

196. (*வினா எண் 18988)—திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் திரு. அ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரியில் முதல் மாடி கட்டுவதற்கான செயற்திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் நிதியாண்டில் இக்கல்லூரியில் முதல் மாடி கட்டுவதற்காக ரூ. 2·30 லட்சத்திற்கு ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. முதல் மாடியில் வகுப்பறைகள் கட்டும் வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு தளம் வரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. காம்., பி.எஸ்ஸி., வகுப்புகள் துவக்கப்பட்டதால் அந்தக் கல்லூரியில் மாணவர்கள் படிப்புக்கு இட நெருக்கடி இருப்பது பற்றி அமைச்சர் அவர்கள் அங்கே நடந்த விழாவுக்கு வந்தபோது நேரடியாக உணர்ந்து இருக்கிறார்கள். வருகின்ற கல்வி ஆண்டில் புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க கருணையோடு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க இருக்கின்ற காரணத்தால் உடனடியாக அந்த முதல் மாடி வகுப்புகளைக் கட்டி கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு தரப்பட்டிருக்கிற விவரம் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். வேலை ஆரம்பித்தால் சீக்கிரம் முடிப்பார்கள். அதற்கு மேல் ஒரு விவரம் தரப்பட்டிருக்கிறது. தற்போது போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தால் கல்லூரி விடுதி இயங்காமல் இருக்கிறது. கல்லூரி விடுதியை வகுப்பு அறையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வகுப்பு பற்றாக்குறையை பூர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும்.

[1984 மார்ச் 7

**நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தும் திட்டம்.**

197 (*வினா எண் 20066)— திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருவதால் எப்போது துவக்கப்படும் என்பது குறித்து தற்போது முடிவெடுக்கப்படவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெல்லை, சேலம் ஆகிய இடங்களில் அமைக்கவிருக்கும் பல்கலைக் கழகங்களில் எந்தெந்த மாவட்டங்களில் உள்ள கல்லூரிகள் அடங்கும் ? அதன் அதிகார வரம்பு எந்தெந்தக் கல்லூரிகளுக்கு வரும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அவைகளெல்லாம் இன்னும் பரிசீலிக்கப்படவில்லை.

**கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் பாலிடெக்னிக் அமைக்கும் திட்டம்.**

198—(*வினா எண் 20634)— திரு. கு. ரமணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டத்தில் தனியார் துறையில் ஒரு பாலிடெக்னிக் அமைக்க அரசு அனுமதியளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்த விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டத்தில் தற்போது 9 தனியார் பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் (1983-84) நடப்பாண்டு முதல் அனைத்துச் செலவினங்களையும் நிர்வாகமே ஏற்று நடத்தும் கோவை, சங்கரா பல்தொழில் நுட்பப் பயிலகமும் ஒன்று.



திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தத் தொழில் கல்வி நிறுவனங்களில் அதிக மாணவர்கள் சேருவதற்கு இடம் கிடைக்காமல் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக இருக்கும் விஷயம் அரசுக்குத் தெரியும். தனியார் துறையிலே, இந்தக் கல்வி நிறுவனங்களை அனுமதிப்பதால் அவர்கள் அந்த மாணவர்களிடத்தில் பல ஆயிரக் கணக்கில் தைரியமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசினுடைய நிதி ஆதாரத்தை வைத்துத்தான், நாம் அரசின் மூலமாக இதை ஆரம்பிக்க முடியவில்லை என்ற நிலையில்தான், தனியார் ஆரம்பிக்க முன்வருகின்றபொழுது அதற்கு அனுமதி தரலாம் என்று இந்த அனுமதியை வழங்குகிறோம்.

இதிலே 50 சதவீதம் இடத்தை மார்க்குகள் பிரகாரமும், ஜாதி விகிதாச்சார அடிப்படையிலேயும் செய்யப்பட வேண்டுமென்று நாம் வரையறை செய்திருப்பதால் அதிலே அவர்கள் தவறைச் செய்ய எந்தவிதமான நியாயமும் இல்லை. அந்த முறைப்படி அந்த மார்க் பிரகாரம் அவர்கள் போட்டுத்தான் தீர வேண்டும்.

மீதி உள்ள 50 சதவீதம் இடங்களை அவர்கள் விருப்பப்படும் யாருக்கு வேண்டுமானாலும் தரலாம் என்கிற ஒரு சலுகையாகத்தான் தந்திருக்கிறோம்.

இப்பொழுது எனக்குச் சொல்லப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பார்க்கிறபொழுது, ஒரு மாணவருக்கு ஏறக்குறைய 5,000 முதல் 6,000 ரூபாய் வரை செலவாகிறது. இவ்வளவு ரூபாய் அதை நடத்துகின்றவர்களுக்குச் செலவாகும். ஆகவே, அந்த அடிப்படையில் அவர்கள் தங்கள் சொந்தப் பணத்தைப் போட்டுத்தான் அந்த பாலிடெக்னிக்குகளை நடத்திக் கொண்டு வருகிறார்கள். இதிலே அவர்கள் பல பேர்களிடத்திலேயோ அல்லது அவர்கள் நடத்துகின்ற தொழில் நிறுவனங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களிடத்திலேயோ நன்கொடையாகப் பெற்று நடத்துவதற்குத்தான் பலரும் முயற்சி எடுத்துக் கொண்டு, இப்பொழுது நாம் நிறைய தந்திருக்கிறோம்.

சென்ற ஆண்டுகூட நிறைய பாலிடெக்னிக்குகள் தந்து, இந்த ஆண்டும் நிறைய தந்து கொண்டிருக்கின்ற காரணத்தால் நிறைய மாணவர்கள் வந்து மோதுகின்ற நிலைமைகள் இப்பொழுது பெரும்பாலும் தவிர்க்கப்பட்டு இருக்கிறது.

நாம் நினைத்துக் கொண்டிருப்பது, அப்படித் தவறு செய்கிறார்கள் என்ற நிலைமைகள் இருக்குமானால், அந்தப் புகார்களை வைத்து நாம் விசாரித்து எப்பொழுது வேண்டுமானாலும் அந்த அனுமதியை ரத்து செய்து விடலாம்.

[1984 மார்ச் 7

அதுமட்டுமல்ல, பாலிடெக்னிக்குகளைப் பொறுத்தவரையில் அந்த நிர்வாகக் குழுவில் அரசினுடைய பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மூலமாக நாம் அதைத் திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே, வருகின்ற புகார்களை வைத்து நாம் அதைச் சரி செய்யத் தக்க நடவடிக்கை எடுக்கலாம் என்று இருக்கிறோம்.

ஆகவே, ஒரு நல்ல காரியம் செய்கிறபொழுது தவறுகள் ஏற்படுகின்றன என்றால்—அதற்காக, நல்ல காரியம் செய்கிறார்கள் என்பதற்காக தவறுகளை நாம் ஆதரிக்கவில்லை—நல்ல காரியம் செய்வதற்காக ஆதரவு தருகின்ற நேரத்தில் தவறுகளைக் குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கையை நாம் எடுக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அரசாங்கத்தினுடைய நிதி நிலைமையில், இப்பொழுது தொழில் கல்வி கற்றுக் கொடுக்கும் பாலிடெக்னிக்குகளை—ஐ. டி. ஐ. களைத் துவக்குவதற்கு இடமில்லை என்று சொல்கிறார்கள். கோவை மாவட்டத்தில் மேற்கொண்டு ஐ.டி.ஐ. ஏற்படுத்த வேண்டும் என்று இதே மன்றத்தில் கேட்டேன். அதற்கு ஒரு ஷிப்ட்தான் ஏற்படுத்தினார்களே தவிர ஐ.டி.ஐ. ஏற்படுத்தவில்லை. பிறகு பல தனியார் பாலிடெக்னிக்குகள் ஏற்படுத்தப்பட்டு, அதில் வசதி படைத்தவர்கள்தான் சேர முடிகிறது. பத்தாயிரம், இருபதாயிரம் என்று பணம் கொடுக்கக்கூடிய வசதி படைத்தவர்களின் பிள்ளையைத்தான் அதில் சேர்க்க முடிகிறதே தவிர, சாதாரண தொழிலாளி குடும்பத்திலேயோ, விவசாயி குடும்பத்திலேயோ உள்ள படிக்கும் பையன்கள் அதில் சேர முடியவில்லை. இதுதான் உண்மை ஆகவே, அரசாங்கம் நிதி நிலைமையின் காரணமாக இனி மேற்கொண்டு பாலிடெக்னிக்குகள் முழுவதையும் தனியாருக்கே கொடுப்பதே என்றும், அரசாங்கம் நடத்துவதில்லை என்றும் முடிவுக்கு வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் அந்த முடிவை மாற்றி அரசாங்கமும் சில பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்துவதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு ஆரம்பிப்பதே இல்லை என்ற முடிவுக்கு வரவில்லை. அதுமட்டுமல்ல, இப்பொழுது ஆரம்பித்து நடத்தப்படும் பாலிடெக்னிக்குகள் இப்படியேதான் இருக்கும் என்றும் சொல்லவில்லை. நம்முடைய நிதி ஆதாரம் நல்லபடியாக இருக்கும் நேரத்தில், கிராண்டைக் கொடுக்க ஆரம்பித்தால், 100-க்கு 90 பங்கு அவர்கள் நம் விதிமுறைகளுக்குக் கீழ் கொண்டு

[முற்பகல் 9-10]

வரலாம். ஆகவே நிதியாதாரம் நல்லபடியாக வருகின்ற நேரத்தில் இந்த பாலிடெக்னிக்குகளையும் நல்லபடியாகக் கட்டுப்படுத்த முடியும்; நாமும் வேறு பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1984 மார்ச் 7]

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்குகளில் இடம் கிடைக்காத நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு, ஆரம்பக்கல்வியில் இருந்தே தொழில் கல்வியினைக் கற்றுத்தருகின்ற ஒரு திட்டத்தை வருகின்ற கல்வி ஆண்டிலிருந்து ஏற்படுத்த இருக்கின்றது. இதை மனதில் கொண்டு பாலிடெக்னிக்குகளை நிறைய ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, நாம் சில வரைமுறைகளை வைத்திருக்கிறோம். அதாவது இன்னின்ன வசதிகள் இருந்தால் அனுமதிப்பதாகச் சொல்லி இருக்கிறோம். அதற்கு உட்பட்டு எந்த நிறுவனம் வருகின்றதோ அந்த நிறுவனத்திற்கு நாம் அனுமதி தருகிறோம். அதிலே எந்தவிதமான பாரபட்சமோ, வித்தியாசமோ நாம் காட்டுவதில்லை.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரப்போகும் கல்வி ஆண்டிலிருந்து மேலும் பல பாலிடெக்னிக்குகளைத் திறக்க இருப்பதாகக் கூறினார்கள். கடந்த ஆண்டிலே தனியார்களுக்கு அதிகமான பாலிடெக்னிக்குகளைத் தருவதாக உத்தரவை அளித்தார்கள். எந்தெந்தத் தகுதிகள் இருந்தால் தனியார்களுக்குப் பாலிடெக்னிக் துவங்க அனுமதி வழங்கப்படுகின்றது? மேனேஜ்மென்ட் கோட்டா என்று ஒரு நிலை இருக்கின்றது. அதிலே எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறார்கள் ? அதிகமான பணத்தை வாங்கிக் கொண்டு மாணவர்களைச் சேர்க்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது. அப்படிப்பட்ட குறைகளையும், குற்றச்சாட்டுகளையும் தவிர்ப்பதற்குரிய வகையில் அரசு அறிவுரை வழங்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, முதல் ஆண்டு 4 இலட்சம் ரூபாய், அடுத்த ஆண்டு 2 இலட்சம் ரூபாய், அதற்கடுத்த ஆண்டு 2 இலட்சம் ரூபாய், அதற்கடுத்த ஆண்டு 2 இலட்சம் ரூபாய் என்று மொத்தம் 10 இலட்சம் ரூபாயை என்டோமென்ட் கட்டவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்.

அடுத்து 25 ஏக்கருக்கு மேற்பட்டு இடம் இருக்க வேண்டும் என்றும் கேட்கிறோம். மேலும் தற்காலிகமாக நடத்துவதற்குக் கட்டிடங்கள் தேவை என்றும் சொல்கிறோம். ஏறக்குறைய ஒரு கோடியிலிருந்து ஒன்றேகால் கோடி ரூபாய் அளவுக்கு கட்டிடங்களும் அதற்குத் தேவையான உபகரணங்களும் வாங்க வேண்டும் என்று சொல்கிறோம். இவற்றை எல்லாம் மூன்று, நான்கு ஆண்டு காலத்தில் அவர்கள் செய்ய வேண்டும்.

[1984 மார்ச் 7

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலில், பாதியை மேனேஜ்மெண்டுக்கு ஒதுக்குவதாகச் சொன்னார்கள். அந்தப் பாதியும் கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று 10 ஆயிரம் ரூபாய் பணம் வாங்கிக்கொண்டு தான் சேர்ப்பதாகச் சொல்லப் படுகின்றது. அந்தப் பணம் இல்லை என்றால் யாரையும் சேர்ப் பதில்லை என்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட அவல நிலைமை இருப்பதன் காரணத்தால் அரசாங்கமே குறைந்த அளவிலாவது. பாலிடெக்னிக்குகளை ஏற்படுத்தி 'அவற்றை சிப்ட் முறையில் நடத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, நாம் வசதிப்பட்ட இடங்களில் எல்லாம் சிப்ட் முறையினை ஏற் படுத்தி வருகிறோம். அரசாங்க பாலிடெக்னிக்குகள் மற்றும் இந்த பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் எவ்வளவு அதிகமான மாணவர்களைச் சேர்க்க முடியுமோ அவ் வளவு அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதற்குரிய நடவடிக் கைகளை நாம் எடுத்து வருகிறோம். தனியார் பாலிடெக்னிக்கு களை எடுத்துக்கொண்டு பார்க்கின்றபோது சில புகார் கள் வருவதற்கு இடம் இருக்கின்றது. ஆனால் அதுவே கூடாது என்று சொல்லி ஒதுக்கிவிடுகின்ற அளவிற்கு நிலைமை இல்லை.

**திரு. நி. கா. நல்லப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பாலிடெக்னிக்குகளைப் புதியதாகத் தொடங்குவதைப் பொறுத்தவரையில் அரசிடத்திலே போதிய பணம் இல்லாத காரணத்தால்தான் தனியாருக்கு ஒதுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் 50 சதவீதம் தகுதி யுள்ள மாணவர்கள் அங்கே சேர்க்கப்படுவதாகவும் கூறினார்கள். சமீபத்திலே என்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்கப்பட்டிருக் கக்கூடிய பாலிடெக்னிக்கில் கூட தகுதி இருக்கின்ற மாணவர் களிடத்திலே கூட பணம் வாங்காமல் சேர்ப்பதில்லை. ஆகவே, தயவுசெய்து அப்படிப்பட்ட தகுதியுள்ள மாணவர்களுக்கு அடுத்த வருடமாவது கிடைக்கின்ற வகையிலே, அந்த 50 சத வீதம் அவர்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச் சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** இது கேள்வி அல்ல. வேண்டுகோள்தான். எனவே இதற்குப் பதில் சொல்ல வேண்டிய தில்லை.



1984 மார்ச் 7]

## சென்னை மாநகரில் தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள வட்டங்கள்.

199—(*வினா எண். 17474) – திரு. த. வேணுகோபால் ; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை மாநகராட்சியில் எந்தெந்த டிவிஷன்களை தூய்மைப் பகுதியாக அரசு அறிவித்துள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு*:** வட்டங்கள் 50, 51, 89, 97 மற்றும் 99 தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன.

**திரு த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, சென்னை நகரிலே சில வட்டங்களைத் தூய்மைப் பகுதியாக அறிவிப்பின் மூலம் அறிவித்தார்கள். இந்த தூய்மைப் பகுதியாக அறிவித்தது போல் சென்னையை பொறுத்த மட்டில் இன்னும் பல வட்டங் களில் செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இந்த மாதத்திலிருந்து அண்ணாசாலையை தூய்மைப் பகுதியாய் மாற்றுவதற்குரிய திட்டம் அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக் கின்றது. இதற்காக 220 துப்புரவுத் தொழிலாளர்கள் தேவை என்றும், இரண்டு லாரிகள், இரண்டு துப்புரவு மேற்பார்வை யாளர்கள் தேவை என்றும் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக் கின்றது. ஆகவே அரசினுடைய முடிவை எதிர்பார்த்து உடனடி யாக இது செயல்படுத்தப்படும்.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னை மாநகராட்சியைப் போல தமிழ்நாட்டி லுள்ள மற்ற மாநகராட்சிகளுக்கும் இந்தத் தூய்மைப் பகுதி திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ? அதோடு இந்த தூய்மைப் பகுதிக்காக ஆண்டுதோறும் சென்னை மாநகராட்சிக்கு அரசு எவ்வளவு செலவழிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது கோவை, மதுரை போன்ற மாநகராட்சி கள் இருக்கின்றன. அங்கே எல்லாம் இது போன்ற சாலைகளை துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று, லிட்டர் ஃப்ரீ சோனாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், இந்தத் திட்டம் இங்கே இருக்கக்கூடிய காமராஜர் சாலையிலே இன்று நடந்து வருகின்ற காரணத்தினால், பாக்கி இருக்கின்ற மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகளிலே கூட இது போன்ற திட் டத்தை அமுல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 7

**திரு. வே. இராஜசேகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள்வட்டங்களின் எண்களை மட்டும்சொன்னார்கள் அவற்றின் பெயர்களைக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோட்டில் தூசிக்கு மட்டும்தான் தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வட சென்னையிலே பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் கரித் தூள்களினால் அந்தப் பகுதியிலுள்ள இலட்சக்கணக்கான மக்களும் பிறக்கும் குழந்தைகளும் பல ஆண்டுகளாக நிரந்தர நோயாளிகளாக இருக்கும் அந்த நிலையைப் போக்க விஞ்ஞான ரீதியில் நடவடிக்கை எடுக்க அரசும் அமைச்சரும் உத்தரவு பிறப்பிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுது நாம் அறிவித்திருக்கிற லிட்டர்ஃப்ரீ சோன்—தூய்மைப் பகுதி திட்டம் இராஜாஜி சாலை மற்றும் காமராஜர் சாலையில் ரிசர்வ் வங்கியிலிருந்து நேப்பியர் பாலம் வரையிலுள்ள பகுதியும் தென்புறமாக உள்ள காமராஜர் சாலையிலிருந்து புதிய லைட் ஹவுஸ் வரையிலும் இருக்கக்கூடிய பகுதியும்தான்—ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள பகுதி—அந்தத் தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பேசின் பிரிட்ஜைப் பொறுத்தவரையிலும் அது இன்னமும் தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலுங்கூட இருக்கக்கூடிய துப்பரவுப் பணிகளை தீவிரப்படுத்த, மெக்கானிக்கல் ஸ்வீப்பர்ஸ் என்கின்ற, இயந்திரங்களைக் கொண்டு, அதன் மூலமாக இரவு நேரத்திலே அந்தப் பணிகளை எல்லாம் நடத்த வேண்டுமென்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். சமீபத்திலே நான் டெல்லி மாநகராட்சிக்குச் சென்றிருந்தேன். அங்கே துப்புரவுப் பணிகள் எப்படியெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து அது போன்ற மெக்கானிக்கல் ஸ்வீப்பர்ஸ்— இயந்திரங்களால் துப்பரவுப் பணிகளை மேற்கொள்ளும அளவுக்கு, இந்த மாநகராட்சியிலே கூட இரண்டு மெக்கானிக்கல் ஸ்வீப்பர்ஸ் வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் ரூ. 10 இலட்சம் அதற்குச் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.



1984 மார்ச் 7]

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4 வட்டங்களைச் சொல்லி இந்த வட்டங்கள் தூய்மைப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். இந்தப் பகுதிகளிலே இருக்கிற வீதிகளை மட்டும் தூய்மையாக வைத்திருப்பதற்கு அங்கே வேலை செய்யப்படுகிறது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றையதினம் சென்னையிலே குடிசைப் பகுதிகள் மிக மோசமாக இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் வட சென்னையிலே ஒரு குடிசைப் பகுதியையும் தென் சென்னையிலே ஒரு குடிசைப் பகுதியையும் எடுத்துக்கொள்ளவும் அந்தக் குடிசைப் பகுதிகள் தூய்மையாக இருக்க, தூய்மையான நடவடிக்கைகள் எடுத்து, தூய்மைப் பகுதிகள் என்று அறிவிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்த அளவில் அதிகமான குடிசைப் பகுதிகள் இருக்கக்கூடிய நகரமாக மாறி இருக்கிறது. ஏறத்தாழ 1,400 ஸ்லம் ஏரியாஸ், குடிசைப் பகுதிகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, வட சென்னையிலே ஒன்றும் தென் சென்னையிலே ஒன்றும் எடுக்க வேண்டுமென்றாலுங்கூட அது குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகத்தான் செய்யப்பட வேண்டும். இப்பொழுதிருக்கிற விதிமுறைப்படி நகராட்சி நேரடியாகக் குடிசைப் பகுதிகளுக்குச் செல்ல முடியாது. குடிசைப் பகுதிகளிலே இருக்கக்கூடிய குப்பைக் கூளங்களை எல்லாம் எடுத்து மாநகராட்சியினுடைய பகுதியிலே போட்டால் தான், மாநகராட்சிக்கு அதிகாரம் வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில்தான் நாம் நடைமுறைப்படுத்திக்கொண்டு வருகிறோம். ஆனாலுங்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்கனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், குடிசை மாற்று வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கக்கூடிய பகுதிகளையும் கூட மாநகராட்சியே எடுத்துச் செய்ய வேண்டுமென்று. அதற்கான பணியாளர்கள் நமக்குக் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும.

(முற்பகல் 9-20)

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லிட்டர்ஃப்ரி சோன், தூய்மைப்பகுதி என்று மத்திய சென்னையில் ஒரு சில இடங்களும், தென் சென்னையில் ஒருசில இடங்களும் அறிவித்து செய்துகொண்டு வருகிறீர்கள். என்னுடைய தொகுதியில் நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் நான் அமைச்சர் அவர்களிடம் அப்போதே கேட்டேன், எங்கே அசுத்தம் இருக்கிறதோ அதைத் தான் தூய்மைப்படுத்த வேண்டும். வட சென்னையைப் பொறுத்தவரையில் அது எப்போதுமே ஒரு அசுத்தமான பகுதி. ஆகவே அப்படிப்பட்ட வட சென்னை பகுதியை ("Litt r Fr Zon

தூய்மைப் பகுதியாக அறிவிப்பார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குரிய முயற்சியில் ஈடுபடுவதாக உறுதி அளித்தார்கள். இப்போது மத்திய சென்னை மற்றும் தென் சென்னைப் பகுதிகளை தூய்மைப் பகுதியாக அறிவித்து செய்து கொண்டு வருகிறீர்கள். அதேபோல வட சென்னை பகுதியையும் தூய்மைப் பகுதியாக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் உதவி கூட மிக மிகத் தேவை. வட சென்னையைப் பொறுத்தவரையில் வட சென்னை எப்போதுமே வளராத பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே வட சென்னைக்குப் புதிய திட்டங்களை மாநகராட்சி மூலம் கொடுத்து வருகிறோம். குக்ஸ் பிரிட்ஜில் பாலம் கட்டும் வேலை பல்லாண்டுக் காலமாக நடைபெறாமல் இருந்தது. அந்தப் பாலத்தை கட்டி இந்த மாதத்தில் முடிக்க இருக்கிறோம். பல்வேறு பணிகளை வட சென்னைக்குக் கொண்டு வர முனைப்பாக இருந்து வருகிறோம். இப்போது சமீபத்திலே நெல்சன் மாணிக்க முதலியார் சாலையில் ஒரு சுரங்கப்பாலத்தை ஏறத்தாழ 1 1/2 கோடி ரூபாய் செலவில் கட்டி திறந்து வைத்திருக்கிறோம். அதுபோன்ற பணிகளை நாம் வட சென்னைக்கு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். வட சென்னையைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல அந்தப் பகுதியில் இருக்கிற பாதைகளில் ஒரு சிலப் பாதைகளை துப்பறவுப் பாதைகளாக, தூய்மைப் பாதைகளா அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. நான் கொடுத்த உறுதி மொழியைக் காப்பாற்றுகிற வகையில் கண்டிப்பாகச் செய்து கொடுப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### ஓமலூர்—மேச்சேரி சாலையிலிருந்து தொளசப்பட்டி வரை செல்லும் சாலையிலுள்ள பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் திட்டம்.

200—(*வினா எண். 18190)—திரு. செ. செம்மலை; மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஓமலூர்— மேச்சேரி சாலையிலிருந்து தொளசம்பட்டி வரை செல்லும் சாலையை ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைத்து அதிலுள்ள பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?





**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இச்சாலை 9.6 கி.மீ. நீளமுள்ள தார் சாலையாகும. இதில் 0/0-5/6 வரை மற்றும் கி.மீ. 7/2— 9/6 வரையிலான பகுதி அரசு மாவட்ட இதர சாலை ளாக நெடுஞ்சாலைத் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர சாலையில் கி.மீ. 5/6 முதல் 7/2 வரையுள்ள விடப்பட்ட பகுதியான 1.6 கி.மீ. தூரம் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பிலுள்ள பகுதியை நெடுஞ்சாலையிடம் ஒப்படைத்து பழுதடைந்த பாலத்தைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு சாலையில் பேருந்து இயங்குகிற நாளிலிருந்து அந்தச் சாலை ஒன்றிய சாலையாக இருந்தாலும், பஞ்சாயத்து சாலையாக இருந்தாலும், நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்வதுதான் நடைமுறையாக இருந்து வருகிறது. இந்தக் குறிப்பிட்ட சாலையைப் பொறுத்தவரையில் 15 ஆண்டுகளாகப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தும் தவறுதலாக விடப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே தற்போது பரிசீலனையில் இல்லையென்று சொன்னாலும் அந்தச் சாலையின், முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக போக்குவரத்து உள்ள சாலையாக இருப்பதால் 4, 5 பேருந்துகள் அதிலே இயங்கிக் கொண்டிருப்பதாலும், அந்தச் சாலை ஒன்றிய சாலையிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு எடுத்துக்கொள்ளப்படவும், மேலும் அந்தச் சாலையில் இருக்கிற பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்துத் தரவும் அமைச்சர் அவர்கள் முயற்சிகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாலையின் முக்கியத்துவத்தை அறிந்து இந்த ஆண்டிலே அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்டு அந்தப் பாலம் புதுப்பிக்கப்படும்.

### தேனியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம்.

201—(*வினா எண். 18424)—திரு. வெ. இரா. ஜெயராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனியில் ஒரு விளையாட்டு மைதானம் (Stadium) அமைக்க தேனி-அல்லி நகரம் நகராட்சியிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாவை ?

[1984 மார்ச் 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தேனியில் ஒரு விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு தேனி அல்லி நகர்ப் நகராட்சியின் ஆய்வில் உள்ளது. அச்செயற்குறிப்பு அரசுக்கு இன்னும் வரவில்லை.

(ஆ) விளையாட்டு மைதானம் அமைப்பதற்குத் தேவையான நிலங்களைப் பெற காட்டு இலாகாவினரிடமும் மற்றும் சிட்கோ நிறுவனத்தாரிடமும் நகராட்சி ஆணையரால் தொடர்பு கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அய்யலூர்-ஆலம்பாடி சாலை அமைக்கும் பணி.

202—(*வினா எண். 19863)—திரு. வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் தாலுகாவில் அய்யலூர்-ஆலம்பாடி சாலை அமைக்க 1981-82 ஆம் ஆண்டில் ரூபாய் 28 இலட்சம் அரசு ஒதுக்கியும் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இச்சாலைப்பணி 1982-83 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்ட வேலையின் கீழ் இதர சாலைப் பிரிவில் மேற்கொள்ள ரூ. 20 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்குத் தலைமைப் பொறியாளர் தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளார். சாலைப் பகுதி 6 கிலோமீட்டரிலிருந்து 8 கிலோ மீட்டர் வரையில் மண்வேலை முடிவடைந்து உள்ளது. சாலைப் பகுதி 8 கி.மீ.-லிருந்து 12 கி.மீ. வரையில் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. சிறு பாலப்பணிகளாக அந்தப் பணியில் 25 குழாய்ப் பாலப் பணிகள் உள்ளடங்கியுள்ளன. 11 பணிகளில் ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மற்றும் 11 பணிகளில் ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன. மீதமுள்ள 3 பணிகளில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மண் ரோடு போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அந்த ரோடில் கூட சமீபத்தில் பெய்த மழை காரணமாக மண் எல்லாம் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறதே, அது அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்துள்ளதா ? மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நேஷனல் ஹைவேஸ், ஹைவேஸ் சாலைகள், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் போடப்பட்ட ரோடுகள் எல்லாம் சமீபத்தில் ஏற்பட்ட மழை காரணமாக மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. ஆகவே பணம் ஒதுக்கி அந்தப் பழுதடைந்துள்ள சாலைகளைச் செப்பனிட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தின் காரணமாக ஏற்பட்ட பல்வேறு விளைவுகளால் சாலைகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. தற்சமயம் பராமரிப்புப் பணிகள் வேகமாக முடுக்கி விடப்பட்டிருக்கின்றன. எந்தெந்தப் பகுதிகளில் சாலைகள் மோசமாக இருக்கின்றனவோ அவைகள் எல்லாம் சீர்செய்யப்படும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, வேடசந்தூர் தாலுகாவில் உள்ள அய்யலூர்-ஆலம்பாடி சாலைக்காக 28 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தும் அதற்கான வேலைகளை சமீபத்தில் தான் சிறிது ஆரம்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் என் தொகுதியில் ஆயக்குடி-மருங்காபட்டினம் சாலைக்குச் சென்ற ஆண்டு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியும் இன்றுவரை வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. வருடக்கணக்காக வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதால் ................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் உரையாற்றுவதற்கு இடமல்லை.

1982–ஆம் ஆண்டு இறுதிவரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளோர் எண்ணிக்கை.

203—(*வினா எண். 17571)—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1782-ம் ஆண்டு இறுதிவரை தமிழகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை ?

(ஆ) வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலை கிடைக்காமல் வயது வரம்பைக் கடந்தவர்களுக்கு அரசு காட்டும் சலுகை என்ன ?

[1984 மார்ச் 7

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) 31-12-1982 நிலைரப்படி, தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்து வேலைக்காக காத்திருந்தோரின் எண்ணிக்கை கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| ஆண்கள் | .. .. | 10,74,333 |
| பெண்கள் | .. .. | 3,41,585 |
| மொத்தம் | | 14,15,918 |

(ஆ) வேலை வாய்ப்பு அலுவலகங்ஙளில் பதிவு செய்து வேலை கிடைக்காமல் வயது வரம்பைக் கடந்தவர்களுக்கு சலுகை ஏதும் தற்போது காட்டப்படவில்லை.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, வேலையில் சேருவதற்கான வயது வரம்பு 28 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் வயது வந்தவர்களுக்கு, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்களுக்கு, வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, ஏற்கனவே வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பிற்படுத்தப்பட்டவர்கள், முற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இவர்களுக்கு தேவையைக் கருதி அல்லது வேலைக்கு அவர்களை அமர்த்திக்கொள்பவர்கள் என்னென்ன விதிமுறைகளை அமைத்து இந்த வயதுக்குள்ளாகத்தான் அமர்த்த வேண்டும் என்று கேட்கும்போது அந்தப் பணிக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகைகளில் ஏற்கனவே அரசாங்கம் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படும்.

திரு. சீ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் அனைத்திலும் ஒரே முறையில்தான் வேலைவாய்ப்பு தாவதில் முன் உரிமை வழங்கப்படுகிறதா அல்லது ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் மாற்றுமுறை கடைப்பிடிக்கப்பட்டு வேலை வாய்ப்பு அளிப்பதில் முன் உரிமை தரப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அத்தனை வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் ஒரே முறையைத்தான் நாம் பின்பற்றி வருகிறோம்.



1984 மார்ச் 7]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிந்துள்ள ஏறக்குறைய 15 இலட்சம் பேர்கள் பத்து ஆண்டுகளுக்கும் அதற்கும் மேலாகக் கூட பதிந்து விட்டு வேலை இல்லாமல் இருக்கிறார்கள். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை கொடுப்பது என்று மத்திய அரசும் சொல்லியுள்ளது, மாநில அரசும் சொல்லியுள்ளது. அந்த அடிப்படையில் இதுவரை ஏதாவது வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது இனிமேலாவது ஒரு குடும்பத்தில் யாருக்குமே வேலை இல்லாமல் இருந்தால் அல்லது கிடைக்காமல் இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கு முன் உரிமை அளித்து ஒரு குடும்பத்தில் ஒருவருக்கேனும் வேலை கொடுக்கும் முறையில், குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு இவ்வளவு பேர்களுக்கு வேலை கொடுப்பது என்று ஒரு வரையறை ஏற்படுத்திக் கொள்ள திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் இன்னின்ன தகுதிகள் படைத்திருக்கக் கூடியவர்களுக்கு வேலை கொடுப்பதற்குப் பெயர்கள் அனுப்பப்படுகின்றன. அந்த வகையில் 1982ஆம் ஆண்டைப் பொறுத்த அளவில் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகப் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, ஆண்களும் பெண்களுமாகச் சேர்த்து ஏறத்தாழ 72,578 பேர்களாக இருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவேடுகளில் வேலைக்காகக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 14,15,918 பேர்களாக இருக்கிறது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் தமிழகம் முழுவதும் ஆய்வு நடத்தி, எந்தக் குடும்பத்தில் ஒருவருக்குக்கூட வேலையில்லாமல் இருக்கிறதோ, அந்தக் குடும்பத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று ஆய்வு நடத்தி இருக்கிறார்கள். அந்த வகையில் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 6 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. அதிலே ஒருவருக்குக்கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு முன்னுரிமை அளிக்க தனியாக அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு நிறுவனத்தில் 1982-ஆம் ஆண்டு பதிவு செய்தவர்கள்கூட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், 1973, 1974-ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டிருப்பவர்கள் இன்னும் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்பட

வில்லை என்ற புகார்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றனவா? அப்படிப்பட்ட புகார்களை நிவர்த்தி செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலைக்கு அனுப்பப்படுகின்றபோது கண்டிப்பாக சீனியாரிட்டி அடிப்படையில் அனுப்ப வேண்டுமென்று அரசு பிரத்தியேகமான ஆணை பிறப்பித்திருக்கின்றது. குறிப்பாக உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், 1982-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு வேலை கிடைக்கின்ற நிலைமையும், 1972-ஆம் ஆண்டிலே பதிவு செய்து இன்னும் வேலையில்லாமல் இருக்கும் நிலைமையும் மாறாக அனுப்பிவிடுவதையும் குறித்து சில சமயங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அத்தகைய தவறுகளைத் தவிர்க்க கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், இத்தகைய குறைபாடுகளைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக அண்மையிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், இந்த ஆண்டில் பட்ஜெட்டில் அறிவித்த ஒரு திட்டத்தின் அடிப்படையில், 1984-85-ஆம் ஆண்டைப் பொறுத்த அளவில், இத்தகைய நிலைமையைப் போக்க வேண்டுமென்ற உணர்வோடு, 6 இலட்சம் ரூபாய் செலவில் பிரத்தியேகமாக கம்பியூட்டர் முறையைக் கையாண்டு, முதலில் சென்னை நகரில் இருக்கக்கூடிய 5 வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நடவடிக்கையை பரீட்சார்த்தமாக, சென்னை நகரில் மட்டும் செய்துவிட்டு, பிறகு மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க அரசு இருக்கிறது. இந்த வகையில் கம்பியூட்டர் முறை கொண்டுவரப்படுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் குறைபாடுகள் வருங்காலத்தில் எழாது என்று நான் கருதுகிறேன்.

204. (*Q.—No. 20051).—Thiru P. VENKATASUBRAMANIAM: Will the Hon. the Minister for Adi Dravidar Welfare be peased to state whether the Government have taken any statistics in regard to the educated unemployed in the State?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆம்.



மருங்காபுரி ஒன்றியப் பகுதியில் ஆய்விலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்.

205— (*வினா எண் 19125)— திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஒன்றியத்தில் ஆய்வில் இருந்து வருகிற நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ன?

(ஆ) கடந்த 10 ஆண்டுகளாக மேற்படி ஒன்றியத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவையேனும் நிறைவேற்றப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், செட்டிவாரியில் ரூபாய் 39 இலட்ச மதிப்பீட்டில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டமும், துவரங்குறிச்சிக்கருகே நல்லூர் கிராமம் காட்டுவாரியின் குறுக்கே ரூ 7·99 லட்சம் மதிப்பீட்டில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டமும் தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) இல்லை.

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீண்ட காலமாக ஆய்வில் இருக்கிறது. அங்கே நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தும் பொருட்டு, அந்த வேலைகளைத் துரிதமாக செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இப்போதுதான் இந்தத் திட்டம் ஆய்வில் உள்ளது. அந்த ஆய்வு நிலை முடிவடையும் தருவாயில் இருக்கிறது. ஆய்வு முடிந்தவுடன், மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் ரெவின்யூ அதிகாரிகளுடைய அனுமதி பெற வேண்டும். அதற்குப் பிறகுதான், அவர்கள் பரிந்துரை செய்த பிறகுதான், அரசின் ஒப்புதலுக்கு வரும். அதற்குப் பிறகுதான், அதைப் பற்றி என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைச் சொல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 7

சேத்தியாத் தோப்பிலிருந்து வனகிரி வரை வெள்ளாற்றுக்கரைக்கும் தடுப்புச்சுவர் அமைக்கும் திட்டம்.

206—(*வினா எண் 19681)—திரு. ஏ. இராமலிங்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் சேத்தியாத் தோப்பிலிருந்து புவனகிரி வரை வெள்ளாற்றுக் கரைக்குத் தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் எப்போது துவங்கி முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது. திட்டம் சம்பந்தமாக கேட்கப்பட்டுள்ள சில கூடுதல் விபரங்கள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

பிளவக்கல் நீர்த்தேக்கத்திலிருந்து விழுப்பனூர் சிராமத்திற்குத் தண்ணீர் வழங்கும் திட்டம்

207—(*வினா எண்19750)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் வட்டம் வத்திராயிருப்புக் கிராமம் பிளவக்கல் நீர்த் தேக்கத்திலிருந்து விழுப்பனூர் கிராமத்திற்குத் தண்ணீர் கொடுக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : ஆம்.

மோர்தானா அணை கட்டும் திட்டம்

208—(*வினா எண் 19975)—திரு. கே. ஆர். சுந்தரம் : மற்றும் திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் அருகில் மோர்தானா அணை கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்த வேலை எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.



1984 மார்ச் 7]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் அருகில் உள்ள இந்த மோர்தானா அணைத் திட்டம் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டம் 1967ஆம் ஆண்டு முதற்கொண்டே கேட்கப்படும்போது எல்லாம் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இந்த ஆய்வு எப்போது முடிந்து, அந்த வேலைகள் எப்போது துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பாலாறு ஆற்றுப்படுகையில் கிடைக்கும் உபரி நீரைக் கொண்டு அமைப்பதாகும். பாலாறு படுகை நீரைப் பயன்படுத்துவதற்கு ஒரு சில விதிமுறைகள் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பாலாறு படுகையில் உபரி நீர் வரத்துக் குறைவாக இருப்பதாலும், அங்கே நீர்ப் பற்றாக்குறை இருப்பதாலும் அந்தத் திட்டத்திற்கு முன்னாள் வருவாய் வாரியம் ஒப்புதல் வழங்கவில்லை. என்றாலும் இந்தத் திட்டத்தை வேறு வகையில் கொண்டு வர முடியுமா என்பதை ஆய்வு செய்வதற்காக 5 ஆண்டுக்காலம் அந்தப் பகுதியில் கிடைக்கும் நீரின் அளவை ஆய்வு செய்யக் கோரப்பட்டுள்ளது. ஏற்கெனவே அந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டபோது இத்தகைய உரிய விவரங்களைத் தராத காரணத்தால்தான், இந்தத் திட்டத்திற்குத் தேவையான புள்ளி விவரங்களைத் தராத காரணத்தால் தான், தற்போது 5 ஆண்டுக்கால நீர் அளவை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நீர் அளவு எடுத்த பிறகு அங்கே உபரி நீர் இருப்பதாகத் தெரிந்தால் அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவது பற்றி தகுந்த பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். ஆகவேதான் இப்படிப்பட்ட பதில் அடிக்கடி வந்து கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே, 5 ஆண்டுக்கால நீர் அளவு பாலாறு படுகையில் எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அந்த 5 ஆண்டுக்காலம் என்பது எந்த வருஷத்தில் இருந்து கணக்கிடப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா ? அதனுடைய இறுதி மதிப்பு எப்போது தயாரிக்கப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, 1977-78ஆம் ஆண்டு நிலவரப்படி ரூ. 332 இலட்சம் மதிப்பீட்டில் அத்திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு கூடுதலாகத் தேவைப்படுகின்ற புள்ளிவிவரங்கள் சேகரிக்க வேண்டியிருந்ததால், 5 ஆண்டுக்கால ஆய்வு நடந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் கணக்குப் போட்டுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1984 மார்ச் 7

## தர்மபுரி மாவட்டத்தில் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.

209—(*வினா எண் 18410)—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1982-83-ல் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) எந்த இடத்தில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) 1982-83ல் தர்மபுரி மாவட்டத்தில் வேலம்பட்டி தேவீரஹள்ளி, பிக்கம்பட்டி, மற்றும் அவலப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள் Villag l v l Community Chawkie Rearing Centr s ஆரம்பிக்கப்பட்டு செயல் பட்டு வருகின்றன.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் ஒராண்டுக் காலத்திற்கு முன்பு போட்டேன். ஆனால் இன்று வரையில் தருமபுரி மாவட்டத்தில் பட்டுத் துறை மூலமாக என்னென்ன முன்னேற்றத் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டன என்பதை அறிவிக்க இயலுமா ?. அதோடு தருமபுரி மாவட்டத்தில் விதைக்கூடு பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா? அது எவ்வளவு தொகையில் எங்கே ஆரம்பிக்கப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 25 கிராமிய இளம்புழு மையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. 1982-83ஆம் ஆண்டு மேலும் 40 மையங்களைத் தமிழ் நாட்டில் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. 1983–84ஆம் ஆண்டில் பகுதி 2ஆவது திட்டத்தின்கீழ் மேலும் 50 கிராமிய இளம்புழு மையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியது. 1984ஆம் ஆண்டு சனவரி முடிய 30 மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் சித்தேரி என்ற இடத்தில் பயோடின் கூட்டுப் புழு அமைக்கும் திட்டத்திற்காக ரூ. 14.28 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, நிலம் எடுக்கப்பட்டு விட்டது. விரைவில் கட்டிடப் பணிகள் தொடங்கப்படும்.



1984 மார்ச் 7]

## சிறுதொழில் துவங்க முன்வருவோரை ஊக்குவிக்க சுழல் நிதி ஏற்படுத்தும் திட்டம்.

210—(*வினா எண் 20815.)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் துவங்க முன்வருவோரை ஊக்குவிக்க சுழல் நிதியை எற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச் சுழல் நிதி வழங்குவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தச் சுழல் நிதித் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இந்தத் திட்டம் செயல் படுத்தப்படும்போது இதற்கு எவ்வளவு முதலீடு செய்யப்படும் ? மாவட்டங்களிலே தொழில் தொடங்குவதற்கு இந்தச் சுழல் நிதியிலிருந்து உதவி செய்யப்படுமா ? அல்லது ஏதாவது குறிப்பிட்ட தொழில்களுக்குத்தான் இதிலிருந்து உதவி செய்யப்படும் என்று விதி வகுக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, மத்திய அரசால் பின்தங்கிய வட்டங்கள் என்பதாக அறிவிக்கப் பட்ட 33 வட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கும் ஏற்கெனவே உள்ள தொழில்களை விரிவுபடுத்துவதற்கும் 15 சதவீதம் மைய மூலதன மானியம் வழங்கப்படுகிறது. சிட்கோ-தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் சிப்காட் மூலம் இந்த மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் சிறுதொழில்களுக்கு மானியம் வழங்கும் பணியைத் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனமும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனமும் மேற்கொண்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே சொல்லுகின்ற விவரங்களிலிருந்து எனக்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. நான் தெரிந்து கொள்ள விரும்புவது, இந்தச் சுழல் நிதி என்கிறபோது, மொத்தமாக, கார்ப்பரேஷன் போன்ற ஏதாவது ஒரு அமைப்பு ஏற்படுத்தப் படுமா ? விண்ணப்பிக்கின்றவர்களுக்கு எந்த எந்தத் தொழிலுக்கு உதவி அளிக்கப்படும் ? மத்திய அரசால் சில மாவட்டங்கள் அல்லது வட்டாரங்கள் தொழில் துறையில் பின்

தங்கியவை என்று அறிவித்திருப்பதாகச் சொன்னார்கள். அது தவிர நம்முடைய அரசு சில வட்டங்களைப் பின்தங்கிய பகுதி என்று அறிவித்துள்ளது. அந்த வட்டாரங்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் கிடைக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் சிட்கோ மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சில சமயங்களில் சிட்கோ நிறுவனத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக மத்திய அரசை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசிலிருந்து நிதி கிடைக்க 3 முதல் 8 மாதங்கள் வரை காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இந்த தாமதத்தினால் தடை ஏற்படாமல் இருக்க, சுழல் நிதி அமைத்து, அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. மி. வின்சென்ட்:** தலைவரவர்களே, சிறுதொழில் தொடங்க முன் வருவோருக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் கீழ் சுழல் நிதியிலிருந்து உதவி அளிப்பதில் காலதாமதம் ஏற்பட காரணம் என்ன? அதைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** தலைவரவர்களே, மத்திய அரசிடமிருந்து நிதி கிடைப்பதில் 3 முதல் 8 மாதம் வரை காலதாமதம் ஏற்படுவதால் தொழில் தொடங்க முன்வருவோருக்கு உடனடியாக நிதி உதவி அளிக்க முடியவில்லை. எனவே இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த சிட்கோ நிறுவனத்தில் 60 இலட்சம் ரூபாய் சுழல் நிதி ஏற்படுத்துவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மற்றும் சிப்காட் நிறுவனம் ஆகியவற்றிற்கும் சுழல் நிதித் திட்டத்தை விரிவுபடுத்த அரசு பரிசீலனை செய்கிறது.

## போக்குவரத்துக் கழகங்களில் 1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரையிலான உபயோகமற்றப் பேருந்துகளின் எண்ணிக்கை.

123—(*வினா எண் 17232)—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து அரசு போக்குவரத்துக் கழகத்திலும் 1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரை உபயோகமற்ற பேருந்துகள் எத்தனை?

(ஆ) பள்ளிகளுக்கு மான்ய விலையில் வழங்கியவை எத்தனை?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) 1410

(ஆ) 85



## 1982—83-ல் தனியார் போக்குவரத்துகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்.

124—(*வினா எண் 19214)—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1982—83 ஆம் ஆண்டில் தமிழகத்தில் புதிதாகத் தனியார் போக்குவரத்துகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் (வழித்தடங்கள்) எத்தனை (மாவட்டவாரியாக)?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:**

| | |
|---|---|
| செங்கல்பட்டு .. .. | 2 |
| வடார்க்காடு .. .. | 5 |
| தென்னார்க்காடு .. .. | 5 |
| தர்மபுரி .. .. | 4 |
| புதுக்கோட்டை .. .. | 6 |
| கோயம்புத்தூர் .. .. | 4 |
| பெரியார் .. .. | 4 |
| மதுரை .. .. | 5 |
| மொத்தம் .. | 35 |

இதர மாவட்டங்களில் உரிமங்கள் ஏதும் தனியாருக்கு வழங்கப்படவில்லை.

**திரு. மு. அப்பாதுரை:** : தலைவரவர்களே, இந்த உரிமங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் எத்தனை என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி:** தலைவரவர்களே, ஆதிதிராவிட மக்கள் என்று சொல்வதைவிட பின்தங்கியவர்கள் அதாவது தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒருவர் மட்டும் விண்ணப்பம் செய்தார்; அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமமுடைய அரசு படிப்படியாக போக்குவரத்துத் துறையில் அரசுடமையாக்குகின்ற கொள்கையை மேற்கொண்டிருக்கின்ற காரணத்தால், வரக்கூடிய காலங்களில் இப்படி தனியார்களுக்குக் கொடுக்காமல், அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 7

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி : தலைவர் அவர்களே அதை இன்னும் ஒரு மணி நேரத்தில் பேசி முடிவு எடுக்கலாம். அதற்கு முன்பாக ஒன்றைச் சொல்கிறேன். இதுவரைக்கும் தனியாருக்குக் கொடுக்கக் கூடாது என்று தான் முடிவு வைத்தி, ருக்கிறது. 35 வழித் தடங்களுக்கு அரசே நேரடியாக கொடுக்க வில்லை. நீதிமன்றத்தின் டைரக்ஷன் பேரில் கொடுக்கவேண் டிய நிர்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பஸ்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்று 1973 ஆம் ஆண்டு சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டது. இந்த சட்டமுன்வடிவு வந்த பிறகு, 1973 முதல் 1977 வரை தனியார் களுக்கு பேருந்து உரிமங்கள் வழங்கப்பட்டனவா ? அப்படி யானால், எத்தனை உரிமங்கள் வழங்கப்பட்டன என்பதை அமைச் சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வழங்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு என்பதை இப்போது உறுப்பினர் அவர்கள் கேட்க மாட்டார் என்று கருதுகிறேன். இந்த பில் வரும்போது நிச்சயமாக சொல்லயிருக்கிறேன்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் போக்குவரத்து உரிமங்கள் வழங்கப்படும் போது ஏதாவது நியதிகள் கடைபிடிக்கப்படுகின்றனவா ? குறிப் பிட்ட பிரிவினருக்குத்தான் கொடுக்கப்படுகின்றனவா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, உரிமங்கள் விதிகளின் பேரில் தான் வழங்கப்படுகின்றன. நிறைய விதிகள் கடைபிடிக்கப்பட்டு, அனுபவம், திறமை இவை களையெல்லாம் பார்த்துத்தான் செய்கிறோம். ஒரு குறிப் பிட்ட வகுப்பினருக்குத் தரப்படவில்லை என்றாலும், தாழ்த் தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமென்ற கொள்கையின் பேரில், எல்லாத் துறைகளிலும் 18 சதவீதம் தருவது போல் இந்தத் துறையிலும் 18 சதவீதம் அவர்களுக்குக் கொடுக்கப் படுகிறது. இவர்களுக்காக அரசாங்கம் அக்கறை காட்டிவருகி றது. எதிர்பார்த்த அளவிற்கு விண்ணப்பங்கள் வரவில்லை. வருகின்ற விண்ணப்பங்களுக்கு நாம் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனி யார்களுக்கு பர்மிட் வழங்கப்படும் நேரத்தில், அரசு என்ன கையி டிங் பிரின்ஸிபள்ஸ் கடைபிடிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நான் ஏற்கனவே சொன் னேன். அந்தப் பேருந்தை நடத்துவதில் அவர்களுடைய முன் அனுபவம், ஆர்வம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்துத் தான் தரப்படுகிறது. இதிலே இரண்டு, மூன்று முறைகள் இருக்கின்றன. நகர்ப்புற பேருந்து, புறநகர்ப் பேருந்து, ஷார்ட் ரூட் என்ற மூன்று வகையாக இருக்கின்றன. அவர்களுடைய அனுபவம் பார்த்து, நகர்ப்பேருந்து உரிமங்கள் கொடுக்கப்படு கின்றன. புற நகர்ப் பேருந்துகளைப் பொறுத்தவரையில், யார் யார் ஏற்கனவே செய்துகொண்டு வருகிறார்களோ, அவர் கள் தான் நடத்தமுடியும் என்ற நம்பிக்கையில் ஏற்கனவே தொழில் செய்பவர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

40 கிலோ மீட்டருக்குக் குறைவாக இருப்பது ‘ ஷார்ட் ரூட் ’ என்று அழைக்கப்படும். அந்த அளவிற்கு யார் யார் விரும்பி னாலும், புதிதாக இந்தத் தொழிலில் ஆர்வம் காட்டுகிறவர்களுக் குக் கொடுக்கப்படுகிறது. இன்னும் பல விதிமுறைகளைக் கடை பிடித்து வருகிறோம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே புதிதாக 5 உரிமங்கள் வழங்கப் பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த ஐந்தும் யார் யாருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ? அந்த உரிமங்களைப் பெறுவதற்கு நீதி மன்றத்திற்கு தாழ்த்தப்பட்டவர்கள் கூடச் சென்றார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தனித் தனியாக பெயர்கள் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஆர்வம் காட்டினால் யார் யாருக்கு கொடுக்கப்பட்டது என்பதை தெரிவிக்கிறேன். தாழ்த் தப்பட்டவர்கள் கூட நீதிமன்றத்திற்கு சென்று வந்தார்களா என்ற கேள்வியை வைத்தார்கள். எல்லா வகுப்பினரும் மனுக் களைப் போடுகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களும் போடுகி றார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் மனு போட்டிருந்தால், அவர் களுக்கு நாம் கொடுத்துவிடுகிறோம். நீதிமன்றத்திற்குச் சென் றார்களா என்ற விவரங்கள் தற்போது இல்லை.

[1984 மார்ச் 6

## தமிழ்நாட்டில் விடப்பட்டுள்ள பலமுறைப் பேருந்துத் தடங்கள்.

125—(*வினா எண். 19671)—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் Multi-pronged Route ஆக எடுத்து நகரப் பேருந்துகள் விடப்படுகின்றனவா ?

(ஆ) எத்தனைத் தடங்களில் விடப்பட்டுள்ளன ?

(இ) எந்தெந்த நகரங்களிலிருந்து அவ்வாறு விடப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) 878 தடங்களில் வழித்தடங்கள் விடப்பட்டுள்ளன. போக்குவரத்து மண்டல வாரியாக பட்டியல் I அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) போக்குவரத்து மண்டல வாரியாக பட்டியல் * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு கார்ப்பொரேஷன் பேருந்துகள் ஓடக் கூடிய வழித் தடங்களிலே இவ்வளவு வருமானத்திற்குக் குறைவாக இருந்தால், அந்த வழித் தடங்களில் ஓடக்கூடாது என்று உலக வங்கி நிபந்தனை விதித்துள்ளதா ? அந்த நிபந்தனை காரணமாக ஏதேனும் வழித் தடங்கள் மேற்கொள்ளப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : : தலைவர் அவர்களே, உலக வங்கி எந்த எந்த போக்குவரத்துக் கழகங்களுக்கு எல்லாம் கடன் கொடுக்கிறதோ, அங்கே எல்லாம் ஒரு முறையை வைக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் வண்டியை நிறுத்த வேண்டும் என்று சொல்கிற இடங்களில் எல்லாம் நாம் நிறுத்துவது கிடையாது. அதிலே லாபம் ஈட்ட முடியுமா என்பதை எல்லாம் தொடக்கத்திலே நாம் பார்த்து நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். பேருந்துகள் எந்த எந்த இடத்திற்கு நிச்சயமாகத் தேவையோ அந்த இடங்களில் எல்லாம் நிச்சயமாக நிறுத்துவது இல்லை. சில இடங்களில் அதிகமான எண்ணிக்கையுள்ள வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தாலும், அல்லது ஒரே வண்டி அதிகமான நடைகள் ஓடிக் கொண்டிருந்தாலும், அதிலேயும் நாம் நடவடிக்கை எடுத்து, அங்கே உள்ள மக்களை எல்லாம் கேட்டு, அதிலே ஏதாவது பிரச்சினை வருமானால் அதையும் கூட நாம் கைவிட்டு இருக்கிறோம்.

*733-ம் பக்கத்தில் இணைப்பு IIஆக அச்சிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 7]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே அரசு படிப்படியாக பஸ் ரூட்டுகளை தேசியமயமாக்கும் கொள்கையை வைத்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் புதிதாக கொடுக்கக் கூடிய பஸ் ரூட்டுகளை தனியாருக்குக் கொடுக்காமல், அரசே எடுத்துக் கொண்டு நடத்த முன் வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அதைத்தான் சொன்னேன். இப்போது நாம் கொண்டு வருகின்ற இந்த பில்லிலே, அதைப் பற்றி விரிவாக நாம் அலசி, ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவோம். உங்களை எல்லாம் கேட்காமல் ஒரு முடிவு எடுக்காமல் விடக் கூடாது என்றுதான், இன்னும் ஒரு மணி நேரத்தில், கேள்வி நேரம் முடிந்தவுடன் நாம் இதைப் பற்றி விரிவாக அலசி ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பல்லவன் போக்குவரத்துக்கழகம் மூலம் இயக்கப்படும் தொடர் பேருந்துகள்.

126—(*வினா எண் 20452)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் மூலம் அறிமுகப் படுத்தி இருக்கும் புதுமையான தொடர் பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இப்போது இயக்கப்படும் தொடர் வண்டி சோதனை முறையில இயக்கப்படுகிறது. இதைப் போன்ற வண்டிகளை அதிகரிப்பது பற்றி இவ்வண்டியின் திறமையான இயக்கத்தையும் ஏற்படும் இலாபத்தையும் பார்த்து முடிவு எடுக்கப்படும்.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறறது என்பதைக் குறிக்கும்.)

[மார்ச் 1984 7

(முற்பகல் 9-50).

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### விசாரணைக்காக அழைத்துச் செல்லப் பெற்ற சைதாப்பேட்டை மாணிக்கம் காவல் நிலையத்தில் மரணமடைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் து. புருஷோத்தமன், இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, பொ. உத்திராபதி, தி. கா. நல்லப்பன், டி. மணி, கே. ஆர். சுந்தரம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மற்றும் திரு. என். வரதராஜன் ஆகியோர், ''சைதாப்பேட்டை சி.ஐ.டி நகரைச் சார்ந்த திரு. மாணிக்கம் என்பவரை விசாரணைக்காகச் சென்னை ஆர்.6 காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற இரண்டு மணி நேரத்தில் இறந்திருக்கிறார். இந்த மரணத்தில் சந்தேகம் இருப்பதாக எண்ணி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையிலே, சி.ஐ.டி. நகரிலே வசிக்கின்ற மாணிக்கம் என்பவர் ஒரு இளநீர் மொத்த வியாபாரி அவர் ஏதோ ஒரு சில்லறை வியாபாரி கடன் கொடுக்கவேண்டும் என்று கேட்டு வருவதற்கு முன்னாலே, கடன் கொடுக்க வேண்டியவர் கொடுத்த புகாரின் பேரிலே, அவர்களை விசாரணைக் கைதியாக குமரன் நகர் காவல் நிலையத்திற்குப் போலிசார் காலை 7 மணிக்கு அழைத்துச் செல்கிறார்கள். அவரை அழைத்துச் செல்வதற்காக வீட்டுக்கு வருகிறார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்கள். அங்கே அவர் வீட்டிலே இல்லாது இருப்பது கண்டு அவருடைய கடைக்குச் செல்லுகிறார்கள். கடைக்குச் சென்றதற்குப் பின்னாலே அவரை அழைத்துச் செல்கிறார்கள். அவரை அழைத்துச் செல்வதற்காக இரண்டு காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், அவர்களுடைய காவல் துறைக்கு வேண்டிய உடுப்பு இல்லாமல் சிவில் டிரஸ்ஸிலே வந்து அழைத்துச் செல்கிறார்கள். உடன் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் வருகிறார். அடுத்து காலை 9 மணிக்கு அவர் காவல் நிலையத்திலே, இறந்து விடுகிறார் அவர் இறந்ததற்குப் பின்னாலே அவரை விசாரணைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று விரும்பிய காவல் துறையைச் சேர்ந்தவர்கள், வீட்டிற்குச் சென்றவர்கள், பின்னாலே கடைக்குச் சென்றவர்கள் இறந்து விட்ட செய்தியை வீட்டிற்குத் தெரிவிக்காமல், அவர்கள் நேரடியாக கே. கே. நகர் மருத்துவ





மனைக்கு இறந்த பிரேதத்தை எடுத்துச் செல்கிறார்கள். அவர்கள் ஒரு ரிப்போர்ட் கொடுக்கிறார்கள். அது ''Brought dead'' அதாவது இறந்த பிரேதத்தை கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று ஒரு சான்றிதழ் தருகிறார்கள். அதற்குப் பின்னாலேகூட, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வீட்டிற்குத் தகவல் கொடுக்கவில்லை. நேரடியாக பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். பொது மருத்துவமனையிலே யாரோ ஒருவர் அவருக்கு வேண்டிய சிலரை வைத்துக் கொண்டு, பஞ்சாயத்து செய்து முடிக்கிறார்கள். முடித்ததற்குப் பின்னாலே போஸ்ட் மார்டம் செய்கிறார்கள். செய்ததற்குப் பின்னாலே ஏறக்குறைய மணி 2, 2½ இருக்கும். அதற்குப் பின்னாலே தான் நேரிடையாகக்கூடச் சொல்லவில்லை. யாரோ ஒருவர் மூலமாக செய்திக் கேள்விப்பட்டு, அங்கேயிருந்து வேறு ஒரு அரசியல் தலைவரை அணுகியிருக்கிறார்கள். அவரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அவரிடம் வெறும் வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள்.** அதற்குப் பின்னாலேதான், அந்த அம்மையாரிடம் உங்களுடைய கணவர் இறந்து விட்டார். சடலம் மருத்துவ மனையிலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக அந்த அம்மையார் அழுது கொண்டே அங்கே சென்றிருக்கிறார்கள்.

சென்றதற்குப் பின்னாலும், அங்கேயிருந்த காவல் துறை உயர் அதிகாரிகள் பயமுறுத்தியிருக்கிறார்கள். அங்கே ஒன்றும் பேசக்கூடாது. எதையும் கேட்கக்கூடாது, அழக்கூடாது என்றும், மரியாதையாக கையெழுத்துப் போட்டுவிட்டு சடலத்தை எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அந்த மாணிக்கம் என்பவர் 9 மணிக்கு இறந்ததற்குப் பின்னாலே, அவருடைய கடையிலே வேலை செய்துகொண்டிருந்த, 2 சிறுவர்களை, யார் முன்னாலே இருக்கும்போது, மாணிக்கத்தை அழைத்துச் சென்றார்களோ, அந்தக் கடையிலே வேலை செய்யும் சிறுவர்களை 9½ மணிக்கு கைது செய்திருக்கிறார்கள். கைது செய்து வேறு ஒரு காவல் நிலையத்திற்கு, பாண்டிபஜார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மாலை 6 மணி வரையில் காவலிலே வைத்திருக்கிறார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. து. புருஷோத்தமன்] [1984 மார்ச் 7

இந்தச் செய்தி பரவக்கூடாது என்று திட்டம் இட்டு, கடையிலே வேலை செய்து வந்த இரண்டு பையன்களை, பாண்டிபஜார் காவல் நிலையத்தில் கொண்டு சென்று வைத்திருக்கிறார்கள். சம்பவம் நடந்தது, இறந்தது, சைதாப்பேட்டையிலுள்ள அசோக் நகர் பக்கத்திலே இருக்கிற குமரன் நகர் காவல் நிலையத்தில். ஆனால், கடையிலே வேலை செய்த அந்த இரண்டு சிறுவர்களை அழைத்துச் சென்றது பாண்டிபஜார் காவல் நிலையத்தில். அதுவும் மாலை 6 மணி வரை வைத்திருக்கிறார்கள். ஆக, இப்படி திட்டம் இட்டே, அவருடைய மனைவிக்கு கூட சொல்லாமல், வீட்டாருக்குச் சொல்லாமல் மறைத்து வைத்திருக்கிறார்கள். விசாரணைக் கைதியாக அழைத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக, பலமுறை தேடி வந்தவர்கள், இறந்துவிட்ட பின்னாலே, இறந்துவிட்ட செய்தியைக்கூட சொல்லாமலே, அதற்குப் பின்னாலே யாரோ ஒருவரை—வேண்டியவர்களை—வைத்து பஞ்சாயத்து பேசி முடித்து, அதற்குப் பிறகு போஸ்ட்மார்ட்டம் செய்து, அதற்குப் பின்னால் பிணத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

மறுநாள் காலையிலே உயர் அதிகாரிகளும், மற்ற அதிகாரிகளும் அரை மணி நேரத்திற்கு ஒரு முறை அங்கே வந்து சடலத்தை எடுங்கள் என்றும், சவத்தை எப்போது எடுக்கப் போகிறீர்கள் என்றும் அடிக்கடி கேட்டு மிரட்டியிருக்கிறார்கள். 3 நாட்களாக சடலம் அங்கேயிருக்கிறது. இடையிலே செய்தி எல்லோருக்கும் தெரிந்து, ஊருக்குத் தெரிந்து பரபரப்பு அடைந்து, அதற்குப் பின்னால் உயர் அதிகாரிகளை அணுகி செய்தியை சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு உயர் அதிகாரி அந்த இடத்திற்கு வருகிறார்கள். அந்த அம்மையாரை, இறந்துவிட்ட மாணிக்கம் என்பவருடைய மனைவி, ஜெயதேவி என்னும் அந்த அம்மையாரை அழைத்துப் பேசியிருக்கிறார்கள். அவருடைய மகன் 15 வயதே நிரம்பிய சிறுவனையும் அழைத்து வந்து பேசியிருக்கிறார்கள். அந்த அம்மையார் அப்போது சொல்லியிருக்கிறார், என்னுடைய கணவருக்கு எந்த வியாதியும் இல்லை. இதுவரையில் எந்த வியாதியிலும் அவர் படுத்ததே இல்லை. நல்ல கட்டுமஸ்தான உடல்வாகு உள்ளவர் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அந்த அதிகாரி அந்த அம்மையாரிடம், அவர் மாரடைப்பினால் இறந்து விட்டார் என்பதை யார் சொன்னால் நீங்கள் நம்புவீர்கள். டாக்டர் சொன்னால் நம்புவீர்களா? அல்லது வேறு யாராவது சொன்னால் நம்புவீர்களா என்று கேட்டிருக்கிறார். அதற்கு அந்த அம்மையார், யார் சொன்னாலும் நம்ப மாட்டேன். அவருக்கு நோய் எதுவும் இல்லை, யாரோ அவரை வேண்டும் என்றே ஏதோ செய்திருக்கிறார்கள் என்று அவருக்கிருந்த நிலையை, அச்சத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.



1984 மார்ச் 7] [திரு. து. புருஷோத்தமன்]

அதற்குப் பின்னாலே மேலும் மிரட்டி விட்டு சென்றிருக்கிறார்கள். இறுதியாக, தமிழ்நாட்டில் இதுவரையில் நடைபெறாத ஒன்று நடைபெற்றிருக்கிறது. மூன்றாவது நாள், காவல் துறை அதிகாரிகள் ஏறக்குறைய 10 வாகன்களை வைத்துக் கொண்டு அங்கே வந்து மிரட்டி, அந்தச் சவத்தை அவர்களே புதைத்திருக்கிறார்கள். நமது நாட்டில், தமிழகத்தில் எத்தனையோ கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. அவைகளில் சில மறைக்கப்பட்டும் இருக்கின்றன. ஆனால், இப்படி சவத்தைக் காவல் துறையைச் சார்ந்தவர்களே எடுத்துச் சென்று புதைத்திருக்கிறார்கள் என்றால், நான் சந்தேகப்படுகிற அளவுக்கு, பொது மக்கள் சந்தேகப்படுகிற அளவுக்கு, அந்தக் குடும்பத்தார்கள் சந்தேகப்படுகிற அளவுக்கு, அவரை யாரோ அடித்திருக்கிறார்கள், அதனால்தான் இறந்திருக்கிறார்கள் என்பது ஊர்ஜிதம் ஆகிறது. தெளிவாகத் தெரிகிறது. அந்த அளவுக்கு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் 300, 400 போலீசார் அடங்கிய பட்டாளத்தை அழைத்துச் சென்று, யாரும் பேசாமல் இருக்க வேண்டும் என்று சொல்லி, ஏதாவது பேசினால் உள்ளே தள்ளி விடுவோம் என்று பயமுறுத்தி, 10 வாகன்களை வைத்துக் கொண்டு, அந்த சாதாரண பிணத்தை எடுக்க ஒரு காரை அமர்த்தி எடுத்துச் சென்று, அந்தச் சவத்தை அடக்கம் செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அவருடைய மகன் 15 வயது நிரம்பிய சிறுவன் சொல்கிறான், அந்தப் பிணத்தை புதைக்கிறபோது மூட்டையாகக் கட்டியிருந்தார்கள் என்று.

(முற்பகல் 10-00)

எங்களுடைய கிறித்துவ சமுதாயத்திலே மூட்டையாகக்கட்டி புதைக்கக்கூடாது என்ற ஒரு சம்பிரதாயம் இருக்கிறது. ஆகவே, மூட்டையைப் பிரித்து அடக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். மூட்டை பிரிக்கப்படுகிறது. அதற்குப் பின்னால், கழுத்திலே காயம் ஏற்பட்டிருக்கிறது. நெற்றியிலே காயம் ஏற்பட்டிருக்கிறது. மேலே பல்வேறு இடங்களில், காயம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு ஒரு கடிதத்தையே அவருடைய மகன் எழுதியிருக்கிறார். இந்த அளவுக்கு அராஜகம் தொடர்ந்து கொலைகளை மறைக்கக்கூடிய சர்க்காராக இருந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட பழிபாவத்திற்கு ஆளாகக்கூடிய சர்க்காராக இருந்துவிடக் கூடாது (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது காவல் துறை சம்பந்தப்பட்ட விவகாரம்.** என்பது நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. து. புருஷோத்தமன் :** இவ்வளவு விஷயங்கள் நடந்ததற்குப் பின்னாலே 3 நாட்கள் இழவு விழுந்த வீட்டில் போலீசார் மிரட்டியிருக்கிறார்கள். சவத்தை எடுக்க வேண்டுமென்று மிரட்டியிருக்கிறார்கள். செத்ததைப்பற்றி உடனடியாகத் தகவலைக் கொடுக்கவில்லை. அவரை அழைத்துப் போவதற்கு 3 முறை வீட்டுக்கு போலீசார் வந்தார்கள். இறந்ததற்குப் பின்னாலே அதைக்கூடச் சொல்லாமல் 2 மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். யாரையும் கேட்காமல் அவர்களே வேண்டியவர்களை வைத்துக்கொண்டு பஞ்சாயத்தை முடிக்கிறார்கள். போஸ்ட்-மார்ட்டம் செய்தார்கள். போஸ்ட்-மார்ட்டம் நடந்த செய்தியைக்கூட தெரிவிக்காமல் அவர்களை பயமுறுத்தி பிரேதத்தை எடுத்திருக்கிறார்கள். ஆளுங்கட்சி நண்பர்கள் கோபித்துக் கொள்வார்கள். நான் சொல்வேன், நம் தமிழ்நாட்டிலே சவத்தை எடுக்கக்கூடிய நிலைமை காவல் துறைக்கு ஏற்பட்டிருக்கிறதா? ஏறக்குறைய 10 வேன்கள், 300 காவல்துறையைச் சேர்ந்தவர்கள், உயர் அதிகாரிகள் எல்லாம் வந்து பயமுறுத்தி அந்த சடலத்தை எடுத்துப் புதைக்க என்ன அதிகாரம் இருக்கிறது என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் கேட்டேன், ஒரு உயர் அதிகாரி சொன்னார், துர்நாற்றம் வீசுகிறது என்ற புகார் வந்தது என்றார். அப்படி, புகார் வந்தால் கார்ப்பரேஷன் இருக்கிறது. ஹெல்த் டிபார்ட்மெண்ட் இருக்கிறது அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். வேண்டுமென்றே நடந்துவிட்ட கொலையை மறைத்த இந்த போலீஸ் துறை மீது விசாரணை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, அந்த குடும்பத்தார்கள் ரீ போஸ்ட்-மார்ட்டம் வேண்டுமென்று கோருகிறார்கள். இப்படிப் பலமுறை நடந்திருக்கிறது. மறுபடியும் புதைத்துவிட்ட சடலத்தை எடுத்து கர்யங்கள் உள்ள அந்த சடலத்தை எடுத்து ரீ-போஸ்ட்-மார்ட்டம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் அவை முன்னவர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அவர் காரைக்குடியைச் சேர்ந்தவர். கண்ணகி பரம்பரையிலே வந்தவர்கள். கண்ணகி நீதி கேட்டு பாண்டிய நெடுஞ்செழியனிடம் சென்றாள். அவர் தனக்கு தெரிந்த நீதியைச் சொல்லி, முடிவைச் சொல்லி அதற்குப் பின்னால் வருத்தம் அடைந்தார் என்பது நமக்குத் தெரியும். ஆகவே அப்படிப்பட்ட கண்ணகி பரம்பரையில் வந்த அவர் இப்போது நீதி கேட்டு இந்த மன்றத்தில் நிற்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சபையில் அந்தப் பாண்டியனுக்கும்—நெடுஞ்செழியனுக்கும் என்ன சம்பந்தம்? (குறுக்கீடு). உணர்ச்சி பூராவையும் கொட்டிவிட்டீர்கள்.



**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் உங்கள் மூலமாக இந்த அவைக்கு, இந்த நாட்டுக்கு, எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன், வரலாற்றிலே இல்லாத அளவுக்கு காவல்துறையே இந்த கொலையை மறைத்து சடலத்தை புதைக்கின்ற அளவுக்கு இருக்கின்ற இந்த வரலாறு காணாத கோர, மோசமான சம்பவத்திற்கு நீதி வழங்க வேண்டும். நீதி விசாரணை வேண்டும். எது எதற்கோ நீதி விசாரணை வைக்கிறீர்கள். ஆகவே இதற்கு நீதி விசாரணை வைக்கவேண்டும். அவர்கள் குடும்பத்தார் கோரிக்கையின்படி மறு போஸ்ட்டு மார்ட்டம் செய்யவேண்டும் என்று நான் இந்த அவையில் கேட்டுக் கொண்டு இப்படிப்பட்ட மோசமான நிலையை விரிவாக பேசுவதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் இருக்கக்கூடிய மாணிக்கம் என்று சொல்லக்கூடிய இளநீர் வியாபாரியை அங்கே இருக்கக்கூடிய காவல் நிலையத்திற்கு விசாரணைக்கைதியாக அழைத்துச் சென்று இருக்கிறார்கள். இதுவரை இதுபோன்ற பல்வேறு சம்பவங்களை இந்த மாமன்றத்தில் விவாதித்து இருக்கிறோம். அவைகளில் எல்லாம் சிறைச் சாலைக்குள்ளேயும், காவல் நிலையத்திற்குள்ளேயும் மரணம் அடைந்து விட்டார்கள் என்று நாம் வாதித்து இருக்கிறோம். ஆனால் துரதிருஷ்டவசமாக இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் அவர் விசாரணைக்கு அழைத்துச் சென்று அங்கே விசாரிக்கின்றபோது இறந்து விட்டார்கள் என்று இங்கே தகவல் வந்து இருக்கிறது. இன்றைக்கு இதுபோன்று காவல் நிலையங்களில் விசாரணைக்கு அழைத்துச் செல்லக்கூடியவர்கள், காவலில் வைக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்ட மரணம் அடையக்கூடிய சூழ்நிலை தமிழகத்தில் தொடர்கதையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில் அவர் கொடுத்த கடனுக்காக கடன் கொடுத்தவர் குற்றத்தை சுமத்தி இருக்கிறார் என்ற காரணத்திற்காக இந்த மாணிக்கம் என்று சொல்லக்கூடிய வியாபாரியை விசாரிக்க வேண்டும் என்று அழைத்துச் செல்கிறார்கள், காவல் நிலையத்திற்கு. அழைத்துச் சென்ற 3 மணி நேரத்திற்குள் அவர் மரணம் அடைந்துவிட்டார்கள் என்று இன்றைக்கு தகவல் சொல்லிகொண்டிருக்கிறார்கள். அப்படி அவர் வியாதியின் காரணமாக அல்லது இதுபோன்ற சம்பவத்தின் மூலம் இறந்து இருந்தால் உடனடியாக அவருடைய—வீட்டில் இருந்துதான் அவரை அழைத்து வந்து இருக்கிறார்கள்—வீட்டில் இருக்கக்கூடிய மனை

[திரு. மு. அப்பாதுரை] [1984 மார்ச் 7

விக்கு உங்கள் கணவர் இறந்துவிட்டார்கள். ஆகவே நீங்கள் இந்த பிரேதத்தை எடுத்துச் செல்லுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அதை விட்டுவிட்டு அவருடைய குடும்பத்தாருக்கு, மனைவிக்கு எந்தவிதமான தகவலும் சொல்லாமல் காவல்துறை அதிகாரிகள் அவரை கே. கே. நகர் மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்று இருக்கிறார்கள். அவர் இறந்துவிட்டார்கள் என்று தெரிந்தவுடன் அவருடைய கடையில் இருந்த சிறுவனை அழைத்துச் சென்று வேறு ஒரு காவல் நிலையத்தில் அடைத்து இருக்கிறார்கள். இப்படி ஒரு ஜனநாயகமற்ற முறையில் ஒருவர் இறந்துவிட்டார் என்பதைக்கூட அந்தக் குடும்பத்தாருக்கு சொல்லாமல் இங்கே மாண்புமிகு அந்தத் தொகுதியைச் சேர்ந்த் சட்டமன்ற உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் சொன்னார்கள் 3 நாட்களாக அந்தச் சடலத்தை கூட அந்தச் சொந்தக்காரர்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்று. அப்படி என்று சொன்னால் இந்த காவல்துறையைச் சேர்ந்தவர்கள் எந்த பஞ்சாயத்துதாரரையும் கூட்டி நம்முடைய சம்பிரதாயப் பிரகாரம் ஒருவர் மர்மமான முறையில் இறந்து விட்டார் என்று சொன்னாலோ அல்லது விபத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னாலும் 5 ஜாதிகளைச் சேர்ந்தவர்களை அழைத்து கையெழுத்துப் போடச் சொல்லி, நாங்கள் எல்லாம் முடிவுக்கு வருகிறோம் இவர் இந்த அடிப்படையில் இறந்து இருக்கிறார் என்று சொல்லி அதன் பிறகுதான் அந்த சடலத்தை போஸ்ட்-மார்ட்டம் செய்வதற்கு அனுப்புவது வழக்கம். அப்படிப்பட்ட ஒரு குறைந்தபட்ச சம்பிரதாயத்தை கூட இங்கே கடைப்பிடித்து இருக்கிறார்களா என்றால் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் அந்த சடலத்தை சொந்தக்காரர்கள் வாங்க மறுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அங்கேயே அவர்களுக்கு இந்த மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை ஆகிறது. ஆக அப்படிப்பட்ட முறையில் காவல்துறையைச் சேர்ந்தவர்களே சொந்தக்காரர்களிடம் சடலத்தை ஒப்படைக்காமல், காவல்துறையைச்சேர்ந்தவர்கள் ஏதோ பெரிய ராணுவத்தில் பணி புரியக்கூடிய அதிகாரி இறந்து விட்டதைப் போன்று, ராணுவ மரியாதையைப்போன்று, போலீஸ் மரியாதையைப் போன்று அந்தப் பிரேதத்தை அடைக்கலம் செய்திருக்கிறார்கள். ஆகவே இவைகள் மூலமாக அங்கே வாழக்கூடிய மக்களுக்கு இந்த மரணத்தில் மிகப் பெரிய சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. காவல் நிலையங்களில் தொடர்ந்து இதுபோன்ற தவறுகள் நடைபெறுகின்றன. இனிமேலாவது இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறக் கூடாது. ஆகவே, இந்த மரணம் குறித்து ஒரு நீதிவிசாரணை வைத்து, எந்த முறையில் மாணிக்கம் இறந்தார் என்பதை நாம் தெரிந்துகொள்ளவும், இதுபோன்ற சம்பவங்கள் வருங்காலத்தில் நிகழாமல் இருக்கவும் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 7] [திரு. மு. அப்பாதுரை]

(முற்பகல் 10-10)

அதுமட்டுமல்லாமல், அந்தக் குடும்பத்திலே உள்ள மூத்த பையனுக்கே 15 வயதுதான் ஆகிறது. ஆகவே, கணவனை இழந்த அந்த அம்மையாருக்கும், அவரது குடும்பத்திற்கும் உதவும் வகையில் நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதுபற்றியெல்லாம் விவரமாக விவாதிக்க வேண்டியிருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. மணி** : பேரவைத் தலைவரவர்களே, சைதாப்பேட்டையைச் சேர்ந்த மாணிக்கம் என்ற இளநீர் வியாபாரிக்கும், அதே ஊரைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் என்பவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு, குமரன் நகர், ஆர்-6 காவல் நிலையத்திற்குக் காலை 7 மணிக்கு மாணிக்கத்தை அழைத்துச் செல்கிறார்கள். 7 மணியைத் தாண்டி, 3 மணிக்கெல்லாம் மாணிக்கம் என்ற அந்த இளநீர் வியாபாரி மரணம் அடைகிறார் என்று பத்திரிகையில் பார்க்கிறோம்; நமக்கு வந்துள்ள புகாரும் கூறுகிறது.

சாதாரணமாகவே, காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றவர்கள் சில மணி நேரங்களிலேயே மரணம் அடைந்துவிடுகிறார்கள் என்றால் இதற்கு என்ன காரணம் என்பதை நாம் ஆழ்ந்து பார்க்கின்றபொழுது, அங்கே மூர்க்கத்தனமாக தாக்குதல் நடைபெறுகிறது அல்லது அடக்குமுறைகள் நடக்கின்றன.

1981 ஆம் ஆண்டிலேயிருந்து 1984ஆம் ஆண்டு வரையில் பல்வேறு காவல் நிலையங்களில் நடந்த நிகழ்ச்சிகளை நாம் பார்த்தால், இந்த மன்றத்திலேகூட பல்வேறு நேரங்களிலே நாம் விவாதித்திருக்கிறோம். குமரன் நகர், இரணியல், கிச்சடிபாளையம் என்றும், சென்னையைச் சேர்ந்த பகுதிகள் என்றும் பார்த்தால் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்கதையாக இருந்து வருகின்றன.

மாரடைப்பினால் இறந்தார், தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தார், காக்காய்வலிப்பின் காரணமாக மரணம் ஏற்பட்டது வெறிநாய் கடிந்து இறந்துவிட்டார் என்ற தகவலைத்தான் கடைசியில் சொல்கிறார்கள்.

மாணிக்கத்தைப் பொறுத்தவரையில் போலீசார் துன்புறுத்தி அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார் அல்லது தாக்குதல் நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாமல் கூறப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நடைபெறக் கூடாது.

அதேபோன்று கடந்த 20 ஆம் தேதி சுசீந்திரத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் பேச ஆரம்பித்தபொழுதே நான் நினைத்தேன், அவர்கள் கன்னியாகுமரிக்குச் செல்லாமல் இருக்க மாட்டார்கள் என்று. (குறுக்கீடு.) சட்டசபையில் சொல்வதற்கு நிறைய பாயிண்டுகள் இருக்கலாம். எதையெதை எந்தெந்த நேரத்தில் சொல்ல வேண்டும் என்பது தெரிந்து சொல்லவேண்டும். இப்பொழுது மாணிக்கம் என்ற இளநீர் வியாபாரி சம்பந்தமான பிரச்சினை அவைமுன் உள்ளது. அதைப்பற்றித்தான் பேச வேண்டுமேதவிர சுசீந்திரம் பற்றியெல்லாம் பேச முடியாது.

திரு. டி. மணி : பேரவைத் தலைவரவர்களே, மாணிக்கம் என்ற இளநீர் வியாபாரி, குமரன் நகர், ஆர்-6, காவல் நிலையத்தில் தாக்கப்பட்டதால் இறந்திருக்கிறார். அவரது குடும்பத்தைப் பாதுகாக்கின்ற முறையில் அரசு உதவி செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் இருக்க, இந்த அடக்குமுறைகளைக் கட்டுப்படுத்தும் விதத்தில், இந்த சம்பவம் குறித்து விசாரிக்க வேண்டுமென்பது சம்பந்தமாக விவாதிக்க வேண்டியிருப்பதால், இந்த மாமன்றத்தின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சைதாப்பேட்டையிலே நடந்த நிகழ்ச்சியை ஒட்டி அரைகுறையாகவும், மிகைப்படுத்தப்பட்டும், கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை எடுத்து வழங்கியிருக்கிறார்கள். நான் எனக்கு கிடைத்த தகவலை மட்டும் எடுத்துச் சொல்கிறேன். என்னுடைய கருத்துக்களை இதிலே நான் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் ஒபினியன் ஃபார்ம் பண்ணுகிறார்கள். நான் எனக்குக் கிடைத்த தகவல்களைச் சொல்கிறேன்.





ஆர். 6 குமரன் காலனி காவல் நிலைய எல்லையிலுள்ள உதயம் திரையரங்கின் அருகில், இளநீர் வியாபாரம் செய்து வரும், திரு. கோபாலகிருஷ்ணன் என்பவர், 28-2-1984 அன்று, ஆர். 6, காவல் நிலையத்திற்கு வந்து, வியாபார கொடுக்கல்—வாங்கல் தொடர்பாக, தான் கடன்பட்டிருந்த பணத்திற்காக தான் இல்லாத நேரத்தில், தன்னுடைய வண்டியையும், மற்றும் 200 இளநீர் காய்களையும், மாணிக்கம் என்ற மற்றொரு இளநீர் வியாபாரி எடுத்துச் சென்றுவிட்டார் என்று புகார் கொடுத்தார். இப்புகாரை, ஆர். 6. காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திரு. முத்து குமார் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்,

மாணிக்கம் அவ் விசாரணைக்கு வரும்படி அறிவுறுத்தப்பட்டு, அவர் விசாரணைக்கு வரவில்லை.

3—3—1984 அன்று காலை சுமார் 6-30 மணிக்கு, கோபாலகிருஷ்ணன் ஆர், 6 காவல் நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்து, குற்றப்பிரிவு காவலர்கள் 2966, வெங்கடேசன் மற்றும் 4125, ராஜேந்திரன் ஆகியோரோடு கோபதி நாராயண செட்டித் தெருவில், ''ரோகிணி இன்டர்நேஷனல் லாட்ஜிங்'' அருகிலுள்ள மாணிக்கத்தின் கடைக்குச் சென்றார். சைக்கிளில் வந்த இவ்விரு காவலர்களும், தங்களின் சைக்கிள்களை ஆர். 1 மாம்பலம் காவல் நிலையத்தில் விட்டு விட்டு, கோபாலகிருஷ்ணனோடு ஆட்டோ ரிக்ஷா ஒன்றில் மாணிக்கத்தின் கடைக்குச் சென்றனர். இவ்விரு காவலர்களும் மாணிக்கத்தையும், கோபாலகிருஷ்ணனையும் அதே ஆட்டோ ரிக்ஷாவிலேயே ஆர். 6 காவல் நிலையத்திற்குப் போகும்படிச் சொல்லிவிட்டு, தாங்கள் ஆர். 1 காவல் நிலையத்திற்குச் சென்று, தங்கள் சைக்கிள்களை எடுத்துக்கொண்டு ஆர். 6. காவல் நிலையத்திற்குத் திரும்பினர்.

ஆர். 6 காவல் நிலையத்திற்குச் செல்லும் வழியில் மாணிக்கத்திற்கு காக்காய் வலிப்பும், மாரடைப்பும், ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, கோபாலகிருஷ்ணன் அவரை கே.கே. நகர் மருத்துவ மனைக்கு விரைந்து கொண்டு சென்றார். அங்கே இருந்த மருத்துவ அதிகாரி காலை 8-20 மணிக்கு அவர் மரணமடைந்ததாக அறிவித்தார்.

இதன் தொடர்பாக, வழக்கு ஒன்று குற்ற விசாரணை முறை சட்டப் பிரிவு 174-ன் கீழ் ஆர். 6 காவல் நிலைய குற்ற எண். 85/84-ல் பதிவு செய்யப்பட்டு, பிரேத பரிசோதனை விசாரணை நடத்தப்பட்டது. கே. கே. நகர் மருத்துவ மனையிலுள்ள விபத்து பதிவேட்டின்படி, மரணமுற்ற மாணிக்கத்திற்கு (வயது 45) வெளிக் காயங்கள் எதுவும் இல்லை. பிரேத விசாரணையின் போது, பஞ்சாயத்துதார்கள் இம்மரணம் இயற்கைக் காரணங்களாலேயே நேர்ந்திருக்கக் கூடும் என்ற கருத்தினைத் தெரிவித்தனர். மாணிக்கத்தின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அரசினர் பொது மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டது; பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் 'அச்சடலத்தில் வெளிக்காயங்கள் எதுவுமில்லை; இம்மரணம் இயற்கைக் காரணங்களாலேயே நேரிட்டுள்ளது' என்ற கருத்தினைத் தெரிவித்திருக்கிறார். இறந்து போன நபர் ஆயுர்வேத டாக்டர் கே.கே. தாமோதரன் என்பவரிடம் இதய நோய்க்கு சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.

மாணிக்கத்தின் சடலம் 3—3—84 அன்று மாலை அவரது மனைவி ஜெயமேரியிடம் ஒப்படைக்கப்பட்டது. இறுதிச் சடங்கு 5—3—84 மாலை நடந்தேறியது. இது ஒரு இயற்கையான மரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் பத்திரிகைகளிலும், மற்றவைகளிலும் வேறுபட்ட கருத்துக்கள் வந்ததன் காரணமாக இச் சம்பவம் குறித்து சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர் மூலமாக விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஆணையிடப்பட்டுள்ளார். அந்த அறிக்கை வந்ததற்குப்பிறகு பரிசீலனை செய்து அரசு தக்க மேல்நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இதற்கு மேலும் இதிலே விவாதிப்பதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**திரு. ரா. உமாநாத்:** தலைவர் அவர்களே, நான் தங்களிடமிருந்து ஒரு கைடன்ஸ் பெற விரும்புகிறேன். அவை முன்னவர் அவர்கள் அறிக்கையினைப் படிக்கின்றபோது இது டிப்பார்ட்மெண்டினுடைய அறிக்கைதான்; எங்களுடைய சொந்தக் கருத்தல்ல என்று டிஃபரன்ஷியேட் பண்ணிச் சொல்லியிருக்கிறார். ஆகவே அது அவை முன்னவர் அவர்களால் ரெஸ்பான்ஸிபிலிட்டி எடுத்துக்கொள்ளப்படாத ஒரு ஸ்டேட்மென்ட் என்று அர்த்தம். அவையிலே முன்னவர் அவர்கள் பதில் சொல்கின்றபோது அதற்கு பொறுப்பு எடுத்துக்கொண்டுதான் அறிக்கையைத் தந்திருக்க வேண்டும்.





**மாண்புமிகு டாக்டர் . இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் சொன்னார்கள் 'கொலையாகத்தான் இருக்க வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்' என்று அப்படி ஒப்பினியன் ஃபார்ம் பண்ணக் கூடாது: கிடைத்த தகவல்களைத்தான் சொல்ல வேண்டும் என்ற வகையிலே இருக்கின்ற தகவலைச் சொன்னோம். நாங்கள் அளித்த இந்தத் தகவலைப் பொறுத்தவரையில் இதற்கான முழுப் பொறுப்பையும் எடுத்துக்கொண்டுதான் சொல்கிறோம். ஆகவே, கிடைத்த தகவலை நான் சொன்னேன். மேற்கொண்டு விசாரணை நடக்கிறது. விசார்ணை முடிவு வந்த பிறகு தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று சொல்லியிருக்கிறேன். (கூச்சல், குழப்பம்).

[முற்பகல் 10-20]

**திரு. ரா. உமாநாத் :** கலெக்டர் விசாரணை முடிவு எப்பொழுது வரப்போகிறது? (குறுக்கீடுகள்) நம்முடைய நாட்டிலே Security of life and property Police Station-ல்தான் என்று சொல்லப்படுகிறது. அதற்குள்ளேயே செக்யூரிட்டி இல்லையென்ற நிலை வரும்போது, கலெக்டர் விசாரணை நடைபெறும் என்று சொன்னால் என்ன அர்த்தம் ?

**திரு. து. புருஷோத்தமன் :** கலெக்டர் கூட அல்ல. கலெக்டருடைய பி.ஏ. விசாரிக்கப் போகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பி.ஏ. P.A. என்றால் ஒன்றுமே தெரியாது என்று அர்த்தமா? நாளைக்கு கலெக்டராகக் கூடிய அந்தஸ்து உள்ளவர்தான். அவரும் மனித உணர்வு படைத்தவர்தான்; எதையும் ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் அவரவர்களைப் பொறுத்தது.

**திரு. ரா. உமாநாத் :** நீங்கள் பேப்பர் படிக்கிறீர்கள். இரண்டு நாளைக்கு ஒரு தரம் போலீஸ் லாக் அப்பில் சாவு என்று வருகிறது. போலீஸ் ஸ்டேஷனில் சாவு என்று இங்கே பிரச்சினை வரும்போது, எக்ஸ்பிளனேஷனில் டாக்டர் சர்டிபிகேட் இருக்கிறது—காக்கா வலி என்று ஏதோ சொல்லப்படுகிறது (கூச்சல் குழப்பம்.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களது உணர்வை காவல் துறையினர் புரிந்து கொள்வார்கள்.

திரு. ரா. உமாநாத் : அடிக்கடி இந்த மாதிரி ஆர். டி. ஒ. என்கொயரி, கலெக்டர் என்கொயரி என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், அவற்றின் முடிவு எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? (குறுக்கீடு) அவையில் ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டால் அது அவையினுடைய சொத்தாகிறது— it becomes the property of the house—ஆனால் டிப்பார்மெண்டல் என்கொயரி நடத்தினாலும், கலெக்டர் பி.ஏ. என்கொயரி நடத்தினாலும், அதனுடைய முடிவை அவைக்குச் சொல்ல வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. ஆனால், இதுவரைக்கும் அந்த மாதிரி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்தக் குறிப்பிட்ட சம்பவம் பற்றிய விசாரணையினுடைய முடிவு என்ன என்பதை இந்த அவைக்கு அறிவிக்க வேண்டும். அது எங்களுக்கு வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வைக்க வேண்டுமென்று சட்டம் இல்லை. அதுபற்றிய விளக்கங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் முறைப்படி கேட்கின்றபொழுது, அது பற்றிய அறிக்கைகள் வைப்பதில் ஒன்றும் ஆட்சேபணையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போலீஸ் மானியத்தில் இதுபற்றிப் பேசுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : போலீஸ் மானியத்திலே இது வராது.

திரு. ரா. உமாநாத் : அதிலே பேசுகிற விஷயம் இல்லை. இது அதிலே வராது. அவை முன்னவர் அவர்கள் கலெக்டரிடமோ, பி.ஏ. விடமோ ரிப்போர்ட் கால்-பார் பண்ணியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்த என்குயரியினுடைய ஆக்ஷன் என்னவென்று இந்தக் குறிப்பிட்ட விஷயத்திலாவது சொல்லட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சொல்வதற்கு ஆட்சேபணை இல்லை. அதற்கு என்ன முறையென்று கண்டு இந்த அவையிலே அறிக்கை வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.





3. தகவல் கோரல்.

(அ) பெங்களூர்-ஹோசூர் ரோடில் போக்குவரத்தில் தமிழக பஸ்களும், கார்களும் பெங்களூருக்குப் போக முடியாமல் இருக்கும் நிலை.

Thiru K. S. G. HAJA SHAREEF : Mr. Speaker, Sir, I wish to bring to your kind attention the very threatening situation that is happening at Bangalore : I was told this morning over the telephone that no car, or bus or Auto Riksha belong to Tamils is being permitted to ply from Bangalore to Hosur and other places. They are being chased. Even if some people are permitted to go to Hosur they are being chased out and they are even being attacked. Similarly no car or any other vehicle is being allowed to ply from Hosur to Bangalore. This is a very serious situation Sir. I do not know what action has already been taken by the Government and if no appropriate action is taken by the Government I would request through you, Sir, that the Government should immediately take appropriate action to see that life and property of our pepole are protected and these atrocities are stopped forthwith. Thank you.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே இது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ளன. இப்போதும் சில பல கலவரங்கள் இருப்பதின் காரணமாக ஓசூர் தாண்டி நம்முடைய பஸ்கள், கார்கள் போகாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அங்கே சுமூகமான சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்னால் அவைகளை அனுப்பலாம் என்று இருக்கிறோம். 200-க்கு மேற்பட்ட லாரிகள் அடிபட்டு சுமார் 10 அல்லது 15 லட்சம் வரை சேதம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பு வந்திருக்கிறது. தக்க நடவடிக்கை எடுப்பதாக கர்நாடக மாநிலத்தின் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்தப் பிரச்னைக்கு முக்கிய காரணமாக இருக்கிற நடிகர் இராஜ்குமார் அவர்கள் கூட இன்றைக்கு காலையில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை வைத்து சமூக விரோத சக்திகள் மற்றவைகள் எல்லாம் வன்முறைக் கலவரங்களில் ஈடுபடக் கூடாது என்றும், அமைதி காக்க வேண்டுமென்றும் அறிக்கை விட்டிருக்கிறார்கள். கர்நாடக மாநில முதலமைச்சர் ஹெக்டே அவர்கள் அறிக்கை விட்டது மட்டுமல்லாமல், கடுமையான நடவடிக்கை எடுப்பேன் என்று எச்சரித்தும் இருக்கிறார்கள். ஓரளவிற்கு நேற்றைய நிலையிலே அமைதி ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இருந்தாலும் பீதி இருந்துகொண்டு இருக்கிறது. இன்று, நாளை பார்த்து விட்டு அங்கு தடுத்து நிறுத்தப்பட்டு இருப்பவைகள் எல்லாம் போகிற சூழ்நிலை ஏற்பட்டதற்கு பின்னால் அவைகளை விடலாம் என்ற காரணத்தினால் தான் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த பஸ்கள், லாரிகள், மற்றவைகள் எல்லாம் போக வேண்டாம் என்று நிறுத்தி வைத்திருக்கிறோம்.

## 4. கவன ஈர்ப்பு.

### மழையினால் தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள சேதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், சோ. அழகர்சாமி, தி. சா. நல்லப்பன், மு. அப்பாதுரை, பொ. உத்திராபதி, டி. மணி, கே. ஆர். சுந்தரம், பெ. சு. திருவேங்கடம், என். எஸ். வி. சித்தன், எல். இளையபெருமாள், வி. கருப்பசாமி பாண்டியன், ரா. கு. பெருமாள், ரா. கிருஷ்ணன், என். வரதராஜன், ப. பொன்னுரங்கம், இரா. அமிர்தராஜ், வே. இராஜசேகரன், இரெ. இராசமாணிக்கம், பி. துரைராஜ், மு. ஜான் வின்செண்ட் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென் மாவட்டங்களில் குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழையின் விளைவாகவும், வெள்ளப் பெருக்கின் காரணமாகவும் சிலர் இறந்தும், குடிசைகளும், விவசாய நிலங்களும் பாதிக்கப் பெற்றுள்ளதால் பொதுமக்கள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை.

மார்ச்சு திங்கள் முதல் தேதியிலிருந்து மூன்று நான்கு நாட்களாக தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் பெரும் மழை பெய்து உள்ளது. குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டு நாட்களில் மட்டும் 160 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

2. திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி ஆகிய வட்டங்கள் பாதிக்கப்பட்டன. மேற்கூறிய வட்டங்களில் முக்கூடல், புன்னக் காயல், கருங்குளம், தூத்துக்குடி, பாப்பக்குடி மற்றும் காயல்பட்டினம் ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டன.

3. பாபநாசம் நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 148.00 அடி. அதில் 142.6 அடி அளவு தண்ணீர் நிரம்பியது. மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 118.00 அடி; அதில் 117.6 அடி தண்ணீர் நிரம்பியது. மேற்படி நீர்த் தேக்கங்களிலிருந்து 8,000 இயூசக்ஸ் அளவு தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் தாம்பிரபரணி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது.



4. தலைமைச் செயலர் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு உடனடியாகக் கொண்டு செல்ல வேண்டுமென்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு உத்திரவிட்டார். மேலும், தேவையான உணவுப் பொருள்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து பெற்றுக் கொள்ள ஆவன செய்யுமாறு மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கினார்.

5. மேற்படி நீர்த்தேக்கங்களிலிருந்து தாம்பிரபரணி ஆற்றில் தண்ணீர் திறந்து விடுவதற்கு முன், முன்கூட்டியே மாவட்ட அலுவலர்கள் ஆற்றங் கரையோரத்தில் வசிக்கும் மக்களை எச்சரித்து, அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினர்.

6. 398 குடிசைகள் முழுமையாகவும், 477 குடிசைகள் பகுதியாகவும் சேதமுற்றன. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று தங்க வைக்கப்பட்டனர். சுமார் 10,000 மக்களுக்கு 3-ம் தேதியிலிருந்து உணவு அளிக்கப்பட்டு வருகின்றது. அரசு தவிர, அரிமா சங்கம் (லயன்ஸ் கிளப்) போன்ற சமூக நல நிறுவனங்களும் உணவுப் பொட்டலங்கள் வழங்கின.

7. திருநெல்வேலி மாவட்டத்தில் இந்தப் பெருமழையினால் இதுவரை கிடைத்த தகவல்களின்படி, 13 பேர் உயிரிழந்தனர். இதில் சுவர் இடிந்து ஒருவரும், மின்னல் தாக்கி ஒருவரும், மின்சாரம் தாக்கி இருவரும், 9 பேர்கள் ஆறு, ஓடைகளைக் கடந்து செல்லும்போது அடித்துச் செல்லப்பட்டும் உயிரிழந்தனர்.

8. நிர்ணயிக்கப்பட்ட அளவில் குடிசை மானியம், அரிசி, மண்ணெண்ணெய், வேட்டி மற்றும் புடவை முதலியவைகளை குடிசையிழந்தவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

9. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூபாய் 1,000 நிதிஉதவி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

10. சுமார் 80,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டன. இதில் சுமார் 30,000 ஏக்கர் நிலங்களில் நெற்பயிர் தண்ணீரில் மூழ்கியது. சுமார் 50,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட நெற்பயிர் சேதமடைந்துள்ளது என்று இதுவரை கிடைத்த தகவல்களின்படி தெரியவருகிறது. எனினும், சரியான மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. அதன்பின்தான் முழு விபரம் தெரியும்.

11. சாலைகள் மற்றும் பொதுச் சொத்துக்களின் சேதத்தின் விபரம் மற்றும் அதன் மதிப்பீடு கணக்கிடப்பட்டு வருகிறது. தேவையான நிவாரணங்கள் வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும்.

12. கடந்த சில தினங்களில் பெய்த மழையினால், இதர மாவட்டங்களும் ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்டத்தில் ஞாயிறன்று கடுமையான மழை பெய்தது. கோடைக்கானலில் மட்டும் ஓரே நாளில் 113.5 மில்லிமீட்டர் மழை பெய்துள்ளது. மதுரையில் 36 மில்லி மீட்டரும், வைகை அணைக்கட்டில் 16 மில்லி மீட்டரும், மழை பெய்தது. வைகை நீர்த் தேக்கத்தின் முழு அளவு 71 அடி. இதில் 65.6 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. வைகை கரையோரம் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுமாறு எச்சரிக்கப்பட்டனர். சுவர் இடிந்து இருவர் உயிரிழந்தனர். மூவர் காயமுற்றனர்.

13. இராமநாதபுரம் மாவட்டத்தில் 6—3—1984 அன்று காலை 8-30 மணிக்கு எடுத்த அளவின்படி திருவில்லிபுத்தூரில் 212 மில்லி மீட்டர், சிவகங்கையில் 63 மில்லிமீட்டர், திருவாடானையில் 42 மில்லிமீட்டர் மழை பெய்தது. இராஜபாளையத்திலுள்ள புனல் ஏரியில் திடீர் வெள்ளம் ஏற்பட்டு 50 வீடுகள் பாதிக்கப்பட்டன. அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது.

14. கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் 46 மில்லிமீட்டரும், நாகர்கோயிலில் 45 மில்லி மீட்டரும் பெருஞ்சாணியில் 41 மில்லி மீட்டரும் மழை பெய்துள்ளது. மேற்கூறிய நீர்த்தேக்கங்களில் தண்ணீர் நிரம்பியுள்ளது.

15. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாட்டில் 37 மில்லி மீட்டரும், திருவையாற்றில் 28 மில்லிமீட்டரும், மன்னார்குடியில் 20 மில்லிமீட்டரும், கிராண்ட் அணைக்கட்டில் 17 மில்லி மீட்டரும், மழை பெய்தது. சுமார் ஒன்பது இலட்சம் ஏக்கர் நெல் சாகுபடியில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலத்தில் அறுவடை செய்ய வேண்டியுள்ளது. இம்மழையினால் கொள்முதல் செய்த நெல்லை கிடங்குகளுக்கு எடுத்துச் செல்வதில் சிறிது பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், இந்த நெல்லை விற்பனைக் கிடங்குகளில் (Godowns of Marketing Committees) வைக்க அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

16. வடாற்காடு மாவட்டத்தில் ஆரணி, போளூர், செய்யாறு திருவண்ணாமலை, ஆற்காடு முதலிய இடங்களில் நல்ல மழை பெய்துள்ளது.

17. புதுக்கோட்டை மாவட்டத்தில் சுழற் காற்றினாலும், மழையினாலும் ஆவுடையார் கோயில் வட்டத்தில் வ. உ. சி. நகரில் 15 குடிசைகள் சேதமடைந்தன. 81 பேர்கள் புயல் பாதுகாப்ப இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ, பொதுச் சொத்துக்களின் சேதமோ இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவில் குடிசை மானியம், அரிசி முதலியன வழங்க மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.





18. தென்னாற்காடு மாவட்டத்தில் விழுப்புரம், கடலூர் பகுதிகளில் மழை பெய்துள்ளது. பரங்கிப் பேட்டையில் ஒரே நாளில் 170 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. சுவர் இடிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்தார்.

19. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பலமானமழை பெய்தது. தாழ்வான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது. 5—3—1984 அன்று காலை 8-30 மணி வரை பெய்த மழையின் அளவு லால்குடியில் 35 மில்லிமீட்டரும், அரவக்குறிச்சியில் 26 மில்லிமீட்டரும், மணப்பாறையில் 17.4 மில்லிமீட்டரும், குளித்தலையில் 17 மில்லி மீட்டரும், முசிறியில் 14.2 மில்லி மீட்டரும், திருச்சியில் 7.6 மில்லிமீட்டரும் ஆகும். சுவர் இடிந்து விழுந்து மூன்று பேர் உயிரிழந்தனர்.

20. நீலகிரி மாவட்டத்திலும், மூன்று தினங்களாக பலத்த மழை பெய்துள்ளது. 6—3—1984 அன்று காலை 8-30 மணிக்கு பதிவான அளவின்படி குந்தாவில் 117 மில்லிமீட்டரும், கள்ளாத்தியில் 82 மில்லி மீட்டரும், கூனூரில் 74.6 மில்லி மீட்டரும், கேதியில் 69·3 மில்லிமீட்டரும், அவலான்சியில் 76 மில்லி மீட்டரும், எமரால்டில் 51 மில்லி மீட்டரும், தொட்டப்பெட்டாவில் 44 மில்லிமீட்டரும், கோத்தகிரியில் 312 மில்லி மீட்டரும், கொடநாடில் 134 மில்லிமீட்டரும் மழை பெய்து உள்ளது. உதகையில் 3 வீடுகளும், கூனூரில் 25 வீடுகளும், கோத்தகிரியில் 6 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

21. இது பருவ மழையல்ல. எதிர்பார்க்காமல், திடீரென்று பெய்கிறது. இருப்பினும், முன்னெச்சரிக்கையாகப் பாதிக்கப்படக் கூடிய மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு எச்சரிக்கப்பட்டனர். இதனால் பெருமளவில் உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது. மேலும், உடனடியாக வழங்க வேண்டிய நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதர சேதங்களைக் கணக்கிட்டபின் தகுந்த நிவாரணங்கள் வழங்க இந்த அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 10-30)

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, விவகாரம் பெரிய விவகாரம. சாதாரண விவகாரம் அல்ல. மழை காலம் தவறி பெய்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இதன் காரணமாக பயிர்கள் மிகவும் சேதமடைந்து கண்டுமுதல் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்பின் போது கேள்வியாகத்தான் கேட்க வேண்டும். விவாதத்தில் பேசுவது போல் பேசக் கூடாது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, 80 சென்ட் நிலத்தில் அறுவடை செய்தால் 10 மரக்கால் தான் கிடைக்கிறது. அதுகூட அறுக்க முடியாத அளவிற்கு நீரில் அடித்துச் சென்றிருக்கிறது. குடிசைகள் நீரிலடித்துச் செல்லப்பட்டு மிதக்கின்றன. இப்படிப் பல்வேறு விதமான விளைவுகள் அங்கே ஏற்பட்டுள்ளன. ஆகவே, அந்தப் பகுதிகளில் குத்தகை பாக்கிகளை ரத்து செய்ய அரசு முன்வருமா? அதேபோல், விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடனை ரத்து செய்ய அரசு முன்வருமா? நிலவரி வஜா செய்யப்படுமா? வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு உறுப்பினர் ஒரு கேள்வி எழுப்பி அதற்குப் பதில் பெறுவதுதான் உரிய முறை. 54-வது விதியின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது விவாதத்தில் பேசுவது போல் பேசுவதற்கு நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அவர் கேட்ட கேள்விக்கு முதலில் விடையளிக்கிறேன். நிலவரி, தண்ணீர் தீர்வை, உள்ளூர் வரி ஆகியவை எங்கெங்கே பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த பாதிக்கப்பட்ட பகுதிகளிலெல்லாம் தண்ணீர் தீர்வை, நிலவரி, உள்ளூர் வரி ஆகியவைகள தள்ளப்படுகின்றன.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் எங்கெங்கே தண்ணீர் தீர்வை, நிலவரி, உள்ளூர் வரி ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றவோ அங்கெல்லாம் கூட்டுறவுக் கடன்கள் தள்ளி வைக்கப்படும். முதலில் சொன்னது வரியே இல்லாமல் தள்ளுவது, இது தள்ளி வைப்பது. அதாவது போஸ்ட்போன்மென்ட். அதேபோல் எங்கெங்கே உள்ளூர் வரி, தண்ணீர் தீர்வை, நிலவரி தள்ளுபடி செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் குத்தகை தள்ளுவதல்ல, போஸ்ட்போன்மென்ட் செய்திருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் நெல்லை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் தென்காசி பகுதி விடப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 875 குடிசைகள் பாதிக்கப்பட்டு, 13 பேர் உயிரிழந்து இருக்கின்றனர். பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 1,000 ரூபாய் நிவாரணம் என்று சொன்னால், அது போதாது. அவர்கள் குடும்பத்தை இந்தப் பணத்தை வைத்துக் கொண்டு காப்பாற்ற முடியாது. ஆகவே, குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் ரூபாய் 10,000 என்ற வகையில் கொடுக்க வேண்டும். அப்படி 10,000 ரூபாய் அளவிற்கு அந்த நிவாரணத் தொகையை உயர்த்த அரசு



முன்வருமா? குடிசை இழந்தவர்களுக்கு ரூபாய் 200 கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு குடிசை போட முடியாது. ஆகவே, அந்தத் தொகையை உயர்த்த அரசு முன்வருமா? 80,000 ஏக்கர் நிலத்தில் உள்ள சாகுபடி பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று இந்த அறிக்கையிலேயே சொல்லப்பட்டு இருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடு கொடுக்கவும், மற்ற நிவாரணங்களைக் கொடுக்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைகளுக்கு இதற்கு முன்னாலே 50 ரூபாய்தான் கொடுத்து வந்தார்கள். இப்போது 200 ரூபாய், ஒரு வேஷ்டி, சேலை, 5 கிலோ அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நான் ஏற்கெனவே சொன்னதுபோல் மூன்று விதமான வழிகளில் இந்த அரசு நிவாரண உதவிகளைச் செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டபடி இது பருவமழை இல்லாமல் எதிர்பாராத முறையில் பெய்திருந்தாலும் 80,000 ஏக்கருக்குமேல் விளை நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 7,000க்கு மேற்பட்ட குடிசைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான நஷ்டஈடு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அதோடு விவசாயிகளுக்குத் தேவையான விதைகளையும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அம்பாசமுத்திரம், தென்காசி, திருநெல்வேலி, நாங்குனேரி, திருச்செந்தூர் போன்ற பல பகுதிகளில் பெரும் மழை பெய்து, பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இருக்கிற விதிகளின்படி பாதிப்புக்கு தக்கபடி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். விவசாயிகள் அதிகமாக தொல்லைப்பட்டிருக்கிறார்கள். நஷ்டப்பட்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் அவர்களுக்கு என்ன உதவி செய்ய வேண்டும் என்பதை அரசு பரிசீலனை செய்யும். அவர்களுக்கு விதை கொடுப்பது, சகாய விலையில் கொடுப்பது, அவர்களுக்கு பூச்சி மருந்து கொடுப்பது, சகாய விலையில் கொடுப்பது, அவர்களுக்கு உரம் கொடுப்பது, சகாய விலையில் கொடுப்பது என்பதை பற்றி எல்லாம் இந்த அரசு யோசனை செய்து, தக்க நேரத்தில் வேண்டிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, இப்போது ஏற்பட்டிருப்பது வெள்ளம். கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து மழை பெய்கிற காரணத்தால் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பது

தாமிரபரணி ஆற்றுப்படுகைதான். ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் போன்ற பகுதிகளில் புன்செய் பயிர் மகசூல் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த விவசாயிகளுக்குப் புதிதாக உற்பத்தியைத் தொடங்க மானியம் அளிப்பதோடு இறந்தவர் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படுவதை 5,000 ரூபாயாக உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் விடுபட்ட பகுதிகள் இருந்தால் அந்தப் பகுதிகளுக்கும் தகுந்த உதவிகள் செய்யப்படும். இந்த அறிக்கைதான் இறுதியானது, இது இறுதியான முடிவு என்றில்லை. எங்கெல்லாம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதோ அந்தப் பகுதிகளும் சேர்த்துக்கொள்ளப்படும். ஆற்று ஓரங்களில் இருக்கிற பகுதிகள் மட்டுமல்லாமல் மற்றப் பகுதிகள் கூட பாதிக்கப்பட்டிருக்கின்றன, புன்செய் பயிர்கள் கூட பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். புன்செய் பயிர் பாதிக்கப்பட்டிருந்தால் அவற்றுக்கும் தக்க நிவாரணம் அளிக்க வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழையின் காரணமாக நூற்றுக்கணக்கான வீடுகள், குடிசைகள் சேதம் அடைந்துள்ளன ; பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன ; பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. குடிசைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்கெனவே நிவாரணமாக அளிக்கும் 200 ரூபாய் என்பதை மாற்றி 500 ரூபாய் மானியம் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, குடிசைக்கு இப்போது 200 ரூபாய் மானியம் கொடுக்கிறோம். அதைவிட மிக மோசமாக ஒரு ஏக்கர், அரை ஏக்கர், கால் ஏக்கர், நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த அரசு உதவி செய்யும். என்ன உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதை எண்ணிப்பார்த்து, தக்க நடவடிக்கை எடுக்கும் இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் கூட திருவண்ணாமலை, ஆரணி, போளூர், வந்தவாசி, கலசப்பாக்கம் போன்ற பகுதிகள் கடுமையாக மழையினால் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளில் பெரும்பாலும் ஐ.ஆர். 50 நெல் ரகம் தான் பயிர் செய்கிறார்கள். நீர் வற்றி காய்ந்தால் தான் அந்தப் பயிர் நல்ல முறையில் வரும். இப்போது நோய் தாக்கியிருக்கிறது. மருந்து அடித்தாலும்,



பயிரைக் காப்பாற்ற முடியவில்லை என்று எனக்கு தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிகள் இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவை என்று அறிவித்து, அந்த விவசாயிகளுக்கு தக்க நிவாரணம் அளிக்க, எல்லாவிதமான வளர்ச்சிப் பணிகளையும் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, டாக்டரே கைவிட்ட கேசாக இருந்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று அவர்கள் சொல்வதிலிருந்தே தெரிகிறது. அதன் பிறகு என்ன செய்வது, மாற்று நடவடிக்கை என்ன என்பதை ஆராய்நது, கணக்கிட்டு, ஆவன செய்யலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவைக்குக் கொடுத்திருக்கிற அறிக்கையிலே மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மதுரை, கொடைக்கானல் பற்றி மட்டும் இருக்கிறது. தொலைபேசி மூலமாக அங்கிருந்து எனக்கு சில தகவல்கள் வந்திருக்கின்றன. நான் சார்ந்திருக்கின்ற திருமங்கலம் தொகுதியும் சோழவந்தான் பகுதியும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தகவல் வந்திருக்கிறது. அரசு இதை எல்லாம் சேர்த்து, முழுமையாக ஒரு அறிக்கையை பின்னால் இந்த அவைக்கு அளிக்குமா ?

தொடர்ந்து இப்போது மழை பெய்துகொண்டிருக்கிறது. கோடைக்காலத்தில் கூட அடுத்தடுத்து மழை பெய்யும் என்று சொல்கிறார்கள். இந்த மழைத் தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேருகிறது. அதைத் தடுத்து, ஆங்காங்கே குளம், குட்டைகள் அமைத்து அங்கே தேக்கிவைக்க ஏற்பாடு செய்தால் ஓரளவுக்கு தண்ணீரை சேமித்து வைக்க முடியும். அதனால் ஆடுமாடுகளின் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் ; கிணறுகளில் தண்ணீர் மட்டம் உயரும் ; குடிநீர் பிரச்சினை தீரும். எனவே அரசாங்கம் உடனடியாக தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டிய நடவடிக்கைகளை முறையாக எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்றால், 5ஆம் தேதி கொடைக்கானலில் 113 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது. 6ஆம் தேதி 126 மில்லி லிட்டர் மழை பெய்திருக்கிறது. பெரியகுளத்தில் 29 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது, 5ஆம் தேதியன்று.

[திரு எஸ். டி. சோம்சுந்தரம்] [1984 மார்ச்

6ஆம் தேதி 95 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது. உத்தம பாளையத்தில் 52 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது 5ஆம் தேதியன்று. 29 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது 6ஆம் தேதி. மேலூரில் 77 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது 5ஆம் தேதி. 20 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது 6ஆம் தேதி. எவ்வளவு மழை பெய்திருக்கிறது என்று அறிக்கையிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவைகளை எல்லாம் சொல்ல வேண்டுமென்றால், அதற்கு நேரம் இல்லை என்பதால் சொல்ல முடியவில்லை. தகவல்கள் என்னிடத்தில் இருக்கிறது.

அதே போல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்கள் மேடான இடங்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கெல்லாம் உணவு அளிக்கப்பட்டது. மற்ற இடங்களைப் பற்றி இந்த அறிக்கையிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், அது சம்பந்த மான அறிக்கைகளை நாம் கேட்டுக்கொண்டு வருகிறோம். உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அரசி னுடைய உத்தரவு இருந்தாலும், இல்லாவிட்டாலும், முறையாக அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றவர்களும் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்தத் கடுமை யான வெள்ளத்தின் காரணமாக மழையின் காரணமாக தூத்துக் குடி பகுதியில் இருக்கக் கூடிய கிட்டத்தட்ட 20,000 உப்பளத் தொழிலாளர்கள் இன்றைக்கு வேலை இழந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஏற்கெனவே கடந்த ஒன்றிரண்டு மாதங்களாக பெய்த மழையின் காரணமாகவும், இப்போது ஏற் பட்டுள்ள வெள்ளத்தின் காரணமாகவும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. இன்றைக்கு அவர்களிடையே பட்டினிச் சாவுகள் வரக்கூடிய அளவில் சில அபாயம் ஏற்பட்டுள்ளதாக எனக்கு தகவல்கள் வந்துள்ளன. ஆக உடனடியாக வேலை இல்லாமல் இருக்கும், பட்டினியால் வாடும் உப்பளத் தொழி லாளர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏராளமான குளங்கள், குட்டைகள் உடைந்துவிட்டன. அவைகளை மராமத்து செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? இதையெல்லாம் கவனிப்பதற்கு உயர் மட்டக் குழு, அதாவது 'ஹை லெவல் கமிட்டி' அமைத்து, போர்டு மெம்பர் அளவிலே; உடனடியாக அந்தப் பகுதிகளை எல்லாம் பார்வையிட எடுக்கப்படுமா என்பதை அறியவிரும் புகிறேன்.



1984 மார்ச் 7]

**திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மாண்புமிகு திரு. 3 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். உறுப்பினரவர்கள் உயர்மட்டக் குழு அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். ஏற் கெனவே விவசாய உயர் மட்டக் குழு மாண்புமிகு முனு ஆதி தலைமையில் இருக்கிறது. அந்த உயர் மட்டக் குழு எல்லா இடங்களுக்கும் செல்லவேண்டுமென்று அரசு கேட்டிருக் கிறது. அவர்களும் போய்க்கொண்டிருக்கிறார்கள். இரண் டாவது கேள்வி—யாரையும் பட்டினி போட்டு சாவுக்கு ஆளாக்க இந்த அரசு அனுமதிக்காது. பட்டினி சாவு இல்லாமல் காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் இந்த அரசு செய்யும் என்ற உறுதியைத் தருகிறேன். மூன்றாவதாக—உடைந்த குளங்களை பற்றிக் கேட்டார்கள். அந்த குளங்களைக் கட்டவேண்டுமென்று அரசு உத்தரவு இட்டிருக்கிறது. எல்லா குளங்களையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** முன்னெச்சரிக்கை நடவடிக்கை மூலமாக பள்ளத்திலே இருக்கின்ற மக்களை எல்லாம் மேட்டில் கொண்டு போய் சேர்ப்பதை நல்லமுறையில் செய்திருக்கிறீர்கள். ஆனால் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை ஏன் மின்சார இலாக்கா அதிகாரிகள் எடுக்கவில்லை ? வெள்ளம் வரப்போகிறது என்ற முன்னெச்சரிக்கையுடன் மின்சார இலாக்கா அந்த மின்சாரத்தைத் துண்டித்திருந்தால், மின்சாரம் தாக்கி 2 பேர்கள் உயிர் இழந்திருக்க மாட்டார்கள். துரித நடவடிக்கை யின் மூலமாகவும், முன்னெச்சரிக்கையின் மூலமாகவும் பல உயிர்ச் சேதங்களை கட்டுப்படுத்தி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கி றீர்கள். இந்த 13 பேர்கள் உயிர் இறந்தது பெரிய சாவு இல் லையா ? சாதாரண சாவா ?

அதற்கடுத்ததாக, அவர்களுக்கு நஷ்ட ஈடு ரூ. 1,000 என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஆக்சி டெண்டிலே மீனவர்கள், மரம் ஏறுபவர்கள் உயிரிழந்தால் அவர்களின் குடும்பங்களுக்காக ரூ. 5,000 நஷ்ட ஈடு வைத்தி ருக்கிறோம். வெள்ளத்தில் அடித்து செல்லபபட்டவர்களும் ஆக்சிடெண்ட் தான். அவர்களுக்கும் இந்த ரூ. 5,000 நஷ்ட ஈடாக கொடுக்காமல் இருப்பது என்ன நியாயம் ? இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் குடும்பத்திற் கும் ரூ. 5,000 நஷ்ட ஈடு ஆக வழங்க மறுபரிசீலனை செய்யுமா? அமைச்சரவர்கள் தனியான கவனம் செலுத்தி ரூ. 5,000 வழங்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா இடங்களிலேயும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதால் தான் உயிர்ச்சேதம குறைந்திருக்கிறது. ஒரு உயிர் நஷ்டம் என்றால், நஷ்டம் தான். அதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. யார் உயிராக இருந்தாலும்—நமக்கு வேண்டியவர்கள் உயிர் போய்விட்டால் நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோம் அதைப்போல—இந்த அரசு மிகவும் கவலைப்பட்டு அதை உணர்ந்திருக்கிறது. அதற்கு வேண்டிய, அதைத் தடுக்க வேண்டிய அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து மின் வாரியம் கூட உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. அதைப் போல உயிர் இழந்தவர்களுக்கு அதிகமாகப் பணம் கொடுக்கவும், இந்த அரசு கவனித்து ஆவன செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நெல்லை மாவட்டத்தில் பெய்த பெருமழையின் காரணமாக என்னுடைய திருச்செந்தூர் தொகுதி முழுவதுமே கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக, புன்னக்காயல் மீனவர் சமுதாயம் வாழுகின்ற பகுதி. தாமிரபரணி ஆறு கடலில் கலக்கிற இடத்திலே இருக்கின்ற காரணத்தால், இன்றைக்கு ஒரு பகுதி கடல் பகுதியாலும், மறு பகுதி ஆற்றின் வெள்ளத்தாலும் சூழப்பட்டு எந்தப் பகுதிக்குமே தொடர்பு கொள்ளமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரமான ஒரு பரிகாரம் கொடுக்கின்ற அளவிற்கு ஆற்று ஓரத்தில் உள்ள அந்தக் கரையை உயர்த்துவதன் மூலமும், அந்த ஆற்றின் குறுக்கே ஒரு [illegible] பெரிய பாலம் அமைப்பதன் மூலமும் அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரமான பரிகாரம் காணமுடியும். அதை நிறைவேற்ற வேண்டும். அதேபோல், ஆத்தூர், வெற்றிலைக் கொடிக்கால், பகுதிகள், குரும்பூர், மெஞ்ஞானபுரம் படுகை விவசாயிகள் எல்லாம், கடுமையாக பாதிக்கப்பட்டு, பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நிவாரண உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கிறேன். முக்கியமாக எனது தொகுதியில் நாலுமாட்டி, சாயல்பட்டிணம், ஆறுமுகநேரி, ஆத்தூர், குரும்பூர், உடன்குடி, திருச்செந்தூர் போன்ற பகுதிகளில் சாலைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளன. அவற்றை எல்லாம் வெள்ள நிவாரணப் பணி மூலம் எடுத்து செய்ய அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உறுப்பினர்கள் சொற்பொழிவு ஆற்றக்கூடாது. சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செந்தூர் தொகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடங்கள் எல்லாம் அடங்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அவர்கள் சொன்னபடி, எங்கெங்கே ரோடுகள் உடைபட்டு இருக்கின்றன என்ற செய்திகள் வந்தவுடனே, அவைகளை அடைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்துள்ளது. மற்றபடி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க, வேண்டிய நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது, நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே பெய்த பெருமழையின் காரணமாக, தமிழகத்திலே, பல மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இது சம்பந்தமாக நாம் பல நேரங்களிலே விவாதித்து இருக்கிறோம். பல பேர்கள் இன்றைய தினம் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 1,000 ரூபாய் போதுமானதாக இல்லை. எனவே இந்தப் பணத்தை உயர்த்தி, ஒரு 10,000 ரூபாய் அளவிற்குக் கொடுக்க வேண்டும். அதோடு, வீடு இழந்தவர்களுக்கு முன்பு 50 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்போது 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது. என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். தற்போது விலைவாசி 10 மடங்கு அளவிற்கு உயர்ந்திருக்கிறது. 50 ரூபாய் கொடுத்த போது இருந்த விலைவாசிக்கும், இப்போது 200 ரூபாய் கொடுக்கும்போது இருக்கும் விலைவாசிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. எனவே தற்போதுள்ள விலைவாசி உயர்வுக்கு ஏற்ப 500 ரூபாயாவது கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பயிர்கள் முழுவதுமாக அழிந்தவர்களுக்கு நஷ்டஈடு அறிவிக்கப்படவில்லை. அப்படி முழுவதுமாக இழந்தவர்களுக்கு கூட்டுறவுக் கடன் போன்ற அனைத்துக் கடன்களையும் தளளுபடி செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கூட்டுறவு கடன் தள்ளுபடி செய்ய வேண்டும்; இறந்தவர்களுக்கு அதிகமான அளவில் பணம் கொடுக்க வேண்டும் என்று மற்ற உறுப்பினர்கள் சொல்லிவிட்டார்கள். வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே பெய்த மழையால், வரலாற்றுச் சிறப்புமிக்க தஞ்சாவூர் அரண்மனையிலே உள்ள ஒரு பகுதி இடிந்து விழுந்துவிட்டதாக பத்திரிகையில் எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. பல கலை நுட்பம் வாய்ந்த சிற்பங்கள் எல்லாம் இன்றைக்கு அதனால் அழிந்து விட்டதாகவும், செய்திகள் வருகின்றன. அந்தக் கட்டிடம் யாருடைய பராமரிப்பில் உள்ளது? அது நல்லமுறையில் பராமரிக்கப்படாமல் அழிந்து கொண்டு இருப்பதற்கு என்ன காரணம்? இது சம்பந்தமாக அரசு சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து உள்ளதா என்பதை நான் அமைச்சர் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50.)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் தஞ்சை அரண்மனையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது என்று கேள்விபட்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போல வேதனைப் பட்டேன். அதைத் தற்போது யார் பராமரிக்கிறார்கள் என்பது பற்றியெல்லாம், தற்போது இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்னைக்கு அது சம்பந்தப்படாது என்பதால், பூரணமாக விவரங்கள் என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. ஜான் வின்சென்ட் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் மிகவும் பாதிக்கப்பட்ட நாங்குனேரி வட்டம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. கடந்த 9 தினங்களாக பெய்த பெரும் மழையின் காரணமாக அங்கே பச்சையாறு, வடமலையான் ஆறு, நம்பியாறு போன்றவை வெள்ளப்பெருக்கெடுத்து, 11 குளங்களும் 48 இடங்களில் ரோடுகளும் உடைந்திருக்கின்றன. பல கிராமங்கள் சேதம் அடைந்திருக்கின்றன. அதன்மீது நடவடிக்கை எடுக்கவும் இவைகுறித்து விவர அறிக்கையில் செய்தி இல்லை. அங்கேயுள்ள மக்கள் பீதியடைந்த நிலையில் இருக்கிறார்கள். லட்சக்கணக்கான வாழைப் பயிர்களும், புஞ்சைப் பயிர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு நஷ்ட ஈடு ஏதாவது கொடுக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கிறபோது நாங்குனேரியையும் சேர்த்துத்தான் சொன்னேன். நாங்குனேரியைப் பொறுத்த வரையில் 11 குளங்களும், 48 இடங்களில் ரோடுகளும் உடைபட்டிருக்கின்றன. அவைகளை உடனடியாகக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிலை கொடிக்காலுக்கு எப்படி உதவி செய்ய திட்டம் இடப்பட்டிருக்கிறதோ, அதைப்போல வாழைத் தோட்டங்களுக்கும் முயற்சி எடுத்து அதற்கு என்ன உதவி செய்வது என்பதைப் பற்றி அரசு யோசிக்கும்.

***திரு. பி. துரைராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணியிலே வந்த பெரு வெள்ளத்தின் காரணமாக, அந்தப் படுகையோரங்களில் குடியிருக்கக்கூடிய ஏழை எளிய மக்களுடைய குடிசைகள் ஏறக்குறைய 875 குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த மக்கள், அந்த தாமிரபரணி நதி படுகையைத் தவிர, வேறு இடங்களில் குடியிருக்க முடியாத சூநிலையில் இருந்து வருகின்றனர். ஆகவே அவர்கள் இப்படி அடிக்கடி வெள்ளத்தினால் பாதிக்கப்படாத அளவுக்கு, அவர்களுக்கு நிரந்தரமாக குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவோ அல்லது தாட்கோ மூலமாகவோ நிரந்தர கட்டிடமாகக் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி நதியினுடைய படுகையிலேதான் குடியிருப்பதாக சொன்னார்கள். படுகையிலே குடியிருப்பதால்தான் இந்த ஆபத்து வருகிறது. எதிர்காலத்தில் அவர்கள் படுகையிலே குடியிருக்காமல், மேட்டு நிலத்தில் குடியிருப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே நேற்றைக்கும் அதற்கு முதல் நாளும் வைகையிலே பெரு வெள்ளம் வந்து ஆயிரக்கணக்கான குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கரை ஓரம் இருக்கும் குடிசைகளுக்கு கணக்கு எடுப்பது என்பது கடுமையான பிரச்னை தான். இருந்தாலும், சாதாரண மக்களுடைய குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறதே அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா? இன்றைக்கு தமிழ்நாட்டில் வரலாறு காணாத வெள்ளமும் மழையும் சேர்ந்து பயிர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. விவசாயிகளுக்கு கோடிக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, முன் உதாரணமாக முயற்சி

செய்து நெல், பருத்தி, கடலை, எள், மல்லி. போன்ற பயிர்களும் இந்த வெள்ளத்தால் அழிந்து போயிருப்ப தால் அ தப்பயிரிட்டிருக்கும் விவசாயிகளுக்கும் ஏதாவது உதவித் தொகை வழங்க அரசு முயற்சிக்குமா என்று அறியவிரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் அதிகமாக மழைபெய்து, பயிர்கள் சேதம் அடைந்திருக்கின்றன என்ற செய்தி அரசுக்கு வந்திருக்கிறது. அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டிய முன் ஏற்பாடுகளையும், பாதுகாப்பையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நெல், கடலை, எள், வெற்றிலை, பாக்கு (குறுக்கீடு) வெற்றிலை, பாக்கு இல்லை — போன்ற பயிர்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான் இவைகளைப்பற்றியெல்லாம் மத்திய அரசுக்கு தெரிவிக் கிறோம். இவைகளுக்கெல்லாம் ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. தக்க நேரத்தில் தகுதியான உதவிகளை அரசு செய்யும்.

திரு. வி. கருப்பசாமிபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப தினங்களாக பெய்த பெரு மழையால் நெல்லை மாவட்டம் முழுவதும் வெள்ளத்தால் பயிர்கள் சுமார்15 கோடி ரூபாய் அளவுக்குசேதம் அடைந்திருக்கிறன என்று நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் பத்திரிகைக்கு சொன்ன செய்தி களைப் பார்க்கிறோம். எனவே, இந்த ஆண்டு நெல்லை மாவட் டத்தில் நில வரி வசூல் ரத்து செய்யப்படுமா என்பதையும், இப்போது மார்ச் மாதத்தில் இரண்டு அணைகளும் நிரம்பி வழியும் தருணத்தில் பெய்த பெரு மழையால் 100 சதவீதம் பயிகள் சேதமாயிருக்கிறது. ஆகவே கார் பருவத்திற்கு இப்போதே எல்லா பாசனங்களிலும் தண்ணீர் திறந்து விட அரசு ஏற்பாத செய்யுமா என்றும், தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங் களில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புகளை எப்படி மாண்புமிகு முதல் வர் புரட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிடச் சென்றா றாரோ, அதைப்போல நெல்லை மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் வருகை புரிய ஏற்பாடு செய்யப் படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரவேண்டும் என்று தானே கேட்கிறீர்கள். நீங்களே நேரில் கேட் டால் வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஏதாவது பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர் கேட்ட தைப் போல் 100 சதவீதம் அல்ல, 50 சதவீதம் விளைச்சல் பாதிக்கப்பட்டு இருந்தாலும் தண்ணீர் வரி, நில வரி, உள்ளூர் வரி எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெல்லை மாவட்டத்திற்கு — சட்டமன்றக் கூட்டத் தொடர் இருக்கிற போதே — நான் போவதாக இரு கிறேன். நான் சென்று அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் போகவேண்டிய நிலைமை இல்லை என்று கருதுகிறேன், இன் றைக்கு எல்லாம் கட்டுக்கடங்கி இருக்கிறது என்று தெரிவித்திருக் கிறார்கள்.

*திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, 2. 3 ஆகிய தேதிகளில் நெல்லை மாவட்டத்திலே பெய்த பெருமழையின் காரணமாக அனைத்துப் பகுதிகளும் பாதிக்கப்பட்டது மட்டு மல்லாமல் விளாத்திக்குளம் தொகுதியிலே வானம் பார்த்த பூமியிலே விளைந்த மிளகாய், கொத்தமல்ல்லி, கம்பு, எள் போன்றவைகளின் மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது, ஆகவே நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்ற கேட்டுக்கொள்கிறேன். அதேபோல கூட்டுறவுக் கடன்களையும் ரத்து செய்வதற்கு அரசு முன்வருமா ? அதைப்போலவே தனியார் கடன்களையும் இந்த ஆண்டு வசூலிக்காமல் இருப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுமா ? அதோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி இன்னும் கிடைக்கவில்லை, சாலைகள் பாதிக்கப்பட்டு வாகனங்கள் செல்லமுடியவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. அதைப்பற்றி யும் நடவடிக்கை எடுக்கப்படுமா ? கடலாடி தொகுதியிலே 100 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திரு. சத்திய மூர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்து உயர்நிலைப்பள்ளியிலே அவர் களைத் தங்கவைத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டு மென்று மனுக் கொடுத்தும்கூட இன்னும் நிவாரணம் கிடைக்க வில்லை என்று தகவல் வருகிறது, ஆகவே அதையும் கவனிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதல் உதவி எங்கெங்கே கிடைக்கவில்லையோ அதைத் தெரிவித்தால் இன்றே இப்போதே, முதல் உதவி கிடைக்க ஏற்பாடு செய்வோம் என்ப தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தண்ணீர் தீர்வை, நிலவரி பற்றியெல்லாம் நான் ஏற்கெனவே என்ன பதிலைச் சொன்னேனோ அதையே இதற்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984 -- தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. பொன்னுரங்கம் தொடர்ந்து பேசுவார்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, பஸ்களை தேசியமயமாக்கும் சட்டத் திருத்தம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஆர்டிகிள் 39 பிரகாரம் ஒரு மாநில அரசுக்கு மக்கள் நலனை முன்னிட்டு வருவாயைப் பெருக்கிக்கொள்ள அது வகுத்து இருக்கிற விதிகளுக்கே முரணான சட்டமாக இது இருக்கிறது என்பதை நான் முதலிலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இந்தத் திருத்தச் சட்டம் அந்த மூலச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வருகிறது. கலைஞர் ஆட்சிக் காலத்திலே 1973 ஆம் ஆண்டிலே ஏற்படுத்தப்பட்ட அந்த மூலச் சட்டத்தினுடைய உண்மையான சாராம்சத்தையே மக்களுக்கு பயன்படுத்தக் கூடிய அந்தத் தன்மைகளையே கழுத்த நெறித்துக் கொள்கிற சட்டமாக இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த அக்டோபரிலே உச்ச நீதிமன்றத்திலே 5 நீதிபதிகள் தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் உள்பட வழங்கிய தீர்ப்பையொட்டி இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகிறோம் என்று சொல்கிறீர்கள். உண்மையிலே 5 நீதிபதிகளின் ஏகோபித்த முடிவுக்கு ஏற்றதாக இந்தச் சட்டத் திருத்தம்இருக்கிறதா என்றால் இல்லை. உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கே முரணான இன்னும் சொல்லப்போனால் உச்சநீதிமன்றத் தீர்ப்பைக் கண்டிக்கிற முறையிலே இது அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதிலே நீங்களே ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸிலே சொல்கிறீர்கள். அதிலே இறுதியாக

"In order to give effect to the orders of the Supreme Court and keeping in view the priorities of the State Government and to its declared objective to implement the programme of nationalisation. . . . . "

என்று சொல்லியிருக்கிறீர்கள். தேசியமயமாக்குவதற்குப அந்த எண்ணத்தில் நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்களா ? இது தேசியமயமாக்குவதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

 (திரு. ப. பொன்னுரங்கம்)

(முற்பகல் 11-00)

ஆக நீங்களே போட்டு இருக்கின்ற 'அப்செக்ட்டீவ்க்கு' முரணானது நீங்கள் கொண்டு வந்து இருக்கிற சட்ட பிரிவு என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. ஏன் என்றால் கலைஞர் அவர்கள் 1973-ல் திறந்த புத்தகமாக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்குகின்ற அந்தச் சட்டப் பிரிவை பயன்படுத்திக்கொண்டு Non-tax revenues வரி இல்லாத முறையில் வளத்தைப் பெருக்க வேண்டும், மாநிலத்தினுடைய வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக வழங்கப்பட்டு இருக்கின்ற ஆர்ட்டிகிள் 39 -ஐயே நீங்கள் புறக்கணிக்கிறீர்கள். ஆனால் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1973-ல் இந்தச் சட்டத்தை வெளிப்படையாக திறந்த புத்தகமாக இந்தச் சட்டம் அவர்காலத்தில் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப்படையில் முதலில் நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற Stage carriages எடுத்துக்கொள்ளப்பட்டது. காண்டிராக்ட் கேரேஸ் அல்ல. அது விடுபட்டு இருந்தது. அடுத்து படிப்படியாக என்று சொல்லி ஒவ்வொரு மாவட்டமாக என்று சொல்லி அந்தப் பட்டியலையும் அதே சட்டத்திருத்தத்தில் தந்து இருந்தார்கள். அந்தப் பட்டியலைத்தான் நேற்று நான் படித்தேன். அது என்ன பட்டியல் மொத்தம் இந்த மாநிலத்தில் 8,421 தனியார் பேருந்துகள் செல்கின்றன என்று பட்டியல் தரப்பட்டிருக்கிறது. அதிலே 1973 ஆம் ஆண்டு ஜனவரியில் தேசீய மயமாக்கப்பட்ட பேருந்துகள் தடங்கள் 133 அதை தவிர்த்து மீதி எல்லாம் To be nationalised ஆனால் ஏன் செய்யவில்லை. கோர்ட்டுக்குச் சென்று விட்டார்கள். கோர்ட்டில் கடந்த 11 ஆண்டு காலமாக இருந்த காரணத்தால் அந்தச் சட்டம் தொடர்ந்து செயல்படுத்த முடியவில்லை. காலத்திற்கு தான் உச்ச நீதிமன்றம் திருத்தம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. "for Time Lag. Not for exemptions"; ஆனால் நீங்கள் அந்த டைம் லாகையே காட்டவில்லை. எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் 1973 ஆம் ஆண்டு சொன்னார்கள், 5 ஆண்டுக்குள் அனைத்து பஸ்களும் தேசீய மயமாக்கப்படும் என்று. நீங்கள் அப்படி கூடச் சொல்லவில்லை. இந்த ஆண்டுக்குள் இவைகளை செய்து முடிக்கப் போகிறோம் என்று சட்டத்தில் சொல்லவில்லை. எந்த ஆண்டுக்குள் முடிக்கப் போகிறோம் என்று நீங்கள் இதில் சொல்லியிருக்கிறீர்களா? பட்டியல் எதாவது தந்து இருக்கிறீர்களா ! திருத்திய சட்டத்தில் எங்கள் தலைவர் கலைஞரால் தரப்பட்ட அந்த மூலப் பட்டியலை ஓமிட் செய்து இருக்கிறீர்கள் Totally Omitted இது தான் நீங்கள் சட்டத்தில் காட்டியிருக்கிறீர்கள். அதை ஏன் ஓமிட் செய்தீர்கள். இந்த 11 வருடங்களில் இன்னும் கொஞ்சம் எங்கள் காலத்தில் பர்மிட் கொடுத்து இருப்போம். பர்மிட் கூடுதலாகி இருக்கும். அது 10 ஆயிரம் ரூட்டுகள் இருக்கக்கூடும் என்று ஒரு தோராயமான கணக்காவது தந்தீர்களா? இல்லையே

(திரு. ப. பொன்னுரங்கம்) [1984 மார்ச் 7

நீங்கள் சொல்வதைப் பார்த்தால், எடுத்துக் கொள்ளுகிற எண்ணம் உங்களுக்கு இல்லை. 5 பஸ்களுக்கு எக்ஸ்சம்ஸன் கொடுக்கிறீர்கள். மூலச் சட்டத்தை திருத்துகின்றபோது எக்ஸ்சம்ஸன் தருகிறார்கள். என்ன என்று

"2. *Amendment of preamble to Tamil Nadu Act* 12 *of* 1973.—And whereas in the case of other districts all passenger transport divisions of all the stage carriage operators have to be acquired in a phased programme subject to certain exemptions. . . "

எங்கள் தலைவர் கலைஞர் பேஸ்டு புரகிராம் என்று சொன்னார். எப்படி சொன்னார். எந்த எந்த மாவட்டத்தில் குறைவாக இருக்கிறதோ அதை முதலில் எடுத்து, பிறகு அடுத்து எந்த மாவட்டத்தில் குறைவாக இருக்கிறதோ அதை எடுப்போம் என்றும் 5 வருடங்களில் இதைச் செய்வோம் என்றும் அந்தச் சட்டத்தில் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் விளக்கமாக சொல்லியிருக்கிறார்கள். அது மட்டும் அல்ல, பேஸ்டு புரகிராம்—அதே வார்த்தையை மூலச் சட்ட வார்த்தையை போட்டுக்கொண்டு "......Phased Programme subject to certain exemptions" ஏன் எக்ஸ்சம்ன், நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் அதில் "subject to certain exemptions என்ன எக்ஸ்சம்ன்? மூலச் சட்டத்தில் உண்டா? இல்லை. இது தேசீய்மயச் சட்டமே அல்ல. இது தேசீயமய சட்டத்திற்கு விரோதமான சட்டம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து.

அதற்கடுத்தப்படியாக, மூலச் சட்டத்தில் 26-வதுசெக்ஷனில் புதிதாகவே சேர்க்கிறீர்கள், பெகுலியர் செக்ஷனைச் சேர்கிறீர்கள். அதற்கு எக்ஸ்பிளனேஷன் வேறு கொடுக்கிறீர்கள்.

9. Explanation—

"For the purpose of clause (*c*) "small operators, means any stage carriage operator holding on the date of the commencement of the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Amendment Ordinance, 1984 or an any date subsequent to such date of commencement five or less stage carriage permits notwithstanding that all or any stage carriage permits had expired after such date of commencement. A new entrant may apply for a stage carriage permit subject to the limits specified ......".

யார் ஸ்மால் ஆப்பரேட்டர்ஸ்? அதை நாடு தெரிந்து கொள்ள விரும்புகிறது. ஐந்து பஸ்கள் உள்ளவர்கள் சாதாரண ஆப்பரேட்டர்களா? அதுவும் சிறிய ஆப்பரேட்டர்களா? அவர்கள் பஞ்சைகளா? பராரிகளா? அவர்கள் ஏழைகளா?



1984 மார்ச் 7] [திரு. ப. பொன்னுரங்கம்]

"Small Operators means any stage carriage operator holding on the date of the commencement of the Tami Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Amendment Ordinance, 1984 . . . .

இந்த ஆர்டினன்ஸ்க்குப் பிறகு

"...... or on any date subsequent to such date of commencement five or less stage carriage permits notwithstanding that all or any stage carriage permits had expired after such date of commencement. A new entrant may apply ........

வரலாம். ஐந்து பஸ்களை வைத்துக் கொண்டு இப்பொழுது புதிதாக வரலாம். முன்பு முடியாது. இப்பொழுது தாராளமாக வரலாம்.

"A new entrant may apply for a stage carriage permit subject to the limits specified in this Explanation.

என்ன லிமிட்? ஐந்து பஸ்களை வைத்துக் கொள்ளலாம். அவர் தாராளமாக இந்த நாட்டிலே இருக்கலாம். அதுதான் தேசியமயம்; தனிப்பட்ட தேசிய மயம்! தன்னிறைவுத் திட்டம் மாதிரி ஒரு திட்டம். ஆகவே, இப்படிப்பட்ட மோசமான பிரிவுகளைச் சேர்த்திருக்கிறீர்கள்.

5 பஸ்கள் வரை வைத்துக்கொள்ளலாம் என்ற முறையில் நீங்கள் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை நீங்கள் நிறைவேற்றத்தான் போகிறீர்கள். ஏனென்றால் மெஜாரிட்டி உங்களுக்கு இருக்கிறது. நாங்கள் சொன்னால் கேட்கவா போகிறீர்கள்?

ஆனால், இந்த ஐந்து பஸ்களுக்கு எக்ஸ்செம்ப்ஷன் தருவதால் நீங்கள் எவ்வளவு பெரிய கொடுமையை இந்த மாநிலத்திற்குச் செய்கிறீர்கள் என்பதை நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆர்ட்டிகிள் 39 பிரகாரம், நமக்கு வந்து சேர வேண்டிய கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்—ஒரு ஆண்டுக்கு வர வேண்டிய 00 கோடி ரூபாய் 1,500 அல்லது 2,000 பேர்களிடம்—தனிபர்களிடம் ஒப்படைப்பது முறைதானா? நியாயம்தானா?

எனக்குக் கிடைத்த தகவல் நம்பிக்கையான தகவல், [illegible] மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன், [illegible] ஒரு ஆண்டுக்கு ஒரு பஸ்ஸுக்கு இரண்டு இலட்சம் ரூபாய், செலவெல்லாம் போக வருவாய் இருப்பதாகச் தெரிவித்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

1973ஆம் ஆண்டிலே எட்டாயிரத்துச் சொச்சம் பஸ் ரூட்டுகள் இருந்தன. இப்போழுதுள்ள நிலையில் பத்தாயிரம் பஸ் ரூட்டுகளாவது இருக்கும் என்றால்—2 இலட்சம் என்று போட்டாலும், 200 கோடி ரூபாய்க்குக் குறைவில்லாமல் இந்த மாநிலத்திற்கு வரவேண்டிய வருமானத்தை நீங்கள் அநியாயமாக ஆயிரம், இரண்டாயிரம் பேர்களின் கைகளிலே ஒப்படைத்துவிட்டு, இந்த நாட்டுமக்களுக்குப் பயன்பட வேண்டிய அந்தப் பணத்தை அந்தத் தனிநபர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று கூறுகிறீர்களே அது முறையா? அது சரியா? அதனால் உங்களுக்கு என்ன பயன்? அதனால் உங்களுக்கு என்ன இலாபம்? இதை நாடு தெரிந்து கொள்ள விரும்புகிறது.

ஆகவே, இப்படிப்பட்ட ஒரு மோசமான சட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவது முறையல்ல, சரியல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுப்ரீம் கோர்ட் கூட என்ன தீர்ப்பு வழங்கியிருக்கிறது? நாட்டுடைமையாக்கப்பட்ட இந்தச் சட்டத்தை அப்பில் செய்த பொழுது

Justice Mr. Chandrachud, Mr. Fazal Ali, Mr. Thulsa Bhulkar, Mr. Chinnappa Reddy and Mr. Varadarajan—Supreme Court Judges.

ஆகிய இந்த ஐந்து பேர்களும் சேர்ந்து இந்த தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அது என்ன தீர்ப்பு? நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னதுதான்.

(முற்பகல் 11-10).

அரசியல் சட்டத்தின் 39ஆவது(பி), (சி) பிரிவுகள் சமுதாயத்தின் முக்கிய சாதனங்களும், பொருள்களும், பொது நன்மை கருதி அவற்றைச் சீராகப் பங்கிடும் அதிகாரத்தையும் ஒரு சிலர் கையில் பொருளாதாரம் குவிவதைத் தடுக்கும் அதிகாரத்தையும் அரசுக்கு வழங்கி இருக்கின்றன. நீங்கள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்துகிறீர்கள். எனவே தனிப்பட்ட நபரிடம் கொடுப்பது முறைதானா? அப்படி என்றால் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு மாறாக தனி நபரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அது நீதிமன்றத்தையே தாக்குவதாகும்; நீதிமன்றத்தையே கண்டிப்பதாகும். அதுமட்டுமல்ல.

உங்களையும், எங்களையும் ஆளாக்கிய அண்ணா அவர்கள் தேசியமயமாக்கும் திட்டத்தை எந்த அளவுக்கு நாட்டுக்கு அறிவித்தார்கள் என்பதைப் பாருங்கள். நான் அண்ணாவின் கருத்தை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். '' வரி குறைப்பு முறையாயினும், வசதியளிப்புத் திட்டமாயினும், சலுகைகள் தரும் முறையாயினும், சமூகத்தில் குறைந்த வரு





வாய்த் துறையினரின் நலிவினைப் போக்கும் நோக்குடன் அமைந்திடுவதே சரியான சமூகநீதி என இந்த அரசு திட்டமாகக் கருதுகிறது. தாங்க கூடிய தரத்தில் உள்ளவர்களுக்கும் சேர்த்து சமத்துவமாக இத்தகைய சலுகைககள் தந்திடுவது பொருளற்ற போக்காகும்.'' என்று அண்ணா அவர்கள், அவர்களின் அரசு கருதுவதாகச் சொல்லி இருக்கிறார். உங்களுடைய அரசு அல்ல. மேலும் தாங்கக்கூடிய தரத்தில் உள்ளவர்களுக்கும் சேர்த்து சமத்துவமாக இத்தகைய சலுகைகள் தருவது பொருளற்ற போக்கு என்று அண்ணா சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அண்ணாவின் கொள்கையை மீறுகிறீர்கள். மேலும் கூறுகிறார் அண்ணா '' வசதி நிலையில் உள்ளோர் நாட்டின் பொது நலனுக்காகவும் நலிந்த வாழ்வினரின் நலனுக்காவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவுத் தொகையில் ஒரு கணிசமான பகுதியைத் தந்து உதவும் போக்கை மேற்கொள்வதை 'பாரம்' என்று கருதாது' என்று சொல்கிறார் 'யாரைச் சொல்கிறார் தெரியுமா முதலாளிகளைச் சொல்கிறார் பாரம் என்று கருதாதீர்கள் என்று சொல்கிறார் பாரம் என்று கருதாது அறம், பொறுப்பு என்று கருதிட வேண்டுகிறேன், நல்லோர் அங்ஙனமே கருதுகின்றனர்'' என்று சொன்னார் அண்ணா அவர்கள்

(மணியடிக்கப்பெற்றது)

மேலும் பஸ்ஸைத் தேசியமாக்கப்போகிறேன் என்று அறிவித்த நேரத்தில் ''வரியில்லா வருமான இனங்களை (நான்—டேக்ஸ் ரெவின்யூஸ்) பெருக்குவதன் மூலமாகவே மக்களின் வரிச்சுமைகளை நியாயமான எல்லைக்குள் நிற்குமாறு செய்து வளர்ச்சிப் பணிகளுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் நிதிவசதிகளை மேலும் திரட்ட முடியுமென இன்றைய அரசு கருதுகிறது, எனவே 75 மேல்களுக்கும் அதற்கு மேலும் உள்ள பஸ் வழித் தடங்கள் அனைத்தையும் தமிழக அரசு போக்குவரத்துத் துறை மேற்கொள்ள வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது'' என்று அண்ணா அவர்கள் 16-6-67 அன்று இதே சட்டமன்றத்திலே கூறி இருக்கிறார்கள் ஆகவே நீங்கள் செய்வது அண்ணாவின் கொள்கைக்கு ஏற்றதா என்று நான் கேட்கிறேன்

(மணியடிக்கப்பெற்றது)

பெரும் தொகையாகக் கூட இருக்கலாம. 100 கோடி ரூபாய் வரவு என்று வைத்துக்கொண்டால் அது நான்-டேக்ஸ் ரெவின்யூ-ஆக இருந்தால் இப்போது நீங்கள் 57 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறீர்களே, அதைத் தவிர்ந்திருக்கலாம் அல்லவா? எனவே பொது மக்களைக் கசக்கிப் பிழிகின்ற அரசாக இந்த சர்க்கார் இருக்கின்றது. இதுபோன்ற துறைகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்குச் சலுகை செய்கின்ற சர்க்காராக இந்த சர்க்கார் இல்லை. எனவே இந்தத் திருத்தச் சட்டம் மிக மோசமான திருத்தச் சட்டமாகும். யாருக்கோ ஜாடை காட்டி, எதற்கோ கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்த திருத்தச் சட்டம் என்று

சொல்வதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகவே நீங்கள் மக்களை எதிர்க்கிறீர்கள். 4½ கோடி மக்களுக்கு எதிராக இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மக்களுக்கு பயன் படக்கூடிய அளவில் வரக்கூடிய வருமானத்தை, அநியாய மாக அக்கிரமமாக, முறைகேடாக, தனிப்பட்டவர்களிடத்திலே ஒப்படைப்பதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே இந்தத் திருத்தச் சட்டத்தை நீங்கள் திரும்பப் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்து கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. நா. சுந்தரராஜ்:** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1973ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப் படுத்தல்) சட்டத்தைத் திருத்துவததற்காக சட்ட முன்வடிவின் மீது பேச வாய்ப்பு தந்ததற்கு நான் முதலிலே உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மூலச் சட்டமானது 1973-ஆம் ஆண்டு இதே சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகவும், இன்றைய தினம் மின் துறை அமைச்சராக இருக்கிற பண்ருட்டி திரு. இராமச்சந்திரன் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்ச ரர்கவும் பொறுப்பேற்றுக் கொண்டு அன்றைக்கு இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இருக்கின்றார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால் அன்றைக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்ட நேரத்தில் கிட்டத்தட்ட எல்லா எதிர்க்கட்சிகளும் அதை ஆதரித்து நிறைவேற்றி இருக்கின்றார்கள். கருத்து வேறுபாடு கள் என்று சொன்ன நேரத்தில் அது ஒரே ஒரு கருத்து வேறு பாடு — அன்றைக்குச் சுதந்திரா கட்சியிலே உறுப்பினராக இருந்த இன்றைக்கு மாண்புமிகு சுகாதாரத் துறையினுடைய அமைச்சராக இருக்கக்கூடிய திரு. ஹண்டே அவர்கள் மாறுபட்ட கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத்தைப் பார்க்கின்ற நேரத்தில் அன்றைக்கு நிறை வேற்றப்பட்ட சட்டம் நல்ல சட்டம். அது இன்றைக்குப் பல் வேறு வகையான குழப்பங்களுக்கு ஆளாகி அந்தச் சட்டமே இன்றைக்கு இல்லாத அளவுக்கு அதிலே பல்வேறு வகையான திருத்தங்கள் அரசின் சார்பிலே கொண்டு வரப்பட்டு, மூலச் சட்டத்தினுடைய தன்மையே போகின்ற வகையில் இன்றைக்குத் திருத்தத்தை நாம் பார்க்கின்றோம்.

பொதுவாக, இந்திய அரசியல் சட்டத்திலே 39-வது செக் ஷனிலே கூறப்பட்டிருக்கிற அடிப்படையிலேதான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய திருத்தத்திலே சொல்லியிருக்கின்றார்கள். 39 (பி) மற்றும் (சி) என்ன சொல்கிறது? 'மாநில அரசு' குறிப்பாக சமுதாயத்தைச் சேர்ந்த முக்கிய வருவாய் வாயில் உடைமை





களையும் கட்டுப்பாடும் பொது நலனுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் வழங்கப்படுமாறும் பொது நலனுக்குத் தீங்கு ஏற்படும் வகையில் செல்வமும் உற்பத்தி வாயில்களும் ஒரே இடத்தில் குவி யாதபடி பொருளாதார ஏற்பாடு இயங்கப்பட பார்த்துக் கொள் வதை தனது கொள்கையாக நெறிப்படுத்த வேண்டும் ' என்று அரசியல் சட்டம் மாநில அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. அதே அடிப்படையிலே தான் 1973-ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதே அடிப்படையிலே நீங்கள் ஏன் நிறைவேற்றவில்லை என்றால், அதற்குக் காரணம் எனக்குத் தெரியவில்லை; நீங்கள்தான் பதில் சொல்லவேண்டும் அதற்குப் பதிலாக திருத்தம் கொண்டு வந்திருக் கிறீர்கள். இந்தத்திருத்தங்கள் அரசியல் சட்டத்திற்கு உடன் பட்டதுதானா? அரசியல் சட்டம் முதலிலேயே குறிப்பிட்டதே அதன் அடிப் படையிலே அமைக்கப்பட்டதுதானா என்று கேட்டால்நிச்சய மாக இல்லை — நூற்றுக்கு நூறு இல்லை. தேசியமய்மாக்குகிற— கையகப்படுத்துகிற திட்டத்திற்கு நேர் மாறான கொள்கையைத்தான் இந்தத் திருத்தம் காட்டுகிறதே தவிர தேசியமயமாக்குகின்ற கொள்கையை நிச்சயமாகக் காட்ட வில்லை யென்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்த வரையிலே இன்றைக்கும் சரி, என்றைக்கும் சரி நல்ல கொள்கைகளை நாங்கள் ஆதரிக்கின் றோம். சமீபத்தில் இதே சட்டமன்றத்தில் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட பினாமி ஒழிப்பு சட்டமாக இருந்தாலும் சரி, நில உச்ச வரம்பு சட்டமாக இருந்தாலும் சரி, அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகள் வழக்கு மன்றத்திலே நிற்குமா என்று கேட்ட நேரத்தில் நிற்கும் என்று அவர்கள் சொன்னாலும்கூட, எங்களுக்கு அந்தச் சட்டத்திலே கருத்து வேறுபாடு இருந்தாலுங்கூட, கொள்கை அளவிலே நாங்கள் ஏற்றுக் கொண்டு முழுமையாக ஆதரித்தோம். அதைப் போல இந்தச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருப்பீர்களா னால் நாங்கள் எந்தத் திருத்தமும் கொடுக்காமல் முழுமையாக ஆதரித்திருக்க முடியும். அதற்கு மாறாக யாரோ சில பேருக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை நீங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வீர்கள்.

அது மட்டுமல்ல, இதன் மூலச் சட்டமுன்வடிவை 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அறிமுகம் செய்து ஆய்வு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைத்த நேரத்தில் அன்றைக்கும் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த, இன்றைய மின் துறை அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் பேசியதை நான் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 'I quotc' 'இந்த மசோதா இது வரையில் இல்லாத அளவு வரலாற்றுச் சிறப்புப் பொருந்தியதாகும்

[திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச் 7

புதுமைக் கருத்துக்களைக் கொண்டது. புரட்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது' என்று சொன்னார். 'வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்று நான் ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு புதிய முதலாளி வர்க்கம் இல்லாமல் செய்வது இந்த மசோதா' காப்பிட்டலிஸ்ட்ஸ் என்ற ஒரு சக்தியே இல்லாமல் செய்வதுதான் இந்த மசோதாவின் நோக்கம் என்று சொல்லியிருக்கிறார். 'பஸ் முதலாளி என்ற வார்த்தையே தமிழ் நாட்டில் இடம் பெறாது, தமிழ் அகராதியில் இடம பெறாது.' பஸ் முதலாளிகள் என்ற

(முற்பகல் 11-20.)

வார்த்தையே தமிழ் நாட்டில் இடமில்லாமல் ஆக்குவதற்கு வரலாற்று சிறப்பை இந்த மசோதா பெற்றிருக்கிறது என்பதை நாம் உணர்வோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும சொல்கிறார்—முதலாளித்துவத்தை மேலும் வளர விடக்கூடாது என்பதற்காக புதிய ரூட்டுகளை, புதிய வழித் தடங்களை இனி மேல் யாருக்கும் கொடுப்பது கிடையாது என்று முடிவு எடுத்திருப்பதாக சொன்னார். புதிய ரூட்டுகளை நாம் யாருக்கும் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருப்பதாக அன்றைக்கு அறிவித்தார். ஆகவே பஸ் முதலாளிகள் என்ற வர்க்கமே தமிழ் நாட்டில் இல்லாமல் செய்வது தான் இந்த மசோதாவினுடைய நோக்கமென்று குறிப்பிட்டிருக்கிறார். அதிலே ஏதாவது ஒன்றை உங்களால் நிறைவேற்ற முடிந்ததா ? 10 ஆண்டுகளுக்குப் பிறகு கூட மூலச் சட்டத்தினுடைய அடிப்படையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றி இருப்பார்களானால் நிச்சயமாக தமிழ் நாட்டிலே இருக்கிற லட்சக்கணக்கான மக்கள் உங்களைப் பாராட்டி இருப்பார்கள். அதற்கு பதிலாக 1,500 பேர்களுக்காக நீங்கள் அவர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டும் என்பதற்காக தமிழ் நாட்டில் பஸ் முதலாளிகள் என்ற வர்க்கமே இல்லாமல் செய்து விடுவேன் என்று சொன்ன பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களை பக்கத்திலே வைத்துக்கொண்டு நீங்கள் இந்தச் சட்டத்திலே குழப்பம் செய்து, கொலை செய்து விட்டீர்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்துகிறேன்.

இந்தச் சட்டத்தை எதிர்த்து பஸ் முதலாளிகள் உயர்நீதி மன்றத்திற்கு சென்றார்கள். உயர்நீதிமன்றம் அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பு அளித்தது. அதை எதிர்த்து இந்த அரசாங்கமே உச்ச நீதிமன்றத்திற்கு சென்றது. உச்ச நீதிமன்றம் 31.10-1983-ல் தீர்ப்பு வழங்குகிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், பஸ் தேசியமயம் என்பது சரியே, அப்படி செய்வதன் மூலம் சமதர்ம சமுதாயத்தை நோக்கிச் செல்லவும், சொத்து ஒருசிலரிடம் மட்டும் குவிவதை தடுக்கவும், மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை அதிகரிக்கவும், வேலை வாய்ப்புகளைப் பெருக்கவும், வசதியாக இருக்குமென்று சொல்லி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல்', அன் ஹெல்த்தி காம்ப்படிஷன்



1984 மார்ச் 7] [திரு. நா. சுந்தரராஜ்]

என்று சொல்கிறார்களே, தனியாரும் அரசாங்கமும் போட்டி போட்டுக்கொண்டு அதனால் நாட்டினுடைய பொருளாதாரமே வீணாக போகிறதே, அதற்கு பதிலாக அரசாங்கம் ஒட்டு மொத்தமாக தேசியமயக் கொள்கையை நிறைவேற்றினால் போட்டி ஏற்படாது. கிராமங்களுக்கு வசதிகளைச் செய்ய முடியும். இன்றைக்கு ஒருவர் பேருந்தை வைத்திருப்பாரானால் அவரிடம் ஒரு கிராமத்திற்கு போக்குவரத்து வசதி செய்ய வேண்டுமென்று, அந்த வழித்தடத்தில் பேருந்து செல்லவேண்டுமென்றுச் சொன்னால், அங்கே லாபம் இல்லை; நான் வர முடியாது என்று தான் சொல்வார்கள். ஆனால் அதேநேரத்தில் அரசாங்கத்தினுடைய ஒரு போக்குவரத்துக் கழகம் இருக்குமேயானால் நிச்சயமாக அந்தக் கிராமத்திற்கு பேருந்தை கொண்டு செல்ல முடியுமென்ற நம்பிக்கை இருக்கிறது. இன்றைக்கு காரண நோக்கங்களில் சொல்கிறபோது இந்தச் சட்டத்தின் சில பகுதிகள் காலம் கடந்து விட்ட காரணத்தால் இன்றைய நிலைக்கு ஒவ்வாததாகி விட்டதால், அதற்கு சட்டத்திலே திருத்தங்கள் கொண்டு வரலாம் என்று உச்சநீதிமன்றம் சொல்லி உள்ளது என்று சொல்கிறார்கள். எதற்காக திருத்தம் கொண்டு வருகிறோம் என்று சொன்னதற்கு காரணம், சட்டம் 1973-ல் நிறைவேற்றப்பட்டது; தீர்ப்பு 1983-ல் வந்தது; அதற்கு பின்னால் அதை அமல்படுத்தும் போது அதிலே ஏதாவது பிரிவுகளை, கிளாஸ்களை திருத்தங்கள் என்று உச்ச நீதிமன்றம் சொன்னதன் காரணமாக நாங்கள் இவ்வளவு பெரிய மாற்றத்தை புரட்சிகரமான மாற்றத்தை செய்திருக்கிறோம் என்றால் நான் கேட்க விரும்புகிறேன். உச்ச நீதி மன்றத்திலே என்ன திருத்தம் செய்யவேண்டுமென்று சொன்னார்கள்? அவர்கள் சொன்னது 'டைம் லாக்' 1973ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம், 1983 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டு, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்திலே—1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் நாள் நிறைவேற்றப்படும் என்று கொள்கை அளவிலே சட்டப்பூர்வமாக சொன்ன நேரத்திலே அது கோர்ட்டிற்கு சென்றது. 10 ஆண்டுகளுக்குப் பின்னாலே வருகிறபோது நீங்கள் ஏப்ரல் 14, 1984 என்று அறிவியுங்கள் அல்லது ஏதாவது தேதியை நீங்கள் அறிவியுங்கள் என்று சொன்னார்களே தவிர நீங்கள் அதிலே இருக்கிற முக்கியமான கொள்கையை தேசிய மயமாக்குகிற கொள்கையை நீங்கள் ரத்து செய்துவிட்டு தனியார்களுக்கு பேருந்துகளை கொடுங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்கள் தீர்ப்பு வழங்கவில்லை. ஆகவே புரட்சிகரமான சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். என்று சொல்லுகிற போது எந்த புரட்சியும் இல்லாத அளவிற்கு, நல்ல கொள்கை இல்லாத அளவிற்கு செய்திருக்கிறீர்களே என்பது தான் என்னுடைய ஆதங்கம், வேதனை. ,ஒன்றை மட்டும் சொல்வேன், '73 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டது என்பதற்காக நீங்கள் திருத்தவேண்டுமென்பது உங்களுடைய நோக்கமாக இருக்குமானால் வருங்கால

]திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச்

சந்ததியினர், கோடிக்கணக்கான இளைஞர்கள் இந்த நாட்டிலே நல்ல சமுதாயம் அமைய வேண்டுமென்று விரும்புகிறார்களே அவர்களுக்கு ஒரு நல்ல வழி காட்ட வேண்டிய இந்த சட்டமன்றம் தவறான வழியைக் காட்டி விடுமோ என்று அஞ்சுகிறேன். அந்த பழி, பாவம் எல்லாம் உங்களைச் சேரவேண்டாம் என்று கருதிதான் எச்சரிக்கை செய்கிறேன். தயவு செய்து இந்தச் சட்டத்த திருத்தத்தை திரும்பப் பெறுங்கள். காரணம் ஒரு சோஷலிசப் பார்வையில் முற்போக்கான எண்ணங்களோடு சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்கு கைதூக்கி விடக்கூடிய முறையில் நம்முடைய கொள்கை இருக்குமானால், அதற்கு இந்தச் சட்டமுன்வடிவு நிச்சயமாக வழிவகுக்காது. 1500 தனியார் பஸ் முதலாளிகள் பிழைக்க முடியும். அவர்களில் இலட்சாதிபதிகளாக இருப்பவர்கள் கோடீஸ்வரர்களாக ஆகமுடியும். ஆனால், நிச்சயமாக ஏழை எளிய மக்கள் வாழ வகை செய்யக்கூடியதாக இல்லை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

1976 ஆம் ஆண்டு ஆளுநர் ஆட்சி இருந்த நேரத்தில் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்த நேரத்தில் ஆளுநர் சுகாதியா அவர்கள் ஒரு சட்டத்தைப் பிறப்பித்தார். தனி ஒரு மனிதன் மூன்று பேருந்துகளுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். அதையாவது நீங்கள் நடைமுறைப் படுத்தினீர்களா என்றால் இல்லை. 1978 ஆம் ஆண்டு இதே அவையில் இரண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 3 பஸ்கள் என்று இருப்பது சரியாக இல்லை. அதை 5 ஆக மாற்றவேண்டும் என்று சொன்ன நேரத்தில் அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ''எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று தனி ஒருமனிதன் 3 பேருந்துகளை வைத்துக் கொள்ளலாம் என்று இருப்பதை 5 ஆக மாற்றி விடுகிறேன்'' என்று சொல்லி உத்தரவிடுவதாகச் சொன்னார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்வதை விட ஒருசில தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கிணங்க சொல்லப்பட்ட கருத்தைத்தான் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லவேண்டும். ஏனென்றால், அவர்கள் சொன்னது கொள்கை அளவில் சொல்லப்பட்ட கருத்து அல்ல.

1980 ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மீண்டும் தேர்தலில் வெற்றிபெற்று வருகிறார். ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு அவரை நிருபர்கள் சந்தித்துப் பேசுகிறார்கள். அப்பொழுது ஒரு கருத்தைச் சொல்லுகிறார்கள். நான் மீண்டும் ஆட்சிக்கு வந்து விட்டேன். என்னுடைய முதல் வேலை வட ஆற்காடு மாவட்டத்தில் ஓடும் தனியார் பேருந்துகளையும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓடும் தனியார் பேருந்துகளையும் தேசிய உடைமையாக்குவேன் என்று சொன்னார்கள். நான் அதை



1984 மார்ச் 7] [திரு. நா. சுந்தரராஜ்]

விரும்பினேன். பாராட்டினேன். ஒரு முற்போக்கான எண்ணத்தை அமல்நடத்தப் போகிறார் என்ற காரணத்தால் வரவேற்றேன். ஆனால், இன்றைக்கு 1984 மார்ச் மாதத்தில் கொண்டு வரும் சட்டம் தனியார் புதிதாக இப்போது ரூட்களை பெற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. நான் உங்களைப் பார்த்துக் கேட்கிறேன். எங்கே உங்களுடைய தேசிய மயக் கொள்கை? நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புவது எல்லாம் நாம் எதிலே வேண்டுமானாலும் சமாதானம் செய்து கொள்ளலாம். கொடுக்கல் வாங்கலில் சமாதானமாகத் தீர்த்து கொள்ளலாம், அடிதடியில் சமாதானம் செய்துகொள்ளலாம். ஆனால், ஒரு மனிதனுடைய தலையாய கொள்கையில் அவன் பஞ்சாயத்துப் பேச முடியாது. அப்படிப்பட்ட கொள்கையில் விட்டுக் கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு கொள்கைதான் தேசிய மயக் கொள்கை ஆகும். இன்றைக்கு நீங்கள் ஆட்சியில் இருந்தாலும் சரி அல்லது வேறு கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, அல்லது கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, அவர்களெல்லாம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில்தான் இந்தியாவின் முன்னேற்றத்தை மனதிலே கருதி சட்டங்களைக் கொண்டு வரவேண்டும். ஆகவே, ஒரு உயிரோட்டம் உள்ள ஒரு கொள்கையை ஒட்டி நீங்கள் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினால்தான் இந்த நாட்டிலுள்ள சமுதாய மக்கள் மத்தியில் ஒரு நிலையான நல்வாழ்வை ஏற்படுத்த முடியும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நான் கேட்க விரும்புகிறேன். 31 ஆம் தேதி சட்டத்தை ஆதரித்து சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்குகிறது. ஆனால் நீங்கள் திடீரென்று ஒரு அவசரச்சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். அந்த அவசரச் சட்டத்தின் மூலம் யாருக்கு வசதி செய்து கொடுத்து இருக்கிறீர்கள். ஏழை மக்களுக்காக வசதி செய்து கொடுத்து இருக்கிறீர்கள். ஏதோ 500 பஸ் சொந்தக்காரர்கள் தங்களுடைய பஸ்களை எல்லாம் கொண்டு வந்து மவுண்ட் ரோடில் ஊர்வலம் விட்டார்கள் என்பதற்காக இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்தத்தனியார்களிடத்தில் பணி செய்கின்ற தொழிலாளர்களுக்கு என்ன வசதி அவர்களால் செய்து தரப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதி உண்டா? நிலையான உத்யோகம் உண்டா? அவர்கள் எல்லாம் அரசுக்கு மகஜர்கள் கொடுத்தார்களா? இன்றைக்கு தனியார் முதலாளிகளிடத்தில் வேலை செய்யும் எந்த டிரைவருக்கும் எந்த கண்டக்டருக்கும் எந்த கிளீனருக்கும் வேலை உத்தரவாதம் கிடையாது. ஆனால் அந்த பஸ் முதலாளிகளின் வற்புறுத்தலின் பேரில் அழைத்து வரப்பட்டார்கள். நான் கேட்டுக்கொள்ளவிரும்புகிறேன். இன்றைக்கு பெரிதாக விளம்பரப் படுத்தப்படுகின்றது. தனியார் பேருந்துகள் மூலமாகத்தான் நல்ல வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்று? அது உண்மையா? இங்கே கூட ஒருகேள்வி கேட்டார்கள். இங்கே நாம் பஸ்களை ஓட்டுகிறோம். அதற்காக உலக வங்கியிடமிருந்து

[திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச் 7

கடன் பெற்று இருக்கிறோம். ஆகவே அவர்கள் சொல்கிறபடி தான் நாம் பஸ் நிறுவனங்களை நடத்த வேண்டி இருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இருப்பதால் நாம் பஸ்களை ஓட்டுகின்ற டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் நாம் எண்ணுகிறபடி சலுகைகளை அளிக்க முடிகிறதா? அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடிகிறதா?

(முற்பகல் 11-30)

டயர் உற்பத்தியை, சேசிஸ் உற்பத்தியை தேசியமயமாக்காமல் பஸ்ஸை மட்டும் தேசியமாக்குவதில் என்ன நன்மை என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நம்மிடம் இருக்கும் நிறுவனத்தைத்தான் நாம் தேசியமயமாக்க முடியும். அதைவிட்டுவிட்டு, அசோக் லேலான்ட், டாட்டா நிறுவனங்களை எப்படி நாம் தேசியமயமாக்க முடியும்? ஆகவே டயர், சேசிஸ் நிறுவனங்களை தேசியமயமாக்கிவிட்டுதான் பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

முதலிலே பஸ்களை எல்லாம் தேசியமயமாக்குங்கள். அதற்குப் பின்னாலே மற்ற நடவடிக்கைகளை எடுங்கள். தனியார் நடந்தும் டயர், சேசிஸ் நிறுவனங்களை நீங்கள் தேசியமயமாக்குவதற்குப் பதிலாக நீங்களே ஏன் டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்கக்கூடாதா? நீங்கள் ஆரம்பியுங்கள். யாரும் தடுக்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? டயர், சேசிஸ் எல்லாம் காரணம் காட்டி, தேசியமயமாக்கும் கொள்கையிலிருந்து சற்று விலகி, தனியாருக்கு உதவி செய்யலாம் என்ற எண்ணத்தில் நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். எனவே நாங்கள் இதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. (மணியடிக்கப்பெற்றது).

இது ஒரு முக்கியமான சட்ட முன்வடிவு இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். செக்ஷன் 14 மூலச் சட்டத்தின் முக்கியமான ஒரு பிரிவு.

**Bar on applications for fresh permit or for renewal of the existing permit for running any stage carriage or contract carriage from 14th January 1973.**

தனியாருக்கு புதிதாக வழித்தடங்கள், பெர்மிட் வழங்கப் படுவதில்லை. மேலும் பெர்மிட்டை புதுப்பிக்கின்ற வகையிலும் எதுவும் செய்ய முடியாது என்பது மூலச் சட்டம். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? அதிலே திருத்தம் செய்தீர்கள். அரசாங்கத்தைத் தவிர வேறு தனியாருக்கு இல்லை என்ற சட்டத்தை மாற்றி, யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று செய்திருக்கிறீர்கள். இது என்ன நியாயம்? மூலச் சட்டத்தை இப்படி மாற்றியிருக்கிறீர்கள்!



1984 மார்ச் 7] [திரு. நா. சுந்தரராஜ்]

அது மட்டுமல்ல, மூலச் சட்டத்தின் அட்டவணையின் படிப்படியாக எந்த எந்த மாவட்டத்தில் பஸ்களை தேசியமயமாக்குவது என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது முதலில் குறைவாக ஓடுகின்ற பஸ்கள், அதற்கு அடுத்து அதைவிட கூடுதலாக ஓடுகின்ற பஸ்கள், அதற்கு அடுத்து அதைவிட கூடுதலாக ஓடுகிற பஸ்கள், இப்படியே போய் கடைசியாக மிக அதிகமாக ஓடுகின்ற பஸ்கள் உள்ள மாவட்டங்களில் தேசியமயமாக்கும் கொள்கையை செயல்படுத்துவது என்று இருந்தது. இன்றைக்கு அந்த அட்டவணையை எடுத்துவிட்டீர்கள். காரணம் எந்த மாவட்ட பஸ் முதலாளியாக இருந்தாலும், அவர்களை எல்லாம் மிரட்டலாம் என்ற நோக்கம்தான். பஸ் முதலாளிகளை மிரட்டுவதற்காக இப்படிச் செய்திருக்கிறீர்கள். உண்மையிலேயே நீங்கள் தேசியமயமாக்கும் கொள்கையை அமுல்படுத்துவதாக இருந்தால் இந்த தேதியிலிருந்து இந்த மாவட்டம், இந்த தேதியிலிருந்து இந்த மாவட்டம் என்று அறிவித்து அதன்படி செயல்படுத்தலாம். நீங்கள் அப்படி அறிவித்திருந்தால் நான் அதைப் பாராட்டுவேன். ஆனால் இன்றைக்கு என்னால் பாராட்ட முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்க சார்புடைய போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் நஷ்டத்தில் செயல்படுகின்றன. சோழன் போக்குவரத்தில் 2 கோடி ரூபாய் நஷ்டம்; பாண்டியன் போக்குவரத்தில் 2 கோடி ரூபாய் நஷ்டம். சேரன் போக்குவரத்துக் கழகம் மட்டும் இலாபத்தில் செயல்படுகிறது என்று நினைக்கிறேன், மற்ற எல்லா போக்குவரத்துக் கழகங்களும் நஷ்டத்தில்தான் செயல்படுகின்றன என்று சொல்கிறார்கள். நஷ்டத்தில் ஓடுகிறது என்பதால் கொள்கையை மாற்ற முடியாது. நஷ்டத்திறகுக் காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும்; நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சோழன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி 15, 20 நாட்களுக்கு முன்னால் வந்த செய்தி அனைவருக்கும் தெரியும். அதிலே பணியாற்றுகின்ற அக்கவுட்ன்ஸ் ஆபீசர்ஸ் என்று சொல்லக்கூடிய கணக்குப் பார்க்கும் அதிகாரிகள், 3,4 பேர்கள் என்று நினைக்கிறேன், ஒரு தவறான காரியத்தைச் செய்து விட்டார்கள். அது சாதாரண தவறு அல்ல. 5,000 ரூபாய் 10,000 ரூபாய் அல்ல. ஒரு கோடி ரூபாய்க்குமேல் கொள்ளையடித்திருக்கிறார்கள். அந்தப் போக்குவரத்துக் கழகத்தில் மொத்த நஷ்டம் 2 கோடி ரூபாய். அதில் 4 பேர்கள் சேர்ந்து அடித்த கொள்ளை மட்டும் ஒரு கோடிக்கு மேல். இப்படி இருந்தால் எப்படி நஷ்டம் வராமல் இருக்கும்? அது கூட இன்னும் கணக்கு சரியாகப் பார்க்கவில்லை என்று சொல்கிறார்கள். அவர்கள் அடித்த கொள்ளை 2 கோடிக்குமேல் இருக்கும் போல் தெரிகிறது. இப்படி

[திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச் 7

ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலும் ஒரு கோடி, இரண்டு கோடி ரூபாய் கொள்ளையடிக்க முடியும் என்றால் இது யாருடைய தவறு? நான் அமைச்சரை குற்றஞ்சாட்ட வில்லை. இருக்கக்கூடிய நிர்வாக இயந்திரம் அந்த அளவுக்கு மோசமாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு போக்குவரத்துக் கழகத்தில் இருக்கிற எம்.டி.-க்கள் எப்படி இருக்கிறார்கள், இங்கே அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இருக்கக்கூடிய அறைகள் சாதாரண மான அறைகள்தான், அங்கே 'பான்' மட்டும் ஓடுகிறது. அமைச்சர்களுடைய வீடுகளிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆனால் அந்த எம். டி.-க்கள் இருக்கக்கூடிய அறையைப் பார்த்தால் முழுவதும் ஏ. சி. பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் இருக்கக்கூடிய ஆபீஸ் அறை ஏ. சி. அவர்களுடைய காரிலே ஏ.சி. அவர்களுடைய வீட்டிலே ஏ.சி. எல்லாமே ஏசி தான் (அரசாங்கமே நீ போசி என்று ஒரு குரல்). இப்படி அரசாங்கப் பணத்தில் உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறவர்கள். மக்களுடைய பணத்திலே உல்லாச வாழ்க்கை நடத்துகிறார்கள். ஆகவே நான் கேட்கிறேன். இதைக் கட்டுப்படுத்துங்கள் என்று (குறுக்கீடு). தலைவர் அவர்களே, இன்றைக்கு ஒரு பேருந்து ஒரு சில நபர்களால், சமூக விரோதிகளால் எரிக்கப்பட்டால், அந்தப் பேருந்துகளை, இன்றைக்கு நம்முடைய அமைச்சவரர்கள் பொறுப்பேற்ற பிறகு, திருச்சி, மதுரை போன்ற பஸ் ஸ்டேண்டுகளில் போர்டு போட்டு ''பாருங்கள், பாருங்கள் நான் என்ன பாவம் செய்தேன், என்னை எரிக்கிறார்கள்'' என்று படம் போட்டிருக்கிறார்கள். இப்படி மக்களுக்குப் படம் போட்டுக் காண்பிப்பது முறைதான். ஆனால் இதைவிடக் கடுமையாக ஒரு கோடி ரூபாய்க்கு கொள்ளை அடிக்கிறவர்களின் படங் களை பெரிய அளவில் போட்டு, ஒவ்வொரு பஸ் ஸ்டேண்டிலும் 'இவர்கள் தான் கொள்ளை அடித்தவர்கள்' என்று போடுங்கள், அப்போதாவது அவர்கள் திருந்துவார்களா என்று பார்ப்போம். தேசியமயமாக்கும் கொள்கையே தவறு என்று சொல்கின்ற அளவிற்கும், வாதாடமுடியாத அளவிற்கும் தனியாருக்கு லாபம் கிடைக்கிறது. தனியார் வாழ்ந்தால் தான் வாழமுடியும், என்ற நிலை ஏற்படுகிறது. அரசாங்கம் நஷ்டத்தைத்தான் அடைந்துவருகிறது. இந்த நாட்டிலே சோஷலிசம் வரவேண்டுமானால், நம்மால் இயன்றவற்றை தேசீய மயமாக்கவேண்டும். உங்களால் முடிந்தால், நாட்டின் பஸ்களையும், மத்திய அரசால் முடிந்தால் வங்கிகளையும் பெரிய தொழிற் சாலைகளையும் தேசீயமயமாக்குங்கள். அப்போது தான் ஒட்டுமொத்தமாக ஏழ்மையை விரட்ட முடியும். தேசிய மயமாக்குகின்ற கொள்கையிலிருந்து நாம் அவ்வப்போது தவறுவோமேயானால், நாட்டின் ஏழ்மை மட்டுமல்ல, வருங்கால சந்ததியரின் எண்ணங்களும் மாறுபடும்.



1984 மார்ச் 7] [திரு. நா. சுந்தரராஜ்]

இன்று போக்குவரத்துக் கழகம் நடந்துவருகிறது. அதேபோல் தனியார் பேருந்துகளின் ஆதிக்கம் எவ்வளவு தூரத்திற்கு இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம். 'டைம்' போடு கிறோம். கலெக்ஷன் வரும் டைம் பார்த்து, தனியார்கள், சம்பந்தபட்ட பெரிய அதிகாரிகளையோ எம். டி.க்களையோ பார்த்து எங்களுக்கு இந்த டைம் வேண்டும் என்று சொல்கிறார்கள். நீங்கள் வேறு டையத்தை வைத்துக்கொள்ளுங்கள் என்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை யெல்லாம் டிமாண்டிலே பேச வேண்டியது. இது பில், இப் போதே 20 நிமிடங்கள் ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : தனியார் முதலாளிகள் அரசாங்கத் தினுடைய நேரத்தை தாங்கள் எடுத்துக்கொண்டு, அதன் காரணமாக தாங்கள் அந்த வழிதடத்திலே அதிக லாபம் வைத்து, அரசாங்கத்தினுடைய போக்குவரத்து கழகம் நஷ்டத் தில் ஓடுகிற கணக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் அந்தப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளை அந்த வழித் தடங்களுக்குச் செல்லாத நிலைமை இன்று அதிகமாக இருக்கிறது. ஒட்டுமொத்தமாக அரசாங்கப் பேருந் துகளே போகும் என்றால், தனியார் தலையிடமாட்டார்கள்.

விருத்தாசலம்-உளுந்தூர்ப்பேட்டைக்கு இடையில் பெரியார் போக்குவரத்து பேருந்து ஓடிக்கொண்டிருந்தது. நாள் ஒன்றுக்கு ரூ. 1,500 வருமானம் வந்தது. ஆனால் இன்றைக்கு தனியார் பேருந்து அதே வழி தடத்தில் சென்று, பெரியார் போக்குவரத்துப் பேருந்தை நிறுத்திவிட்டது. திருவேங்கடம் பஸ் முதலாளி இன்றைக்கு ஓட்டிக்கொண்டு இருப்பதாகச் செய்தி. நீங்கள் வெரிபை செய்யுங்கள். காலையும் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இதைச் சொன்னார். ஆகவே தமிழ்நாடு பூராவும் உள்ள நிலைமை இது. நான் உதாரணத்திற்கு ஒன்றைத்தான் சொன்னேன், சுப்ரீம் கோர்ட் சொன்னது நீங்கள் ஹெல்தி காம்பெடிஷன் என்று நினைக்காதீர்கள், தனியாரும் அரசாங்கமும் போட்டி போட்டால், அரசாங்கத்தினுடைய மொத்தமான பொருளா தாரம் பாதிக்கப்படும், அந்தப் போட்டி தேவையில்லை, ஆகவே தேசியமயமாக்கும் கொள்கையை அமல்படுத்தும்படி அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். நாம் ஏதோ ஒரு புதிய சமுதாயத்தை படைத்துவிட முடியும் என்பதற்குச் சொல்ல வில்லை. 1973ஆம் ஆண்டு உங்களிடத்திலே அந்தச் சட்டத் தின் மூலம் ஒரு நல்ல குதிரை ஒப்படைக்கப்பட்டது. அராபியன் குதிரையைக் கொடுத்தார்கள்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச் 7

(முற்பகல் 11-40.)

அந்தக் குதிரையிலே ஏறி நீங்கள் எங்கே செல்லவேண்டுமோ அங்கே செல்லாமல் அந்த முயற்சியிலே, வழியிலே செல்லாமல் சோஷியலிசத்தை நோக்கிச் செல்லாமல், வேறு எங்கோ சென்று கொண்டிருக்கிறீர்கள். அந்த முரட்டுக் குதிரையிலே ஏறி உட்கார்ந்து கொண்டு, இப்போது அது உங்களைக் கீழே தள்ளியது மட்டுமல்லாமல், குழியையும் பறித்து, அது உங்களையும் சேர்த்து, இந்த தமிழ்நாட்டில் இருக்கிற நம்மையும் சேர்த்து அமுக்கி விடுகின்ற நிலையிலிருக்கிறது. அதைப் பாதுகாக்கவேண்டியது உங்களுடைய பொறுப்பு. நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். 1973ஆம் ஆண்டு--பெரிய புரட்சிகரமான சட்டம் என்று நான் சொல்லி வாதாடவேண்டியதில்லை—10 ஆண்டுகளுக்கு முன்பாகவே நல்ல சட்டத்தை நிறைவேற்றிய இந்த அவை இன்றைக்கு இந்த மழுங்கலான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதையும் இந்த அவையிலே நிறைவேற்றவேண்டுமா என்பது தான் என்னுடைய கேள்வி, (மணியடிக்கப்பெற்றது)'.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் முடித்துக் கொள்ளவேண்டும். (குறுக்கீடு)

**Thiru DURAI MURUGAN:** As a Lawyer you should know that it is not an ordinary Bill.

**Mr. DEPUTY SPEAKER:** All the Bill are equal.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்கு 60ஆம் ஆண்டு போட்ட சட்டமே செல்லாது, அன்றைக்கு நடைபெற்ற டிரான்சாக்ஷன் செல்லாது என்று கொண்டு வந்த சட்டத்தை நாங்கள் ஆதரித்து இருக்கிறோம் ஆகவே இதிலே கருத்து வேறுபாடு இல்லை. நீங்கள் முற்போக்கான சட்டத்தைக் கொண்டு வந்தால் முழுமையாக கைகூப்பி வரவேற்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தை நிச்சயமாக எதிர்க்கிறோம். காரணம் இன்றைய சூழ்நிலையில் ஒரு புதிய முதலாளி வர்க்கத்தை உருவாக்க, 73-ஆம் ஆண்டு சொல்லப்பட்ட கருத்துக்கு மாறாக ஒரு புதிய முதலாளி வர்க்கத்திற்கு பாலூட்டி வளர்ப்போம் என்று சொல்கின்ற கருத்தாக இது இருக்கிறது என்று சொல்லி, இதை நான் எதிர்க்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.



1984 மார்ச் 7]

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றி யைத் தெரிவிதுக்கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் 1956ஆம் ஆண்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்திலே 'நெஞ்சம்' என்ற நாடகம் நடந்தபோது, தனியார் இந்தப் போக்குவரத்தை நடத்துகின்ற காரணத்தால் நாட்டிலே என்னென்ன சிக்கல்கள் ஏற்படுகின்றன, சமுதாயக் கேடுகள் ஏற்படுகின்றன; பொருளாதாரச் சீரழிவுகள் ஏற்படுகின்றன என்றெல்லாம் நாங்கள் எடுத்துச்சொன்னோம். அப்போதே, அந்த நாடகத்திற்குத் தலைமை தாங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் "ஆளுகின்ற ஆட்சிக்கு இது ஒரு ஆலோசனை; அடுத்து வருகின்ற ஆட்சிக்கு இது ஒரு எச்சரிக்கை, என்று சொன்னார்கள். அப்படிப் பட்டசூழ்நிலையில் அண்ணாவின் வழியில் அவர்கள் நாட்டுடைமயாக்க வேண்டும் என்று சொன்ன அந்தக் கருத்துக்கு ஏற்ப, கொஞ்சம் கொஞ்சமாக மெல்ல, மெல்ல, எந்தெந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு ஒரு மாநில அரசு எந்தெந்த வகையிலே இவைகளை நாட்டுடைமை யாக் முடியுமோ அந்த அளவிற்கு மிக நல்ல முறையில் ஒழுங்காக, திட்டமிட்டு இவைகளை நாட்டுடைமையாக்கிக் கொண்டு வருவதை எண்ணிப்பார்க்கின்றபோது உண்மையிலே நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கே பேசுகின்றபோது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர் சுந்தரராஜ் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அவரிடத்திலேயிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது எல்லாம், எப்போது அவர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைவிட்டு, ரஷிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு, அல்லது சைனா கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறி விட்டார் என்று தெரியவில்லை. காரணம் இது ஒரு கேபிடலிச நாடு அல்ல, கம்யூனிஸ்ட் நாடும் அல்ல, சமதர்ம சோசலிஷ சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று பாடுபடுகிற நாடு என்று சொல்கிறார்கள். இந்தியாவினுடைய நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கிற போது, இந்தியாவில் இருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் டாட்டாக்கள், பிர்லாக்கள், சவுரங்கிகள், சோலங்கிகள், லால்சந்த், ஹிராசந்த் போன்ற கோடீஸ்வரர்கள் எல்லாம், இந்தியாவிலே சர்க்கரை ஆலை முதலாளிகளாகவும், கனரகத் தொழில்களினுடைய முதலாளிகளாகவும், கெமிக்கல் தொழில்

கள், நூற்பாலைகள் போன்ற பல்வேறு பெரிய பெரிய தொழில்கள் எல்லாம் இன்றைக்கு அவர்களிடத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட தொழில்களை எல்லாம் அவர்களிடத்திலே ஒப்படைத்து இருக்கிற ஒரு அரசின், அந்தக் கட்சியின் சார்பில் ஒருவர் இங்கே பேசுகிறபோது, 5 பஸ்களை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கின்றபோது, அதைக், கூட எதிர்த்து, இங்கே பேசுகின்றார் என்று சொன்னால் அவர் கட்சினுடைய கொள்கையைச் சொல்கிறாரா, அல்லது அவருடைய சொந்த பாலிசியை வெளியிடுகிறாரா என்று தெரியவில்லை. (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசி முடித்து விடட்டும். பிறகு நீங்கள் பேசுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, அவர் என் பெயரை குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். பாயின்ட் ஆப் ஆர்டர்.

சில கருத்துக்களை நான் பேசுகிற நேரத்தில் சொன்னேன். நம்முடைய உறுப்பினர் சமரசம் அவர்கள் நான் என்றைக்கு, காங்கிரஸ் கட்சியிலிருந்து, சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கோ அல்லது வேறு ஏதோ கட்சிக்கோ போனேன் என்கிற வகையில் ஒரு கேள்வி கணையை எழுப்பியிருக்கிறார்கள். நான் அவருக்கு உறுதியாகச் சொல்கிறேன். பிறந்தது முதல் நான் காங்கிரஸ் கட்சிதான். சாவதும் அந்த கட்சியில் தானே தவிர வேறு கட்சியில் அல்ல. அது ஒன்று.

இரண்டாவது, ஒரு கொள்கையைப் பற்றி சொல்கிற நேரத்தில் அதை மாசு கற்பித்து பேசக் கூடாது. எந்த ஒரு கொள்கையுமே, இந்த கட்சிக்குத்தான் சொந்தம், அந்தக் கட்சிக்கு சொந்தம் இல்லை' என்ற வகையில் பேசமுடியாது அந்த வகையில் அவர்கள் சொல்வார்களேயானால், நான் டணிவோடு தயதுவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். அவர் தம்முடைய 'கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். சோசலிசம் என்பது, சோஷலிசக் கொள்கை என்பது யாருக்கும் சொந்தமானது அல்ல. சோஷலிசம் என்பது நாமெல்லாம் பிறப்பதற்கு முன்னதாகவே, ஏன் நம்முடைய தந்தை பாட்டன் போன்றவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே" உருவாக்கப்பட்டது. அந்தக் கருத்துக்களுக்கு தனிப்பட யாரும் சொந்தக்காரர்கள் அல்ல. ஆகவே, அப்படி தனிப்பட வைத்துப் பேசும் பேச்சுக்கள் மூலமாக அந்த மிகப்பெரிய புனிதமான கொள்கையை மாசுபடுத்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.





டாக்டர் சே. சமரசம் . மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசுகிறபோது அவர் தனது உணர்வுகளை எடுத்து வைப்பதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. ஒரு கட்சியின் சார்பாக பேசுகிறபோது, இந்தியாவில் அவருடைய கட்சியின் நிலைமை பற்றியும், அது ஆட்சி செய்கிற நிலமைகளைப் பற்றியும், இந்தியாவில் இருக்கிற மற்ற நிறுவனங்கள் எல்லாம் எப்படி நாட்டுடமையாக்கப் படாமல் இருக்கிறது என்கிற நிலைமைகளையெல்லாம் அவர் எண்ணிப் பார்க்காமல், இங்கே மட்டும் புதியதாக கேட்கிறாரே என்பதற்காக, அதை எடுத்துச் சொல்வதற்காக சொன்னேனே தவிர, நல்ல பாரம்பரியமான அரசியல்வாதி அவர், ஏதோ மனதிலே வைத்துக் கொண்டு எதையோ பேசுகிறார்.... ......(குறுக்கீடு).* *

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் பேசும்போது, புதியதாக சட்டம் கொண்டு வாருங்கள் என்று நான் கேட்க வில்லை. 1973 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தை, நீங்கள் அதே அடிப்படையில் அமல் படுத்த வேண்டும் என்றுதான் கேட்கிறேனே தவிர, புதியதாக கொண்டு வாருங்கள் என்று நான் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேருமே வாக்குவாதம் செய்து கொண்டிருந்தால் எனக்கு பேசுவதற்கு ஏதாவது நேரம் கிடைக்குமா என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் பேசுகிறபோது ஏதேதோ சொன்னார்கள். அப்போது இந்தப்பக்கம் இருந்து யாரும் எழுந்திருக்கவில்லை. நானும், எனக்கு பேச பின்னால் வாய்ப்பிருக்கும், அப்போது பேசிக்கொள்ளலாம் என்று எழுந்திருக்கவில்லை. இப்போது இந்தப்பக்கமிருந்த ஒரு உறுப்பினர் பேசும்போது இப்படி அடிக்கடி குறுக்கிடக்கூடாது. முழுவதுமாக, பொறுமையாக கேளுங்கள். குறுக்கீடு நீங்கள் பேசுகிறபோது கூட எவ்வளவோ சொன்னீர்கள். அதில் எத்தனையோ தவறுகள் இருப்பதாக நாங்கள் கருதலாம் . ஆனால் ஒருவரும் எழுந்து குறுக்கிடவில்லை. அவைகளையெல்லாம் இங்கே வாக்குவாதங்களாக செய்ய ஆரம்பித்தால் அது சரியாக இருக்காது. (குறுக்கீடு)

திரு. நா. சுந்தரராஜ் : அவர் பெயரை மென்ஷன் பண்ணி சொன்னார். அதனால் குறுக்கிட்டு விளக்கம் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயர்களை எல்லாம் குறிப்பிட்டு சொல்லாமல் பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. நூரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தச் சமாச்சாரம் பற்றியது அல்ல, வேறு ஒன்று.

நம்முடைய உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகிறபோது**,

என்ற பழமொழியை குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது தாய்க்குலத்தை அவமானப்படுத்துவதுபோல் இருக்கிறது. ஆகவே, அதை அவைகுறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தைகளை அவைக்குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அகில இந்தியாவிலேயே தனித் தன்மையுடன் போக்குவரத்துக் கழகத்தை மிகச் சிறப்பாக தமிழகம்தான் நடத்திக் கொண்டிருக்கிறது என்று இந்தியப் பிரதமர் அவர்களே பாராட்டி பேசியிருக்கிறார்கள். இந்தியப் பிரதமரின் அலுவலகத்திலிருந்தும் பல பேர் பலமுறை. பல்வேறு நேரங்களில் இதை சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல, ஆக்கப்பட்ட பொருள்கள் அத்தனையும் அரசாங்கத்திற்கே சொந்தம் என்கிற முழுமையான நிலைமை இந்திய துணை கண்டத்திலே எப்பொழுது வருமோ, அப்பொழுது, நீங்கள் எதிர்பார்க்கிற பல்வேறு நன்மைகளையும், உங்களை விட வேகமாகவே இந்த அரசாங்கம் செய்யத் தயாராக இருக்கிறது. இரட்டை ஆட்சி முறை என்ற நிலை மாறி, மாநிலத்திலிருந்து வருகிற வருவாய்கள், முழுமையாக மாநிலத்திற்கே பயன்படுத்த முடியும் என்ற நிலைமை வருமேயானால், ஒரு மாநிலம் இந்திய துணை கண்டத்தில் மட்டும் அல்ல, உலகத்தில் எங்கேயிருந்து வேண்டுமானாலும் உதவிபெற்று தன்னுடைய மாநிலத்தை காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நிலைமை வருமேயானால், அதற்கேற்றவாறு அரசியல் சாஸனம் திருத்தப்படுமேயானால், நீங்கள் எண்ணுகிற, எதிர் பார்க்கிற நன்மைகளைவிட, பல மடங்கு நன்மைகளை, இப்போது செய்வதை விட வேகமாக செய்வதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அது மட்டும் அல்லாமல், தமிழகத்தினுடைய வருவாயைப் பங்கு போடாமல், முழுவதுமாக மாநிலத்திற்கே அதைப் பயன் படுத்த முடியும் என்ற நிலைமை வருமேயானால், இந்த நேரத்தில் இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற சட்டமுன் வடிவைப் போல, எல்லாவிதமான நிறுவனங்களும் தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்ற அந்த திருத்தம் முழுமை பெறுவதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பின் வாங்காது.

(முற்பகல் 11-50).

ஆகவே அந்த அளவில் இப்போது இருக்கிற சூழ்நிலையில் பொருளாதாரத்தின் அடிப்படையில் ஆண்டுக்கு வருகிற வருவாயின் அடிப்படையில், மக்களுக்கு எந்த எந்த வகையில் சேவை செய்ய முடியும் என்பதை உணர்ந்து பொருளாதாரத்தை எண்ணிப்பார்த்து, வரவை எண்ணிப்பார்த்து செலவை எண்ணிப் பார்த்து, செலவழிக்கப்படுகிற பெட்ரோல், டீசல், உதிரிப் பொருட்கள் இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து இந்த அளவுக்குத் திறமையாக நடத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் இவ்வளவு தொகை துண்டு விழுகிறது. இவ்வளவு நட்டம் வருகிறது என்ற கணக்கைப்பார்த்து அந்த அடிப்படையில் அவசரத் தேவையாகக் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து முடிக்கிறேன் நன்றி, வணக்கம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய காரண நோக்க விளக்கத்திலே உச்சநீதிமன்ற உத்திரவுகளை நிறைவேற்றும் பொருட்டும், மாநில அரசின் முன்னுரிமைப் பணிகளைக் கருத்திற் கொண்டு நாட்டுடைமையாக்கும் திட்டத்தைப் படிப்படியாகச் செயல்படுத்தவும் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் இன்று தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்ட விரும்புவது, சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிற்கு முற்றிலும் மாறான முறையிலே உங்கள் சட்டம் இருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கான ஆதாரங்களை நான் பின்னாலே படிக்க இருக்கிறேன். அது மட்டுமல்ல. இந்த அரசைப் பொறுத்த வரையில் பேருந்துகளை நாட்டுடைமையாக்குவது சம்பந்தமாக ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டிலேயும், 1981 ஆம் ஆண்டிலேயும் கொள்கைக் குறிப்புகளிலே தெட்டத் தெளிவாக ரிப்பீட் பண்ணப்பட்டிருக்கிறது. 1980 ஆம் ஆண்டு கொள்கைக் குறிப்பிலே தேசவுடைமையாக்குவதற்காக சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாலிசி நோட் எண் 40 இல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். 1967 இல் அரசு கீழ்க்கண்டவாறு முடிவெடுத்தது என்று சொல்லி சாதாரண, விரைவுப் பேருந்துப் பணி இரண்டிலும் 75 மைல்களும் (120 கிலோ மீட்டர்) அதற்கு மேலும் உள்ள

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 மார்ச் 7

அனைத்து வழித் தடங்களும் சென்னையிலிருந்து புறபபடும் அல்லது சென்னையோடு முடியும் அனைத்து வழித் தடங்களும் (எவ்வளவு தூரமானாலும்) நாட்டுடமையாக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்று உங்களு டைய கொள்கைக் 'குறிப்பிலே அன்றைக்குச் சொன் னீர்கள். ஆனால் இங்கே இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக் கிற சட்டம் முற்றிலும் அந்தக் கொள்கைக்கு மாறுபட்டது என் பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே கொண்டு வந் திருக்கிற இந்தச் சட்டத்தின்படி 5 பேருந்துகள் வைத்து இருக்கிற சுமால் ஆப்பரேட்டர்கள் பஸ்களை வைத்துக் கொள்வதற்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, ஆனால் அதற்கு மேலே 1984 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதியிலிருந்து நியூ என்ட்ரன்ட்ஸ் பெர்மிட் அப்ளை பண்ணுவதற்கு வாய்ப்பும் கொடுத்திருக்கிறீர்கள். இது முற்றிலும் சுப்ரீம் கோர்ட் தீர்ப் பிற்கு மாறுபட்டது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

One of the planks of building an egalitarian society in order to achieve socio-economic emancipation is the policy of nationalisa-tion of industries.

அப்படி நேஷனலைசேஷன் என்பதிலே மிக முக்கியமான ஒரு அம்சம் என்று தெட்ட தெளிவாக சுட்டிக்காட்டி தமிழகம் ஏற்றுக் கொண்டு இருக்கக் கூடிய சட்டம் தனியார் பேருந்துகளை தேசிய மயமாக்குவதற்கான சட்டம் இன்று எப்படி செல்லுபடியாகும் என்பது மட்டும் அல்லாமல் உயர்நீதி மன்றத்தில் இந்தத் தீர்ப்பு கொடுக்கக்கூடிய நேரத்தில் எப்படிப்பட்ட நிலை இருந்தது அதிலே இருந்து மாறுபட்ட நிலை இன்று என்ன வந்திருக்கிறது என்பதை சுட்டிக் காட்டி தேசிய உடமையாக்கப்பட வேண்டும் என்பது மட்டும் அல்லாமல் அதை எப்படி xpdeite செய்யவேண் டும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலிருந்து நான் ஒரு சில பகுதிகளை படிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு செல்வதற்கு முன்னால், 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட இந்த சட்டத்திற்கு சென்னை உயர்நீதி மன்றம் ஸ்டே கொடுத்தது. அதற்குப் பிறகு 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் தேதி சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி தீர்ப்பு வருகிறது. 10 ஆண்டு காலம் இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இருந்தது. 1980 லேயும், 1981 லேயும் உள்ள கொள்கை குறிப்பில் தமிழக அரசு என்ன சொல்லியிருக்கின்றது என்றால் இந்த வழக்கை துரிதப்படுத்து வதற்கு சுப்ரீம் கோர்ட்டில் இருக்கக்கூடிய தடையை கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இப்போது இந்த புதிய சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர 1980 லிருந்து



1984 மார்ச் 7] [திரு. ஜெ. ஹேமசந்திரன்]

1984 வரையில் இந்த தேசிய உடைமையை துரிதப்படுத்தக்கூடிய நோக்கத்தில்—அந்தக் கொள்கை குறிப்பில் சொல்லியபடி—எந்த சட்டத்தையும் கொண்டு வரவில்லை. இன்று கொண்டு வந்து இருக்கக் கூடிய இந்தச் சட்டம் தெட்டத்தெளிவாக —

It is a clear going away from the Nationalisation Policy adopted by this Legislature.

என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பகிறேன். ஏற்கெனவே கொள்கை குறிப்பில் கொடுக்கப்பட்ட அந்த விவரங்களை வைத் துப் பார்த்தால் காங்கிரஸ் அல்லாத ஒரு அரசு தமிழகத்தில் 1967 இல் வந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 'நேஷனலைசேஷன் பாலிசி' இன்று எங்கே சென்று இருக்கிறது என்றால் இங்கே கொண்டு வந்து இருக்கக் கூடிய சட்டப்படி நீலகிரி மாவட்டத்தைத் தவிர கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் சென்னை நகரத்திலேயும் கூட தனியார் முதலாளிகளுக்கு பர்மிட் வழங்குவதற்கான இடம் இந்தச் சட்டத் தில் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விருப்புகிறேன். ஏற்கெனவே இந்த மாமன்றம் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு இணங்க கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்று தனியார் பேருந்து கள் ஓடவில்லை. சென்னை நகரத்தில் தனியார் பேருந்துகள் ஓடவில்லை. ஆனால் இந்தச் சட்டத்தில் கொண்டு வந்து இருக்கக் கூடிய திருத்தத்தைப் பார்த்தால் இந்த நீலகிரி மாவட்டத்தைத் தவிர மற்ற எந்த மாவட்டத்திலேயும் தனியார்கள் பர்மிட் கேட்பதற்கும் உரிமை உண்டு. வழங்குவதற்கு உரிமை அரசுக்கு இருக்கிறது. இது தெட்டத தெளிவாக தேசிய மய கொள்கைக்கு பின்னாடி செல்வதாக இல்லையா?

அதே நேரத்தில் இன்று 5 பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்றால் ஐந்து பஸ் ஆப்ப ரேட்டர்களைப் பொறுத்தவரையில் 5 ரூட் ஆகக்கூட வைத்துக் கொள்ளலாம், ஐந்து ரூட்டில் அவர்கள் ஓட்டலாம். அப்படி ஆனால் அது ஐந்திலிருந்து பல ஐந்துகளுக்கு செல்ல வாய்ப்பு இருக்கிறது. அதோடு முடிந்து விடவில்லை. 1984 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதிக்குப் பிறகு அவர்களுக்கு பர்மிட் வழங்கு வதற்கான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. தெட்டத் தெளிவாக ஐந்து பேருந்துகளை வைத்துக் கொள்ளலாம் என்று இங்கே சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டிருகிறது.

[நண்பகல் 12-00]

ஐம்பது பேருந்துகள் வைத்திருப்பவர்கள் அந்தப் பேருந்து களைத் தங்களுக்கிடையே பங்கிட்டு, பங்கு வைத்துக் கொள்வதற் கான இடம் இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், 1983 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி சுப்ரீம் கோர்ட்டின் ஜட்ஜ்மெண்ட் வருகிறது. ஆர்டினன்ஸ் போடப்பட்டது 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் தேதி. இந்த இடையிலுள்ள காலத்தில் தனியார்

முதலாளிகள் எல்லோரும் அவர்களுடைய பஸ்களை நல்ல முறையில் பங்கிட்டுக் கொண்டு, அவர்கள் ஸ்மால் ஆப்பரேட்டர்களாக மாறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு விட்டது என்பதைத் தமிழகம் நன்கு அறியும். ஆகவே, இந்தப் பின்னணியில் நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், தேச உடைமையாக்கப் பட வேண்டுமென்ற கொள்கையிலிருந்து எங்கோ விலகிச் செல்லும் நிலைமை தமிழகத்திலே இந்தச் சட்டத்தால், இந்த அரசின் கொள்கையால் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே தெட்டத் தெளிவாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது.

I quote from the Supreme Court Judgement

"The Legislature th ought that to prevent such misuse and to provide for better facilities to transport passengers and to the general public, it is necessary to acquire the vehicles, permits and all rights, title and interest of the contract carriage operators in or over lands, buildings, workshops and other places and all stores, instruments, machinery, tools, plants, etc., as mentioned in sub-secion (2) of section 4 of the Act."

ஆகவே, இந்த மூலச் சட்டத்திலே 4-வது பிரிவிலேயும், 2-வது பிரிவிலேயும் கொடுக்கப்பட்டிருக்கும் அரசின் அதிகாரம் இருக்க வேண்டுமென்று அது ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அதற்குமேலே, இந்த ஜட்ஜ்மெண்டின் இன்னொரு பக்கத்திலே, டைம்லாக் எப்படி என்று சொல்லியிருக்கிறார்.. டைம் லாக்கினால்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதும் எந்த அளவிற்கு இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருப்பதற்கு ஜட்ஜ்மெண்ட் முரண்பட்டது என்பதற்கு சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டின் ஒரு பகுதியைப் படிக்க விரும்புகிறேன்.

"In view of the aforesaid developments, most of the conclusions arrived at and the important reasons given by the High Court no longer survive and fade into oblivion. The counsel for the parties also realising this difficulty did not press all the arguments that were advanced before the High Court or accepted by it but confined their arguments to the frame work and applicability of Art 39 (*b*) and (*c*). In fairness to the High Court, we cannot blame it because the law on Art 31 C was crystallised after the delivery of its judgment. We, therefore, propose to give a very brief summary. . . ."

என்று சொல்லியிருக்கிறது. அதாவது ஆர்ட்டிகிள் 31 (சி)—ஹைகோர்ட் தீர்ப்பு கொடுக்கும் நேரத்தில் இருந்த நிலைமை அல்ல இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நிலை. 25-வது அரசிய உ. சட்டத்தின் திருத்தம் காரணமாக, இன்றைக்கு 31 (பி)-ஐப்



136225

பொறுத்தவரையில் அந்தப் பேருந்துகளையும் அல்லது அரசு விரும்பும் எந்தத் தொழில்களையும் நஷ்டயீடு கொடுக்காமலேயே, தேச உடைமைக்குக் கொண்டு வருவதற்கான உரிமை மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பது சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டில் நான் படித்த பகுதியில் தெள்ளத் தெளிவாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

I have given so many amendments. I am the only Speaker from my Party. I must explain all my amendments.

ஆகவே நான் என்ன சொல்ல விருபுகிறேன் என்றால் இன் டெஃபினிட்டாக நேஷனலைசேஷனைப் போஸ்ட்போன் செய்வதற்காக ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொல்லவில்லை சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே. சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே உள்ளதைக் கோட் பண்ணுகிறேன்.

I quote from Justice Gajendragadkar's observation:

"To the rationalist nationaisation or State ownership is a matter of expediency dominated by consideration of economic efficiency and increased output of production.

ஆகவே தேசவுடமையாக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் எக்ஸ்பிடிஷியஸாக நடத்த வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மெண்டிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே 1973லே இயற்றப்பட்ட சட்டம் நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை வந்ததன் காரணமாக இந்த நிலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றது என்றால் அது அரசுக்கு சாதகமாக அதாவது தேசவுடமை செய்வதற்கு சாதகமாகத்தான் வந்திருக்கின்றது என்று சுப்ரீம் கோர்ட் தெளிவாகச் சொல்லி இருக்கின்றது. ஆகவே நேஷனலைசேஷன் என்பதை 5 வருட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்றுதான் 1973 ஆம் ஆண்டு மூலச் சட்டத்தின்படி இருக்கின்றது. அதாவது 5 வருட காலத்திற்குள் முடிக்க வேண்டும். ஆகவே 1983ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் தேயிலிருந்து 5 வருட காலத்திற்குத் தள்ளிப் போடலாமே தவிர நீங்கள் 26-வது ஷரத்திலே கொண்டு வந்திருப்பது மாதிரி; அல்லது 16-வது ஷரத்திலே கொண்டு வந்திருப்பது மாதிரியான திருத்தங்களுக்கு இடம் இல்லை.

அதே ஜட்ஜ்மெண்டின் இன்னொரு பகுதியிலே சுப்ரீம்கோர்ட் சொல்லி இருப்பதை இங்கே கோட் பண்ணுகிறேன்.

"In the first place, the High Court seems to have accepted the argument of the counsel for the operators that Act 19 was clearly violated. As Art, 31 C gives complete immunity from challenge in respect of any law made to promote the objects enshrined in Article 39 (b) and (c), this argument no longer survives and was wrongly accepted by the High Court".

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] 1984 மார்ச் 7

ஆகவே சுப்ரீம் கோர்ட்டினுடைய ஜட்ஜ்மெண்ட்டினுடைய ஸ்பிரிட் இந்தத் திருத்தச் சட்டத்திலே கொண்டுவந்திருப்பது போல் தேச உடமையாக்குவதை இன்டெஃபினிட்டாகப் போஸ்ட் போன் பண்ணுவது அல்ல. அதற்குப் பதிலாக 5 வருட காலத்திற்குள் எவ்வளவு விரைவிலே இதை அமல்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவிலே அமல் படுத்த வேண்டும். அதற்கான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, சுப்ரீம் கோர்ட் சுட்டிக்காட்டியிருப்பதுபோல் இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்குத்தான் அரசுக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்ட் பூராவையும் படிக்க வேண்டும் என்றால் அதிகமான நேரம் ஆகும். எனவே சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்மென்டிலே கடைசியாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது

"However, as some portions of the Act, in view of the timelag, may have become out of date, a few consequential amendments may have to be made ........".

அதாவது கட்டாயம் அமென்மென்ட் கொண்டுவந்தாக வேண்டும் என்று இல்லை. டைம் லாக் காரணமாக மே ஹேவ் டூ பிரிங் என்றுதான் சுப்ரீம் கோர்ட் சொல்லி இருக்கின்றது. ஆகவே டைம் லாக் என்பதைப் பொறுத்தவரையில் இன்று இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற கண்ணோட்டமல்ல சுப்ரீம் கோர்ட் சொன்னது என்பதைத் தெளிவாகச்சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான திருத்தம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது மூலச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக இங்கே திருத்தம் கொடுக்கப்பட்டிருப்பதன் தேவை என்ன ?

அதே நேரத்தில் பணிவோடு ஒன்று சொல்ல விரும்புகிறேன். போக்குவரத்துத் துறை தொழிலாளர்களால்தான் நஷ்டத்தில் ஓடுகின்றது என்ற கருத்தினை இன்று வெளியிடுவதுபோல் ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. பட்ஜெட்டிலே 9 கோடி ரூபாய் தொழிலாளர்களுக்குக் கூலியாகக் கொடுப்பதன் காரணமாக இன்று போக்குவரத்துக்களில் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்று ஒரு தொனி ஏற்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் இந்த காலகட்டத்திலே வந்திருக்கக்கூடிய வருவாய் வளர்ச்சி என்ன என்பதைப்பற்றி சுட்டிக்காட்ட வேண்டாமா ? அதைச் சுட்டிக்காட்டவில்லை.



1984 மார்ச் 7]

(பிற்பகல் 12-10).

அதே நேரத்தில் நான் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புவது என்ன வென்றால், இந்தப் போக்குவரத்துத் துறை பொறுத்த அளவிலே நிலை என்ன? நாகர் கோவிலிருந்து மெட்ராசுக்குப் பேருந்து ...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் ஜட்ஜ்மென்ட் பற்றி பேசுகிறீர்கள். அதெல்லாம் டிமாண்டிலே பேச வேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : நான் அமென்ட்மென்ட்கொடுத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் அமென்ட்மென்ட் கொடுத்திருக்கிறீர்கள், சரி கிட்டத்தட்ட 20 நிமிஷம் பேசி இருக்கிறீர்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் ; ஏற்கனவே, 1973-லே 8லிருந்து 9 என்ற அளவுக்கு ஒரு பேருந்துக்குத் தொழிலாளிகள் இருக்க வேண்டுமென்று இருந்ததை, இன்றைக்கு $7\frac{1}{2}$ என்ற இடத்திற்குக் கொண்டு வந்து, அதிலிருந்து குறைத்துக்கொண்டு வருவதற்கான போக்கு இருக்கிறதா என்ற சந்தேகம் இந்தத் திருத்தத்தினாலே ஏற்படுகிறது. போதுமான அளவுக்குப் பேருந்துகளிலே பராமரிப்பு இல்லை. நாகர் கோவிலிலிருந்து விழுப்புரம் வரை ஒரே டிரைவர் ஓட்டவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சில நேரங்களிலே மெட்ராஸ் வரைக்கும் கூட ஓட்டிக் கொண்டு வருகிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் கூட அது தெரியும். அப்படி இன்றைக்குத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை பற்றாக்குறையாக இருக்கும் நேரத்திலே நீங்கள் ஏற்கெனவே 1973-லே உள்ள மூலச் சட்டத்திலே எந்த அளவுக்குத் தொழிலாளர்களை வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ., எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அதிலேயிருந்து குறைத்துக் கொண்டு வருவது நல்லதல்ல. அது சரி அல்ல என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போல், 10 வருஷத்திலே என்று நாங்கள் திருத்தம் கொண்டு வந்துள்ளது. அவை 5 வருஷத்திலே தேசியமயமாக்க வேண்டுமென்று எடுத்துக் கொள்ள கேட்டுக்கொள்கிறேன். கொண்டு வரப்பட்டிடருக்கிற இந்த சட்டத்திருத்தத்தை எதிர்த்து அமர்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் கையகப்படுத்தலைத் திருத்துவதற்கான சட்ட முன்வடிவு சம்பந்தமாக சில கருத்துக்

களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கக்கூடிய நோக்கங்களைபார்த்தால், உண்மையிலேயே இந்த அரசாங்கம் பஸ்களை எல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம் அல்ல என்பதையும் நான் ஆரம்பத்திலேயே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கக் கூடிய ரூட்டுகளை தேசியமயமாக்க வேண்டும். குறைந்த பட்சம் ஒரு நபர் 5 பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று வந்திருப்பது தேசியமயக் கொள்கைக்கு ஒரு விரோதமான சட்டமாகத் தான் கொண்டு வந்திருக்கிறார்களே தவிர, முழுமையாக, முழுமையாக, பஸ் முழுவதையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு விரோதமான சட்டமாகும். அதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு கருத்துக்களுக்கு எங்கள் கட்சியின் சார்பாகக் கூட இரண்டு விஷயங்களைத் திருத்தங்களாகக் கொடுத்திருக்கின்றோம். இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டிருக்கக்கூடிய அம்சத்தில் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்குவது என்பது ஒரு காலக் கெடு என்று இல்லாமலேயே இந்தச் சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. எப்போழுது வேண்டுமானலும் 30 ஆண்டுக் காலம், 40 ஆண்டுக்காலம் வரையில் கூட அந்த பஸ்களை, 1 பஸ்ஸாக, 2 பஸ்ஸாகக் கூட எடுத்துக் கொள்ளலாம் என்ற அடிப் படையில் இருக்கிறதே தவிர, 5 ஆண்டுகளுக்குள்ளாக அல்லது குறிப்பிட்ட காலவரைக்குள் உட்பட்டு அந்த பஸ்களை எல்லாம் தேசியமயமாக்குவோம் என்ற அடிப்படையிலே சொல்லப்பட இல்லை. தேசியமயமாக்கும் கொள்கை என்பதைப் பற்றி நான் தெளிவாகச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ பஸ்களை மட்டும் நாம் தேசியமயமாக்கி விட்டோம் என்ற அடிப்படையில் அந்தக் கொள்கை நிறைவேறி விடாது, என்பது எங்களுக்கு இருக்ககூடிய ஆழமான கருத்து. அந்த பஸ்ஸுக்குச் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. இப்பொழுது மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் டீசல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். பெட்ரோல் விலையை உயர்த்தி இருக்கிறார்கள், வரி போட்டிருக்கிறார்கள் எப்படி போட்டாலும் கூட, டீசலுக்கும் பெட்ரோலுக்கும் வரியைக் கூட்டுவதனால் பஸ் சொந்தக்காரரர்கள், பஸ் கட்டணத்தை உயர்த்துவார்கள். எனவே, மக்கள் அதிகமான கட்டணம் செலுத்தக் கூடிய நடவடிக்கையைத்தான் அரசாங்கம் எடுத்து வருகிறது. எனவே அடிப்படையாக இருக்கக்கூடிய தொழில்களை தேசியமயமாக்க வேண்டும். அதுதான் அடிப்படையான உண்மையான சோஷலிசத்திற்கு இட்டுச் செல்லும் ஒரு கொள்கையாக அமையும் என்று கருதுகிறேன். எனவே எங்களுக்கு இருக்கும் கருத்து எல்லாம், பஸ்கள் மட்டும் அல்ல, பஸ்களுக்குத் தேவைப்படும் சேசிஸ்களைத் தயாரிக்கும், டயர்களைத் தயாரிக்கும், உதிரி பாகங்களைத் தயாரிக்கும், டாடா, பிர்லா, மகேந்திரா, டன்லப், அசோக் லேலண்ட் போன்ற பெரிய மனோபலிஸ்ட் கம்பெனிகள் என்று சொல்லக்கூடிய ஏகபோக முதலாளிகளின் கம்பெனிகளை தேசியமயமாக்க மத்திய அரசாங்கம் நடவடிக்கை





எடுத்ததற்குப் பின்னாலே இந்த அரசாங்கம் இதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்று சொல்லக் கூடிய நேரத்தில் நான் இந்த அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்டுக் கொள்வதெல்லாம், தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கை உங்களுக்கு உண்மையிலேயே இருக்குமானால். இந்தத் தொழிற்சாலைகளை எல்லாம் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்மையிலேயே அவர்கள் தேசியமயமாக்கவேண்டும், பஸ்களை மட்டுமல்ல, இருக்ககூடிய பன்னாட்டு கம்பெனிகள், ஏகபோக முதலாளிகள் வைத்திருக்கக்கூடிய கம்பெனிகள் எல்லாம் தேசியமயமாக்குவதற்கு பின்னாலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்து பஸ்களையும் தேசிய மயமாக்கும் என்று சொல்லக்கூடிய அவர்களை பார்த்துக் கேட்கிறேன். இந்த கம்பெனிகளை மத்திய அரசாங்கம் தேசியமயமாக்கவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி இந்த அவையிலே தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் முன் வர வேண்டுமென்று, கேட்டுக் கொள்கிறேன். அருமை நண்பர் சுந்தரராஜன் அவர்கள் சொல்லியதைப் போல டாட்டா, பிர்லா, நடத்துகின்ற கம்பெனிகளை எல்லாம், பன்னாட்டு மூலதன கம்பெனிகளை எல்லாம் தேசியமயமாக்குவது ஒருபுரம் இருந்தாலும் கூட, இங்கே இருக்கக் கூடியவைகள் மட்டும் தேசிய மயமாக்கப்படும் என்று சொல்லக் கூடிய அவர்களைப் பார்த்து கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு பெரிய மனோபோலிஸ்ட் வைத்து நடத்தக்கூடிய பெரிய கம்பெனிகளையும், அதே நேரத்தில் சிறு தொழிற்சாலைகளை சாப்பிடுகிற அளவிற்கு இருக்கிற ஏகபோக கம்பெனிகளையும் அரசாங்கம் தேசியமயமாக்குகிற வகையிலே மத்திய அரசாங்கத்திற்கு இதை தீர்மானமாக சட்டரீதியாக கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் உண்மையாக தேசியமயமாக்கும் கொள்கையை இந்த அரசாங்கமும், சரி, மத்திய அரசாங்கமும் அமல் நடத்துவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம் என்று தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய மற்றொரு அம்சம், 5 ஆண்டுகளுக்கு பின்னால் புதியவர் ஒருவர் இந்த விளக்கத்தில் குறிப்பிட்ட வரம்புகளுக்கு உள்பட்டு பயணப் பேருந்து உரிமம் பெற விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஒரு புறத்திலே பஸ்களை தேசியமயமாக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். மறுபக்கத்தில் சொல்லப்பட்டிருப்பது புதியவர்களுக்கு புதியதாக உரிமம் வழங்குவதற்கு நாங்கள் அனுமதி அளிக்கிறோம் என்று சொல்கிறீர்கள். இப்படிச்

[திரு. எம். ஆறுமுகம்] [1984 மார்ச் 7

சொல்லக்கூடிய கொள்கை 'டுயல் கேரக்ட்டரைப்' போல இருக்கிறது. ஆகவே தமிழ்நாட்டில் பஸ் முதலாளிகளுக்கு ஆதரவு கொடுப்பதைப் பேர்ல புதியதாக உரிமம் வழங்குவதற்கு விண்ணப்பிக்கிறவர்களுக்கு அனுமதி கொடுக்கிற நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிற இந்தச் சட்டம் என்பது இரட்டை வேடம் போடுகின்ற சட்டமாகத்தான் இருக்கிறதே தவிர உண்மையாக தேசியமயமாக்குகிற சட்டமாக நாங்கள் கருத்வில்லை.

அது மட்டுமல்லாமல் இதிலே தொழிலாளர்களுடைய பணிப் பாதுகாப்பு சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒரு பஸ்ஸை தேசியமயமாக்கக்கூடிய நேரத்திலே அதைச் சேர்ந்த ஓர்க்ஷாப் மற்ற தொழிற்சாலைகளையும் சேர்த்தே எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இந்தச் சட்டத்திலே சொல்லப்படவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகளில் மாற்றம் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கொடுத்திருக்கிற திருத்தத்தை வலிவுறுத்தி, உண்மையிலே இந்த அரசாங்கம் பஸ்களையும், மற்ற கம்பெனிகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டிருக்குமானால் இந்த அவையில் பெரிய பன்னாட்டு மூலதன கம்பெனிக்ளையும் ஏகபோக கம்பெனிகளையும் தேசியமயமாக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மாண்புமிகு துணைத் தலைவுர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் மானியக்கோரிக்கையிலே எவ்வளவு தீவிரமாக விவாதங்களை வைப்பார்களோ அந்த அளவிற்கு இதிலே விவாதித்து இருக்கிறார்கள். அந்த அளவிற்கு நானும் அவர்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தேசிய மய கொள்கையை நாங்கள் ஏதோ கைவிட்டு விட்டோம் என்று பேசுகிற அத்தனை பேருமே இங்கே சொன்னார்கள். அவர்கள் பேசுகிறபோது இந்த ஒரே ஒரு பிரச்சினையை ம்ட்டும் மனதிலே வைத்துக் கொண்டு விவாதித்தார்களே ஒழிய நாட்டிலே இருக்கிற மற்ற பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் தெரியாதவர்கள் அல்ல; அதைப்பற்றி புரியாதவர்கள் அல்ல. ஆனால் இந்த நேரத்திலே பேச வேண்டிய அவசியம் இல்லை என்று அவர்களாக நினைத்துக் கொண்டு விட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் இந்த நேரத்தில் அதையும் சேர்த்து இதோடு பேசுவது தான் மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1984 மார்ச் 7] [திரு. சு. முத்துசாமி]

(பிற்பகல் 12-20)

தேசிய மயம் என்பது ஏதோ இன்றைக்கு அறிவித்துவிட்டு, நாளையதினம் அந்தப் பேருந்துகளையெல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியும் என்றால், இது இங்கே வந்து இருக்க வேண்டிய அவசியமே இல்லை. அந்தச் சட்டம் செல்லும் என்று உச்ச நீதிமன்றம் என்றைக்குச் சொல்லியதோ அன்றைக்கே அதைச் செய்து விட்டுப் போய் இருப்போம்.

ஆனால் அரசாங்கத்திற்கு இந்தப் பிரச்னை மட்டும் இல்லை. இன்றைக்கு நாட்டின் நிலைமைகளைக் கருதி பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, மொத்தமாக இந்த அரசாங்கம் எல்லாவற்றையும் சேர்த்து சிந்திக்கவேண்டியிருக்கிறது. இங்கே ஒவ்வொரு பிரச்னையைப் பற்றியும் தனித்தனியாக விவாதிக்கிறபோது, அதை மட்டும் பெரிதுபடுத்தி இங்கே பேசப்பட்டு விட்டாலும், அவற்றைப்பற்றியெல்லாம் நாங்கள் சிந்தித்துப் பார்க்கிறபோது, ஒவ்வொரு பிரச்னைக்கும் தீர்வு காண எந்த அளவிற்கு நீதித்துறை பணம் ஒதுக்க முடியும் என்பதைப் பார்த்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது. இந்த வகையில் சிந்தித்துச் செயல்படவேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் அரசியல் ரீதியாக அவற்றைச் சொல்லவேண்டிய கட்டாயம் இருப்பதால் நீங்கள் அதைச் சொல்லி இருக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். ஆகவே அதற்குரிய பதிலை இங்கே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மீறுகிறீர்களே என்று சொன்னார்கள். இது மிக மிகத் தவறான கருத்து என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உச்ச நீதி மன்றம் என்ன சொல்லியிருக்கிறது. அந்தச் சட்டம் செல்லும் என்று சொல்லியிருக்கிறது. அதை உடனடியாக அமுலாக்கவேண்டும் எனறு உத்தரவு போடவில்லை. உடனடியாக ஒரு 5 ஆண்டுகாலம், அல்லது 10 ஆண்டுக்காலத்திற்குள் செய்யவேண்டும் என்று உத்தரவு போடவில்லை. அந்தச் சட்டம் செல்லுமா, செல்லாதா என்ற பிரச்சினை ஏற்பட்டது. அந்தப் பிரச்னை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது அங்கே அது செல்லும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் நமக்கு இருக்கும் நிலமைகளை வைத்துதான் அந்தக் கொள்கையை நாம் அமல் படுத்த முடியும். ஆகவே, உச்ச நீதிமன்றம் ஒரு காலக்கட்டத்திற்குள் அதைச் செய்யவேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்குச் சொல்லவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்

இங்கே மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் தெளிவாகச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அப்படிச் சொல்கிறபோது, யாரையும் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்கோ அல்லது யாருடைய மனதையும் புண்படுத்தவேண்டும் என்பதற்கோ நான் சொல்லவில்லை. உண்மை நிலைமைகளைத் தெளிவுபடுத்துவதற்காகச் சொல்ல வேண்டுமென்ற முறையில் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்திற்குச் சொந்தமாக 8,000 பேருந்துகள் இருக்கின்றன. தனியார் துறையில் 5,000 பேருந்துகள் இருக்கின்றன. அதனுடைய சதவிகிதம் என்ன வென்றால் அரசாங்கத்தின் கையில் இருப்பது 61 சத விகிதப் பேருந்துகள். மீதம் இருப்பது தனியார் துறையில் இருக்கிறது. ஆனால் 1976 ஆம் ஆண்டு நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்கிற நேரத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்த பேருந்துகளின் சதவிகிதம் என்னவென்றால் 51.75 சத விகிதம். 1980-ல் அது 57.11 சத விகிதம் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது. அதற்குப் பின்பு இன்றைக்கு ஏறத்தாழ 61 சத விகிதம் அளவிற்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. எனவே யாருடைய காலத்தில் இந்த தேசிய மயக்கொள்கை முறையாக நியாயமாக அமல் படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

நான் இங்கே இன்னொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். 1973 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வந்தீர்கள். பாராட்டவேண்டிய விஷயம். அது எப்படியிருந்தாலும் அது எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டு இருந்தாலும் அதைப் பற்றி நான் இங்கே இப்போது விவாதிக்கத் தயாராக இல்லை. அப்படி கொண்டு வரப்பட்ட பின்பு என்ன நிலைமை ஏற்பட்டது, இங்கே உயர்நீதிமன்றத்தில், தடை விதிக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்தில் தடைவிதித்த உடனே இங்கே இருந்த அரசாங்கம் அப்போது என்ன செய்தது? அதைப் பற்றி தீவிரமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, உயர்நீதிமன்றத்தில் சாதகமான ஒரு தீர்ப்பு வாங்க நடவடிக்கை எடுத்ததா? இதை நான் திருப்பிக் கேட்டால் உங்களுக்கு மனம் வேதனைப்படும். அங்கே வாங்கமுடியாத காரணத்தால், அதை எதிர்த்து அரசாங்கம் தான் உச்ச நீதிமன்றத்திற்கு போய் இருக்கிறது. பலபேர் உச்ச நீதிமன்றத்திற்கு தனியார் முதலாளிகள் தான் போனார்கள் என்று எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம்தான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. உச்ச நீதிமன்றத்தில் என்ன செய்தார்கள்? அதை விரைவாக நடத்த என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? அந்தப் பிரச்னைக்குள்ளே நான் போகத் தயாராக இல்லை. ஆனால் உச்சநீதிமன்றத்திற்கு அந்த வழக்கு சென்று 10 ஆண்டுகாலம் நடந்து





இருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கம் வந்தபிறகுதான் அதற்குத் தேவையான விவரங்களைக் கொடுத்து, அந்த வழக்கை வெற்றி பெறச் செய்து இருக்கிறோம். அந்த வழக்கு வெற்றி பெற்றதற்கு இந்த அரசாங்கம் தான் காரணம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இதை எண்ணிப் பார்ப்பீர்களானால் இந்த அரசாங்கம் எந்த அளவிற்கு பொறுப்புணர்ச்சியோடு செயல்படவேண்டுமோ அந்த அளவிற்குச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை அறியமுடியும்.

1973 ஆம் ஆண்டில் எல்லாவற்றையும் தேசியமயமாக்குவோம் என்ற கொள்கையின் அடிப்படையில் சட்டம் கொண்டு வரப்பட்டது. அது உச்சநீதி மன்றத்திற்குச் சென்ற பின்பு ஒரு சர்க்குலர் விடப்பட்டது. அது என்ன சர்க்குலர் என்றால், இதற்கு முன்னாடி எப்படி இருந்ததோ அப்படியே நிலைமைகள் இருக்கும் அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று சொல்லி ஆக்ட் 12/73 எஃபெக்டக்கு வரவில்லை என்று சர்க்குலர் போட்டு இருக்கிறார்கள். 18—7—1973-ல் அந்த சர்க்குலர் போடப்பட்டு இருக்கிறது. அது தவறு என்று நான் சொல்லவில்லை.

ஆனால் அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 1976 வரையில் ஏறத்தாழ 2,500 பெர்மிட்டுகள் தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கு கொடுத்திருக்கிறது. அதே நேரத்தில் 1980 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையில் அப்படி தனியார்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற முறையிலே நாங்கள் நிறுத்திவிட்டோம். இருந்தாலும் நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தால் அதைக் கொடுத்தாக வேண்டுமென்ற நிலைமையில் 123 பெர்மிட்டுகள் மட்டும் இந்த 4 ஆண்டு காலத்தில் நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

அன்றைக்கு 2,500 பெர்மிட்டுகள் தனியாருக்கு கொடுக்கப்படாமல் இருந்தால், அவற்றை அரசு போக்குவரத்துத் துறைக்கு கொடுத்திருந்தால் இன்றைக்கு நம்முடைய போக்குவரத்துத் துறைக்கு ஏறத்தாழ 10,500 பேருந்துகள் வந்திருக்கும். தனியாருக்கு 2,500 மட்டுமே இருந்திருக்கும். சதவீதத்தில் பார்த்தால் 25 சதவீதம் மட்டுமே தனியார் துறையில் இருந்திருக்கும். ஆக, ஏன் தனியார்களுக்குக் கொடுத்தார்கள் என்று நான் திருப்பிக் கேட்கலாம். கேட்டால் உங்களுக்கு கோபம் வரும். இருந்தாலும் சொல்ல வேண்டியது கடமை என்பதால் சொல்கிறேன்.

[திரு. சு. முத்துசாமி] [1984 மார்ச் 7

இதிலே இன்னொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். மனிதாபிமான அடிப்படையிலே நாம் அணுக வேண்டும். ஊட்டியிலே எப்படி நேஷனலைஸ் செய்தார்கள்? பேரறிஞர் அண்ணா அவர்கள் பொங்கல் அன்றுதான் செய்ய வேண்டுமென்று சொன்னார்களா? ஒன்றைச் செய்யும்போது மனித உணர்வுகளை மதித்து, மனிதாபிமான அடிப்படையில் செய்ய வேண்டும். ஒரு அரசாங்கம் வந்தால் குறிப்பிட்ட ஒருவருக்குத்தான் அந்த அரசாங்கம் என்று இல்லை. அரசாங்கம் என்பது எல்லோருக்கும் தான்.

இங்கே இருக்கக்கூடிய கைதிகளுக்குக்கூட உரிமை கேட்கிறோம்; அவர்களுடைய நலனுக்காக விவாதிக்கிறோம். அப்படிப் பார்க்கும்போது தேசியமாக்குவதிலும் ஒரு முறையை நாம் வைத்துக்கொள்ள வேண்டும். 2,500 பெர்மிட்டுகள் அன்றைக்கு தனியார்களுக்குக் கொடுத்திருக்கிறார்களே. அவர்களுக்கு கொடுத்துவிட்டு பின்னால் பிடுங்கிக்கொள்ளப் போகிறோமா? அப்படி இருந்தால் அவர்களுக்குக் கொடுக்காமலே இருந்திருக்கலாமே. ஆனால் அன்றைக்கு இருந்த சூழ்நிலைகளை அனுசரித்து கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எனவே அன்றைக்கு இருந்த ஒரு ஆட்சிக்கு அது ஏற்புடையதாக இருக்கும்போது இன்றைக்கு அது ஏற்புடையதாக இல்லையா என்ற கேள்வியை நான் கேட்டாக வேண்டும்.

அதைப்போன்று பணியாளர்களைப் பற்றி இங்கேச் சொன்னார்கள். தேசியமாக்கிவிட்டு அதன் மூலம் வேலை கிடைக்காமல் எத்தனை பேர் மனு கொடுத்திருக்கிறார்களா? அன்றைக்கு பஸ்களை எடுத்துவிட்டார்கள். ஆனால் வேலை இழந்தவர்கள் இன்றைக்கும் எங்களிடம் மனுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் பரிகாரம் தேடிக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் தொழிலாளர்களை ஏன் குறைத்தீர்கள் என்று குறை கூறினார்கள். அவர்களுக்கே தெரியும். பட்டாபிராமன் குழு ஒன்று போடப்பட்டது. அவர்களுடைய பரிந்துரை வந்திருக்கிறது. ஒரு பேருந்துக்கு 7 1/2 நபர், இரண்டு பேருந்துகளுக்கு 15 நபர் என்று ரெக்கமென்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உங்களையும் கலந்து ஆலோசித்து, விவாதித்து, நடவடிக்கை எடுக்கப்பட்டது. (குறுக்கீடு) அன்றைக்கு நீங்கள் தவறு என்று சொல்லவில்லை. உங்களையும் கலந்தாலோசித்துதான் அந்த பரிந்துரை அமுல்படுத்தப்பட்டது. தொடர்ந்து அந்த பரிந்துரையை நாங்கள் அமுல்படுத்தி வருகிறோம். இன்றைக்கு நீங்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை அன்றைக்கு சொல்லியிருக்கலாம். ஆனால் அன்றைக்கு ஏன் சொல்லவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன்.



984 மார்ச் 7] [திரு சு. முத்துசாமி]

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே கேட்டார்கள். மரம் ஏறும் தொழிலாளி இறந்து விட்டால் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள். மீனவர் ஒருவர் இறந்துவிட்டால் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களுக்கு 1,000 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இது நியாயமா என்று கேட்டார்கள். மற்றவர்களுக்குக் கொடுப்பதைப்போன்று இவர்களுக்கும் மானியம் கொடுக்க வேண்டுமென்று, சமுதாய உணர்வோடு, மனிதாபிமான உணர்வோடு அதிகமாக கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு தன்னிறைவுத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தன்னிறைவுத் திட்டத்திற்காக 270 கோடி ரூபாயை மூன்று ஆண்டுகளில் செலவிட்டிருக்கிறோம். அதைப்போன்று சத்துணவுத் திட்டத்திற்கு 150 கோடி செலவிட்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் பார்க்கும்போது இன்னும் எவ்வளவு பெரியத் திட்டங்களை எதிர்நோக்கி இருக்கிறோம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் இங்கே பேசும்போது ஒன்றை மறந்து விட்டு பேசுகிறார்கள். அரசாங்கத்திடம் நிறைய பணம் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு பேசுகிறார்கள். இந்த சட்டமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களே அப்படி நினைத்தால் நம்முடைய நிலைமையை வேறு யாரிடம் சொல்ல முடியும்? சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகளுக்குப் பிறகு தனனிறைவுத் திட்டம் போடுகிறோம் என்றால் அது அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத்தான் 270 கோடி ரூபாயை தன்னிறைவுத் திட்டத்திற்குச் செலவிட்டிருக்கிறோம் என்றால் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத்தான்.

(பிற்பகல் 12.30)

எனவே இன்னும் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி பேசுகிறபோது என்ன பேசினீர்கள்? இவ்வளவு செய்தது எங்களுக்குப் போதவில்லை. 45 இலட்சம் ரூபாய் தான் ஒரு ஒன்றியத்திற்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். இன்னும் அதிகமாக வேண்டும். இப்படிப்பட்ட கோரிக்கைகள் வந்தது. எனவே அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றப் படவேண்டிய நிர்பந்தம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிட மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். இங்கு கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் என்னிடத்தில் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்களை நான் வைத்திருக்கிறேன். சட்டமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பித்த பின்பு ஏறத்தாழ 60 பகுதிகளிலே பேருந்து வசதிகள் வேண்டுமென்று என்னிடத்திலே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். 60 இடங்களிலே—ஆறுமுகம் சேர்த்து எழுதிக்

கொடுத்திருக்கிறார். நான் இல்லையென்று சொல்லவில்லை. இந்த 60 இடங்களைப் பற்றியும் நீங்கள் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு பேருந்துகளை எடுப்பது என்பது பெரிய காரியம் அல்ல. அரசாங்கத்திற்கு இருக்கின்ற வருமானத்தைத் வைத்துக் கொண்டு, பேருந்துகளை எடுத்துவிடுவோமேயானால், என்ன நன்மை என்பதை மட்டும் நீங்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சில இடங்களிலே பேருந்துகள் கேட்கிறார்கள். அரசாங்கப் பேருந்துகளாக இருந்தாலும் சரி, தனியார் பேருந்துகளாக இருந்தாலும் சரி, எங்களுக்குப் பேருந்துகள் வேண்டும். நாங்கள் 10 மைல்களிலிருந்து நடந்து வருகிறோம். இந்த கோரிக்கைகள் இல்லாமல் இருக்கின்றனவா? எனவே, இன்றைக்கு 5,000 பேருந்துகளை நாம் நாட்டுடைமையாக்கி விடுவதன் மூலமாக மட்டும் அந்த மக்கள் திருப்தியடைய முடியுமா? எனவே எங்களுக்கு இருக்கிற நோக்கம் - இந்த நாட்டுடமை என்பதை நாங்கள் கைவிட்டு விடவில்லை. படிப்படியாக செய்கிறோம் என்பதை ஏன் சொல்கிறோம் என்றால் - பல கிராமங்களிலே பேருந்துகள் இல்லாமல் இருக்கின்றன. இன்றைக்கு அதற்காகப் பணத்தைக் கொடுத்து எடுப்பதற்குப் பதிலாக, புதிய பேருந்துகளை வாங்கி அவர்களுக்கு விட்டுவிட்டு ஓரளவிற்கு அவர்கள் நிம்மதியாக இருக்கிறார்கள். பேருந்து வசதிகளை அவர்கள் பெற்றுவிட்டார்கள், என்கிற நிலைமை வந்த பின்பு நிச்சயமாக இது தொடர்ந்து செய்யப்படும் என்பதை நான் உத்தரவாதமாக இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். ஏதோ இரண்டு இலட்சம் ரூபாய் வருமானம் வருவதாக தகவல் கிடைத்ததாக மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே எனக்கு கருத்து வேறுபாடு இருப்பதாக சொல்லிக் கொள்ளத் தயாராக இல்லை. நான் ஏதாவது கணக்கு சொல்ல வேண்டி சொன்னேனேயானால், நான் எங்கோ சேர்ந்து விட்டேன் என்று சொல்வார்கள். அந்த வம்புக்கு நான் போகத் தயாராகயில்லை.

இன்னொன்றையும் சொன்னார்கள். அவர்களுக்கு வந்த தகவல்படி தனியார்த் துறையில் 10,000 பேருந்துகள் இருக்கின்றன என்று - எனவே இந்த இரண்டு தகவல்களையும் தயவு செய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். உங்களுக்கு வந்த தகவல் எப்படி தவறாக இருக்க முடியும் என்பதற்கு உதாரணம் ஒன்றைச் சொல்கிறேன். தனியாரிடம் இருக்கின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 5,000 தான். 10,000 என்று நீங்கள் கணக்குப் போட்டால் அது எப்படி தவறோ அதே போல் தான் வருமானம் ரூபாய் இரண்டு இலட்சம் என்பதும் என்று நான் கருதுகிறேன். உங்களுக்கு கிடைக்கின்ற தகவல்களை வைத்துக் கொண்டு நீங்கள் பேசுவது நல்லதல்ல. கொஞ்சம் அதைப்பற்றி ஆழமாகச் சிந்தித்து உண்மையாக இருக்க முடியுமா என்பதைப் பற்றி சிந்தித்து, அதற்கு பின்பு சொல்வது நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.





1973-லே அவர்கள் சொல்கின்ற கருத்து ஒரு வேளை பொருத்தமாக இருக்கலாம். அன்றைக்கு அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருந்த பஸ்களினுடைய எண்ணிக்கை 4,000-க்கும் குறைவு. இன்றைக்கு 8,000-க்கும் மேலே இருக்கிறது. எனவே, 4,000 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த அந்த இடத்தில் இன்றைக்கு 8,000 ஓடுகிறது. எனவே, நூறு பயணிகளை ஒரு பேருந்து எடுத்துச் சென்ற அந்த இடத்தில், இன்றைக்கு இரண்டு பேருந்துகள் எடுத்துச் செல்கின்றன. எனவே, மக்களுக்கு வசதி அதிகமாக இருக்கிறது. எனவே அந்த வருமானமும் இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதே போன்று இன்னொன்றையும் நான் சொல்கிறேன். கட்டணம் உயர்த்தப்படக் கூடாது. நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற வறட்சி, இந்தச் சூழ்நிலையில் இந்த கட்டண உயர்வைப் பற்றி நாம் அவசியமாகச் சிந்தித்து, சில சிக்கலான சூழ்நிலையிலே கூட, முடிவு எடுக்கவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், பல இடங்களிலே பேருந்துகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதை நீங்கள் பல நேரத்திலே பேசுகிறபோது அவர்களுக்கு ஒரு நியாயம்? நமக்கு ஒரு நியாயமா? இப்படி பேசுகிறீர்கள். இதே நியாயத்தை நான் திரும்பக் கேட்கிறேன். இங்கே சென்னையிலே இருப்பவர்களுக்கு ஒரு நியாயம். சேலம், கோவை போன்ற நகரங்களிலே இருப்பவர்களுக்கு ஒரு நியாயம், கிராமப் புறங்களிலே இருக்கின்றவர்களுக்கு ஒரு நியாயம் என்று நாம் வைக்க முடியாது. சென்னையிலே நீங்கள் போய் நின்றால் 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வருகிறது. சேலத்திலே போய் நின்றால், 1/2 மணி நேரத்திற்கு ஒரு பேருந்து வருகிறது. அருகாமையிலுள்ள ஒரு கிராமத்திலே போய் நின்றால் ஒரு மணிக்கு ஒரு பேருந்து வருகிறது. இதிலே என்ன பாகுபாடு? எனவே, எங்களுக்கு இருக்கிற ஆசை என்னவென்று சொன்னால் - தனியார்த் துறை பேருந்துகளோ அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான பேருந்துகளோ சென்னையிலே, சென்னை நகரத்திலே எப்படி பேருந்து வசதி இருக்கிறதோ, அதே வசதி கிராமத்திலேயும் கிடைக்க வேண்டும். இது கிடைத்த பின்பு நிச்சயமாக இந்தக் கொள்கையை நாம் நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையிலே இந்த காரியத்தை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை):

இன்றைக்கு உதாரணத்திற்கு அரிசியை எடுத்துக் கொள்ளுங்கள். அரசாங்கத்தாலே இவ்வளவு தான் அரிசி கொடுக்க முடியும், அதற்கு மேலே முடியாது என்று சொன்னால், அதற்கு மேலே தனியாரிடத்திலே நாம் வாங்கிக் கொள்ளக் கூடிய வாய்ப்பைவிட்டு வைத்திருக்கிறோம். அதைத் தடுத்து விடுவோமேயானால், என்ன நிலைமை? எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் வைக்கின்ற அந்தக் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுகின்ற வாய்ப்பை எற்படுத்திக் கொடுக்கின்ற வகையிலே

[திரு. சு. முத்துசாமி] [1984 மார்ச் 7

பிரீத்திங் டைம்' என்று சொல்வார்களே, அதைப் போல
எங்களுக்கு ஒரு வாய்ப்பை நாங்கள் வைத்துக் கொள்கிறோம்.
இந்தக் காலக் கட்டத்திற்குள்ளாக முடித்து விட்டு, அதற்கு
பின்பு அந்தக் காரியத்தை நாங்கள் செய்யப் போகிறோம். அதைத்
தான் நீங்கள் சிந்திக்க வேண்டும். எங்களுடைய காலத்திலே
எவ்வளவு பேருந்துகளை நாங்கள் போட்டிருக்கிறோம். சுதந்
திரம் பெற்ற 35 ஆண்டு காலத்திலே, 4,000 பேருந்துகள் தான்
இந்த நாட்டிலே விடப்பட்டிருக்கிறது. ஆனால், புரட்சித் தலை
வர் ஆட்சி வந்த பிறகு 1977-லிருந்து 4,000 பஸ்களை நாங்கள்
கூடுதலாக விட்டிருக்கிறோம். இதற்கு என்ன சொல்கிறீர்கள்?
எனவே, அரசாங்கம் விட்டது அத்தனையும் அரசாங்கத்திற்குச்
சொந்தமான பேருந்துகள். எனவே, நீங்கள் அதை சிந்திக்க
வேண்டும் என்பதற்காகத் தான் நான் இங்கே சொல்ல விரும்பு
கிறேன்.

அடுத்து உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் சில கருத்துக்
களைச் சொல்லியிருக்கிறார்கள். வரவேற்க வேண்டிய கருத்து.
சட்டமன்ற உறுப்பினராக இருந்து பேசி வரவேற்க வேண்டிய
கருத்து அல்ல. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து அவர்கள்
அதைப் பேசியிருப்பார்களானால், நான் அதை கைதட்டி
வரவேற்று இருப்பேன். நாடாளு மன்றத்திலே பேசவேண்டிய
சில பிரச்சினைகளை அவர் அப்படியே நழுவவிட்டு விட்டு, நாங்
கள் எல்லாம் தூங்கிக் கொண்டு இருக்கிறோம் என்று நினைத்து
விட்டாரோ என்னவோ தெரியவில்லை.

..., அசோக லேலண்டை நீங்கள் நேசனலைஸ் பண்ணினால் தான்
இதையும் செய்வோம் என்று சொல்கிறீர்கள் இது என்ன நியா
யம்? இதையெல்லாம் மறந்து விடுங்கள் இதை மட்டும் செய்
யுங்கள் என்று சொல்கிறார்கள். சரி, நாங்கள் 5 பஸ்கள் என்று
வைத்திருக்கிறோம். 5 பஸ்கள் என்று சொன்னால், 1 பஸ்
2 3/4 லட்சத்திலிருந்து 3 லட்சம் வருகிறது. மொத்தமாக 5 பஸ்
களுக்கு 15 லட்சம் என்று வைத்துக் கொள்ளுங்கள். 200 கோடி
ரூபாய் முதலாளிகளை விட்டுவிட வேண்டுமாம். ஆனால், இந்த
15 லட்ச ரூபாய் முதலாளிகள் மட்டும் அவர்கள் கண்ணிலே படு
கிறார்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் 200
கோடி ரூபாய் முதலாளிகளை விட்டுவிட வேண்டும் என்று சொல்ல
வில்லை. நம்முடைய சக்தி என்ன? அந்தச் சக்திக்கு உட்பட்டு
நாம் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டாமா?
எனவே, இந்தப் பிரச்சினையை திசை திருப்ப வேண்டாம் என்று
சொல்கிறேன். 200 கோடி என்ன? 500 கோடி, 1,000 கோடி
என்று தனிப்பட்ட முதலாளிகள் இருந்தாலும், தொழிற்சாலை
கள் இருந்தாலும், அவைகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்
டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. அதை நானும்
வரவேற்கிறேன், விரும்புகிறேன்.



1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே
மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் பேசுகிற போது
எனக்கு எதிராக முதலில் பேசினார்கள். இப்போது எனக்கு
ஆதரவாகப் பேசியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. எங்க
ளுடைய கொள்கையும் அதுதான். நமக்கு என்ன
சக்தியோ, அதைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்
கள். மத்திய அரசாங்கத்திற்கு 500 கோடி, 2,000 கோடி வரு
மானம் வரக்கூடிய அந்த தொழிற்சாலைகளை நேசனலைஸ்
செய்யக்கூடிய அந்தச் சக்திகள் இல்லாமல் இருக்கலாம். அப்படி
இருக்கின்ற நேரத்திலே இங்கேயிருந்து மட்டும், மாநில அரசுக்கு
மட்டும் 15 லட்சம், 20 லட்சம் ரூபாய் வருமானம் உள்ள
தொழிற்சாலைகளை நேசனலைஸ் பண்ண சக்தி இருக்கும்
என்பதை நீங்கள் தான் சிந்திக்க வேண்டும். எனவே சக்திக்கு
உட்பட்டு அந்தக் காரியத்தை நாங்கள் செய்கிறோம் என்று
சொல்கிறேன். இதிலே சிறிய பஸ் முதலாளிகளை இப்போதைக்கு
விட்டு வைக்கிறோம். பின்னாலே நிச்சயமாக அவர்களுக்கும்
அந்த உரிய பாகத்தை கொடுத்து விட்டு, அதையும்
நேசனலைஸ் செய்ய இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது
என்பதை நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆனால்,
பெரிய பஸ் முதலாளிகளை நாங்கள் விட்டுவிடுவதற்குத் தயா
ராக இல்லை. எனவே, மாநில அரசாக இருந்தாலும் சரி,
மத்திய அரசாக இருந்தாலும் சரி, கொள்கைகள் ஒரே மாதிரி
தான். நாம் விட்டுவிட்டு வேண்டுமானால், போய் விடலாம்.
நழுவுவதற்காக விட்டுவிடலாம். எனவே நான் கேட்டுக்கொள்வது
மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்கள் நாடாளுமன்றத்
தேர்தல் வந்தால், நாடாளுமன்ற உறுப்பினராக ஆனால், எங்
களுக்கு கொஞ்சம் உதவியாக இருக்கும். நானும் மகிழ்ச்சி
அடைவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே,
பெரிய பஸ் முதலாளிகளை விட்டுவிட மாட்டோம் என்று அமைச்
சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த 5 என்று வந்த
பிறகு நம்முடைய தமிழ்நாட்டிலே இப்போது யாரும் ஐந்துக்கு
மேலே இருக்கிற பெரிய பஸ் முதலாளிகள் இருப்பதாகவே
தெரியவில்லை. எல்லாம் ஸ்பிளிட் பண்ணிப் பண்ணி வைத்திருக்
கிறார்கள். எனவே, நீங்கள் எப்படிப் பண்ணப் போகிறீர்கள்
என்று தெரியவில்லை.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர்
அவர்களே, இதிலே ஒருசிலர் வர இருக்கிறார்கள். மாண்புமிகு
உறுப்பினர்கள் எல்லாம் உதவி செய்தால் இதிலே பினாமி என்று
சொல்கிறார்களே, அப்படிப்பட்டவர்கள் இருந்தாலும், நிச்சய
மாக நடவடிக்கை எடுப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பிருக்கிறது.
இதிலே நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களும் ஒரு பஸ் முதலாளிதான். அவருக்கே தெரியும். 5 பஸ்களுக்கு மேலே போனால் ஃப்ளீட் ஆப்பரேட்டராக ஆகிவிடுவார்கள். அதிலே 2 மார்க் குறைந்துவிடும். ஆர்.டி.ஏ. மீட்டிங்கிலே 2 மார்க் அதிலே அடிப்பட்டுப் போய் விடும். ஆகையினாலே இருக்கிற பஸ்ஸை அவன் மேலே 5, அவன் பெண்டாட்டி மேலே 5, பிள்ளைகள் மேலே 5, டிரைவர் மேல் 5 என்று இப்படித்தான் நீங்கள் பிரித்து வைத்திருக்கிறீர்களே, தவிர, 30 பஸ்கள், 40 பஸ்கள் சொந்தக்காரர்கள் என்று நீங்கள் வைப்பது கிடையாது. எனவே 5 பஸ் என்று ஓட்டைக்குள்ளே வந்தால்....

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நல்ல கருத்தை அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். 'நீங்கள் பிரித்து வைத்து இருக்கிறீர்கள்' என்ற வார்த்தை அவைக்குறிப்பில் இருக்காமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'நீங்கள்' என்றால் என்னைத்தான் குறிக்கும்.

திரு. துரைமுருகன் : மன்னிக்க வேண்டும். "நீங்கள் என்பதை அவர்கள்" என்று நானே மாற்றிக் கொள்கிறேன். அவர்கள் பிரித்து தன்மேலே, தன் பெண்டாட்டி மேலே, பிள்ளை மேலே என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் இதைச் சொன்னதற்குக் காரணம் பஸ் முதலாளிகளுக்குச் சொந்தக்காரர்களாக பல பேர்கள் இருக்கிறார்கள், பல கட்சிகளிலே. ஆகவேதான் இப்படி 'நீங்கள்' தான் என்று சொல்வது வேண்டாம் என்பதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சுருக்கமாக முடிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது நிறைய பேசியாகி விட்டது. இப்போது என்னை சுருக்கமாக பேசுங்கள் என்று சொன்னால், நான் நிச்சயமாக பாதியிலேதான் முடிக்கவேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பஸ் ரொம்ப தூரம் போகும். அவ்வளவு தூரம் சப்ஜெக்ட் போகவேண்டாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பஸ் போன்று கொஞ்சம் வேகமாகப் போய் முடித்து விடுகிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு).





(பிற்பகல் 12-40.)

ஆக்ஸிடெண்ட் ஆகும் என்று யாரோ சொல்கிறார்கள். நிறைய பேர்கள் இருக்கிற காரணத்தால் அப்படி ஆகிவிடாது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இன்னொரு பிரச்னையை நான் சொல்லிவிட விரும்புகிறேன். இங்கே திரு. சுப்பு அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியிருக்கிறார்கள். மிகச் சிறப்பாக பணியாற்றினார்கள். அந்த நேரத்திலே அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். கொஞ்சம் சிந்தித்து எதையும் சொல்லக் கூடியவர்கள் என்ற அடிப்படையிலே சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்: அன்றைக்கு அவர் சொல்லியிருக்கிறார்கள்., 'தனியார் என்று சொல்லப்படும், மிகச் சிறிய அளவிலே 3, 4, 5 என்ற அளவிலே பேருந்துகளை வைத்துக் கொண்டிருப்பவர்களை நீங்கள் தொந்திரவு செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவைகளை நீங்கள் நேஷனலைஸ் செய்ய வேண்டும் என்று சொல்ல நான் தயாராக இல்லை.' என்றைக்கு பேசியிருக்கிறார்கள், ஆகஸ்ட் 20, 1977லே பேசியிருக்கிறார்கள். 'நான் அப்படிச் சொல்ல தயாராக இல்லை. அப்படிப்பட்டவைகளை எடுத்து விட்டால் அவர்கள் நடுரோட்டிலே தான் நிற்க வேண்டிய அவசியம் வரும்' என்று அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல, இன்னொன்று. மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அம்பிகாபதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் அந்த கட்சியில் இருந்த போது, அந்தக் கட்சியினுடைய கொள்கையை ஏற்றுக் கொண்டு சொன்னார்கள். அந்தக் கட்சியும் அன்று அதை ஏற்றுக் கொண்ட காரணத்தால் அதற்கு மாற்றுச் சொல்லவில்லை. அப்போது அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஆசைத்தம்பி போன்றவர்கள் எல்லாம் கையெழுத்திட்டு நேஷனலைசேஷன் செய்யக் கூடாது என்று சொன்னதாக ஒரு கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார்கள். சொல்லிய போதே மாண்புமிகு கலைஞர் அவர்கள் அதை எதிர்த்து, அப்படிப் போடப்படவில்லை என்ற ஒரு கருத்தை அன்றைக்கு தெரிவித்திருக்கிறார்கள். அதை சொல்லியது மட்டும் அல்ல. அதைப்பற்றி பேசி மற்றொரு பிரச்னையும் எழுந்தது. தேசிய மய திட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள், கவர்னர் இடத்திலே, குடியரசுத் தலைவரிடத்திலே மகஜர் கொடுத்ததாக கேள்விபடுகிறோம். அதுவும் பஸ் முதலாளிகளிடத்திலே அவர்களுடைய கட்சிக்கு, தேர்தல் நிதி பெற்றதற்காக, அப்படி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார்கள் என்ற கருத்திலே அதை பேசியிருக்கிறார்கள்.

இந்த விவாதமும் அந்த தேதியிலேயே. அதற்குப் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கடைசியில் எப்படி முடிந்தது என்று சொன்னால், ஆசைத்தம்பி அவர்கள் அதிலே கையெழுத்து போடவில்லை என்ற பிரச்னை ஏற்பட்டு, கடைசியிலே முடிக்கப்பட்டபோது, ஆசைத்தம்பி அவர்கள் எம். பி. தேர்தலுக்கு முன்னாலே கையெழுத்துப் போடவில்லை. அதற்குப் பின்னாலே கையெழுத்துப் போட்டார் எனவே, நாங்கள் தேர்தலுக்காக நிதி கேட்கவில்லை என்ற பிரச்னையிலே அதை முடித்திருக்கிறார்கள். எனவே, ஏதோ ஒரு வகையில் அந்த தேசியமய கொள்கையை கைவிட வேண்டும் என்று கையெழுத்துப் போட்டதற்கு, சட்டமன்றத்திலேயே விவாதித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். எனவே, அப்படி இருக்கிறபோது, நீங்கள் ஏன் இப்படி நாளைக்கு ஒரு பிரச்னையாக மாற்றுகிறீர்கள் என்பது புரியவில்லை.

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் 16-11-1983-ல் ஒரு கருத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மேற்கு வங்காளத்திலே ஏறத்தாழ 15 லிருந்து 20 சதவீதம் வரை தான் அரசாங்கத்திற்கு சொந்தம். மீதம் 80 லிருந்து 85 வரை தனியார்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. இதை நான் குற்றமாக, ஏதோ அவர்கள் மீது குற்றம் சாட்டுவதற்காக சொல்ல வரவில்லை. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதெதற்கு முதலிலே பிரையாரிட்டி கொடுக்க வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். அரசாங்கத்திற்கு வருகிற வருமானத்தை வைத்துக் கொண்டு எந்தெந்த காரியத்தை முதலிலே செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும்.

அவர்கள் சொல்லும்போது, கிராமப் புறங்களிலே ஏழை எளிய மக்கள் இருக்கிறார்கள். குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள், தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்காகவெல்லாம் பல்வேறு சட்டங்கள் போடவேண்டியிருக்கிறது. எனவேதான் எங்கள் அரசாங்கம் அதைத் தள்ளிபோட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள் எனவே, மேற்கு வங்சத்திலே இருக்கிறவர்கள் தான் அப்படி இருக்கிறார்களா? இங்கே இருப்பவர்கள் அப்படி இல்லையா என்கிற அந்த நிலைமையை நாங்கள சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது....

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்தைப் பற்றி நான் சொன்னது கரெக்ட் தான். ஆனால் இரண்டிற்கும் டிஃபெரென்ஸ் இருக்கிறது. அந்த ஸ்டேட்டுக்கும் இந்த ஸ்டேட்டுக்கும் இருக்கிற வித்தியாசம் என்ன என்று சொன்னால், இந்த ஸ்டேட்டிலே பஸ் நேஷனலைசேஷன் என்ற கொள்





கை கமிட் பண்ணி பாதிக்கு மேலே அமுலுக்கும் வந்தாச்சு. அங்கே பிகினிங்கிலேயே ஒரு ஸ்டேட்டஜி வந்திருக்கிறது. இங்கே அதை கமிட் பண்ணி பாதிக்கு மேலே அமுலுக்கு வந்து, கோர்ட் தடை காரணமாக நின்றது. இப்போது கோர்ட் தடை நீங்கி விட்டது. ஆகவே, அந்த பாலிஸியை கன்டினியூ பண்ண வேண்டும் என்பதுதான் இங்கே பாயின்ட். மேற்கு வங்காளத்திலே ஜூட் ஆலையைப் பொறுத்தவரைக்கும், நீங்கள் கேட்டீர்கள், பெரிய முதலாளிகளை ஏன் விட்டிருக்கிறீர்கள் என்று. எல்லா ஜூட் தொழிலாளர்களும் ஒன்றாக சேர்ந்து, அந்த சணல் ஆலைத் தொழிலையே தேசியமயமாக்க வேண்டும் என்று ஜெனரல் ஸ்டிரைக் செய்கிறார்கள். அது நடக்கிறது அங்கே. அசெம்பிளியிலேயும் ரெசல்யூஷன் போட்டு, கவர்ன்மெண்ட்டும் அதை, தேசியமயமாக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஆதரித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே இப்பொழுதும் நான் அதைத்தான் சொல்கிறேன். இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன? இந்த அரசாங்கம் வந்த பின்பு என்ன சொல்லியிருக்கிறது? நான் சட்டமன்றத்திலே ஏற்கெனவே ஒரு முறை என்னுடைய மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது சொன்னேன். நிச்சயமாக நாங்கள் நேஷனலைஸ் செய்கிறோம். ஆனால், எப்பொழுது என்று சொன்னால், எங்களுக்கு இந்த நாட்டு மக்களுக்கு அத்தனை பேருக்கும் பேருந்து வசதிகளை செய்து கொடுத்து விட்ட திருப்தி ஏற்பட வேண்டும்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இப்போது வேண்டுமானால் 5 ஆயிரம் பேருந்துகளை எடுத்து என்ன செய்யலாம். சேரன் போக்குவரத்துக் கழகம், ஜீவா போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் என்று பெயரை வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாமே ஒழிய அதன் மூலமாக நிச்சயமாக ஒரு நபருக்குக் கூட கூடுதலாக பஸ் வசதி கிடைக்காது. ஆனால் இப்படி 5 ஆயிரம் பஸ்களை எடுக்கின்ற பணத்தை வைத்து கூடுதலாக 2 ஆயிரம் பஸ்களை வாங்கினால், நிச்சயமாக ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு பேருந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து விடமுடியும் என்பதை, நியாய உள்ளம் உடைய, நியாய உணர்வு உடைய அத்தனை பேரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே அந்த அடிப்படையில் தான் நாங்கள் செய்துக் கொண்டிருக்கிறோம்.

எதிலும் ஏதாவது குற்றம் கண்டு பிடிக்க வேண்டும் என்று சொன்னால், குற்றச்சாட்டுகளை சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் இருக்கிற உண்மையான உணர்வுகளை நீங்கள் புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக சுட்டிக் காட்டுகிறேன். எனவே முதலில் இதைச் செய்துவிட்டு, தொடர்ந்து தேசியமயமாக்குவதையும் செய்வோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்

சந்திரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒரு அமெண்ட்மெண்டையும் கொடுத்திருக்கிறார்கள்' கன்னியாகுமரியையும் சென்னையையும் சேர்க்கவில்லையே அங்கே தனியார் துறைக்கு விடப்போகிறீர்களா என்ற ஒரு கேள்வியை அவர்கள் கேட்டார்கள். தயவு செய்து சிந்திக்க வேண்டும். சியாப்டர் 4-ஏ இருக்கிறது. அதிலே இந்த இரண்டு பகுதிகளும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இந்தச் சட்டத்திலே அது சேர்க்கப்பட்டாலும், சேர்க்கப்படாவிட்டாலும் தனியார் துறை அதிலே நுழைய முடியாது. சியாப்டர் 4-ஏ இல் தனியார் துறை உள்ளே நுழையமுடியாது. அவர்கள் மனுவே செய்யமுடியாது என்ற அளவிலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தனியார் வரமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே இந்த அரசாங்கம் நல்ல நோக்கத்திலேதான் இதைச் செய்கிறது. தேசீயமயக் கொள்கையைக் கைவிடத் தயாராக இல்லை. நாட்டிலே பல்வேறு சூழ்நிலைகளை அடிப்படையாக வைத்து இருக்கின்ற பிரச்சினைகளை மனதிலே கொண்டு—எவ்வளவோ பிரச்சினைகள், குடிநீர் போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன—படிப்படியாக தீர்த்து அதற்குப் பிறகு இதைப்படிப்படியாக எடுக்கவேண்டுமென்ற உணர்விலேதான் அரசாங்கம் இருக்கிறது. இந்தப் பிரச்சினையை இப்போது எல்லோரும் நல்ல முறையிலே புரிந்துகொண்ட காரணத்தினாலே இதற்கு ஆதரவைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம்.

Thiru P. PONNURANGAM : I am Pressing.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' ஆளுநர் அவர்களால் 28-1-1984 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1984) இப்பேரவை நிராகரிக்கிறது ''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள், ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.





பொது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள். என். சங்கரய்யா, ஜே. ஹேமச்சந்திரன், ரா. உமாநாத், என். வரதராஜன், கு. ரமணி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, மு.அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம், செ. சிவசாமி, ஏ. டி. கருப்பையா ஆகியோர் பொதுவாக திருத்தம் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் திருத்தத்தை மொழியலாம்.

திரு. ஜெ. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

' இந்த சட்டமுன்வடிவில் எங்கெல்லாம் '' நீலகிரி மாவட்டம் '' என்ற வார்த்தைகள் வருகிறதோ, அதோடு '' கன்னியாகுமரி மாவட்டம், சென்னை நகரம்'' என்ற வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.'

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '' பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும். ''

* Thiru K. P. PALANIAPPAN: Sir, I move the following amendment standing in my name:

Sir, I move that—

"In clause 2, *omit* the words, "subject to certain exemptions", occurring at the end of the proposed third paragraph".

The amendment was duly seconded.

திரு. கு. பா. பழனியப்பன். : தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவின் பிரிவு 2-க்கு நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை மொழிந்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தில் '' சிறு உரிமையாளர்கள் '' என்ற பெயராலே சட்டத்தின் பிடியிலிருந்து சில பேர்களைத் தவிர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

முன்னாலே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்திலே சில சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார்கள். அதாவது போதுமான அளவு பண வசதி இன்றைக்கு அரசாங்கத்திடம் இல்லாத காரணத்தினாலே எல்லாவற்றையும் உடனடியாக தேசியமயமாக்கவில்லை என்ற கொள்கையைச் சொன்னார்கள். அப்படியானால் எதற்காக எக்ஸம்ப்ஷன் கொடுக்கவேண்டும்? விதிவிலக்கு கொடுப்பது என்ன நியாயம்? வேண்டுமானால் அவர் சொல்லலாம், 5 ஆண்டுகளிலே எங்களால் முடியாது. பணவசதியில்லை என்று, 6 ஆண்டு ஆகலாம், 8 ஆண்டு ஆகலாம், 10 ஆண்டு ஆகலாம் என்று சொன்னால் பொருத்தம். ஆனால் சில பேர்களுக்கு சலுகை கொடுக்கப்படுகின்ற அளவிலே சட்டத் திருத்தம் என்று சொல்வது அடிப்படையிலேகூட சரியல்ல.

இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்தைப்போல், அடிப்படைச் சட்டத்தின் நோக்கத்தையே கூட பழுதுபடுத்துகிற வகையிலே ஏதோ முதலாளித்துவத்தினுடைய பாதையிலே இந்த அரசாங்கத்தை வழி நடத்திப் போகவேண்டுமென்ற கருத்தோடு அல்லது வெஸ்டட் இன்டரஸ்ட் கூட்டத்தினரோடு ஒரு சமாதான சகவாழ்வு ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் அரசாங்கத்தை ஆக்குகிற வகையிலே இந்தத் திருத்தம் வந்திருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

சில தனிப்பட்ட நபர்கள் சொல்கிற கருத்தை எங்கள் இயக்கத்தினுடைய கருத்தாக நினைத்து அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிடுகிறார்கள். அதாவது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. ஆசைத்தம்பி அவர்களும் இங்கே இருந்த உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் இன்னும் பல உறுப்பினர்களும், தனிப்பட்டவர்கள் சொன்ன கருத்தை இயக்கத்தினுடைய கருத்தாக அவர் பாவிப்பது போல் இருக்கின்ற எண்ணத்தை தயவு செய்து கைவிடவேண்டும். ஆக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சார்பில் அன்றையதினம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் தம்முடைய கருத்தை எப்படி எடுத்துக் கொள்ளச் சொல்கிறார் ?

திரு. கு. பா. பழனியப்பன் : நான் சொல்வது கட்சியின் கருத்து என்பது உங்களுக்குத் தெரியும். அது 1973 ஆம் ஆண்டு சட்டத்திலேயும் இருக்கிறது. இங்கே முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள் இங்கே இருக்கின்ற உறுப்பின்ர்கள் பல பேருக்கு உறவினர்கள் பஸ் முதலாளிகளாக இருக்கக் கூடும் என்று. அதற்காக கட்சியினுடைய கருத்தை மாற்றச் சொல்ல முடியாது. கட்சியின் கருத்து என்பது 1973 ஆம் ஆண்டு சட்டத்திலே தெளிவாக இருக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட





வேண்டும். அதில் எந்தக் காரணத்தைக் கொண்டும் விதி விலக்குகள் கிடையாது. இதுதான் அந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த நோக்கத்தையே பாழ்படுத்துகின்ற வகையில் தனிப்பட்டவர்கள் கருத்தைக் கொண்டு வந்து இதுதான் இயக்கத்தினுடைய கருத்து என்று தொனிக்கின்ற வகையில் அமைச்சர் அவர்கள் பேசுவது சரியல்ல என்று சொல்லி என்னுடைய திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20 ஆம் தேதி சட்டமன்றத்தில் தி. மு. க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது தனிப்பட்ட ஒருவருடைய கருத்து என்று நீங்கள் சொல்லிவிட்டால் இப்போது நீங்கள் சொல்லியது கூட தனிப்பட்ட ஒருவருடைய கருத்துதான். கட்சியினுடைய கருத்து என்ன என்று நான் கேட்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவர் அவர்களே, கட்சியினுடைய கருத்து என்பது மட்டும் அல்ல. கட்சி பெரும்பான்மையாக இருந்து இந்தச் சட்டமன்றத்திலேயே சட்டம் இயற்றி இருக்கிறது. அதை சுப்ரீம் கோர்ட்டு கூட சரியான சட்டம் என்று ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில், இன்றைக்குத் தனியாக எக்ஸ்ஸம்சன் கொடுப்பது என்பது உங்கள் கட்சியினுடைய கருத்தா ? அல்லது பொது உடைமைக்கு எதிராக ஒரு பகுதிதான் தேசியமயமாக்கப்பட வேண்டும் என்பதுதான் உங்கள் கட்சியினுடைய கருத்தா ? பொதுவுடைமையைத் தடுப்பதுதான் உங்களுடைய கட்சியினுடைய கருத்தா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் கேட்பது அது இல்லை. கட்சிப் பிரச்சினையை இங்கேகொண்டு வந்து இருக்கிறார்கள். நாங்கள் யாரை நம்புவது? இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் பேசுகிற போது கட்சியினுடைய கருத்தைச் சொல்லுகிறார் என்று நாங்கள் நம்பி ஏற்றுக் கொள்கிறோம். 1977-ல் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு பேசுகிறபோது அது கட்சியினுடைய கருத்து என்று நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எனவே, இன்றைக்கு அதைப் போய் தனிப்பட்டவர் ஒருவருடைய கருத்து என்று சொன்னால், நாளைக்கு ஒருவேளை திரு. பழனியப்பன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக வரவில்லை என்றால் இங்கே இருப்பவர்கள் அப்படிச் சொன்னால் எப்படி இருக்கும் என்பதை நீங்கள்தான் சிந்திக்கவேண்டும். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் விவாத மேடையாக்க வேண்டாம்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, ஒரு கட்சியில் இருப்பவர்கள் சிலர் இங்கே கூட தங்கள் கருத்துக்களை பேசலாம். அந்தக் கருத்துக்களை, அது சொந்தக் கருத்தாக இருக்கிறது, அது தவறு என்று அந்தக் கருத்தைப் புறக்கணித்து விட்டுதான் கட்சியினுடைய சார்பில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறோம். ஆகவே, அது கட்சித் தலைவராலே கண்டிக்கப்பட்டது. Thiru Suppu is not our leader.

**மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். திரு. சுப்பு அவர்கள் கட்சித் தலைவர் அல்ல. இங்கே சட்டமன்றத்திலே 30, 40 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய சார்பாக யாராவது ஒருவர் பேசுகிறார். அந்த ஒருவர் பேசுவதை அந்தக் கட்சியினுடைய கருத்து என்றுதான் நாம் ஏற்றுக்கொள்கிறோம். இன்றைக்கு மாண்புமிகு திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசினார்கள் அது அந்தக் கட்சியினுடைய கருத்து என்று தான் நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதிலே தவறு இருக்குமானால் இங்கே கட்சியினுடைய தலைவராக பொறுப்பு ஏற்று இருப்பவர் அது தவறான கருத்து, எங்கள் கட்சியினுடைய கொள்கை அப்படி இல்லை, இப்படி என்று சொல்லியிருக்க வேண்டும். எனவே அன்றைக்கு திரு. சுப்பு சொன்னதை யாரும் மறுத்து சட்ட மன்றத்திலே சொல்லவில்லை. தனியாக போய் ரூமிலே கண்டித்து இருக்கலாம். அது வேறு விவகாரம். அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் உங்களது கட்சித் தலைவர் அல்ல. கட்சித் தலைவர் திரு. அன்பில் தர்மலிங்கமும் இல்லை. துணைத்தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தியும் இல்லை. உங்களை ஏற்கெனவே பேச அனுமதித்துவிட்டேன். இந்தச் சட்ட முன்வடிவின் மீது திருவாளர்கள் பொன்னுரங்கம், பழனியப்பன் அவர்களுக்குப் பதிலாக நீங்களே பேசியிருக்கலாம். ஒவ்வொன்றுக்கும் எழுந்து நீங்கள்தான் விளக்கம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதா என்ன ?

**திரு. துரைமுருகன் :** ஒரு கட்சியின் கொள்கை என்று சொல்லி முடிக்கிறோம். அதற்குப் பிறகு அமைச்சர் பேசினார். அது இர்ரெலவண்டாக இருக்கிறது என்று எங்களுக்குத் தெரிந்தால் அதை எக்ஸ்ப்ளெயின் செய்ய வேண்டாமா ? பார்ட்டி பொஸிஷனைச் சொல்ல வேண்டாமா ?





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பார்ட்டி பொஸிஷனை திரு. துரைமுருகன் சொல்லியாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. கூ. முத்துசாமி :** நான் ஆன்சர் சொல்லக் கூடாதா என்ன ? (கூச்சல்— குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே ஒரு கட்சியின் சார்பாக இருக்கும் உறுப்பினர் 1977-லே இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்ன கருத்தை அந்தக் கட்சியினுடைய பொறுப்பு வாய்ந்த தலைவவர்கள் மறுக்கிற வரையிலும் அது அந்தக் கட்சியினுடைய கருத்தாகக் கருதப்படும். அவர்கள் சொல்வது, அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள், ஆகவே அன்றைக்கு அது எங்களுடைய கட்சிக் கருத்து அல்ல என்று மறுக்கப்படவில்லை, ஆகவே அதை நான் கட்சிக் கருத்தாக ஏற்றுக்கொண்டேன் என்று அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

கட்சிக் கருத்து அதுவல்ல, இது என்று இன்றைக்கு நீங்கள் சொல்கிறீர்கள், அதுவும் பதிவாகியிருக்கிறது. அதோடு பிரச்னை முடிந்ததே தவிர. அதற்கு அத்தாரிட்டி என்று வருகிற பொழுது திரு. சுப்புவோ, மாண்புமிகு உறுப்பினரோ எப்படி ஒரு உறுப்பினரோ அப்படித்தான் திரு. துரைமுருகனும் உறுப்பினர். இப்பொழுதும் அவரை வைத்து அத்தாரிட்டியாக எடுத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டால் அந்தக் கட்சியினுடைய தலைவர் வந்து சொல்ல வேண்டும். ஆகவே அந்த அளவிற்குப் போகாமல், இவர் இவருடைய நிலைமைகளை விளக்கினார், அவர் அவருடைய நிலைமைகளை விளக்கினார் என்ற அளவோடு பிரச்னையை விடுவது நல்லது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 2 நிறைவேற்றப்பெற்றது.

[1984 மார்ச் 7

பிரிவு 3.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

**திரு. கு. பா. புழனியப்பன் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In clause 3, in the proposed clause 3 *(b) for* the words, "on such date as the Government may, by notification, appoint", substitute the word, "immediately".

In clause 3, in the proposed clause 4(b), for the words, "on such date as the Government may, by notification, appoint; and different dates may be appointed for different districts and for different provisions of this Act", *substitute* the word, "immediately".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 4.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் என். சங்கரய்யா, ஜே. ஹேமச்சந்திரன், ரா. உமாநாத், என் வரதராஜன், கு. ரமணி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் திருத்தம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

பிரிவு 4 இல் உட்பிரிவு (a) க்குப் பதிலாக **கீழ்க்கண்டதை சேர்த்துக் கொள்ளவேண்டும்.**



1984 மார்ச் 7] [திரு. ஜே. ஹேமசந்திரன்]

''(a) பயணப் பேருந்துகளைக் கையகப்படுத்தும் பணி நீலகிரி மாவட்டத்திலிருந்து தொடங்கும். கன்னியாகுமரி மாவட்டம், சென்னை நகரம், தவிர பிற மாவட்டங்களைப் பொறுத்த மட்டில், பயணிப் பேருந்துகளைக் கையகப்படுத்தும் பணி அதிகமான தொலைவில் ஓடுகின்ற வழித் தடத்திலிருந்து தொடங்கும். இறுதியாக குறைந்த தொலைவில் ஓடுகின்ற வழித் தடத்தில் முடியும். இது 1983 அக்டோபர் மாதம் 31ஆம் நாளிலிருந்து தொடங்கி பத்து வருட காலத்திற்குள் கையகப்படுத்தப்படும்.''

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் அ. ரகுமான் கான், சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன், எம். ஆறுமுகம், பொ. உத்திராபதி; என். ஏ. பூங்காவனம், செ. சிவசாமி, ஏ. டி. கருப்பையா நா. சுந்தரராஜ், கே. எம். தங்கமணி ஆகியோர் திருத்தங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் திருத்தத்தை மொழியலாம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

''பிரிவு 4இல் உட்பிரிவு (a)-க்கு பதிலாக கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

''(a) பயணப் பேருந்துகளைக் கையகப்படுத்தும் பணி நீலகிரி மாவட்டத்திலிருந்து தொடங்கும். கன்னியாகுமரி மாவட்டம், சென்னை நகரம், தவிர பிற மாவட்டங்களைப் பொறுத்த மட்டில், பயணிப் பேருந்துகளை கையகப்படுத்ளம் பணி அதிகமான தொலைவில் ஓடுகின்ற வழித் தடத்திலிருந்து தொடங்கும். இறுதியாக குறைந்த தொலைவில் ஓடுகின்ற வழித்தடத்தில் முடியும். இது 1983 அக்டோபர் மாதம் 31ஆம் நாளிலிருந்து தொடங்கி ஐந்து வருட காலத்திற்குள் கையகப் படுத்தப்படும்''.

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

(பிற்பகல் 1-00).

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, 5 பஸ்கள் வைத்துக் கொள்வது முறையாகாது; திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியினுடைய சட்டத்தில், அந்த 5 பஸ்கள் என்ற வளைவுக்குள் பினாமிகள் புகுந்து கொண்டு பஸ்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற கொள்கையை குழிதோண்டிப் புதைத்து விடுவார்கள்; ஆங்க

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 7

யினால் சில பஸ் பணக்காரர்களைப் பாதுகாக்கக் கூடிய அந்தப் பிரிவு இருக்கக்கூடாது என்ற அதிகாரபூர்வமான கருத்தை எங்கள் கட்சியின் தலைவர் டாக்டர் கலைஞர் முரசொலி பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இதுதான் அதிகாரபூர்வமான கருத்து.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டுமானால் படித்துப் பார்க்கலாம்; படித்துக் காட்டுகிறேன்.

அடுத்து சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பிலே தேசியமயமாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்படவில்லை என்று சொல்கிறார்கள். நீதிமன்றத்தின் தீர்ப்பினை அவர்கள் படித்துப் பார்த்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். மிகத் தெளிவாகச் சொல்கிறார்கள்—

"Unfortunately no State has been able to achieve this goal so far by full-fledged nationalisation".

என்ற கருத்தைத் தீர்ப்பின் எல்லா பக்கங்களிலும் சொல்லிவிட்டு அரசியல் சட்டத்தின் 39-வது பிரிவு பி-யும், சி-யும், ஒரு மாநில அரசு டைரக்டிவ் பிரின்சிப்ல்ஸ் என்று சொல்லக்கூடிய சமூக நல நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்ற பிரிவை ஆதரித்து ஜீவாதார உரிமைகளே பறிக்கப்பட்டாலும்கூட பஸ் முதலாளிகள் தங்களுடைய தொழில் பாதிக்கப்படுகின்றது; ஃபைனான்சியர்ஸ் தங்களுடைய முதல் பாதிக்கப்படுகின்றது; நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொன்னாலும் கூட, அரசியல் சட்டத்தின் ஃபன்டமென்டல் ரைட்ஸ் ஆர்ட்டிக்கிள் 14-ஆக இருந்தாலும், 19-ஆக இருந்தாலும், 31-ஆக இருந்தாலும், ஜீவாதார உரிமை பறிக்கப்பட்டாலும் கூட—பஸ்களை தேசியமயமாக்குவதால் ஜீவாதார உரிமை பறிக்கப்பட்டாலும், பறிக்கப்படட்டும்—தேசியமயக் கொள்கைதான் சிறந்தது, அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கொண்டு வந்திருக்கின்ற பஸ்களைத் தேசியமயமாக்குகிற சட்டம் மொத்தத்தில் சரியானது, மொத்தத்தில் பொருத்தமானது என்ற அளவுக்குத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது,

அங்கே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் அதாவது 1973-லே கொண்டு வந்தபோது 5 ஆண்டுகளுக்குள்ளே எல்லா பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கின்றது: ஆகவே இப்போது நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் எதுவுமே செய்ய வேண்டாம். இந்தத் தேதியிலிருந்து அதாவது இந்தச் சட்டம் கொண்டுவருகின்ற



1984 மார்ச் 7] [திரு. அ. ரகுமான்கான்]

தேதியிலிருந்து 5 ஆண்டுகளுக்குள்ளாக எல்லா பேருந்துகளையும் தேசியமயமாக்க வேண்டும் என்று போட வேண்டும். அதுதான் திருத்தம். நான் இர்ரெலவன்ட் ஆக பேசுகின்றேன் என்று சொல்லக் கூடாது. அதுதான் என்னுடைய திருத்தம். ஆகவே 5 ஆண்டுகளுக்குள்ளாக எல்லா பேருந்துகளையும் தேசியமயமாக்கப்படுகின்றது என்று நீங்கள் ஏன் அறிவிக்கவில்லை? அதில் என்ன சிரமம்? இதுதான் பஸ்களை தேசியமயாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டமா? இந்தச் சட்டத்தின் மூலம் பஸ்கள் தேசியமயமாக்கப்படுகின்றதா? இல்லை. மாறாக என்ன செய்கிறீர்கள். ஏற்கனவே உள்ள சட்டத்திலே யாருக்கும் புதிதாகப் பெர்மிட் கொடுக்கக்கூடாது; மூன்றாவது நபர் யாருக்கும் பெர்மிட் வழங்கக்கூடாது; அரசாங்க பஸ்களுக்கு மட்டும்தான் கார்ப்பரேஷன் பஸ்களுக்கு மட்டும்தான் பெர்மிட் கொடுக்க வேண்டும்; ரெனுவல் செய்ய வேண்டும் என்று இருக்கின்றது.

ஆனால் புதுச் சட்டத்திலே நீங்கள் என்ன செய்கிறீர்கள் மூன்றாவது நபர் யாருக்கு வேண்டுமானாலும் பெர்மிட் கொடுக்கலாம் என்ற சட்டப்பிரிவைச் சேர்த்திருக்கிறீர்கள். இது எப்படி பஸ்களைத் தேசியமயமாக்குவதற்கு உதவி செய்யும்? இப்படி இருந்தால் முதலாளிகள் பினாமியாகக் கூட வைத்துக் கொள்ளலாம். ஒரு குடும்பத்திலே 10 பேர் என்றால் அவர்கள் மொத்தத்திலே 50 பஸ்களை வைத்துக்கொள்ளலாம் என்ற அளவிற்கு இது ஒரு ஏமாற்றுகின்ற வித்தையாக இருக்கின்றது. பழைய சட்டத்திலே இது இல்லை. ஆனால் புதுச் சட்டத்திலே இதைச் செய்து விட்டால் எப்படி தேசியமயமாக்க முடியும்?

எங்கள் கட்சியின் தலைவர் நேற்று என்னிடத்திலே ஒரு தகவலைச் சொன்னார்கள். அந்தத் தகவலை இங்கே அறிவிக்கிறேன். **

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். திரு. கப்பு அவர்கள் ஒரு பத்திரிகை நடத்தினார். அந்தப் பத்திரிகையில் சில கருத்துக்களை எழுதினார். எங்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளர், அதில் வந்த சில கருத்துக்களைப் பொறுத்த மட்டில் இது எங்கள் கொள்கை அல்லவென்று முரசொலி பத்திரிகையில் வெளிப்படையாக தெரிவித்து இருக்கிறார்.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அமைச்சர் தி.மு.க. ஆட்சிக்காலத்திலே ஏன் ரூட் கொடுத்தீர்கள் என்று கேட்கிறார். நான் கேட்க விரும்புகிறேன். அன்றைக்கு இருந்தது........

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சுப்பு, ஆசைத்தம்பி பற்றி, ஏற்கனவே திரு. துரைமுருகன் சொன்னதையே திரு. ரகுமான்கான் திரும்பவும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று உறுப்பினர் நினைப்பது ரொம்ப தப்பு, அது நல்லதே இல்லை. They are all absolu:ely irrelevent here. உறுப்பினர் அர்த்தம் உள்ளதாகக் கொஞ்சமாவது பேச வேண்டும். * * * அவரைப் பற்றி எது வேண்டுமானாலும் பேசலாமா? இறந்தவரைப் பற்றி பேசுவது மரபல்ல, நல்லதல்ல. ஆகவே, அவர் பற்றி குறிப்பிட்டவை அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் தலைவர் அவர்களே, ஏற்கனவே மோட்டார் வெகிக்கில்ஸ் ஆக்ட்படி அதே டிமான்டிலே இதைப் பற்றி பேசியிருக்கிறார்கள். அதிலே ரூட்டுகளைக் கேட்கிறபொழுது அரசாங்கமே எடுத்துக்கொள்ளும். ஆனால் அதற்கு பப்ளிகேஷன்ஸ் கொடுக்கும்போது, நோட்டிபை பண்ண வேண்டும். அதன்மீது கோர்ட்டுக்குப் போய் காலதாமதம் பண்ணுகிறார்கள். எனவே, இந்த முறையின் மூலம் பஸ்களை தேசியமயமாக்குகிற கொள்கை சாத்தியமில்லையென்ற கருத்து வலியுறுத்தப்பட்டு, அந்த மோட்டார் வெகிகில்ஸ் ஆக்டினுடைய அடிப்படையிலே பஸ்களை தேசியமாக்குகிற கொள்கை அதிகமாக சாத்தியம் இல்லை, அது முடியவே முடியாது. காரணம் அப்படி ஏற்படுகிறபொழுது கோர்ட்டுக்குப் போகிறார்கள்.

இங்கே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் பஸ்களை தேசியமாக்குவது உண்மையானால் இன்றைக்கு அந்த ரூட்டுகளை எடுத்துக் கொள்கின்ற ஒரு குறுக்கு வழியைப் பயன்படுத்திக்கூட சில காரியங்களைச் செய்யலாம். நீங்கள் ஏன் செய்ய வில்லையென்று கேட்கிறீர்கள். ஆனால் நீங்கள் செய்திருக்கிறீர்களா ? மாறாக, இரண்டே இரண்டு பஸ்கள் உள்ள ஒரு பொள்ளாச்சி குடும்பத்திற்கு எத்தனை ரூட்டுகள் விட்டிருக்கிறீர்கள், வாசித்துக் காட்டட்டுமா ? என்ன காரணம் ? ஆகையினாலே, இந்தச் சட்டம் எப்படி இருக்கிறது என்றால் (குறுக்கீடு) * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்*: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்றவர்களைப் பற்றி அவையில் குறிப்பிடுவது நல்லதல்ல.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அண்ணாவினுடைய கொள்கைப்படி பஸ்களை தேசியமாக்குவதற்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால் இது பஸ்களை தேசியமாக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் அல்ல. சுப்ரீம் கோர்ட் தீர்ப்புப்படி நேரடியாகவே இன்ன தேதியிலிருந்து எடுத்துக் கொள்கிறோம் என்று அறிவிக்கலாம் ; அறிவிக்கப்படவில்லை. எனவே, இது பஸ்களை தேசியமாக்குகின்ற சட்டம் அல்ல, இது பஸ் முதலாளிகளைப் பாதுகாக்கின்ற சட்டம், பஸ் முதலாளிகளிடமிருந்து பணம் பறிக்க திட்டம் போடுகிற சட்டம்.

(பிற்பகல் 1–10)

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, கடைசியாக ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த விவாதத்தை துவக்கி இருக்கிறார் என்று கருதுகிறேன். சொல்லவேண்டுமென்று ஆரம்பித்தால் நாங்கள் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் அந்த நோக்கம் எங்களுக்கு இல்லை. அவருக்கு விளக்கம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஐந்து பேருந்துகளை வைத்துக்கொள்வதற்கு நீங்கள் ஏன் அனுமதித்தீர்கள் என்ற கேள்வியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கனவே சொன்னேன்: மீண்டும் அவருக்காக ஒருமுறை சொல்கிறேன். பல்வேறு பிரச்னைகள் இந்த நாட்டிலே தேங்கிக் கிடக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் பஸ்ஸை மட்டும் தேசியமயமாக்கி விட்டு தூங்கிக்கொண்டு இருங்கள் என்று சொல்லவில்லை. இங்கே இருக்கிற குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீருங்கள் என்று சொல்லாமல் இல்லை; வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிற இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்னும் எத்தனையோ பிரச்னைகளைச் சொல்லி இருக்கிறார்கள். பேருந்துகளை மட்டும் 5 ஆண்டுகளில் நேஷனலைஸ் செய்து விட்டால் நாடே சுபிட்சம் பெற்று விடும் என்று எண்ணக்கூடாது. இன்று அண்ணா அவர்களின் பெயரை வைத்துக்கொண்டு தவறான கருத்துக்களை இங்கே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. இன்றைக்கு நம் முன்னாலே பல பிரச்னைகள் நிற்கின்றன. அந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காகத்தான் தற்காலிகமாக இந்த ஐந்து பஸ்களை நாங்கள் இந்தப் பிரச்னையில் தீர்வு காண்கிற வரையில் அனுமதிக்கப் போகிறோம். அதற்குப் பின்னாலே நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்பதை நிச்சயமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உச்சநீதி மன்றம் சொன்ன கருத்துக்களைச்

[திரு. சு. முத்துசாமி] [1984 மார்ச் 7

சொன்னார்கள். நீங்கள் சொன்ன கருத்திலே எனக்கு மாறுபாடான கருத்து இல்லை. அதில் உண்மையிலே நியாயம் இருக்கிறது என்று அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஐந்தாண்டு காலத்திலே, செய்தாக வேண்டுமென்று நமக்கு உத்தரவு போடவில்லை. நீங்கள் கொண்டு வந்த சட்டம் நியாயமான சட்டம், ஏற்றுக் கொள்ளவேண்டிய சட்டம், சூழ்நிலைக்கேற்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்கட்டும் என்று சொல்லி நம்முடைய பொறுப்பிலே விட்டுவிட்டார்களே தவிர ஒரு காலத்தை நிர்ணயித்து அதற்குள்ளாக, செய்யவேண்டுமென்று அவர்கள் உத்தரவு போடவில்லை. ஆகவே காலத்தை நிர்ணயிக்கிற பொறுப்பு, கடமை அரசாங்கத்தினுடைய நிதி நிலைமையை பார்த்து செய்ய அரசாங்கத்திற்குத்தான் உண்டே தவிர சுப்ரீம் கோர்ட்டிற்குக் கிடையாது. சுப்ரீம் கோர்ட் நாம் கொண்டு வந்திருக்கிற சட்டம் செல்லும் என்று அறிவித்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) கொண்டு வந்ததன் நோக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் உடனே செய்ய வேண்டுமென்றால் நம்மிடத்தில் பணம் இல்லை. அதை கட்டாயப் படுத்துவதற்கு சுப்ரீம் கோர்ட்டிற்கு அதிகாரம் கிடையாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அந்த வகையிலே 5 ஆண்டிறகுள்ளாக செய்ய வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. எப்போது அரசாங்கத்திற்குச் சூழ்நிலை நிதி நிலைமை சரியாக இருக்கிறதோ அப்போது செய்யத் துவங்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ எதிர் பார்த்து செய்கிறோம் என்று சொன்னார்கள். நாங்கள் அப்படி சொல்ல வேண்டுமென்றால் ஆரம்பத்திலிருநது ஆரம்பிக்க வேண்டியிருக்கும். எனவே அப்படிப்பட்ட தவறான கருத்துக்களைச் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 4 நிறைவேற்றப் பெற்றது.



1984 மார்ச் 7]

பிரிவு 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

இப்பிரிவிற்கு உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற திருத்தங்களில் திரு. ஜே. ஹேமச்சந்திரன் திருத்தம் தவிர மற்றவை பேரவை விதி 100 (2)-ன் கீழ் அனுமதி மறுக்கப் பெற்றுள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

In clause 5 in sub-clause (*a*) (ii), for the words and figures "the date appointed under sub-section (4) of section 1" *substitute* the words and figures, "31st October 1983".

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 6

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 6 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

இப்பிரிவிற்கு உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற திருத்தங்களில் திரு. ஹேமச்சந்திரன் மற்றும் திரு. கு.பா. பழனியப்பன் ஆகியோர் திருத்தங்கள் தவிர மற்றவை பேரவை விதி 100 (2)-ன் கீழ் அனுமதி மறுக்கப் பெற்றுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் ;

"In clause 6, in sub-clause (ii), in the proposed new sub-clause (ii), for the words and figures, "the date appointed under sub-section (4) of section 1" *substitute* the words and figures, 31st October 1983".

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In claose 6, *Omit* the proviso Item (iii).

திருத்தம் முறையே வழி மொழியப் பெற்றது.

திருத்தங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

பிரிவு 6 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

### பிரிவு 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 7 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In Clause 7, in the proposed proviso, *for* the words and figores, "the date appointed under sub-section (4) of section I" *substitute* the words and figures, "31st October 1983".

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 7 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

### பிரிவு 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 8 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். :—

Sir, I move that—

"In clause 8, in sub-clause (1) in the item (*a*) *for* the words and figures, "the date appointed under sub-section (4) of section 1", *substitute* the words and figures, "31st October 1983".

In clause 8, in sub-clause (1) in the item (*b*) *for* the words and figures appeared under "Scale per Vehicle" *substitute* the following words and figures :

| | | |
|---|---|---|
| 1. | Drivers | 2.75 |
| 2. | Conductors | 2.65 |
| 3. | Supervision | 0.125 (Line staff and Checking Inspectors) |
| 4. | Higher Supervision Staff and Managers | 0.075 |
| 5. | Ministerial and Secretariat Staff | 0.8 |
| 6. | Technical Staff including Foremen | 2.75 |

In clause 8, in a sub-clauses (2) and (3), *for* the words and figures "the date appointed under sub-section (4) of station 1", *substitute*, the words and figures, "31st October 1983".

திருத்தம் முறையே வழி மொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 8 பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

### பிரிவு 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 9 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

(பேரவைத் தலைவர்) [1984 மார்ச் 7

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் என். சங்கரய்யா, ஜே. ஹேமச்சந்திரன், ரா. உமாநாத், என். வரதராஜன், கு. ரமணி, ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், அ. ரகுமான்கான், கு. பா. பழனியப்பன், நா. சுந்தரராஜன் மற்றும் கே. எம். தங்கமணி ஆகியோர் திருத்தங்களைக் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் திருத்தத்தை மொழியலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்;

பிரிவு 9-இல் உட்பிரிவு (சி) மற்றும் அதன் விளக்கம் ஆகியவை நீக்கப்பெறவேண்டும்.''

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே தேசியமயக்கொள்கைக்கு ஆதரவாகக் கொடுக்கப்பட்ட பல திருத்தங்களை அரசாங்கம் ஒப்புக்கொள்ளாமல் தோற்கடித்து இருக்கிறது. கொஞ்சம் அந்தச் சட்டத்திற்கு உயிர் கொடுக்கலாம் என்ற வகையில் அமைந்துள்ள திருத்தம் தான் இந்தப் பிரிவுக்கு நாங்கள் கொடுத்து இருக்கும் திருத்தமாகும். இந்தப் பிரிவு என்ன சொல்கிறது என்றால் ஏற்கனவே இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, இந்தச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு 5 பஸ்கள் வரைக்கும் யார் கேட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்பதாகும். ஆகவே, பிரைவேட் செக்டாரை இது பலப்படுத்தும். இந்தச் சட்டம் வந்துவிட்டால் எதிர்காலத்தில் 5 பஸ்கள் வரைக்கும் புதிதாக வருகிறவர்களுக்குக் கூட அனுமதி அளிக்கலாம். அப்படியானால் பிரைவேட் செக்டார் ஜூரிஸ்டிக்ஷன் இன்னும் அதிகமாக ஆகிவிடும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இந்தத் திருத்தத்தையும் நீங்கள் தோற்கடித்து, ஒரிஜனலை பாஸ் செய்து விட்டால் தேசியமயக் கொள்கை என்பது ஒரு எலும்புக்கூடாக இருக்குமே தவிர அதிலே லைப் இருக்காது. ஆகவே, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறியதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பேருந்துகள் விடவேண்டும் என்ற கோரிக்கைகள் பல்வேறு இடங்களில் இருந்து வந்து கொண்டு இருக்கின்றன. போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அரசாங்கம் எல்லா இடங்களிலும் விடவேண்டும் என்று விரும்பினாலும் ஆயிரம் இரண்டாயிரம் பஸ்கள் விட்டால் கூட அவற்றைச் சமாளிக்கக்கூடிய சூழ்நிலை இல்லை. நாம் ஏற்கனவே அரசாங்கத்தின் சார்பில் ஏறத்தாழ 4,000 பேருந்துகளை விட்டுபக் கொண்டு இருக்கிறோம். இருப்பினும் கோரிக்கைகள் அதிகமாகிக்கொண்டே இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலும், அதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை இருப்பதாலும், இந்த முறையை நாம் பின்பற்ற வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட முதலாளிகளை உருவாக்க வேண்டும் என்பது அல்ல நமது நோக்கம். ஏற்கனவே இந்தச் சட்டம் இருந்தபோதுகூட தனியார்களுக்கு நாம் 123 பர்மிட்டுகள் தான் இந்த நான்காண்டு காலத்தில் கொடுத்து இருக்கிறோம். அதுகூட நீதிமன்றத்தில் இருந்து வந்த கட்டளையின் அடிப்படையில்தான் கொடுத்து இருக்கிறோம். எனவே மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற உணர்வில்தான் இதைக்கொண்டு வந்து இருக்கிறோம்

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு எதிராக அரசாங்கம் கொண்டு வந்து இருக்கும் சட்டமாக இது இருப்பதால், இதை எதிர்த்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(பிற்பகல் 1-20)

**திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, சமதர்ம சமுதாயத்தை சமைக்கவும், செல்வம் சிலர் கையிலே குவிவதைத் தடுக்கவும் (குறுக்கீடு) தேசியமயமாக்குவதுதான் சிறந்த திட்டம் என்ற காரணத்தால் 1973 ஆம் ஆண்டு அன்றையதினம் முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் பஸ்களை தேசியமயமாக்கினார்கள். அதை எதிர்த்து பஸ் முதலாளிகள் உச்ச நீதிமன்றம் வரை போவார்கள். உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் அதற்கு புகழ்மாலை சூட்டி, அன்றைக்கு தீர்ப்பு அளித்தார்கள். ஆனால் அந்தத் தீர்ப்பினுடைய முதுகெலும்பை ஒடிக்கின்ற அளவுக்கு (கூச்சல்-குழப்பம்) அந்த சமதர்ம சமுதாயத்தை புதைக் குழிக்கு அனுப்புகிற திட்டமாக இந்தத் திருத்தத்தைத் கொண்டுவந்து, இந்த மாமன்றத்திலே நீங்கள் பெருவாரியாக இருக்கிறீர்கள் என்ற காரணத்தால், நிறைவேற்றுகிறீர்கள். சமதர்ம சமுதாயத்தை நீங்கள் பாடைக்கு அனுப்புவதற்கு முன்னால் எங்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. ரா. உமாநாத் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்திற்குக் கொடுத்திருக்கக் கூடிய முக்கியமான திருத்தங்களை அரசாங்கம் 'டிஃபிட்' பண்ணி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிறீர்கள். இது தேசிய மயமாக்குகிறோம் என்பதற்குப் பதிலாக ஏற்கனவே தேசியமயமாக்கியிருக்கிற பஸ்களையும் தனியார் மயமாக்கும் சட்டமாக இருக்கிற காரணத்தால் நாங்கள் இதை ஆட்சேபித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, நாங்கள் கொடுத்திருக்கக் கூடிய திருத்தங்களை ஏற்றுக் கொள்ளாததோடு இப்போதுள்ள தேசியமயமாக்கும் கொள்கைக்கு விரோதமாக தனியாருக்கு மேலும் அதிகமாக பெர்மிட்டுகள் வழங்க வழிவகைச செய்வதற்கு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதால் அதற்கு எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற முறையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).



**திரு. ஏ. சாகுல்ஹமீது :** தலைவரவர்களே, இந்தச் சட்டம் பேரறிஞர் அண்ணாவின் கொள்கைக்கு எதிராக இருப்பதால், தேசியமயமாக்கும் கொள்கைக்கு இது விரோதமாக இருப்பதால் என்னுடைய எதிப்பைத் தெரிவித்து, வெளிநடப்புச் செய்கிறேன். (உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணாவின் வழிநின்று, அவர்களுடைய கொள்கைகளைச் கட்டிக்காப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறது என்பதை இப்போதும் நாங்கள் வலியுறுத்துகிறோம்; இதற்கு முன்னாலேயும் வலியுறுத்தினோம்; இனியும் வலியுறுத்துவோம். அந்த அடிப்படையிலே, தேசியமயமாக்கும் வகையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

உச்ச நீதிமன்றம் 1973-ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் செல்லும் என்றுதான் சொல்லியிருக்கிறதே தவிர உடனடியாக நாட்டிலே இருக்கிற அத்தனை பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று கட்டளையிடவில்லை. தேசியமயமாக்குகிற உரிமை உண்டா இல்லையா என்ற பிரச்சினை வந்தபோது மாநில அரசுக்கு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அதை எப்போது நடத்துவது, எப்படி நடத்துவது, எவ்வளவு பஸ்களை நடத்துவது, எப்படி நிர்வகிப்பது என்பதை அந்தந்த மாநிலம் தான் முடிவு செய்து நடத்த வேண்டும். எல்லா பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று சொன்னால் மேற்கு வங்கத்திலே கூட அத்தனை பஸ்களையும் தேசியமயமாக்கியிருக்க வேண்டும். ஆக, தேசியமயமாக்கும் கொள்கையை கடுகளவும் நாங்கள் மீறவில்லை; தனியாருக்கு விட்டுச்கொடுக்கவில்லை; முறைப்படித்தான் நடக்கிறது என்பதைத் நான் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 9 சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 9 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 10, 11 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவரவர்களே, நான்கீழக்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள் ஒப்பந்தப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1983

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ''ஆளுநர் அவர்களால் 16-12-1983 ஆம் தேதியன்றுபிறப்பிக்கப் பெற்ற 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசர சட்டம் எண் 16/1983) இப்பேரவை நிராகரிக்கிறது''. என்ற தீர்மானத்தை திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், கு.பா. பழனியப்பன் ஆகியோர் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இத்தீர்மானத்தை மொழிவர்,

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

''ஆளுநர் அவர்களால் 16—12—1983 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 16/1983) இப்பேரவை நிராகரிக்கிறது''.

**திரு. ப. பொன்னுரங்கம் :** இத்தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. சி பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன; இதன்மீது விவாதம் மாலையில் தொடரும்.





## 6. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு—

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். —

| | | |
|---|---|---|
| 8—3—1984 (வியாழன்) முதல் 13—3—1984 (செவ்வாய்) முடிய. | .. | ஏற்கெனவே அறிவித்துள்ளபடி. |
| 14—3—1984 (புதன்) | .. | 1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதமும் பதிலுரையும். |
| 15—3—1984 (வியாழன்) | .. | 1984-85 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>எண் 17—கல்வி.<br>(பேரவை மாலையிலும் கூடும்.) |
| 16—3—1984 (வெள்ளி) | .. | 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்.<br>34—நகர்ப் பகுதி வளர்ச்சி. |
| 17—3—1984 (சனி) | .. | 1—நிலவரித் துறை.<br>4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.<br>41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.<br>46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.<br>11—மாவட்ட நிர்வாகம். |
| 18—3—1984 (ஞாயிறு) | . | விடுமுறை. |

19—3—1984 (திங்கள்) .. 17—3—1984 அன்று எடுத்துக்கொள்ளப் பெறும் மானியக் கோரிக்கைகள்.

20—3—1984 (செவ்வாய்) .. 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம்.

40—சாலைப் போக்குவரத்துப்பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.

54—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

21—3—1984 (புதன்) .. 20—வேளாண்மை.

49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

22—3—1984 (வியாழன்) .. 18—மருத்துவம்.

.. 19—பொதுச் சுகாதாரம்.

(பேரவை மாலையிலும் கூடும்).

23—3—1984 (வெள்ளி) .. 1. 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்—பேரவைக்கு அளித்தல் (ஆளுநர் ஒப்புதலுக்குட்பட்டு).

2. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகள்—பேரவைக்கு அளித்தல் (ஆளுநர் ஒப்புதலுக்குட்பட்டு)

3. 48—கிராமத் தொழில்கள்.

56—கிராமத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.

24—3—1984 (சனி) .. 24—தொழில்கள்.

50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

25—3—1984 (ஞாயிறு) .. விடுமுறை.

(பிற்பகல் 1-30)

26—3—1984 (திங்கள்) .. 31—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

44—எழுதுபொருள்—அச்சுத் துறை.



27—3—1984 (செவ்வாய்) .. 1. 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது விவாதமின்றி வாக்கெடுப்பு.

2. 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.

3. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

4. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.

28—3—1984 (புதன்) 1. 1984-85 ஆம் ஆண்டின் முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.

2. 1983-84ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.

3. 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன்.

29—3—1984 (வியாழன்) } 15—காவல் துறை

30—3—1984 (வெள்ளி) } 16—தீயணைப்புப் பணிகள்

31—3—1984 (சனி) .. 35—நுகர்பொருள் வாணிபக் கழகம்.

மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பிற்பகல் 4-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### சென்னை மாநகர காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் இரண்டாம் (திருத்த) சட்ட முன்வடிவு 1983—(தொடர்ச்சி).

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கடுமையாக எதிர்க்கிறேன். இது ஜனநாயக விரோதமான சட்டம். இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமான சட்டம், இது எதிர்க் கட்சிகளை நசுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டம், ஒரு போலீஸ் ராஜ்யத்தை உருவாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய ஒரு சட்டம், அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதற்குப்பயன்படுத்தும் ஒரு கருவியாக அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய ஒரு சட்டம் என்று கடுமையாகக் குற்றம் சுமத்துகிறேன். இதே அவசரச் சட்டம் ஏற்கனவே கொண்டுவரப்பட்டது. ஆனால் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டு இதே சட்டசபையில் அது சட்டமாக நிறைவேற்றப்படவில்லை. அது காலாவதியாகிவிடுவதற்கு நீங்கள் அனுமதித்தீர்கள். என்ன காரணம் என்று கேட்டால் கொண்டுவரப்பட்ட அந்த அவசரச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவரவேண்டியிருக்கிறது என்று துறைக்கு அனுப்பியிருக்கிறோம். எனவே, புதுத் திருத்தங்களோடு இந்தச் சட்டம் கொண்டுவர இருக்கிற காரணத்தால் காலாவதியாகிவிட அனுமதித்தோம், இப்போது கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. நான் இதைத் படித்துப் பார்த்தேன். எந்தப் புதிய திருத்தத்தோடும் இது வரவில்லை. இன்னும் சொல்லப்போனால் பழைய பூதமாக வந்த அதே கருப்பு சட்டம்தான இன்று புது பூதமாக அல்ல பழைய பூதமாகத் தான் வந்திருக்கிறது. அன்றைக்கு வராத பூதம் இன்று வேறு வகையில் உள்ளே நுழைந்திருக்கிறது. அவ்வளவுதான்.

இதில் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் அடிப்படையைப்பற்றி ஒன்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எதிர்க் கட்சிகளைப் பொறுத்தமட்டில் பேச்சு உரிமைகள், எழுத்து உரிமைகள், ஊர்வலம் நடத்துகிற உரிமைகள், கருத்துக்களைச் சொல்கிற உரிமைகள் இவற்றை எல்லாம் பறிப்பதற்கான வாய்ப்பு இதிலே இருக்கிறது. எதிர்க் கட்சித் தொண்டர்களை கைது செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதை " மினி மிசா " என்று வர்ணித்தல் பொருத்தமாக இருக்கும். ஏற்கனவே தேசீய பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால் வக்கீல் வைத்து வாதாட முடியாமல், நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாமல் யாரை வேண்டுமானாலும் கைது செய்து சமூக விரோதி என்று சொல்லி சிறையில் அடைத்து வைக்கும் சட்டத்தை நீங்கள் கையில் வைத்திருக்கிறீர்கள். இப்போது புதிதாக அதே அளவில் நிரபராதிகளை எதிர்க்





கட்சியைச் சார்ந்தவர்களை அநியாயமாக பழி சுமத்தி சிறைச்சாலையில் அடைக்கக் கூடிய அளவிற்கு கடுமையான ஷரத்துக்களைக் கொண்ட சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதிலே சொல்கிறீர்கள், ஐந்து பேர்களுக்கு மேற்பட்டவர்கள் ஆயுதங்களோடு ட்ரில் செய்தால், ஐந்து பேர்களுக்கு மேற்பட்டவர்கள் ஆயுதங்களோடு அணிவகுப்பு செய்தால் இந்தச் சட்டப்படி என்ன தண்டனை வருகிறது என்று சொன்னால் ஆறு மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம். இது மட்டுமல்ல. இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது வேறு எதிர்க் கட்சிகள் ஊர்வலம் போகிறோம். அப்படி ஊர்வலம் போகிறபோது கொடிக் கம்புகளோடு போகிறோம். கொடியை கம்பில் பறக்கவிட்டு செல்ல கொடிக் கம்புகளோடு போகிறோம். இதில் " ஆர்ம்ஸ் " என்பதில் கம்புகளும்—சென்னையில் சொல்கிறார்கள், "கொம்புகள் " என்று—அந்தக் கம்புகளும் இந்த ஆர்ம்ஸ் என்பதில் வந்துவிடுகிறது. எனவே ஒரு அரசியல் இயக்கம், ஒரு அரசியல் கட்சி ஊர்வலம் செல்கிறபோது கொடிக்கம்போடு போனால் கொடிகட்டப்படுகிற அந்தக் கம்பும் " ஆர்ம்ஸ் " என்பதில் வருகிறது. அப்படிப் போனால், போலீஸ் விரும்பினால், 6 மாதம் ஜெயில், 2,000 ரூபாய் அபராதம் போட்டுவிட முடியும்.

அது மட்டுமல்ல, கிழவி கம்பை ஊன்றிக் கொண்டு போகிறாள். கிழவர்கள் கம்பை ஊன்றிக் கொண்டு போகிறார்கள். நொண்டி, ஊனம் உற்றவர்கள் கம்பை ஊன்றிக் கொண்டு போகிறார்கள். அந்தக் கம்பை " ஆர்ம்ஸ் " என்று சொல்லலாம். இந்தச் சர்க்கார் அல்லது போலீஸ் பார்த்து போனால் போகிறது என்று விட்டுவிடலாமே தவிர, சில கிழவிகள் மீது சர்க்காருக்கு கோபம் என்றால், அதே போல் சர்க்காருக்கோ போலீசுக்கோ கிழவர்கள் மேல் கோபம் என்றால், அவர்கள் கம்பை ஊன்றிக் கொண்டு போகிறார்கள் என்றால், அவர்கள் மீது " ஆர்ம்ஸ் " வைத்திருப்பதாக குற்றம் சுமத்தி, 5, 6 கிழவர்களை, 7, 8 கிழவிகளை உள்ளே தள்ளக் கூடிய அபாயம் இந்தச் சட்டத்திலே இருக்கிறது, கிழவர்களுக்கும், கிழவிகளுக்கும் கூட பாதுகாப்பு கொடுக்க முடியாத அபாய நிலைமை இந்தச் சட்டத்தின் மூலம் இருக்கிறது.

அது மட்டுமல்ல. ஆயுதங்கள் இல்லாமல் அணிவகுப்பு பயிற்சி செய்தால், அவர்களை எல்லாம் நீங்கள் ஆயுதப் வைத்துக் கொண்டு பயிற்சி செய்வதாகச் சொல்லி, பல அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர்களை கைது செய்கின்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஒவ்வொரு அரசியல் இயக்கத்திலும் தொண்டர் படை உண்டு. இந்திரா காங்கிரசிலே சேவா தாள் என்ற தொண்டர் படை இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தால், உங்களுடைய கட்சியிலே கூட " வெண்ணிறப் படை " என்ற ஒரு படை என் அருமை நண்பர் ஜே. பி. ஆர். அவர்கள் தலைமையில் இயங்கியது.

முதலமைச்சர் அவர்கள் அதற்கு அதரவு கொடுத்தார்கள். ஆளுங்கட்சி அதற்கு ஆதரவு கொடுத்தது. கோபாலபுரத்தில் அதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. அதற்கான புகைப்படங்கள் கூட எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நான் கேட்க விரும்புவதெல்லாம், உங்களுக்கும் தொண்டர் படை உண்டு; இந்திரா காங்கிரசுக்கும் தொண்டர் படை உண்டு; அதே போல் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தொண்டர் படை உண்டு, கம்யூனிஸ்ட் இயக்கங்களும் தொண்டர் படை வைத்திருக்கின்றன.

மாநாடுகள் நடைபெறுகின்றபோது அல்லது மாபெரும் கூட்டங்கள் நடைபெறுகின்ற போது, இந்த தொண்டர் படை அதை ஒழுங்கு செய்வதற்காக அணிவகுத்து நின்றால் அல்லது அதற்கான பயிற்சி செய்தால், அவர்களையும் ஆயுதங்கள் வைத்திருப்பதாகச் சொல்லி அவர்கள் எல்லோரையும் கைது செய்து, அவர்களுக்கும் 6 மாதம் ஜெயில், இரண்டாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கக் கூடிய அபாயம் நீங்கள் கொண்டு வருகின்ற இந்தச் சட்டத்தில் இருக்கின்றது. இல்லை, இல்லை சந்தேகப்படாதீர்கள், சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள் என்பது போல், நாங்கள் அப்படியல்ல என்றாலும், நியாயமானவைகளைதான் செய்வோம், அப்படியெல்லாம் செய்யமாட்டோம் என்றால், நெல்லையிலே நடந்த மாநாட்டில் மறைந்து போன மாவட்டச் செயலாளர் மரியாதைக்குரிய மஸ்தான் அவர்கள், இதே சட்டத்திலே ஆயுதம் ஏந்தி அணி வகுப்பு செய்தார் என்று குற்றஞ் சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டார். என்னுடைய அருமைச் சகோதரர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சோபால்சாமி அவர்களும், இதே சட்டத்தின் கீழே கரூரிலும், அதைப் போலவே திருநெல்வேலியிலும் கைது செய்யப்பட்டார். சட்டமன்ற மேலவை உறுப்பினர் ..............

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ. தி. மு. க. கார் நொறுக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் மறுக்கிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ. தி. மு. க. தொண்டர்கள் பிற கட்சியினரால், தி. மு. க. வினரால் தாக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி தாக்கப்பட்டதாக அவர்கள் சொல்லி, அவர்கள் புகார் கொடுத்ததன் அடிப்படையிலே கைது செய்யப்படவில்லை. நான் இங்கே சொல்லுவது, ஆயுதப் பயிற்சி அணிவகுப்பு நடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதைச் சொல்ல விரும்புகிறேனே தவிர, யார் யாரைத் தாக்கினார்கள் என்பது வேறு விவகாரம். இந்த மாதிரி குற்றஞ்சாட்டி சிலர் கைது செய்யப்பட்டார்கள்........................





மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லையில் நடந்ததாக உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும், இந்தச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நெல்லையிலும் சரி, கரூரிலும் சரி, அதைப் போலவே தர்மபுரியிலும் சரி, சேலத்திலும் சரி, சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆறுமுகமாக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுனனாக இருந்தாலும் சரி, மாநிலங்களவை உறுப்பினர் கோபாலசாமியாக இருந்தாலும் சரி, முன்னாள் மாவட்ட செயலாளர் மறைந்த மஸ்தானாக இருந்தாலும் சரி, இந்தச் சட்டத்தின் கீழ் என்று சொல்லி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு போடப்பட்டது அப்போது, போலீஸ் அதிகாரி, இந்தச் சட்டம் பாஸ் ஆவதற்கு முன்பே இந்தச் சட்டத்தின் நகலைக் காட்டினார். அதன் பேரிலே அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்ற உண்மையை முன்னாள் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(மாலை 4-10)

இப்பொழுதும் சட்ட அமைச்சர் என்று தான் கருதுகிறேன் (குறுக்கீடுகள்) அடிக்கடி அமைச்சர்களுடைய இலாக்கா மாறுவதினாலே எனக்கு அந்தக் குழப்பம் ஏற்பட்டு தவறுதலாக சொல்லி விட்டேன். நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் மாண்புமிகு பொன்னையன் அவர்கள் சட்ட அமைச்சராக தொடர்ந்து இருப்பது குறித்து மகிழ்ச்சி தான். நான் எந்தவித தப்பான அபிப்பிராயத்திலும் அதைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) இதிலே என்ன இருக்கிறது. வேண்டுமென்றே பேசவில்லை. தவறுதலாகத் தான் முன்னாள் அமைச்சர் என்று அவர் அந்த இலாக்காவில் இல்லையோ என்று ஜோவியலாக பேசி விட்டேன்.

ஆக, மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இப்படி அரசியல் இயக்கங்களினுடைய தொண்டர்களை எல்லாம் சமூக விரோதிகளாக சித்தரித்து, அவர்கள் ஆயுத பயிற்சி செய்கிறார்கள் என்ற பெயராலே கைது செய்யப்பட்டு சிறையில் போடப்படுகிற அபாயம் இருக்கிறது. இன்னொன்றையும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உங்கள் சட்டத்தின்படி, ஆயுதம் தாங்கி பயிற்சி செய்தால் அது சட்ட விரோதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும், நம்முடைய தமிழ் சமுதாயத்தில் சிலம்பாட்டம் என்ற வீர விளையாட்டு நீண்ட காலமாக இருந்து வருகிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச்

உலகத்தில் இருக்கக் கூடிய ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒரு
கலாச்சாரம், நாகரீகம் உண்டு. சிலம்பாட்டம் என்பது 2 ஆயி
ரம் ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்ச் சமுதாயத்தின் கலாச்சார
சொத்தாக இருந்து வருகிறது. ஆனால் இன்றைக்கு கொண்டு
வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தின் மூலம் அந்த சிலம்பாட்டப்
பயிற்சி சட்ட விரோதமாக ஆக்கப்பட்டிருக்கிறது. நான்
சென்னை நகரிலே பார்த்திருக்கிறேன். சவ ஊர்வலம் செல்கிற
போது, ஏழை எளிய மக்கள் சவத்தின் முன்னால் சிலம்பாட்டம்
ஆடிச் செல்கிற காட்சியை நான் பார்த்திருக்கிறேன். இனி அந்த
ஏழை எளிய மக்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, அந்தப்
பயிற்சியை அவர்கள் செய்தால், அவர்களுக்கு 6 மாதம் ஜெயில்,
2,000 ரூபாய் அபராதம் என்று தண்டிக்கப்படுவார்கள். அது
மட்டும் அல்ல. என்னுடைய மதுரை மாவட்டத்தில் கள்ளர்
சமுாயத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையினர் இருக்
கிறார்கள். அங்கே நடைபெறுகிற திருவிழாக்களில் சிலம்பாட்
டம் என்பது வீரத்தின் அடையாளமாக நடத்தப்படுகிறது.
கோவில் திருவிழாக்களிலும் அவை நடத்தப்படுவது வழக்கம்.
இந்தச் சட்டத்தின் மூலம் அதற்காக பயிற்சி செய்யும் அவர்கள்
எல்லாம் சமூக விரோதிகளாக, சட்டத்தை மீறியவர்களாக
கருதப்பட்டு சிறைச் சாலைகளில் அடைக்கப்படுகிற அபாய
நிலை இருக்கிறது.

இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாகக்
கேட்டுக் கொள்கிறேன். யாரும் தப்பாக கருத வேண்டாம்.
சிலம்பாட்டம் செய்வது ஆயுதப் பயிற்சி என்று சொல்லிவிட்டால்,
ஜூடோ பயிற்சி பெறுவது கூட இந்தச் சட்டத்தின் மூலம் சட்ட
விரோதமாக ஆக்கப்பட்டு 6 மாதம் ஜெயில் என்ற நிலை வரு
கிறது. அது மட்டும் அல்ல, கராத்தே பயிற்சி செய்தால் கூட
அதுவும் சட்டத்தில் தவறு என்று வருகிறதா என்பதை அமைச்சர்
அவர்கள் தெளிவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

ஆக, ஜூடோ பயிற்சிக்கும் கராத்தே பயிற்சிக்கும் கூட
இன்றைக்கு அபாயம் வந்துவிடுமோ என்ற அச்சம் இந்த சட்டத்
தின் மூலமாக ஏற்படுகிறது. இன்னொன்றையும தெரிவித்துக்
கொள்கிறேன். இப்படி ஆயுதம் ஏந்தி அணி வகுத்துச் செல்வது,
டிரில் செய்வது என்பதெல்லாம் சட்டத்திற்கு புறம்பானது என்று
சொன்னால், சினிமா படங்களில் சிலம்பாட்டம் வருகிறதே,
ஆயுதப் பயிற்சி வருகிறதே, அவை தடை செய்யப்படுமா? தடை
செய்யப்பட வேண்டாமா ? ஒரு படத்தை பார்த்து விட்டு,
இன்றைக்கு தவறான போக்குகளில் செய்வதற்கு வாய்ப்பு இருக்
கிறது. அண்மையிலே கூட, ஜெயப்பிரகாஷ் என்னும் நபர், 9
கொலைகளை செய்து விட்டு, அதற்கு காரணம் சொல்கிறபோது
நான் ஒரு படத்தைப் பார்த்து விட்டு, அதிலே வருகிற நிகழ்ச்



1984 மார்ச் 7] [திரு. அ. ரகுமான்கான்]

யை போலச் செய்தேன் என்று வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். எனவே அப்படிப்பட்ட அபாயம் இருக்கிறது. மேலும் இப்படி சிலம்பாட்டப் பயிற்சி செய்வது சட்ட விரோதம் என்று உங்கள் சட்டம் சொல்லிய பிறகு, இந்த சிலம்பாட்டப் பயிற்சிகள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடித்த, தாய்க்குப் பின் தாரம், நாடோடிமன்னன், மந்திரிகுமாரி, மருதநாட்டு இளவரசி, ஆகிய படங்களில் காட்டிய சிலம்பாட்டப் பயிற்சிகளை, சண்டைப் பயிற்சிகளை—இன்றைக்கும் அந்தப் படங்கள் காட்டப்படுவதால் அப்படி காட்டப்பட்டால் அபாயம் வராதா என்று எண்ணிப் பார்த்து—அந்தக் காட்சிகளை நீக்கிவிட்டு போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா, அதற்கு இந்த அரசு என்ன பதில் சொல்கிறது என்கிற நியாயமான சந்தேகத்தைக் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொரு பிரச்னையையும் கொண்டு வருகிறேன். நீங்கள் இககே கொண்டு வந்திருக்கிற சட்டம் மிகப் பயங்கரமான சட்டம். இது சாதாரணமான பூதம் அல்ல. பயங்கரமான பூதம். இந்தச் சட்ட பூதத்தை அனுமதிக்கவே கூடாது. ஏனென்று சொன்னால் யாருடைய கழுத்திலே வேண்டுமானாலும் இது கையை வைக்கக்கூடிய அபாயம் இருக்கிறது. இப்போது தேர்தல் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். நாங்கள் என்ன செய்வோம், எங்கள் கட்சியின் சின்னம் உதய சூரியனை சுவற்றிலே எழுதுவோம். நீங்களும் உங்கள் கட்சியின் சின்னத்தை சுவரிலே எழுதுவீர்கள். பல்வேறு கட்சிகளும் அவரவர்களுடைய தேர்தல் சின்னங்களை சுவற்றிலே எழுதுவார்கள் ஆனால் உங்களுடைய சட்டப்படி சுவற்றிலே எழுதினாலே 3 மாதம் ஜெயில் 500 ரூபாய் அபராதம் என்று இருக்கிறது. அதன்படி இதெல்லாம் சட்ட விரோதமாகக் கருதப்படும். அது மட்டும் அல்ல, சும்மா சொன்னாலே போதும், இன்னாரைக் குறிப்பிட்டு அவர் தான் எழுதத் தூண்டினார் என்று சொன்னாலே போதும், அவர் கைது செய்யப்பட வாய்ப்பு இருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்னொன்றையும தெரிவிக்க விரும்புகிறேன் சுவர்களிலே அரசியல் இயக்கங்கள் தங்களுடைய கருத்துக்களை தங்களுடைய தேர்தல் சின்னங்களை எழுதுவது நடைமுறையாக இருந்து கொண்டிருக்கிறது. உங்கள் கட்சியிலேயும் இது நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது. வசதி வாய்ப்புள்ளவர்கள் வண்ண வண்ண போஸ்டர்களை சுவர்களிலே ஒட்டலாம். ஆனால் வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் அரசியல் இயக்கங்களைச், சேர்ந்தவர்கள், தனி நபர்கள் தங்களுடைய கருத்துக்களை தங்களுடைய தேர்தல் சின்னங்களை சுவர்களிலே ஒட்டினால் அது

அபாயகரமாகப் போய் முடியும் என்ற நிலைமை இருக்கிறது. (குறுக்கீடு) வேறு எதிலே எழுதமுடியும்? எருமைமாட்டின் மீது எழுத முடியாது. நாயின்மீது எழுதமுடியுமா? பாக்கிஸ்தானிலே ஜியாவுல் ஹக் ஆட்சியிலே நாயின்மீது எழுதியதற்காக சர்வாதிகாரி ஜியாவுல் ஹக் இரண்டாயிரம் நாய்களைச் சுட்டுப்போட்டுவிட்டான். ஆகவே, நாய்களுக்கு ஆபத்து வந்துவிடும். ஆகவே இந்தச் சட்டம் மிகவும் பயங்கரமானது.

அதைப்போலவே பிறரைப் போல நடித்தால் 3 மாதம் ஜெயில் ஆட்சியிலே இருக்கக்கூடிய சட்ட அமைச்சர் மாதிரி, மாண்புமிகு அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்களைப்போல் அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப்போல் வேடத்திலே வந்து இந்த ஆட்சியினுடைய தவறுகளைப் பாருங்கள் என்று ஜனநாயகத்திற்குட்பட்டு நாங்கள் ஒரு பிரச்சாரம் செய்தால் அந்த மாதிரி நாடகத்தில் நடித்தால் 3 மாதம் ஜெயில், 500 ரூபாய் அபராதம். ஆகவே இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவரலாமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நான் பேசுகிறேன், மற்றவர்கள் பேசுகிறார்கள், கருத்துக்களைச் சொல்கிற வகையிலே பேசுகிறார்கள், பாடுகிறார்கள் என்றால் கொள்கைகளைப் பரப்புகின்ற விதத்திலே பாடினால், பேசினால் போலீஸ் கமிஷனர் வந்து பொது அமைதிக்கு அது உகந்ததல்ல, கண்ணியமானதல்ல, மொராலிட்டிக்குட்பட்டதல்ல என்று சொல்லி பேசினால், பாடினால் சிறைச்சாலைக்குப் போகவேண்டுமென்ற முறையிலே 3 மாதம் ஜெயில், 500 ரூபாய் அபராதம், என்ற முறையிலே கொண்டுவரப்படுகிறது.

அதைப்போல் கார்ட்டூன் போட்டால் உங்கள் ஆட்சியின் செயல்களைப் பத்திரிகைகளிலே கார்ட்டூன்களாகப் போட்டால் 3 மாதம் ஜெயில், 500 ரூபாய் அபராதம். அதைப்போலவே கண்காட்சி வைத்தால் அதே நிலைமைதான். அதைப்போலவே விளம்பர அட்டைகள் வைத்தால் அதே நிலைமை தான்.

என். ஜி. ஓ. க்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி அரசாங்கத்தைக் கண்டிக்கிறபோது போலீஸ் கமிஷனர் வந்து அது டீசன்ட் ஆக இல்லை, மொராலிட்டிக்கு உகந்ததாக இல்லை, பப்ளிக் ஆர்டருக்கு உடன்பாடானது அல்ல, பப்ளிக் பீஸிற்கு உடன்பாடானது அல்ல என்று சொல்லிவிட்டால் 3 மாதம் ஜெயில் 500 ரூபாய் அபராதம்.





ஆகவே துணை சபாநாயகர் அவர்களே, நான் தங்கள் மூலமாக இந்த சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எவ்வளவு அபாயகரமான பிரிவுகள் இந்தச் சட்டத்திலே இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தி ஆதிக்கம் ஒழிக என்று சொன்னால், எழுதினால் 3 மாதம் ஜெயில், காரணம் ஒரு மொழிக்கு எதிராக டிஸ்ஆர்மோனி உண்டாக்கி விட்டார்கள் என்று கைது செய்யலாம். அது மட்டும் அல்ல, பாடல் இருக்கிறது நம்முடைய நாவலர் அவர்களுக்குத்தெரியும், பாரதிதாசன் அவர்கள் பாடினார்கள்;

"கொலை வாளினை எடுடா, கொடியோர்
செயல் அறவே, உலக ஆளப் பிறந்தபொழுது தான்
உயர் வாழ்வை அடைகிறான், உதவாது இனி
ஒரு தாமதம், உடனே விழித்து எழு தமிழா"

என்ற பாரதிதாசன் பாடலை எழுதினால் 3 மாதம் ஜெயில், காரணம் மொழி அடிப்படையில் டிஸ் ஆர்மோனி ஆகிவிட்டது. கமிஷ்னர் சொன்னால் உள்ளே போகவேண்டியதுதான்.

அது மட்டும் அல்ல, கடவுளை நம்புபவன் முட்டாள், மதம் மக்களுக்கு அடிமை என்று ஐயா கருத்தையோ, மார்க்சிஸ்டு கருத்தையோ சொன்னால் போலீஸ் கமிஷனர் வந்து இப்படிச் சொல்வது மதத்தை புண்படுத்துகிறது, மத வாதிகளுக்கு டிஸ் ஆர்மோனி ஏற்படுத்துகிறது என்று சொன்னால் 3 மாதம் ஜெயில் 500 ரூபாய் அபராதம்.

அது மட்டும் அல்ல, மண்ணின் மைந்தர்கள் தெலுங்கு தேசம் வைத்து இருக்கிறாரே தம்புடுசாரு திரு என். டி. ராமாராவ் அவரைப் போல இந்த மண்ணின் மைந்தர்கள் இந்த மண்ணை ஆள வேண்டும், இந்த மண்ணுக்கு எல்லாம் வேண்டும். தமிழன் எங்கும் இருக்கவேண்டும், எதிலும் இருக்கவேண்டும் என்று சொன்னால் கூட அதுவும் கமிஷனர் சொன்னால் இது வந்து ஒரு வட்டார உணர்வை ஏற்படுத்துகிறது என்று சொல்வார்களானால் 3 மாதம் ஜெயில் என்று இதில் இருக்கிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 7

கடைசியாக மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவும் போட்டுவிட்டு என்ன போட்டு இருக்கிறார்கள் தெரியுமா ? அது மிக மிக வேடிக்கையானது. என்ன வேடிக்கை தெரியுமா ? உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா ? இவ்வளவு சட்டப்பிரிவுகளையும் சொல்லிவிட்டு, தண்டனையையும் சொல்லிவிட்டு சர்க்கார் பார்த்து இந்த சட்டத்தில் யாருக்கு வேண்டுமானாலும் விதி விலக்கு வழங்கலாம். உதாரணமாக நீங்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த தப்புகளைச் செய்தால் இந்தச் சட்டம் உங்களைக் கட்டுப்படுத்தாது, நீங்கள் சொல்லிவிடலாம். இப்படிப்பட்ட ஒரு அபாயம் இருக்கிறது. இதிலே காவல்படையைச் சேர்ந்தவர்களுக்கு விதி விலக்கு, ஊர் காவல் படைக்கு விதி விலக்கு, என். சி. சி. பயிற்சி செய்பவர்களுக்கு விதி விலக்கு, அதுபோல தீ அணைக்கும் படைக்கும் விதி விலக்கு தரப்பட்டிருக்கிறது. நீங்கள் விருமபினால். விதி விலக்கு என்று எந்த போலீஸை சொல்கிறீர்களோ அந்த போலீஸ் கைது செய்ய முடியும் உங்கள் விதி விலக்கில் இருக்க கூடிய அதிகாரம் அதை சொல்கிறது. இதில் என்ன வேடிக்கை என்று கேட்டால் இதுவரைக்கும் இந்த அதிகாரம் சென்னையில் இருக்கக்கூடிய போலீஸ் கமிஷனருக்கு தான் இருந்தது. இப்போது இந்த அதிகாரம் சென்னை போலீஸ் கமிஷனருக்குமட்டும் போதாது தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகளுக்கும் வேண்டும் என்று கேட்கிறீர்கள். நியாயம்தானா ?

(மாலை 4-20)

ஏற்கெனவே அடக்கு முறைகள், பொய் வழக்குகள் இருக்கின்றன. எங்கள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் தாசில்தார் இடத்திலே வாட்சை திருடினார் என்று பொய் கேஸ் போட்டு இருக்கிறீர்கள். அப்படிப்பட்ட போலீஸ் கையில் இந்த அதிகாரத்தைக் கொண்டுபோய் கொடுத்தால் உலக உத்தமர் காந்தியார் உயிரோடு இருந்தால் காந்தியார் கஞ்சா வைத்து இருந்தார் என்று கூட கேஸ் போடுகின்ற அளவுக்கு மோசமான போலீஸ் ராஜ்யம் உருவாகிக் கொண்டு இருக்கக்கூடிய கால கட்டத்தில் போலீஸ் கையில் இந்த அதிகாரத்தை கொண்டுபோய் கொடுக்கலாமா என்று நான் உங்களை பார்த்து கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் அரசியல் சட்டத்திற்கு விரோதமானது. ஜனநாயகத்திற்கு விரோதமானது. எதிர்கட்சிகளுடைய குரல் வளையை நெறிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் இது, இது சர்வாதிகார சட்டம். எனவே இது கிழித்து எறியப்பட வேண்டிய சட்டம். இந்தப் பூதம் ஆயிரம் அடிகள் குழி தோண்டி புதைக்கப்பட வேண்டியது என்று சொல்லி இந்தச் சட்டத்தை கிழித்து எறிகிறேன் மக்கள் சார்பாக.



1984 மார்ச் 7]

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக எல்லோருக்கும் இருக்கக் கூடிய ஒரு ஐயத்தை கேட்க விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூண்டோடு ராஜினாமாச் செய்துவிட்டார்களா அல்லது அவர்கள் வரக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் .

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** அவர்கள் நினைக்கும் போது வருவார்கள்.

*** திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சார்பில் நம்முடைய மாண்புமிகு சட்டம்-தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் தேவைதானா, இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கு என்ன அவசியம் என்று இங்கேயும் வெளியிலேயும் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வருகிற ஒரு சூழ்நிலை ஏன் உருவாக்கப்படுகிறது ? அல்லது அப்படிப்பட்ட சூழ்நிலை ஏன் உருவாகிறது ? அப்படிப்பட்ட நிலைமை ஏன் ஏற்பட்டு இருக்கிறது என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்ப்பார்களானால் இந்தச் சட்டம் கொண்டு வந்ததன் அவசியத்தை அவர்கள் நன்கு உணர்ந்து கொள்வார்கள். நியூட்டன் லா ஒன்று இருக்கிறது. அதில், For every a tion ere is reaction என்று சொல்வார்கள் அதுபோல ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிர் நடவடிக்கை இருப்பது என்பது வாடிக்கையான ஒன்று வழக்கமான ஒன்றாக கருதப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எதிர்க்கட்சிகள் அல்லது தீவிரவாத அமைப்புகள் புதிய புதிய யுக்திகளை கையாண்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகிற போது அதை மட்டும் அது ஒரு ராஜ தந்திரம், அது தேவையான சமயத்திலே எடுக்கப்படுகிற நடவடிக்கை என்று அவர்கள் சொல்கிறபோது அந்த புதிய யுக்திகளின் மூலம் விளைகிற கேடுகளை தடுக்கிற இப்படிப்பட்ட புதிய சட்டம் கொண்டு வருவதை ஏன் எதிர்க்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே இந்த சபையைப் பொறுத்தவரையில் உங்களுடைய பாதுகாப்பை நாங்கள் நாடுகிறோம். இங்கே சபைக்குள் உங்கள் பாதுகாப்பு எங்களுக்கு அவசியமாக இருக்கிறது. ஆனால் வெளியில் உள்ள லட்சோப லட்ச மக்களுக்கு இப்படிப்பட்ட சட்டம் தான் பாதுகாப்பாக அமைந்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்தச் சட்டத்தை ஏதோ

பூதம் என்றும் ஏற்கனவே இருந்த பூதம் போய் புதிய பூதம் வந்திருக்கிறது என்று இங்கே ஒரு விளக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் உங்கள் மூலமாக அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது அவர் பயப்படுவது போல் ஒரு பூதம் அல்ல. . அலாவுதீனின் அற்புத விளக்கிலே வெளி வருகின்ற பூதங்களை அடக்குகிற ஒரு அலாவூதினாக இந்தச் சட்டம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார்கள், இந்தச் சட்டம் வருமானால் கிழவர்கள் தடி ஊன்றிச் சென்றால் அவர்களை போலீஸார் கைது செய்கிற நிலைமை வரும் என்றும், கிழவிகள் தடி ஊன்றிச் சென்றால் அவர்களை போலீசார் கைது செய்கிற நிலைமை இருக்கிறது என்றும் ஒரு தேவையற்ற அபாயத்தை, தேவையற்ற ஒரு கருத்தை இங்கே அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கின்ற காரண-நோக்க விளக்கத்தைப் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் பொது மக்களுக்கு அல்லது அவர்களின் ஒரு பகுதியினருக்கு அச்சத்தையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தி பொது அமைதியைக் குலைக்குமளவிற்கு ஏற்படுமேயானால்தான் இந்தச் சட்டம் வேலை செய்யுமே தவிர, ஏதோ கிழவர்களின் கைகளில் உள்ள கம்புக்காகவோ அல்லது கிழவிகளின் கைகளில் உள்ள கம்புகளுக்காகவோ இந்தச் சட்டம் தன் வேலையைச் செய்யாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உதாரணம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஒரு கத்தியை கூர்க்கா தன்னுடைய இடுப்பிலே வைத்திருந்தால் அது பாதுகாப்புக்காகத்தான். எனவே, கூர்க்கா கத்தி வைத்திருப்பதைப் பார்த்து பொது மக்கள் அச்சப்படவோ அல்லது ஆத்திரப்படவோ மாட்டார்கள். கூர்க்காவின் இடுப்பிலே கத்தி இருந்தால் அது பொது மக்களின் பாதுகாப்புக்காகத்தான் என்று மக்கள் உணர்ந்து கொள்வார்கள். கூர்க்கா இடுப்பில் கத்தி இருப்பதால் அபாயம் என்று கருத மாட்டார்கள். ஆனால், கொலைகாரன் ஜெயப் பிரகாஷின் கைகளில் இருக்கின்ற கத்திக்கும், ஒரு கூர்க்காவின் கைகளில் இருக்கின்ற கத்திக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. என்பதை நாம் உணர வேண்டுமென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே கூர்க்காவினுடைய இடுப்பிலே இருக்கின்ற கத்தி பாதுகாப்புக்காக என்று மக்கள் கருதுவார்கள். கொலையாளியின் கைகளிலே இருக்கின்ற கத்தியைப்



பார்த்துத்தான் மக்களிடத்திலே பீதியும், பயமும் ஏற்படுகிறது. ஆகவே, இந்த வித்தியாசத்தை தரம் பிரித்துப் பார்த்தால் கூர்க்காவின் கைகளில் இருக்கின்ற கத்தி எந்த அளவிற்குப் பாதுகாப்பு என்பது புரியும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். நடிக்கின்றவர்கள் நடிக்கின்றபொழுது அல்லது பேசுகின்றவர்கள் பேசுகின்றபொழுது, மற்றவர்களைப் போன்று பேசுகின்ற பொழுது அதை இது தடை செய்வதாகக் கூறினார்கள். ஆனால் பேசுகிறபோதோ அல்லது நடித்துக் காட்டுகிற போதோ, மற்றவர்களைப் போல பேசிக் காட்டும்பொழுதோ அதைச் சொல்லுகின்ற விதம் இருக்கிறது. சொல்லும் விதத்தில் கண்ணியம் அல்லது ஒழுக்கத்திற்கு விரோதமானதென்று கருதினால் என்று தெளிவாகச் சொல்கிறது. அப்படி யாராவது பேசினால், பொதுக் கூட்டத்தில் பேசினால் அல்லது நாடகமாக நடித்துக் காட்டினால் பொது மக்களிடத்தில் இருந்து கைதட்டல் வருகிறது என்றால் அதை மக்கள் விரும்புகிறார்கள் என்று பொருள்.

ஆனால், திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்வதைப்போல இருக்கவேண்டுமென்றால், திரு. ரகுமான்கான் அவர்களோ அல்லது ரகுமான்கான் அவர்களது ஆதரவாளர்களோ இவ்வாறு செய்யும் பொழுது கையொலிக்குப் பதில் கல்லெறி வருகிறது என்றால் அதை மக்கள் வெறுக்கிறார்கள் என்று பொருள். நடித்துக் காட்டும்பொழுதோ அல்லது சொல்லிக் காட்டும் பொழுதோ மக்கள் விரும்புகிறார்கள் என்றால் கை தட்டல் வரும் அல்லது அவரது பாஷையின்படி திரு. ரகுமான்கான் அவர்கள் நடித்துக் காட்டுகிறார்கள் என்றால் மக்களிடத்திலிருந்து கல்லடிதான் விழும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு நிலைமையைத்தான் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, நான் நடித்தால், நன்றாக இருந்தால் மக்கள் பாராட்டுவார்கள். இல்லையென்றால் கல்லால் அடிப்பார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அது குறித்து எனக்கு வருத்தம் இல்லை. நான் நடிப்பதற்குப் பதிலாக நம்முடைய அருமைச் சகோதரர் அவர்கள் நடித்தால்—அவர் என்னைக் காட்டிலும் நடிப்பாற்றல் மிக்கவர் என்று கருதுகிறேன். அவர் நடிக்கும்பொழுது—அவர் இதே கட்சியில் நிரந்தரமாக இருப்பார் என்று சொல்ல முடியாது, மாறிக்கொண்டே இருப்பார்—நாளைக்கே அவர் மாறி நடித்தால் அவரையும் கைது செய்யும் அபாயம் இருக்கிறது.

[1984 மார்ச் 7

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவரவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல நடித்துப் பழக்கப்பட்டவன் அல்ல ; நடிப்பவன் அல்ல. மாண்பு மிகு உறுப்பினரவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு கட்சியிலிருந்து வேறொரு கட்சிக்கு மாறவில்லை. தேர்தலின்போது சுயேச்சையாகப் போட்டியிட்டு மீண்டும் என்னுடைய கட்சியில் இணைந்தேனே தவிர, வேறு கட்சிக்குப் போனேன் என்று சொல்வது சரியாக இருக்காது.

ஆகவே, இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புவதெல்லாம் எதையும் சொல்கிற விதத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது' என்பதைத்தான் சொன்னேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண் டுமென்றால்கூட, ''வாடா'' என்ற தமிழ்ச சொல்லிருக்கிறது. குழந்தையைப் பார்த்து, அன்போடு, ஆசையோடு, ''வாடா'' என்று அழைக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் ஒரு சண்டைக் காரன் சண்டை போட்டுக்கொண்டே ''வாடா'' சண்டைக்கு என்று சொல்கிறான். இந்த இரண்டுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ''வாடா'' என்ற சொல் ஒன்றேதான். ஆனால் அதைச் சொல்லும் விதத்தில், அதைப் பயன்படுத்தும் விதத்தில், பயன்படுத்துகின்றவர்களைப் பொறுத்து அந்த ''வாடா'' என்ற சொல் வித்தியாசப்படுகிறது. ஒரு குழந்தையை ''வாடா'' என்று அன்போடு, ஆதரவோடு அழைப்பதற்கும் ஒரு சண்டைக் காரன் இன்னொரு சண்டைக்காரனிடம் ''வாடா'' என்று அழைப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, சொல்லும் விதத்தில் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 4-30)

அடுத்து இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ இந்தச் சட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை அடக்கு வதற்கும், ஒடுக்குவதற்கும் தான் என்று மாண்புமிகு உறுப் பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்வது தவறான கருத் தாகும். நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பற்றிப் பத்திரிகையிலே வந்த செய்தியை இங்கே சொல்கிறேன். அவர்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய கலைஞர் கருணா நிதி அவர்கள் திருச்சியிலே ஒரு நிகழ்ச்சிக்குச் செல்கின்றபோது அவருடைய கழகத்தைச் சேர்ந்த நண்பர்களால் தடுக்கப்பட்டு நெரிசலில் அவர் சிக்கி இருந்தபோது அவரை அங்கிருந்து விடுவிக்க முடியாத நிலைமை இருந்தபோது ஒரு போலீஸ்காரர் ஓடிச் சென்று அவரை அப்படியே அலாக்காகத் தூக்கிக் கொண்டு போய் காரில் வைத்தார் என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக் கிறது.



1984 மார்ச் 7] [திரு. செ. செம்மலை]

அதேபோன்று கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு இடத்திலே சென்று கொண்டிருந்தபோது 200 தி.மு.க. தொண்டர்கள் அவரை வழிமறித்து ஒரு இடத்திலே கொடி ஏற்றச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு அவர்கள் திரு. மதியழகன் அவர்கள் மறைந்த இந்த துக்க நாளிலே நான் கொடி ஏற்ற மாட்டேன் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அவர் களுடைய காரை மறித்து, அடித்து சேதப்படுத்தி இருக்கிறார்கள். அப்போதெல்லாம் போலீஸ்தான் அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கட மைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, ஏதோ நாட்டிலே....

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொண்டர்கள் ஆர்வம் மிகுதியால் சில தவறுகள் செய்யக் கூடும். ஆகவே ஆர்வ மிகுதியால் செய்வது என்பது வேறு. ஆனால் கட்சியிலே கோஷ்டி காட்டி ஒரு எம்.எல்.ஏ-ஐ அடிப்பது என்பது வேறு. நான் சேலத்திலே நடந்ததைச் சொல்ல வில்லை. பொதுவாக நடைபெறுகின்ற பல்வேறு சம்பவங்களைத் தான் நான் சொல்கிறேன்.

திரு. செ. செம்மலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ அவர்களுடைய கட்சித் தலைவர்கள் எல்லாம் தொண்டர்களின் பாதுகாப்பில்தான் அரசியலை நடத்த முடியும் என்ற நிலைமையை புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு வைக்கவில்லை. அவர்களுடைய கழகத்தின் தலைவர் எங்கெங்கு சென்றாலும் தக்க பாதுகாப்பினை அளித்து வருகிறார் என்பதை நாடறியும். உதாரணமாக திருச்செந்தூருக்கு நடை பயணம் செல்கின்றபோது, அதிலே கலைஞர் அவர்கள் நடைபயணம் மேற்கொண்ட போது, பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மை யார் மதுரைக்கு வந்தபோது அவர் பிரதமராக இல்லாத நேரத் திலும் எந்த அளவுக்கு போலீஸ் கொடுக்கப்பட்டதோ, அதே போல்தான் போலீஸ் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. ஆகவே 'எங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு இல்லை' என்ற தொனியில் 'எங்களுக்கு கட்சித் தொண்டர்கள்தான் பாதுகாப்பு தருகிறார் கள்' என்று இப்படிப்பட்ட ஒரு புதிய நிலைமையை உருவாக்கி அரசுக்கு ஒரு சங்கடத்தைத் தயவு செய்து ஏற்படுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [1984 மார்ச் 7

ஏனென்றால் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் வன்முறை யைத் தூண்டுவதாக அமைந்துவிடக் கூடும். அப்படிப்பட்ட நிலைமையை மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களே விரும்பவில்லை என்று சொன்னாலும் ஆயிரக்கணக் கான மற்ற தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அதன் காரணமாக ஒரு மோசமான நிலைமை உருவாகிவிடக்கூடும். அப்படிப்பட்ட நிலைமை வந்துவிடும். பல்வேறு நிகழ்ச்சிகளை நாம் பார்த்திருக்கிறோம். காயப்படுத்தப்படுகின்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் கண்ணாலே பார்த் திருக்கிறோம். திருமதி இந்திராகாந்தி அவர்கள் மதுரைக்கு வந்தபோது அவருக்கு நேர்ந்த கதி என்ன என்பதெல்லாம் நமக்குத் தெரியும். எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் ஏற்கெனவே சொன்னதுபோல் தீவிரவாதிகள், புதிய புதிய யுக்தி களைக் கையாண்டு புதிய நடவடிக்கைகளையும், சட்டவிரோத மான நடவடிக்கைகளையும் எடுக்கின்றபோது, அவற்றிலே ஈடு படுகின்றபோது இப்படிப்பட்ட சட்டம் நிச்சயமாகத் தேவை. எனவே இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இது பொது மக்களின் நன்மையைக் கருதித்தான் கொண்டுவரப்பட்டிருக் கின்றது. தேவையான நேரத்தில் பாதுகாப்பிற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்டம்தான் இது என்பதை எடுத்துச் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன்.

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய சபையின் துணைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையிலே நிறைவேற்றப் படுவதகற்காக வைக்கப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் கடுமையாக எதிர்த்துத் தீரவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோம். ஏனென் றால் இந்தச் சட்டம் உண்மையிலேயே அபாயங்களை விளை விக்கக்கூடிய ஒரு சட்டம். ஏதோ சில தனியார் இடங்களில் சில தீவிரவாதிகள் ஆயுதம் தாங்கி கவாத்துப் பயிற்சி, உடற் பயிற்சி போன்றவற்றில் ஈடுபடுவது பொதுமக்களுக்கு அல்லது அவர்களின் ஒரு பகுதியினருக்கு ஆபத்தையும், பாதுகாப்பின் மையையும் ஏற்படுத்தி பொது நன்மையைக் குலைக்கும்படியா நிலைமை ஏற்படுவதால் அதைத் தடுப்பதற்காகத்தான் இந்தச்



1984 மார்ச் 7] [திரு. கு. ரமணி]

சட்டம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அது உண்மை என்று நாங்கள் நம்பவில்லை. அது உண்மை அல்ல என்பதை நாங்கள் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

இந்த சென்னை நகரிலே இருக்கின்ற போலீஸ் கமிஷனருக்கும் மற்றும் மாவட்டங்களிலே இருக்கின்ற போலீஸ் அதிகாரிகளுக்கும் எல்லையற்ற அதிகாரத்தை வழங்குவதற்கான நிலைமை. ஏற் படுத்தப்படுகிறது. அதாவது பொது ஜன இயக்கங்களை அடக்கு வதற்கும், நசுக்குவதற்கும் எல்லையற்ற அதிகாரங்களை வழங்கும் படியான ஒரு சட்டமாக இது இங்கே கொண்டுவரப்பட்டிருக் கின்றது. 'அன்லிமிடெட் பவர்' அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தினுடைய விதிகளிலேயே அது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனால்தான் நாம் சொல்கிறோம். இது ஜனநாயகத்தினுடைய குரல்வளையை நெரிக்கக்கூடிய ஒரு சட்டம் என்று. நீங்கள் இதையெல்லாம் ஒரு சட்டத்தின் மூலம் அறிவித்திருப்பதைப் பார்ப்பதுதான் எங்களுக்கு ஒரு பரிதாபமான நிலையாக இருக்கிறது. இந்த நாட்டினுடைய விடுதலை இயக்கத்திலே போராடிய மக்கள் எவ்வளவு கொடுமையான அடக்கு முறைகளை அனுபவித்திருக் கிறார்கள் ? எந்த, எந்த சிறைக் கூடங்களிலே அவர்கள் அடைக் கப்பட்டார்கள் ? அண்மையிலே கூட நாங்கள் அந்தமானுக்குச் சென்றபொழுது, பிரிட்டிஷார் உருவாக்கி வைத்த சிறைச்சா லையை நாங்கள் பார்த்தோம். எப்படி கொடுமையான சிறையை அவர்கள் உண்டாக்கி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது தெரிகிறது. எந்தவிதமான பிரஜா உரிமையும் அனுமதிக்கப்பட வில்லை. ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய எல்லா மனித உரிமைகளையும் பறிக்கக்கூடிய அடக்குமுறைச் சட்ட்ங்களைக் கொண்டுதான் இந்த நாட்டை ஆண்டார்கள். அதிலிருந்து விடுதலை பெறத்தான் இந்திய நாட்டு மக்கள் அத்தனை பேரும் போராடினார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் உங்க ளுக்கு ஞாபகம் இருக்க வேண்டும். எந்த அளவுக்கு பொது இயக்கங்களைத் தாக்குகின்ற, அவைகளின் உரிமைகைளைப் பறிக்கின்ற, குரல்களை நசுக்குகின்ற அதிகாரங்களை போலீசார் கையிலே கொடுத்து விடலாம் என்பதை நீங்கள் 100 தரம் சிந்தித்து இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சிந்தனையோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததாக நாங்கள் கருதவில்லை.

[திரு. கு. ரமணி] [1984 மார்ச் 7

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், விவசாயத் தொழிலாளர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள், வாலிபர் சங்கங்கள், மற்றும் உள்ள பல பொது ஜன ஸ்தாபனங்கள் இவர்கள் நடத்துகின்ற தொண்டர் படைகளுடைய ஊர்வலங்கள் அல்லது அவர்கள் தொண்டர் படைக்குப் பயிற்சி கொடுப்பது அல்லது தொண்டர் படையை வைப்பது, அல்லது வேறு விதமான ஆர்பாட்டங்கள் போன்றவற்றில் அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையையும் இந்தச் சட்டத்தினுடைய கட்டுக் கோப்புகுள்ளே கொண்டு வந்துவிடலாம். அதற்கான வசதி இந்தச் சட்டத்திற்குள்ளே இருக்கிறது. முதலாவது இந்தச் சட்டத்தை இந்த நிலைமையில் நீங்கள் நிறைவேற்றினால் அது நிற்குமா என்பது கூட சிந்திக்க வேண்டிவரும். இந்தச் சட்டம் நிற்கக் கூடிய தன்மையில் இருக்காது. அரசியல் சட்டம் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அடிப்படை உரிமைகள் 19-வது ஷரத்தில் கொடுத்திருக்கும்படியான அந்த எல்லைக்குள் உட்பட்டு இது நிற்காது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். இது நிற்கக்கூடியது அல்ல என்பதை இன்றைக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம். ஆகவே, அப்படிப்பட்ட நோக்கத்தோடு இந்தச் சட்டம் இருக்கிறது. நீங்கள் கொடுத்திருக்கிற காரண நோக்க விளக்கம் எல்லாம் தீவிரவாதிகளுடைய பயமுறுத்தலுக்கு மக்கள் அச்சப்படுகிறார்கள் என்பது. ஆனால் இது தீவிரவாதிகளுக்கு அல்ல, ஜனநாயக முறையில் சமுதாய முன்னேற்றத்திற்குப் போராடக் கூடிய சகல கட்சிகள், சங்கங்களுக்கும் அச்சத்தைக் கொடுக்கக்கூடிய சட்டம். அதுதான் உண்மை. அதைப் புரிந்து கொள்ளவேண்டும். 1888ஆம் வருஷத்தில் போலீஸ் சட்டத்தின்படி சென்னை மாநகர சமிஷனருக்கும் 1859 ஆம் ஆண்டு போலீஸ் சட்டத்தின்படி தமிழ் நாட்டின் மற்ற மாவட்டங்களிலே இருக்கிற போலீஸ் அதிகாரிகளுக்கும்-இந்தக் காவல் சட்டங்களின்படி-நீங்கள் அதிகாரத்தைக் கொடுப்பதற்கு ஒரு புதிய ஷரத்தைக் கொண்டு வரக்கூடிய திருத்தம் தான் இது. அந்தப் புதிய ஷரத்திலே எந்த ஒரு இடத்திலும் அது பொது இடமானாலும் சரி, தனியார் இடமானாலும் சரி,



984 மார்ச் 7] [திரு. கு. ரமணி]

அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஆயுதங்களுடன் அணி வகுப்பு பயிற்சி அல்லது ஆயுதங்களுடன் பயிற்சி நடத்துவது, அவற்றில் பங்கு கொள்வது இன்னும் ஊர்வலத்தில் ஆயுதங்களை எடுத்துச் செல்வது. இப்படி இதில் போடப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆயுதங்களை வைத்து ஒரு மனிதன் இந்த நாட்டிலே நடப்பதற்கு — அதாவது இன்ன, இன்ன ஆயுதங்களை, எவ்வளவு பெரிய ஆயுதங்களை, என்ன, என்ன தன்மை உள்ள ஆயுதங்களை வைத்து இந்த நாட்டிலே மனிதன் நடக்கலாம் என்று இருக்கும்படியான அம்சங்கள் முழுவதற்கும் நாட்டிலே வேறு பல சட்டங்கள் இருக்கின்றன. ஆயுதச் சட்டங்கள் இருக்கின்றன. வேறு கிரிமினல் புரஸீஜர் கோட் போன்ற சட்டங்கள் இருக்கின்றன. என்ன, என்ன முறையில், எந்த எந்த நடவடிக்கைளிலே ஈடுபடும்போது அவர்கள் ஆயுதங்கள் வைத்து கொள்ளலாமா, வைத்துக் கொள்ளக் கூடாதா என்பதற்கெல்லாம் இந்த நாட்டிலே இருக்கும்படியான சட்டங்களிலே ஷரத்துக்கள் இருக்கின்றன.

(மாலை 4-40)

இதெல்லாம் ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல நம்மை முன்னால் ஆண்ட பிரிட்டிஷ்காரர்கள். அதுமட்டுமல்லாமல் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் 35 ஆண்டுகளில் எவ்வளவு சட்டங்களை அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். ஆகவே, அவை எல்லாம் போதாது என்று நினைத்து நீங்கள் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது இவ்வளவையும் தாண்டி நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. இது உண்மையிலேயே ஜனநாயகத் தன்மையில் நம்பிக்கைக் கொண்டு நடக்கின்ற ஒரு உறுதியான ஆட்சியினுடைய அரசாங்கத்திலே இப்படிப்பட்ட சட்டம் வராது என்பதுதான் என்னுடைய கருத்து. நாடு முழுவதும் பல்வேறு கிளர்ச்சிகள் வளர்ந்து வருகின்றன. விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், உள்பட இன்றைக்கு கிளர்ச்சிகளில், போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அவர்களுடைய போராட்டங்கள், நடவடிக்கைகள், ஊர்வலங்களை தடைசெய்வதற்கு சகலவிதமான ஏற்பாடுகளும் இந்தச் சட்டத்திலே விஸ்தரித்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு முதலில்,

[திரு. கு. ரமணி] [1984 மார்ச்

சொல்லும்போது ஆயுதம், ஆயுதம் தாங்கிய பயிற்சி என்று சொல்லப்படுகின்றது. ஆகவே ஆயுதத்தை தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் என்று சாதாரண மககள் எண்ணிவிடலாம் மதிப்பிற்குரிய திரு. செம்மலை அவர்கள் பேசுகின்ற போதும் கூட அப்படித்தான் பேசினார்கள். ஆனால் உண்மையிலேயே இந்தச் சட்டத்திற்குள்ளே இருக்கின்ற விஷயம் அவ்வளவு தான் என் பதை பார்க்க வேண்டும். இந்தச் சட்டம் மக்களுடைய பிரஜா உரிமையை பறிக்கின்ற சட்டம், சாதாரண உரிமைகளை புராஹிபிட் பண்ணுகிறது. தடை செய்கிற அந்த அதிகாரம் இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்ச் சட்டத்தின் பி(?) பிரிவில் என்ன சொல்லுகிறார்கள். சைகைக் குறிப்புகளை பயன் படுத்துவதையும் அல்லது ஜாடை காட்டுவது— ஆயுதத்தாலேயா ஜாடை காட்டுவார்கள் ? பிறகு மற்றவர்களைப் போல நடித்துக் காட்டுவது, இங்கே சினிமா பாணியிலே தான் பேச்சு வந்திருக் கிறது. நான் அதற்கு வரவில்லை. நான் என்ன சொல்ல விரும்பு கிறேன் என்றால் ஒரு கொடிய நிலப்பிரபுவை ஒரு விவசாயத் தொழிலாளர் சங்கத்தை சேர்ந்தவர்கள் கொடியவன் என்று சித்தரித்துக் காட்டி நடித்தால் உங்களுடைய சட்டம் அவர்கள் மீது பாயாதா ? பாயாது என்பதற்கு இதிலே எங்கே இடம் இருக்கிறது ? அதேபோல, சொற்பொழிவுகள் அல்லது பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ள ஒலி நாடாக்கள் இவைகளை உபயோகப் படுத்தக்கூடாது. ஒருவன் பேசுகின்றபோது பேசி விடலாம். பேசுவதே சட்ட விரோதம் என்றால், சி.ஐ.டி. இலாக்காவினர் இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பை தயார் செய்து சட்ட விரோதமாக பேசினார்கள் என்று கோர்ட்டிலே கொண்டு போய் நிறுத்தி தண்டனை கொடுங்கள். பேசிய பேச்சை டேப் செய்து அதை இங்கே போட்டால் அது சட்ட விரோதம். அது மாதிரி ஒலி தட்டுகள் அல்லது ஏனைய கருவிகளை உபயோகப்படுத்துவது சட்ட விரோதம். இப்படி பார்த்தால் லவுட்—ஸ்பீக்கர் கூட மிச்சம் இருக்குமா என்பது சந்தேகம். சகல ஒலி கொடுக்கக் கூடிய கருவிகள் ஒலி தட்டுகள், நாடாக்கள் எதுவாக இருந்தாலும் சரி, அவைகள் எல்லாம் கமிஷனர் தடை செய்யலாம். தி கமிஷனர் கேன் புரொகிபிட் இட். இது ஆயுதம் சம்பந்தப்பட்ட விஷயமா ? அல்லது இந்த ஒலி தட்டுகள், நாடாக்களில் உள்ள பேச்சுக்களின் மூலமாக ஆயுதம் தாங்கி கலகம் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள் ; அந்தச் சூழ்நிலையை அவர்கள் உருவாக்கு கிறார்கள் என்று அப்படி கலகத்தைத் தூண்டுகிற பேச்சுஎன்று நீங்க்ளாக சிந்தனை செய்து கொண்டு அப்படித்தான் இந்தப் பேச்சுக்கள் இருக்குமென்று போட்டிருக்கிறீர்களா ? இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன.



984 மார்ச் 7] [திரு. கு. ரமணி]

அடுத்து என்னென்ன இடங்களுக்கு இந்தச் சட்டம் விஸ்தரித் துச் செல்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதே ' பி ' பிரிவிலே (2) உள்பிரிவு என்ன சொல்கிறது என்றால், படங்கள், சின்னங்கள், விளம்பர அட்டைகள் அடையாளங்கள், சித்திரங்கள் அல்லது வேறோர் காட்சிப் பொருள்கள் தயாரிப் பதை தடை செய்யலாம். பொதுவாக கட்சிகள் தங்களுக்கென்று சின்னங்களை வைத்துக் கொள்ளலாம். ஸ்தாபனங்கள் தங்க ளுடைய சின்னங்களைப் பயன்படுத்தலாம் என்ற உரிமையுள்ளது.

சின்னங்கள், சித்திரங்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு என்ன வரையறை கொடுக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன். சித்திரம் என்கின்றபோது ஆயுதம் தாங்கிய சித்திரம் எழுதக் கூடாது என்று சொல்லலாம். அப்படி யானால் ஒரு கடவுள் சித்திரத்தைக் கூட யாரும் போடமுடியாது. அத்தனை கடவுளும் பல்வேறு விதமான ஆயுதங்களை கையில் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். சூலாயுதம், சக்ராயுதம், உலக்கை, மண்வெட்டி, என்று சகலத்தையும் வைத்துக் கொண்டு இருப்பதால் அவர்களைப் பற்றிய சித்திரம் கூட யாரும் எழுத முடியாது. உங்களுடைய சட்டம் இப்படி நினைப்பதற்கும் வழி வகை செய்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட சித்திரங்களைக் காட்சிப் பொருட்களாக பொருட்காட்சியில் வைத்தால்கூட போலீஸ் அங்கே போகலாம். நான் விளையாட்டுக்காகச் சொல்லவில்லை. நீங்களும் விளை யாட்டுக்காக இதைக் கொண்டுவரவில்லை. நீங்கள் கொண்டு வந்து இருக்கும் சட்டம் அடிப்படை ஜனநாயக உரிமைக்கு அஸ்தி வாரத்தை உடைக்கும் இடத்திற்குப் போய் இருக்கிறது. இப் படிப்பட்ட ஒரு அதிகாரத்தை போலீஸ் அதிகாரிகளின் கையில் ஒப்படைக்கிறீர்கள். இப்படிப்பட்ட தடை, இவற்றை எக்சிபிட் பண்ணுகிறவர்களுக்கு மட்டும் அல்ல, இதை தயாரித்து அளித்த வர்களுக்கும் பொருந்தும். அங்கேயும் போலீஸ் ரெய்டு செய்து பார்க்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் முழுவதும் இதற்குள்ளே வருகிறது. இதையெல் லாம் கமிஷனர் பார்த்து எழுத்து மூலமாக உத்தரவைப் போட்டு இந்தச் சட்டப்பிரிவுகளின் படி அவற்றைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கலாம். அவர்களைக் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்று தண்டனை வாங்கிக் கொடுக்கலாம். அந்த தண்டனை ஆறு மாத கால அளவு வரை சிறைத் தண்டனையும், ரூபாய் இரண்டாயிரம்வரை அபராதமும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக 73-ஏ என்ற ஒரு பிரிவை புதிதாகச் சேர்த்து இருக்கிறீர்கள். அது மிகவும் கொடுமையான ஒரு பிரிவு. அட்ரோஷீயஸ். இதிலே பொது வழியாக உள்ளதும் அல்லது பொது வழியாக இல்லாததும் பொதுமக்கள் செல்வதற்கு அனு மதிக்கப்பட்டுள்ளதுமான சாலை அல்லது தெரு வழியில் எதை யாகிலும் எழுதினால் அல்லது பிறவகையில் அடையாளமிட்டா லும், தண்டனைக்குரியவைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

சாதாரணமாக ஒருவனுக்கு என்ன பைத்தியமா தெருவில் எழுதுவதற்கு. எதற்காக எழுதுகிறார்கள். இன்றைக்கு ஏழை எளிய மக்கள் அதிகப் பணம் செலவழித்து விளம்பரம் செய்ய முடியாதவர்கள் தங்கள் போராட்டங்கள், ஊர்வலங்கள், போனஸ் கோரிக்கைகள், சம்பளக் கோரிக்கைகள் ஆகியவற்றை நடந்து செல்லக்கூடிய மக்கள் பார்த்து அறிந்து கொள்ளட்டும் என்று எழுதுகிறார்கள். இப்படி ஏதாவது எழுதினால் அதுகூட ஒரு தண்டனைக்குரிய குற்றமா? ஆயுதம் தாங்கிய சித்திரம் எழுதினால் தடை என்று சொன்னதோடு நிற்காமல். இப்படி ஏழை எளிய மக்கள் செய்கிற விளம்பரங்களையும் தடை செய்கின்ற அளவிற்கு வந்துவிட்டீர்கள்.

அதற்கு பிறகு சுவற்றில் ஏதாவது எழுதினால், அதற்கும் தண்டனை, சுவற்றில் எழுதுவது என்பது பரம்பரை பரம்பரையாக செய்யப்பட்டு வருகிற ஒரு விளம்பரம் ஆகும். ஒரு கூட்டம் நடத்துவதைப் பற்றி சுவற்றில் எழுதுவதைக்கூட தடை செய்ய வேண்டுமா? உங்கள் மாதிரி இலட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் பணத்தை சேர்த்து வைத்துக்கொண்டு சுவர் முழுவதும் கவர் செய்கிற மாதிரி கலர் போஸ்டர் அடிக்க எந்தக் கட்சியால் எந்தச் சங்கத்தால் எந்த ஸ்தாபனத்தால் முடியும்?

பணவசதி இல்லாதவர்கள் சுவற்றில் எழுதுகிறார்கள். அப்படி சுவற்றில் எழுதுவதை தடை செய்தால் கடைசியில் அவர்கள் முதுகில் எழுதி வைத்துக் கொண்டுதான் சுற்றவேண்டிவரும். கையில் காசு ஜாஸ்தியாக இல்லாதகாரணத்தினால்தான் விளம்பரங்களை ரோடில் எழுதி வைக்கிறார்கள். இப்படி விளம்பரம் எழுதினால் அதை தடை செய்வது என்ன நியாயம்? இதைக் கேட்டால் ஏதாவது வாதம் சொல்வீர்கள். ஆயுதம் தாங்கிய பயிற்சி பெற்றவர்கள் பல தவறான காரியத்தைச் செய்கிறார்கள். அவர்களுக்காகக் கொண்டு வந்தோம் என்று சொல்வீர்கள். அப்படி செய்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள். அதற்காக சுவற்றில் எழுதக் கூடாது என்று சொல்லக்கூடாது. அது மட்டுமல்ல, சுவற்றில் யார் எழுதச் சொன்னார்களோ அவர்களுக்கும் ஐநூறு ரூபாய்க்கு மிகாத அபராதம் அல்லது மூன்று மாத அளவு வரை சிறைத் தண்டனை அல்லது இவ்விரண்டும் விதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

(மாலை 4-50)

பழமொழி ஒன்று சொல்வார்கள். "தென்னை மரத்தில் தேள் கொட்டி, பனை மரத்தில் நெறி கட்டியது" என்று சொல்வார்கள். அந்த மாதிரியாகத்தான் இந்தச் சட்டம் இருக்கிறது. போலீசுக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால், அவரைத் தேடிப்பிடித்து, நீதான் எழுதினாய், இது சட்ட விரோதம் அல்லது நீ ஒருவரை எழுதச் சொன்னாய், அது சட்ட விரோதம் என்று கூறி அவரை பிடித்துக் கொண்டுபோய், ஜெயிலிலே



போட்டு விடுவார்கள், இந்தச் சட்டத்தின்படி. சுவரிலே எழுதினால், எழுதச் சொன்னால், அடையாளம் இடுதல், அடையாளம் இடச் செய்தல் என்று இப்படி எல்லாம் சொல்லி, காற்று புகுகிற சந்து எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் இந்த போலீஸ் சட்டம் புகுந்திருக்கின்றது. ஒரு இடம் பாக்கியில்லை. அதற்குத் தண்டனை 500 ரூபாய் அபராதம் அல்லது 3 மாதம் ஜெயில் அல்லது இரண்டும் சேர்த்து. இந்த முறையில் இந்தச் சட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்.

இந்தச் சட்டத்தை ஏன் கொண்டுவந்திருக்கிறீர்கள் என்பது அமைச்சருக்குத் தெரியும். ஏன், அமைச்சரவைக்கும் தெரிந்துதானே கொண்டு வந்திருக்கிறீர்கள். ப்ரோஹிபிட்—தடை செய்வது என்பது பற்றி அரசியல் சட்டத்தினுடைய 3 ஆவது பிரிவில், 19 ஆவது ஷரத்தில் தரப்பட்டுள்ள மனிதனுடைய அடிப்படை உரிமை அதாவது ஃபண்டமென்டல் ரைட்ஸ்' பாதிக்கப்படும் தன்மையில் இருக்கிறது.

Only you can impose, "reasonable restrictions". You cannot go beyond that.

உரிமை பாதிக்கப்படுகிற மாதிரி இது தடை செய்வது ஆகும். அப்படி தடை விதிக்க அதிகாரமில்லை.

"Instead, this amendment gives the power to. Police Commissioner and Police Officers to prohibit ......"

இந்தச் சட்டம் எப்படி நியாயம் என்று சொல்கிறீர்கள்? இது எப்படி ஜனநாயகம் என்று சொல்கிறீர்கள்? ஏதாவது குறிப்பிட்ட அரசியல் கட்சிகளுக்கும் உங்களுக்கும் சண்டை இருக்கலாம், தகராறு இருக்கலாம். அதற்காக இப்படி ஒரு சட்டம் கொண்டுவரக்கூடாது. நாடு முழுவதும் இன்று எப்படி இருக்கிறது என்ற கண்ணோட்டத்தில் காரியங்கள் செய்யப்பட வேண்டும். 4½ கோடி மக்கள் மீது ஒரு சட்டத்தைக் கொண்டு வரும்போது நன்றாக யோசனை செய்து கொண்டுவரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு படுமோசமான அரசியல் சட்டத்தின் 19-வது சரத்தை மீறி செய்யப்படுகின்ற ஒரு சட்டத்தை நிச்சயமாக கொண்டுவரக்கூடாது. இந்தச் சட்டம் நிச்சயமாக நிற்காது. நிற்க முடியாது. இதை நிறைவேற்றுவதற்கு இந்த நாட்டு மக்கள் விடக்கூடாது.

இதற்கு முன்னால் பல சட்டங்களை இப்படிப் போட்டிருக்கிறீர்கள். விசாரணை இல்லாமல் கைது செய்து சிறையில் போடும் சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். மத்திய சர்க்காரை பின்பற்றி அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். வேண்டாதவர்களைப் பிடித்து ஜெயிலில் போடுவதற்கு 'ரௌடிகளை'ப் பிடித்து ஜெயிலில் போடுவதற்கு என்ற பேரால் ஒரு சட்டத்தை கொண்டு வந்தீர்கள். தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்துகிறார்கள்.

[திரு. கு. ரமணி] [1984 மார்ச் 6

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஊர்வலத்திற்குப் பக்கத்திலே பஸ், லாரி வந்தால் செங்கலை எடுத்துப் போடுவார்கள் மக்கள் மீது என்று நினைத்து, 'செங்கல்' என்ற வார்த்தையைப் போட்டே ஒரு தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். ஆகவே, இந்த அரசாங்கத்தின் கண்ணோட்டமும் கொள்கையும் ஒரு சுற்று அல்ல பல சுற்றுகள் சுற்றி வந்து ஜனநாயக விரோதப் பாதையில் கால் வைத்திருக்கிறது. அந்தவகையிலே நீங்கள் இன்றைக்கு உச்சக் கட்டத்திற்கு போயிருக்கிறீர்கள். நீங்கள் இதற்கு என்ன ஜிகினா வேலை செய்தாலும், மேல் பூச்சு பூசினாலும் உண்மையிலே இதனுடைய சாராம்சம் என்னவென்றால் எதிர்காலத்தில் கோடிக் கணக்கான மக்கள்—விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஏன் இன்றைக்கு போலீஸ்காரர்களே சங்கம் வைத்து போராடுகிற நிலைக்கு வந்திருக்கிறார்கள்; அப்படிப்பட்ட போலீஸ் படையில் இருக்கிறவர்கள்—நாட்டிலே போராட்டம் நடத்தும் நிலைமை வளர்ந்து வரக்கூடிய நேரத்தில் அவர்களை நசுக்குவதற்காக, தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக ஒரு ஆயுதம் என்ற பேரால் இது இருக்கிறது. இதற்கு மேல் பூச்சாக மக்களுக்கு பாதுகாப்பு என்று சொல்லி, வேறு பல வார்த்தைகளைச் சொல்லி, அதுதான் காரணம் என்று சொல்லி, நோக்கம் என்று சொல்லி, ஒரு பொது ஜன இயக்கத்தைத் தடைசெய்வதற்கு கொண்டுவரும் ஒரு மோசமான சட்டம் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே இந்த நிலையில் எங்கள் கட்சியின் சார்பிலே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தச் சட்டத்தை பாசாக்க கூடாது; இந்தச் சட்டத்தை நீங்கள் வாபஸ் வாங்குங்கள். ஏற்கெனவே நீங்கள் கொண்டுவந்த சட்டத்தை, நாம் எல்லாம் பேசி, வேண்டாம் என்று சொல்லியிருக்கிறோம். அப்போது நீங்கள் விட்டுவிடலாம் என்று யோசனை செய்தீர்கள். இப்போது மீண்டும் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது தேவையில்லாத ஒரு சட்டம். ஆகவே இதை நீங்கள் வாபஸ் வாங்குங்கள். இந்தச் சட்டத்தை நூற்றுக்கு நூறு சதவீதம் நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. செ. சிவசாமி: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த சட்டமானது கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்டது. இந்த ஆண்டு மீண்டும் தலை காட்டியிருக்கிறது. இப்போது தான் மாசிமாதம். தமிழ்நாடு முழுவதும் பேய்கள் எல்லாம் பேய் ஆட்டம் ஆடின. அதைப் போலவே பேய் ஆட்டத்திற்கு இன்றைக்குப் புதிய சட்டத்தை கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏற்கெனவே பேய் சட்டம், கறுப்புச் சட்டம், ஆபத்தான சட்டம், ஜனங்களுக்கு ஒவ்வாத சட்டம், வேண்டாத சட்டம், ஜனநாயகத்திற்கு குழி தோண்டும் சட்டம். இப்படிப்



1984 மார்ச் 7] [திரு. செ. சிவசாமி]

பட்ட சட்டம் கைவிடப்படவேண்டுமென்று கடந்த ஆண்டிலேயே சொல்லப்பட்டது. பேயானது சிறிது காலம் படுத்திருந்தது. இப்போது மீண்டும் எழுந்து, நமது சட்ட அமைச்சர் மூலமாக கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்தை, வன்மையாகவும் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கடுமையாகவும் எதிர்க்கிறேன். இந்தச் சட்டத்தை திரும்ப திரும்ப கொண்டுவருகிறீர்கள். உதாரணமாக டேப் ரெக்கார்டர்களைப் போடுவது குற்றம் என்று சொல்கிறீர்கள். டேப் ரெக்கார்டர்களை நீங்கள் போட்டுக்கொள்ளலாம். எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் போட்டால் அது குற்றமாக ஆகிவிடுகிறது. சுவற்றில் எழுதுவது குற்றம் என்று சொல்லப்படுகிறது. சுவற்றில் எழுதாமல்....

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டு கட்சி அந்தப் பேய் இருப்பதாக நம்புகிறதா? பேய் இருக்கிறது என்பதை விளக்குவாரா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. செ. சிவசாமி: கம்யூனிஸ்டு கட்சி நம்பவில்லை. ஆனால் அதே நேரத்திலே, தமிழகம் முழுவதும் மாசியில் ஆடப்பட்டதை நண்பர் அவர்களே பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அதைப்போன்ற நிலைமை இன்று தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, பேய் ஆளும் சட்டம் இல்லை இது. இந்தச் சட்டம் சமூக விரோதத் தன்மையை ஓட்டும் சட்டம் என நீங்கள் கருதவேண்டும்.

திரு. செ. சிவசாமி: சமூக சீர்திருத்த சட்டம் என்று சொல்லிக் கொண்டே இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை கொண்டு வருவதை நிச்சயமாக தமிழக மக்கள் விரும்ப மாட்டார்கள். எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கு கொண்டுவரப்பட்ட சட்டம். எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதற்கு கொண்டுவரப்பட்ட சட்டம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சுவர்களில் எழுதக் கூடாது. ஏன் கடந்த காலத்திலே நீங்கள் எழுதவில்லையா? காங்கிரஸ் கட்சி காலத்தில் எழுதவில்லையா? திராவிட முன்னேற்றக் கழக காலத்தில் எழுதவில்லையா? நீங்கள் 8 ஆண்டுகளாக சுவர்களில் எழுதவில்லையா? அதனால் என்ன ஆபத்து வந்தது, என்ன கேடு வந்தது, என்ன மோசம் வந்துவிட்டது? ஏன் எழுதக் கூடாது? எதற்காக புதியசட்டம் கொண்டுவந்திருக்கிறீர்கள் என்றே எனக்கு புரியவில்லை. ஆனால் அதே நேரத்திலே புதிய சட்டங்

[திரு செ. சிவசாமி] [1984 மார்ச் 7

களைக் கொண்டுவருகிறீர்களே. நிச்சயமாக இப்படிப்பட்ட
புதிய சட்டங்கள் ஜனநாயகத்தை குலைத்துவிடும். அடக்ம்
விடும். ஆனால் அத்தனையும் உடைத்து எறிந்து மேலு
மேலும் ஜனநாயக வளர்ச்சியில் இந்தச் சட்டங்கள் அழிக்கப்பட்
விடும். நிச்சயமாக இன்று தமிழகம் மட்டும் அல்ல, இந்தியா
வில் மட்டுமல்ல, உலக ரீதியில் பார்க்கலாம். எங்கெல்லாம்
இந்தச் சட்டத்தின் மூலம் அடக்கு முறைகள் அதிகமாக மேலும்
மேலும் தலை விரித்து ஆடுகின்றனவோ, அங்கெல்லாம் இந்தச்
சட்டத்தை உடைத்து, ஜனநாயகம் மேலும் மேலும் முன்னேறிக்
கொண்டு வருகிறது. இதை உலக ரீதியில் பார்க்கலாம். அதை
நாம் தமிழகத்தில் பார்க்கப்போகிறோம் என்று ஞாபகப்படுத்த
விரும்புகிறேன். ஆளும் கட்சியைப் பொறுத்த வரையில் என்ன
வேண்டுமானாலும் செய்யலாம். இந்தச் சட்டத்திலே மேலும்
டேப் ரெக்கார்டுகள் கூடாது என்று சொல்கிறீர்கள். ஆனால்
அதே நேரத்தில் டேப் ரெக்கார்டுகளை நீங்கள் போட்டுக்
கொள்ளலாம். உதாரணமாகச் சொல்கிறேன். கடந்த
காலத்திலே நிகழ்ச்சிகளைப் பற்றி ஞாபகப்படுத்த விரும்பு
கிறேன். லாரிகளிலே ஜனங்களைக் கூட்டிக்கொண்டு வந்து
இந்த ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் நடத்தக் கூடாது
என்று சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள். என்ன ஆனது?
உங்கள் ஊர்வலத்தின் போது லாரிகளிலே ஜனங்களைக் கொண்டு
போனீர்கள். ஆளும் கட்சிக்கு தேவைப்படுகிறபோது நீங்கள்
இப்படிச் செய்வீர்கள். (குறுக்கீடு) ஆனால் எதிர்க்கட்சிகளாகிய
நாங்கள் கொண்டு வந்தால் இந்தச் சட்டத்தை உபயோகித்து
தடுக்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு).

(மாலை 5-00)

எல்லா வகைகளிலேயும் இது ஆளும் கட்சிக்கு உதவிசெய்வதாக
வும், பிறரைத் துன்புறுத்துவதற்காகவும் கொண்டு வரக்கூடிய
சட்டமாக இருக்கிறது. பல இடங்களில், நாம் பார்த்திருக்
கிறோம். இன்றைக்கு ஆளும் கட்சிக் காரர்களும் கூட்டங்கள்
நடத்துகிறார்கள்; எதிர்க்கட்சிக்காரர்களும் கூட்டங்களை
நடத்துகிறார்கள். அப்படி கூட்டங்கள் நடத்துகிறபோது
மிமிக்ரியும் அதிலே நடத்துகிறார்கள். அப்படி நடத்துகிற
போது, ஆளும் கட்சிக்குச் சாதகமாகவும், எதிர்க்கட்சிகளுக்கு
எதிராகவும்தான் இந்த சட்டம் பயன்படும். எதிர்க்கட்சிக்காரர்
கள் நடத்தும் கூட்டங்களில் மிமிக்ரி போன்றவைகளைச்செய்தால்
அதற்கு இந்தச் சட்டத்தின் மூலமாக அபராதம், அல்லது ஜெயில்
தண்டனை போன்றவைகளை அளிக்கவும். இந்தச் சட்டத்தை
நீங்கள் இங்கே கொண்டு வருகிறீர்கள் என்றுதான் நாங்கள்
கருதுகிறோம்,



1984 மார்ச் 7] [திரு செ. சிவசாமி]

அடுத்து பொதுக்கூட்டங்கள் நடத்துகிறபோது, குறிப்பாக எதிர்க்கட்சிக்காரர்கள் கூட்டங்கள் நடத்துகிறபோது, அந்தக் கூட்டங்களிலே ரௌடிகளையும் இன்னும் சில பேர்களையும் அனுப்பி அதை நடத்தவிடாமல் செய்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் உங்களுடைய கூட்டங்களை எந்தவிதமான தொந்திரவும் இல்லாமல் நீங்கள் நடத்திக்கொள்கிறீர்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நம்முடைய தமிழ்நாட்டிலே ஒருசில இடங்களிலே நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் யார் அக்கிரமம்செய்கிறார்களோ, அவர்களை விட்டுவிட்டு, பொதுக் கூட்டங்களை நடத்துகிறவர்கள் மீதே கேஸ் போடுகிறீர்கள். நம்முடைய தோழர் ஏ. டி. கருப்பையா அவர்கள் கொலை செய்ய முயன்றார்கள் என்று அவர் மீது ஒரு பொய் வழக்கு போடப்பட்டிருக்கிறது. இது நியாயம் தானா? இப்படி பொய் கேஸ்போடுவதுமுறைதானா என்று நான்கேட்க ஆசைப் படுகிறேன்.

உறுப்பினர் ஏ. டி. கருப்பையா அவர்கள் கொலை செய்ய முயன்றதாக ஒரு பொய் கேஸ் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட கருப்புச் சட்டங்கள் வந்தால் யாருக்குப் பாதுகாப்பு இருக்கும் என்று தெரியவில்லை. இது ஒரு ஆபத்தான சட்டம். குட்டி ஹிட்லர் போல் சட்டங்கள் கொண்டு வரப்படுகின்றன. இதன்மூலம் சர்வாதிகாரிபோல நடந்து கொள்வதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆனால் எங்களைப்பொருத்தவரையில் இது ஜனநாயகக் கொள்கைக்கு விரோதமான, குட்டி ஹிட்லர் போல் கொண்டு வருகிற ஒரு ஆபத்தான சட்டம் இது. ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களே போதுமானது. எனவே இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரக் காவல், தமிழ்நாடு மாவட்டக் காவல் திருத்தச் சட்டமுன்வடிவு நிராகரிக்கப்பட வேண்டும் என்று நான் டிஸ் அப்ருவல் மோசன் கொடுத்திருப்பதன் காரணமாக, இதன் மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் முன்வருகிறேன்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டமே, மக்கள் தங்களுக்குத் தாங்களாகவே கொடுத்துக் கொண்ட சட்டம். அந்தச் சட்டந்தின் கீழ் கிடைக்கிற அந்த அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், பிரிவு 19-ன் கீழ் உரிமைகள்

*(a)* to freedom of speech and expression;
*(b)* to assemble peacefully and without arms.

என்பதிலே மிகத் தெளிவாக, அரசியல் அமைப்புச் சட்டத்திலே நமக்கு பல பாதுகாப்பான உரிமைகளை, சுதந்திரத்தைக் கொடுத்

திருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்தச் சுதந்திரத்தைப் பறிக்
கிற அளவிற்கு, இப்படிப்பட்ட சட்டங்களை அமைப்பது,
கொண்டு வருவது தேவைதானா ? என்று நான் கேட்க ஆசைப்
படுகிறேன்.

இதிலே பல்வேறு அரசியல் கருத்துக்கள் இங்கே எடுத்துச்
சொல்லப்பட்டு இருந்தாலும் கூட, நியாயத்தின் அடிப்படை
யில் இதைத் திரும்பப் பெறவேண்டும் என்று கோருகிறேன்.
இந்த அவசரச் சட்டத்தை போடுவதற்கு இதுவரையில் அப்படி
என்ன அத்தியாவசியமான காரியம் நடைபெற்றிருக்கிறது.
இதுவரையில் என்ன அப்படிப்பட்ட ஆபத்தான நிகழ்ச்சிகள்
நடைபெற்றிருக்கின்றன ? இதைக்கொண்டு ஆபத்தான
நிலைகள் என்ன ? இதைக் கொண்டு ஆபத்தான சூழ்
என்ன என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று நோக்கம்
கேட்டுக்கொள்கிறேன். இதிலே நான் சுருக்கமாக ஒரே ஒரு
கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே இந்தியன்
பீனல் கோட் என்ற சட்டத்திலே ஒரு தனிப்பிரிவே இருக்கிறது.

"Offences against public tranquility."

பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்ற குற்றங்கள் தொடர்
பாக பல்வேறு பிரிவுகள் ஏற்கனவே நமது இந்திய தண்டனைச்
சட்டத்திலே இருக்கின்றது. அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டு
மானால், சட்ட விரோதமான கும்பல் 5 பேர்களுக்கு மேலே கூடி
யிருந்தால் அதைத் தடை செய்யலாம் என்று ஏற்கனவே இருக்
கின்ற சட்டத்திலே அதற்கான வாய்ப்பிருக்கிறது. 143
என்ற சட்டப் பிரிவு இருக்கிறது. அதைத் தொடர்ந்து
பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அதற்கு கடைசியாக
153 ஏ என்ற பிரிவிலே (1)

"Promoting enmity between different groups on grounds of
religion, race, place of birth, residence, language, etc., and doing acts
prejudicial to maintenance of harmony ......"

என்கிற அந்தப் பிரிவு நிச்சயமாக இப்போது கொண்டு வரப்
பட்டிருக்கிற சட்டத்தின் பிரிவுகளை உள் அடக்கிய பிரிவு. ஏற்
கெனவே இருக்கிற இந்தியன் பீனல் கோட் சட்டத்தின் மூலமாக
நடவடிக்கை எடுக்கப்பட முடியாது போன வழக்குகள் எத்தனை
அல்லது இந்தப் பிரிவுகளில் மேலே வழக்குகள் போட முடியாமல்
புதியதாக இந்தச் சட்டத்தைப் போட்டால்தான், அப்படிப்
பட்ட ஆபத்தான நிலைமைகளை கட்டுப்படுத்த முடியும்
என்று அமைச்சர் அவர்கள் உள்ளபடியே நினைக்கிறார்களா ?





உள்ளபடியே ஏற்கனவே இருக்கிற சட்டப் பிரிவுகளிலேயே 3 ஆண்டுகளுக்கும் சிறைத் தண்டனையோ அபராதமோ விதிக்கக்கூடிய பல விதமான பிரிவுகள் இருக்கின்றன. மதத்தைப் பற்றி தாழ்வு படுத்தக் கூடிய சூழ்நிலை இருந்தால் 153-பி பிரிவு சட்டத்திலே 5 ஆண்டுகளுக்கு சிறை தண்டனை கொடுக்கக் கூடிய சட்டப் பிரிவுகள் இருக்கின்றன. ஆகவே, ஏற்கெனவே இருக்கிற சட்டத்திலேயே போதுமான பிரிவுகள் நம் கையிலே இருந்தாலும் கூட இன்றைக்கு புதியதாக சட்டத்தை உருவாக்குவதற்கான காரணம் என்ன என்று எனக்குத் தெரியவில்லை.

கண்ணியம் ஒழுக்கம் இவற்றிற்கு பாதிப்பு ஏற்பட்டா இப்படிப்பட்ட பிரச்னை வருகிறது என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. மத, இன மொழி அல்லது சமுதாயத்தினுடைய ஒற்றுமை குலைக்கும் வகையில் அல்லது ஜாதி சமய விரோத உணர்வுகளை, காழ்ப்புணர்ச்சியை தூண்டுவதைப்போல ஒரு சூழ்நிலை உருவானால் இந்தச் சட்டம் பயன்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் கூட for any other reason என்ற வாக்கியம் இருக்கிறது. வேறு ஏதோ காரணம் இருக்கிறது என்பதை யார் நிர்ணயம் செய்ய வேண்டும். போலீஸ் கமிஷனர் சொன்னால் போதும். இப்படி போலீஸ் கமிஷனர் வேறு எந்தக் காரணத்திற்கு வேண்டுமானாலும் கூட, இப்படி ஒரு காரணம் இருக்கிறது என்று நிர்ணயித்து, இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் இருக்கிறது.

நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்டப் பிரிவுகளில் எல்லாம் குற்றம் குறைகள் இருப்பதாக கருதுகிறார்களா ? இந்தச் சட்டத்திலே, மேலும் குற்றம் நடைபெறாமல் அது வரக்கூடிய சூழ்நிலை இருப்பதாக கருதினாலும் கூட, கைது செய்யலாம், வழக்குப் போடலாம், தண்டனை வழங்கலாம் என்று இருக்கிறது. அதாவது மத, ஜாதி, இன கலவரங்கள் சம்பந்தமாக ஏதாவது விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏற்படும் என்ற சந்தேகம் மட்டும் ஏற்பட்டாலே கூட, அது தொடர்பான கூட்டம் அல்லது நிகழ்ச்சியை முன் கூட்டியே தடை செய்து விடலாம் அதாவது அந்த நிகழ்ச்சியே நடைபெறாமல் செய்து விடலாம் என்று இந்தச் சட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்குள்ள சந்தேகம் எல்லாம், நியாயமான முறையிலே இது நிறைவேற்றப்படுமா அல்லது அரசியல் ரீதியாக பழி வாங்கும் நோக்கத்தில் நிறைவேற்றப்படுமா ? அல்லது பொது மக்களுக்கு விரோதமாக செயல்படுத்தப்படுமா என்ற நியாயமான அச்சம் எனக்கு எழுகிறது. அதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த அடிப்படையிலே ஜனநாயக விரோதச் சட்டம் என்றும், இன்னும் சொல்லப்போனால் பொது ஜன விரோதச் சட்டம் என்றும் இந்தச் சட்டத்தை வர்ணிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சில கருத்துக்களை, சட்டத்தினுடைய நோக்கம் என்ன என்பதனை முழுவதும் உணரா நிலையில் பேசினார்களோ என்று கூட நான் அச்சப்படுகிறேன்.

இந்தக் குறிப்பிட்டச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அரசியல் கட்சிகளின் மீது ஏவப்பட வேண்டும் என்ற நோக்கோடு தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கம், அவர்களுக்கு உரிய தார்மீகமான உரிமைக் குரலை நசுக்க வேண்டும் என்ற நோக்கோடு கொண்டு வரப்பட்ட சட்டம் அல்ல என்பதனை ஆணித்தரமாக அரசின் சார்பிலே அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக இந்தச் சட்டத்தை நமது மாநிலத்தில் கொண்டு வர காரணங்கள் பல உண்டு என்பதனை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மைய அரசைப் பொறுத்தவரைக்கும் பொது மக்களிடையே, அல்லது அதன் ஒரு பிரிவினரிடையே அச்சத்தையும், பாதுகாப்பின்மை உணர்வையும், பொது அமைதியை குலைக்கும் அளவுக்கு பெரும் கலவரங்களாக வெடிக்கக் கூடும் என்ற உணர்வையும், ஏற்படுத்தும் வகையில் சில அமைப்புகள், குறிப்பாக ஆர். எஸ். எஸ். ஜமாதி இஸ்லாமி போன்ற இன்னும் சில இயக்கங்களைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகள் பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் திட்டமிட்டு செயல் முறைகளில் ஈடுபட்டு வருகிற காரணத்தால் மாநில அரசுகள், இந்தியன் பீனல் கோடு ஆக்டுக்கு தக்க திருத்தத்தைக் கொண்டுவந்து, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தாக்கீதை மைய அரசு மாநில அரசுகளுக்கு அனுப்பியது.





(மாலை 5—10.)

10-8-79 ஆம் நாள் அன்று மத்திய அரசு இது குறித்து மாநில அரசுக்கு தாக்கீது அனுப்பியபோது கொம்புகளை வைத்து நடத்தப்படுகின்ற பயிற்சி கூட உள்நோக்கோடு மத, இன, வகுப்பு வாத கலவரத்தில் அவை முடிய வேண்டும் என்ற நோக்கோடு அமைந்ததாக தெரிகின்ற காரணத்தினால், அதுகூட தடை செய்ய வேண்டும் என்று மத்திய அரசினுடைய எண்ணத்தை மாநில அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு அனுப்பியது. அடுத்து, 1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மாநில அரசுகளுக்கு, மைய அரசு மற்றும் ஒரு தாக்கீதை இதே பொருள் குறித்து அனுப்பி பொது மக்களின் நலன் கருதி

In the public interest, such a legislation is inevitable and should be carried on expeditiously.

என்ற முறையிலே மாநில அரசுகள் அறிவுறுத்தப்பட்டன. அதற்கு பிறகு தான் இந்தச் சட்டத்தை தமிழகத்தில் நாம் கொண்டுவர வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வந்து அந்த அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவினை அவைக்கு அறிமுகம் செய்து இன்று நாம் இதை எடுத்திருக்கிறோம். இதிலே நான் குறிப்பாச சொல்ல விரும்புவது, ஏதோ தமிழ்கத்தில் மட்டும் தான் இந்தச் சட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது என்ற ஒரு உணர்வு தோன்றுகின்ற விதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்போது இங்கே பேசினார்கள். நான் நடைமுறையைப் பார்த்துத் தான் இதைக் கொண்டு வந்தேன். பல்வேறு பகுதிகளில் உள்ள நிலை என்ன என்பதை எடுத்துக் கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

கேரள மாநிலத்தில் இதே சட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு மரியாதைக்குரிய உறுப்பினர், உயர் திரு ரமணி அவர்கள் பேசுகின்ற போது கூட உழைக்கும் வர்க்கத்திற்கு எதிரான ஒரு சட்டம் என்ற நோக்குபட இதுகுறித்து பேசினார். மார்க்கிஸ்ட் இயக்கத்தின் சார்பில் கேரள மாநிலத்தின் ஆட்சி நடைமுறையில் இருந்தபோது கூட இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தது மட்டுமல்ல, பயன்படுத்தப்பட்டது என்பது கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கேரள சட்டத்தைப் பொறுத்த வரைக்கும், அதிலே உள்ள சில ஷரத்துக்களை நான் கூற விரும்புகிறேன். கேரள சட்டத்திலே உள்ள விதியிலே சொல்லப்பட்டிருப்பது :

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 7

'Whenever the Commissioner considers it necessary, so to do for the preservation of the public peace or public safety or for the maintenance of public order—

(i) the use of gestures or mimetic representations or playing of tapes or gramaphone records or other instruments in which speeches or songs are recorded; or

(ii) the preparation, exhibition or dissemination of pictures, symbols, placards, signs, visible representations or any other object or thing, which in the opinion of the Commissioner, offend against decency or morality, or promote feelings of enmity or hatred between different religious, racial, linguistic and other groups etc. ......'

என்று இந்த காரணங்களுக்காக இந்தச் சட்டம் தேவை என்ற
முறையிலே கேரள மாநிலத்தில் கொண்டு வரப்பட்ட இந்தச்
சட்டம் நடை முறையில் இதுகாறும் இருந்து வருகிறது.
அதுமட்டுமல்ல ......... (குறுக்கீடு) கொண்டுவரப்பட்டது
முன்னமேயே.

Thiru R. UMANATH: I would like to know the date.

The Hon. Thiru C. PONNAIYAN: I will find out in which year this was brought. This is there for more than 7 years. I will let you know the exact date.

அது போலவே கல்கத்தாவிலும் கூட மார்க்சிஸ்ட் இயக்கம் ஆட்சி புரிகின்ற இக்காலத்திலும் கூட இந்தச் சட்டம் அங்கு நடைமுறையில் தற்போது இருந்து வருகிறது. அந்தச் சட்டத்திலுடைய பிரிவுகளில் 39 (ஏ) என்ற பிரிவிலே கல்கத்தா சப்-அர்பன் போலீஸ் ஆக்ட் என்ற சட்டத்திலே விலே கமிஷ னருக்கு அதிகாரத்தை தந்து

'The Commissioner of Police may also subject to the control of the State Government, whenever and for such time as he may consider necessary, by notification publicly promulgated or addressed to individuals, prohibit the delivery of public harangues, the use of gestures or mimetic representations, and the preparation, exhibition or dissemination of pictures, symbols, placards or any other object or thing which—

(i) may be of a nature to outrage morality or decency, or

(ii) are likely, in the opinion of the Commissioner of Police to inflame religious animosity or hostility between different classes, or to incite the commission of an offence, a disturbance of the public peace or to resistance to or contempt of the law or lawful authority.



1984 மார்ச் 7] [திரு. சி. பொன்னையன்]

எனச் சொல்லி மேற்கு வங்கத்திலே நடை முறைப்படுத்தியிருக்கிறார்கள். கேரள மாநிலத்திலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். 1974 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்தச் சட்டம் கேரள மாநிலத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப் போலவே இந்தச் சட்டம் இரண்டு மாநிலங்களோடு நின்று விடவில்லை.

இன்னும் குறிப்பாக டெல்லி போலீஸ் ஆக்டின் 30வது பிரிவில் 1978 ஆம் ஆண்டு நான் ஏற்கெனவே கூறியதைப் போல் மேற்கு வங்க மாநிலத்தில் கேரள மாநிலத்தில் கொண்டு வரப்பட்டுள்ள ஷரத்துக்களைப் போன்ற ஷரத்துக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1963 ஆம் ஆண்டிலே மைசூர் மாநிலத்திலே கொண்டு வரப்பட்டு இது காறும் நடை முறையில் இருந்து வருகிறது. பம்பாயிலே, பம்பாய் போலீஸ் ஆக்டின் 37 வது பிரிவு அதே ஷரத்துக்களை கொண்டு அங்கும் அது நடை முறையிலே இருந்து வருகிறது, என்பதை நான் இந்த அவை அறிய வேண்டும் என்பதற்காக எடுத்துச் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். அரசியல் கட்சிகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பயன் படுத்தப்படும் என்ற அச்ச உணர்வுகளை எடுத்து இயம்பினார்கள். அது தவறான உணர்வு என்பதனை நான் சோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதற்காக நான் இதைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். 41ஏ இல்

'This clause empowers the Commissioner of Police to prohibit the holding of, or taking part in, any drill with arms or training with arms by five or more persons in any place whether public or private or the carrying of arms in any procession.'

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் பேசுகின்றபோது அன்லாபுல் அசெம்பிளி என்பதற்காக 143 என்ற பிரிவு நம்மிடத்திலே இருக்கிறபோது, 153 வது பிரிவு ஐ.பி.சி. யிலே இருக்கிறபோது எதற்காக இந்தப் பிரிவுகள் என்று கேட்டார்கள். ஐ.பி.சி. 143 வது பிரிவு பொறுத்தவரைக்கும்

'This is to prohibit unlawful assembly of five or more persons. It is designated an 'unlawful assembly'. An assembly of five or more persons is designated an "unlawful assembly".

என்று இருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 7]

ஆனால் இந்த செக்ஷனைப் பொறுத்த வரைக்கும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே

'To prohibit the holding of or taking part in any drill with arms or training with arms by five or more persons in any place. . . .'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஐ.பி.சி. 153ஏ பிரிவைப் பொறுத்த வரைக்கும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

'communal hatred on religious basis, language basis or any other parochial basis'

ஆக இருந்தாலும் சரி,

'That is to occur; or should have taken place which is undesirable.'

ஆக இருந்தாலும் சரி ஆங்கு இன்டன்ஷன் இருக்க வேண்டும்.

'The occurrence should have taken place or that is likely to occur'

என இருக்குமானால் நாம் இந்தச் சட்டத்தைச் பயன்படுத்த முடியும் 153 ஏ-பிரிவைப் பொறுத்தவரைக்கும்

This is curative and not preventive. 41-A is preventive but not curative. This is the difference between the two processes.

அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் பேசுகின்றபோது சொன்னார்கள். ஏதோ இது அடக்கு முறைச் சட்டமாக அரசியல் இயக்கங்களினுடைய பேச்சுரிமையை, எழுத்துரிமையை, ஊர்வல உரிமையை ரத்து செய்து அந்த இயக்கங்களினுடைய தொண்டர்களை கைது செய்வதற்கு வகை செய்கின்ற சட்டமாகும் என்று சொன்னார்கள். திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோது அந்த அளவிற்குச் சொல்லவில்லை என்றாலும் உழைக்கும் வர்க்கத்தினுடைய உண்மையான குரலை ஒடுக்க ஒரு வேளை காவல் துறையால் பயன்படுத்தப் படுமோ என்ற அச்ச உணர்வுகளைச் சொன்னார்கள். இதிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, எப்போது இந்தச் சட்டம் பயன் படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"The Commissioner may, whenever he considers it necessary so to do for the preservation of the public peace or public safety or for the maintenance of public order, by order in writing prohibit the holding of, or taking part in any drill with arms or training with arms by five or more persons in any place, whether public or private, or the carrying of arms in any procession,



1984 மார்ச் 7] [திரு. சி. பொன்னையன்]

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயுதங்களோடு இது போன்ற பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகிறபோது மக்களுடைய அமைதிக்கு பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறபோது பயன் படுத்தப்படும் என்று தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

The Commissioner may, whenever he considers it necessary so to do for the preservation of the public peace or public safety or for the maintenance of public order.

என்று தெளிவாக்கப் பட்டிருக்கிறது. , இந்தப் பொறுப்பை ஒப்படைத்து இருப்பது கமிஷனர் அளவுக்கு உயர்ந்த காவல் துறை அதிகாரிகளிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏனோ தானோ என்று இந்தச் சட்டத்தைப் பயன் படுத்த முடியாது. இந்தச் சட்டத்தைப் பயன் படுத்துகிறபோது

"which may, in the opinion of the Commissioner, offend against decency or morality, or promote on ground of religion, race, place of birth, residence, language, caste or community or any other ground whatsoever, disharmony, feelings of enmity or hatred or ill-will between different religious, racial, language or regional groups or castes or communties"

எனத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(மாலை 5-20)

ஜனநாயக ரீதியில் இயங்குகிற அரசியல் கட்சிகள் தான் தமிழகத்தில் இருக்கின்றன என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்து இருக்கிறது. தமிழகத்தில் ஜனநாயக ரீதியில் இயங்குகிற அரசியல் கட்சிகள் எல்லாம் சம்புகளை எடுத்து ஆயுதங்களை எடுத்து பயிற்சி கொடுத்து அல்லது பயிற்சி பெற்று ஆயுதம் தாங்கி ஊர் வலம் வந்து ஜனநாயக நெறி முறைகளை கொன்று விட்டு ஒரு கொள்கையை பெற வேண்டும் என்ற நோக்கோடு எந்த அரசியல் இயக்கமும் தமிழகத்தில் இல்லை என்று இந்த அரசு கருது கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கவலைப்பட வேண்டியவர்கள் எல்லாம் ஆயுதம் எடுத்து பயிற்சி கொடுத்து வன்முறையில் ஈடுபட்டு பொது அமைதியை குலைத்து ஜனநாயக ரீதியில் மக்களுக்கு கிடைக்கக்கூடிய பாதுகாப்புக்கு மாறாகச் சென்று ஒரு பேரலல் கவர்ன்மெண்டு நடத்தக்கூடிய அளவுக்கு சட்டத்தை முழுமையாக கையில் எடுத்து தன்னிச்சையோடு அவர்கள் நடத்து கிற நிலை ஏற்படுகிறபோது, இது போன்ற சட்டத்தை மக்கள் நலன் கருதி பயன்படுத்த வேண்டியது தவிர்க்கமுடியாத நிலை ஏற்படும். அது உண்மை தான். ஆனால் அரசியல் இயக்கங்களைப் பொறுத்தவரைக்கும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் [1984 மார்ச் 7
தலைவர் அவர்களே, உண்மையிலேயே கையில் ஆயுதம் எடுத்து, துணைத்
டிரெய்னிங் கொடுத்து அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு இறங்கி
இருக்கக்கூடிய பகுதியினரைத்தான் இது பாதிக்கும் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்போது
அவர்கள் ஆயுதம் எடுத்து இந்த மாதிரி இறங்கினார்களோ
அப்போதே இந்தச் சட்டங்களை எல்லாம் உதறி தள்ளி ஆச்சு
என்று அர்த்தம். ஆகவே இந்த அடிஷனல் ஆக்ட் அவர்கள்
கிட்டே கூட போகாது. ஆயுதம் கையில் எடுத்து ஆச்சு எஃ
றால் அவர்களுக்கு சட்டம் இல்லை என்று அர்த்தம். அது
அவர்களை பாதிக்காது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. உமாநாத் அவர்கள் அவருடைய இயக்கத்தின் கொள்
கையைச் சொல்கிறார். மக்களே ஆயுதம் எடுத்து மக்களே இது
போன்ற செயலில் ஈடுபடுவது என்பது வேறு. ஒரு குறிப்பிட்ட
சக்தியினர், சூழ்நிலைகளை வகுத்து ஆயுதங்கள் தாங்கி ஜன
நாயகத்தை தகர்த்து எரிகிற காரியத்தில் முனைகிறபோது, ஜன
நாயகத்தில் நம்பிக்கை உடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
உமாநாத் அவர்கள் அதை ஆதரிக்க மாட்டார்கள். என்பது
அரசுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். அது குறித்து நான்
பேசவில்லை. நான் சொல்வது எல்லாம், பிரிவினை தீயச்
சக்திகள், சமூக விரோதச் சக்திகள், சுயநலத்தோடு, பரோக்
கியல் எண்ணத்தோடு, குறுகிய உணர்வோடு தீவிரமான பணி
யில் ஈடுபடுகிறபோது தான் இது போன்ற சட்டம் நடைமுறைக்கு
வரும்.

ஜனநாயக ரீதியிலே அமைப்புகள் இயங்கும்பொழுது இது
போன்ற சட்டத்திற்கு எந்த அமைப்புக்குமே வேலை இராது
என்பதை அரசின் சார்பில் நான் தெளிவாகக் கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

கொடிக்கம்புகளுடன் ஊர்வலம் வரலாமா என்று கேட்டார்.
அன்புச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்
அவர்கள். அரசியல் இயக்கங்களெல்லாம் ஊர்வலங்களை
நடத்துகின்றபொழுது கொடிக் கம்புகளுடன் சென்றால் அதற்
குக் கூட இந்தச் சட்டம் தடையாகப் பயன்படுத்தப்படுமா?
Probihitory order would be imposed என்று கேட்டார்.
கம்புகளில் கொடியைக் கட்டி வர மாட்டார்கள். குச்சிகளில்தான்
கட்டி வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்
அவர்களின் இயக்கத்தைச் சார்ந்தவர்கள்கூட குச்சிகளிலேதான்
கொடிகளைக் கட்டுகிறார்கள், கம்புகளில் கட்டுவதில்லை என்று
கருதுகிறேன். ஆகவே, அதைப்பற்றிய அச்சம் அவருக்கு வர
வேண்டிய தேவை இல்லை.





கிழவிகள், நொண்டிகள் கம்புகளையும், தடிகளையும்
எடுத்துச் செல்லுகின்றபொழுது இந்தச் சட்டம் அவர்கள் மீது
ஏவப்படுமா என்ற வினாவைத் தொடுத்தார்கள். வன்முறை
யில் ஈடுபட்டு, பப்ளிக் ஆர்டர் என்று சொல்லப்படக் கூடிய
பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அளவிற்குத்
தீய எண்ணம் அல்லது சதித் திட்டம் அல்லது குறுகிய உணர்வு
கொண்டு செயல்படும் விதத்தில் நாட்டிலே இருக்கின்ற வயது
முதிர்ந்த கிழவிகளுக்கும், நொண்டிகளுக்கும் உணர்வு இருக்கும்
என்று மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் நம்ப மாட்டார்கள்
என்று கருதுகிறேன்.

ஆயுதம் இல்லாத பயிற்சியை, திராவிட முன்னேற்றக் கழ
கத்தைச் சேர்ந்தவர்கள் நடாத்தியபொழுது இந்தச் சட்டம்
அவர்கள் மீது ஏவப்பட்டது என்ற செய்தியை மாண்புமிகு
உறுப்பினரவர்கள் தற்போது சொன்னார்கள். அது தவறான
தகவல் என்பதற்காகச் சொல்கிறேன். இந்தச் சட்டத்தைப்
பொறுத்தவரைக்கும் பல மாதங்களுக்கு முன்பே, சட்ட முன்
வடிவை அவையில் கொண்டு வந்து, சில திருத்தங்கள் அதிலே
கொண்டு வரப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, திருத்தங்
களுக்காக மீண்டும் கொண்டு வராமல், தள்ளிப் போட்டு இந்தச்
சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு ரகுமான்
கான் அவர்கள் தவறாக இந்தத் தகவலை அரசுக்கு, அவைக்
குத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள்
பேசும்பொழுதுகூட, அரசியல் இயக்கங்களுக்கு எதிராக இந்தச்
சட்டம் பயன்படும் என்று பேசியபொழுது, ஒருவேளை அன்
புச் சகோதரர் ரகுமான்கான் அவர்களுக்கு அடுத்த வரிசையில்
இருப்பதாலோ என்னவோ, திராவிட முன்னேற்றக் கழகம்
போன்ற எதிர்க்கட்சிகள் மீது இந்தச் சட்டம் பயன்படுத்தப்
பட்டு விடுமோ என்ற அச்ச உணர்வோடு பேசினார்கள் என்று
கருதுகிறேன்.

மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அவையில் சொன்னதைப்
போன்று, அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் நடவடிக்
கைக்கு எதிராகப் பயன்படுத்தப்படவில்லை. நெல்லை
மாவட்டத்திலே 2-9-1983 அன்று பயிற்சி தந்தார்கள். அங்கு
தற்போது நடைமுறையில் பன்னெடுங்காலமாக இருந்து வரு
கிற ஐ.பி.சி. மாண்புமிகு பழனியப்பன் அவர்கள் சுட்டிக்
காட்டியதைப்போல 143-வது பிரிவிலேயும், 188-வது பிரிவி
லேயும், டிஸ்ஒப்பீடியன்ஸ் ஆஃப் தி போலீஸ் ஆர்டர் என்ற பிரிவு
களிலே வழக்கு பதிவு செய்யப்பட்டதே தவிர, இந்தச் சட்டத்
தின்படி, தற்போது கொண்டுவரப்படுகின்ற Prohibit any drill with
arms, training with arms, or the carrying of arms in any procession.
இந்தச் சட்டத்தின் கீழ் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட
வில்லை. (குறுக்கீடு) உறுப்பினர்கள் கூறியதையெல்லாம் நான்
குறித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். எனவே, மறந்துவிட்
டேன் என்ற அச்சம் வேண்டாம்.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்

திருச்சியிலே, கரூரிலே பயிற்சி முகாம் நடந்தபொழுது,
31-12-1983 அன்று நடந்தபொழுது, பதிவு செய்யப்பட்ட
வழக்குகள் 153 (ஏ) ஐ.பி.சி. In the existing provisions of the
Indian Penal Code of today.

மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் சுட்டிக்காட்டினாரே,
ஏற்கனவே உள்ள விதிகள் இருக்கின்றனவே, சட்டங்கள் இருக்
கின்றனவே, அவற்றில் நடவடிக்கை எடுக்கக்கூடாதா என்று.
அதைப்போல, இருக்கின்ற அந்தச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை
எடுக்கப்பட்டதே ஒழிய, இப்பொழுது கொண்டு வரப்படுகின்ற
புதிய சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சேலம் மாவட்டத்தில் 12-10-1983 அன்றும், தர்மபுரி
மாவட்டத்தில் 14-11-1983 அன்றும் பயிற்சி என்ற முறையிலே
பல சம்பவங்கள் நடந்தபொழுது ஆங்கு நடவடிக்கை எடுக்கும்
பொழுது, இருக்கின்ற ஐ.பி.சி. 143, 188, 153 (ஏ) ஆகிய
பிரிவுகளின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள்
கூறியதைப்போல், இருக்கின்ற சட்டங்களின் கீழ் நடவடிக்கை
எடுக்கப்பட்டதே தவிர, இன்று அவையிலே விவாதிக்கப்படு
கின்ற சட்டத்தின் மூலமாக—இது ஆர்டினன்ஸ் என்ற வகை
யில் நடைமுறையில் இருந்த காலத்தில்கூட இந்தச் சட்டம்
பயன்படுத்தப்படவில்லை. எனவே, மிகமிகத் தவறான அளித்
திருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தில் சொல்லப்பட்டதாகச்
சொல்வார்களேயானால், எந்த விதியின்கீழ் இந்த நடவடிக்கை
எடுக்கப்பட்டது என்பதைப்பற்றி உயர்நீதி மன்றத்திற்குச் சரி
யான தகவலைத் தராத காரணத்தினால், ரகுமான்கான்
அவர்கள் கூறியதைப்போல, தீர்ப்பு வந்திருக்கலாம்.

(மாலை 5-30)

ஆகவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இந்த குறிப்பிட்ட
விதிகளின் கீழ்தான் எடுக்கப்பட்டது என்பதைப் புள்ளிவிவரத்
தோடும், ஆதாரத்தோடும் அவைக்குக் கூறுவது என்னுடைய
கடமை என்று நான் கருதுகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், தற்போது கொண்டு
வந்திருக்கின்ற சட்டத்தைப் பொறுத்தவரையில், ஜனநாயக
ரீதியில் இயங்குகின்ற, அரசியல் ரீதியாக இயங்குகின்றவர்கள்
மீது கண்டிப்பாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட மாட்டாது
என்பதை நீங்கள் மனதில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



984 மார்ச் 7] [திரு. சி. பொன்னையன்]

அடுத்து திருவிழாக் காலங்களில் சிலம்பம் ஆடுகின்றவர்கள் மீது இந்தச் சட்டம் ஏவப்படுமா என்று கேட்டார்கள். திருவிழாக் காலங்களில் கேளிக்கைக்காக, வேடிக்கைக்காக அவை நடத்தப்படுகின்றன. எனவே வேடிக்கைக்காக நடத்தப்படுவது என்பது வேறு; வேறு எண்ணங்களோடு நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகள் என்பது வேறு; அவற்றின் பணிகள் என்பது வேறு என்பதை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசுகின்றபோது சரியாக எடுத்துக் காட்டினார்கள்.

மற்றும் ஒன்றைச் சொன்னார்கள். ஆட்சி செய்கின்ற தவறுகளைப் பற்றி சுவரிலே எழுதிக் காட்டுவதன் மூலமும், போஸ்டர் ஒட்டுவதன் மூலமும்தான் சொல்ல முடியும். எனவே அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தச் சட்டத்தின் இன்னொரு பிரிவு தடையாக இருக்கின்றது என்ற கருத்தினை திரு. ரகுமான்கான் அவர்களும் திரு. ரமணி அவர் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில்...........(குறுக்கீடு) என்னென்ன பிரிவுகளில் திரு. ரமணி அவர்கள் என்னென்ன கருத்துக்களை எல்லாம் சொல்லி இருக்கிறார்கள் என்பதை நான் குறித்து வைத்திருக்கிறேன். அவற்றுக்கெல்லாம் ஒவ்வொன்றாக நான் பதில் கூறி வருகிறேன்.

அடுத்து 41-ஏ பிரிவைப் பொறுத்தவரையில், திரு. கு. ரமணி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்னேன். ஜாதி அடிப்படையில் அல்லது மத அடிப்படையில், அல்லது வகுப்பு அடிப்படையில் அதாவது

Ground of religion, race, place of birth, residence, language, caste or community.

என்ற இதுபோன்ற அடிப்படையில் அந்தத் தவறுகள் நடைபெறுகின்ற போது 41-ஏ பிரிவு ஈர்க்கப்படுகின்றது. அதாவது ஆயுதத்தோடு அந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படவில்லை என்றால் இல்லை.

73-வது பிரிவைப் பொறுத்தவரையில் சுவர்களில், வீதிகளில் எழுதுகின்றபோது அல்லது போஸ்டர் ஒட்டுகின்றபோது அதற்கும தண்டனை அளிக்கப்படும் என்றால் அரசியல் இயக்கங்கள் எல்லாம் போஸ்டர் ஒட்டவேண்டாமா, சுவர்களில் எழுத வேண்டாமா, பணக்கார கட்சிகள் வேண்டுமானால் போஸ்டர் ஒட்டிவிடலாம், ஆனால் மற்றவர்கள் எழுத வேண்டாமா என்றெல்லாம் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் உங்களைப் போல்தான்

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 7

ஏழைகளை நம்பி, ஏழைகளுக்காக இருக்கின்ற கட்சிதான். பல இலட்சக்கணக்கான ஏழைகளை அங்கத்தினர்களாகக் கொண்டி ருக்கின்ற கட்சிதான். ஆகவே, நாங்களும் சுவர்களில் எழுதித்தான் நீங்கள் நினைக்கின்ற கொள்கைகளைத்தான், நாங்களும் நினைக் கின்றோம் என்பதை எல்லாம் சுவர்களில் எழுதித்தான் மக்க ளுக்குச் சொல்ல வேண்டி இருக்கிறது. எனவே, எங்களுடைய கொள்கைகளை எழுதுவதற்கும் சுவர்கள் தேவை. ஜனநாயக ரீதியில் நாங்கள் போராடுகிறோம் என்பதை எல்லாம் தெரிவிக்க வேண்டும் என்றால் சுவர்களில் நாங்களும் எழுதத்தான் வேண்டி இருக்கின்றது. ஆகவே, அவற்றைப் பயன்படுத்தாமல் இருக்க முடியாது. ஆகவே, அதற்காகத்தான் திருத்தம் கொண்டுவந்திருக் கிறோம். சென்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே இதைத் கொண்டு வந்தபோது திரு. சங்கரய்யா, திரு. உமாநாத் போன்ற வர்கள் எல்லாம் குறை இருக்கின்றது, அதனை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதாவது விட்டுப்போன ஒன் றைச் சேர்க்கவேண்டும் என்று சொன்ன காரணத்தால் நாங்கள் அதை மீண்டும் கொண்டு வந்தோம். இப்போது அப்படி எழுதப் பட்டிருக்கின்றது.

"if such writing or marking offends against decency or morality, or promotes on ground of religion, race, place of birh, residence, language, caste or community or any other ground whatsoever, disharmony, feelings of enmity or hatred or ill-will between different religious, racial, language or regional groups or castes or communities, shall be liable on conviction."

என விடுபட்டுப்போனது சேர்க்கப்பட்டிருக்கின்றது. மேற்குவங்கச் சட்டத்திலே, கேரளாவிலே உள்ள சட்டத்திலே, மைசூரிலே உள்ள சட்டத்திலே, டெல்லி, பாம்பே ஆகிய பகுதிகளில் உள்ள சட்டங்களிலே உள்ள ஒரு பிரிவு, தவறுதலாக விடுபட்டுப்போன ஒரு பிரிவு தற்போது சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னும் ஒரு பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். திரு. ரமணி அவர்கள் பேசுகின்றபோதும் எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சட்டம் ஒரு புறத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க, என்றும் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்து பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்காமல் அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கு உறு துணையாக இருக்க என்றும் சொல்லியிருக்கின்றபோதும், இந்தச் சட்டம் ஏழைகளையும், விவசாயிகளையும், தொழிலாளர்களை யும் பாதிக்குமா என்ற ஒரு அச்சம் ஏற்படுகின்றது என்று சொன் னார்கள். கண்டிப்பாக இந்தச் சட்டம் ஏழைகளுக்கு எதிராகவும், உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராகவும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எதிராகவும் அரசியல் கட்சிகளுக்கு எதிராகவும்



1984 மார்ச் 7] [திரு. சி. பொன்னையன்]

பயன்படுத்தப்படாது; பயன்படுத்த விழைந்தாலும் கூட பயன் படுத்த முடியாது. காரணம், அந்த அளவு சட்டத்தினுடைய விதிகள் உள்ளே இருக்கின்றன.

Provisions of the Act are such that these cannot be misused.

என்பதற்காக இதைச் சொல்கிறேன், அப்படி இந்தச் சட்டம் ஈடேற்றப்பட்டாலுங் கூட அரசியல் சட்டத்திற்கு உட்பட்டிருக் கிறதா, என்ற ஒரு வினாவை எழுப்பினார்கள். அரசியல் சட்டத் திலே அடிப்படை உரிமை என்று கொடுக்கப்பட்டிருக்கிற, ஜீவாதார உரிமைக்கு மீறிய ஒன்றாக இல்லையா என்று கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் திரு. பழனி யப்பன் அவர்களும் சொன்னார்கள். Article 19(2) of the Constitution of India.

அதைப் பொறுத்த வரைக்கும்

"Nothing in sub-clause (a) of clause (1) shalll affect the operation of any existing law, or prevent the State from making any law, in so far as such law imposes reasonable restrictions on the exercise of the right conferred by the said sub-clause in the interests of the sovereignty and integrity of India, the security of the State, friendly relations with foreign States ......"

அதற்கடுத்து இருப்பதுதான்,

"public order, decency or morality, or in relation to contempt of court, defamation or incitement to an offence."

என இருக்கிறது. எனவே, Public Order-க்கோ, decency or morality-க்கோ, பங்கம் விளைவிக்கக் கூடிய அளவிற்கு ஒரு நிகழ்ச்சி நடைபெறும் அல்லது நிகழ்ச்சிகள் நடைபெறலாம் என எண்ணுகிறபொழுது அடிப்படை ஜீவாதார உரிமைகள் பாதிக் காத வண்ணம சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் அரசுக்கு இருக்கிறது.

That is considered as a reasonable restriction. Nothing shall affect the operation of any existing law, or prevent the State from making any law, in so far as such law imposes reasonable resrictions.

என அரசியல் சட்டத்தினுடைய 19(2)-வது பிரிவிலே விளக்கப் பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தினுடைய 19(1)-வது பிரிவிலே ஆயுதம் தாங்கி யாரும் செல்லலாம் என்று சொல்லவில்லை.

It is stated in Article 19(1) as "All citizens shall have the right—

(b) to assemble peaceably and without arms .........".

என 19(1)-வது பிரிவில் சொல்லவில்லை.

There should be a prohibition to proceed on assembing with arms எனவிளக்கப்பட்டிருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 7

ஆனால் 41(ஏ) ஐப் பொறுத்த வரைக்கும் (குறுக்கீடு) என்றார் என்ன என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர் கள் என்னுடன் உடன்படுவார்கள் எனக் கருதுகிறேன்.

"There should be a prohibition to proceed on assembling with arms .......".

ஆயுதம் தாங்கி பயிற்சியை மேற்கொள்ள வேண்டும், சில நிக ச்சி களிலே ஈடுபட வேண்டுமென்று இருந்தால் அதற்குத் தடை வேண் டும். 19(2)-வது பிரிவிலே இதையெல்லாம் இந்த

"Public order, decency or morality or in relation to contempt ot court defamation on or incitement ........".

என்ற புரவிஷனுக்கு உட்பட்டு சட்டம் இயற்ற மாநில அரசுக்கோ மைய அரசுக்கோ அதிகாரம் இருக்கிறது என—இந்த விதியில் மட்டுமல்ல, உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம், தீர்ப்புகளில் இயம்பியவாறு சட்டத்தை இயற்றலாம்.

Here is a prohibition. No doubt this prohibiion in Article 19 (1) expressly prohibits .......
Assembly with arms. This can be a prohibition when it is read with Article 19 (1) where it read as "assembly with arms".

அது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னும் ஒன் றைச் சொன்னார்கள். Reasonable restrictions என்று சொல்லும்போது 3 மாத காலம்தான் இந்தத் தடை ஆணை அமுலில் இருக்க முடியும். மேற்கொண்டு நீட்டிக்கப்பட வேண் டும், மக்களுடைய நலன் கருதி, பொது அமைதி கருதி எனப்படுமா னால், 6 மாத காலத்திற்கு மட்டுமே அதற்கு நீட்டிக்கப்படும் எனவே, அதற்கு மேல் நீட்டிக்கப்படாது Reasonable restrictions என்ற முறையில் இது செல்லுபடியாகக் கூடிய ஒன்று. மற்ற மாநிலங்களில் இது கொண்டு வரப்பட்டு, நீதிமன்றங்கள் வரை சென்று சரியான சட்டம் எனத் தீர்ப்பளிக் கப்பட்ட ஒன்றைத்தான் தமிழக அரசு—நாம்—கொண்டு வரு கிறோம் என்பதை எடுத்துச் சொல்லி, ஏற்கெனவே நான் எடுத்து இயம்பியவாறு இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஜன நாயகத்திலே நம்பிக்கை வைத்து இருக்கிற அரசியல் இயக்கங் கள், மக்கள் நலனிலே அக்கறை கொண்டு இருக்கிற அரசியல் இயக்கங்கள், தொழிலாளர், உழைக்கும் வர்க்கம், விவசாயிகளின் நலனிலே அக்கறை கொண்டிருக்கிற அமைப்புகள், இயக்கத்திற்கு எதிராக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்ற அச்சத்தை எள்ளளவும் கொள்ளத் தேவையில்லை என்று அரசின் சார்பிலே அவைக்குச் சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை அவை நிறை வேற்றித் தருமாறு வேண்டுகிறேன்.



1984 மார்ச் 7]

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம் ஆயிரம் மலர்கள் பூக்கட்டும் என்று ஜனநாயகத் தத்துவத் திற்கு வேட்டு வைக்கின்ற சட்டமாகும். கருத்துக்களை, சொள் கைகளை பரப்புவதற்கு ஒரு அரசியல் இயக்கத்திற்கு உரிமை உண்டு. அந்த அரசியல் இயக்கம், பேச்சின் மூலமாக, பாடலின் மூலமாக...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :, அமைச்சர் அவர் கள் பேசியதற்கு மறுப்பு தெரிவிக்கவோ, அல்லது பதில் தெரி விக்கவோ, ஏதாவது சுருக்கமாகச் சொல்லலாம். ஆயிரம் பூக் கள் என்று யாருமே சொல்லவில்லையே. ஆயிரம் பூக்களை எல் லாம் இங்கே எங்கே நாம் பார்த்தோம். ஊட்டியிலேதான் பிளவர் ஷோவிலே பார்த்திருக்கிறோம்.

(மாலை .5-40).

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு அரசியல் இயக்கம் தன்னுடைய கொள்கைகளை, கருத்துக் களை அல்லது ஒரு சர்க்காரைப் பற்றிய அரசியல் விமர்சனங் களை படங்கள் மூலமாக, கார்ட்டூன் மூலமாக, அதே போல பேச்சின் மூலமாக, கண்காட்சி மூலமாக, எடுத்துச் சொல்கிற போது போலீஸ் கமிஷனர் வந்து இது டீசன்சியாக இல்லை, மொராலிட்டியாக இல்லை, பொது மக்களின் அமைதிக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கிறது என்று கன்சிடர் செய்தாலே போதும். அந்த கமிஷனர் யார்? உங்களுடைய கட்டளைகளை நிறை வேற்றுகிற அதிகாரி. நீங்கள் அலாவுதீன் என்றால் உங்கள் கையிலே இருக்கிற அற்புத விளக்கு அவர். அப்போதுதான் பிரச்சனை வருகிறது. எனவே தான் இது அரசியல் இயக்கங் களை பயங்கரமாக அடிமைப்படுத்துகிற, அரசியல் இயக்கங் களுக்கு எதிராக அடக்கு முறையை கட்டவிழ்த்து விடுகிற சட்டம்; இது ஜனநாயக விரோத சட்டம். இது ஜனநாய கத்தை பட்டா கத்தியால் படுகொலை செய்கிற காரணத்தாலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பதாகவே நாங்கள் இந்த அவையை விட்டு வெளியேறுகிறோம். எங்கள் கழகத்தின் சார்பாக வெளி நடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தனர்.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் சொல்வதை கேட்டு விட்டுச் செல்லுங்கள். தமிழகத்திலே மட்டுமல்ல, பாரதத் திலே இருக்கிற சட்டங்கள் எல்லாம் கிரிமினல் புரசிஜர் கோட், ஐ. பி. சி. அல்லது பிரிவென்ஷன் ஆப் கரப்ஷன் ஆக்ட் என்று எதுவாக இருந்தாலும் அந்தச் சட்டங்களை எல்லாம் நடை

(திரு. சி. பொன்னையன்) [1984 மார்ச் 6

முறைப்படுத்துவது, காவல் துறைதான். ஆட்சிகள் வரும், மாறும். ஆனால் காவல் துறை தொடர்ந்து இந்தச் சட்டங்களை ஈடேற்ற வேண்டும். அதற்காகத்தான் மிகவும் எச்சரிக்கையாக பெரிய போலீஸ் அதிகாரியிடம் தான், சிட்டி போலீஸ், கமிஷன் என்ற அளவிலே பெரிய போலீஸ் அதிகாரியிடம் ஒப்படைக்கப் படுகிறதே ஒழிய, மற்றபடி கீழ் மட்டத்திலே யாரிடமும் இந்தச் சட்டம் ஒப்படைக்கப்படவில்லை. இந்திய நாட்டினுடைய ஜனநாயக அடிப்படையிலே இது இருந்து வருகிற ஒன்று. தவறாக பயன்படுத்தப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணுவார்களானால், அது தவறான ஒன்று என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு கு ரமணி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விளக்கங்களுக்கு பிறகும் அவர்கள் ஆயுதம் வைத்து நடத்தக் கூடிய டிரில் போன்றவைகளுக்கெல்லாம் புரகிபிஷன் என்ற வார்த்தை இருந்தால் தான் சரியாக இருக்கும் என்று விளக்கட் கொடுத்தார்கள். அதை புரகிபிட் பண்ணுவதற்கு வேறு சட்டங்கள் இருக்கின்றன. அதை அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு ரமணி அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். ஒரு நிகழ்ச்சி நடந்த பிறகு, வன்முறைகள் தலைதூக்கி, உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டு, பொருள் சேதங்கள் ஏற்பட்டு, அதற்கு பிறகு நடவடிக்கை எடுப்பதற்காக இருக்கிற சட்டங்கள்; 153(எ) பிரிவு அதற்காகத் தான இருக்கிறது. ஆனால் இப்போது நாம் கொண்டு வருகிற சட்டம் பிரிவென்டிவ்; இருக்கிற சட்டம் கியூரேட்டிவ். பிரிவென்ஷன் இஸ் பெட்டர் தேன் கியூர் என்ற வகையில் இந்தச் சட்டம் இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதெல்லாம் தெரிந்து தான் அரசியல் சட்டத்தின் 19-வது பிரிவினுடைய 2-வது பிரிவை அவரே தெரிவித்தார்கள். அதிலே ஆயுதங்கள் வைத்து நடத்தக் கூடிய நடவடிக்கைகளுக்கு சபிஷியன்ட்லி தேர் ஆர் லெஜிஸ்லேஷன் அண்ட் ரூல்ஸ் டு புரகிபிட்; நான் சொன்னதற்கு அவருடைய விளக்கம் கன்வின்சிங்காக இல்லை. அவரிடமிருந்து தகுந்த விளக்கம் வரவில்லை. படங்கள் சின்னங்கள், விளம்பர அட்டைகள், சித்திரங்கள், காட்சிப் பொருள்கள் இவைகள் எல்லாம் எப்படி டிஸ்ஆர்மணியை தூண்டுகிறது? அல்லது சமுதாயத்தில் கலகத்தை விளைவிக்கக் கூடிய எண்ணத்தை எப்படி தூண்டுகிறது? இரண்டு வகுப்புகளுக்கிடையே எப்படி மோதல்களை உண்டாக்குகிறது? அப்படிப்பட்ட முறையிலே தான் நான் சொன்னேன். ஆயுதம் தாங்கி இருக்கிற கடவுள்களுடைய சித்திரங்களைப் போட்டால் அதை



1984 மார்ச் 7] [திரு. கு. ரமணி]

எப்படி நீங்கள் தடுக்கப் போகிறீர்கள்? அது இருந்து கொண்டு இருக்கிறது இன் தி நேம் ஆப் ரெலிஜன். நான் சொல்வது பொது ஜனங்கள் நடவடிக்கையில் உழைப்பாளி மக்கள், பொது மக்கள் போஸ்டர்கள் போடுவது உண்டு; அல்லது ஒரு குறிப்பிட்ட கொடும்பாவியை எரிப்பது உண்டு. அதற்கு கூட லைசென்ஸ் கொடுக்கிறார்கள். ஒரு பெரிய உருவத்தைக் கட்டிக் கொண்டு போய் எரிப்பது உண்டு. அப்படிப்பட்ட முறையிலே பல நடவடிக்கைகள் பொது மக்களுடைய எண்ணங்கள் வடிவெடுத்து வருகிற போது நடக்கக் கூடிய நடவடிக்கைகள். இதற்கெல்லாம் உட்பட்டு வரக் கூடியது அல்ல.....

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் : விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் அளித்த பிறகு, விரிவாகப் பேச முடியாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள், செக்ஷன் 41(ஏ)-ல் இருக்கிற சப்-கிளாஸ் பி-ல் உள்ளதைப் பற்றிச் சொல்கிறார். அதைப் பொறுத்த வரைக்கும் நாம் தெளிவாகச் சொல்லி இருக்கிறோம்.

If in the opinion of the Commissioner, offend against decency or morality, or promote on ground of religion, race, place of birth, residence, language, caste or community or any other ground whatsoever, disharmony, feelings of enmiy or hatred or ill-will between different religious, racial, language or regional groups or cases or communities.

மத, மொழி, இன அடிப்படையில் இது போன்ற படங்கள் மூலமாகவோ, அல்லது பிளேகார்ட்ஸ் மூலமாகவோ கலவரங்களை ஏற்படுத்தினால் தடை செய்யலாம். நான் ஏற்கனவே சொன்னேன். மைய அரசு மிகத் தெளிவாக இதைப் பற்றிச் சொல்லி இருக்கிறது. இஸ்லாமிய இயக்கத்தைச் சேர்ந்த பிரிவினர்கள் அல்லது ஆர். எஸ். எஸ். பிரிவினர்கள் மத, இன அடிப்படையில் இது போன்று நடவடிக்கைகளில் ஈடுபட்டால் தடை செய்யலாம். இது போன்ற அடிப்படையில் நிகழ்ச்சிகள் பல்வேறு பகுதிகளில் இருப்பதால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் இப்படிப்பட்ட சட்டம் தேவை என்பதால் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இது அனுப்பப்பட்டு இருக்கிறது. கேரளத்திலும் கல்கத்தாவிலும் கூட இது இருக்கிறது என்பதை நான் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறேன்.

[1984 மார்ச் 7

திரு. அ. ரகுமான்கான்: இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :

"1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் தமிழ் நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகி றேன்:—

In clause 2,—in the proposed new section 41-A, in sub-section (4), in item (i),—

(*a*) after clause (*d*), *insert* the following :—
"(*e*) Jail Service personnel";

(*b*) *reletter* clause (*e*) as clause (*f*);

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.





பிரிவு 3.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 3, in the proposed new section 73-A, *for* "shall be liable on conviction", *substitute* the following:—

"If such writing for making offends against decency or morality or promotes on grounds of religion, race, place of birth, residence, language, case or community or any other ground whatsoever, disharmony, feelings of enmity or hatred or ill-will between different religious, racial, language or regional groups or castes or communities shall be liable on conviction."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4

பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன் னுள்ள கேள்வி :

"பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 5, for sub-clause (1), *substitute* the following :—

"(1) The Madras City Police and the Tamil Nadu District Police (Second Amendment) Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 16 of 1983) is hereby repealed."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

[1984 மார்ச் 7

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கின்ற நேரத்திலேயே அனைத்து எதிர்க் கட்சிகளும் ஏகமனதாக எதிர்த்து இருக்கின்றன. அதற்குப் பிறகு இவ்வளவு நாள் கழித்து அந்தச் சட்டமுன் வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறபோதும் அனைத்து எதிர்க் கட்சிகளும் ஏகமனதாக அதை எதிர்த்து இருக்கின்றன. பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்திலும், நேரடியாக முதலமைச்சர் அவர்களிடத்தில் இதைப் பற்றி நாங்கள் அப்பீல் செய்து இருக்கிறோம். இவ்வளவு செய்ததற்குப் பிறகும், ஆளும் கட்சி தனக்கு இருக்கும் ஸ்டீம்ரோலர் மெஜாரிட்டியை மட்டும் வைத்துக் கொண்டு இதை நிறைவேற்றியே தீருவோம் என்று சொல்வது, இந்த மாநிலத்தில் போலீஸ் ராஜ்யத்தை அமைக்கும் பாணியில் படிப்படியாக இந்த அரசின் நடவடிக்கைகள் இருப்பதைக் காட்டுகின்ற அளவிற்கு இந்தச் சட்டமுன்வடிவு அமைந்து இருப்பதால், எங்களுடைய கடுமையான கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்து வெளிநடப்பு செய்கிறோம்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

திரு சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு தேவையில்லை, ஜனநாயக விரோதமானது எதிர்க் கட்சிகளின் நடவடிக்கைகளை செயலற்றதாக்கும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ளது என்று ஏற்கெனவே சொல்லியும் கூட, ஒரே பிடிவாதமாக அரசு, தன்னுடைய அரசியல் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியே தீருவோம் என்று இருப்பதால், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், கண்டனம் தெரிவிக்கும் வகையிலும் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

(மாலை 5-50)

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தினால் காவல் துறையினர் தங்களுக்கு வேண்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பழி வாங்குவது உறுதி. எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் இது வேண்டாம் என்று எவ்வளவு தூரம் எடுத்துச் சொல்லியும் கூட இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதை எதிர்த்து, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வெளிநடப்பு செய்கிறேன். (உறுப்பினர் வெளிநடப்பு செய்தார்.)



1984 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும். "

பிரிவு 5 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ".

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, I move the following amendment :—

In clause 1,—

(*a*) in sub-clause (1), *for* "(Second Amendment) Act, 1983", *substitute* "(Amendment) Act, 1984";

(*b*) in sub-clause (2), *for* "13th August 1983", *substitute* "16th December 1983".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும் ."

THE HON. THIRU C. PONNAIYAN : Sir, I move the following amendment :—

In the enacting formula *for* "Thirty-fourth Year", *substitute* "Thirty-fifth Year";

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

[1984 மார்ச் 7.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1983 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் தமிழ்நாடு மாவட்டக் காவல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1983) திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(இ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரவர்களே, லாட்டரிச் சீட்டு என்பது தேவையானது என்ற கருத்திலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் " விழுந்தால் வீட்டுக்கு, விழாவிட்டால் நாட்டுக்கு " என்று சொல்லி இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

இந்த லாட்டரிச் சீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைக்கின்றபோது மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்துக்கள், இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய தொகையை, அரசு ஏழை எளிய மக்களை வாழ வைக்க திட்டங்களைப் போடுவதற்கு பயன்படுத்தும் ; அந்த அடிப்படையில் தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்படுகிறது என்பதாகும். இதை ஒரு சூதாட்டம் என்று சொல்கிறவர்கள் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

இன்றைக்கு குதிரைப் பந்தயம் இருக்கிறது, அது சூதாட்டம் தான். சீட்டாட்டம் இருக்கிறது, அது ஒரு சூதாட்டம்தான். அவற்றிலே லாபம் பெற்றாலும் நஷ்டம் வந்தாலும் அது தனிப்பட்ட நபரைப் போய்ச் சேருகிறது. ஆனால், லாட்டரிச் சீட்டு விழவில்லை என்றால் அதன் மூலம் ஒவ்வொருவரும் செலுத்தக்கூடிய தொகை அரசாங்கத்திற்குப் போய்ச் சேருகிறது. அதனால் அரசு பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கிறது. எனவே லாட்டரிச் சீட்டு என்பது இந்த நாட்டுக்குத் தேவை. அது நீடிக்கப்பட வேண்டும் என்ற கருத்திலே யாருக்கும் வேறுபாடு கிடையாது. ஆனால் இந்த அரசாங்கம் இன்றைக்கு 20 சதவீதம் விற்பனை வரியை லாட்டரிச் சீட்டுக்கு போட்டிருக்கிறது. இதிலேதான் எங்களுக்கு கருத்து வேறுபாடு ஏற்படுகிறது



1984 மார்ச் 7] [திரு. அ. ரகுமான்கான்]

இந்த வரி விதிப்பிற்கான காரணத்தைச் சொல்லும்போது 'ஃபினான்ஷியல் ரீசோர்ஸஸ்'—அரசாங்கத்திற்கு நிதி ஆதாரங்கள் கூடுதலாக கிடைக்க வேண்டும் ; நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக லாட்டரிச் சீட்டுகளுக்கு 20 சதவீதம் சேல்ஸ் டாக்ஸ் போடப்பட்டிருக்கிறது என்று காரண காரிய விளக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அரசு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு எவ்வளவோ வழிமுறைகள் இருக்கின்றன. இந்த அரசு ஏற்கெனவே நிதி ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டுதான் இருக்கிறது. உங்களுக்கெல்லாம் தெரியும். மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் மூலமாக சொல்ல விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே, ஆட்சிக்கு வந்த நேரத்திலே

We are committed to the policy of non-prohibition

என்று மதுவிலக்கு கொள்கையில் அழுத்தமாக இருக்கிறோம் எந்தக் காரணத்தைக் கொண்டும் மதுவிலக்கை நாங்கள் கைவிடமாட்டோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் அண்ணா அவர்கள் சமாதியின் முன்னாலே நீங்கள் எல்லாம்—அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் சழகக் கட்சிக் காரர்கள் சத்தியப் பிரமாணத்திலே கூட மதுவை ஒழிப்போம், மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்று சத்தியப் பிரமாணம் எடுக்கிறீர்கள் . ஆனால் நிதியாதாரங்களை பெருக்க வேண்டும் என்று போலிக் காரணத்தைக் காட்டி இன்றைக்கு நிதியாதாரத்தை பெருக்கிக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லி கள்ளுக் கடைகள், சாராயக் கடைகள் நாடு முழுவதும் அண்ணாவின் கொள்கைக்கு மாறாக, அண்ணாவின் சமாதியில் எடுக்கக் கூடிய இந்த சபதத்திற்கு மாறாக, தேர்தல் வாக்குறுதிகளுக்கு மாறாக, இன்றைய நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. இன்றைக்கு 100, 150 கோடி ரூபாய் வரைக்கும் மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம், உங்கள் பாஷையில் சொல்வது போல் தளர்த்தி இருப்பதன் மூலம், அரசாங்கத்திற்கு இப்போது வருமானம் வந்துகொண்டிருக்கிறது. ஆனால் நீங்கள் கைவைத்து இருப்பது—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி தமிழகத்தினுடைய முதலமைச்சர் சேல்ஸ் டாக்ஸ் பற்றிக் குறிப்பிட்டார்கள். சேல்ஸ் டாக்ஸ் நன்றாக, ஒரு பால் தருகிற காமதேனு, இன்றைக்கு எதற்கெடுத்தாலும், விற்பனை வரியில் தான் சர்க்கார் கை வைத்துக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், பொன்முட்டை இடுகின்ற வாத்தாக இன்றைக்கு விற்பனைவரி கருதப்படுகிறது. ஓரளவிற்குத்தான் அது பொன் முட்டைகளை இடும். ரொம்பவும் நீங்கள் அடிக்கடி பொன்முட்டைகளை முழுவதுமாக எதிர்ப்பார்ப்பது அந்தப் பொன் வாத்தை அறுத்துவிடுகிற காலக் கட்டத்திற்கு இந்த சர்க்கார் போய்விடக்கூடாது. ஏற்கெனவே பட்ஜெட்டில் இந்த விற்பனை வரி ஏறத்தாழ 54 கோடி ரூபாய்க்கு மேலே நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறோம் என்று போட்டிருக்கிறீர்கள்.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 7

ஏழை எளிய மக்களுக்கு பயன்படக்கூடிய பெட்ரோல் இன்
றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. கார்களிலே போகின்ற வசதி
படைத்த மக்கள், நடுத்தர மக்கள் பஸ்களிலே போவதால் பஸ்
கட்டணம் உயர்த்தப்படக்கூடிய நிலைமை ஏற்படலாம். டீச
லுக்கு வரி போடப்பட்டிருப்பதாலே விவசாயிகள் பாதிக்கப்படக்
கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதுபோல பருத்தி
நூல்களுக்கு விற்பனை வரி போடப்பட்டிருப்பதால், வேட்டி
வாங்குகின்றவர்கள், சட்டை போடுகின்றவர்கள் இன்றைக்கு
அதிகமாக சிரமப்படவேண்டிய காலக் கட்டம் இருந்துகொண்
டிருக்கிறது. ஆனால், ஏற்கெனவே பட்ஜெட்டிலே ரூ. 57
கோடிக்கு நீங்கள் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறீர்கள்.
ஏற்கனவே மதுவிலக்கை தளர்த்தியிருப்பதன் மூலம், ரூ. 100
150 கோடிக்கு கூடுதல் நிதியாதாரங்களைத் திரட்டி இருக்கிறீர்
கள். இது போதாது என்று சொல்லிவிட்டு, ஏழை எளிய மக்கள்,
குடிசைவாசிகள், ஆலமரத்துவாசிகள் அன்றாடம் சாப்பிடக்கூடிய
அந்த பூண்டு—அதற்கு கூட வரி போட்டிருக்கிறீர்கள். தமிழக
மக்களைப் பொறுத்த வரையில் மஞ்சள் ஒரு மங்களகரமான
காரியத்திற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. மஞ்சளின் மகத்
துவம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அந்த மஞ்சள் கயிறு
என்பது—தாலிக் கயிறுக்கு பெயரே மஞ்சள் கயிறு—அந்த மஞ்
சளுக்குக்கூட இந்த சர்க்கார் வரி போட்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், இப்படி விற்பனை வரி என்று
அந்த அமைப்புக்குள்ளே நுழைந்து நிதியாதாரங்களை திரட்டு
கிறோம் என்று சொல்லி ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் எதற்
கெடுத்தாலும் வரி என்று போடுகின்ற காலக் கட்டத்தை பார்க்
கிறோம். குலேபகாவலி படத்தில் நம்முடைய முதலமைச்சர்
அவர்கள் நடித்து இருக்கிறார். அதிலேகூட பாடினார். "அநி
யாயம், மிக அநியாயம் இந்த ஆட்சியிலே, எல்லாம் அநியாயம்
அநியாயம், குனிந்தால் வரி, நிமிர்ந்தால் வரி, இட்டிலிக்கு வரி,
சட்டினிக்கு வரி, அநியாயம், அநியாயம். இந்த ஆட்சியிலே"
எதற்கெடுத்தாலும வரி போடுவது அநியாயம் என்று சொன்
னார். அப்படிப்பட்ட நிலைமையிலே ஏன் இந்த வரி? என்
னுடைய சினிமாவில் இருக்கக்கூடிய பாடல்களின் கருத்துத்தான்
சர்க்காரினுடைய கொள்கை என்னுடைய கொள்கை என்று
சொல்லி நாடோடி மன்னன் படத்தைக் காட்டினார். குலே
பகாவலியில் உங்கள் கொள்கை என்பது உண்மையானால், இன்
றைக்கு இது போன்ற வரிகளை, லாட்டரிச் சீட்டின் மூலம் இன்
றைக்கு பிழைத்துக்கொண்டிருப்பவர்கள் யார்? மாளிகைக்
காரர்களா? அரண்மனைக்காரர்களா? அதன் மூலம் 3 இலட்
சத்திற்கு மேல் தொழிலாளிகள் பிழைத்துக்கொண்டிருக்கிறார்
கள். ஊனம் உற்றவர்கள் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.
கை, கால் இழந்தவர்கள் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள், கண்
ஒளி இழந்தவர்கள் அதன்மூலம் பிழைத்துக்கொண்டிருக்கிறார்
கள். ஏற்கனவே நீங்கள் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை



1984 மார்ச் 7] [திரு. அ. ரகுமான்கான்]

கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். குடும்பத்திலே ஒருவருக்கு
வேலை கொடுக்கப்போகிறோம் என்று சொல்வது இருக்கட்டும்.
இருக்கிற வேலையை இந்தச் சர்க்கார் பிடுங்காமல் இருந்தாலே
போதும்.

உதாரணமாக ஹவுசிங் போர்டிலே ஆயிரக்கணக்கான தொழி
லாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மாத
வரம் பால் பண்ணையிலே 1,500 தொழிலாளர்கள் டிஸ்மிஸ்
செய்யப்பட்டு, 3 ஆண்டுகளாகிறது. எமபிளாய்மெண்ட்
ஆபீசிலே 13 இலட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கவில்லை.
ஆக, லாட்டரிச் சீட்டின் மூலம் வேலை பார்ப்பவர் 3 இலட்சம்
பேர்கள் பிழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த 3 இலட்சம்
பேர், இன்றைக்கு வாழ்க்கையில் அந்த தொழிலை இழக்கக்
கூடிய அபாயம், நீங்கள் போடுகின்ற இந்த 20 சதவீத வரியிலே
ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்குத்தான் நான்
இவைகளையெல்லாம் இங்கே சொல்ல வேண்டிய அவசியம ஏற்
பட்டது.

(மாலை 6.00)

மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே நான் இன்
னொன்றையும் உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்
றைக்கு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைக்கூடச் சொல்லக்
கூடும். நம்முடைய அமைச்சர் அவர்கள் வெளியிலே கூட பேசி
யிருக்கிறார்கள். இங்கேயும்கூட அந்தக் கருத்துக்களை வலியுறுத்
தக்கூடும். இன்றைக்கு இந்தச் சீட்டின் மூலமாக ஏராளமான
பணம் தமிழ்நாட்டை விட்டு வெளியே போய்க்கொண்டிருக்கிறது
என்ற புள்ளிவிவரத்தை மேலவையில் நம்முடைய அமைச்சர்
அவர்கள்—நாவலர் என்று கருதுகிறேன்—கூட சொல்லியிருக்
கிறார்கள். நான் சொல்ல விரும்புகிறேன். கிட்டத்தட்ட 81 சத
வீதம் மீண்டும் தமிழகத்திற்கு அது வந்து சேருகிறது. ஏராள
மான கோடிக்கணக்கான ரூபாய் லாட்டரி சீட்டுக்கள் மூலம் வெளி
மாநிலங்களுக்குப் போகிறது என்பது உண்மையல்ல. எனக்குக்
கிடைத்த தகவலின்படி, உத்தரவாத பரிசாக சுமார் 45 சத
வீதம்; பரிசுகளுக்குரிய போனசாக 5 சதவீதம்; வியாபாரி
களின் கமிஷனாக சுமார் 20 சதவீதம்; அச்சுக் கூலியாக சுமார் 4
சதவீதம்; வினியோகஸ்தர்களின் கமிஷன் 3 சதவீதம்; விளம்
பரத்திற்கு சுமார் 2 சதவீதம் மற்றும் இதர இனங்களுக்காக
சுமார் 2 சதவீதம் என்று இப்படி பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆக,
81 சதவீதம் இந்த லாட்டரி சீட்டின் மூலமாக வெளி மாநிலங்
களுக்கு போகிறது என்று சொல்வது, கோடிக்கணக்கான தொகை
போகிறது என்று சொல்வது உண்மையல்ல. கொடுக்கின்ற
பணத்திலே 81 சதவீதம் தமிழகத்திற்குத்தான் வருகிறது என்று
எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இதன்
மூலமாக இங்கே இருக்கின்ற இந்த லாட்டரி விற்கும் தொழி
லாளர்களின் தலையில் கை வைப்பதாக இது இருக்கிறது. லாட்
டரிச் சீட்டுக்கள் மீது 20 சதவீதம் வரி விதித்தால் அது யாரைப்
பாதிக்கும். அதை வாங்குகின்ற ஏழை எளிய மக்களைத்தான்
பாதிக்கும்? இதனால் லாட்டரி சீட்டுக்களின் விலையும் உயர்த்
தப்படும். அப்படி லாட்டரி சீட்டுக்களின் விலைகள் உயர்த்தப்
படுகிறபோது, இதை வாங்குகின்ற ஏழை எளிய மக்கள்தான்
பாதிக்கப்படுவார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்த ஆளு
கின்ற சர்க்கார்தான் மக்களுடைய வாழ்க்கையில் ஒளியூட்டத்
தவறிவிட்டாலும் கூட, லாட்டரி சீட்டுக்கள் மூலமாக புதுப்புதுப்
பணக்காரர்கள் உருவாகக்கூடிய ஒரு வாய்ப்பையாவது உருவாக்
கிக் கொடுக்கலாம். இன்னும் சொல்லப்போனால், அந்த
வாய்ப்புக் கூட, இந்த வரி விதிப்பின் மூலமாக பெரிதும் பாதிக்
கப்படுகிறது. இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய லாட்டரி சீட்டுக்கள் சிந்து
வாரற்று இருக்கின்றன. மக்களிடத்திலே அதற்கு செல்வாக்கு
இல்லை. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால் பிற
மாநிலங்களில் எல்லாம் அந்த லாட்டரி சீட்டின் தொகைகளை
உயர்த்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், நீங்கள் இன்னும் அந்
தப் பழைய நிலையிலேதான் இருந்துகொண்டிருக்கிறீர்கள்.
லாட்டரி சீட்டுக்களின் தொகைகள் கவர்ச்சிகரமானதாக
லாட்டரி சீட்டுக்கள் கூட கவர்ச்சிகரமானதாக இல்லை.
னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன் இல்லை. இன்
சீட்டுக்களின் தொகையை உயர்த்துங்கள். நீங்கள் லாட்டரி
அதை விரும்பி வாங்குகின்ற விதத்திலே ஏற்பாடுகளைச் செய் மக்கள்
யுங்கள். அதையெல்லாம் விட்டுவிட்டு, இன்றைக்கு லாட்டரி
சீட்டுக்களிலே இந்தச் சர்க்கார் வேறு மாதிரியான கவனத்திலே
இருந்து கொண்டிருக்கிறது.

இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், லாட்டரி சீட்
டுக்கள் விற்பனைக்காக இலட்சக்கணக்கான அளவிலே அச்சடிக்
கப்படுகின்றன. பல இலட்சக்கணக்கான லாட்டரி சீட்டுக்கள்
விற்பனை ஆனாலும் கூட, இன்றைக்கு விற்பனை ஆகாத லாட்
டரி சீட்டுக்களுக்குத்தான் குலுக்கலிலே பரிசுகள் விழுகிறது.
இன்னும் தெளிவாகச் சொல்வது என்று சொன்னால், அந்தத்
தொகை விழுந்ததற்குப் பிறகு கூட, இப்போது ஹரியானாவாக
இருந்தாலும, மேகாலயாவாக இருந்தாலும், அவர்களுக்கு பரிசு
விழுந்தவுடனே, அந்தச் சீட்டை அவர்கள் பேங்கிலே டெபாசிட்
செய்தால், அவர்களுக்கு உடனே பணம் பெறுவதற்கான வாய்ப்பு
கள் அவர்களுக்கு இருக்கின்றன. ஆனால், தமிழகத்திலே அது
போன்ற வாய்ப்புக்கள், உடனடியாக பணம் பெறுவதற்கான
வாய்ப்புக்கள் இருக்கின்றதா என்று கேட்டால் இல்லை. (மணி
யடிக்கப்பெற்றது). மணியோசை கேட்கிறது. அதற்கு
என்ன பொருள் என்று கேட்டால் விற்பனை வரி 20 சதவீதம்





போட்டால், லாட்டரிச் சீட்டுத் தொழிலாளர்கள் தலையிலே
யும், அதை வாங்குகின்றவர்கள் தலையிலேயும் இதைப் புகுத்து
வதற்குத்தான் இது பயன்படும். ஆகவே, நான் கேட்டுக்
கொள்வதெல்லாம் நிதி ஆதாரங்களை அதிகப்படுத்துங்கள்;
லாட்டரி சீட்டுத் தொழிலை நடத்திக்கொண்டிருக்கக்கூடிய ஏழை
எளிய மக்கள், ஊனமுற்ற மக்கள் இன்றைக்கு வேதனையின்
விளிம்பில் இருக்கின்றார்கள். அவர்களை மீண்டும் கசக்கிப் பிழி
யாதீர்கள். அப்படிச் செய்தால், இது அநியாயம், இந்த ஆட்சி
யின் மிகப் பெரிய அநியாயம் என்று சொல்லி என் உரையை
முடிக்கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிற இந்த பொது
விற்பனை வரி மசோதாவிலே காரண நோக்கம் சொல்லப்பட்
டிருக்கிறது. அரசு மக்களுக்கு நலன் பயக்கும் பணிகள் பலவற்றை
மேற்கொள்ள கூடுதல் நிதி வாயில்களை திறக்க வேண்டியதன்
அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இந்த 20 சதவீத வரி, பரிசுச்
சீட்டுகளுக்கு, வெளி மாநில பரிசுச் சீட்டுக்களுக்கு போடப்படுவ
தாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தப் பரிசுச் சீட்டு என்பது எங்களைப் பொறுத்தவரையில்
கொள்கை ரீதியாக சரியா அல்லது தவறா என்பது வேறு விஷயம்
ஆனால் இன்றைய சூழ்நிலையில், தற்போது இருக்கிற பெரிய
பொருளாதார நெருக்கடியில் மாட்டிக் கொண்டு, நாடுகள் அல்
லது அரசுகள், இம்மாதிரியான காரியங்களைச் செய்ய வேண்டிய
ஒரு கட்டாயத்திற்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே
தான் இந்த அரசு பரிசுச் சீட்டின் மீது 20 சதவீதமான வரியை
கொண்டு வந்திருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்
பிட்டதைப் போல, இந்தப் பரிசுச் சீட்டின் மீது அதாவது வெளி
மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டுகள் மீது 20 சதவீதம் வரியை
விதிப்பது என்பது, சாதாரண பொது மக்களை மிகவும் பாதிக்
கும். எப்படி என்றால், நீங்கள் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை
தருவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாலும் கூட, இந்த பரிசுச்
சீட்டின் மூலமாக தானாகவே உண்மையிலேயே பல பேர்களுக்கு,
அது படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காதவர்களாக
இருந்தாலும் சரி, வீடு தேடி வேலை தந்தது போல இருக்கிறது.
இதன் மூலம் கிட்டத்தட்ட 3½ இலட்சத்திற்கும் மேற்பட்டவர்
கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆகவே இம்மாதிரியான புதிய வரிகளை நீங்கள் போடுவதன்
மூலமாக இந்தத் தொழிலுக்கு புதிய நெருக்கடி நிச்சயமாக
ஏற்படும். அப்படி ஏற்படும்போது இந்தத் தொழிலையே இது
பாதிக்கும். இன்னும் கூட சொல்கிறார்கள், அகில இந்தியா

விலே மற்ற மாநிலங்களிலே இருக்கக்கூடிய லாட்டரி சீட்டுகள்
எல்லாம் தமிழகத்தில் தான் அச்சடிக்கப்படுவதாகச் சொல்
கிறார்கள். அப்படியானால் அதன் மூலம் கூட தமிழக அரசுக்கு
வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இம்மாதிரி இந்த அரசு
புதிய வரிகளை விதிப்பதன் மூலமாக அந்த வெளி மாநிலங்களின்
லாட்டரி சீட்டுகள் கூட, அவைகளை அச்சடிப்பதில் கூட தடை
ஏற்படலாம், குறையலாம்,. அதன்மீது நமக்கு வருமானமும்
குறையலாம். ஆகவே, அதையும் நாம் இன்றைக்கு கணக்கில்
எடுத்தாக வேண்டும்.

அதேபோல வரி வரி என்று எதையும் நீங்கள் விட்டு வைப்ப
தாகத் தெரியவில்லை.இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றம்
மக்களை மிகவும் கசக்கி பிழிந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமை
யில் கூட, எங்கேடாப்பா வரி போடுவதற்கு பொருள் கிடைக்கும்
வழி கிடைக்கும் என்று துருவி துருவி பார்த்து, எங்கேயோ
இருந்து—வெளி மாநிலங்களிலிருந்து—வரக்கூடிய இந்த லாட்டரி
சீட்டுகளுக்கு வரி விதித்து அதன் மூலமாக பல லட்சக்கணக்கான
பேர்களுக்கு தொழிலில் ஆபத்து ஏற்படுத்துவது அவ்வளவு சரியாக
எனக்குத் தெரியவில்லை.

இதிலே இன்னும் கூட சொல்லப் போனால், இம்மாதிரி இந்த
பரிசுச் சீட்டுகள் சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டவர்கள் இன்
றைக்கு அரசுக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பியிருக்கிறார்கள்.
அதிலே பல கோரிக்கைகளையும் சில திட்டங்களையும் அவர்கள்
சொல்லி யிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கூட நீங்கள்
பரிசீலிக்கலாம். அதனாலே எந்த அளவிற்கு அரசுக்கு நல்ல வரு
மானம் கிடைக்கும், மக்களுக்கும் எந்தஅளவிற்கு அதிலிருந்து,
நீங்கள் நினைக்கக் கூடிய பல நல்ல காரியங்களை நிறைவேற்றிட
முடியும் என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். அவர்கள் சொல்லி
யிருக்கக்கூடிய சில ஆலோசனைகளில் முக்கியமாக, லாட்டரி
சீட்டுகள் நல்ல முறையில், கவர்ச்சிகரமாக அச்சிடப்பெற்று
இருக்க வேண்டும் என்பது ஒன்று.

இன்னொன்று, இந்த பரிசுச் சீட்டுத் துறை, இன்றைக்கு சிறு
சேமிப்புத் துறையோடு இணைந்து இருக்கிறது. ஆகவே அதற்கு
தனியாக கார்ப்பரேஷன் அமைத்தால் இன்னும் சிறப்பாக இதை
நடத்தலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இவைகளை
யெல்லாம் நம்முடைய அரசு பரிசீலிக்கலாம்.

அதைப்போலவே, இன்றைக்கு நம்முடைய மாநில பரிசுச்
சீட்டின் வாயிலாக 38½ சதவீதம் மட்டுமே பரிசுகள் வழங்கப்
படுகின்றன என்று சொல்கிறார்கள். மற்ற பல மாநிலங்களி
லிருந்து கிடைக்கக்கூடிய பரிசுச் சீட்டுகளின் பரிசுகள் 40 சதவீதத்
திற்கு மேல் இருப்பதாகவும் சொல்கிறார்கள்.





ஆகவே, நீங்கள் அரசுக்கு வருமானம் வரக்கூடிய முறையில் வழி கண்டு பிடிக்க வேண்டும் என்று உண்மையிலேயே விரும்பினால், மற்ற மாநிலங்கள் வைத்திருப்பதைப் போல 40, 45 சதவீதத்திற்கு பரிசுச் சீட்டுகளின் பரிசுத் தொகையை உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதனால் சீட்டுகள் அதிகமாக விற்பனை ஆகி, வருமானமும் அதிகமாக கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இதைப்போலவே நீங்கள் சென்ற ஆண்டும் நுழைவு வரியைக் கொண்டு வந்தீர்கள். அதைப் பொது மக்கள் கடுமையாக எதிர்த்ததற்குப் பிறகு அது நிறுத்தி வைக்கப்பட்டது. இப்போது வெளி மாநில பரிசுச் சீட்டுகளுக்கு வரி என்று புதியதாக கொண்டு வந்திருக்கிறீர்கள். அதைப்போலவே பல வகைகளில் வருமான வரி விதிக்கக்கூடிய வகையில் சட்டங்களையெல்லாம் இன்றைக்கு புதியதாக கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால் எதைக் கொண்டு வந்தாலும், நீங்கள் மக்களுடைய பிரச்சினையை தீர்ப்பதற்காக கொண்டு வருவதாக தெரியவில்லை.ஏதோ நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டும் என்ற நோக்கமே தவிர இது மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கொண்டு வரப்பட்டதாக தெரியவில்லை. அப்படி மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காகத்தான் என்று சொன்னால் , மக்களுடைய பிரச்சினைகளை இம்மாதிரியாக லாட்டரி சீட்டுகளுக்கு வரி போடுவதினாலே மட்டும் தீர்த்து விட முடியாது. அதற்கு பல நிலைகளில், கொள்கை ரீதியாக நல்ல பல சட்டங்களை, அடிப்படைச் சட்டங்களை, மக்களுடைய அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றிட வேண்டும். அதுதான் சிறந்ததாக இருக்கும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

(மாலை 6-10])

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, இந்த லாட்டரி சீட்டு சம்பந்தமான சட்ட முன்வடிவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த லாட்டரி சீட்டை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தின்மூலமாக இதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் பல விவரங்களை இந்த அவையில் சொன்னார்கள். இந்த லாட்டரி சீட்டை விற்பனை செய்வதன் மூலமாக பல லட்சக்கணக்கான சாதாரண ஏழை எளியவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் ; அப்பாவிகள் ஏமாற்றப்படுகிறார்கள். பலவிதமான ஆசைவார்த்தைகளைச் சொல்லி, பொய்யைச் சொல்லி, பிரசாரங்கள் செய்து, ஏமாற்றி, மோசடி செய்து இந்த லாட்டரி சீட்டை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் வருத்தத்தோடு இந்த அவையில் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. ஏ. டி. கருப்பையா] [1984 மார்ச் 7

அது மட்டுமல்ல. நாம் இன்றைக்கு இருக்கின்ற உலகம் விஞ்
ஞான உலகம். இந்த விஞ்ஞான உலகத்திலே ஜனங்கள் எப்படி
வளர்க்கப்பட வேண்டுமென்பதற்குப் பதிலாக, அவர்களை
ஏமாற்றுவதற்கு ஒரு அடையாளமாக இந்த லாட்டரி சீட்டு
விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. காரணம், மடமை,
அறியாமை ஆகியவற்றைப் போக்க வேண்டிய காலகட்டத்தில்
இந்த விஞ்ஞான உலகத்தில், லாட்டரி சீட்டை விற்பனை செய்
வதற்கு ஒரு நபரிடத்தில் பலவிதமான பிரசாரங்கள் செய்யப்
படுகின்றன; செய்து அப்படி ஏமாற்றப்படுகிறார்கள். அவர்கள்
ஏமாந்து ஒரு ரூபாய் கொடுத்து சீட்டை வாங்கி, அந்தப் பரிசு
விழவில்லை என்றால், அதன் மூலம் லட்சக்கணக்கான குடும்
பங்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே, நான் இந்த நேரத்
தில் கேட்டுக்கொள்வது, இந்தப் பரிசுச் சீட்டை ரத்து செய்
வதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலம் இதை
ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய
கருத்தை இத்துடன் முடித்துக்கொள்கிறேன். நன்றி.
வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவின்
மீது உறுப்பினர்கள் தங்கள கருத்துக்களைச் சொன்னார்கள்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் சொல்கிற
போது, தெளிவாகவே சொன்னார்கள. பரிசுச் சீட்டின் மூலமாக
கோடிக்கணக்கான மக்கள் அதை வாங்கி, சீட்டு குலுக்கப்பட்டு,
நம்பரைப் பார்த்து ஏமாந்து விடுகிறார்கள் என்பது உண்மை
தான். ஆனால், அப்படிப்பட்ட பரிசுச் சீட்டை நிறுத்து
வதற்கு மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை. நாம்
நிறுத்தி விட்டோமானால், இப்போதே 190 கோடி ரூபாய்க்கு
வருஷத்திற்கு தமிழ் நாட்டிலே மட்டும் விற்பனையாகிறது என்று
சொல்லுகிறபோது, நம்முடைய தமிழ்நாட்டினுடைய பரிசுச்
சீட்டின் மூலம் 9 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. அதை
யும் நிறுத்தினால், இந்த 190 கோடி என்பது, 200 கோடியாக
அவர்கள் இங்கே வந்து விற்பார்கள். ஆகவேதான், இதை நாம்
விற்க வேண்டிய அளவிலே இருக்கிறோம் என்பதைச் சொல்
கிறேன். இந்த வரியை யார் கொடுக்கிறார்கள் என்றால்,
யாராவது மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்து, அவர்கள் வாங்கு
கின்ற பொருளின்மீது நாம் வரி போடவில்லை. சம்பாதிக்கா
மல், எப்படியாவது பணம் திரட்ட வேண்டுமென்று வாங்குகின்ற
பரிசுச சீட்டின்மீது வரி போடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்தப் பரிசுச்சீட்டின் மூலமாக வருகின்ற
வருமானத்தை அரசு எதற்குப் பயன்படுத்துகிறது என்பது உங்க
ளுக்கு நன்றாகத் தெரியும். வளர்ச்சித் திட்டத்திற்கு பயன்
படுத்துவது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தப் பரிசுச்
சீட்டின் மேல் போடப்பட்டிருக்கின்ற விற்பனை வரி ஜனவரி
28 ஆம் தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது. இதற்கு நீதி



1984 மார்ச் 7] [எஸ். டி. சோமசுந்தரம்]

மன்றத்திற்குச் சென்று தடை கேட்டார்கள். தடை கோரிக்
கையை ரத்து செய்து விட்டார்கள். ஆகவே, இந்த சட்ட முன்
வடிவை நீங்கள் ஆதரித்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று
கேட்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் . பேரவை முன்னுள்ள
கேள்வி—

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 11/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற
வேண்டும்.

தீர்மானம் பேரயையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; துணைத் தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி
(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்
வடிவு எண் 11/1984) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்
வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## 7. அரசினர் தனித் தீர்மானங்கள்

(அ) 1974 ஆம் ஆண்டு நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்
படுத்தல்) சட்டத்தில் (மத்திய சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை
தமிழ்நாட்டில் பின்பற்றுதல்.

*மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர்
அவர்களே, நான் கீழ்க்கண்ட தனித் தீர்மானத்தை மொழிகிறேன்—

"நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல், கட்டுப்படுத்தல்,
நீர் பயன்படுத்த தக்கதாயிருத்தலைப் பராமரித்தல், தூய்மை
கெட்ட நீரை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல் ஆகியவை
தொடர்பான விவகாரங்கள் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு

[திரு எஸ். என். இராசேந்திரன்]　　[1984 மார்ச் 7

வரப்படுவதன் மூலம், அஸ்ஸாம், பீஹார், குஜராத், ஹரியானா,
ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகா, கேரளா,
மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம்
முதலிய மாநிலங்களில் முறைப்படுத்தப்படவேண்டும் என்பதற்கு
இந்த மாநிலங்களின் சட்டமன்றங்கள் அனைத்திலும் இந்திய
அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படி
தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளபடியால், 1974 ஆம்
ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்)
சட்டத்தை (மத்தியச் சட்டம் 6/1974) நாடாளுமன்றம் இயற்றி
யுள்ளதாலும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இரு அவைகள் இந்திய
அரசியலமைப்புச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படி,
தீர்மானம் நிறைவேற்றி மேற்சொன்ன 1974 ஆம் ஆண்டு நீர்
(தூய்மை கெடுதலைத் தடுத்தல்—கட்டுப்படுத்தல்) சட்டம்
(மத்தியச் சட்டம் 6/1974) தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு
1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு 31 ஆம் நாளிலிருந்து இம்மாநிலத்தில்
செயலுக்கு வந்துள்ளபடியாலும், மேற்சொன்ன சட்டம் சில
நோக்கங்களுக்காக நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் திருத்தப்
படவேண்டும் என்கிற வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்
தின் 252 ஆம் பிரிவின் (1) பகுதியின்படியும் அதன் (2) பகுதியின்
படியும், அஸ்ஸாம், ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலச்
சட்டமன்றப் பேரவைகள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ள
படியாலும்,

மேற்சொன்ன தீர்மானங்களை ஒட்டி, 1978 ஆம் ஆண்டு நீர்
(தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச்
சட்டத்தை (மத்தியச் சட்டம் 44/1978) நாடாளுமன்றம்
இயற்றியுள்ள படியாலும்,

1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-
கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக 1974 ஆம்
ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்)
சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களைத் தமிழ்நாடு மாநிலத்
தில் பின்பற்றுவது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளபடியாலும்,
அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ம் பிரிவைச் சேர்ந்த (1) (2)
பகுதிகளில் வழங்கியுள்ள அதிகாரங்களால், 1978 ஆம் ஆண்டு நீர்
(தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச்
சட்டத்தின் வாயிலாக (மத்தியச் சட்டம் 44/1978) 1974 ஆம்
ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்)
சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6/1974) செய்த திருத்தங்களை
தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றவேண்டும் என்று இச் சட்ட
மன்றப் பேரவை இப்போது இதனால் தீர்மானிக்கிறது.''

திரு. என்'. வரதராஜன்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை தூய்மைப்
படுத்துவது, அதைக் கட்டுப்படுத்துவது, அதை மீண்டும் பயன்



1984 மார்ச் 7]　　[திரு. என். வரதராஜன்]

படுத்தி அதைப் பராமரிப்பது என்ற வகையில் இன்று கொண்டு
வரப்பட்டிருக்ககூடிய இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன்,
வழிமொழிகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்கிறபோதே இந்தத்
தீர்மானம் அம்லுக்கு வரத் தகுந்த காரியங்களிலே அரசு
கவனமாக இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்த
விரும்புகிறேன். இன்று தொழில்கள் நவீனப்படுத்தப்படுகின்ற
நிலை இருப்பதால் அதிகமான அளவுக்கு கழிவு அதிகமாகி
இரசாயனப்பொருட்கள் சுற்றுப்புற சூழ்நிலை மிகப் பெரிய
அளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்குச்
சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலே தோல் பதனிடும்
தொழில், கடந்த சில ஆண்டுகளிலே நடைபெற்றபோது 40
நாட்களுக்கு மேலாக சுண்ணாம்புக்குழியிலே ஊறவைத்துத்தான்
பதனப் படுத்துவார்கள். ஆனால், இன்றைக்கு இரசாயனப் பொருள்
கள் மூலமாக சில நாட்களிலேயே பதனப்படுத்தப்படுகிறது என்ற
காரணத்தினால் மிகக் கொடுரமான கழிவுகள் வெளியேறி
அந்த வட்டாரத்தினுடைய சுற்றுப்புற சூழ்நிலையைப் பாதிக்
கிறது, குடிநீர் பாதிக்கப்படுகிறது, விவசாயிகளின் உற்பத்தியைப்
பெருமளவுக்குப் பாதிக்கிறது. சிறு தொழில் வளர்ச்சி தமிழகத்
திலே ஏற்பட்டிருந்தாலும் தோல் பதனிடும் தொழிற்சாலை
சாயப் பட்டறைகள், சிமென்ட் தொழிற்சாலைகளிலிருந்து வரும்
தூசி, புகை, அதைப்போலவே சாராய கலவைத் தொழிற்சாலை
களிலிருந்து வரும் கழிவு இவைகளால் பல்வேறு பகுதிகளிலே
சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு குடிநீர் பாதிக்கப்படுகிற பிரச்
சினை இருக்கிறது. உதாரணத்திற்குச் சொன்னால் திண்டுக்கல்
நகரத்தைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலே சுமார் 5 ஆயிரம் ஏக்கர்
நிலம்-விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய அருமையான நிலங்கள்-
பயனில்லாமல், பண்படுத்தப்படாமல் அழிந்து இருக்கிறது. காலங்
காலமாக அதை நம்பி வாழ்ந்தவர்கள் இன்றைக்கு எதுவுமே
இல்லாமல் நகர்ப்புறங்களிலே கூலிவேலை செய்யக்கூடிய
நிலைமையிலே இருக்கிறார்கள். இதை ஒரு உத்திரவு
மூலமாக அமல் நடத்த முடியும் என்ற நிலைமை இருக்
கிறது. வேறு ஒரு அமைச்சர் இதற்குப் பொறுப்பை
ஏற்றிருந்தார். புதிய அமைச்சர் இப்போது இருக்கிறார்கள்.
அதிலே பிரச்சினையில்லை. அவர் திண்டுக்கல்லுக்கு
வந்தபோது அமல்படுத்துகிற உத்திரவைப் போட்டால் அமல்
படுத்தினால்தான் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ்கள் வழங்
கப்படும் என்ற உத்திரவைப் போட்டிருக்கிறோம். ஆனால்
அந்த உத்திரவு அமலாகவில்லை. காரணம் சிறிய சிறிய தொழில்
அதிபர்கள் அதற்காக இலட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்க
முடியாமல் இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற தொழில்
களின் மூலமாக மத்திய சர்க்கார், அது வைத்திருக்கிற தொழில்
அபிவிருத்திக் கார்ப்பரேஷனுக்கு வருமானம் வருகிறது. அதிலே

(திரு. என். வரதராஜன்) [1984 மார்ச் 7

50 கோடி ரூபாய் இப்போது மூலதனமாக சேர்ந்திருக்கிறது
என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு சேர்த்து வைத்திருக்கிற
பணம்—அன்னியச் செலாவணியை ஈட்டித்தருகின்ற இந்தத்
தொழில்களினால் மத்திய சர்க்கார் வருமானம் பெற்று அந்தப்
பணத்தைச் சேகரித்து வைத்திருக்கிறது—எந்தவிதமான உபயோக
மும் இல்லாமல் அந்தப் பணம் முடங்கி இருக்கிறது. ஆகவே
அந்த நிதியைப் பெற்று இந்த கழிவு நீரை சுத்தப்படுத்தவேண்டும்.
மாநில அளவிலே மாநில அரசு தன்னுடைய பங்கை கொடுத்தாலும்
நம்மாலே மட்டும் இதை நிறைவேற்றிவிட முடியாது.
வெறும் உத்திரவு மூலம் இதை நிறைவேற்றிவிட முடியாது.
தமிழ்நாட்டு மக்களுடைய நல உரிமைகள் இதிலே அடங்கியிருக்கிற
காரணத்தினால் மத்திய அரசிடமிருந்து அதைப் பெறவேண்டும்.
குறிப்பாக பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு வேறு
தொழிலே இல்லாத காரணத்தினால் அரசு இரண்டு காரியங்
களைச் செய்யவேண்டியிருக்கிறது. மேட்டூர் கெமிக்கல்ஸிற்குப்
பக்கத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு இதற்காக ஆயிரம் ரூபாய்
நட்ட ஈடு கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே பாதிக்கப்
பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈடு கொடுக்கவேண்டும். அழிந்திருக்
கிற நிலங்களைப் பண்படுத்த அரசு உதவிடவேண்டும். இவ்
வாறு பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளிலே எல்லாம் 70 அடி
தோண்டினாலும், போரிங் போட்டாலும் தண்ணீர் உப்புத் தண்
ணீராக, சுகாதாரத்திற்கு ஏற்றபடி இல்லாத தண்ணீராகத்தான்
இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதிகளிலே எல்லாம் கூட்டுக்
குடிநீர் திட்டத்தை அமல்படுத்த திட்டமிடவேண்டும். எப்
போதும் அவர்கள் குடிநீரைப் பொறுத்தவரைக்கும் சுற்றுப்புற
சூழ்நிலை பாதிக்கப்பட்டிருப்பதால் பிரச்சினை இருக்கிறது.
ஆகவே அப்படிப்பட்ட திட்டத்தை நிறைவேற்றவேண்டும். சிறிய
தொழில் அதிபர்கள் கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதற்கு நிதி
ஆதாரங்களைக் கொடுக்கவேண்டும் அல்லது அவர்களுக்குக் கடன்
களைக் கொடுத்து திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும். பெரிய
தொழில் அதிபர்கள் உடனடியாகச் செய்யவேண்டுமென்று
சொல்லவேண்டும். சிமின்ட் தூசியினால் ஆயிரக்கணக்கான ஏக்கர்
நிலங்கள் சிமின்ட் படிந்த தரைபோன்று மாறிவிட்டன, விளைய
வில்லை, சுகாதாரமும் பாதிக்கப்படுகிறது, தென்னைமரம் பாதிக்
சப்படுகிறது. ஆகவே, மிகப் பெரிய அபத்தான காரியங்களைத் தடுக்
கின்ற தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது பயனுள்ள காரியங்களில்
அரசு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்,
வணக்கம்.

(மாலை 6-20)

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவையின் மாற்றுத்
தலைவர் அவர்களே, குடிநீர் கெடுதல் மற்றும் தூய்மைப்
படுத்துவது என்ற சட்டத்தின் மீது சில கருத்துக்களை கூற
நான் ஆசைப்படுகிறேன். வளர்ந்து வருகின்ற நாட்டில் தொழி



1984 மார்ச் 7] (திரு. தி. கா. நல்லப்பன்)

லும் தொழிற்சாலையும் மிக அவசியம். ஆனால் இந்த தொழிற்சாலைகளுக்கு முன் அனுமதி வழங்குகின்றபோது அந்த தொழிற்சாலைகளுடைய கழிவு நீரை எப்படி மக்களுக்கு கெடுதல் இல்லாத முறையில் அதை தடுத்து ஏனைய வழிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அந்த அனுமதியோடு முன் அனுமதிகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நீர் கெடுதலைப் பொறுத்தவரையில், சாராய தொழிற்சாலை, கரும்பு ஆலைகள், சாய பட்டறை தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இப்படி குடிநீரை கெடுக்கின்ற பெரும்பாலான தொழிற்சாலைகள் அந்த கழிவு நீரை சமீபத்தில் இருக்கக்கூடிய ஆறுகளிலோ, குட்டைகளிலோ அல்லது குளங்களிலோ விடுகின்றபோது அந்த ஆற்று நீர் குடிப்பதற்கு உபயோகம் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பாக திருப்பூரில் உள்ள சாய பட்டரை கழிவுநீரை நொய்யலில் விடுகின்ற போது என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய சில ஊர்கள் அந்த நொய்யல் ஆற்றில் வருகிற கழிவுநீர் வருகிற காரணத்தால் அறவே குடிநீர் கெட்டு அது உப்பு நீராக மாறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மாற்று ஏற்பாடு நிச்சயமாக செய்ய வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்படுகிறது.

அதுபோல என்னுடைய தொகுதியிலே துடுப்பதி ஊருக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய வீராச்சிபாளையம் என்ற ஊரில் உள்ள சாயப்பட்டறை தொழிற்சாலையில் அங்கு சாயத்தை நனைத்து அந்த கழிவு நீர் பூராவும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குடிநீர் கெட்டு விடுகிறது. உதாரணமாக பவானி சமீபத்தில் இருக்கக்கூடிய அந்த சாராய தொழிற்சாலையிலிருந்து பவானி ஆற்றில் வருகின்ற அந்த கழிவு நீர் விவசாயத்திற்கும், குடிப்பதற்கும், ஏன், அங்கே இருக்கக்கூடிய நீரில் ஒரு பித்தளை சாமானை எடுத்துச் சென்று நனைத்தாலோ அல்லது அந்தக் காற்றுப் படுகின்ற சமயத்திலோ அந்த பித்தளை சாமான் வேறு மாதிரி ஒரு நிறத்தில் மாறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதே போல் சிமெண்டு தொழிற்சாலை, அது திருநெல்வேலியில் உள்ள தொழிற்சாலையாக இருந்தாலும் அல்லது சேலத்தில் இருக்கக்கூடிய சங்ககிரி தொழிற்சாலையாக இருந்தாலும் எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய தொழிற்சாலையாக இருந்தாலும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய விவசாய பூமிகள் அனைத்தையும் விவசாயத்திற்கு லாயக்கு இல்லாத ஒரு சூழ்நிலைக்கு அந்த புகையிலிருந்து சிமெண்டுகள் பரவி கெடுத்து விடுகின்ற ஒரு நிலைமைக்கு வந்து விடுகிறது. ஆகவே, இம்மாதிரியான இடங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளுக்கு இம்மாதிரி

யாக அரசுத் தரப்பிலே நஷ்டயீடு கொடுப்பதோடு, பல்வேறு
இடங்களில் குடிதண்ணீருக்குப் பாதிப்பு ஏற்படுகின்றபொழுது
அந்தத் தண்ணீரைச் சுத்தப்படுத்துகின்ற நேரத்தில் வேறு இடங்
களிலேயிருந்து குடிதண்ணீர் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தச் சட்டத்தை வர
வேற்று அமர்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்** : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு சுற்றுச் சூழல் மாசுக்
கட்டுப்படுத்தல் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற
இந்தத் தீர்மானத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நீர்
தூய்மை கெடுதலைத் தடுத்தல் அல்லது கட்டுப்படுத்தல் அல்
லது நீர் பயன்படுத்த தக்கதாயிருத்தலைப் பராமரித்தல் அல்
லது தூய்மை கெட்ட நீரை மீண்டும் பயனுக்குக் கொண்டு
வருதல் ஆகிய இப்படிப்பட்டவைகளைச் செய்ய நாடாளுமன்றத்
திலே சட்டம் இயற்றியிருந்தாலும், மாநில அரசுகள் அதைப்
பின்பற்றி, சட்டத்தின் மூலமாக இப்படிப்பட்ட நல்ல காரியத்தை
செய்வதை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால், அரசுக்கு இரண்டு கடமைகள் இருக்கின்றன. ஒன்று,
தொழில்களையும் வளர்க்க வேண்டும். அதே நேரத்தில், இரண்
டாவதாக தொழில்கள் வளர்கின்ற ஒரு கால கட்டத்தில் அத
னுடைய சுற்றுப் புறங்கள்—குடிதண்ணீர் மட்டுமல்லாமல், சுற்
றுப்புறங்களிலுள்ள மக்கள் சுவாசிக்கின்ற காற்றுகூட கெடாமல்
இருப்பதற்கு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை
யும் இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இதிலே
பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற மாவட்டம் என்று
சொன்னால், வடாற்காடு மாவட்டம்தான் முதலில் வரும்.
சென்னையிலிருந்து பெங்களூருக்குச் செல்கின்றவர்கள் டிரெயி
னிலோ அல்லது பேருந்திலோ சென்றால் அவர்கள் கண்ணை
மூடிக்கொண்டு சென்றாலும், துர்நாற்றம் வருகின்ற இடத்தில்
கண்விழித்துப் பார்த்தால் ஒன்று அது இராணிப்பேட்டையாக
இருக்கும் அல்லது வாணியம்பாடியாக இருக்கும். இப்படிப்பட்ட
சூழ்நிலை பல்லாண்டுக் காலமாக அங்கே நிலவி வருகிறது. அதைப்
பற்றி இந்தப் பேரவையிலேயும் பலமுறை நாம் விவாதித்
திருக்கிறோம்.

அதே நேரத்தில், வாணியம்பாடி, இராணிப்பேட்டை,
ஆம்பூர் போன்ற இடங்களில் உள்ள தோல் பதனிடும் தொழிற்
சாலைகளின் மூலமாக இந்தியப் பேரரசுக்குப் பல கோடிக்கணக்
கான ரூபாய் அன்னியச் செலாவணியாகக் கிடைக்கிறது என்
பதை நாம் மறந்து விடக்கூடாது. இதே வேகத்தில் போய்க்





கொண்டிருந்தால் பக்கத்திலே உள்ள கிராமங்களிலே இன்னும்
பத்து பதினைந்து ஆண்டுக் காலத்தில் பாலாற்றில் இருக்கின்ற
தண்ணீரை எடுத்துக் குடிப்பதற்குப் பயன்படுத்த முடியாத ஒரு
அபாயகரமான நிலை ஏற்பட்டு விடும். அதைப் போக்குவதற்குத்
தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இனி புதிதாகத்
தொழில்களைத்துவங்குகின்றவர்களுக்குஅனுமதிவழங்கும்பொழுது
கட்டுப்பாடு விதிக்க வேண்டும் ; ஏற்கனவே தொடங்கப்பட்டு
இருக்கின்ற தொழில்களின் தொழில் அதிபர்கள் இந்தப் பணியைச்
செய்வதற்கு அவர்களிடத்தில் நிதி நிலைமை இல்லாமல் இருந்
தாலும் கூட, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்
கூறியதைப் போல, அரசாங்கமே கடனாக வழங்கிக்கூட இந்தத்
திட்டத்தைச் செயல்படுத்துமாறு பார்த்துக் கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, நாம் சென்னையிலேயிருந்து தெற்குப் பகுதி
களுக்குப் பஸ்களிலோ அல்லது டிரெயின்களிலோ சென்றால்,
செங்கற்பட்டை நெருங்கும் போது, சாராயத் தொழிற்சாலை
யின் வாடை வீசும்போது, நாமெல்லாம் செங்கற்பட்டுக்கு வந்து
விட்டோம் என்று நினைவுபடுத்தும் விதத்தில் இருக்கிறது. அதற்
கும் தகுந்த நடவடிக்கை எடுத்தாலன்றி, எதிர் காலத்தில்
பாலாறே துர்நாற்றம் வீசும் தண்ணீராக மாறிவிடும் சூழ்நிலை
இருக்கின்றது.

இதிலே அரசாங்கம் உடனடியாக முதல் கவனம் செலுத்த
வேண்டும். ஏற்கனவே பல சட்டங்களை நாம் இயற்றியிருந்
தாலும், அவைகளெல்லாம் ஏட்டளவிலே இருக்கின்றனவே தவிர,
நடைமுறையிலே நல்ல முறையில் செயல்படும் விதத்தில் இல்லை.
எனவே, இந்தச் சட்டமும் அப்படி இருந்துவிடாமல், இதை
நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும். அவ்வாறு செயல்
படுத்தி, விவசாயிகளுக்கு இறைவைப் பாசனத்திற்கு வேண்டிய
தண்ணீர் பாதிக்கப்படாமலும், அதே நேரத்திலே கிராமங்
களுக்கு நல்ல குடிதண்ணீர் கிடைக்கின்ற விதத்திலேயும், சுற்றுப்
புறங்களிலே உள்ள கிராம மக்கள் நல்ல காற்றைச் சுவாசிக்கவும்,
நல்ல வழிவகை காண அரசு முயல வேண்டுமென்று கோரி நான்
முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

(மாலை 6–30)

* **மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்** : மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு துறை தமிழகத்திலே
சமீபத்திலேதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1984 மார்ச் 7

இந்தச் சட்டத்தை மத்திய அரசு 1974-ஆம் ஆண்டு தான், கொண்டு வந்தது. இந்தச் சட்டம் அஸ்ஸாம், பீகார், குஜராத், ஹரியானா, ஹிமாச்சல பிரதேசம், இராஜஸ்தான், ஜம்மு-காஷ்மீர் கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்தின் வாயிலாக ஒவ்வொரு மாநிலத்திலும் வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் தமிழகத்திலே 1978-லேயே வாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்தாலும் கூட, இதை இன்னமும் தீவிரப்படுத்தவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் மத்திய அரசு 1974-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வந்து மற்ற மாநிலங்களிலும் அமலுக்குக் கொண்டுவந்திருக்கின்றது. நமது மாநிலத்திலே 1981-ஆம் ஆண்டு இந்தச் சட்டத் திருத்தத்தினை அமலுக்குக் கொண்டு வந்து தீவிரப்படுத்த வேண்டும் என்று முயற்சி எடுத்தும், மன்றத்திலே அனுமதி பெறாத சூழ்நிலையில் இன்றைக்கு இந்தத் திருத்தம் இங்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதன் வாயிலாக நீர், நிலம், ஆகாயம் ஆகிய இந்த 3 பிரிவுகளிலும் தூய்மையைப் பாதுகாப்பது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

நீர், நிலம், ஆகாயம் ஆகியவற்றிலே தூசு படிவதற்கான காரணங்களையும், எந்தத் தொழிற்சாலைகளால் அல்லது எந்தத் தொழிலால் இது ஏற்படுகின்றது என்பதையும் இந்த வாரியம் ஆராய்ந்து அந்தத் தொழிற்சாலைகள் அனைத்தும் இந்த வாரியத்திலே 6 மாதத்திற்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற முறையினை அவர்களுக்குத் தெரிவித்திருக்றோம். அந்தக் காலக்கெடு 31—3—1984-ல் முடிகின்றது.

அடுத்து, தோல் பதனிடும் தொழில்களைப் பற்றி இங்கே சொன்னார்கள். தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீரால் ஏற்படுகின்ற தூய்மைக் கேடுகளை எந்த வகையிலே நீக்கவேண்டும் என்று அவர்களோடு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கலந்து பேசி, வழிவகைகளைக் கேட்டு அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அந்த தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அறிவுறுத்தப்படும். அதையும் மீறி அவர்கள் கவனவீனமாக இருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே கழிவு நீரை, நல்ல நீராக மாற்றி ஆற்றிலோ அல்லது கிணற்றிலோ விட வேண்டும் என்பதுதான் இச்சட்டத்தின் நோக்கமாகும். அதைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டிய வழிவகைகளை இந்த வாரியம் காட்டும். ஆனால் அதை அவர்கள் செய்யத் தவறினால் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கான



1984 மார்ச் 7] [திரு. எஸ். என் இராசேந்திரன்]

திருத்தமும் இந்தத்திருத்தத்திலே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதன்படி முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டிடம் தான் இந்தக் குற்றச்சாட்டுகளைக் கொண்டு சென்று செய்யத் தவறியவர்களிடம் காரணம் கேட்டு, தவறியதற்காக இரண்டாண்டுகள் வரை ஜெயில் தண்டனையும், இரண்டாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும் என்ற அளவிலே இங்கே திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

ஆகாயத்திலே ஏற்படுகின்ற சீர்கேடுகளைப் பொறுத்தவரையில் பொலூஷன் என்பதற்காகத் தனிச் சட்டம் இருக்கின்றது. பொலூஷன் என்பது ஆகாயத்தில் தூசு படிவது. அதாவது சிமெண்ட் ஆலைகள் போன்றவற்றிலிருந்து வெளி வருகின்ற புகைகளைத் தடுப்பதற்கான வழிவகைகளும் இங்கு இருக்கின்றன எனவே சிமெண்ட் ஆலை அதிபர்களும் இதிலே பதியச் சொல்லி விண்ணப்பம் அனுப்பி இருக்கிறார்கள். அதற்கும் காலக்கெடு 31-3-1984 உடன் முடிகின்றது. அதற்குப் பிறகுதான் அவர்களுக்கு வழி முறைகளைக் காட்டுவார்கள். ஆகவே இந்தத் துறை எடுக்கின்ற முயற்சி காற்றிலும், நீரிலும், நிலத்திலும் தூய்மை காண வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே இதிலே பேசுகின்றபோது விவசாயப் பெருங்குடி மக்கள் மட்டும்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். ஆனால் அனைத்து மக்களும் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். மிருகங்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் மரங்கள் கூட பாதிக்கப்படுகின்றன என்றெல்லாம் கூறப்படுவதால் அனைத்தையும் பாதுகாக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய பொறுப்பை இது வகிக்கின்றது.

ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டயீடு அளிப்பதோ அல்லது தொழில் அதிபர்களுக்கும் பணம் கொடுத்து இதைச் செய் என்று சொல்வதோ இந்தத் துறையின் வேலை அல்ல, வழி வகைகளைக் காட்டும். செலவினங்கள் அதிகம் இல்லாத வகையிலே மேலை நாடுகளிலே, அண்டை மாநிலங்களிலே பின்பற்றுவதைப் போல அந்தத் தொழில்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டும். தூய்மை காக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான் இதைச் செவ்வனே நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தம் மைய அரசால் கொண்டுவரப்பட்டு இன்றைக்குத் தமிழகத்திலே அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை எடுப்பதற்கான தீர்மானத்தைத் தான் முன்மொழிகின்றேன். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதன் வாயிலாக, தூய்மையைக் காப்பதாக அர்த்தம் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 7

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பின்னாலே ஒன்றை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இன்றைக்குத் தமிழ்நாட்டிலேயிருந்து ஏற்றுமதியாகக் கூடியதிலிருந்து பெறக்கூடிய வருவாயிலே ரூ. 100 கோடி வரையிலும் மத்திய அரசாட்சி தோல் அபிவிருத்தி கார்ப்பரேஷன் என்ற பெயரிலே பணத்தை ஒதுக்கியிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே பெரிய அதிபர்கள் மீது கடுமையான நடவடிக்கையை எடுக்க அரசு முயற்சி செய்வதை வரவேற்கிறேன். சாதாரண சிறு தொழில் அதிபர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே அந்தப் பணத்தைக் கொடு என்று நாம் வற்புறுத்துவதிலே என்ன சங்கடம் இருக்கிறது. அவ்வாறு அரசு முயற்சிக்கலாம் அல்லவா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கழிவு நீர் வராமல் தொழிற்சாலை உருவாக்கப்பட வேண்டுமென்பது ஏற்கனவே இருந்து வந்திருக்கிறது. அதைத் தவறித்தான் இப்பொழுது கழிவு நீர் வெளி வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால் அதை மீண்டும வலியுறுத்தி இந்தக் கழிவு நீரோ, அசுத்தமோ வராது மாசு படுத்நாத சூழ்நிலை வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும். அவர்களால் முடியாத பட்சத்தில் அரசு கடன் கொடுப்பதைப் பற்றி—இதுவரையில் சிந்தித்துப் பார்க்கவில்லை—அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

" நீர் தூய்மை கெடுதலைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், நீர் பயன் படுத்த தக்கதாயிருத்தலைப் பராமரித்தல், தூய்மை கெட்ட நீரை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல் ஆகியவை தொடர்பான விவகாரங்கள் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்படுவதன் மூலம், அஸ்ஸாம், பீஹார், குஜராத், ஹரியானா, ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகா, கேரளா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம் முதலிய மாநிலங்களில் முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு, இந்த மாநிலங்களின் சட்ட மன்றங்கள் அனைத்திலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ஆம் பிரிவின் (1) பகுதியின் படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளபடியால், 1974-ஆம் ஆண்டு நீர் (தூய்மைக் கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தை (மத்தியச் சட்டம் 6/1974) நாடாளுமன்றம் இயற்றியுள்ளதாலும் தமிழ் நாடு சட்ட மன்றத்தில் இரு அவைகள் இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 252-ஆம் பிரிவின் (1) பகுதி



யின்படி, தீர்மானம் நிறைவேற்றி மேற்சொன்ன 1974-ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டம் (மத்தியச் சட்டம் 6|1974) தமிழ்நாட்டில் மேற்கொள்ளபட்டு 1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு 31-ஆம் நாளிலிருந்து இம்மாநிலத்தில் செயலுக்கு வந்துள்ளபடியாலும், மேற்சொன்ன சட்டம் சில நோக்கங்களுக்காக நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் திருத்தப் பட வேண்டும் என்கிற வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ஆம் பிரிவின் (1) பகுதியின்படியும் அதன் (2) பகுதியின்படியும், அஸ்ஸாம், ஹரியானா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலச் சட்ட மன்றப் பேரவைகள் தீர்மானங்கள் நிறை வேற்றியுள்ளபடியாலும்,

மேற்சொன்ன தீர்மானங்களை ஒட்டி, 1978 ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை (மத்தியச் சட்டம் 44|1978) நாடாளு மன்றம் இயற்றியுள்ளபடியாலும்,

1978-ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக 1974-ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்( சட்டத்தில் செய்யப்பட்ட திருத்நங்களைத் தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்றுவது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளபடியாலும்,

அரசியலமைப்புச் சட்டத்தின் 252-ஆம் பிரிவைச் சேர்ந்த (1) (2) பகுதிகளில் வழங்கியுள்ள அதிகார்ங்களால், 1978-ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) திருத்தச் சட்டத்தின் வாயிலாக (மத்தியச் சட்டம் 44/1978 1974ஆம் ஆண்டு நீர் (தூய்மை கெடுதலைத் தடுத்தல்-கட்டுப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6|1974) செய்த திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் பின்பற்ற வேண்டும் என்று இச்சட்ட மன்றப் பேரவை இப்போது இதனால் தீர்மானிக்கிறது."

தனித்தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[1984 மார்ச் 7

[ஆ] நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையம், சென்னை அணுமின் நிலையம் இவற்றிலிருந்து உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கு ஒதுக்குதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணை தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"மைய அரசு அதன் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிப்பது சம்பந்தமாக ஒரு கொள்கையை 1978-ஆம் ஆண்டு வகுத்தது. இக்கொள்கை மின்சாரம் பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்குக் குறைவாகவும், உபரி மாநிலங்களுக்கு மேலும் அதிக மின்சாரம் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கிறது. தமிழ்நாட்டில் தொடர்ந்து இருந்து வரும் மின்பற்றாக்குறை காரணமாக மேற்படி கொள்கையை மாற்றியமைக்கும்படி மத்திய அரசிடம் பலமுறை முறையீடு செய்தும் கூட, இக்கொள்கையை மத்திய அரசு தொடர்ந்து கடைப்பிடித்து வருவதைக் குறித்து இப்பேரவை மிகுந்த கவலை கொள் கிறது. எனவே இக்கொள்கை முறையானது அல்ல என்று இந்தப் பேரவை கருதுகிறது. மைய மின் நிலையங்களி லிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை மின்பற்றாக்குறைக்கு ஏற்ப மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து அளிக்க ஒரு முறையான கொள்கையைப் பின்பற்றுமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது.

நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில், மைய அரசு மேற்கூறிய கொள்கை யைப் பின்பற்றி வருவது பற்றியும், சென்னை அணு மின் நிலையம் பிரிவு I லிருந்து கிடைக்கும் மின்சாரம் முழுவதை யும் தமிழ் நாட்டிற்கு வழங்குவது குறித்து, இன்னமும் எவ்வித முடிவையும் எடுக்காதது பற்றியும் இப்பேரவை கவலை தெரிவிக்கிறது. தமிழ்நாட்டில் கடந்த இருபது ஆண்டு காலமாக, மின் உற்பத்தியைக் குறித்து திட்டமிடுகை யில், இவ்விரு மின் நிலையங்களின் உற்பத்தி முழுவதையும் தமிழ்நாட்டிற்கே கிடைக்கும் என்ற எண்ணத்தை மைய அரசு பல்வேறு கால கட்டங்களில் ஊக்குவித்ததன் அடிப்படையில் திட்டமிட்டுள்ளது. எனவே, நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்திலிருந்தும் சென்னை அணு மின் நிலையத்திலிருந்தும் உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே ஒதுக்குமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது'';



1984 மார்ச் 7]

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மத்திய சர்க்கார் உதவியுடன் மாநிலத்திலே உற்பத்தி செய்யப்படுகிற அனல் மின்சார நிலையங்கள், அணு மின்சார நிலையங்களிலிருந்து உற்பத்தி யாகக்கூடிய மின்சாரத்தை, பற்றாக்குறை மாநிலங்களுக்குக் குறைவாகவும் உபரி மாநிலங்களுக்கு அதிகமாகவும் கொடுக் கக்கூடிய நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி பற்றாக் குறை மாநிலங்களுக்கு அதிகமாகவும், உபரி மாநிலங் களுக்குக் குறைவாகவும் கொடுக்க வேண்டுமென்று மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் இந்தத் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், மிக மிக வரவேற்க வேண்டிய அம்சம். ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம்.

அது மட்டுமல்ல, இரண்டாவது அணு மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் மைய அரசு மேற்கூறிய கொள்கையைப் பின்பற்றி வருவது பற்றியும் இன்னமும் முடிவு எடுக்காதது பற்றியும் இப்பேரவை கவலை தெரிவிக்கிறது என்றும் சொல்லி யிருக்கிறார்கள். நிச்சயமாக மைய அரசு அதில் முனைப்பு காட்டி சீக்கிரத்திலே இந்தத் திட்டத்திற்கு உருக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நெய்வேலி இரண்டாவது அனல் மின்சார நிலையத்தி லிருந்தும் சென்னை அணு மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும் உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே ஒதுக்குமாறு மைய அரசைக் கேட்டுக்கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கிறது என்று அந்தத் தீர்மானத்திலே கொடுத்திருக்கின்றார்கள். வரவேற்க வேண்டிய அம்சம். நிச்சயமாக வரவேற்கிறோம்.

அதே நேரத்திலே எண்ணூர், தூத்துக்குடி, பேசின் பிரிட்ஜ் போன்ற இடங்களில் சராசரியாக, சரியானபடி இன்னும் இயங்காத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அந்த மின் நிலையங்கள் ஒழுங்காக இயங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, நிலக்கரியைப் பொறுத்தமட்டிலே பற்றாக்குறை தொடர்கதையாக இருந்து கொண்டிருக்கிறது. நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்ற நிலமையை மாற்றி, தொடர்ந்து இந்த 3 பிளான்டுகளும் இயங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் 1 மாதம், 2 மாதம் அல்லது 3 மாதம் இயங்குவதற்கு வேண்டிய ஸ்டாக்குகளையும் வைத்துக்

[திரு. செ. சிவசாமி] [1984 மார்ச் 7

கொள்ள மத்திய அரசாங்கம் உடனடியாக உதவி செய்ய
வேண்டுமென்று அந்த நிலைமையையும் சேர்த்துக் கொண்டு
இதை வற்புறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான்
கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 6-40)

இந்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துப் பார்க்கிறபோது
மின்சார கட்டணங்களை உயர்த்தலாம் என்ற நோக்கம்
இருக்குமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஆகவே
விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மின் கட்ட
ணத்தை உயர்த்த வேண்டாம். ஏழை, நடுத்தர மக்களுக்கு
வீடுகளுக்கு உபயோகப்படுத்துகிற மின்சாரத்திற்கு கட்டணத்தை
உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்
பட்ட ஆபத்தான நிலைமை வந்துவிடக் கூடாது என்றும்
கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் விவசாயத்தைப்
பொறுத்தவரையில் 1978-க்கு பின்னால் வந்த அப்ளிகேஷன்
கள் எந்தவிதமான பரிசீலனைக்கும் எடுத்துக் கொள்ளப்படாத
நிலைமை இன்றைக்கு மாநிலம் முழுவதும் இருந்து கொண்
டிருக்கிறது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் 1977-
குப் பின்னால் வந்த அப்ளிகேஷன் பரிசீலிக்கப்படவில்லை
என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமை
களைக் கணக்கில் எடுத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 10
லட்சம் பம்புசெட்டுகள் தமிழகத்திலே இருப்பதாகப் புள்ளி
விவரங்கள் நமக்கு கூறுகின்றன. ஆனால் 1976-க்கு முன்ன
தாக இருந்ததுதான் இருந்துகொண்டிருக்கிறது. 1976-க்குப்
பின்னாலே வந்தவைகளுக்கு சீக்கிரத்திலே மின்சாரம்
கிடைப்பதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை முழுக்க முழுக்க
வரவேற்று அமர்கிறேன்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்
முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை வரவேற்று ஒரு
சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய
அமைச்சர் அவர்களும், அவரைச் சார்ந்த சகாக்களும் ஆடிக்
கறக்க வேண்டிய மாட்டை ஆடிக் கறக்க வேண்டும், பாடிக்
கறக்க வேண்டிய மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும் என்று
பல சமயங்களில் சொல்வார்கள். இது ஆடி கறப்பதா?
பாடி கறப்பதா என்பதை அவர்கள்தான் சொல்ல வேண்டும்.
இதைப் பார்த்தால் கொஞ்சம் அடித்துக் கறக்க வேண்டும்
என்பதைப் போலத் தெரிகிறது. இன்றைக்கு நம்மைப்
பொறுத்தவரையில் தமிழ் நாட்டினுடைய கோடிக்கணக்கான
மக்களின் உணர்வுகளை இந்தத் தீர்மானம் பிரதிபலிக்கிறது
என்று எண்ணுகிறோம். தமிழ்நாட்டினுடைய வாழ்வும்,



1984 மார்ச் 7] [திரு என். வரதராஜன்]

வளமும் இந்த மின்சாரத்தோடு நவீன காலத்திலே பிணைக்கப்
பட்டிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இன்றைக்கு
பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்குக் கூட
சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறோம். பல ஆண்டுகளாக பம்ப்
செட்டுகளை வாங்கி வைத்து மின் இணைப்பு கிடைக்காமல்
விவசாயிகள் இருக்கிறார்கள். இலட்சக்கணக்கான விவசாயிகள்
மற்றும் சிறுதொழில்கள் நடத்துகிறவர்களும் கூட மின்
இணைப்பிற்கு சங்கடப்படுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட
நிலைமையில் இந்தத் தீர்மானத்தினுடைய கருத்துகள் சரியா
னவையாகத்தான் இருக்கின்றன.

நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகிற மின்சாரம்
நமக்கு தான் என்ற கருத்தோடு இந்தத் தீர்மானம் அமைய
வில்லை என்றே நாம் பார்க்க முடிகிறது. இங்கே உற்பத்தி
யாகக் கூடிய மின்சாரத்திலே எந்த மாநிலத்திற்குப் பற்றாக்
குறை இருக்கிறதோ அதை கவனத்திலே கொண்டு பகிர்ந்து
அளிக்க வேண்டுமென்ற ஒரு கருத்து இங்கே வற்புறுத்தப்
படுகிறது. ஆகவே இதை ஒரு சிறந்த கருத்தாகத் தான்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகவே அந்த முறை
யிலே தமிழ்நாட்டிலே உற்பத்தியாகிற மின்சாரத்தை எல்லாம்
தமிழ்நாட்டினுடைய பற்றாக்குறையை கணக்கிலே கொண்டு
அதற்கான உதவியை செய்யவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு
மத்திய அரசிற்கு உள்ளது. இந்த மாநிலத்தில் கோடிக்
கணக்கான மக்களின் வாழ்க்கை பாதிப்பை கணக்கிலே
கொண்டு அப்படிப்பட்ட காரியத்திலே மத்திய அரசு ஈடுபட
வேண்டும், உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இந்த நேரத்திலே நான் வற்புறுத்த விரும்புவது, இன்றைக்கு
இந்தத் தீர்மானமானது எங்களைப் பொறுத்த வரையில்
அவசியமானது என்று சொல்லுகிறபோது இந்தத் தீர்மானம்
களுக்கு மத்திலே இருப்பவர்கள் எந்த அளவிற்கு மதிப்பு
அளிப்பார்கள் என்பது நமக்கு தெரியும்; ஆகவே தீர்மானத்தை
நம்முடைய உணர்வுகளை பிரதிபலிக்கிறது என்ற வகையிலே
நிறைவேற்றலாம். நான் அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியையும், கட்சியையும் கேட்டுக் கொள்வதெல்லாம்
நீங்கள் அடிக்கு ஒரு தடவை அண்ணா வழி என்று சொல்
கிறீர்கள். அண்ணா வழி என்பது எங்களால் புரிந்துகொள்ள
முடிகிற அளவிற்கு புரிந்துகொள்கிறோம். 1967-ஆம்
ஆண்டு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே
தமிழ் நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசு
உதவி செய்யவில்லை என்று தமிழ் நாட்டின் மக்களை
திரட்டுகிற பெரும் பொதுக்கூட்டங்களை எழுச்சியோடு
நடத்தினார்கள். அது என்னுடைய நினைவிலே இன்றும்
பசுமையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அது தான்
அண்ணா வழி என்று நினைக்கிறேன். இந்தத் தீர்மானத்தை
நிறைவேற்றி யாருக்கும் தெரியாமல் மவுனமாக வைத்துக்

கொண்டால் . இந்தத் தீர்மானத்திற்கு என்ன மதிப்பு
இருக்கும் என்பது நமக்கு தெரியும். இன்றைக்கு மாநில
அரசால் நிறைவேற்றப்பட்ட நூற்றுக்கணக்கான சட்டங்கள்
டெல்லியிலே ஊறுகாய் பானையிலே உறங்கிக்கொண்டிருக்
கின்றன என்பதை நாடு அறியும். ஆகவே, இந்தத்
தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது, தமிழ்நாட்டில் உள்ள
கோடிக்கணக்கான மக்களிடத்திலும் நம்முடைய நிலைமைகளை
எடுத்துச்சொல்ல, அந்த மக்களைத் திரட்ட வேண்டிய பெரும்
பொறுப்பை ஆளும் கட்சி ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, இந்தத் தீர்மானத்தின்
விளக்கவுரையில் சொல்லியிருப்பது போதாது என்று கருது
கிறேன். இன்றைக்கு நாம் அச்சப்படக்கூடாது; கூச்சப்படக்
கூடாது. நமக்கு இருக்கும் கஷ்டங்களை, இடையூறுகளை நாம்
சொல்வதற்கு தயக்கம் காட்டக்கூடாது. தமிழ்நாட்டின்
தேவை என்ன? வளர்ந்து வரும் மின்சார தேவையில், இன்றைக்கு
3-ல் ஒரு பகுதி நமக்குக் கிடைக்கவில்லை. 3-ல் இரண்டு
பகுதிதான் கிடைக்கிறது என்பதை நாம் பார்க்க முடிகிறது.
ஆகவே, இன்றைக்கு புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்
கான முயற்சியில் மத்திய அரசு கூடுதலான உதவி செய்ய
வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தின் அடிப்படை
விளக்கமாக வந்தால் வரவேற்கத்தக்கது. அல்லது நம்
முடைய தேவை என்ன என்பதை வற்புறுத்தி தனியாகக்கூட
ஒரு குறிப்பை அரசு அனுப்பவேண்டும். அந்த வகையில்
இந்தத் தீர்மாத்தை நான் வரவேற்று, அதற்கு தக்க வகையில்
நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : துணைத் தலைவர் அவர்களே,
நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழி
யப்பட்ட தீர்மானத்தின் மீது நான் சார்ந்து இருக்கும் திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச்
சொல்ல விரும்புகிறேன். ஒரு பழமொழி சொல்வார்கள், கோவில்
இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று. ஆனால் இன்
றைக்கு மின்சாரம் இல்லாத கிராமத்தில் குடியிருக்க வேண்டாம்
என்பது புதுமொழி. இன்றைக்கு மின்சார சாதனங்கள் அன்றாட
வாழ்க்கையில் அனைவரும் உபயோகிக்கக் கூடிய அளவிற்கு
அனைவராலும் இன்றியமையாத ஒரு பொருளாக மாறியிருக்
கிறது. மின்சாரம் இல்லாமல் எந்த வேலையும் இல்லை என்பது
உண்மை.

இதைவிட வேளாண்மைத் துறையில் மின்சார மோட்டார்
பம்ப் செட் வைத்து அதிக அளவில் நீர்ப் பாசனம் செய்கின்ற
காரணத்தால் தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியில் நாம் தன்



னிறைவு பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் அது மிகையா
காது. ஆனால் இன்றைக்குப் போதுமான அளவிற்கு மின்சாரம்
கிடைக்காத காரணத்தால், அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு
வருகின்ற காரணத்தால், மின் அழுத்தம் பல்வேறு நேரங்களில்
குறைகின்ற காரணத்தால் மின்சார மோட்டார் காயில்கள் தீய்ந்து
போய் விடுகின்ற நிலைமைகளைப் பார்க்கிறோம்.

ஆகவே எதிர்காலத்தில் அந்த நிலைமைகள் எல்லாம் மாறிட
இந்தத் தீர்மானத்தை நல்ல எண்ணத்தோடு வரவேற்கிறோம்.
மத்திய சர்க்காரிடத்திலும் இந்த சர்க்கார் இது தொடர்பாக
வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இதற்காக
அனைத்துக் கட்சிகளின் சார்பாக ஏதாவது ஒரு போராட்டத்தில்
இறங்க வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டாலும், திராவிட
முன்னேற்றக் கழகம் அதற்கு முழுமனதுடன் உறுதுணையாக
இருக்கும் என்பதைச் சொல்லி, இந்தத் தீர்மானத்தை வரவேற்
கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர்
அவர்களே, இந்தத் தீர்மானம் எல்லோராலும் வரவேற்கப்பட்டு
இருக்கிறது. ஆகவே, பதில் தரவேண்டிய அவசியம் எனக்கு
இல்லை என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். இருந்தாலும்
எல்லோரோடும் சேர்ந்து நானும் சில கருத்துக்களைச் சொல்ல
வேண்டுமென்கிற அடிப்படையில் ஒரு சிலவற்றைச் சொல்ல
விரும்புகிறேன். அரசின் சார்பில் இந்த விளக்கக் குறிப்பில்,
குறிப்பிடப்பட்டுள்ள இந்தக் காரண காரியங்கள் இந்திய
அரசுக்கு எடுத்துத் தெளிவாக்கப்பட்டு இருக்கின்றன. கடிதங்கள்
மூலம் தெரிவிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களும், நானும் டெல்லிக்குச் சென்ற போது பாரதப் பிரதமர்
அவர்களிடத்திலும், மற்ற அமைச்சர்களிடத்திலும் நமக்கு இருக்
கின்ற இந்தக் குறைகளைப் பற்றி தெளிவாகத் தெரிவித்து இருக்
கிறோம்.

குறிப்பாக நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்
தின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம், கல்பாக்கம் அணு மின்
நிலையத்தின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரம் நமக்குத் தரப்
படும் என்ற நம்பிக்கை இன்று நேற்றல்ல, 10 ஆண்டு காலத்திற்கு
மேலாக தரப்பட்டு வந்தது. புதிய திட்டங்கள் நாம் போடுகிற
போது அவற்றின் உற்பத்தியின் கணக்கையும் எடுத்துக் கொண்டு,
புதிய திட்டங்களுக்கு அனுமதி தரப்படாமல் காலம் தாழ்த்தி
வந்து இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டங்கள் இப்போது
செயலுக்கு வருகிறபோது ஏற்கெனவே நமக்கு இவை தரப்படும்
என்கிற அடிப்படையில் நமக்குக் கருத்துத் தெரிவித்த காரணத்
தால் அந்த நம்பிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்று விரும்பு
கிறோம்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1984 மார்ச் 7

(மாலை 6–50).

இரண்டாவதாக நிலக்கரி சுரங்கத்திலிருந்து நிலக்கரியைக்
கொண்டு வந்து மேலும் புதிய அனல் மின் நிலையங்களை
அமைக்கும் திட்டங்களை மாநில அரசு நிர்வகிக்கும் வாய்ப்பு
தற்போது இல்லை. ஏனெனில் இந்திய அரசு நிலக்கரியைக் கொண்டு
செல்வதற்குப் பதிலாக பெரிய மின் நிலையங்களை அமைத்து
அங்கிருந்து மின்சாரத்தைக் கொண்டு செல்லலாம் என்று
கூறியது. அதன் விளைவாக புதிய அனல் மின்சாரத் திட்டத்தை
நிலக்கரியைப் பயன்படுத்தி நாம் அமைக்க முடியவில்லை.

இராமகுண்டம் இருக்கிறது என்றால் அங்கிருந்து நிலக்கரியைக்
கொண்டு வந்து இன்று நாம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடிய
வில்லை. மத்திய அரசு அங்கே உற்பத்திச் செய்கிறது. ஆகை
யால் நாம் ஒரு மின் நிலையத்தை அமைத்தால் எவ்வளவு மின்
சாரம் உற்பத்தி செய்திருப்போமோ அந்த அளவுக்கு, அந்தப்
பற்றாக்குறை அளவுக்கு இந்திய அரசு மின்சாரத்தை உற்பத்திச்
செய்கிறபோது நமக்குத் தரவேண்டுமென்று கேட்கிறோம்.

மத்திய அரசு இப்போது ஒரு 'திட்டம்' வைத்திருக்கிறது.
காட்கில் பார்முலா என்று அதற்குப் பெயர். 1969 இல் உரு
வாக்கப்பட்டது. அது தமிழகத்திற்கு பெரிய பாதகமாக இருக்
கிறது. அதை வைத்துக் கொண்டு, தமிழகத்தில் எவ்வளவு
மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற கணக்கை, 1973
லிருந்து 1978 வரையிலான ஆண்டுகளில், உள்ள கணக்கை எடுத்
துக் கொண்டார்கள். அப்போது மின்சார வெட்டு அதிகமாக
இருந்த காலம். அதை வைத்துக் கொண்டு இரண்டையும்
பெருக்கி நமக்கு மின்சாரம் ஒதுக்குகிற போது அது மிகவும்
குறைந்து விடுகிறதி.

சான்றாக, நெய்வேலியில் 630 மெகாவாட் உற்பத்தியாகிறது
என்றால் நமக்கு 176 மெகாவாட் கிடைக்கும். ராமகுண்டத்தில்
600 மெகாவாட் உற்பத்தியாகிறது என்றால் நமக்கு 132 மெகா
வாட் கிடைக்கும். ஆகவே, இது கைக்கு எட்டியது வாய்க்கு
எட்டாமல் போனது என்று சொல்வார்களே, அந்த நிலைமைக்கு
வந்துவிடும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நாம் பல நேரங்களில்
சொல்லியிருக்கிறோம். புனல் மின் உற்பத்திக்கு நமக்கு வாய்ப்பு
இல்லை ஒரு சிலவற்றைத் தவிர. அனல் மின் நிலையமும் அணு
மின் நிலையமும் தான் தமிழகத்தின் எதிர்காலத்தை உருவாக்கும்.
இந்த இரண்டும் இந்திய அரசின் கையில் சிக்கி இருக்கிறது,
என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஆக முழுக்க முழுக்க மின்
சாரத் திட்டத்தில் மத்திய அரசு நமக்கு எவ்வளவு தூரம் ஒத்து



1984 மார்ச் 7] [திரு. ச. இராமச்சந்திரன்]

ழைப்புத் தருகிறதோ அதைப் பொறுத்துத்தான் நாம் திட்டங்
களை நிறைவேற்ற முடியும். அதை ஆடிக் கறக்க வேண்டுமா
அல்லது அதட்டிக் கறக்க வேண்டுமா அல்லது பாடிக் கறக்க
வேண்டுமா அல்லது சாடிக் கறக்க வேண்டுமா என்பது எல்லாம்
அவ்வப்போது நாம் கையாள வேண்டிய முறைகளாக இருக்
கின்றன.

ஆனால் தமிழகத்தினுடைய எதிர்காலம் மின் உற்பத்தியைப்
பொறுத்திருக்கிறது. அதிலும் குறிப்பாக அனல் மின் உற்பத்தி,
அணு மின் உற்பத்தி ஆகிய இந்த இரண்டையும் பொறுத்திருக்
கிறது. இந்த இரண்டிலும் இந்திய அரசு பெரும் பங்கு நமக்கு
உதவி செய்ய வேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம்
நாம் இதை வலியுறுத்துகிறோம். நாம் இதைச் சொல்லும்போது
தமிழகத்தை மட்டும் வைத்துக் கொண்டு குறுகிய நோக்கத்தோடு
கூட சொல்லவில்லை. இந்திய அரசு நிர்வகிக்கின்ற ராட்சச
அனல் மின் திட்டம் அதாவது சூப்பர் தெர்மல் ஸ்டேஷன் இருக்
கிறதே, அதிலிருந்து மின்சாரம் கொடுக்கிறபோது தென்னகம்
என்று எடுத்துக் கொண்டால் 4 மாநிலங்களின் பற்றாக்குறையைக்
கணக்கிட்டுக் கொடுங்கள் என்று சொல்லுகிறோமே தவிர முழு
வதையும் எங்களுக்கே தரவேண்டும் என்று நாம் சொல்லவில்லை,

நெய்வேலி இரண்டாவது அனல் மின்சாரத் திட்டம், கல்
பாக்கம் அணு மின் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுகிறபோது
கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள் என்பது ஒன்று.
அவர்களாகவே நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகிலே நிறைவேற்று
கின்ற பெரிய அனல் மின் திட்டங்களிலிருந்து மின்சாரம் பெறு
வதற்கேற்ப அதைப் பகிர்ந்து அளியுங்கள் என்பது இரண்டாவது
கோரிக்கை. இது நியாயமானது என்பதை எல்லோரும் அறிவார்
கள். ஆனால் இந்த உலகத்தில் நியாயங்கள் மட்டுமே வெற்றி
பெறுவதில்லை. நியாயத்திற்கு வலிவைச் சேர்த்துத்தான் வெற்றி
பெற முடியும். அந்த வகையிலேதான் அரசும் சொல்கிறதுற
அரசோடு சேர்ந்து மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய இந்த மாமன்ற
மும் சொல்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் இந்தத்
தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் மக்களை இதற்குத் திரட்ட
வேண்டுமென்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின்
வழியைப் பற்றியும் சொன்னார்கள். நானும் 1967 லிருந்து இந்த
அவையில் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்
திலிருந்து இருந்து கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்
திரு. வரதராஜன் அவர்கள் இதை அறிவார்கள். பல படிக்கட்டு
கள் இருக்கின்றன. நாம் நேரில் சொல்கிறோம். கடிதம் மூலம்
சொல்கிறோம். சந்திக்கும்போது நியாயங்களை விளக்குகிறோம்
அரசு இருக்கிறது. அதற்குப் பிறகு சட்டமன்றம இருக்கிறது.
இப்படி புறக்கணிக்கப்படும்போது நாம் அல்ல, மக்களே கூட

[திரு. ச. இராமச்சந்திரன்[ [1984 மார்ச் 6

போராட ஆரம்பித்து விடுவார்கள் என்பதை பல நாடு
களின் வரலாற்றைப் பார்த்தாலே நன்கு தெரியும்.
நியாயங்கள் என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்பதை நாம் பல
நாடுகளின் வரலாற்றைப் பார்த்தால் தெரியும். நாம் போராடா
விட்டாலும், மக்கள் போராட ஆயத்தமாகி விடுகிறார்கள்.
ஆனால் இன்னும் அத்தகைய சூழ்நிலை ஏற்படவில்லை என்றும்
அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாது என்றும் இந்த அரசு நம்பு
கிறது என்று தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக
நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, இராம
குண்டம் மின்சார நிலையத்தில் உற்பத்தி துவங்கி விட்டதா ?
அதில் ஏதாவது நமக்குப் பங்கு கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : உற்பத்தி ஆரம்பித்த
நிலையில் இருக்கிறது. வணிக ரீதியில் வரவில்லை. அநேகமாக
இவ்வாண்டு வரும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி வருகிற
போது நமக்கு உரிய பங்கு கோரப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்
னுள்ள கேள்வி :

''மைய அரசு அதன் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்
படும் மின்சாரத்தை மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிப்பது சம்பந்த
மாக ஒரு கொள்கையை 1978 ஆம் ஆண்டு வகுத்தது. இக்
கொள்கை மின்சாரம் பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்கு
குறைவாகவும், உபரி மாநிலங்களுக்கு மேலும் அதிக மின்சாரம்
பெறுவதற்கும் வாய்ப்பளிக்கிறது. தமிழ்நாட்டில் தொடர்ந்து
இருந்து வரும் மின் பற்றாக்குறை காரணமாக மேற்படி
கொள்கையை மாற்றியமைக்கும்படி மத்திய அரசிடம் பலமுறை
முறையீடு செய்தும் கூட, இக்கொள்கையை மத்திய அரசு
தொடர்ந்து கடைப்பிடித்து வருவதைக் குறித்து இப்பேரவை
மிகுந்த கவலை கொள்கிறது; எனவே இக்கொள்கை முறையானது
அல்ல என்று இந்தப் பேரவை கருதுகிறது. மைய மின் நிலையங்
களிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை மின் பற்றாக்குறைக்கு
ஏற்ப மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து அளிக்க ஒரு முறையான
கொள்கையை பின்பற்றுமாறு மைய அரசைக் கேட்டுக்கொள்வ
தென இப்பேரவை தீர்மானிக்கிறது.

நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்தைப் பொறுத்
தவரையில், மைய அரசு மேற்கூறிய கொள்கையைப் பின்பற்றி
வருவது பற்றியும், சென்னை அணு மின் நிலையம் பிரிவு I லிருந்து
கிடைக்கும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கு வழங்குவது
குறித்து. இன்னமும் எவ்வித முடிவையும் எடுக்காதது பற்றியும்



1984 மார்ச் 7] [பேரவைத் துணைத் தலைவர்]

இப்பேரவை கவலை தெரிவிக்கிறது. தமிழ்நாட்டில் கடந்த
இருபது ஆண்டு காலமாக, மின் உற்பத்தியைக் குறித்து திட்ட
மிடுகையில், இவ்விரு மின் நிலையங்களின் உற்பத்தி முழுவதையும்
தமிழ்நாட்டிற்கே கிடைக்கும் என்ற எண்ணத்தை மைய அரசு
பல்வேறு கால கட்டங்களில் ஊக்குவித்ததன் அடிப்படையில்
திட்டமிட்டுள்ளது. எனவே, நெய்வேலி இரண்டாவது அனல்
மின் நிலையத்திலிருந்தும், சென்னை அணு மின் நிலையத்திலிருந்
தும் உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே
ஒதுக்குமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்வதென இப்பேரவை
தீர்மானிக்கிறது ''

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்றது.

## 3. தகவல் கோரல். (தொடர்ச்சி)

### (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்,
மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
நேற்றும் இன்றும் தொடர்ந்து மழை பெய்து ராமநாதபுரம்
மாவட்டத்தில் பல நகரங்களும் கிராமங்களும் துண்டிக்கப்
பட்டுள்ளன. சாலைகளில் போக்குவரத்து அறவே நிறுத்தி
வைக்கப்பட்டு விட்டது. தரைப்போக்குவரத்து இல்லை. அங்கே
மக்களுக்கு உணவுக்கு வழி இல்லாத வகையிலும், அவர்களுடைய
உடமைகளை இழந்து அந்த மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி
இருக்கிறார்கள் என்று தந்தி மூலமும் தொலைபேசி மூலமும் தகவல்
கள் தொடர்ந்து வருகின்றன. தரை மார்க்கமாக உணவு வழங்க
வேண்டிய நிலை இருக்கிறது. அது தொடர்பாக அரசுக்கு தகவல்
ஏதும் வந்திருக்கிறதா? அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க
ஆணை பிறப்பித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை
எப்போதும் சட்டமன்றம் துவங்கும் போது எடுத்து வைப்பது
உண்டு. சட்டமன்றப் பேரவை முடியும்போது தகவல் வைப்பது
உண்டா ? இந்தத் தகவலை எப்படித் தரமுடியும்? ஏற்கனவே அது
பற்றிய விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே சட்டமன்ற
உறுப்பினர்கள் கூறியதற்குப் பிறகு தான் நடவடிக்கைகள் எடுக்கப்
படுகின்றன என்பது அல்ல. ஆங்காங்கே வறட்சியினால்
பாதிக்கப்பட்டபோதும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட
போதும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அன்றாடம் ஆங்காங்கே
மக்களிடத்திலே சென்று, அவர்களுடைய குறைபாடுகளையும்
மற்றவைகளையும் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க

வேண்டுமென்று அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலையை அவையில் எடுத்து வைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. பொது விவாதம், மானியக் கோரிக்கை வரும்போது இன்னும் தெளிவு படுத்த வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, பல்வேறு தொகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அவர்களுடைய எண்ணங்களை தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் எண்ணத்திற்கு உரிய மதிப்பு அளித்து, இவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. என்பதை இந்த வாய்ப்பினில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 8—3—1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

110. அம்பத்தூர் கிராமத்தின், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—10—1982 ஆம் நாளிட்ட 975 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.[தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

111. பெரம்பூர் கிராமத்தின், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 7—7—1983 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

112. சின்ன சேக்காடு கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—7—1983 ஆம் நாளிட்ட 1145 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட



அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972 123[2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

113. 1981-82 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகளின் தணிக்கை அறிக்கை. (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

[1984 மார்ச் 7

## இணைப்பு I

(517 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட 16868 வினா எண்
195-க்கான விடையைக் காண்க.)

திருச்சி வட்டாரப் பொறியியற் கல்லூரி முன்னாள் முதல்வர்
பேராசிரியர் மணிசுந்தரம் மீது சுமத்தப்பட்ட 22 குற்றச்சாட்டு
களும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட முடிவும் கீழே கொடுக்கப்
பட்டுள்ளன :—

**புகார் 1**—திருச்சி, வட்டாரப் பொறியியற் கல்லூரியில்
10 பட்டப்படிப்பும், 24 பட்ட மேற்படிப்பும் நடத்தப்பட்டாலும்
தேவையான ஆசிரியர்கள் இல்லை.

**முடிவு**—கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்
ணிக்கை 114. 1—6—1978 தேதியில் நிரப்பப்பட்ட எண்
ணிக்கை 100. நிரப்பப்படாத பதவிகளை நிரப்ப அனைத்து
நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள 13
வட்டாரப் பொறியியற் கல்லூரிகளிலும் பணியாளர் எண்ணிக்கை
இதே போலத்தான் உள்ளது. திருச்சி வட்டாரப் பொறியியற்
கல்லூரியின் கல்வித்தரம் மிக உயர்வாக உள்ளது. சில பிரிவுகளில்
மட்டுமே ஆசிரியர் எண்ணிக்கை குறைவாக உள்ளது. 1976-ல்
சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வில் இக்கல்லூரியின்
வேலைப்பளு குறைவு எனக் கூறியுள்ளது. எனவே இப்புகார்
நிரூபிக்கப்படவில்லை.

**புகார் 2**—மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படு
வதற்கு குறைந்த பட்சம் 75 விழுக்காடாவது வருகை இருக்க
வேண்டுமென்று சென்னை பல்கலைக்கழகம் விதித்திருந்தும்,
வகுப்பிற்கு வராத மாணவர்களுக்குக் கூட தேர்வு எழுத
அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முடிவு**—பல்கலைக்கழக விதிப்படி மாணவர்கள் 75 நாட்
களாவது வகுப்புகளுக்கு வரவேண்டும் என்றிருந்தாலும்,
விருப்பமில்லாத வகுப்புகளுக்கு மாணவர்கள் வரத்தேவையில்லை
என்ற சலுகையும் உள்ளது. மேலும் ஐ. ஐ. டி. போன்ற
கல்வி நிறுவனங்களில் குறைந்தபட்ச வருகைப் பதிவு அமுல்
செய்யப்படுவதில்லை. தற்கால தொழில்கல்வி நிலையங்களில்
நடைமுறையில் உள்ள போக்கின் அடிப்படையில் வட்டாரப்
பொறியியற் கல்லூரியில் இதுபோன்ற, சலுகை அளிக்கப்பட்
டிருக்கலாம். தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட மாணவர்கள்
அனைவரும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று வெற்றியடைந்
துள்ளதையும் பார்க்கும்போது இக்குற்றச்சாட்டின் மீது மேல்
நடவடிக்கை தேவையில்லை.



1984 மார்ச் 7]

**புகார் 3**—சென்னைப் பல்கலைக்கழக விதிப்படி . திட்ட
வேலைகளுக்கு 50 மதிப்பெண் கொடுக்கப்படுகிறது. எந்தவிதத்
திட்ட வேலையும் செய்யாத மாணவர்களுக்குக் கூட உயர்ந்த
மதிப்பெண்கள் அளிக்கப்படுகிறது.

**முடிவு**—பல்கலைக்கழக விதிப்படி திட்ட வேலை மதிப்பெண்
அதிக முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. அதாவது பல்கலைக்
கழகத் தேர்வில் 50 வாங்கியிருந்தால் அம்மாணவனின் திட்ட
மதிப்பெண்ணே தேவையற்றதாகிவிடும். வட்டாரப் பொறி
யியற் கல்லூரியைப் பொறுத்தவரை 2 சதவீத மாணவர்
களே திட்டவேலை மதிப்பெண்ணால் பயனடைகிறார்கள்.
விளையாட்டு போன்ற பிற ஊக்க நடவடிக்கைகளில் ஈடுபடும்
மாணவர்களுக்கு இதுபோன்ற சலுகை எல்லாக் கல்லூரியிலும்
அளிக்கப்படுவதே. எனவே இக் குற்றச்சாட்டில் பொருள்
இல்லை.

**புகார் 4**—விதிப்படி 30 மைல்களுக்குள் எவ்வித அலுவலகத்
திலும் வேலை செய்யாத பீகார் மாநிலத்தைச் சார்ந்த திரு.
யாதவ் என்பவர் 1974-ல் பகுதிநேரப் பட்டப்படிப்பில் சேர்க்கப்
பட்டுள்ளார்.

**முடிவு**—அரசு விதிகளின்படி பகுதிநேரப் பட்டப்படிப்புக்கு
விண்ணப்பிக்கும் மாணவர் பட்டயம் பெற்று மூன்றாண்டுக் காலம்
அனுபவமும், கல்லூரியிலிருந்து 30 கல் தொலைவுக்குள் பணி
யாற்றுபவராகவும் இருக்க வேண்டும். திரு. கபில்தேவ் யாதவ்
என்பவர் 6 ஆண்டு பணி அனுபவம் உள்ளவர் என்றும திருச்சி
அரியமங்கலம் தொழில்துறையில் பணியாற்றுபவர் என்றும் சான்
றிதழ் அளித்ததன் அடிப்படையில் இவருக்கு பகுதிநேரப் பட்டப்
படிப்புக்கு இடம் அளிக்கப்பட்டது. பின்னால் புகார் வரப்பெற்ற
பின் விசாரித்தபோது அவர் அங்கு பணியாற்றவில்லை என்பது
தெரிய வந்தது. எனினும் இவர் 1979-ல் படிப்பை முடித்துச்
சென்று விட்டதாலும் அப்போது இவரது மூலச் சான்றிதழ்கள்
இவருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுவிட்டதாலும் அவற்றைச்
சரிபார்க்க முடியவில்லை.

**புகார் 5**—90 சதவிகிதத்துக்குக் குறைந்த மதிப்பெண் பெற்ற
எம்மாணவரையும். பட்டப்படிப்பில் சேர்த்துக் கொள்ளவில்லை
என்ற ஆட்சிமன்றக் குழுத்தலைவரின் பத்திரிக்கைச் செய்திக்கு
முரணாக 75 சதவிகிதம் மதிப்பெண் பெற்ற திரு. பால்
பிரதிப்குமார் (மத்திய அரசு சமூக நலத்துறை இணைச் செயலர்
திரு. எம். எம். இராசேந்திரன் அவர்களின் மகன்) மேற்படிப்பில்
சேர்க்கப்பட்டுள்ளார்.

முடிவு—திரு. எம். எம். இராசேந்திரன் அவர்களின் மகன்
1977 ஆம் ஆண்டு கோவை பி. எஸ். ஜி. தொழில்நுட்பக் கல்லூரி
யின் நிர்வாக ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கப்பட்டார். பின்னர்
முறைப்படி தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் மேற்படி
மாணவர் திருச்சிக்கு மாற்றப்பட்டார். எனவே இதில் வட்டாரப்
பொறியியற் கல்லூரி முதல்வர் முறைகேடாக எதுவும் செய்ய
வில்லை.

புகார் 6—கணிதம் மற்றும் இரசாயனம் படிக்காத திரு.
முஜீப்ஷா என்ற மாணவர் சேர்த்துக் கொள்ளப்பட்டு பின்னர்
கல்லூரி ஆசிரியர் ஒருவரால் கண்டுபிடிக்கப்பட்டதால் கல்லூரி
யிலிருந்து வெளியேற்றப்பட்டார். ஆனால் இது குறித்து மேல்
நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

முடிவு—மேற்படி மாணவர் பொதுப்போட்டியின்கீழ் தொழில்
நுட்பக் கல்வி இயக்ககத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு திருச்சிக்கு
அனுப்பப்பட்டவர். இவர் கொடுத்தது போலிச்சான்றிதழ் என்று
கண்டுபிடிக்கப்பட்டதால் இவரைக் கல்லூரியிலிருந்து நீக்கியா
யிற்று. இதன் மீது மேல் நடவடிக்கை தொடர வட்டாரப்
பொறியியற் கல்லூரி முதல்வருக்கு தேவை ஏற்படவில்லை.

புகார் 7—மேல்நிலைப் படிப்பில் இரண்டாம் பாடமாக
ஆங்கிலம் படித்தறியாத அருண்குமார் என்ற மாணவர் பிற
மாநில ஒதுக்கீட்டின்கீழ் பொறியியல் வகுப்பில் சேர்க்கப்பட்டார்.
இது பல்கலைக்கழக விதிகளுக்கு முரணானது.

முடிவு—திரு. அருண்குமார் என்ற மாணவர் 1969–70 ஆம்
ஆண்டு மத்தியப்பிரதேச மாநில அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேர்க்கப்
பட்டார். இவரது சான்றிதழ் இந்தியிலிருந்தாலும் பின்னர்
தொடர்பு கொண்டு விசாரித்தபோது அவர் பயின்ற பள்ளியில்
ஆங்கிலம் ஒரு பாடமில்லை எனத் தெரிய வந்தாலும் இது குறித்து
சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையைக் கோரிய
போது, சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய புதுமுக வகுப்பில்
ஆங்கிலப் பாடம் தேற வேண்டும் என விதித்ததால் அவ்விதமே
தேறி, அவர் தொடர்ந்து படித்து 1975-ல் முடித்தார். எனவே
இக்குற்றச்சாட்டில் போதிய வலு இல்லை.

புகார் 8—மைய அரசின் முதன்மைக் கல்வி ஆலோசகர்
திரு. நரசிம்மன் அவர்களின் மகன் மேல்நிலைப் பள்ளியில் இரண்
டாம் வகுப்புப் பெற்றிருந்தும் பொறியியல் வகுப்பில் சேர்க்கப்
பட்டார். இதுபோலவே திருச்சி கனரக மின் தொழிற்சாலையின்



நிர்வாக இயக்குநர் திரு. தீனதயாளு அவர்களின் மகன் மணிப்
பால் பல்கலைக்கழகத்திலுருந்து திருச்சிக்கு மாறுதல் செய்யப்
பட்டார்.

முடிவு—நரசிம்மன் அவர்களின் மகன் திரு. டி.வி. பாஸ்கரன்
1972-ல் மைய அரசின் பரிந்துரையின்பேரில் சேர்க்கப்பட்டார்.
மைய அரசின் கல்வி அமைச்சகம் சில மாணவர்களை அனுப்பி
கல்லூரியில் காலி இடம் இருக்கும் பட்சத்தில் ' on th spot
admission ' என்னும் முறைப்படி தேவையான தகுதிகள்
இருந்தால் சேர்த்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைத்தது.
காலியிடம் ஒன்று இருந்ததாலும், வந்திருந்த மாணவர்களில்
திரு. பாஸ்கரன் தகுதியுடையவராக இருந்ததாலும் அவர் சேர்த்
துக் கொள்ளப்பட்டார். இரண்டாவதாகக் கூறப்படும் திரு.
தீனதயாளு அவர்களின் மகன் திரு. சீனிவாசன் மணிப்பால்
வட்டாரப் பொறியியற் கல்லூரி மற்றும் சென்னைப் பல்கலை
கழகம் ஆகியவற்றின் ஒப்புதலோடு முறைப்படி மாற்றம்
செய்யப்பட்டதால் இதில் எவ்வித முறைகேடும் இல்லை.

புகார் 9—திரு. சீனிவாசன் (உதவிப்பேராசிரியர், அமைப்பு
பொறியியல்) என்பவர் இரண்டு முறை பேராசிரியர் பதவிக்கு
விண்ணப்பித்தும் டாக்டர் பட்டம் இல்லாததால் தேர்ந்தெடுக்கப்
படவில்லை. இருப்பினும் வேலை வாய்ப்பு பயிற்சித்துறையின்
பொறுப்புப் பேராசிரியராக ஆக்கப்பட்டு பின்னர் மேற்படித்
துறையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

முடிவு—பேராசிரியர் திரு. கே. சீனிவாசன் என்பவர் 14
ஆண்டுகாலப் பணி அனுபவமும் அமெரிக்க கொலரோடா
பல்கலைக் கழகத்தின் பட்டயேற்படிப்பும் உடையவர். வேலை
வாய்ப்புப் பயிற்சித்துறையின் பேராசிரியர் பதவிக்குரிய தகுதிகள்
அனைத்தும் இருந்தமையால் கல்லூரி ஆளுகைக் குழுவின் தலைவ
ரால் இவர் பேராசிரியராக நியமனம் செய்யப்பட்டுள்ளதால்
இதில் முறைகேடு ஏதும் இல்லை.

புகார் 10.—திரு. குஞ்சிதபாதம் (உதவிப் பேராசிரியர், கட்டி
டவியல்) என்பவர் கல்லூரி தொடங்கிய நாளிலிருந்து பணி
புரிந்து வந்தாலும் அவர், பதவிக்கு ஏற்ற தகுதி இல்லை என்று
கூறி பதவி நீக்கம் செய்யப்பட்டார். பின்னர் ஓராண்டு கழித்து
மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

முடிவு—திரு. குஞ்சிதபாதம் என்பவர் கல்கத்தாவில் பொது
சுகாதாரப் பிரிவில் பட்ட மேற்படிப்புப் படித்தவர். 1974-ல்
இவர் கல்லூரித் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டார்,
இவரது படிப்பின் மூலச் சான்றிதழ் இல்லாமையால், பின்னர்.
அந்த அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சேர்த்துக்
கொள்ளப்பட்டார். இவர் மூலச் சான்றிதழை குறிப்பிட்ட

காலத்திற்குள் காட்டாத்தால், பணி முறிவு செய்யப்பட்டார். பின்னர், மூலச் சான்றிதழ் அளித்ததால் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டார். இதில் முறைகேடு எதுவும் இல்லை.

புகார் 11—கல்லூரியில் பல தொழிலாளர்கள் மஸ்டர் ரோ வில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பணிநீக்கம் செய்து வருவதால் வேலை உத்தர வாதம் இல்லாமல் அவர்களிடையே ஒரு பதட்ட நிலை நிலவு கிறது.

முடிவு—சிறிது பணிமுறிவு இருந்தாலும், பரவாயில்லை என்ற அடிப்படையில் இக்கல்லூரியில் 5 ஆண்டு பணி அனுபவம் உள்ள அனைத்து என். எம. ஆர்.களையும் ரூ. 200—5—300 என்ற ஊதிய விகிதத்தில் நிரந்தரப் பணியில் அமர்த்துவது என்றும் இனிமேல் என். எம். ஆர். களை நியமிப்பதில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டுவிட்டதால் பதட்ட நிலை இல்லை.

புகார் 12—டாக்டர் சச்தேவ் (உலோகவியல் பேராசிரியர்) 1973–74ஆம் ஆண்டு திருச்சி காவேரி பொறியியற் தொழிற் கூட்டத்திற்கு ஆலோசகராக இருந்து ரூ. 12,000 ஊதியமாகப் பெற்றார். ஆனால், நடைமுறை விதிப்படி மேற்படிப் பணத் தில் 60 சதவிகிதம் கல்லூரிக்குச் செலுத்தவில்லை. மேலும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்ட மற்ற பணியாளர்களுக்கும் எந்தப் பணமும் விதிப்படி வழங்கப்படவில்லை.

முடிவு—டாக்டர் சச்தேவ் 1975 ஆம் ஆண்டு கல்லூரியை விட்டு விலகி திருச்சி பாரத கனரக மின் தொழிற்சாலையிலேயே சேர்ந்து விட்டார். இவர் காவேரி நிறுவனத்திற்கு ஆலோசக ராக இருந்து பணம் பெற்றது தபக்குத் தெரியாது என்று முதல் வர் கூறிவிட்டதாலும் மேற்படி நபர் தற்போது "BHEL" நிறுவனத்தில் பணியாற்றுவதாலும் இவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து கல்லூரிக்குச் சேரவேண்டிய 60 சதத் தொகையைச் செலுத்த வேண்டி "BHEL" நிறுவனத்தை அரசு கேட்டுக் கொண் டுள்ளது.

புகார் 13—1974 ஆம் ஆண்டு எந்திரவியல் துறையின், அருகில் ரூ. 10,000 செலவில் கல்லூரி விழாவுக்கான மேடை ஒன்று கட்டப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இதேபோல் ஒரு மேடை நிர்வாகக் கட்டிடத்திற்குப் பின்னால் ரூ.25,000 செல வில் கட்டப்பட்டது. இது இரட்டை வேலை, அரசு பணம் விரயம்.

முடிவு—1964-ல் எந்திரவியல் துறை அருகில் தற்காலிக மேடை ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் 1974-ல் பழைய பொருட்களைக் கொண்டு இம்மேடைக்குக் கூரைவேய்ந்து பழுது



பார்க்கப்பட்டது. எனினும் கல்லூரிக்கெனத்தனி அரங்கம் ஏதும இல்லாததாலும், கல்லூரியின் வளர்ந்து வரும் தேவை களுக்கு ஏற்பவும் 1976-ல் நிரந்தரமாக ஒரு மேடை அமைக்கப் பட்டது. இதில் அரசுப் பணம் ஏதும் விரையம் ஆகவில்லை என்பதால் மேற்கூறிய குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

புகார் 14.—ஒவ்வோராண்டும் ரூ. 5 இலட்சம் கல்லூரி, வளாகப் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்டு வருகிறது. எந்தவித வேலையும் செய்யாமல் செலவுக் கணக்கு எழுதப்பட்டு வரு கிறது.

முடிவு—இந்திய அரசு விதிகளின்படி கட்டிடங்களின் மதிப் பில் 1.5 சதவிகிதம் அதன் பராமரிப்புகளைச் செலவிடலாம் என்று இருக்கிறது. 1970ஆம் ஆண்டிற்குப் பிறகு பொருட் களின் விலையும் பணியாட்களின் ஊதியமும் கணிசமாக உயர்ந்தி யிருக்கிறது. பராமரிப்புச் செலவில் எவ்வித முறைகேடும் நிகழ்ந் திருப்பதாகத் தெரியவில்லை.

புகார் 15—"BHEL" நிறுவனத்திலிருந்து அழைக்கப் படும் கௌரவ விரிவுரையாளருக்கு மணிக்கு ரூ. 15 கொடுப்ப துடன் போக்குவரத்துச் செலவுக்காக ரூ. 10-ம் கொடுக்கப்படு கிறது. ஆனால் வகுப்புகள் நிறுவன வளாகத்திற்குள்ளேயே நடத்தப்பட்டாலும் போக்குவரத்துச் செலவு கொடுக்கப்படுகிறது.

முடிவு—பகுதிநேரப் பொறியியற் படிப்பு நடத்தும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு 45 நிமிடத்திற்கு ரூ. 15-ம் மேற்பட்டப் படிப்பு நடத்தும் விரிவுரையாளருக்கு மணிக்கு ரூ. 25-ம் கொடுக் கப்படுகிறது. இது தவிர, பயணப்படியாக "BHEL" நிறுவன ஊழியர்களுக்கு எதுவும் கொடுக்கப்படுவதில்லை. எனவே, இக் குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இல்லை.

புகார் 16—பெங்களூர் தோட்டக்கலைஞரான திரு. எம்.எஸ். ஐயங்காரிடமிருந்து ஆயிரக்கணக்கில் விதைகள் வாங்கப்பட்ட தாகக் கணக்குக் காட்டப்பட்டிருந்தாலும் கல்லூரி மைதானத் தில் இது சம்பந்தமாக எதுவும் செய்யப்படவில்லை.

முடிவு—கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது 40 ஏக்கர் பரப் பளவு கொண்ட மைதானம் கட்டாந்தரையாக இருந்தது. இதில் ஒரு நல்ல தோட்டத்தை உருவாக்க பெங்களூரில் உள்ள பாரத அறிவியல் நிறுவனத்தின் தோட்டக் கலைஞரான திரு. எம். எஸ். ஐயங்காரின் உதவி நாடப்பட்டு அவரிடமிருந்தும், பெங்களூர் நர்சரியிலும் விதைகளும் செடிகளும் வாங்கி நடப்பட்டன. இன்று வட்டாரப் பொறியியற் கல்லூரியில் அழகான தோட்டம் உண்டு. எனவே, இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

[1984 மார்ச் 7

புகார் 17—அரசு அடிப்படை விதிகளுக்கு (F. R.) முரணாக 3 ஆண்டுகளுக்கு மேலாக அயற்பணியில் பணிபுரியும் அலுவலகப் பணியாளர்களுக்கு மாற்றுப் பணிப்படி வழங்கப்படுகிறது.

முடிவு—இக்கல்லூரி ஒரு தானியங்கி நிறுவனமாகும். இதற்கு அலுவலகப் பணியாற்ற அயற்பணியில் வருபவர்களுக்கு 20 சதவீத மாற்றுப் பணிப்படி உண்டு என்பதற்கு அரசு நிதித் துறையின் ஒப்புதல் பெற்ற பின்னர் அரசு விதிப்படியிலேதான் படி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் எவ்வித முறைகேடும், கிடையாது.

புகார் 18—பண்ணை பராமரிப்புப் பணியாளர்கள் கல்லூரி வாகனங்களை உபயோகித்தாலும் அவர்களுக்கு போக்குவரத்துக் ட்டணமாக ரூ. 50 மாதந்தோறும் கொடுக்கப்பட்டு வருகிறது.

முடிவு—கல்லூரி மைதானம் சுமார் 860 ஏக்கர் நிலத்தில் பரவிக்கிடக்கிறது. கல்லூரிக் கட்டிடங்கள் அமைந்த நிலத்தின் பரப்பளவு சுமார் 400 ஏக்கர். இவ்வளவு தூரத்தையும் பண்ணை பராமரிப்பு அதிகாரி தினமும் சைக்கிளில் சுற்றிவருவது சாத்தியமல்ல. மேலும் அவர் தனது தகுதிப்படி ஸ்கூட்டர், அலவன்ஸ் ரூ. 50 வாங்கத் தகுதியுடையவராதலால் அத்தொகை அவருக்கு விதிப்படி அளிக்கப்படுகிறது. இதில் முறைகேடு ஏதும் இல்லை.

புகார் 19—புத்தக வெளியீட்டாரிடமிருந்து நேரிடையாகத் தொடர்பு கொண்டு 20 சதவீத புத்தகக் கழிவு பெறுவதை விடுத்து திருவாளர்கள் பழனியப்பா சகோதரர்கள் மூலமாக 12½ சதவீதக் கழிவுத் தொகையில் புத்தகங்கள் வாங்கப்படுகின்றன.

முடிவு—உள்நாட்டுப் பதிப்பாளர்களிடமிருந்து நேரிடையாகவும், வெளிநாட்டுப் பதிப்பாளர்களிடமிருந்து புத்தகங்கள் புகழ்பெற்ற விற்பனையாளர்களான ஹிக்கின்பாதம்ஸ், பழனி யப்பா சகோதரர்கள், மாக்மில்லன் கம்பெனி மூலமாகவும் வாங் கப்படுகின்றன. அப்படி வாங்கும்போது ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு எந்தக் கம்பெனியின் புள்ளிகள் அதிகக் கழிவு தரு கின்றனவோ அதன்படி புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. எந் தக் கம்பெனிக்கும் சலுகை கொடுக்கப்படவில்லை.

புகார் 20, 21.—டாக்டர் சி. ஆர். கந்தசாமி மாஸ்கோ வின் நல்ல தகுதிப்படிப்புடன் கல்லூரியில் பணிபுரிந்தாலும் அவருக்கு உரிய எந்தவித வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. அவர் எந்திரவியல் துறையின் பேராசிரியராக இருந்தும் அத் துறையின் பாடங்களை நடத்த அவர் அனுமதிக்கப்படுவதில்லை. அதே போல் மின்னியில் துறைப் பேராசிரியர் திரு. கிருஷ்ண மூர்த்தியும் நடத்தப்படுகிறார்.



1984 மார்ச் 7]

முடிவு.—டாக்டர் சி. ஆர். கந்தசாமியின் வீட்டுத் தொலை பேசியை அவர் தவறுதலாக கல்லூரிக்கு எதிராகப் பயன்படுத்தி யதால் அது பழுதடைந்த பின்னர் சரி செய்யப்படவில்லை என்பது உண்மை. எனினும் பின்னர் அது சரி செய்யப்பட்டு விட்டது. அதேபோல் திரு. கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுத் தொலைப் பேசியும் பழுதடைந்த பின் சரிசெய்து கொடுக்கப் பட்டது. பாடங்களை நடத்துவதைப் பொறுத்தவரை, அதற் கென அமைந்த பாடத் திட்டக் குழுதான் பாடப் பணிகளை நிர்ணயிக்கின்றனவாதலால், முதல்வர் மீது எவ்வித குற்றச் சாட்டுக்கும் ஆதாரமில்லை. , திரு. கிருஷ்ணமூர்த்தியின் ஆராய்ச் சிப் பணி தொடராமல் தடுக்கப்படுகிறது, என்பதும் உண்மையல்ல அவரது துறையிலிருந்த கடைசல் இயந்திரம் மிகப்பயனுள்ள துறையான எந்திரத்துறைக்கு மாற்றப்பட்டு இரு துறைகளுக்கும் பயன்படுமாறு அமைக்கப்பட்டுள்ளது.

புகார் 22.—பிற வருமானம் கொடுக்கும், எந்தப் பணியும் நிர்வாகத்தினருக்கு வேண்டியவர்களுக்கு மட்டுமே கொடுக்கப் பட்டு பிறருக்கு மறுக்கப்படுகிறது.

முடிவு.—பிற வருமானம் கொடுக்கும் பணிகள் கல்லூரி ஆசிரியர்களுக்கு சுற்று முறையின் அடிப்படையில் கொடுக்கப் பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் டாக்டர் சி. ஆர். கந்தசாமிக்கு 1975–76 முதல் பகுதிநேர வகுப்புகள் ஆறு ஆண்டு களுக்குக் கொடுக்கப்படுகின்றன, இதன் மூலம் மாதம் சுமார் ரூ. 240 முதல் 420 வரை அவர் பயன்பெறுகிறார். எனவே, வேண்டியவர் வேண்டாதவர் என்ற குற்றச்சாட்டிற்கு இடமில்லை

இனி திரு. மணிசுந்தரத்தின் மீதுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்கக் கையாண்ட முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

திரு. மணிசுந்தரத்தின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக் களை ஆராய 1978-இல் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையின் தனிப்பிரிவால் விசாரணை செய்யப்பட்டு, ஒவ்வொரு குற்றச் சாட்டின் மீதும் விரிவான அறிக்கை பெறப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் மேற்படிக் கல்லூரியின் ஆளுகைக் குழு தீர்மானித்தபடி மேற்கண்ட குற்றச்சாட்டுகளை ஆராய கீழ்க்கண்டோர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1. தமிழக அரசின் கல்வித் துறைச் செயலாளர்.

2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்.

3. மத்திய அரசின் கல்வி அமைச்சக தென் மாநிலத் துறை ஆலோசகரான திரு. சதாசிவம்.

4. சென்னை ஐ. ஐ. டி. நிறுவன இயக்குநர் டாக்டர் இந்திரேசன்.

[1984 மார்ச் 7

மேற்கண்ட குழு பலமுறை கூடி குற்றச்சாட்டுக்களை பரி சீலித்தது. சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் மீது திரு. மணி சுந்தரத்தின் தன்னிலை விளக்கத்தைப் பெற்றது இத் தன் னிலை விளக்கத்தையும், புலனாய்வுத்துறை அறிக்கையையும் தீர ஆய்ந்து மேற்படிக் குழு அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையின் அறிக்கை மற்றும அரசு இதுபற்றி நியமித்த குழுவின் அறிக்கை ஆகியவற்றை அரசு ஆராய்ந்ததில் திரு. மணி சுந்தரத்தின் மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றங்களும் ஆதாரமற்றவை எனக் கருதப்பட்ட தாலும் தற்சமயம் இவர் இக்கல்லூரியை விட்டுச் சென்றுவிட்ட தாலும் இவர்மீது மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என அரசு தீர்மானித்தது.



1984 மார்ச் 7]

## இணைப்பு II.

(544 28-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட 19671— வினா எண். 125-க்கான விடையைக் காண்க.]

| போக்குவரத்து மண்டலம். | பலமுனை பேருந்து தடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| | 36 |
| 1. செங்கல்பட்டு .. .. .. | 32 |
| 2. தென் ஆற்காடு .. .. | 25 |
| 3. வட ஆற்காடு .. .. .. | .16 |
| 4. தர்மபுரி .. .. .. | 180 |
| 5. சேலம் .. .. .. | 64 |
| 6. பெரியார் .. .. .. | .. |
| 7. நீலகிரி .. .. .. | 45 |
| 8. கோயம்புத்தூர் .. .. | 28 |
| 9. தஞ்சாவூர் .. .. .. | 7 |
| 10. புதுக்கோட்டை .. .. | 73 |
| 11. திருச்சி .. .. .. | 43 |
| 12. மதுரை .. .. .. | 37 |
| 13. திண்டுக்கல் .. .. .. | 142 |
| 14. இராமநாதபுரம் .. .. | 106 |
| 15. திருநெல்வேலி .. .. | 44 |
| 16. கன்னியாகுமரி .. .. | |
| மொத்தம் .. | 878 |

பலமுனைப் பேருந்து தடங்களில் பேருந்துகள் விடப்படும் நகரங்கள்.

| போக்குவரத்து மண்டலம். (1) | நகரங்கள். (2) |
|---|---|
| 1. செங்கல்பட்டு .. .. | 1. காஞ்சிபுரம். |
| | 2. திருத்தணி |
| | 3. பொன்னேரி |
| | 4. செங்கல்பட்டு |
| | 5. மரக்காணம் |
| 2. தென் ஆற்காடு .. | 1. கடலூர் |
| | 2. சிதம்பரம் |
| | 3. விருத்தாசலம் |
| | 4. பண்ருட்டி |
| | 5. விழுப்புரம் |
| | 6. திண்டிவனம் |
| | 7. கள்ளக்குறிச்சி |

| போக்குவரத்து மண்டலம். (1) | நகரங்கள் (2) |
|---|---|
| 3. வட ஆற்காடு .. .. | 1. வேலூர்<br>2. ஆரணி<br>3 ஆற்காடு<br>4. வந்தவாசி<br>5. திருப்பத்தூர்<br>6. வாணியம்பாடி<br>7. திருவண்ணாமலை |
| 4. தர்மபுரி .. .. | 1. கிருஷ்ணகிரி<br>2. தர்மபுரி<br>3. ஓசூர் |
| 5. சேலம் .. .. | 1. சேலம்<br>2. சூரமங்கலம்<br>3. ஓமலூர்<br>4. பேட்டூர்<br>5. ராசிபுரம்<br>6. ஆத்தூர்<br>7. நாமக்கல்<br>8. வேலூர்<br>9. திருச்செங்கோடு<br>10. எடப்பாடி<br>11. கொமாரபாளையம்<br>12. ஈரோடு |
| 6. பெரியார் .. .. | 1. கோபி<br>2. ஈரோடு<br>3. காங்கயம்<br>4. சத்தியமங்கலம்<br>5. பெருந்துறை<br>6. தாராபுரம்<br>7. நம்பியூர்<br>8. பவானி<br>9. கவுந்தம்பாடி<br>10. சென்னிமலை<br>11. கொடுமுடி |
| 7. நீலகிரி — | ஒன்றுமில்லை. |



| போக்குவரத்து மண்டலம். (1) | நகரங்கள். (2) |
|---|---|
| 8. கோயம்புத்தூர் .. | 1. அவிநாசி<br>2. மேட்டுப்பாளையம்<br>3. சிங்காநல்லூர்<br>4. கோயம்புத்தூர்<br>5. பல்லடம்<br>6. உடுமலைப்பேட்டை<br>7. பொள்ளாச்சி<br>8. திருப்பூர் |
| 9. தஞ்சாவூர் .. .. | 1. தஞ்சாவூர்<br>2. திருவாரூர்<br>3. மன்னார்குடி<br>4. வேதாரண்யம்<br>5. கும்பகோணம்<br>6. நாகப்பட்டிணம்<br>7. பேராவூரணி<br>8. பட்டுக்கோட்டை<br>9. மயிலாடுதுறை<br>10. நன்னிலம் |
| 10. புதுக்கோட்டை .. | 1. புதுக்கோட்டை<br>2. கீரனூர்<br>3. பொன்னமராவதி<br>4. ஆவுடையார் கோவில்<br>5. அறந்தாங்கி |
| 11. திருச்சி .. | 1. திருவரம்பூர்<br>2. மணப்பாறை<br>3. துவரங்குறிச்சி<br>4. கரூர்<br>5. அரவக்குறிச்சி<br>6. முசிறி<br>7. தொட்டியம்<br>8. அரியலூர்<br>9. பெரம்பலூர்<br>10. ஜெயம்கொண்டம்<br>11. லால்குடி<br>12. திருச்சி<br>13. ஸ்ரீரங்கம்<br>14. துறையூர். |

[1984 மார்ச் 7

| போக்குவரத்து மண்டலம். (1) | நகரங்கள். (2) |
|---|---|
| 12. மதுரை .. .. | 1. டி. கல்லுப்பட்டி |
| | 2. உசிலம்பட்டி |
| | 3. நத்தம் |
| | 4. மேலூர் |
| | 5. திருமங்கலம் |
| 13. திண்டுக்கல் .. .. | 1. திண்டுக்கல் |
| | 2. வேடசந்தூர் |
| | 3. கம்பம் |
| | 4. தேனி |
| | 5. போடி |
| | 6. சின்னமனூர் |
| | 7. ஆண்டிப்பட்டி |
| | 8. பெரியகுளம் |
| | 9. ஒட்டன்சத்திரம் |
| | 10. வாடிப்பட்டி |
| | 11. வத்தலகுண்டு |
| | 12. பழனி |
| 14. ராமநாதபுரம் .. .. | 1. கீழக்கரை |
| | 2. ராமநாதபுரம் |
| | 3. தேவக்கோட்டை |
| | 4. காரைக்குடி |
| | 5. திருப்பத்தூர் |
| | 6. பரமக்குடி |
| | 7. முதுகளத்தூர் |
| | 8. அருப்புக்கோட்டை |
| | 9. விருதுநகர் |
| | 10. சாத்தூர் |
| | 11. சிவகாசி |
| | 12. ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| | 13. இராசப்பாளையம் |
| | 14. சிவகங்கை |



1984 மார்ச் 7]

| போக்குவரத்து மண்டலம் (1) | நகரங்கள் (2) |
|---|---|
| 15. திருநெல்வேலி .. .. | 1. திருநெல்வேலி |
| | 2. திருச்செந்தூர் |
| | 3. வள்ளியூர் |
| | 4. அம்பாசமுத்திரம் |
| | 5. நாங்குனேரி |
| | 6. ஆலங்குளம் |
| | 7. ஸ்ரீவைகுண்டம் |
| | 8. சாத்தன்குளம் |
| | 9. உடன்குடி |
| | 10. தென்காசி |
| | 11. தூத்துக்குடி |
| | 12. சேரன்மகாதேவி |
| | 13. முக்கூடல் |
| | 14. கோவில்பட்டி |
| | 15. விளாத்திகுளம் |
| | 16. விக்கிரமசிங்கபுரம் |
| | 17. சங்கரன்கோவில் |
| | 18. கடையநல்லூர் |
| 16. கன்னியாகுமரி .. .. | 1. நாகர்கோவில் |
| | 2. தக்கலை |
| | 3. குழித்துறை |

## உள்ளடக்கம்.

8—3—1984.


| | பக்கங்கள். |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 739—775 |
| 2. தகவல் கோரல் : | |
| மழை, வெள்ளத்தினால் தென்மாவட்டங்கள் பாதிக்கப்பெற்றுள்ளமை. .. .. | 775—777 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம் : | |
| திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தொழுதூர் அருகே விபத்துக்குள்ளானது .. .. | 777—780 |
| 4. அறிவிப்பு : | |
| மேலவையில் இருந்து வரப்பெற்ற செய்தி—சட்டமுன்வடிவுகள் .. .. .. | 781 |
| 5. கவன ஈர்ப்புகள் : | |
| (அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் வன இலாகாவினர் பயிர்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடக் கூடாது எனத் தடுப்பது .. | 781—787 |
| (ஆ) இராயபுரம் பகுதியில் மாநகராட்சிப் பணிகள் நடைபெறாதது .. .. | 787—793 |
| 6. வரவு-செலவுத் திட்டம், 1984–85—பொது விவாதம்— | |
| திரு. துரைமுருகன் .. .. .. | 793—815 |
| திரு. ஜே. சி. டி. பிரபாகரன் .. .. | 816—832 |
| திரு. என். வரதராஜன் .. .. .. | 932—843 |
| திரு. சி. கோபால் .. .. .. | 843—849 |
| திரு. எம். ஆறுமுகம் .. .. .. | 849—857 |
| திரு. ஏ. பாலுச்சாமி .. .. | 857—861 |
| திரு. கே. தனுக்கோடித் தேவர் .. .. | 864—867 |
| 7. அறிக்கை அளித்தல் : | |
| விதி 106-ன் கீழ் வெள்ள நிவாரணம் பற்றிய அறிக்கை .. .. .. .. | 861—863 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 868 |

2261

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 8, வியாழக்கிழமை.

மாசி 25, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

''செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து''

அவையில் காதோடு நெருங்கிப் பேசுதலையும், சேர்ந்து சிரித்தலையும் தவிர்க்க வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### வேலூர் வட்டம், கணியம்பாடி பகுதிக்கான குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகள்.

211—(* வினா எண் 19141)—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், கணியம்பாடி பகுதியில் குடும்ப உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கவில்லை என்ற புகார் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்துள்ளதா ?

(ஆ) இது குறித்து எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) வேலூர் வட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் 23 மதுரா கிராமங்களில் குடும்ப அட்டை வழங்காமல் விடுபட்டுப்போன குடும்பங்களைக் கணக்கெடுப்பு செய்து குடும்ப அட்டைகள் எல்லா குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வேலூர் வட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பல கிராமங்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு உள்ளன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதேபோல் குடியாத்தம் தொகுதியிலும் பல்வேறு கிராமங்களில் குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கேட்ட நேரத்தில் குடும்ப அட்டைகள் போதுமான அளவிற்கு மத்திய அலுவலகத்திலிருந்து வராததன் காரணமாக வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே அந்தப் பகுதிகளிலும் குடும்ப அட்டைகள் உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணியம்பாடி பகுதியில் விட்டுப் போன குடும்பங்களுக்கு எல்லாம் குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டு உள்ளன. ஆனால் குடியாத்தம் பகுதியினுடைய தன்மைகள் தெரியவில்லை. அங்கேயும் வழங்கப்பட்டு இருக்கத்தான் வேண்டும். இதுபற்றி தனிக் கேள்வி போட்டால், அதுபற்றி விவரமான தகவல்கள் தரமுடியும்.

**1983 ஜனவரி முதல் ஜூன் வரை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கிய உணவு பொருட்களின் அளவு.**

**212—(*வினா எண் 20909)—திரு. என். வரதராஜன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1983 ஜனவரி முதல் ஜூன் வரை மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுத்த அரிசி மற்ற உணவுப் பொருட்களின் அளவு எவ்வளவு ?*

*(ஆ) மாநில அரசு மத்திய அரசிடம் கோரியது எவ்வளவு?*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : *(அ) 1983 ஜனவரி முதல் மார்ச் வரை மத்திய அரசு மாநில அரசுக்கு அரிசி ஒதுக்கீடு செய்யவில்லை, ஏப்ரல், மே மாதங்களுக்கு மாதமொன்றுக்கு 15,000 டன்களும், ஜூன் மாதத்திற்கு 25,000 டன்களும் அரிசி ஒதுக்கீடு செய்தது, ஜனவரி, பிப்ரவரி மார்ச் மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 4,000 டன்களும், ஏப்ரல் மாதத்திற்கு 20,000 டன்களும், ஜூன் மாதத்திற்கு 25,000 டன்களும் கோதுமை ஒதுக்கீடு செய்தது.*





*(ஆ) மாநில அரசு மத்திய அரசிடம் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை, மாதம் ஒன்றுக்கு 80,000 டன்கள் அரிசியும், ஜூன் மாதம் முதல் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் டன்கள் அரிசியும் ஒதுக்கீடு செய்யக் கோரியது. ஜனவரி மாதத்திற்கு 11,000 டன்கள் கோதுமையும், பிப்ரவரி முதல் மாதம் ஒன்றுக்கு 40,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கீடு செய்யக் கோரியது.*

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் மாதத்திற்குக் கோரியது 80 ஆயிரம் டன். ஆனால் கிடைத்து இருப்பது 15 ஆயிரத்திலிருந்து சில மாதங்களில் 20 ஆயிரம் டன் வரை இப்போது ஒதுக்கிய ஒதுக்கீட்டிலே நமக்கு வந்து சேர்ந்தது எவ்வளவு? அடுத்து, தமிழ்நாட்டிலே பெரும் பகுதி கடுமையான வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டிலே மத்திய தொகுப்பிலே அதிக அளவில் அரிசி இருந்தும் கூட அவ்வாறு கொடுக்காமல் இருந்தது சரிதானா? அரசு தற்போதுள்ள நிலைமையில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க இனிமேல் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி 1983 ஜனவரி தொடங்கி 1983 மார்ச் மாதம் வரையில் ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை. அதைத்தான் சட்டப் பேரவையிலும் மேலவையிலுப் கூட உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட மத்திய அரசை வலியுறுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு, ஏப்ரல் திங்களுக்கு, மே திங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 15 ஆயிரம் டன் என்று கொடுத்தது. பிறகு 25 ஆயிரம் டன் என்றும், அதற்குப் பிறகு 30 ஆயிரம், 40 ஆயிரம் டன் என்றும் அதை உயர்த்தினார்கள். எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த அளவிற்கு நாம் அந்த அரிசி முழுவதையும்-எடுத்துவிட்டோம். 500 டன், 300 டன் என்று குறைபாடுகளும் மற்றவைகளும் இருக்கக்கூடும். ஆனால் அதிக ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டும் என்பதை நாம் வற்புறுத்தி வந்த காலத்தில், தமிழகத்திற்கே பற்றாக் குறையாக இருக்கிற காரணத்தால் மத்திய தொகுப்புக்கு நாம் அரிசி கொடுப்பதற்கில்லை என்று பல தடவை சொல்லியும் மைய அரசு, தமிழக அரசு மைய அரசினுடைய இருப்புக்கு அரிசி வழங்காததன் காரணமாக, மைய அரசு வழங்குவதற்கில்லை என்று ஏற்கெனவே இருந்த உணவு அமைச்சர் அவர்கள் திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டே வந்தார்கள்.

அதற்குப் பிறகு, இங்கே இன்னும் அதிக பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக, இங்கேயே போதவில்லை, மேற் கொண்டும் வேண்டும் என்று கேட்கிற சூழ்நிலை வறட்சி ஏற் பட்டதன் காரணமாக தமிழக அரசுக்கு உருவாகியிருக்கிறது என்றும், ஆகவே எப்படி மத்திய அரசுக்கு அதனுடைய இருப்

புக்காகத் தர முடியும் என்றும் வாதாடி வந்தோம். அதற்குப் பிறகு சூழ்நிலைகளை அவர்கள் ஓரளவிற்கு உணர்ந்து கொண்டதற்குப் பிறகு, சிறிது சிறிதாக உயர்த்தி, இப்போது 40 ஆயிரம் டன்னுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டதாலும், இந்த ஆண்டு கடுமையான மழையும், வெள்ளமும் தாக்கியதாலும், தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறதே, அதை மனதில் கொண்டு ஒவ்வொரு மாதமும் 1 லட்சம் டன் அரிசி அளவிற்கு உடனடியாகக் கொடுத்து உதவ வேண்டும் என்று மைய அரசை இந்த அரசு வற்புறுத்துமா? இந்த நியாயத்தை வற்புறுத்துவதற்காக ஜனங்களைத் திரட்டுவதற்கும் இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கும் அரசு முன் வருமா ? ஏனென்றால் தமிழ் நாட்டினுடைய உணவு நெருக்கடி நிலையில் ஒரு கார்டுக்கு 2 கிலோ கூடப் பெற முடியாமல் தமிழக மக்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதை கவனத்தில் கொண்டு, அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல, இந்த மாநிலத்தினுடைய தேவையை ஓரளவிற்காவது நிறைவேற்ற, 1 லட்சம் டன் அரிசியைத் தர வேண்டும் அல்லது குறைந்த அளவு 80 ஆயிரம் டன் அரிசியையாவது ஒதுக்க வேண்டும் என்று தொடர்ந்து இந்த அரசு வற்புறுத்திக் கொண்டு வருகிறது. இதை உணவு அமைச்சர்கள் மாநாட்டில் கூட வற்புறுத்தினேன். 15 நாட்களுக்கு முன்னால் கூட, மத்திய உணவு அமைச்சருக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. இப்படி இருக்கக் கூடிய சூழ்நிலையில், அதுவும் குறிப்பாக 2, 3 மாத காலமாகத் தொடர்ந்து மழை பெய்து, ஏற்கெனவே வறட்சியினால் அவதியுற்ற தமிழக மக்கள், மேலும் இந்த மழையினாலும் வெள்ளத்தினாலும சேதப்பட்டு, அவதிக்குள்ளாகி, நாம் எதிர் பார்க்கிற அளவுக்கு அறுவடை நடக்காத சூழ்நிலை இருப்பதால், குறைந்த பட்சம் இப்போது 80 ஆயிரம் டன்னாவது அரிசியை ஒதுக்க வேண்டும் என்றும், 40 ஆயிரம் டன் கோதுமையை ஒதுக்க வேண்டும் என்றும் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

ஒரு தீர்மானம் இயற்றுவதன் மூலமாகத்தான் மைய அரசை இணங்க வைக்க முடியும் என்ற சூழ்நிலை ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போன்று அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் கூட இறங்கலாம்.



திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, 1983 ஆம் ஆண்டுக்குத் தமிழக அரசு கேட்ட ஒதுக்கீட்டை, 3 மாதங்களுக்கு மைய தொகுப்புக்குக் கொடுக்கவில்லை என்ற காரணத்தைச் சொல்லி, நமக்கு ஒதுக்கீடு செய்யாமல் இருந்தார்கள் என்று சொன்னார்கள். இது போன்று தொடர்ந்து மைய தொகுப்புக்குக் கொடுக்காத பிற மாநிலங்களுக்கு மைய அரசு அரிசி உதவி கொடுக்கிறதா அல்லது தமிழகத்திற்கு மட்டுமே இந்தப் பாகுபாடு காட்டப்படுகிறதா ?

ஒரு லட்சம் டன் வேண்டும் என்று கேட்டால், 15 ஆயிரம் டன், 20 ஆயிரம் டன்தான் கொடுக்கிறார்கள். மற்ற மாநிலங்களுக்கு இப்படிப் பாகுபாடு செய்கிறார்களா? அப்படி என்று சொன்னால், மைய அரசை வலியுறுத்தும் வகையில், நாம் இந்த மன்றத்தின் மூலமாகத் தகுந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன் வந்து, நம்முடைய அரசு மைய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் பருவ நிலையெல்லாம் சரியாக இருந்து, மழை பெய்ய வேண்டிய காலத்தில் பெய்து, பயிர்ச் செலவுகளைச் செய்ய வேண்டிய காலத்தில் சரியாக சிறப்பாக செய்து முடிப்போமேயானால், நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் உபரி மாநிலமாகத்தான் இருக்கும். நம்முடைய தேவைகளையும் நிறைவேற்றிக் கொண்டு, பிற மாநிலங்களுக்கும் அனுப்பக்கூடிய நல்ல சூழ்நிலைதான் இருக்கிறது. அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் கூட, மைய அரசினுடைய தொகுப்புக்கு அவர்கள் கேட்டதை அனுப்பியிருக்கிறோம்.

1978-ல் கூட 2 லட்சம் டன் அனுப்பியிருக்கிறோம். அதற்குப் பிறகு கூட நம்முடைய கையிலே மிச்சம் இருப்பதை மைய அரசினுடைய தொகுப்புக்கு, அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க நாம் தந்திருக்கிறோம். ஆனால் வறட்சி நிலை ஏற்பட்ட பிறகு, நமக்கே பற்றாக் குறையாக இருக்கிறபோது, மைய அரசுதான் நமக்குத் தர வேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். விளைந்தாலும், விளையாவிட்டாலும், பற்றாக்குறை இருந்தாலும் இல்லாவிட்டாலும், மைய தொகுப்புக்குத் தந்துதான் தீர வேண்டும் என்ற கொள்கை நியாயம் அல்ல என்பதைச் சொல்லி வருகிறோம்.

பிற மாநிலங்களைப் பொறுத்த வரையில், குறிப்பாக கேரள மாநிலமும், மேற்கு வங்க மாநிலமும் என்றைக்குமே உபரி மாநிலங்களாக இருந்தது இல்லை. அவர்களுக்கு மைய அரசு தந்துதான் தீர வேண்டும். அவர்களும் தொடர்ந்து

தந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கேட்கிற அளவுக்கு நமக்கு எப்படி தருவதில்லையோ அதே போல கேரள மாநிலம், மேற்கு வங்காள மாநிலம் மற்ற மாநிலங்களுக்கும், கேட்கிற அளவுக்குக் கொடுக்கவில்லை என்றாலும் ஓரளவிற்கு மைய அரசு கொடுத்து வருகிறது. ஆனாலும இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லி, நியாயத்தைச் சுட்டிக் காட்டியதற்குப் பிறகு தான், பிரதமரை நேரில் அணுகி நிலைமைகளை எடுத்துச் சொல்லியதற்குப் பிறகுதான் சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கி படிப்படியாக உயர்ந்து, 40 ஆயிரம் டன் இப்போது கொடுப்பதற்கு முன் வந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 9-10)

**திரு. தி. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மத்திய தொகுப்பிலிருந்து மாநில அரசுக்குத் தரப்படும் அரிசியின் விலை என்ன ? அதை வாங்குவதன் மூலமாக மாநில அரசுக்கு எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது அவர்கள் நிர்ணயித்திருக்கிற கொள் முதல் விலை அடிப்படையில் கொள்முதல் விலை, எடுக்கின்ற செலவு, போக்குவரத்துச் செலவு போன்றவைகளைக் கூடுதலாக வைக்கிறார்கள். இங்கே வந்து சேருகிறது. கொள் முதல் விலைக்குந் தருகிறார்கள். அதற்கு மேலே போக்குவரத்துச் செலவு அத்தனையும சேர்த்து கொள்முதல் அரிசியை நாம் விற்பனை செய்வதன் மூலமாக நான் ஏற்கெனவே தெரிவித்துள்ள படி, நியாய விலைக் கடைகள் மூலமாக ஒரு கிலோ ரூ. 1.75 என்ற விலைக்கு விற்பதன் மூலமாக 9 கோடியே 60 இலட்சம் ரூபாய் நமக்கு நட்டம் ஏற்படுகிறது.

### தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தைக் கவர்ச்சிகரமான முறையில் மாற்றும் திட்டம்.

213—(*வினா எண். 21031)—**திரு. சி. கணேசன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் பரிசுச் சீட்டுத் துறையில், கவர்ச்சிகரமான புதிய திட்டங்கள் கொண்டு வர அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.



(ஆ) தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தை கவர்ச்சிகரமான முறையில் மாற்ற கீழ்க்கண்ட திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

(i) பரிசுச் சீட்டுக்களை அச்சடிப்பதற்கென ஒரு தனி அச்சகம் அமைத்தல் ;

(ii) பரிசுச் சீட்டுக்களைப் பல வர்ணங்களில் கவர்ச்சிகரமான முறையில் தற்காலிகமாக தனியார் அச்சகத்தில் அச்சிட கொடுப்பது குறித்த ஒரு கருத்து ;

(iii) பரிசுத் தொகையினை இப்பொழுது இருப்பதை விட அதிகரித்தல் ;

(iv) வாரா வாரம் பரிசுச் சீட்டு குலுக்கல் நடத்துதல் ;

(v) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிக்கும் முறைகளைக் கடைபிடித்தல்.

**திரு. சி. கணேசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசுச் சீட்டுக்களுடைய விற்பனையை அதிகரிக்கிற வகையில் நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகச் சொன்னார்கள், பரிசுச் சீட்டுகளை விற்கிற அந்த ஏஜென்ட்களுக்கு மற்ற மாநிலங்களில் கொடுக்கப்படுகிற கமிஷனைவிட அதிகமாகத் தருவதற்கோ அல்லது அதிகம் பரிசுச் சீட்டுகள் விற்கிற ஏஜென்ட்களுக்கு ஊக்கத் தொகை கொடுத்து பாராட்டவோ ஏற்பாடு செய்கிற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாநிலத்திற்கு மாநிலம் ஓரளவுக்கு அது வேறுபட்டு வந்தாலும் கூட ஓரளவுக்கு இருக்கிற நிலைமைகளையெல்லாம் உத்தேசித்து, இருக்கிற நிலைமைகளுக்கு ஏற்ப பரிசுச் சீட்டு விற்கிற ஏஜென்ட்களுக்கு ஏற்கனவே 12 சதவீதம் இருந்தது, அதை மாற்றி 15, 16 சதவீதம் என்ற அளவுக்குக்கூட இங்கே தருகிறோம். சில மாநிலங்களிலே அரசே அதை நடத்தாமல் தனிப்பட்ட ஏஜென்ட்களிடம் விட்டு அவரவர்கள் நிலைமைகளுக்கு ஏற்ப குறைத்தோ கூட்டியோ கொடுக்கிற பல்வேறு நிலைமைகளிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஒரு சீராக ஒரு முறையாக நடைமுறைப்படுத்துகிற வகையிலே நடைமுறைகளைக் கடைப்பிடித்து அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைகளுக்கு ஏற்ப நாம் திட்டங்களை வகுத்து வருகிறோம்.

[1984 மார்ச் 8

திரு. சி. கணேசன் : தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பரிசுச் சீட்டுகள் இங்கே அமோகமாக விற்பனையாவதைப்போல் நம்முடைய பரிசுச் சீட்டுகள் மற்ற மாநிலங்களிலே அப்படிப்பட்ட உணர்வை—ஏழை எளிய மக்களுக்காக அதைக் கொடுக்கிறோம், தர்ம காரியத்திற்காகக் கொடுக்கிறோம் என்ற முறையிலே நினைத்து வாங்கக்கூடிய அளவிலே ஒரு உணர்வை—ஏற்படுத்தக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எந்த எந்த மாநிலம் நம்மோடு ஒரு உடன்பாடு கொண்டு அவர்களுடைய பரிசுச் சீட்டுகளை இங்கே விற்க ஏற்பாடு செய்கிறார்களோ அந்த மாநிலங்களிலே யெல்லாம் நம்முடைய பரிசுச் சீட்டுகளை விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நம்முடைய பரிசுச் சீட்டுகள் வேறு மாநிலங்களில் அதிகமாக விற்கவில்லை, ஆனால் நம்முடைய மாநிலத்திலே வேறு மாநில பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாகின்றன. நாம்தான் முதன் முதலில் பரிசுச்சீட்டு முறையை நடைமுறைப்படுத்தி வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகிற சூழ்நிலைகள், தன்மைகள் இங்கே தமிழகத்திலே 1968ஆம் ஆண்டிலிருந்து இருப்பதன் காரணமாக தமிழகம் ஓரளவுக்கு முன்னேறுகிற அளவுக்கு நாம் ஒரு உணர்வை ஏற்படுத்தியதன் காரணமாக தமிழகம் இன்றைக்கு ஒரு சிறந்த சந்தையாக—மார்க்கெட்டாக—மாறியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா பூராவும் போய்ப் பார்க்கும்போது தமிழகத்தில் தான் இந்தப் பரிசு சீட்டு விற்பனை அதிகமாக எல்லா இடங்களிலும் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்தப் பரிசுச் சீட்டு அதிகமாக விற்பதற்கு நாம் ஊக்கம் அளிப்பதன் காரணமாக சாதாரண குறைந்த வருமானம் உள்ளவர்கள் தங்களுடைய வருமானத்தினுடைய பெரும்பகுதியை பேராசையின் காரணமாகவும், வறுமையின் காரணமாகவும் அதில் செலவழித்து விட்டு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து சாதாரண மக்கள் அதிகமான தொகையைச் செலவழிக்காத அளவுக்கு, நிதானப் படுத்துவதற்கு ஏதாவது நல்ல யோசனை அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற உணர்வினை ஏற்கனவே கூட இந்த அவையில் நான் எடுத்துத் தெரிவித்து இருக்கிறேன். அதைப்பற்றி மத்திய அமைச்சருக்கும் எழுதப்பட்டது. இரண்டு தினங்களுக்கு



1984 மார்ச் 8]

முன்னால் எல்லா மாநிலங்களுடைய பரிசுச் சீட்டு இயக்குநர்கள் கூட்டத்தைக் கூட்டி சில ஆலோசனைகளைக் கேட்டார்கள். 15, 20 நாட்களுக்கு முன்பு கூட கூட்டத்தைக் கூட்டினார்கள். அதிலே நம்முடைய மாநில அரசு சார்பாக சில பல கருத்துக்களை வலியுறுத்தியிருக்கிறோம். அதைப் பெரும்பான்மையான மாநிலங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இந்தப் பரிசுச் சீட்டுக்கு வழங்கும் தொகை ஒரு கோடி, இரண்டு கோடி என்ற அளவுக்கு இருப்பதால் பேராசை ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு எல்லா மாநிலங்களும் சாதாரணமாக நடத்துகின்ற பரிசுச் சீட்டுக்கு ஒரு உச்ச வரம்பு வைக்க வேண்டும். அதை ரூ. 10 லட்சம், 15 லட்சம் என்று வைக்கவேண்டும். பம்பர் என்று ஒரு சிறப்புக் குலுக்கல் வருகின்ற போது ரூ. 50 லட்சம் அல்லது 75 லட்சம் என்ற அளவுக்கு ஒரு உச்ச வரம்பு கட்டவேண்டும். அந்த பம்பர் குலுக்கலும் வருடத்திற்கு 7 தடவை, 8 தடவை என்று அளவுக்கு நிர்ணயிக்க வேண்டும். இந்த அளவுக்குப் பரிசுகளை தரவேண்டும் என்ற ஒரு முறை வகுக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக கருத்துக்கள் எடுத்து தெரிவிக்கப்பட்டன. பெரும்பாலான மாநிலங்கள் அவற்றை ஏற்றுக்கொண்டு இருக்கின்றன என்றும் எடுத்துச் சொன்னார்கள். அதை மத்திய அரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் மத்திய அரசு ஒரு சட்டம் கொண்டுவருமேயானால் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் எல்லா மாநிலங்களும் தங்கள் தங்களுடைய நிலைக்கு ஏற்றபடி அதை ஒரு வரம்பின் அடிப்படையில் செய்ய முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆகவே அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லுகின்றபோது பரிசுச் சீட்டைக் கவர்ச்சியாக அச்சடிப்பதற்குத் தனியார் அச்சகத்திற்குவிடப்படும், அல்லது தனி அச்சகம் ஏற்படுத்தப்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் வெளி மாநில பரிசு சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் விற்பதற்குக் காரணம் அவற்றினுடைய பரிசுத் தொகை மக்களைக் கவருகின்ற வகையில் இருக்கிறது. ஆகவே வாங்குகிறார்கள். ஏதோ அந்தச் சீட்டுகள் கவர்ச்சியாக இருக்கின்றன அதனால் வாங்குகிறார்கள் என்பதை என்னைப் போன்றவர்கள் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. அந்தப் பரிசுத் தொகையை மக்களைக் கவருகின்ற வகையில் அமைக்க வேண்டுமே ஒழிய சீட்டை கவர்ச்சியாக ஆக்கவேண்டுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீட்டுக் கவர்ச்சியின் காரணமாகத்தான் நூற்றுக்கு நூறு விற்பனை ஆகிறது என்று நான் சொல்லவில்லை. அதில் ஓரளவுக்கு அந்தப் பங்கும் சேருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று தொகையை அதிகமாக வைப்பதும் கவர்ச்சிக்கு ஒரு காரணம் ஆகும். அந்த வகையில் சிறப்பு குழுக்களை ஒரு கோடி ரூபாய்க்கு உயர்த்தலாமா என்று பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. ஒட்டு மொத்த மாக மற்ற மாநிலங்களோடு போட்டிபோடுகின்ற தன்மைகள் இருக்கின்றபோது இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன. எல்லா மாநிலங்களும் ஒரு சட்ட வரம்புக்குள் உச்ச வரம்புக்குமேல் போகக்கூடாது என்ற முறையில் தொகை நிர்ணயிக்கப்பட்டால் அந்த அடிப்படையில் ஏழை எளியவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அதே சமயத்தில் இதன் மூலம் கிடைக்கின்ற பலனும் ஒரு சமாதானமாக ஒரு நிதானமான வகையில் கிடைப்பதற்கு வழி வகை ஏற்படும்.

**மணப்பாறை நகரில் தாலுகா அலுவலகம் கட்டும் திட்டம்.**

*214*—(*வினா எண். 17805)—திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணப்பாறை நகரில் தாலுகா அலுவலகம் புதிதாகக் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அப்புதிய கட்டிடம் கட்ட நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதா ?

(இ) கட்டிட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ), (ஆ) மற்றும் (இ) அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பறை நகரில் தாலூகா அலுவலகம் பல வருடங்களாக இயங்கிக்கொண்டிருக்கிறது. இருந்தும் அங்கு கட்டிடம் சரியாக இல்லாத சூழ்நிலை இருப்பதால் அதிகாரிகளும், பொது மக்களும் பல இன்னல்களுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது. பொதுமக்கள் நலன் முன்னிட்டு தாலுக்கா அலுவலகம் கட்ட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் 17 புது வட்டங்களில் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு 166 தாலுக்காக்களில் 150 தாலுக்கா அலுவலகங்கள் அரசு கட்டிடத்தில் இருக்கின்றன. 17 தாலுக்கா அலுவலகங்கள் தான் வாடகை கட்டிடத்தில் இருக்கின்றன. விரைவில் நிதி ஒதுக்கி மற்ற வட்டாட்சியாளர் அலுவலகங்களை அரசு கட்டிடத்தில் கொண்டு வருவதற்கு அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது.



திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை வெகு விரைவில் வருவாய் கோட்டமாக ஆகிவிடும் என்ற செய்திகளை அறிகிறேன். அதை முன்னிட்டாவது அந்த தாலுக்கா அலுவலகத்திற்கு முன்னுமை கொடுத்து கட்டிடத்தை விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது வருவாய் கோட்டமாக ஆகின்ற செய்தி மாண்புமிகு உறுப்பினர் அறிந்த அளவுக்கு நான் இன்னும் அறியவில்லை. ஆக அது வருகிறபோது அதுவும் யோசிக்கப்படும்.

**குத்தகைதாரர்களைப் பதிவு செய்வதற்கான குழுக்கள்.**

*215*—*வினா எண். 17941—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தகைதாரர்களைப் பதிவு செய்வதற்கு உதவியாக 'குழுக்கள்' அமைக்க அரசு முடிவெடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அக்குழுக்களின் அதிகாரங்கள் என்னென்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) ஆம்.

(ஆ) அக் குழுக்களின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளன;—

1. நில உடமையாளர், அந்நிலத்தைப் பயிரிடும் குத்தகைதாரர் ஆகியோரது பெயர், முகவரி ஆகியவற்றுடன் வட்டத்தில் அமைந்துள்ள நிலம் தொடர்பான தகவல்களையும் விவரங்களையும் அந்தக் குழு உறுப்பினர்கள் சேகரிப்பார்கள்.

2. சேகரிக்கப்பட்ட தகவல்களையும் விவரங்களையும் சம்பந்தப்பட்ட நிலத்திற்கு அதிகார வரம்புள்ள அதிகாரிக்கு (வட்டாட்சியருக்கு) குத்தகைப் பதிவு சம்பந்தமான தனது அலுவல்களை மேற்படி சட்டத்தின் கீழ் செவ்வனே ஆற்ற உதவி செய்வார்கள்.

(முற்பகல் 9-20)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழுக்களிலே இடம் பெறும் உறுப்பினர்கள் நிரந்தர உறுப்பினர்களாக இருப்பார்களா அல்லது அவர்களது

பதவிக்காலம் ஏதாவது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்ற விவரத்தையும் ,அப்படிப்பட்ட குழுக்களிலே இடம் பெறுபவர்களுக்கு ஏதாவது கன்சிடரேஷன் உண்டா என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, குழு போட்டதிலிருந்து மூன்று வருடங்கள் அந்தக் குழு பணியாற்றும். அதற்குப் பிறகு, ஆறு ஆண்டுகளுக்கு மேல் யாரும் அதில் உறுப்பினராக இருக்க முடியாது. இன்னொரு முறை அவர்கள் போடப்படுவார்கள். அந்தக் குழுவிலே பணியாற்றுபவர்களுக்கு செகன்ட் கிளாஸ் பேட்டா உண்டு. அவர்கள் டிராவல் செய்கிறபொழுது இரயில்கள் இருக்கிற இடத்தில் ஃபர்ஸ்ட் கிளாசில் ஏறிப்போகலாம். ஒரு நாளைக்கு அவர்களுக்கு 20 ரூபாய் பேட்டா என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இதுவரையில் மொத்தம் எத்தனை பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும், இந்தக் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு எவ்வளவு என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் 4,39,491 பேர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, குத்தகைதாரர்களின் பினாமி குத்தகைதாரர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். பினாமி நிலப் பிரபுக்களை ஒழிப்பதற்காகவும், அவர்களிடத்தில் இருக்கின்ற மிகைப்படியான நிலங்களை எடுப்பதற்காகவும் முன்பு நம்முடைய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து, அதை மத்திய அரசு அங்கீகரிக்காமல் திருப்பி அனுப்பியது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே மீண்டும் பினாமி ஒழிப்புச் சட்டத்தையும், குத்தகைதாரர்களின் பினாமிகளை ஒழிப்பதற்கும் விரிவான சட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, குத்தகைதாரர்கள் அதிலே பினாமிதாரர்களாக இருக்கக் கூடும் என்று அவையிலேயும், வெளியிலேயும் பலரும் சொன்னதாலும், குத்தகைதாரர்கள் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்று அவையிலேயும், வெளியிலே மற்றவர்களும் சொன்னதாலும் இந்தக் குழு போடப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவிற்குச் சகலவிதமான அதிகாரங்களும் இருக்கின்றன. இந்தக் குழு உறுப்பினர்கள் தானாகவே கிராமங்களுக்குச் சென்று, யார் குத்தகைதாரர்கள் என்பதைப் பரிசீலித்து அவர்களின் ரிப்போர்ட்டை அனுப்பலாம். ஆனால் அதற்குத் தீர்ப்புக் கொடுக்கின்ற வட்டாட்சியர் அதை மறுக்க வேண்டுமென்றால் மறுப்பதற்கான காரணங்களை எழுத்து மூலமாக பதிவு செய்து மறுக்க வேண்டும். ஒன்று, அந்தக் குழுக்கள் சொல்வதை ஏற்றுக் கொள்ள வேண்டும் அல்லது மறுக்க வேண்டுமென்றால் எழுத்து மூலமாகச் சரியான காரணத்தைச் சொல்லி மறுக்க வேண்டும். எப்படி நீதிமன்றத்தில் சொல்லப்படும் வாக்கு மூலங்களைச் சரியான காரணங்களைச் சொல்லி நீதிமன்றத்தில் மறுக்கிறார்களோ அதைப்போலத் தான் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெவித்துக்கொள்கிறேன்.

பினாமி ஒழிப்புச் சட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளையும், அதோடு மட்டுமல்ல, இங்கே இருக்கின்ற மாமன்றத்தின் உறுப்பினர்களுடைய உணர்வுகளையும், பினாமி நிலம் வைத்திருப்பவர்களின் இந்தச் சட்டம் வரக் கூடாது என்ற உணர்வினையும்—அந்த உணர்வுக்கு நான் மதிப்பளிக்கவில்லை—அவசரமாக வர வேண்டும் என்ற மாநில மக்களின் உணர்வினையும் இந்த அரசு புரிந்து வைத்திருக்கிறது. விரைவிலே அதைச் சட்ட முன்வடிவாகக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களைப் பதிவு செய்வதற்கு உதவியாக உள்ள குழுக்கள் நம்முடைய மாநிலத்தில் உள்ள எல்லா வட்டங்களிலேயும் அமைக்கப்பட்டு விட்டனவா ? அமைக்கப்பட்ட இடங்களிலேயும்கூட அது சிறப்பாகப் பணியாற்ற முடியாமல், குத்தகைதாரர்கள் இன்னார்தான் என்று அவர்கள் சொன்னாலும் அதற்கான ரிக்கார்டு இல்லாததால், தாசில்தார் மறுத்து, பதிவு செய்யாமல் இருக்கிறாரே, இந்தப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் இந்தக் குழுக்கள் சிறப்பாகச் செயல்படும் வகையில் ஏற்பாடு செய்யப்படுமா ? இந்தக் குழுக்கள் சொல்வது நியாயமாக இருந்தாலும்கூட அந்தத் தாசில்தார்கள் ஏற்காமல் இருக்கிறார்கள், அதற்குச் சரியான வழிமுறைகளைக் கொண்டு வர முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாகக் குத்தகைதாரர்கள் இருப்பார்களோ அந்தந்த மாவட்டங்களில் முதலில் போடப்பட்டிருக்கின்றது. மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம், தஞ்சை மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகியவற்றில் குழுக்கள் யோடப்பட்டிருக்கின்றன. ஆனால் ரிச்கார்டுகள் இல்லாமல் இருப்பதைத்தான் சரி செய்ய வேண்டும் அது பற்றி உண்மையில் விசாரித்துச் சொல்லவேண்டும் என்பதற்காகத்தான் அந்தக் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் சொல்வதைத் தாசில்தார்கள் மறுக்க வேண்டும் என்றால் அவற்றை ஆதாரபூர்வமாகத்தான் மறுக்கவேண்டும் என்று சட்டத்தில் இடம் இருக்கின்றது. ஆனால் அந்தக் குழு எங்கே போய் எப்படிப் பணிபுரிய வேண்டும் என்பதைப் பற்றி அந்த உறுப்பினர்களுக்கும், மற்றும் அதிகாரிகளுக்கும் கூட சில விவரங்கள் தெரியாத காரணத்தால் நானே மதுரை மாவட்டம், தர்மபுரி மாவட்டம் போன்ற இடங்களில் உள்ள குழுக்களையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கூப்பிட்டு அந்தக் குழுக்களுக்கு என்னனென்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னோம். இப்படி அந்தக் குழுவினருக்கும் கூட தனக்கு என்ன அதிகார்ங்கள் இருச்குன்றது என்பது பற்றித் தெரியாது இருந்த காரணத்தால் அதுபற்றி விளக்கப்பட்டிருக்கின்றது என்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, குத்தகை நிலங்களைப் பதிவு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்கள் கிராமங்களுக்கு நேரடியாக சென்று விவசாயிகளிடம் விசாரித்து உண்மையான விவ்சாயி யார் என்பதைத் தெரிந்து குத்தகை உரிமையைப் பதிவு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ? மேலும் கிராமங்களுக்கு அந்தக் குழுக்கள் நேரடியாகச் சென்று கிராம விவசாயிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு பயணப்படி வழங்குவதற்கு அரசின் மூலம் ஆவண செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே அக்கறை காட்ட வேண்டும். அதிலும் திரு. இராசமாணிக்கம் போன்றவர்கள் அக்கறை காட்ட வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட குத்தகைதாரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். திரு. இராசமாணிக்கம் அவர்கள் கூட ஒரு குழுவிலே போடப்பட்டிருக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஆக்வே அரசு மாத்திரம் உத்தரவு அனுப்புகின்றது என்ற நிலைமை இல்லாமல் நானே நேரடியாகப் பார்த்து குழுக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் உண்டு என்பதைப்பற்றிய விவரங்களை ஸைக்லோஸ்டைல் பண்ணி



அனுப்பி இருக்கிறேன். பயணப்படி எவ்வளவு என்பதும் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது, அதாவது ஒரு கிலோ மீட்டருக்குச் செல்வதற்கு ஒரு ரூபாய் 5 பைசா செலவு செய்கின்ற வகையில் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த வட்டத்தின் உள்ளே எல்லா இடங்களுக்கும் அவர்கள் செல்லலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. என்னென்ன அதிகாரங்கள் அவர்களுக்கு இருக்கின்றன என்பதை எல்லாம் விளக்கி விவரங்களை அனுப்பி இருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மட்டும் அனுப்பினால் ஒருவேளை தவறாகப் போய்விடக்கூடும் என்பதால் இங்கே நேரடியாக நானும் மற்ற அதிகாரிகளும் பார்ந்நு செயலாளர் ஆகியோர் எல்லாம் கையெழுத்துப்போட்டு அனுப்பி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொளகுறேன்.

**கேரளாவிலுள்ள சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.**

*216—(*வினா 17790)*—**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு அடையளிப்பாரா —

(அ) கேரளாவில் உள்ள சித்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குத் தமிழகப் பகுதியிலிருந்து கரும்பு கொடுக்கும் விவசாயிகளின் பிரதிநிதிகளாக இயக்குநர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா ?

(ஆ) இந்த ஆலையிலிருந்து ரோட் செஸ் ஆக, கரும்பு வழிச்சாலை அபிவிருத்திக்கு எவ்வளவு தொகை கிடைத்துள்ளது?

(இ) இதில் எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) இல்லை.

(ஆ) ரூபாய் 30.42 இலட்சம்.

(இ) 1982-83-க்கு ரூபாய் 22 இலட்சத்திற்கு அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு சாலை வேலை எடுத்துக் கொள்ளப்பட்டது.

**திரு. மா. சின்னராசு :** தலைவர் அவர்களே, கோவை, மேட்டுப்பாளையம், அவினாசி, பல்லடம் தாலுக்காக்களில் கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்குச் சித்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைதான் புகலிடமாக இருப்பதால்—அந்தக் கூட்டுறவு சர்க்கரை ஆலை கேரளாவில் இருப்பதால்—அதனுடனுள்ள தொடர்பு மிகக் குறைவாக இருக்கிறது. நமது மாநிலத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மூன்று இயக்குநர்கள் பல ஆண்டுகளாக நியமிக்கப் படாதகாரணத்தால் விவசாயிகளுக்குக் கரும்பு எடுப்பது

ஆலைக்கு விலைக்குக் கொடுப்பது, கடன் கிடைப்பது போன்ற பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு அங்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. ஆகவே, இதை கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் உடனடியாக நமக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள மூன்று இயக்குநர்களை அந்த ஆலையில் நியமிக்க ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அரசு முயற்சி எடுக்கும்.

(முற்பகல் 9-30)

**திரு. மா. சின்னராசு :** தலைவர் அவர்களே, ரோடு செஸ் மூலம் செலவிடப்பட்ட தொகை பற்றி குறிப்பிட்டார்கள். கரும்பு கொடுக்கப்படுகிற அந்தப் பகுதிகளில், கோவை தாலுக்காவில் இந்த ரோடு செஸ் மூலம் எந்தச் சாலையும் பராமரிக்கப்படவில்லை. அந்தப் பணம் செலவிடப்படவில்லை. ஆகவே கரும்பு கொடுக்கப்படுகிற அந்தப் பகுதிகளில் இந்த ரோடு செஸ்ஸிலிருந்து சாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு நிதி ஒதுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தச் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. அந்தச் சாலை எந்தளவிற்குப் பழுதடைந்திருக்கின்றன என்ற முழு விவரத்தையும் அறிந்து உரிய வகையில் முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

### கொங்கணாபுரத்தில் கடலை எண்ணெய் ஆலை அமைக்கும் திட்டம்.

217—(*வினா 19960)—**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் இடைப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரத்தில் கடலை எண்ணெய் ஆலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இல்லை.

### வடாற்காடு மாவட்டத்தில் முந்திரி பயிரிடுவதற்கான சிறப்புத் திட்டம்.

218—(*வினா 21518)—**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் சிறப்புத் திட்டமாக முந்திரி பயிரிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** இல்லை.





**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் முந்திரி பயிரிடுவதற்கான சிறப்புத் திட்டம் இல்லையா ? வேறு மாவட்டங்களில் இம்மாதிரியான திட்டங்கள் இருக்கின்றனவா ? வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தச் சிறப்புத் திட்டத்திற்குத் தேவையான அல்லது போதுமான மண் வளம் இல்லையா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் போதுமான மண் வளம், முந்திரி பயிரிடுவதற்கான சூழ்நிலை அதிகமாக இல்லை என்ற காரணத்தினால் அந்த மாவட்டத்தில் இந்தச் சிறப்புத் திட்டம் இல்லை. வேறு அதிகமான மண்வளம் உள்ள சூழ்நிலை உள்ள மாவட்டங்களில் இத்தகைய சிறப்புத் திட்டத்தை நிச்சயமாக நடைமுறைப்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

**திரு. த. வேணுகோபால் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் முந்திரி பயிரிடுவதற்கு போதுமான மண் வளம் இல்லை என்று சொன்னார்கள். போதுமான மண் வளம் இல்லை என்று சொன்னாலும் பயிற்சி வழித் தொடர்பு மூலம் ஓரளவிற்காவது பயிரிட சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அந்தப் பகுதியில் எந்த அளவிற்கு முந்திரி பயிரிட முடியுமோ அந்த அளவிற்கு முந்திரி பயிரிட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** ஓரளவிற்காவது என்கிறபோது அது நடைபெற்று வருகிறது. அதற்கு சிறப்புத் திட்டம் தேவை இல்லை.

**திரு. ப. சுந்தரம் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஏலகிரி மலையிலே முந்திரி கொஞ்சம் அளவிற்கு விளைகிறது. அங்கேயாவது முந்திரி சாகுபடியை அபிவிருத்தி செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** விளைகிற சூழ்நிலை எங்கேயிருக்கிறதோ அவற்றை உரிய வகையில் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, முந்திரி பயிரிடுவதற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் சிறப்புத் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படியென்றால், முந்திரியை பயிரிட்டு வளர்ப்பதற்கான திட்டங்கள் எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ? அதில் எவ்வளவு எவ்வளவு ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படும்? அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணம் எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தனிக்கேள்வி போடவும்.

கோபியில் உள்ள பவானி குடிநீர்த் திட்டம்.

219— (*வினா எண் 12024)—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபியில் உள்ள பவானிகுடிநீர்த் திட்டம் எப்போது செயலுக்கு வரும் ?

(ஆ) எத்தனை கோடி திட்டத்திற்குச் செலவு செய்யப் படுகிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) கோபிசெட்டி பாளையம் குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் 1984ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

(ஆ) இத் திட்டத்திற்கு ரூ. 96.55 இலட்சம் செலவு பிடிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. தி. கா. நல்லப்பன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவருவதாக ஏற்கெனவே, சென்ற ஆண்டே சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளிடமிருந்து தீர் மானங்கள் வாங்கப்பட்டு அது செயல்பாட்டுக்கு வருமென, 1983ஆம் ஆண்டு முடிவில் வரும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் 1984 இறுதிக்குள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தினால் முறையான பலன் ஏற்படுமா அல்லது மீண்டும் நீண்டு கொண்டே போகுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1982ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் செயல்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது. தற்சமயம் பணிமானக் குழாய்களை மாற்றி யமைக்கும் பணியில் மொத்தமுள்ள 15.8 கிலோ மீட்டர் நீளத்தில், 14.4 கிலோ மீட்டர் வரை முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 3 பகுதிகளில் 3 நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று கட்டி முடிக்கப் பட்டு விட்டது. மற்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் திட்ட மதிப்பீடு 96.55 இலட்சமாக இருந்தது ; இப்போது ரூ. 133 இலட்சமாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வருகின்றபோது, கோபி ஒன்றியம், ஊத்துக்குளி ஒன்றியம், பெருந்துறை ஒன்றியம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் செயல்பாட்டுக்கு வருமா ? பிற ஒன்றியங்களிலும் செயல்பாட்டுக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன் ?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற போது, அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதை அறிவிக்க வில்லை. அதே போல், இதனால் எத்தனை கிராமங்கள் பயனடையும் என்பதையும் சொல்லவில்லை. அந்த விவரங் களைச் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவதாகச் சொன்ன கேள்வி சரி. எத்தனை கிராமங்கள் பயனடையும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், மதிப்பீட்டுத் தொகை ரூ. 96.55 இலட்சமாக இருந்தது. திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 133 இலட்சம் என்று சொன்னேன்.

கோவை மாநகரத்துக்கான சிறுவாணி குடிநீர்த் திட்டம்.

220—(*வினா எண் 12186)—திரு. கு. ரமணி, மற்றும் திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்துக்கான சிறுவாணி குடிநீர்த் திட்ட வேலை தற்போது எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளது ?

(ஆ) அணை கட்டும் வேலை இரண்டாவது கட்டம் முடிந்து மூன்றாவது கட்டம் எப்பொழுது ஆரம்பமாகும் ?

(இ) தற்போது கோவை மாநகர மக்களுக்குத் தலைக்கு எவ்வளவு குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) திட்டமிடப் பட்டுள்ள 9 நீர்த்தேக்கத் தொட்டிகள் அனைத்திலும் கட்டிட வேலைகள் முடிவு பெற்று 7 நீர்த்தேக்கத் தொட்டிகள் செயல் படத் தொடங்கிவிட்டன. மீதி உள்ள நீர்த் தொட்டிகளும் 1984 மே மாதத்தில் செயல்படத் தொடங்கும் என எதிர்ப் பார்க்கப்படுகிறது.

(ஆ) அணை தற்பொழுது 868 மீட்டரிலிருந்து 878.5 மீட்டர் வரை உயர்த்தப்பட்டு மதகுகளுக்கு இடையில் பாலம் கட்டும் பணி நடந்து வருகிறது.

(இ) ஒரு நாளைக்கு நபர் ஒன்றுக்கு சுமார் 113 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அணையினுடைய வேலை அநேகமாக முடிந்துவிட்டு, இறுதியாக போடவேண்டிய மதகுகள் வேலை பாக்கியிருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால், இந்தத் திட்டத்தின்படி—கோவை நகராட்சி, இப்போது மாநகராட்சியாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது—அந்த மாநகராட்சி முழுவதற்கும், குடிதண்ணீர் கிடைப்பதற்கு எந்தவிதமான தடைக்கும் கஷ்டத்திற்கும் இடமில்லை. 1982ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதிக்குள் கட்டாயமாக 9 நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் தண்ணீர் நிரப்பி, சகல இடங்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யப்படும். சிங்காநல்லூர் முழுவதற்கும் விநியோகிக்கப்படும் என்று இதே மன்றத்தில் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி நிறைவேறாமல் இருப்பதுடன், தண்ணீரின் அளவும் குறைந்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன பதிலில், 1984ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் இத்திட்டம் செயல்பட தொடங்கும். மற்ற இரண்டு மேல்நிலை தொட்டிகளும்—கட்டிடம் கட்டுவதில் காலதாமதமாகியிருக்கிறது. மற்றபடி, குடிதண்ணீரைப் பொறுத்தவரை 113 லிட்டர் என்பது மிக அதிகமானது. நல்ல குடிதண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம். எந்தவிதமான தவறும் நடந்து விட்டதாக அரசு கருதவில்லை.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, தவறு நடந்து விட்டது என்று அரசுக்கு எண்ணம் இருக்கிறதா என்று நான் கேள்வியே போடவில்லை. பிரச்னை அதுவல்ல. அந்த அணைக்கட்டு வேலை முழுவதும் முடிந்து நீர்த்தேக்கத்தை எந்த அளவு கொண்டு வர முடியுமோ அந்த அளவு கொண்டுவரப்பட்டபின் தினமும் நீர் விநியோகம் கோவை மாநகரத்தில் கொடுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஒரு நாள் விட்டு ஒரு நாள்தான் கொடுப்போம் என்று அறிவித்து இருக்கிறார்கள். மழையும் பெய்து எல்லா இடங்களிலும் நிரம்பியிருக்கிறது. அணையும் நிரம்பியிருக்கிறது. அப்படியிருக்கும் போது அந்தத் தண்ணீர் விடுவதை ஒரு நாள் விட்டு ஒரு நாள் எனத் தெரிவிக்கிறார்களே அதற்காவது என்ன காரணம் என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-3-1984 முதல் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் கொடுக்கப்படும் என்று மாநகராட்சி அறிவித்தது. ஆனால், முதல்வரின் தலையீட்டின் பேரில் அப்படி நடக்காது ; தினமும் தண்ணீர் கொடுக்கப்படும். மற்றும்





குழாய்களிலில்லாமல் சிரமப்படுகிற இடங்களுக்குச் சென்னையிலே எப்படி லாரிகள் மூலமாக எல்லாம் தண்ணீர் கொடுத்து, தண்ணீர் தட்டுப்பாடு இல்லாமல் செய்யப்படுகிறதோ அப்படி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 10-3-1984-லிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்ல—தினமும். தண்ணீர் கொடுக்கப்படும்.

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கென்று முதலில் திட்டமிடப்பட்ட சிறுவாணிக் குடிநீர் திட்டம் இறுதியாக கோவை மாநகராட்சியோடு' சேர்க்கப்பட்ட ஏரியாக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி விஸ்தரிக்கப்பட்ட ஏரியாக்களில் 3 உயர்நிலைத் தொட்டிகள் எனது தொகுதிக்குட்பட்ட, சங்கனூர், ரத்தினகிரி, கும்பகோணம்புதூர் ஆகிய 3 இடங்களில் கட்டப்பட வேண்டும். இந்தப் பணிகள் இன்னும் துவக்கப்படவில்லை என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படித் துவக்கப்படாத அந்தப் பணியை விரைவாகத் துவக்கி, அந்தப் பகுதிகளுக்கும் இந்த 113 லிட்டர் தண்ணீர் கிடைக்க உடனடியாக இந்த வசதியை அளிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விரிவான பதில் தருகின்றேன்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி போட்டதே அந்தப் பகுதிக்காகத்தான். கேள்வி இணைக்கப்பட்டபொழுது அதை சேர்க்காமல் விட்டு விட்டார்கள். இருந்தாலுங்கூட இப்பொழுது கோடைக் காலம் வருகிற நேரத்தில் உயர்நிலைப் தொட்டிகள் கட்டுவது தாமதப்பட்டாலும் எல்லா பகுதிகளிலும் குழாய்கள் பதிக்கப் பட்டு விட்டன—அதிலிருந்து பைலட் சப்ளை பைப் மூலமாக பவுன்டென் மூலமாக குடி நீர் வழங்க, அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறுகிய கால வினா போட்டால் கூட அதிலிருந்து எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ளலாம். அப்படி மாண்புமிகு உறுப்பினர் செய்வார் என எதிர்பார்க்கிறேன்.

### பூண்டி, புழலேரி கால்வாய்க் கரைகளில் பிளாஸ்டிக் பாயைப் பதித்து கசிவு நீரைச் சேமிக்கும் திட்டம்.

221—(*வினா எண். 20810)—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்கு வரும் பூண்டி, புழலேரி கால்வாய்க் கரைகளில் பிளாஸ்டிக் பாயைப் பதித்து, கசிவு நீரைச் சேமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாக்கள் எழவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பூண்டி புழலேரியிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் தருகின்ற காரணத்தாலே தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் இருக்கிற தண்ணீரைச் சேதாரம் இல்லாமல் சேமிப்பதற்காக இப்படிப்பட்ட திட்டத்தை அரசு பரிசீலிப்பதாக ஒரு செய்தி சொல்லப்பட்டது. அது எந்த அளவில் உள்ளது ? அதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5-7-1983 அன்று நடைபெற்ற வறட்சி பற்றிய உயர் மட்டக் குழுக் கூட்டத்தின்போது புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றிற்கு வரும் கால்வாய்களில் சீப்பேஜ் உள்ளிருப்பு மூலம் நீர் விரயம் ஆவதைத் தடுக்க பிளாஸ்டிக் பாயைப் பதிப்பிக்கும் திட்டத்தை ஆராயுமாறு யோசனை கூறப்பட்டது. அது சஜ்ஜஷன் (Suggestion) கால்வாய்களுக்கு உள்ளுரை அமைக்க நீரோட்டத்தைத் தடுக்க வேண்டுமென்பதாலும், மேலும் இதற்காகும் செலவும் ஓரளவுக்கு அதிகம் என்பதாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.



திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அதிகச் செலவாகிறது என்ற காரணத்திற்காக கைவிடப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படியானால் வேறு ஏதாவது திட்டம் பற்றி ஆலோசிக்கப்படுகிறதா அல்லது இப்பொழுது தண்ணீர் பற்றாக்குறை இல்லாத காரணத்தாலே அரசுக்கு அந்த எண்ணம் போய் விட்டதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, குழுக்கூட்டம் நடக்கும்போது ஒரு யோசனை சொல்கிறார்கள். அந்த யோசனையைப் பரிசீலனை செய்கிறோம். தண்ணீரை நிறுத்தி விட்டுதான் இதைப் போட வேண்டுமென்ற காரணத்தாலும் செலவு புரஹிபிட்டிவ்வாக இருக்கிறது என்ற காரணத்தாலும் கைவிடப்பட்டது என்று சொன்னேன். ஆனால் கிருஷ்ணா நதி நீர் திட்டத்தில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து பூண்டிக்குக் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படும். இந்தக் கால்வாய் சிமெண்ட் மூலம் பூச்சு செய்யப்பட உள்ளதால் அதன்மூலம் நீர்க் கசிவு நிரந்தரமாகத் தடுக்கப்படும்.

### விருத்தாசலம் நகராட்சிப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.

222—(*வினா 21550)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை எப்போது பூர்த்தியடையும் ?

(ஆ) உடனடியாக வேலையைப் பூர்த்திசெய்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(இ) நாச்சியார்பேட்டை, புதுப்பேட்டை போன்ற பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 1985 ஜூன் மாதத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். இப்பணியை துரிதமாக முடிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) ஆம். இவைகள் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

வீரநல்லூர் கோமதி மில் தொழிலாளர்களுக்கான கூட்டுறவுப் பண்டகசாலை.

223—(*வினா 16448)— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் கோமதி மில் தொழிலாளர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் அண்மையில் கையாடல் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம். சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. பி. அழகிய சுப்ரமணியம் நிதியை முறைகேடாக செலவிட்டுள்ளார். இவர் இப்போது உயிரோடு இல்லை.

(ஆ) மறைந்த திரு. பி. அழகிய சுப்ரமணியம் சங்கத்தின் நிதியை முன்பணம் என்ற போர்வையில் பல்வேறு இனங்களுக்கு ரூ. 14,892.82 கொடுக்கப்பட்டதாக அவர் இறந்த 28-6-82 அன்று வரை நிலுவையில் இருந்தது. அவைகள்.

| | | ரூபாய். |
|---|---|---|
| (1) கொள்முதல் முன்பணம் | .. | 12,311.34 |
| (2) நிலுவையில் வைத்து அதிக முன் பணம் கொடுத்தது .. | .. | 2,588.48 |
| மொத்தம் .. | .. | 14,899.82 |

(இ) மறைந்த திரு. பி. அழகிய சுப்ரமணியம் அவர்களின் சட்ட ரீதியான வாரிசுகளிடமிருந்து தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டு தண்ட வசூல் நடவடிக்கை கைவிடப்பட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரவநல்லூர் கோமதி மில் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையில் முன்னாள் செயலாளர் 14 ஆயிரம் ரூபாய் அளவிற்கு கையாடல் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.





இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படி கையாடல் நடைபெறுகிறது என்று தொடர்ந்து புகார் கொடுக்கப்படுகிறது ; சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானே சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர் சாகும் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, இறந்த பிறகு தான் டிபார்ட்மென்ட் அதிகாரிகள் விசாரணைக்கு வந்து கையாடலை கண்டுபிடித்து இருக்கிறார்கள். இப்படி காலங்கடந்த முறையிலே நடவடிக்கை எடுத்த அதிகாரிகள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கையாடல் செய்யப்பட்டதாக குறிப்பிட்ட 14 ஆயிரம் சொச்சம் ரூபாய் அவர் இறந்ததற்கு பிறகு அவருடைய வாரிசுதாரர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அந்தச் சங்கத்தின் மீது எப்போது புகார் சொல்லப்பட்டது, எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் புகார் கொடுத்த தேதி மற்ற விவரங்களைக் கொடுத்து தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தரலாம்.

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் மூலம் வெட்டப்படும் கிணறுகள்.

(224 —*வினா 16566)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :—மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார்கள் கடன்பெற்று கிணறு பொய்த்துவிட்டால் கடன் முழுவதும் ரத்து செய்வது போல், கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் வெட்டும் கிணறுகள் பொய்த்தவற்றுக்கும் கடன் முழுவதும் ரத்து செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார்கள் கிணறு வெட்டுவதற்காக நிலவள வங்கிகள் மூலம் பெறும் கடன் முழுவதும் ரத்து செய்யப்படுவதில்லை, பொய்த்த கிணறுகள் மான்ய விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு மட்டுமே ரத்து செய்யப்படுகிறது. இவ்விதிமுறைகளின் படி கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களுக்கு அளிக்கப்படும் கடன்களும் ரத்து செய்யப்படுகின்றன.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கிகளிலே கிணறு வெட்டுவதற்காக கடன் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற கடன் மூலம் வெட்டப்படுகிற கிணறுகள் பொய்த்து விட்டால் கடன் முழு

வதும் தள்ளுபடி செய்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படி செய்யப்படுகிற அந்த தள்ளுபடி கோப்புகளில் அதிகாரிகள் பரிந்துரை செய்தும் மாநில வங்கியிலே தள்ளுபடி கிட்டாத அளவிற்குத் தான் அது இருந்து கொண்டிருக்கிறது. அதுபோன்ற கோப்புகளில் எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து கிணறுகள் பொய்த்து விட்ட விவசாயிகள் பலன் அடைகிற அளவிற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நிலவள வங்கி பொய்த்த கிணறுகள் மானிய நிதி ஒன்றினை வைத்திருக்கிறது. அதன் கீழே சிறு விவசாயிகளாக இருந்தால் வேலை மதிப்பிலே 90 சதவீதம் அல்லது அவர் பெற்றிருக்கிற கடனிலே 90 சதவீதம் இதில் எது குறைவோ அதையும், அதேபோல சிறு விவசாயிகள் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில் வேலை மதிப்பில் 75 சதவீதமும் அல்லது வழங்கப்பட்ட கடனில் 75 சதவீதம், இதில் எது குறைவோ அதையும், அசலைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம் உச்ச வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படுகிறது. இந்த வரம்பிற்குட்பட்டு இருக்கிற அனைத்தும் மாநில நிலவள வங்கி பொய்த்த கிணறுகள் மானிய நிதியிலேயிருந்து நிச்சயமாக வழங்கப்படும்.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, பொய்த்த கிணறுகளுக்கு மானிய உதவி அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் கொடுப்பதற்கு நிதி எந்த அளவிற்கு இருக்கிறது? அது எந்த அளவிற்கு உபயோகிக்கப்பட்டு இருக்கிறது? அந்த நிதியில் இருந்து பொய்த்துப் போன கிணறுகளுக்கு வாங்கிய கடன் முழுவதும் தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, நீரேற்றும் பாசன கூட்டுறவுச் சங்கங்களின் விவசாயிகட்கு 30—9—1983 ஆம் தேதிவரையில் அளிக்கப்பட்ட மானிய உதவி ரூ. 6,59,903.17 ஆகும். இதுபோன்று இதர விவசாயிகட்கும் நான் ஏற்கனவே சொன்ன வரம்புக்குட்பட்டு வந்தால், அவர்களுக்கும் மாநில நிலவள வங்கி நிதியில் இருந்து கடன் வழங்கப்படுகிறது. மொத்தமாக அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பதை விட இப்படி வருகின்ற அந்தக் கோரிக்கைகள்மீது உடனுக்குடன், நான் ஏற்கனவே சொன்ன வரம்புக்குட்பட்டு இருக்குமானால், நிவாரணம் வழங்கப்படுகிறது.



## கூட்டுறவு வங்கிகளின் நகை அடமானம் வைக்கும் விவசாயிகள்.

(225—*வினா 17542)—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் நகை அடமானம் வைக்கும் விவசாயிகள் ரேகை வைப்பவராக இருந்தால் ஜாமீன் கேட்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கே இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பெரும்பாலும் கிராமங்களில் இருக்கக் கூடிய விவசாயிகள் அவ்ர்களுக்குத் தேவையேற்படுகிறபோது, வட்டிக்குக் கடன் கிடைக்காத காரணத்தால், அவர்கள் நகைகளை ஈடு வைத்துத்தான் கடன் பெறவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாத காரணத்தால்—40-45 வயதை எய்திவிட்டவர்களுக்குக்கூட எழுதப் படிக்கத் தெரியாத நிலை இருப்பதால்—இப்படி ஈடுவைத்து கடன் பெற வருகின்றபோது, அவர்களைத் தெரிந்தவர்கள் யாராவது இருவர் வந்து கையெழுத்துப் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நகரத்தில் யாரும் தெரியாது. மேலும் இப்படி கையெழுத்துப்போடுவதற்கு தெரிந்தவர்களும் மறுக்கிறார்கள். ஆகவே இதை மறுபரிசீலனை செய்து விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்னார் என்பதை அடையாளம் காட்டுவதற்கு கையெழுத்துப் போடுவது என்பது வேறு, ஜாமீன் நின்று கையெழுத்துப் போடுவது என்பது வேறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மூலக்கேள்வி கைரேகையிடுகின்ற விவாசயிகளிடம் ஜாமீன் கேட்பது உண்மையா என்பதாகும். அதற்கு ஜாமீன் கேட்பது இல்லை. இன்னாருடைய கைரேகை அது என்பதை அடையாளம் காட்டுவதற்குத்தான் இரண்டு பேர்களிடத்தில் சாட்சிக் கையெழுத்துக் கேட்கப்படுகிறது. தற்போது 1229 விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், 128 நகர கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் இதுபோன்ற கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 28

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கிகளில் நகைகளின் பேரில் கடன்பெறுகிறபோது 14 சதவீதம் வட்டி வாங்கப்படுகிறது. நகைகளை அடமானம் வைத்து இந்தக் கடன் பெறப்படுவதால், அதைக் குறைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அதைப் பற்றி எந்தப் பரிசீலனையும் இல்லை.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜாமீன் கேட்பது இல்லை என்று சொன்னார்கள். அடையாளம் காட்டுவதற்காகத்தான் இரண்டு பேரிடத்தில் சாட்சிக் கையெழுத்து வாங்கப்படுவதாகவும் சொன்னார்கள். கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்கு கையெழுத்துப் போடுகிறபோது அது அடையாளம் காட்டுவதற்காக கையெழுத்தா அல்லது ஜாமீனுக்காக கையெழுத்தா என்று தெரிந்து கொள்ள முடியாமல், கையெழுத்துப் போட அஞ்சுகிறார்கள். அவர்கள் கட்டாமல் போய்விட்டால் நம்மிடத்தில் வசூலித்து விடுவார்களோ என்றும் அஞ்சுகிறார்கள். ஆகவே, நகை கடன்கள் பெறுகின்ற நேரத்தில் மட்டும் அந்தக் கையெழுத்து வாங்காமல் அவர்கள் கடன்பெற வழிவகை செய்யப்படுமா? நகைக்கடனுக்கு மட்டும் அப்படி உத்தரவு போடமுடியுமா? நகர்ப் புறத்தில் இருப்பவர்கள் எப்படியோ கடன் வாங்கிவிடுகிறார்கள். ஆகவே, கிராமப்புறத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு முன் உரிமை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டம் நிறைவேற்றப் பட்டதால் விவசாயிகள் வெளியே கடன் வாங்க முடியவில்லை என்பதை உணர்ந்துதான் தற்போது 1229 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், 403 மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மூலமாகவும் 128 நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் 12 கிளைகள் மூலமாகவும் விவசாயிகளுக்கு முன் உரிமை கொடுத்து கடன் வழங்கப்படுகிறது. 1983-84 வரை 60 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே பெரும்பகுதி விவசாயப் பெருமக்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.



1984 மார்ச் 8]

குழந்தைகட்கு ஒரு வேளை உணவு அளிக்கும் திட்டத்திற்கான நிதி உதவி.

(226—*வினா 14376)—திரு. எம். சின்னசாமி, திரு. ஆர். மணி மாறன், திரு. பெ. சு. திருவேங்கடம், மற்றும் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இரண்டு முதல் பத்து வயது வரை உள்ள குழந்தைகட்கு ஒருவேளை உணவு அளிக்கும் நூறு கோடி ரூபாய்த் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதி உதவியை மாநில அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : 1982 ஆம் ஆண்டு மாநில அரசு மத்திய அரசிடம் நிதி உதவி கேட்டுக் கொண்டது. மாநில, மத்திய அரசுகளின் நிதி நெருக்கடி காரணமாக, தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்திற்கு எந்த நிதி உதவியும் வழங்க இயலாது எனத் தெரிவித்துள்ளது.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, இந்த மகத்தான திட்டத்திற்கு மத்திய அரசு நிதி நெருக்கடி காரணமாக நிதி உதவி இல்லை என்று சொன்னதாக அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். நிதி உதவி கேட்டு மாநில அரசு எந்த எந்த தேதியில் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது? அல்லது நேரில் சந்தித்து என்ன ஏற்பாடு செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி தரவேண்டுமென்று 8-7-1982 அன்று நாம் எழுதிய கடிதத்திற்கு மிகைப்பற்றுக் கடனாக மாற்ற வேண்டுமென்று கூறப்பட்டு, மத்திய நிதி அமைச்சர் தமிழக அரசு சத்துணவுத் திட்டத்திற்கு நிதி உதவி தருவது ஆலோசிக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறார். இத் திட்டத்திற்கு நிதி உதவி வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். அவர்கள் அந்தக் கடிதத்தில் இத் திட்டத்தினுடைய பல முக்கிய குறிக்கோள்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். குறிப்பாக இதனால் 62 இலட்சம் குழந்தைகள் பயனடைவார்கள்; 1 முதல் 5 வரையிலான வகுப்புகளில் 2.6 இலட்சம் குழந்தைகள் இத் திட்டம் தொடங்கப்பட்ட பின்னால் சேர்ந்துள்ளார்கள் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த மாபெரும் திட்டத்திற்கு 120 கோடி ரூபாய் வேண்டுமென்று நம்முடைய அரசின் சார்பில் கேட்கப்பட்டது.

திரு. எம். சின்னசாமி : தலைவரவர்களே, மத்திய அரசினுடைய நிதி உதவி இப்போது கிடைக்காது என்பது அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எனவே குழந்தைகளுக்கு உணவளிக்க வேண்டுமென்ற திட்டத்தை வைத்து

இருக்கிற '' யூனிசெஃப் '' நிறுவனம், அதைப் போன்று எஃப். ஏ. ஓ. என்று சொல்லப்படுகிற உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம், யுனஸ்கோ நிறுவனம், கி. பி. இரண்டாயிரம் ஆண்டுக்குள் '' ஹெல்த் ஃபார் ஆல் ''—எல்லோரும் உடல் நலமாக இருக்க வேண்டுமென்று சொல்லுகின்ற டபிள்யூ. எச். ஓ. என்று சொல்லப்படுகின்ற உலக நல நிறுவனம் ஆகியவைகளிடமிருந்து இந்த சத்துணவுத் திட்டத்திற்கு நிதி உதவி பெற மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த நிறுவனங்கள் இருக்கிற நாடுகளுக்குச் சென்று பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, W.H.O. என்று சொல்லப்படுகிற World Health Organiation கி. பி. 2000 ஆண்டுக்குள் '' Health for all '' என்ற முறையிலே அனைவரும் நல வாழ்வு, நோயற்ற தன்மை பெற வேண்டுமென்ற ஒரு மிகப் பெரும் திட்டத்தை முன் வைத்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அனைவரும் நோயில்லாத வாழ்வு வாழ வேண்டுமென்றால் நோயை எதிர்க்கின்ற ஆற்றல் மக்கள் பெற வேண்டும். அதற்கு சத்துணவு அனைவருக்கும் கிடைக்க வேண்டும். ஆகவே, இந்த சத்துணவு வழங்கும் திட்டம் அவர்களுடைய திட்டம் முழுமையாக நிறைவேற முன்னோடியாக இருக்கும். அதனால் அவர்களிடம் இதுபற்றி கேட்க இந்த அரசு வழி வகைகளைக் காணும்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, சமீபத்தில் சென்னைக்கு வந்த, நோபல் பரிசு பெற்ற அன்னை தெரசாவினுடைய செயல்பாட்டுக்கு ஈடாக தமிழக் முதலமைச்சரின் நடவடிக்கை இருக்கிறது என்று ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். ஏசு ஆகையால் உலக நாடுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கிற இந்த நிறுவனங்களிலிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசு மூலமாக மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா? அதற்கு முயற்சி மேற்கொள்வதில் மத்திய அரசு ஏதாவது தடைக்கற்கள் விதிக்க இருக்கிறதா? இல்லை என்றால் அதற்குண்டான நடவடிக்கைகளில் மாநில அரசு ஈடுபடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய நல்ல கருத்துக்களை வரவேற்கிறோம். சமீபத்திலே நம்முடைய நாட்டுக்கு வருகை தந்த அன்னை தெரசா அம்மையார் இந்தத் திட்டத்தைப் பாராட்டினார்கள். அவர்கள் கூட இந்தத் திட்டத்திற்கு அனைவரும் உதவி செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இத் திட்டத்திற்காக உலக நாடுகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவது உகந்ததாக இருக்காது. அவர்கள் நிதியை உதவியாகத் தருவார்களானால் ஏற்றுக்கொள்வதை இந்த அரசு மறுக்காது.



(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிய உணவுத் திட்டத்திற்கு ஏற்கெனவே குழந்தைகள் காப்பகம், கேர் ஸ்தாபனம் உதவி செய்தது. அது தற்சமயம் உதவி செய்து வருகிறதா? அப்படியானால் அது எந்த அளவிற்கு நமக்கு உதவி செய்கிறது, அல்லது அதை அதிகப்படுத்திக் கேட்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சரியான பதில் தரப்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த சீப் மினிஸ்டர் சத்துணவுத் திட்டம் சம்பந்தமாக மத்திய அரசாங்கத்திடம் உதவி கேட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார். நான் கேட்க விரும்புவது அதற்காக இதுவரை எவ்வளவு ரூபாய் செலவாயிற்று? பட்ஜெட்டிலே கூட அதைப்பற்றி என்ன செலவாயிற்று என்று ஒன்றும் தெரியவில்லை. நான் கூட பட்ஜெட் மெமோரண்டத்தைத் தேடிப் பார்த்தேன். வேறு சிலவற்றிற்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது இது வரைக்கும் எவ்வளவு கோடி ரூபாய் இதிலே ஸ்பெண்ட் பண்ணப்பட்டிருக்கிறது? ஏதாவது ஒரு தொகையை மத்திய அரசிடமிருந்து ரீ எம்பர்ஸ்மெண்ட், கிரேண்ட் என்ற முறையில் கேட்டிருக்கிறீர்களா? இது வரை எவ்வளவு செலவாயிற்று, எவ்வளவு வாங்கி இருக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது 120 கோடி. அந்த 120 கோடியையும் தரவேண்டுமென்றுதான் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம். இன்னும் எவ்வளவு செலவாகி இருக்கிறது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது மத்திய அரசு உதவி செய்யவில்லை என்று தெரிவித்தார்கள். ஏற்கனவே 5 முதல் 10 வயதுவரையிலுள்ள குழந்தைகளுக்கு இந்தச் சத்துணவைக் கொடுக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அகில உலகமும் பாராட்டும் அளவிற்கு நடத்திக் கொண்டு வருகிறார்கள். இந்தத் நேரத்திலே 10 வயதி

விருந்து 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இந்த திட்டத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆக இன்னும் அதிகமான குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்க இருப்பதால், அதிகமான நிதியுதவி தேவைப்படும். எனவே தமிழக அரசு மீண்டும் அதிகத் தொகையை வலியுறுத்தி மத்திய அரசிடம் கேட்பதற்கு முயற்சி எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு உதவி கோரிய போது மத்திய அரசு மறுத்தது என்பது அல்ல. தற்போது இருக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக தருவதற்கு இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மேலும் அவர்களிடம் உதவி கோருவதற்கு வழி வகை செய்யப்படும்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த தமிழக தலைமைச் செயலாளர் திரவியம் அவர்கள் பத்திரிகைக்கு ஒரு பேட்டி அளித்த போது, மதிப்பிற்குரிய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் சத்துணவுத் திட்டத்தில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள். அது பற்றிய விவரங்களை எழுத்து மூலமாக கேட்டிருக்கிறார்கள். சகல விவரங்களையும் தமிழக அரசு அனுப்பியிருக்கிறது என்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்கள். அது உண்மையானால் அது பற்றிய விவரங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள், அம்மையார் அவர்களுக்கு, என்ன கருத்தை வாய் மூலமாக, அல்லது அமைச்சர் மூலமாக, அல்லது நேரடியாக அல்லது எழுத்து மூலமாக தெரிவித்தார்கள் என்பதையும் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** மூலக் கேள்வி பொதுவாக இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து உதவி கோரப்பட்டதா என்பதுதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரதமரிடத்திலே கோரப்பட்டதைக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

**சத்துணவுத் திட்டத்திற்காகப் பணியமர்த்தப்பட்ட ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஊழியர்கள் :**

227—(*வினா 16341)—**திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்குப் புதியதாகப் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களில் ஆதிதிராவிடர்களது சதவீதம் பணிவாரியாக எவ்வளவு ?



**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :**

1. குழந்தைகள் நல அமைப்பாளர்கள் .. 19 சதவீதம்.
2. குழந்தைகள் நல உதவியாளர்கள் .. 21 சதவீதம்.
3. பள்ளி சத்துணவு அமைப்பாளர்கள் .. 15 சதவீதம்.
4. பள்ளி சமையலர் மற்றும் உதவியாளர்கள் .. .. .. 13 சதவீதம்.

228—

**ராமநாதபுரம் மாவட்டத்தில் விதவைப் பெண்களின் பெண் குழந்தைகளுக்குத் திருமணச் செலவிற்காக வழங்கப்பட்ட நிதியுதவி**

*வினா (17396)—**திரு. க. பாரமலை :** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) விதவைப் பெண்களின் பெண் குழந்தைகளுக்குத் திருமணச் செலவிற்காக ரூ. 1,000 வழங்கியதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டது ?

(ஆ) அதில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) விதவைப் பெண்களின் பெண் குழந்தைகளுக்குத் திருமணச் செலவிற்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் 1981-82ம் ஆண்டிற்கு ரூ. 1,000 வீதம் 75 பேர்களுக்கு வழங்கப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டு 75 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டிற்கு 75 பேர்களுக்கு வழங்கப்பட்டதில் 16 பேர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். 1982-83 ஆம் ஆண்டில் 75 பேர்களுக்கு வழங்கியதில் 9 பேர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

**திரு. ஜி. மூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, விதவையான பெண்கள் அரசாங்கத்திற்கு விரைவிலே மனு போடாத காரணத்தால், முன்னுக்குப் பின்னாக - சென்ற ஆண்டு மனு போட்டவர்களுக்கு உடனடியாக கொடுக்கப்படுவதும் அதற்கு முன்னால் விதவையானவர்கள் அப்போது மனு போடாத காரணத்தால் அவர்களுக்குத் தாமதமாகவும் பணம் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே இதைப் பரிசீலனை செய்து, அவர்களுடைய குடும்பச் சூழ்நிலைகளையும் பரிசீலனை செய்து அவர்களுக்கு உதவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மார்கள் எப்போது விதவை ஆகின்றார்களோ, அப்போதிலிருந்து கணக்கெடுத்து, அந்த அடிப்படையிலே விதவைகளின் குழந்தைகள் திருமணத்திற்குச் செலவு செய்ய ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. அவர்களுடைய குடும்பச் சூழ்நிலை என்று பார்க்கும்போது, குடும்ப வருமானம் ஆண்டிற்கு 3 ஆயிரத்திற்கும் குறைவாக இருக்கும் விதவைகளின் குழந்தைகளுக்குத் தான் இந்த திருமணச் செலவிற்காக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தப் பெண்கள் விதவையாக ஆகின்றபோதே கணக்கெடுக்கப்படும் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் எத்தனை விதவைப் பெண்கள் இருக்கிறார்கள் ? எத்தனை விதவைப் பெண்களுக்கு பெண் குழந்தைகள் இருக்கின்றன என்ற கணக்கு மான அளவில் நிதி ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டுக்கு 75 நபர்களுக்கு ஒதுக்கீடு செய்து, 75 விதவைப் பெண்களுக்கும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதே போல் 1982-83 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 75 பெண்களுக்கு தொகை ஒதுக்கீடு செய்து, 75 விதவைப் பெண்களுக்கும் பணம் கொடுக்கப்பட்டு, பயன் பெற்றிருக்கிறார்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகளின் பெண் குழந்தைகளுக்கு திருமணச் செலவிற்காக தொகை வழங்கும்போது அதில் காலதாமதம் ஏற்படுகின்ற நிலையில், திருமணம் நடைபெற்றுவிட்டால், அதற்குப் பிறகு அந்தத் தொகை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருட ஆரம்பத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக விளம்பரம் செய்யப்படுகிறது. அந்த விளம்பரத்தின் மூலமாக விதவைத் தாய்மார்கள், அதை அறிந்து கொண்டு, அதற்கு ஏற்றவாறு மனுக்கள் போட்டால், நிச்சயமாக அவர்களுக்கு அந்த உதவித் தொகை கிடைக்கும்.



திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதவைப் பெண்களுக்கு திருமண நன்கொடை என்ற முறையிலோ அல்லது அரசு மானியம் என்ற முறையிலோ கொடுக்கக்கூடிய பணம் விண்ணப்பம் செய்யக்கூடிய அத்தனை விதவைப் பெண்களுக்கும் கொடுக்கப்படுமா ? ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எத்தனை பேர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் ? அதேபோல் கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கும் ஏதேனும் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களா ? என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணத்திற்கு உதவி செய்வது என்பது ஆதி திராவிடத் துறையைச் சார்ந்தது. சமூக நலத்துறையின் மூலமாக விதவைத் தாய்மார்களின் பெண்களுடைய திருமணத்திற்காகத்தான் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. எவ்வளவு பேர்கள் மனு போட்டு இருக்கிறார்கள் என்ற அளவிற்கு கணக்கிட முடியாது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எவ்வளவு ஒதுக்கீடு செய்திருக்கிறார்களோ, அந்த அடிப்படையிலே அந்த ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு மனுக்கள் வந்து, தகுதியான முறையில் அவைகள் இருக்குமானால், நிச்சயமாக அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.

காரிமங்கலம் மற்றும் மாரண்டஅள்ளி பேரூராட்சிப் பகுதிகளுக்கான கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

229—(*வினா 17407)—திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் தேர்வுநிலைப் பேரூராட்சி, மாரண்டஅள்ளிப் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகள் சுற்றுப்புற கிராமங்களுக்கு சுமார் 15 கிலோ மீட்டர் சுற்றளவிற்குக் கால்நடை மருத்துவமனை இல்லாததால் அந்தப் பகுதியில் புதியதாக ஏற்படுத்த உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள காரிமங்கலத்தில் 1983-84இல் புதிதாக ஒரு கால்நடை மருந்தகம் திறக்க அரசு பரிசீலனை செய்து, ஏற்கனவே அப்பகுதியில் இயங்கிவரும் மருத்துவ நிலையங்களைக் கருதியும் நிதி ஒதுக்கீட்டைக் கருதியும் அவ்விடத்தில் கால்நடை மருந்தகம் துவங்க ஆணையிடவில்லை. மாரண்டஅள்ளியிலும் மருந்தகம் அமைக்க உத்தேசம் இல்லை.

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பாலக்கோடு வட்டத்தில் காரிமங்கலம் மற்றும் மாரண்டஅள்ளி ஆகிய நகரங்கள் சுற்றுப்புற கிராமங்களுக்கு 15 கிலோ மீட்டர் தூரத்திற்கும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே தனியாக கால்நடை மருத்துவமனை வேண்டுமென்று 2 ஆண்டுக் காலமாக கேட்கப்பட்டு வந்து, சென்ற ஆண்டு பரிசீலனை செய்து அவைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. எனவே இந்த ஆண்டாவது அவைகளை அமைக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரண்டஅள்ளியில் கால்நடை மருந்தகம் ஆரம்பிக்க பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில்பங்குத் தொகை செலுத்த, ஒன்றியத்தில் நிதி வசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. பிறகு அங்கு ஒரு ஏக்கர் நிலம் கூட இல்லை, என்ற ஒரு விவரம் கூட இங்கே எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், மாரண்ட அள்ளியில் கால்நடை மருந்தகம் கட்ட, முழுமையான பிரேரணை தர்மபுரி கால்நடை உதவி இயக்குநரிடமிருந்து பெறப் படவில்லை. எனவே, மாரண்ட அள்ளியில் புதியதாக ஒரு கால் நடை மருந்தகம் தொடங்குவதற்கான உத்தேசம் இல்லை.

(முற்பகல் 10-10)

திரு. மு. ப. முனுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, காரிமங்கலத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே அதை அரசு எடுத்து நடத்தும் என்று அறிவித்து, நிலுவையில் உள்ளது. அதுதான் எடுக்கப்படுமா என்று கேட்டேன். மாரண்ட அள்ளி யில் என்னென்ன வசதிகள் வேண்டுமோ, அவைகளை அரசுக்கு செய்துதர நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் தற்போது நிலுவையில் உள்ள காரிமங்கலத்தின் நிலை என்ன? அந்த மருத்துவமனை இந்த ஆண்டாவது எடுக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப, இந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்யும்.

புக்கத்துரை கிராம கால்நடை மருத்துவமனைக் கட்டிடம்.

**230—(*வினா எண். 18010)—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—**





(அ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துரை கிராமத்தில் கால்நடை மருத்துமனைக் கட்டிடம் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அக் கட்டிடம், விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் புக்கத்துரை கிராம மருத்துவ மனைக்கு லிண்டல் (lintel) வரை செங்கற் கட்டிடம் கட்டப். பட்டு, சிமென்ட் இல்லாத காரணத்தால் பாதியில் நிறுத்தப்பட் டுள்ளது. விரைவில் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள முடி வுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-10)

## 2. தகவல் கோரல்.

### மழை, வெள்ளத்தினால் தென் மாவட்டங்கள் பாதிக்கப் பெற்றுள்ளமை.

*திரு. சோ அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கடுமையான மழை பெய்துகொண் டிருப்பதன் காரணமாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திரா யிருப்புக்கு அருகே உள்ள கிராமங்கள் நீரிலே மூழ்கி அங்குள்ள மக்கள் மரங்களின் மீது ஏறி நின்றுகொண்டு உயிரைப் பாது காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. இதே மாதிரியாக பல மாவட்டங்களில் போக்குவரத்து கூட துண்டிக் கப்பட்டிருக்கிறது. இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். நேற்று கூட இது குறித்து கவன ஈர்ப்பு வந்தபோது, ஒவ்வொரு கேள்வியை கேட்க விட்டீர்கள்.

அங்குள்ள மக்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்கு என்ன செய்வது என்று தெரியாமல், மிக பயங்கரமான நிலைமை யில் இருக்கிறார்கள். தவித்துக் கொண்டிருக்கிறார்கள் தொடர்ந்து அங்கே மழை பெய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எல்லாக் கட்சி

யைச் சேர்ந்தவர்களும் கொடுத்திருக்கிறோம். அதை அவையில் எடுத்துக்கொண்டு விவாதித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களோ அல்லது அவை முன்னவர் அவர்களோ பதில் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்களுடைய உணர்வுகள் மதிக்கப்படுகின்றன. காலையிலேயே இது குறித்து என்னுடைய அறையில் நிறைய தகவல்கள் வந்தன. ஆகவே, நான் 1 மணி 1.30 மணிக்குள்ளாக, இந்த அவையின் முன்னதாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை இது குறித்து அறிக்கை ஒன்றை வைக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களும் வைப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்போது பேசலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படுவதைப் போல, அரசும் சவலைப் படுகின்ற அளவுக்கு திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பெரும்மழை பெய்து, பெரு வெள்ளங்கள் ஏற்பட்டு, போக்குவரத்தே துண்டிக்கப் படுகின்ற நிலைமை இருப்பதாக நமக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

தலைமைச் செயலாளர் அவர்களின் மூலமாக ஆங்காங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறை அதிகாரிகளும், ரிசர்வ் படையில் சேர்ந்திருக்கிறவர்களும், தொடர்பு கொள்ளப்பட்டு, உடனடியாக நிவாரண வேலைகள் என்னென்ன எடுக்க வேண்டுமோ, அத்தனையும் உடனடியாக எடுப்பதற்கான அறிவுரைகள் தரப்பட்டிருக்கின்றன.

அது மட்டும் அல்லாமல், பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக, பெரும் வெள்ளம் வந்து, ரயில் போக்குவரத்தே கூட இன்றைக்குத் தடைபட்டிருப்பதாகச் செய்திகள் வந்திருப்பதன் காரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று நண்பகலுக்குள்ளாக, ஹெலிகாப்டர் விமானம் மூலமாக, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்குச் சென்று பார்வையிட்டு, 2, 3 நாட்கள் அங்கேயிருந்து, அதிகாரிகளோடும், மற்றவர்களோடும் கலந்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு, நேரிடையாக செல்ல இருக்கிறார்கள்.

அவரோடு தலைமைச் செயலாளர் அவர்களும், உரிய மற்ற அதிகாரிகளும் அங்கு செல்ல இருக்கிறார்கள். அதற்கிடையில் கிடைத்திருக்கிற தகவல்களின் அடிப்படையில், நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், எடுக்கப்பட்டு வருகிற நடவடிக்கைகளையும், மற்ற விவரங்களையும் இங்கே சொல்வார்கள். அவ்



வப்போது எடுக்கின்ற நடவடிக்கைகளையும், இருக்கின்ற நிலைமைகளையும், கிடைக்கின்ற தகவல்களையும் அவைக்கு எந்த முறையிலே தெரிவிக்க வேண்டுமோ, அதைத் தெரிவிக்க அரசு கடமைப்பட்டிருக்கிறது. என்றாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரிடையாக பார்வையிடுவதன் மூலமாக எடுக்க வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை எடுக்க ஆங்காங்கு சென்று அங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதன் மூலமாக, அங்கே ஓரளவிற்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்ற விவரங்கள் அரசுக்கு கிடைக்க அரசு அதை அவைக்கு தர முயற்சி எடுக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** உதவிக்கு படகுகள் போய்ச் சேரவில்லை என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று கண்டதற்குப் பிறகு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

**திரு. ஜே. எஸ். இராசு :** தலைவர் அவர்களே, வெள்ள விபத்தைப் பற்றி நாவலர் அவர்கள் தெரிவித்துவிட்டதால் நான் அதைப்பற்றிப் பேசாமல் சென்னையில் அரசினர் கலைக் கல்லூரியில் பயில்கின்ற மாணவர்கள்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திருவள்ளுவர் விரைவுப் பேருந்து தொழுதூர் அருகே விபத்துக்குள்ளானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், இரா. கருப்பையா, மு. அப்பாதுரை, தி. கா. நல்லப்பன் ஆகியோர் "அண்மையில் சென்னைக்கு வந்துகொண்டிருந்த திருவள்ளுவர் விரைவுப் பேருந்தும் ஒரு லாரியும் தொழுதூர் அருகே மோதி டிரைவர் உட்பட மூவர் இறந்துள்ளதாலும், அறுவர் அபாய நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், பலர் படுகாயமடைந்திருப்பதாலும், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே, அண்மைக் காலத்திலே லாரி பஸ் மோதல்கள் அதிகப்படியாக தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. அதன் காரணமாக பலவேறுவிதமான உயிரிழப்புச் சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. அண்மையில் நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டிருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தும் ஒரு லாரியும் தொழுதூர் அருகிலே மோதிக்கொண்டன. பொதுவாகவே லாரி மோதலால் விபத்துக்களின் எண்ணிக்கை உச்சகட்டத்தை அடைந்திருக்கின்றது. ஏற்படுகிற விபத்துக்களிலே 99 சதவீதத்திற்கு மேற்பட்ட விபத்துக்கள் லாரி மோதலால்தான் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு விரைவுப் பேருந்துகளிலே டிரைவர்களுக்கு மாற்று டிரைவர்கள் போடப்பட்ட காரணத்தினால் ஓரளவுக்கு விபத்துக்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் லாரிகளிலே ஓட்டுகின்ற டிரைவர்கள் இரவு முழுவதும் கண்விழித்து ஓட்டுவதால், தூக்கத்தின் காரணமாக விபத்துக்கள் ஏற்பட்டு நேராக வந்துகொண்டிருக்கின்ற வண்டிகளின் மீது மோதி அதன் காரணத்தினால் அந்த லாரி மட்டுமல்ல, எதிரே வருகின்ற வண்டிகளுக்கும் சேதங்கள் ஏற்படுகின்றன, ஆட்களுக்கும் சேதம் ஏற்படுகின்றன. எப்படி பஸ்களிலே மாற்று டிரைவர்கள் போடப்பட்டு விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றதோ அதைப்போலவே லாரிகளிலே மாற்று டிரைவர்கள் போட்டு ஓட்டவேண்டுமென்ற முறையைக் கொண்டுவந்தால் இப்படிப்பட்ட விபத்துக்களை தடுத்து நிறுத்தமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த குறிப்பிட்ட விபத்திலே லாரி டிரைவரும் கிளீனரும் இறந்திருக்கிறார்கள். டி. டி. சி. விரைவுப் பேருந்திலே இருந்த டிரைவருக்கும் கண்டக்டருக்கும் படு சேதம் ஏற்பட்டிருக்கிறது. இருபதிலே ஒருவர் இறந்திருக்கிறார். பல பிரயாணிகளுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது. பலர் அபாயகரமான நிலையிலே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த விபத்துக்களைத் தடுத்து நிறுத்த லாரிகள் இரவிலே ஓடக்கூடிய நிலையிலே விபத்துக்களைத் தடுப்பதுபற்றி விவாதிக்கவும் அதை ஒழுங்குபடுத்துவதைப்பற்றி விவாதிக்கவும் விபத்துக்களிலே இறந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் உடனடியாகக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்கவும் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3-3-1984 இரவு அல்லது 4-3-1984 அதிகாலை நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வந்துகொண்டு இருந்த திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தும்



அதேசமயத்தில் சென்னையிலிருந்து பாரம் ஏற்றிக்கொண்டு தூத்துக்குடிக்கு சென்று கொண்டிருந்த லாரியும் தொழுதூர் அருகில் இரண்டும் ஒன்றோடு ஒன்று மோதி பஸ்ஸில் வந்துகொண்டு இருந்த கண்டக்டர் வீரபாகு என்பவர் வயது 32 அந்த இடத்திலேயும் லாரியில் வந்த தியாகின் டிரைவர், முருகையன் கிளீனர் இவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு செல்கின்ற வழியில் இறந்து இருக்கிறார்கள். ஆக மொத்தம் இந்த விபத்தில் 3 பேர் இறந்து இருக்கிறார்கள். விபத்துக்களை பொறுத்தவரைக்கும் பெரும்பாலும் இன்றையதினம் அரசு பேருந்துகளானாலும் சரி அல்லது, லாரிகள் ஆனாலும் சரி முன்னால் போடக்கூடிய டயர்கள் எப்போதும் புதிதாக போடவேண்டும். ஆனால் சில சமயங்களில் அதை ரீபட்டன் டையர்களை போடுவதினால் ஆபத்து ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதேபோல் லாரிகளில் எப். சி. செய்கின்றபோது லாரிகளை சம்பந்தபபட்ட அலுவலகங்களுக்கு கொண்டு செல்லாமல் வேறு ஒரு இடத்தில் இருந்துகொண்டு கூட எப். சி. செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதன் காரணமாக விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இவைகளை முறையாக பரிசீலிப்பதற்கு அதாவது லாரிகளில் செல்லக்கூடிய டிரைவர்களுக்கும், கிளீனர்களுக்கும் சரி அல்லது பேருந்துகளில் செல்லக்கூடிய நடத்துனர்களுக்கும் டிரைவர்களுக்கும் சரி முறையாக விபத்தில் இறந்த அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கும் அதேசமயத்தில் லாரிகளை பொறுத்தவரையில் பல்வேறு லாரிகளில் Full In.ur. nce இல்லாமல் third Party இன்சூரன்ஸ் என்ற நிலையில் third Party இன்சூரன்ஸ் என்று சொல்கிறபோது அது பாதையில் நடக்கக்கூடிய விபத்திற்கு பட்டும் நஷ்ட ஈடு தருகிறார்கள்; ஆகவே கிளீனர், டிரைவர்களுக்கும் அந்த மாதிரியான இன்சூரன்சில் நஷ்ட ஈடு கிடைக்கிற வகையில் இதை முழுமையாக இன்சூரன்ஸ் செய்து விபத்து நடைபெறுகிறபோது அந்த நடத்துநருக்கும் லாரி டிரைவருக்கும், கிளீனருக்கும் முழுமையாக நஷ்டஈடு கிடைக்கின்ற வகையில் மேலும் இம்மாதிரியான விபத்துக்கள் நடைபெறாமல் இருப்பதற்கு இன்றைய மற்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, 3-3-1984 அன்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக தடம் எண். 572 நாமக்கல்லிலிருந்து சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த துரிதப் பேருந்துமீது காலை 9 30 மணி அளவில், தொழுதூரிலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள ராமநாதம் என்னுமிடத்தில் எதிரே வெகு வேகமாக வந்த லாரி (யவ

எண். எம். டி.. ஜி. 3607) மோதி பெருத்த சேதத்தை உண்டாக்கியது. இவ்விபத்தில் போக்குவரத்துக் கழக நடத்துனர் திரு. வீரபாகு விபத்து நடந்த இடத்திலேயே இறந்து விட்டார்; பேருந்து ஓட்டுநர் திரு. ராகவன் நாயர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார்.

நடத்துநர் வீரபாகுவின் குடுமபத்தினருக்கு விபத்து நடந்த இடத்திலேயே ரூபாய் 250 நிதியுதவி வழங்கப்பட்டது. இவரது பணிப்பதிவேட்டில் இவரது வாரிசுதாரர் யார் எனக் குறிப்பிடப்படவில்லையாதலால் ரூ. 1,000 மட்டும் குடும்ப நல நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. தகுந்த வாரிசு சான்றிதழ் கிடைத்த பின்பு இந்த நிதியிலுள்ள மீதத் தொகையான 9, 500 ரூபாயையும் கழகம வழங்கும். இவரது குடுபத்தாரில் ஒருவருக்கு கழத்தில் வேலை கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பேருந்தின் ஓட்டுநரான திரு. ராகவன் நாயர் திருச்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லபபட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். பேருந்தில் பயணம் செய்த திருவாளர்கள் அப்துல்லா, ரங்காராவ் மற்றும் சுவாமி நாடார் ஆகிய மூன்று பயணிகள் இந்த விபத்தில் காயமுற்றனர். இவர்களும் திருச்சியில் உள்ள மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு தகுந்த மருத்துவ சிகிச்சைக்குப் கன் வீடு திரும்பினர்.

லாரியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் இறந்துவிட்டார்கள். விபத்து நடந்த இடத்தில் செய்யபபட்ட ஆய்விலிருந்து லாரி ஓட்டுநரின் தவறே விபத்திற்கு காரணம் என்று தெரிகிறது. தகுர்த விசாரணைக்குப் பின் காவல் துறையினர் லாரி உரிமையாளர்கள் மீது தொழுதூர் காவல் நிலையத்தில் 84|84 என்ற எண்ணில் வழக்கு தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்திற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர் பொறுப்பல்ல எனத் தெரிகிறது. எனவே, இது குறித்து சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கத் தேவையில்லை எனக் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்கு பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது



## 4. அறிவிப்பு.

### மேலவையில் இருந்து வரப்பெற்ற செய்தி—சட்ட முன்வடிவுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1984).

2. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1984).

3. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1984).

4. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1984).

5. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1984).

6. தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1984).

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) அம்பா சமுத்திரம் தொகுதியில் வன இலாக்காவினர் பயிர்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடக் கூடாது எனத் தடுப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், கே. ஆர். சுந்தரம், என். பழனிவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

[1984 மார்ச் 8

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** தலைவர் அவர்களே,

" அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள விவசாய நிலங்களில் விளைந்துள்ள பயிர்களைச் சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடக் கூடாது என வன இலாகாவினர் தடுப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டத்தில், தெற்குக் கல்லிடைக் குறிச்சி, மலையாங்குளம், அச்சன்புதூர் போன்ற கிராமங்களில் காடுகளை ஒட்டியுள்ள நிலங்களில் உள்ள நஞ்சை, புஞ்சைப் பயிர்களைக் காட்டுப் பன்றிகள் அழித்து வருகின்றன எனவும், 1972 ஆம் ஆண்டின் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தில், பாதுகாக்கப்பட வேண்டிய விலங்குகளுள் இவ்விலங்குகள் சேர்க்கப்பட்டுள்ளதால், இவற்றை விவசாயிகள் வேட்டையாடவோ அல்லது சுட்டுக் கொல்லவோ முடியவில்லை எனவும், ஆகவே பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடுவதற்கு அனுமதி கோரி அரசுக்கு வேண்டுகோள் வந்தது.

2 இப் பிரச்சினை குறித்து தீவிரமாகப் பரிசீலித்ததில், 1972 ஆம் ஆண்டின் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 61 (2)ன் படி, காட்டுப் பன்றிகளைப் பட்டியல் III மற்றும் IV இலிருந்து பட்டியல் V க்கு மாநில அரசே ஒரு அறிவிக்கையின் மூலம் மாற்றலாம் என்று தெரிய வந்ததனால், 6-12-1982 நாளிட்ட அரசாணையில், காட்டுப் பன்றிகளைப் பட்டியல்கள் III மற்றும் V-லிருந்து பட்டியல் V-க்கு மாற்றுவதற்கு உரிய அறிவிக்கை ஒன்றைத் தமிழ்நாடு அரசிதழிலும், திருநெல்வேலி மாவட்ட அரசிதழிலும், வெளியிடுவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆணையின்படி, சரணாலயம் மற்றும் ஒதுக்கக் காடுகளுக்கு வெளியே உள்ள பகுதிகளில் உள்ள நிலங்களில் காட்டுப் பன்றிகளோ அல்லது முள்ளம் பன்றிகளோ பயிர்களுக்குச் சேதம் விளைவித்தால், அவற்றைச் சுட்டுக் கொன்று தங்களின் பயிர்களை விவசாயிகள் காப்பாற்றிக் கொள்ளலாம் சரணாலயங்கள் மற்றும் ஒதுக்கக் காட்டுப் பகுதிகளுக்குள் உள்ள நிலங்களில் காட்டுப் பன்றிகளோ மற்ற வன விலங்குகளோ விவசாயிகளின் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்குமாயின் முதன்மை வன விலங்குக் காப்பாளரிடமிருந்து உரிய அனுமதி பெற்றபின், அவ் வனவிலங்குகளை வேட்டையாடியோ, சுட்டுக் கொன்றோ தங்களது பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.





3. சரணாலயப் பகுதிகளுக்குள்ளும், மற்ற காப்புப் பகுதிகளுக்குள்ளும், அனுமதியின்றி வனவிலங்குகளை வேட்டையாடுவது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ன்படி தடை செய்யப்பட்டுள்ளதால், அப்பகுதிகளில் பயிர்களை விளைவித்துள்ள விவசாயிகள், வனவிலங்குகளுக்கு ஊறு விளைவிக்காமல், தங்களது நிலங்களைச் சுற்றிக் கம்பி வேலி அமைத்தும், அபாயமற்ற பட்டாசு முதலியவற்றை வெடித்து வனவிலங்குகளைத் துரத்தியும், தண்டோரா அல்லது தகர டின்களை அடித்து பெருத்த ஒலி எழுப்புதல் போன்ற முறைகளைக் கையாண்டும், வனவிலங்குகளை விரட்டித் தங்களது பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு வனத்துறை அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை கூறிவருகின்றனர்.

4. வனவிலங்குகளினால் சேதம் ஏற்படும் பயிர்களுக்குத் தகுந்த காப்பீட்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. வனத்துறைத் தலைவர் அனுப்பியுள்ள செயற்குறிப்புகள் மீது மேலும் சில விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன. அவை பெறப்பட்டபின் இத்திட்டம் பரிசீலிக்கப்படும்.

5. பட்டா நிலங்களில் விளையும் விவசாயப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் காட்டுப் பன்றிகளை வேட்டையாடக் கூடாது என்று வனத்துறை அதிகாரிகள் தடுப்பதாகப் புகார் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பன்றிகளை வேட்டையாடுவது சம்பந்தமாக ஒவ்வொரு பட்ஜெட் செஷனிலேயும் கேட்க வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமைக்காக நான் வருந்துகிறேன். ஏற்கெனவே, சென்ற தடவை பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, வேட்டையாடலாம் என்று அறிவித்திருக்கிறார்கள் ஆனால், வேட்டையாடும்பொழுது சரணாலயத்திற்குள்ளேயோ அல்லது காட்டுக்குள்ளேயோ போகவில்லை. காட்டிலேயிருந்து பன்றிகள் வந்து விவசாயிகளின் விளை நிலங்களை அழிக்கும் பொழுதுதான் இந்தப் பிரச்சினை வருகிறது. உதாரணமாக, அம்பாசமுத்திரம் பகுதியில், கடானா நதிக்கு இந்தப் பக்கத்தில் இருக்கக் கூடிய நிலங்களை அழிக்கும்பொழுது அந்தப் பகுதிகளிலே உள்ள விவசாயிகள் அந்தப் பன்றிகளை அடித்து

விரட்டுவதற்கு முற்படுகின்றபொழுது, அதையெல்லாம் செய்யக் கூடாது என்று சொல்கிறார்கள். குறிப்பாக, பங்களா குடியிருப்பு பிரதேசம் என்று கடானா நதிக்குப் பக்கத்தில் இருக்கிறது. அங்கேயுள்ள வனக் காவலர்கள், தங்களுக்கு இப்படிப்பட்ட உத்திரவு வரவில்லை, எனவே எதையும் செய்யக் கூடாது என்று அவர்கள் தடுக்கிறார்கள். நானும் எழுத்து மூலமாகவும் கொடுத்திருக்கிறேன். இருந்தாலும் இப்படிப்பட்ட நிலைமை இன்னும் அங்கே இருக்கிறது. ஆகவே தான் இதை மீண்டும் கிளப்ப வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை வந்தது. ஆகவே, அமைச்சரவர்கள் மீண்டும் ஒரு உத்திரவை—ஜி.ஓ. போட்டு, விவசாயிகளின் பயிர்களை அழித்து சேதமாக்கக் கூடிய பன்றிகளைத் தாராளமாக வேட்டையாடலாம் அல்லது விரட்டலாம் என்று சொல்ல வேண்டும்.

அதே நேரத்தில், இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. பன்றிகளை அடிக்கிறார்கள், அடித்த பன்றியை என்ன செய்வது? அவ்வாறு பன்றியை அடித்தவர்களைக் கூப்பிட்டு, கறிக்காக—உணவுக்காகத்தான் பன்றியை அடித்தாய், வெட்டினாய் என்று வனப் பாதுகாவலர்கள் மிரட்டுகின்ற வேலையைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இதற்கும் ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அழிக்கப்பட்ட பயிர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கான் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவது குறித்து ஆலோசித்து வருவதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள் அது எப்படிப்பட்ட திட்டம் என்பதைப்பற்றி அமைச்சரவர்கள் விளக்குவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்து இந்தப் பிரச்னைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையொட்டி, 1972-ம் ஆண்டின் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டப் பிரிவின்படி, இந்தக் காட்டுப் பன்றிகளையெல்லாம் பட்டியல் 3 மற்றும் 4-லிருந்து 5-வது பட்டியலுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்டதன் மூலம், பாதுகாக்கப்படுகின்ற ரிசர்வ் ஃபாரஸ்ட் அல்லது சேங்சுவரி என்கிற சரணாலயம்—இந்தப் பகுதிக்கு வெளியே உள்ள பட்டா நிலங்களில் இந்தப் பன்றிகள் பயிர்களை அழித்தால் அந்த நிலச் சொந்தக்காரர்கள் அந்தப் பன்றிகளைக் கொல்லலாம் அல்லது சுடலாம் என்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இதையும் மீறி அந்தப் பகுதியிலே இருக்கின்ற வனத்துறை அதிகாரிகள், எங்களுக்கு இந்தச் சட்டம் தெரியாது, ஆகவே உங்களை விசாரிக்கிறோம், நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்வதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.



(முற்பகல் 10-30)

குறிப்பாக அப்படிச் சட்டம் தெரியாமல் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்கின்ற அதிகாரிகள் யார் என்று எழுதித் தந்தால் அல்லது குறித்துத் தந்தால் உடனடியாக அப்படிப்பட்ட அதிகாரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சுடப்பட்டதற்குப் பிறகு, அல்லது கொல்லப்பட்டதற்குப் பிறகு அந்தப் பன்றிகள் வனத்துறையினரிடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது விதி. ஆகவே அதிலேயும் சிக்கல்கள் இருந்தால் அதையும் பார்த்து அரசு தக்க அறிவிப்புக்களைக் கொடுத்து விளக்கங்களைக் கொடுத்து நடவடிக்கை எடுக்கும்.

பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலே இருந்து வெளியே வநது பன்றிகள் பயிர்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றபோது அதற்கான நஷ்டஈடு கொடுப்பது பற்றி வனத்துறை, காப்பீட்டுக் அகத்தோடு ஆலோசித்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு எந்த ளவுக்கு பணம் செலுத்த வேண்டும் என்று சொன்னால் அவற்றை ஏற்றுக்கொள்வார்கள் என்பதைப் பற்றிய இறுதியான விவரங்களைக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே அது வந்ததற்குப் பிறகுதான் முடிவு செய்யப்படும்.

**திரு. கே. ஆர். சுந்தரம் :** தலைவர் அவர்களே, பட்டா நிலங்கள் அல்லாமல், சரணாலயப் பகுதிகள் அல்லது பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் இத்தகைய பன்றிகளை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டு இருப்பதாகவும், எனவே அந்த விவசாயிகள் தங்கள் நிலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றால் ஒலி எழுப்பியோ அல்லது மற்றுமுள்ள முறைகளின் மூலம் அவற்றை விரட்டலாமே தவிர, கொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள். ஆனால் 24 மணி நேரத்தில் எப்போது அவை வருகின்றன என்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே விதிவிலக்கு அளித்து அந்தப் பன்றிகளைக் கொல்வதற்குரிய முறையில் அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே இந்தக் கருத்து பற்றித் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு அது நடைமுறையில் சாத்தியப்படாத ஒன்று என்றுதான் அரசு அதிலே விதிவிலக்கு அளிக்கவில்லை. பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளைப் பொறுத்த வரையில் குறிப்பாக முண்டந்துறை சரணாலயம் பகுதிகளில் பட்டா நிலங்கள் குறைவாகத்தான் இருக்கின்றன. அப்படி பட்டா நிலங்கள் இருந்தாலும் கூட அவற்றிலே பயிர் செய்கின்ற பட்டா நிலங்கள் குறைவுதான். எனவே அந்த பயிர்கள் அழிக்கப்படுகின்றன என்ற சூழ்நிலை மிகவும் குறைவு ஆகவே ஒரு பொதுவான நோக்கத்தில் அதாவது வன விலங்குகளையும், பறவைகளையும், உயிர்களையும் பாதுகாக்கின்ற,

முயற்சியினை எடுக்கின்ற போது இப்படிப்பட்ட சில சங்கடங்கள் வருவதை நாம் பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். இருந்தாலும் விவசாயிகளுக்கு, பட்டா நிலங்களின் சொந்தக்காரர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் அந்தக் கஷ்டங்களை உடனடியாகப் போக்க வேண்டும் என்று வனத்துறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, வன விலங்குகளின் உபத்திரவத்தால் விவசாயிகளின் பயிர்கள் தொடர்ந்து பல மாவட்டங்களில் சேதம் ஏற்படுகின்றது. ஆனால் வனத்துறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுத்தான் அவற்றைச் சுட்டோ அல்லது வேறு முறைகளிலோ அந்தப் பயிர் பாதிப்பைத் தடுக்கலாம் என்று சொல்கிறார்கள். முதன்மை வனத்துறை அதிகாரிகளுக்கு அப்படி பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆரம்பத்திலேயே மனுச் செய்தால் அரசாங்கமே அதற்காகத் தக்க அதிகாரிகளை நியமித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா ? அதாவது அவர்களே வந்து அவற்றை சுட்டுத் தள்ளியோ அல்லது சுடாமலே விரட்டியோ நடவடிக்கைகளை எடுத்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு முன் ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். அதாவது பட்டா நிலங்கள் வைத்துள்ள விவசாயிகளுக்கு இதுபோன்ற விலங்குகளால் பயிர் பாதிப்பு ஏற்பட்டாலும் கூட அவற்றை வேட்டையாடக் கூடாது என்று வனத்துறை அதிகாரிகள் தடுத்ததாகப் புகார் எதுவும் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட புகார்களை பலர் அனுப்பி இருப்பதாகத் தகவல் வந்திருக்கின்றது. ஆனால் இங்கே புகார்களே வரவே இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உன்னிப்போடு கவனித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு உடனுக்குடன் தொடர்பு கொண்டு விவசாயிகளைப் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, கடந்த 3 வருடங்களாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றம் கூடுகின்ற நேரங்களிலே இங்கே தெரிவித்துக்கொண்டிருக்கின்ற புகார்களைத் தவிர குறிப்பாக அந்தப் பகுதி மக்களிடத்திலிருந்தோ அல்லது விவசாயிகளிடமிருந்தோ மேலதிகாரிகளுக்கு புகார்கள் வந்ததாகத் தகவல் இல்லை. அல்லது விவசாயிகள் அரசாங்கத்திற்கு நேரடியாகப் புகார்கள் அனுப்பிய விவரங்களும் இல்லை. அதைத்தான் நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

அடுத்து பாதுகாக்கப்பட்ட காடுகள் அல்லது சரணாலயங்களில் பட்டா நிலங்களை வைத்து பயிர் செய்துகொண்டிருப்பவர்கள், அனுமதி பெற்று பயிர்களை அழிக்கின்ற பன்றிகளைக் கொல்வதற்குப் பதிலாக வனத்துறை அதிகாரிகளே பாதுகாப்பாக





அந்தப் பன்றிகளை காட்டுக்குள்ளே விரட்டுவதற்கோ அல்லது அவற்றைக் கொல்வதற்கோ நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அது கொஞ்சம் ஆபத்தான ஆலோசனை. அப்படி ஒரு அனுமதியை வனத்துறை அலுவலர்களுக்குத் தந்துவிட்டால் வனத்துறை அலுவலர்கள் இந்தப் பன்றிகளை மாத்திரம்தான் கொல்லுகின்றார்களா ? அல்லது அந்தப் பன்றிகள் பட்டா நிலங்களைப் பாழ்படுத்துகின்றன என்கின்ற காரணத்தை வைத்துக்கொண்டு கொல்லுகின்றார்களா என்ற பிரச்னையெல்லாம் வந்து மீண்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களே வனத்துறை அதிகாரிகளே வன விலங்குகளைக் கொன்று கொண்டிருக்கிறார்களே என்று கேட்கின்ற சூழ்நிலையும் வந்துவிடும். அது எச்சரிக்கையாக அணுகப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, கொஞ்சம் சிரமங்கள் கஷ்டங்கள் இருந்தாலும் நாட்டினுடைய நன்மையைக் கருதி, உயிர்களைப் பாதுகாக்க வேண்டுமென்கிற அடிப்படையில் பாதுகாக்கப்படுகிற, ஒதுக்கப்படுகிற காடுகளுக்குள்ளே சரணாலயங்களுக்குள்ளே நடைபெறுகிற நிகழ்ச்சிகளில் ஏற்படுகிற நடைமுறை சங்கடங்களை நாம் கொஞ்சம் பொறுத்துக்கொண்டு அதற்குப் பரிகாரம் காண வேண்டும்.

## (ஆ) இராயபுரம் பகுதியில் மாநகராட்சிப் பணிகள் நடைபெறாதது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, " சென்னை இராயபுரம் மேற்கு கல்லறைச் சாலை, கிழக்கு கல்லறைச் சாலை, மீனாட்சியம்மன்பேட்டை, டோபி கானா, ஜீவரத்தினம் நகர் போன்ற குடிசை மாற்று வாரியத் திட்டப் பகுதிகளில் அன்றாடத் தண்ணீர் விநியோகம்—சாக்கடை அடைப்பு—குப்பைகள் அகற்றுதல் போன்ற தேவைகளில் குறைபாடுகள் நீக்கப்பெறாததால் மக்கள் மத்தியில் எழுந்துள்ள நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

சென்னை, இராயபுரம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 5 பகுதிகளில் சுகாதாரப் பணிகளைப் பற்றிய விவரங்கள் :—

### மேற்கு கல்லறைச் சாலை

இப்பகுதியில் 672 குடியிருப்புகள் உள்ளன. 13 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

[திரு. எஸ். ஆர். இராதா] [1984 மார்ச் 8

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இப்பகுதி
யிலுள்ள 16 அடி விட்டமுள்ள கிணறுகளிலிருந்து பொது மேல்
நிலைத் தொட்டிக்கு இறைப்புச் செய்து அருந்துவது நீங்கலாக
மற்றைய தேவைக்கான தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.
சென்ற ஆண்டு வறட்சியின்போது வடிநீர் குழாய்களும், ஒரு
ஆழ்குழாய் கிணறும் பொறுத்தப்பட்டன. மேல்நிலைத் தொட்
டிக்குச் செல்லும் குழாய்கள் அடிக்கடி சமூக விரோதிகளால்
உடைக்கப்பட்டு வருவதால் மேல்நிலைத் தொட்டிக்குத் தண்
ணீர் ஏற்றுவதில் சிரமம் ஏற்படுகிறது. பழுதடைந்த குழாய்கள்
அனைத்தும் ஓரிரு மாதங்களில் சரிபார்க்கப்படும். குடிசை
மாற்று வாரியத்தால் குப்பைகள் அகற்றப்பட்டு கல்லறைச்சாலை
யில் சேமிக்கப்படுகிறது. அவை அங்கிருந்து அவ்வப்போது,
சென்னை மாநகராட்சியால் அகற்றப்பட்டு வருகிறது. இங்கு
கழிவுநீர் செப்டிக் தொட்டிகள் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது.

**கிழக்கு கல்லறைச் சாலை :**

இப்பகுதியில் 800 குடியிருப்புகள் உள்ளன. 20 பொதுக்
குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 15
அடி விட்டமுள்ள ஒரு கிணற்றிலிருந்து அருந்துவது நீங்கலாக
உள்ள மற்றைய தேவைக்கான நீர் குடிசைப் பகுதி மாற்று வாரி
யத்தால் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு வறட்சியின்போது
ஒரு ஆழ் குழாய் கிணறும், 7 கைப்பம்புகளும் பொறுத்தப்பட்டன
குப்பைகள் சேகரிக்கப்பட்டு மாநகராட்சியால் அகற்றுவதற்காக
அதன் சாலை ஓரங்களில் சேமிக்கப்படுகிறது. இங்கு தற்பொழுது
கழிவு நீர் செப்டிக் தொட்டிகள் மூலம் சுத்திகரிக்கப்படுகிறது.

**மேற்கு கல்லறைச் சாலை :**

கிழக்கு கல்லறைச் சாலை ஆகிய இரு பகுதி
களுக்கும் நிரந்தரமான தீர்வு அளிக்க குடிசைப் பகுதி
மாற்று வாரியத்தின் ரூ. 7,20,923 செலவில் சென்னைப் பெரு
நகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினால்
ஒரு "பம்பிங் மெயின்" போடப்பட்டு வருகிறது. அவ்வேலை
முடிந்தவுடன் நிரந்தர பரிகாரம் கிடைக்கும். இந்த இரண்டு
பகுதிகளிலும் வெளிப்புறமுள்ள சுமார் 300-க்கும் மேற்பட்ட
ஆக்கிரமிப்பு குடும்பங்களால் காலையில் சுத்தம் செய்யப்பட்ட
பகுதிகள் சில மணி நேரத்திலேயே மறுபடியும் அசுத்தம் செய்
யப்பட்டு விடுகிறது. இந்த ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட்
டால்தான் இப்பகுதி தூய்மை அடையும்.

**மீனாட்சியம்மன் பேட்டை :**

இப்பகுதியில் 56 குடியிருப்புகள் உள்ளன. 3 பொது குழாய்
கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மற்ற தேவை
களுக்கு 6 அடி விட்டமுள்ள கிணற்றிலிருந்து குடியிருப்புகளுக்கு
தண்ணீர் தினமும் இறவை செய்யப்படுகிறது. குப்பைகள்
காலையில் தெரு ஓரத்தில் சேமித்து வைக்கப்பட்டு மாநகராட்சி
யால் அகற்றப்பட்டு வருகின்றது.



1984 மார்ச் 8] [திரு. எஸ். ஆர். இராதா]

**மீனாட்சியம்மன்பேட்டை-டோபிகானா :**

இது சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கழிவு நீரகற்றுவதில் தற்பொழுது ஏற்பட்டுள்ள தற்காலிக தடங்கல்களுக்குக் காரணம் சூரியநாராயணத் தெருவில் ஏற்படும் அடைப்புகள். இதற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் மாற்றுத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி இதன் மூலம் கழிவு நீரை கொடுங்கையூருக்குப் பம்ப் செய்ய கருதியுள்ளது. அவ்வேலை முடிந்தவுடன் நிலைமை சீரடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஜீவரத்தினம் நகர் (காசிமேடு குப்பம்) :**

இப்பகுதியில் 464 குடியிருப்புகள் உள்ளன. 14 தெருக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மற்ற தேவைக்காக 3 கிணறுகளிலிருந்து தினமும் தண்ணீர் இறவை செய்யப்படுகிறது. குப்பைகள் மாநகராட்சியின் தெரு ஓரங்களில் சேமிக்கப்பட்டு பின் அவை மாநகராட்சியால் அகற்றப்படுகின்றது. உடைந்துள்ள கழிவு நீர் குழாய்களை சீர் செய்யும் வேலைக்கான ஒப்பந்தம் முடிக்கப்பெற்று வேலை ஆரம்பிக்க உள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் வேலைகள் முடிவடையும்.

மக்களிடையே சுகாதார பொறுப்புணர்வு குறைவாக உள்ளதால், இப்பகுதிகளை சுத்தமாக வைப்பது சிரமமாக உள்ளது. கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்பட்டு வருவதால் சுகாதார குறைவு, கழிவு நீர் குழாய்களில் அடைப்பும் ஏற்படுகிறது. குடிசைவாழ் மக்கள் வாழ்ந்து வரும் பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொள்வதில் பெரும் பங்கு உண்டு என்பதை உணர்த்தி, அவர்களிடையே பொறுப்புணர்ச்சி மேலோங்கச் செய்யும் வகையில் பராமரிப்புப் பணிகளை குடிசை வாழ் மக்களே நிர்வகிக்கும் திறனை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. இதற்கென சென்னை மாநகரில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் வசித்து வரும் மக்களும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வாரியத்தால் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களும் சேர்ந்து சுமார் 50,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து யுனிசெப் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு நிதிஉதவியைப் பெற்றுள்ளது. மேற்கண்ட யுனிசெப் நிதி உதவியுடன், சென்னை மாநகராட்சியில் உள்ள குடிசைப் பகுதிகளில், சுகாதாரமும் துப்புறவும் நிலவிடத்தக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 8

**திரு. ப. பொன்னுரங்கம் :** துணைத் தலைவர் அவர்களே,
4, 5 பகுதிகளாக என்னுடைய தொகுதியிலே இந்தக் குடிசை
மாற்று வாரியக் குடியிருப்புகள் இருக்கின்றன. விளக்கம் அளித்
திருக்கிறீர்கள். அதிலே ஒரு விளக்கம் காசிமேடு குப்பம் என்ற
பகுதியில் ஜீவரத்தினம் நகர், மக்களிடையே சுகாதாரப் பொறுப்
புணர்வு குறைவாக உள்ளதால் இப்பகுதிகளை சுத்தமாக வைப்
பது சிரமமாக உள்ளது. கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்
புட்டு வருவதால் சுகாதாரக் குறைவு ' என்று கொடுத்துள்
ளீர்கள். எனக்குத் தெரிந்தவரைக்கும் அங்கே கால்நடைகள்
நாங்கள்தான், மனிதர்கள்தான். கருவாடு காய வைக்கிற பகுதி,
அங்கே கால்நடைகளே கிடையாது, நிச்சயமாகக் கிடையாது.
ஆனால், அங்கே என்ன குறை என்றால், மெய்ன்டனன்ஸ் இஸ்
வெரி பூவர். அதற்காக அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை,
குப்பை கூளங்களை எடுக்க வேண்டும், சாக்கடைகளைச் சுத்தம்
செய்யவேண்டும். குடிநீர் வழங்க வேண்டும். அங்கே போது
மான பணியாளர்கள் இல்லை. என் தொகுதியிலே முன்னால்
ஒரு விழாவில் மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம்
அவர்கள் கலந்து கொண்டபோது நான் பேசியிருக்கிறேன், போது
மான பணியாட்கள் இல்லை, உபகரணங்கள் இல்லை என்று.
அதனால்தான் அங்கே குப்பை கூளங்கள் குவிந்திருக்கின்றன.
நான் அந்தக் குடிசைப் பகுதிகளுக்கு அடிக்கடி நேரடியாகவே
போகிறேன். போகும்போது மூக்கைப் பிடித்துக் கொண்டுதான்
போக வேண்டியிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமை
யிருக்கிறது. ஆகவே, ஒர்க்கர்ஸ்ஸை அதிகமாகப் போடவேண்
டும், சாதனங்களை அதிகமாக வாங்கிக் கொடுக்க வேண்டும்.
நான் அதிகாரிகளைக் குறை சொல்லவில்லை, அதிகாரிகள் ஒத்
துழைக்கிறார்கள். பணியாட்கள் போதுமான அளவு இல்லாத
தாலும், போதுமான அளவு உபகரணங்கள் இல்லாததாலும்
உள்ள இதுபோன்ற குறைபாடுகளைப் போக்க அரசு, அமைச்
சர் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம்
அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு அந்தக் குடிசைப் பகுதிகளைப்
பார்த்துக் கொண்டிருப்பதற்காக அவரை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, ஜீவரத்தினம் நகரைக்
குறிப்பிட்டுக் கூறியிருக்கிற காரணத்தாலே ஜீவரத்தினம் நகர்ப்
பகுதியிலே வசிக்கிறவர்கள்—அங்கே இருக்கின்றவர்கள்—கால்
நடைகள் என்று குறிப்பிடுவது நல்லதல்ல. அங்கே இருப்பவர்
கள் மீனவ மக்கள். அவர்கள் சமுதாயத்திலே உயர்ந்த
நிலையிலே வரவேண்டுமென்பதற்காக அவரும் நானும் எல்லோ
ரும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்டவர்களைக்
கால்நடைகள் என்று சொல்வது நமக்கே நல்லதல்ல. அங்கே
பல்வேறு வகையான ஆக்கிரமிப்புகள் இருக்கிற காரணத்தாலே
சுகாதாரப் பணிகளைப் பொறுத்தவரையில் மாநகராட்சியும்



[திரு. எஸ். ஆர். இராதா] [1984 மார்ச் 8

இணைந்து செயலாற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிற
காரணத்தால் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் குறிப்பிட்டு
கூறிய அந்தக் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்திக்க வேண்டு
மென்ற நடவடிக்கைகளில் இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்
கிறோம்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் கேட்
டுக்கொண்டதைப் போல இன்னும் அதிகமான அளவிற்கு சுகா
தாரப் பணிகளை செய்வதற்கு, பராமரிப்பதற்கு ஆட்கள் வேண்
டும் என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும்.
இதிலே வருகிற சங்கடங்கள் என்னவென்றால் குடிசை மாற்று
வாரியத்தின் பணிகளுக்கு செலவு செய்கிற பணம் முழுவதும்
அரசாங்கத்தினுடைய பல்வேறு நிலைகளில் செலவிடப்படு
கிறது. ஆனால் வாரியத்திற்கு வரவேண்டிய வசூல் எப்படி
இருக்கிறது என்றால் ஏறத்தாழ $7\frac{1}{4}$ லட்சம் ரூபாய் இந்த நான்கு
குடியிருப்புகளில் மட்டும் பாக்கி இருக்கிறது. பணத்தை வசூல்
செய்கிற நேரத்திலே பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. அந்த
சங்கடங்களை தவிர்ப்பதில் மாண்புமிகு உறுப்பினர் பொன்னு
ரங்கம் போன்றவர்கள் துணையாக இருப்பார்களானால் நாம்
நிச்சயமாக சுகாதாரத்தை எந்த அளவிற்கு வலுவானதாக வைத்
துக்கொள்ள வேண்டுமோ அந்த அளவிற்கு வைத்துக் கொள்ள
லாம். இந்தக் குடியிருப்புகளுக்காக அமைக்கப்படுகிற பகுதியை
ஒட்டி பல்வேறு ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. அவற்றை
அகற்றுவதற்கு முயற்சியை எடுக்கிற நேரத்தில் அதுவும் பெரிய
பிரச்சினையாகி விடுகிறது. எனவே ஆக்கிரமிப்புகள் அப்படியே
இருக்கின்றன. அந்த ஆக்கிரமிப்புகளினால் இந்த குடிசை
களுக்கு ஏற்படுகிற பல்வேறு சுகாதாரக் கேடுகளை களைவதற்
கான முயற்சியிலே இன்றைக்கு ஈடுபட வேண்டியிருக்கிறது.
அதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பார்கள்
என்று நினைக்கிறேன்.

நான் அவருக்குப் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்
வேன். இன்றைக்கு பல்வேறு வீட்டுவசதி வாரியத்தினுடைய
குடியிருப்புகளை பொறுத்தவரையில் அங்கே இருக்கிற மக்களே
அவற்றை பராமரிக்கிற முறையை, ஏற்பாடுகளை இன்றைக்கு
செய்து கொண்டு, பராமரிப்பிற்காக அவர்களிடத்தில் வசூலிக்கிற
பணத்தை அவர்களே எடுத்துக்கொண்டு அவர்கள் சொந்த
பொறுப்பில் பராமரிக்கிற அளவிற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்
டிருக்கின்றன. அந்த முறை குடிசை மாற்று வாரியத்திலே இருக்கிற
குடியிருப்புகளிலும் கொண்டு வருவதற்கான முயற்சியை
பொன்னுரங்கம் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் முயலுவார்
களானால் நிச்சயமாக அரசு அவர்களுக்கு துணையாக இருக்கும்.

1984 மார்ச் 8]

திரு. ப. பொன்னுரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கால்நடை என்று அங்கே இருப்பவர்களைச் சொல்லவில்லை. காலால் நடக்கிறவர்கள் கால்நடைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நானும் அதை மனதில் வைத்து தான் கேட்கிறேன். கால்நடை என்றால் நடந்து போகிற எல்லாமே கால்நடையா ? மாண்புமிகு நாவலர் அவர்களைக் கேட்டால் சரியாகச் சொல்வார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காலால் நடப்பவைகள் எல்லாம் கால்நடைகள் என்றாலும், மரபின் வழியில் கால்நடைகள் என்பது மிருகங்களைத் தான் குறிக்குமே தவிர மனிதர்களைக் குறிக்காது.

திரு. ப. பொன்னுரங்கம்: மனிதப் பிறப்பே DARVIN Theory-படி விலங்கினத்திலிருந்துதான் நாம் வந்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்த நான்கு பகுதிகளிலும் இருப்பவர்கள் வாடகை தரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் 12—9—1983 அன்று ஒரு விண்ணப்பம் அதிகாரிகளுக்கும், குடிசை மாற்று வாரிய தலைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அதை அனுப்பிய அமைப்பு அறிஞர் அண்ணா அறிவகம், தியாக மறவன் சிட்டிபாபு நினைவு இரவுப் பள்ளி, நம்பர் 33, குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, கல்லறை சாலை, சென்னை-21, 14-வது வட்டம் ; அனைத்து அதிகாரிகளுக்கும், குடிசை மாற்று வாரியத் தலைவருக்கும் 12—9—1983-ல் அனுப்பி இருக்கிறார்கள். அதில் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் நாங்கள் வாடகையை முறையாக கட்டத் தயாராக இருக்கிறோம். குடிநீரில் கழிவு நீர் கலக்கிறது, இதையெல்லாம் பார்க்க வேண்டும். கல்லறை சாலையில் அங்கே ஒரு கிணறு இருக்கிறது; தூர் எடுத்தால் போதும், தண்ணீர் கிடைக்கும். பம்ப்செட்டுகளை ஓட்டுவதற்கு முறையாக ஆட்கள் வருவதில்லை என்று இது போன்ற குறைகளை எல்லாம் எழுதி இருக்கிறார்கள். அதற்கு 22—9—1983-ல் பதில் வாரியத்திடமிருந்து வந்தது. என்னவென்றால் உங்களுடைய கோரிக்கை கிடைக்கப்பெற்றோம். அந்த கோரிக்கையானது 14—10—1983-க்குள் முடித்துக் கொடுப்போம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அதற்கு அடுத்து 6—12—1983-ல் இதேமாதிரி வாரியத்திடமிருந்து பதில் வந்திருக்கிறது. நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு காரணமே, சாகும் வரையில் உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று மேற்கு கல்லறை பகுதியில் இருக்கிற அந்த குடியிருப்புகளில் இருப்பவர்கள் சொன்னார்கள். நான் உண்ணாவிரதம் வேண்டாம் என்று தடுத்தேன். நானே சட்டசபையிலே எழுப்புகிறேன். நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டாம்



1984 மார்ச் 8] [திரு ப. பொன்னுரங்கம் ]

என்று சொன்னேன். ஆகவே, அங்கே சரியான மெயின்டெனென்ஸ் இல்லை. கதவுகள் ஒரு பக்கம் முறுக்கிக்கொண்டு இருக்கின்றன. சரியான பாதுகாப்பு இல்லை. சுகாதார வசதி இல்லை. அதனால்தான் வாடகை கட்டுவதை நிறுத்தி வைத்தால் இதுவெல்லாம் செய்யப்படுமோ என்று இருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு பணம் வரவில்லை என்பதை நானும் அறிவேன். ஆகவே, அங்கே இருக்கிற மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், குடிநீர் வசதி செய்து கொடுக்கவும், சுகாதார வசதிகள் செய்து கொடுக்கவும், முறையான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியாகத் தான் கேட்க வேண்டும். மானியக் கோரிக்கையில் பேசுவது போல் பேசக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கிற அவருடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அங்கேயிருக்கின்ற மக்களின் எழுச்சியையும், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்ற அளவிற்குச் செல்கின்ற நிலைமையையும் கருத்தில் கொண்டு, அங்கே நிறைவேற்றப்பட வேண்டிய சில திட்டங்களுக்கான மதிப்பீடுகள் ரூ. 7,20,923 அளவிற்கு தயாரிக்கப்பட்டு, குடிசை மாற்று வாரியத்தால் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் மகிழ்ச்சி அடையத்தக்க அளவிற்கு அதற்கான நடவடிக்கைகள் இனி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. வரவு-செலவுத் திட்டம், 1984—85—பொது விவாதம்.

*திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அமைச்சரவையில் பணியாற்றும் மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர்களால் இந்த மாமன்றத்திலே 1984-85 ஆம் ஆண்டுக்காக வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கை வருவதற்கு ஒரு 4-5 தினங்களுக்கு முன்னால் நம்முடைய முதலமைச்சர் பேசியதாக நான் பத்திரிகையில் பார்த்தேன். புரட்சிகரமான திட்டங்களையும், புதுமையான செயல்களையும் கொண்டு பொலிவோடு வரப்போகிறது எங்களுடைய இந்த ஆண்டு பட்ஜெட் என்று பேசியிருந்தார். நாவலர் அவர்கள் இந்தப் பட்ஜெட்டைப் படிக்கின்ற நேரத்தில் கொஞ்சம் கூர்ந்து பார்த்தேன், கவனித்தேன். நானும் அதைப் படித்துப் பார்த்தேன். புதுமையான திட்டங்கள், புரட்சித்

திட்டங்கள், அடுக்கடுக்காக வரும். தொழிற்சாலைகள் வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இல்லை. இதிலே நான் திருப்பி திருப்பி படித்துப் பார்த்தேன். எனக்குத் தெரிந்த தெல்லாம், அவர்கள் இதிலே சுட்டிக் காட்டியிருப்பதெல்லாம் மத்திய மாநில உறவு முறை குறித்து ஒரு விளக்கம், சத்துணவு குறித்துப் புகழ் பாட ஒரு ஆற்றுப்படை, தன்னிறைவுத் திட்டம் குறித்து ஒரு அந்தாதி, வறட்சி பற்றி ஒரு புலம்பல், வெள்ளம் பற்றிய ஒரு அவலக் காட்சி, இலாக்காதோறும் பாடப்படும் வழக்கமான ஒரு பல்லவி இவைதான் இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதை வைத்து விட்டு நம்முடைய நாவலர் அவர்கள் புரட்சிகரமான திட்டம் என்று சொன்னால், இதிலே புரட்சிகரமான திட்டங்கள் வரும் என்று சொன்ன முதலமைச்சருக்கும் ஏமாற்றம், எதிர்பார்த்த எனக்கும் ஏமாற்றம், வாழ்வு சிறக்காதா, வராதா நல்ல திட்டம் என்று எதிர்பார்த்த நாட்டு மக்களுக்கும் ஏமாற்றம். ஆனால் ஒருவகையிலே எனக்கு மகிழ்ச்சி நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த போது முதன் முதலாக பார்த்தது நாவலர் அவர்களைத்தான். அவர் பேச்சை நான் விரும்பிக் கேட்டவன். என்னுடைய பேச்சில் கூட அந்த பாதிப்பு இருக்கும். பேச்சுத் துறையில் அவர்தான் எனக்குக் குருநாதர். எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று ரொம்பநாளாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். நமது நாவலர் அவர்கள் இந்த பட்ஜெட்டைத்தான் அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி பட்ஜெட்டாக வைக்கிறார் என்பதால் நிச்சியமாக பல்வேறு திட்டங்களைப் போட்டு (Whether financial resourc s are there or not) இருக்கின்ற திட்டத்தையெல்லாம் அறிவித்துவிட்டுப் போய்விடுவார்களோ வரப்போகிறவர்கள் தானே கஷ்டப்படப் போகிறார்கள் என்று நினைத்து அவற்றையெல்லாம் அறிவிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் அப்படி எல்லாம் செய்யவில்லை.

நாவலர் அவர்களைப் பொறுத்த வரையில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவது கிடையாது. சொன்னதைச் செய்வேன், சொன்னதைச் சொல்வேன், வேறொன்றும் தெரியாது, என்ற முறையிலே இதிலே என்ன செய்தார்கள் என்றால் முன்னாலே ஆளுநர் உ ரயிலே எதை ஆக்டிவ் வாய்சிலே சொன்னார்களோ அதை இவர் வரவு செலவுத்திட்டத்திலேபாசிவ் வாய்சிலே சென்டன்சை மாற்றிப் போட்டு சொல்லியிருக்கிறார். ஆனால் எனக்குத் தெரியும். நாவலர் மட்டும் என்ன செய்வார்? ஐந்தும் மூன்றும் சரியாக இருந்தால்தானே அறியாத பெண்ணும் சரியாக சமைக்க முடியும். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். நிதிநிலை சரியாக இருந்தால்தானே





திட்டம் தீட்ட தெம்பு இருக்கும். நிதி இல்லை என்றால் திட்டம் எப்படி வரும்? பற்றாக்குறை, 100 கோடி ரூபாய்க்கு ஓவர் டிராப்ட் இருக்கிறது. உடனே பிரணாப்முகர்ஜி எச்சரிக்கை விடுகிறார். நாவலரிடம் பத்திரிகைக்காரர்கள் கேள்வி கேட்கிறார்கள் என்ன என்று? நான் டெல்லி போவேன், விளக்கம் செய்வேன் என்கிறார் நாவலர். பிரணாப்முகர்ஜியை சந்திக்கிறார். எப்படியும் மார்ச் 30-ந் தேதிக்குள் கட்டிவிடுவோம்; அதற்குள் இப்படி பத்திரிகையில் போட்டுவிட்டீர்களே என்கிறார். அவரும் டெல்லி பாதுஷா பாணியில் பேச்சு நடத்துகிறார். முடித்துவிட்டு வருகிறார் சென்னைக்கு. இப்படியாக ஏற்கெனவே 100 கோடிக்கு துண்டு விழுந்துவிட்டது. இது எதைக் காட்டுகிறது? ,யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பார்களே, அதைப்போல பட்ஜெட்டுக்கு முன்னால் இந்த ஓவர் டிராப்ட் வருகிறது.

(முற்பகல் 10-50)

கணக்கைச் சரியாகப் பார்த்திருக்க வேண்டும். அவருக்கு இருக்கிற கவலை நமக்குத் தெரியாது. நம் வீட்டில் கூட நடப்பது நமக்குத் தெரியும். ரொம்ப கஷ்டமாக இருந்தால் பொங்கல், தீபாவளி கூட கொண்டாட மாட்டார்கள். ஓவர் டிராப்ட் வந்தது நாவலருக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஃபினான்ஸ் டிபார்ட்மென்ட் ஸ்டடியாக இல்லாமல் போய்விட்டது. அதனால் ஏதோ வழக்கமாகத் தயாரிப்பதுபோல ராமா, கோவிந்தா என்று தயாரித்திருக்கிறார்கள்.

அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு சிறந்த முறையில் செயல்படுகிற செயல்திறன் தெரியாது மட்டுமல்ல; ஃபினான்ஸ் குறித்த ஸ்டடிமைன்டும் கிடையாது என்பது என்னுடைய கருத்து. அதற்குக் காரணம் இந்த நிதிநிலை அறிக்கையில் சில குறிப்புகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ''சென்ற ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்துடன் கொடுக்கப்பட்ட 1982—83 திருத்த மதிப்பீட்டில் இறுதிப் பற்றாக்குறை ரூ. 89.02 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது''. 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இதைச் சொல்லி விட்டு அதற்குப் பின்னால் சொல்கிறார்கள். 'எனினும் 1982-83 ஆம் ஆண்டுக்குரிய இறுதிப் பற்றாக்குறை 4.04 கோடி ரூபாயாகவே அமைந்தது' என்று சொல்கிறார்கள்.

இது எதைக் காட்டுகிறது? பற்றாக்குறை எவ்வளவு இருக்கும் என்று எதிர்பார்த்தார்கள் என்றால் 89.02 கோடி அல்லது 90 கோடி. ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில் அதாவது திருத்த மதிப்பீட்டில் பற்றாக்குறை வந்தது 4.04 கோடிதான். எதிர்பார்த்தது 90 கோடி, ஆச்சுவலாக வந்தது 4 கோடி. இதற்குக் காரணம் உங்களுக்கு இந்த நாட்டின் பொருளாதார நிலைமை என்ன

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 8

என்பது தெரியாதுதான் என்று நான் கருதுகிறேன். ஃபினான்ஸ் மினிஸ்டருக்குத்தான் தெரியவில்லை; அவராவது பரவாயில்லை, அவர் இன்டர்மீடியட்டில்தான் கணக்கு படித்தார். ஆனால் இதே பிழைப்பாக இருக்கிற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்ன செய்தார்கள்? அண்ணா காலத்தில் ஆயிரம் கோடி, எங்கள் காலத்தில் 3,000 கோடி என்று முதலமைச்சர் இந்த நாட்டின் வருமானத்தைச் சொல்லும்போது அவருக்குத் தக்கபடியே அதிகாரிகளும் நடந்துகொண்டிருப்பார்கள்.

ஏதோ 10 கோடி, 20 கோடி வித்தியாசம் வரலாம். 90 கோடி எதிர்பார்த்து 4 கோடிதான் வருகிறது என்றால் இவ்வளவு மோசமான ஒரு பட்ஜெட்டை இந்தியத் துணைக்கண்டத்திலே வேறு எங்காவது தயாரித்திருக்கிறார்களா ? ஃபினான்சியல் பொசிஷன் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அதைப்பற்றி ஃபினான்ஸ் டிபார்ட்மென்டுக்கு ஒன்றும் தெரியாது என்பதைத்தான் இது காட்டுகிறது. சரி, அந்த ஆண்டு போய் விட்டது. இந்த ஆண்டின் நிலைமை என்ன ?

1983–84 ஆம் ஆண்டில் அதாவது நடப்பாண்டில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்றால் 129.31 கோடி ரூபாய். ஆனால் இது ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில், அதாவது திருத்த மதிப்பீட்டு இறுதியில் 3 கோடி என்று சொல்வார்கள். தவறு. அவர்கள் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் இருக்கமாட்டார்கள். 'No Chance at all'.

1984–85 ஆம் ஆண்டின் இறுதியில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்றால் 167.50 கோடி ரூபாய். இது எதிர்பார்ப்பு. ஆனால் ஆக்சுவல் என்ன என்பதை அவர்கள் அறிவிக்க முடியாது. அப்புறம் நாங்கள் வந்துதான் அறிவிப்போம். 167 கோடி இல்லை: 2 கோடி தான் என்று அறிவிப்போம்.

இங்கே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வந்து அமர்ந்திருக்கிறார்கள். அவர் இதில் கொஞ்சம் கெட்டிக்காரர். தன்னுடைய கணக்கை சரியாக வைத்துக்கொண்டார். யார் இலைக்கு சோறு இருக்கிறதோ இல்லையோ என்னுடைய இலைக்கு சோறு வேண்டும் என்று கேட்டு பெற்றுக்கொண்டார். பக்கத்து இலைக்கு சோறு இருக்கிறதா இல்லையா என்பது பற்றி அவருக்குக் கவலையில்லை.

இப்படி எதிர்பார்ப்புக்கும் நடப்புக்கும் இருக்கிற பெருத்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் என்றால் முதலாவதாக, வருகிற வரவை குறைத்து மதிப்பிட்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, செலவு செய்திருக்கிற தொகையை அதிகமாக மதிப்பிட்டிருக்க வேண்டும். இந்த இரண்டும் இருந்தால்தான் இந்த கோளாறு வந்திருக்கும். மூன்றாவதாக, ஏன் அப்படி வருகிற



1984 மார்ச் 8] [திரு. துரைமுருகன்]

வருவாயை குறைத்து, செலவினத்தை அதிகமாகக் காட்டுகிறார்கள் என்றால் இவ்வளவு துண்டு விழுகிறது. நாட்டு மக்களேவரி போடலாம் என்று சொல்கிற நிலைக்கு வரவேண்டும், இது மூன்றாவது காரணம். இந்த மூன்று காரணங்கள் இல்லையென்றால், நான்காவது காரணம்—அவர்களுக்கு எக்கனாமிக்ஸ் புரியவில்லை. ஏதோ ஒரு குத்து மதிப்பாக போட்டார் என்று இருக்கவேண்டும். ஆக நான்கு காரணங்களில் செய்திருக்கிறார்கள்.

இது ஒரு ரூ. 147 கோடி பற்றாக்குறை பட்ஜெட். பட்ஜெட் என்றால் என்ன? வரவு எவ்வளவு? செலவு எவ்வளவு? இரண்டும் முடித்து போய் விட்டது என்பதா?

நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்திலே ஒருவர் திரு பால்கிவாலா ஒரு புத்தகத்தில் பட்ஜெட்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

The name of book is "We, the People" A budget should should be moulded by the needs of a nation containing within it the seeds of economic growth. But unfortunately our budget is the prisoner.

இன்னும் அவரே சொல்லியிருக்கிறார்.

Every budget has legal effect for only one year but its economic consequences endure for years. A nation continuously moulds and shapes its future as it lives through the present and meanders from one budget to another.

என்று அவரே தெரிவித்திருக்கிறார். ஒரு பட்ஜெட்டையும் இன்னொரு பட்ஜெட்டையும் தொடர்பு படுத்தக் கூடிய (Shape) இருக்கிறதா என்றால் கிடையாது, அப்படி இந்த ஆட்சியிலே இவ்வளவு கணக்கு வரவு இவ்வளவு, செலவு இவ்வளவு, மிச்சம் இவ்வளவு என்று கணக்கு இருக்கிறதா? ஒரு கடைக்காரப் பையனிடம் ஒரு பத்து ரூபாயைக் கொடுத்தால், மூன்று ரூபாய்க்கு சோப் ஐந்து ரூபாய்க்கு தேங்காய் எண்ணெய், மிச்சம் இரண்டு ரூபாய் என்று , கணக்கு காட்டுவான்.

'As a Finance Minister எப்படி இருக்கவேண்டுமென்றால், ரெவின்யூ எக்ஸ்பெண்டிச்சர் இவ்வளவு கேப்பிடல் எக்ஸ்பெண்டிச்சர் இவ்வளவு, சென்ட்ரல் கவர்ன்மெண்டு எய்டு இவ்வளவு, மிச்சம் இவ்வளவு, துண்டு என்றும், இந்த 147 கோடி ரூபாயை எப்படி சரி கட்டப் போகிறோம் என்றும் சொல்லியிருக்கவேண்டும்.

நிதியாதாரத்தை உயர்த்துகின்ற திறமை படைத்தவராக,
நுண்மான் நுழை புலம் மிக்கவராக, கூர்ந்து நோக்குகின்ற
அறிவுடையவராக பொருளாதாரப் புலியாக இருந்தால் தான்
அவர்கள் பைனான்ஸ்ஷியல் ஸ்டேட்மெண்ட்டை வைக்கமுடியும்.
ஆனால் நம்முடைய நாவலர் அவர்களைக் கேட்டால், அந்தக்
கதையெல்லாம் எதற்கு? என்னைக் கேட்டா செய்கிறார்கள்
என்று சொல்வார். மதுரையிலே ஒரு திட்டம், மானாமதுரை
யிலே ஒரு திட்டம் என்று முதல்வர் அறிவிப்பார். நானும்,
பைனான்ஸ் செகரட்டரியும் அடித்துக்கொள்ளவேண்டியிருக்
கிறது, என்று புலம்புவாரோ என்னவோ எனக்குத் தெரியாது.
அவர் சொன்னால் சொன்னது தான். முடியும் என்றால் முடியும்,
முடியாது என்றால் முடியாது தான். அவர் அந்தக் காலத்தி
லிருந்து அது மாதிரி தான். பத்து ரூபாய் இருந்தால் 7 ரூபாய்க்கு
மிகவும் முக்கியமாகச் செலவு பண்ணுவார். அவ்வளவு சிக்கனம்.
அப்படி இருக்கும்பொழுது ரூ. 147 கோடியை என்ன பண்ணுவார்?
அதற்குக் காரணம் சொல்கிறார். நான் தான் சொல்லியிருக்
கிறேனே துரைமுருகன். எப்படி மேக்-அப் பண்ண போகிறேன்
என்றால், இந்தப் பொருளாதாரத்தின் பல்வேறு வளர்ச்சித்
துறைகளில் எதிர்பார்க்கப்படுகிற மேம்பாடும்....' I can't
அண்டர்ஸ்டேண்ட்' (குறுக்கீடு).... திட்டம் சாராச் செல
வினங்களில் கண்டிப்பான சிக்கன முறைகளைக் கடைப்
பிடிப்பதன் மூலம் கிடைக்கக் கூடிய சேமிப்பும் இப்பற்றாக்
குறையைச் சரிக்கட்டும். அதற்குமேல் மத்திய அரசு உதவியை
எதிர்பார்க்கிறோம்.

இன்னொன்றையும் சொல்கிறார். முயற்சி பண்ணிவிட்டேன்.
அதற்கு மேலே ஆண்டவன் விட்ட வழி என்று
சொல்வார்களே, அந்த மாதிரி அவர் சொல்கிறார். பெரியவர்கள்
ளாதார மேம்பாட்டில் சிக்கனமாக இருந்து பார்க்கிறேன். பொரு
முடியவில்லை. அவன் விட்ட வழி என்று சொல்கிறார்.

(முற்பகல் 11-00)

இந்திய அரசு நன்கு புரிந்து கொண்டு நமக்குப் பெருமளவுக்கு
உதவி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்—போட்டாரே
பாரத்தை பகவான் மேலே. என்ன நிலைமை என்று கேளுங்கள்,
இந்தப் பொருளாதார நிலைமை நமக்கு எப்படி இருக்கிறது
என்று கேளுங்கள். அவர்கள் எல்லாம் எங்கெங்கோ போய்
விட்டு வருகிறார்கள். பைனான்ஸ் மினிஸ்டரை மீட் பண்ணு
கிறார்கள். தமிழகத்திலே பொருளாதார மேம்பாடு எப்படி
யிருக்கிறது, அதிலே நமக்கு இன்கம் வருமா? இந்து பத்திரிகை
தலையங்கம் பேசி இருக்கிறது—ஜனவரி 25-ஆம் தேதி
டெல்லி சென்ற விஜயத்தைப் போட்டிருக்கிறார்கள்.





Official overviews of the economic scene in Tamil Nadu do not hold any great cheer.

என்று சொல்லி முடித்துவிட்டார்கள். பிறகு என்ன சொல்கிறார்கள்? நம்முடைய பொருளாதார நிலைமை என்ன?

According to a National Sample Survey Estimate 57.2 per cent of the population (as against the national average of 48.13 per cent) is below the poverty line.

பொருளாதார மேம்பாடு இரண்டு ஆச்சுங்களா? அடுத்துச் சொல்கிறார்கள்.

Decentralisation of industry through the organisation of district industries centres (DICs) has not also progressed fast enough to assure a speeding up of industrialisation in the interior. Critics have made pointed reference to the fact a State Level Committee which was set up in 1978 to supervise monitor and review the functioning of DICs. did not meet even once till October 1982.

முடிந்துவிட்டதா? ஆகவே இன்டஸ்ட்ரியும் இல்லை. எக்கானமிக்ஸ்ம் இல்லை. பெர் கேப்பிட்டா இன்கம் இல்லை. எக்கனாமிக்ஸ் ஸ்கீம் இல்லை. எதுவும் இல்லை. சரி, இந்த மின்சார நிலைமைதான் என்ன? எப்போது கேட்டாலும் பவர் கட். எல்லாப் பத்திரிகைகளிலும் எழுதுகிறபோது. நீங்கள் முயற்சி பண்ணவேண்டும் என்றுதான் எழுதியிருக்கிறார்கள். தினமணிப் பத்திரிகை என்ன எழுதுகிறது? ''விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளுக்கு ரூ. 153.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் உணவு தானியங்களின் விளைச்சல் கணிசமாகக் குறைந்துவிட்டது. இதற்கான காரணங்களைக் கண்டறியவேண்டும்.'' யார்? சிவராம ஐயர்

அதுமட்டுமல்ல. இன்னும் சொல்கிறார்கள். அரசாங்கததின் செலவில் சிக்கனம் கையாளப்படவேண்டும். நாவலரும் சொல்லியிருக்கிற்றார்கள். அவரும் சொல்லியிருக்கிறார். அரசாங்கத்தின் செலவில் சிக்கனம் கையாளப்படவேண்டும். அவரைப் பார்த்துத் தான் இவர் எழுதினாரோ? இந்த விஷயத்தில் போதுமான கவனம் செலுத்துவது அவசியமாகும். சொல்லிவிட்டால் மட்டும் போதாது. யு மஸ்ட் கான்சன்ட்ரேட். கான்சன்ட்ரேட் பண்ணவேண்டும். அதற்குத்தான் அநாவசியமான பயனற்ற திட்டங்களைக் கைவிடவேண்டும். அப்படி என்றால் நிறைய இருக்கிறது என்பது தெரிகிறது அரசாங்கத்திலே. மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்காக தேவையான

நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இந்த விஷயத்தில் தொழில் முனைவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அளிக்க வேண்டும். ஆக தொழிற்காரியங்களை இனிசியேட் செய்ய வேண்டும். ஆனால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வில்லை. தொழில் முனைவர்களுக்கு சலுகை அளிக்கவேண்டும் என்று சொன்னால், நீங்கள் மறுக்கிறீர்கள் என்று தான் அதற்கு அர்த்தம். இன்-டைரக்டாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, தொழில்களுக்கு வேண்டிய மின்சார வசதி தங்கு தடையின்றி அளிக்கவேண்டும். ஆக பொருளா தாரத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான மேம்பாடும் உங்களுக்குக் கிடைக்காது. ஆகையினாலே டெல்லியைப் பொறுத்த வரையில் என்ன நிலைமை? அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்த வருஷம் பிளான்னிங்கிற்கு ஒதுக்குவதற்கே 800 கோடி சொச்சம் தான் வரும். இருந்தாலும் பைனான்சியல் ரிசோர்சை நீங்கள் தான் மீட்பண்ணுவீர்கள் என்று நினைக்கிறோம். அப்படி என்றால் கிடையாது என்று அர்த்தம். பிறகு எப்படி டெல்லி கொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இதிலே சொல்லியிருக்கிறார்கள். வெள்ளாத்தால் பாதிக்கப் பட்டதற்கு 128 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். டெல்லியை நம்புவோமாக என்று எல்லாம் நாவலர் அவர்கள் சொல் கிறார்கள். டெல்லியை நம்பினால் என்ன ஆகும் என்று பாருங் கள். 128 கோடி ரூபாய் இவர்கள் கேட்டார்கள். அவர்கள் என்ன செய்தார்கள் என்றால், 5 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். உடனடியாக ரூபாய் 5 கோடி. வழங்கியதற்கும், வெள்ள நிலையை நேரில் கண்டறிந்து பாதிப்பை மதிப்பிட்டு மத்திய அரசு அளிக்க வேண்டிய நிதி உதவியை முடிவு செய்ய மத்திய குழு ஒன்றை அனுப்பியதற்கும் இந்திய பிரதமருக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்''. கேட்டது 128 கோடி போட்டதோ 5 கோடி. ஆனால் எழுதுவதோ, பிரதமர் இந்திரா காந்திக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். 5 கோடிக்கே இந்தத் துதிப் பாடல் என்றால் 128 கோடி கேட்டு, அவர்கள் 120 கோடி கொடுத்திருந்தால், பிறகு காஞ்சி காமாட்சி அம்மனுக்கு விருத் தம் பாடுவதுபோல் ஒரு விருத்தமே பாடி முடித்து இருப்பீர்கள். ஆகையினாலே, நீங்கள் டெல்லியை எதிர்பார்ப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை. சரி வேறு என்ன செய்வீர்கள்? சிக்கன நடவடிக்கை என்று சொல்கிறீர்கள். ஆனால் சிக்கனம் ஒன்றும் கிடையாது. சிறுகச் சிறுகச் செய்வதுதான் சிக்கனம். ஆனால் கொறடாவிற்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் பயணப்படி, அவர்களுக்கு தனியாக செக்ரட்டரி, இப்படிக் கொடுக்கிறீர்களே.





பிறகு எல்லா மந்திரிகளும் இன்றைக்கு ஏ.சி. யிலேதான் போகிறார்கள். நமது நாவலர் அவர்கள் டி.எம்.கே. ஆட்சி யிலேயும் இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். அப்போ தெல்லாம் ஏ.சி என்றால் தொட்டுப்பார்த்துவிட்டுத்தான் போவார்கள். ஆனால் இப்போது பாருங்கள். பல மந்திரிகள் அட்ரசே போடலாம். சோ அன்ட் சோ, கேர் ஆஃப் பாண்டியன் எக்ஸ்பிரஸ் அது பாட்டுக்குப் போகும், வரும். அப்படிப்பட்ட நிலைமையில் ஓடிக்கொண்டு இருக்கிறது. ஆகவே பொரு ளாதார மேம்பாடு என்று சொல்வது சரியல்ல. சிக்கன நட வடிக்கை என்று சொல்வது சரியல்ல. டெல்லியை எதிர்பார்ப்பது சரியில்லை. ஆகவே நாவலர் மொழியிலே சொல்லவேண்டும் என்றால், ''முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி, அதிலே 2 குளம் பாழ், ஒன்னுலே தண்ணீயே இல்லை' என்பதைப் போல, 3 வழி சொன்னீர்கள், மூன்றிலே 2 வழி தப்பு, 1 வழி சரியில்லை'' என்றுதான் நான் அவருக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து என்ன சொல்கிறார்கள்? பிளானிங். அது ஒரு நீண்டகாலத் திட்டம், முன்னோக்கியிருக்கிற பிரச்சனை. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், ''மத்தியத் திட்டக் குழு முடிவு செய்த நிதி ஒதுக்கத்திற்கும் மேல் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில், தமிழ்நாடு அரசு தனது பெருமைக்குரிய நிலை யைக் காத்து வந்துள்ளது''. இதிலே மட்டும் குறைச்சல் இல்லை. ராஜா வருகிறார் என்று சொன்னால், ''ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட'' என்று சொல்லத்தான் வேண்டும். அதைப்போல இருக்கிறது. நாம் எல்லா கூட்டத்திலே பேசின அனுபவம் உள்ளவர்கள். என்னுடைய ஆருயிர் அண்ணன் என்று சொல்லிவிட்டு பெயரைச் சொல்லாவிட்டால் கோபித்துக்கொள்வார்கள். அந்த மாதிரி நாவலர் அதே பாணியில் எழுதுகிறார்.

''மத்திய திட்டக்குழு முடிவு செய்த நிதி ஒதுக்கத்திற்கும் மேல் தன் திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதில், தமிழ் நாடு அரசு தனது பெருமைக்குரிய நிலையைக் காத்து வந்துள்ளது.'' என்று தாம் தரிகிடதோம் தை போட்டிருக்கிறார். கிராமங்களிலே கூத்திலே அடிக்கிற மாதிரி அடித்துவிட்டார்.

அடுத்து சொல்கிறார்கள் பாருங்கள். '1983-84 ஆம் ஆண்டு மத்திய திட்டக் குழு ரூ. 845 கோடிக்கு அனுமதியளித்தது.' இது பட்ஜெட்டிலே நீங்கள் படித்தது. பைனான்சிஷல் ஸ்டேட் மெண்ட் இந்த அசெம்பிளியிலே கொடுத்திருக்கிறீர்களே அதிலே என்ன சொல்கிறீர்கள்? 1983-84 பட்ஜெட் எஸ்டிமேட்டிலே 893 கோடி என்று போட்டிருக்கிறீர்கள். நான் நாவலர் அவர் களைக் கேட்கிறேன். 1983-84 ஆம் ஆண்டு மத்திய திட்டக் குழு நமக்கு அளித்தது 845 கோடி ரூபாய் என்று சொல்லி அதிலே பிரிண்ட் பண்ணியிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள்

கொடுத்த புள்ளி விவரத்திலே 893 கோடி ரூபாய் என்று கொடுக்
கிறீர்கள், அடுத்து அதிலேயே திருத்த மதிப்பீட்டில் 861.8
கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்தப் புள்ளி
விவரம் இதற்கு கரெக்டாக வருகிறது. ஆனால் நான் கேட்
கிறேன், இது கரெக்டா, அது கரெக்டா? நாவலர் கேட்கலாம்,
உன்னை பட்ஜெட் வரையில்தானே படிக்கச் சொன்னேன்,
இதையெல்லாம் யார் ஐயா உன்னைப் படிக்கச் சொன்னது
என்று .... (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிட வேண்டாம்
என்றுதான் கருதினேன். ஏனென்றால் இறுதியிலே எல்லா
வற்றிற்கும் சேர்த்து பதில் சொல்லலாம் என்றுதான் இருந்
தேன். இருந்தாலும் இந்த ஐயப்பாட்டை இப்போதே போக்கி
விடுவது நல்லது என்று சொல்கிறேன். சென்ற ஆண்டு
1983-84-க்கான பட்ஜெட் போடும்போது 845 கோடிக்கு
அவர்கள் அனுமதி அளித்தாலும், நம்முடைய மாநிலத்தினுடைய
நிதி ஆதாரங்களையும், மற்றவைகளையும் வைத்துக் கொண்டு,
893 கோடி அளவுக்கு போக முடியும் என்று நாம் சொன்னோம்.
ஆனால் எதிர் பாராத வகையில் ஏற்பட்ட வறட்சி மற்ற
காரணங்களின் காரணமாக, கடைசியில் அது 861.8 கோடி
ரூபாய் அளவுக்கு வந்தது.

அவர்கள் 845 கோடி ரூபாய்க்கு அனுமதித்து இருந்தாலும்,
நாம் திட்டம் போட்டது 893 கோடிக்கு. அந்த அளவுக்கு
போக முடியும் என்று நினைத்ததில், அது கடைசியில் 861
கோடி ரூபாய்க்குத்தான் வந்திருக்கிறது என்கிற திட்டவட்ட
மான, கரெக்டான புள்ளி விவரங்களைத்தான் தந்திருக்கிறார்
களே தவிர, இதிலே ஒன்றும் மாறுபாடு இல்லை.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்த விளக்கத்தையும் ஒரு வரி சேர்த்
திருந்தால், நானும் சரி என்று சொல்லியிருப்பேன். நான்
நாவலர் அவர்களிடம் இந்த ஐயப்பாட்டிற்கு விளக்கம் கேட்
பதற்காகத்தான் கேட்டேன்.

ஆகையினால், இந்த திட்டங்களைப் பொறுத்த வரையில்,
என்ன நிலைமை, நாம் என்ன செய்திருக்கிறோம் என்று பார்த்
தால், திட்டச் செலவுகளைப் பொறுத்த வரையில், பிளேனிங்
பெர்ஃபார்மென்ஸ் ஏற்கெனவே எப்படி இருக்கிறது என்று கேட்
டால், அதைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.
கேட்டால், இந்த வருஷம் கூட நாம் நிறைய சேர்த்திருக்கிறோம்,
980 கோடி, 970 கோடி என்று அந்த திட்டக் கமிஷனிலே
சேர்த்திருக்கிறோம், அதற்கு மேலேயே செலவு செய்யப்போகி
றோம் என்று சொல்வார்கள். ஆனால், பிளேனிங் பெர்ஃ
பாமென்ஸ்ஸை எப்படிச் செய்கிறார்கள் என்று பார்த்தால், சில





பசங்களுக்கு தட்டில் இட்டிலியோ போண்டாவோ வைத்தால்,
ஒன்றிரண்டு வைப்போம், இல்லை இல்லை எனக்கு இன்னும்
வேண்டும் என்று கேட்பான். வேண்டாம்டா கண்ணா,
இதை சாப்பிட்ட பிறகு போடுகிறேன் என்று சொன்னால்,
கேட்க மாட்டார்கள். இல்லை இல்லை எனக்கு வேண்டும்
என்று சொல்லி, அடம் பிடித்து 4 வைத்துக் கொண்டு, அதையும்
மிச்சப்படுத்தி, இதையும் மிச்சப் படுத்தி, தூக்கி எறிவார்கள்;
அதற்குத்தான் வீட்டிலே சொல்வார்கள் உனக்குக் கண் பெரிசு,
வயிறு சின்னது என்று.

அந்த மாதிரி இங்கே எப்படி நடக்கிறது என்று பார்த்தால்
எங்களுக்கு 921 கோடிபோதாது 981 கோடிவேண்டும் என்று சொல்
வார்கள். இவ்வளவு வாங்கிக் கொண்டு வந்தவர்களே வருக
வருக என்று நாமும் சொல்வோம், பாராட்டுவோம். ஆனால் அதிலே
எவ்வளவு தூரம் யுடிலைஸ் பண்ணியிருக்கிறார்கள் என்று
பார்த்தால், இங்கேயே சென்டிரலினுடைய ஆடிட் ஜெனரல்
ரிப்போட்டிலேயே சொல்லப்பட்டிருக்கிறது — 1980-81லே

Plan performance—Against the total Provision of Rs. 245.00. crores under Revenue and Rs. 88·57 crores under Capital for Plan schemes during 1980–81, expenditure of Rs. 192·49 crores and Rs. 71·88 crores respectively was incurred. The shortfall was 21·4 Per cent under revenue and 18.8 per cent under Capital. The shortfall in the revenue expenditure was mainly under Roads and Bridges (Rs. 8·39 crores), Public Health Sanitation and Water Supply (Rs) 82.8 crores), Agriculture (Rs. 7 crores) Community Development (Rs. 5·75 crores), Education (Rs. 3·66 crores), Village and Small Industries (Rs. 2·75 crores), Urban Development (Rs. 1·60 crores) and Family Welfare (Rs·1·42 crores).

இப்படி ஷார்ட் ஃபால் ஆகவே விடப்பட்டிருக்கிறது. செலவு
செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது. பிளேனிங்கிற்காக
ஒதுக்கிய பணத்தை செலவு செய்யவில்லை என்றால் என்ன
ஆகும். அது திரும்பிப் போய்விடும். மாமியார் வீட்டிலேயிருந்து
கொண்டுவந்த மனைவி மாதிரி அது. சரியாக போஷிக்க வில்லை
என்றால் என் அம்மா வீட்டுக்குப் போகிறேன் என்று திரும்பிப்
போய் விடும்.

அதைப்போல பிளேனிங்கிலே கொண்டு வந்தீர்கள். கொண்டு
வந்ததை சரியாக செலவு செய்யவில்லையே, ஏற்கெனவே ஒரு
முறை இப்படி நடந்திருக்கிறது. அப்போது நம்முடைய நாவலர்
அவர்கள் நிதியமைச்சராக இல்லை. அப்போது 120 கோடி
ரூபாய்க்கு மேலே இந்த மாநிலத்திற்கு ரோடு போடுவதற்காக
வந்து, அவையெல்லாம் அப்படியே திரும்பிப் போன கதை

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 8

இந்த நாடு அறியும். ஆகவே, நாம் எவ்வளவு கேட்டு வாங்கு
கிறோம் என்பது மட்டும் முக்கியம் அல்ல, அதை நாம்
எப்படி செலவு சொய்கிறோம் என்பதுதான் முக்கியம்.
வாங்கப்பட்ட அத்தனை காசுகளும் சரியாக சேர்ந்திருக்கிறதா
என்றும் பார்க்க வேண்டும்.

பணத்தை ஒதுக்குவது மட்டும் பெரிதல்ல. டிபார்ட்
மெண்ட்களுக்கு இத்தனை கோடி ரூபாய், அதாவது
பி.டபிள்யு.டி.க்கு இத்தனை கோடி ரூபாய்; எஜூ
கேஷனுக்கு இத்தனை கோடி ரூபாய்; பேமிலி பிளானிங்கிற்கு
இத்தனை கோடி ரூபாய் என்று ஒதுக்குகிறோம். நாம் இங்கே
கஷ்டப்பட்டுப் பேசி, முடியாது என்றெல்லாம் சொல்லி, நாவலர்
அவர்கள் கடன் வாங்கி, ஓடி வாங்கிக் கொடுக்கிறார். யாருக்குப்
பணம் போகிறது? டிபார்ட்மெண்டிற்குப் போகிறது. டிபார்ட்
மெண்டிலே ஒழுங்காகச் செலவழிக்கிறார்களா என்றால்
இல்லை,. இன்றைக்கு அதற்குக் கணக்குக் கொடுக்கவேண்டு
மல்லவா? யாருக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும்?
ஆடிட்டர் ஜெனரலுக்குக் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 11-00)

The following are some of the major reasons for which audit observations have remained outstanding.—due to non submission of payees receipts.

அதாவது ரசீது இல்லாமல் கொடுத்த பணம். எவ்வளவு பணம்?
53 கோடியே 54 லட்ச ரூபாய் ரசீது கொடுக்காமல் இருக்கிறது.
புட் அன்ட் கோவாப்ரேஷன் ரசீது கொடுக்காமல் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு கணக்கையும் பார்த்தால்
1978-79 இல் நம்பர் ஆப் அயிட்டம்ஸ் 10 ஆயிரம். எவ்வளவு
கொடுக்க வேண்டும். 23 கோடியே 32 லட்சம். 1979-80 இல்
எவ்வளவு? 56 கோடியே 87 லட்சம். 1980-81 இல் 61
கோடியே 85 லட்சம். இவ்வளவு பணங்களுக்கு நாம் ரசீது
கொடுக்கவில்லை. கேட்டால் ரிப்ளை எங்களுக்கு வரவில்லை
என்று சொல்கிறார்கள். கொடுத்த பணம். கொடுக்கப்பட்டதா
என்றால் கொடுக்கப்பட்டது. நான் இவருக்குப் பணம் கொடுக்
கிறேன் என்றால் துரைமுருகனிடத்திலிருந்து இவ்வளவு பணம்
வாங்கி வைத்துக்கொண்டேன் என்று ரசீது அவர் கொடுக்க
வேண்டும். அப்படி ரசீது வாங்காமல் கிட்டத்தட்ட இவ்வளவு
கோடி ரூபாய் கொண்டுபோய் கொடுத்திருக்கிறீர்களே.
பணத்தை ஒதுக்குவது மட்டுமல்ல, ஒதுக்கப்பட்ட பணம் உரிய
முறையிலே செலவழிக்கப்படுகிறதா என்றால் அதுவும் கிடையாது.
காரணம் நீங்கள் அவர்களைக் கேட்பதில்லை. இந்த மாநிலத்
திலே சரியாக பைனான்ஷியல் நிலை இருப்பது இல்லை.



1984 மார்ச் 8] [திரு. துரைமுருகன்]

இந்த பட்ஜெட்டிலே வேறு என்ன இருக்கிறது என்று நான்
புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். நம்முடைய நிதியமைச்சர்
அவர்கள் பல இடங்களிலே ஒரு இடம் அல்ல, முதலிலே இரண்டு
பக்கங்கள் பிறகு நடுவிலே இரண்டு, பிறகு 3 என்று சொல்லி
யிருக்கிறார்கள், கதாகாலக்ஷேபம் செய்கிறவர் இடையிலே தூங்கு
கிறவர்களுக்காக நமச்சிவாய பார்வதிபதே விடுவார். அந்த
மாதிரி நம்முடைய நாவலர் படித்துக்கொண்டு வருகிறார். முதல்
ஒரு 5 நிமிடம் சத்துணவுத் திட்டம்பற்றி இடையிலே திட்டச்
செலவுகள் பற்றி 10 நிமிடம் பிறகு ஹைஸ்கூல் பிள்ளைகள்
10 வயதிலிருந்து 15 வயது வரையில் உண்டு என்று சொல்கிறார்.
ஆக இப்படி 3 இடங்களிலே சத்துணவுப்பற்றிப் பேசுகிறார்,
ஆல். ரைட், வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. சோறு
போடுவான் என்றால் யர்ரும் வேண்டாமென்று சொல்வார்களா?
கொடுக்கிறான் என்றால் ஆகா. அடிக்கிறான் என்றால் பயம்.
அதை நாங்கள் மறுக்கவில்லை. சத்துணவா இல்லையா அது
வேறு, பட்டிமன்றம் நடத்த வேண்டிய விவகாரம். அதற்கும்
நான் போகவில்லை. கேட்டால் நாவலர் சொல்வார் 45
பைசா ஐயா. அதைச் செய்கிற ஆயாவிற்கு 5 பைசா ஐயா.
ஆகவே 50 பைசாவிலே சோறு போடவேண்டும், இதற்கு மேலே
என்ன செய்யமுடியும் என்று கேட்பார். நான் அதற்குள்ளே
போகவிரும்பவில்லை. ஆனால் இதற்கு எவ்வளவு செலவாகிறது?
என்ன சொல்கிறீர்கள்?

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.
All right, welcome ஆனால் இந்தத் திட்டத்திற்கு
எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க
வேண்டாமா? நீங்கள் ஒதுக்குகிறீர்கள். பி. டபிள்யு.
டி.-க்கு இவ்வளவு, போலீஸுக்கு இவ்வளவு; சட்டத் துறைக்கு
இவ்வளவு, விவசாயத்திற்கு இவ்வளவு என்று ஒதுக்குகிறீர்கள்.
ஆனால் இதுவரையில் சத்துணவுத் திட்டத்திற்கு என்று இந்த
பட்ஜெட்டில் எங்கே பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள்? சத்து
ணவுக்கு இவ்வளவு கோடி பணம் என்று எங்காவது ஒதுக்கி
இருக்கிறீர்களா? நல்ல காலம் நம்முடைய ஸ்பீக்கர் 2 நாட்க
ளாக இங்கே பில்லின்மீது விவாதம் வைத்த காரணத்தினால்
நான் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், 1971-லிருந்து எம். எல். ஏ.
வாக இருக்கிறேன். ஆளுங்கட்சியிலே இருந்தால் அதிகமாகப்
பார்க்கமாட்டோம். மந்திரி பதில் சொல்லிக்கொள்வார் என்று
போய்விடுவோம். இப்போது அந்த வேலை. நானும் என்
னால் முடிந்த அளவுக்குப் படித்துப் பார்த்தேன். முடிந்த அள
வுக்குக் கண்டு பிடித்தேன். அதிலேயும் நம்முடைய நாவலர்
சொல்கிறார். திட்டம் சாரா வளர்ச்சித் திட்டங்கள் என்று
சத்துணவுக்கே ஒரு டைட்டில் கொடுத்தார். திட்டம் சாரா
வளர்ச்சித் திட்டங்கள் ஆங்கிலத்திலே வேறு இருக்கிறது. அது
டிரான்ஸ்லேஷன் டிபார்ட்மென்ட், நான் அதற்குள்ளே போக
வில்லை—இந்தத் திட்டத்திற்கு எங்கே பணம் ஒதுக்கியிருக்
கிறீர்கள்? உங்கள் லட்சியம், காலந்தோறும் சத்துணவு
போட்டது அண்ணா தி.மு.க., சத்துணவு போட்ட முதல்வர் என்று

சொல்கிறீர்கள். All righ, நான் அதை மறுக்கவில்லை. ஆனால் அதற்கு இங்கே பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா ? இல்லை. ஏன் நீங்கள் சொல்லவில்லை. கைம்பெண் அதாவது விதவை ஒருத்தி குழந்தையைப் பெற்றால் எப்படி மறைப்பாளோ அப்படி இதை மறைத்து காட்டி இருக்கிறீர்களே ? ஏன் ? நான் தேடித் தேடிப் பார்த்தேன் கிடைக்கவில்லை.

இதிலே இன்னும் ஒன்றை நீங்கள் பார்க்க வேண்டும் சார். எங்கே கொண்டு போய் சேர்த்து இருக்கிறார்கள் இந்தப் பணத்தை. இது நான்-பிளானிங். இது பிளானிங்கில் வராது. இதைத் திட்டம் சாரா செலவு என்று சொல்கிறீர்கள். அப்போது நான்-பிளானிங்கில் இருப்பதை பிளானிங்கில் சேர்க்கலாமா ? பிளானிங்கில் கொண்டு போய் சேர்க்க முடியாதே ? நாவலர் அவர்களை பத்திரிகைக்காரர்கள் ஏன் இதை பிளானிங்கில் சேர்க்கக் கூடாது என்று போன வருடம் கேட்டார்கள். நானும் இந்தச் சபையில் பேசும்போது சொன்னேன். அப்போது நாவலர் இதைக் கொண்டுபோய் அதில் சேர்த்து விட்டால் மற்ற இம்ப்ருவ்மெண்டுக்குப் பணம் குறைந்து போய் விடும். ஆகவே அதில் காட்டக்கூடாது. இதை நாம் தனியாக மேனேஜ் செய்து கொள்ளலாம் என்று பதில் சொன்னார். இப்போது பிரஸ்காரர்கள் 7-வது பைனான்ஸ் கமிஷனைப் பார்த்துவிட்டு வந்தபோது கேட்கிறார்கள் அப்போது நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் நான் எப்படியும் இதைத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வற்புறுத்துவேன் என்று. அதிலே அவர்கள் ஏதோ சில திட்டங்களை எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் போல் இருக்கிறது. இருந்தாலும் அவர்களை நான் வற்புறுத்துவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால் இதைத் திட்டத்திலே சேர்ப்பதற்குத் திட்டக்குழு அனுமதி அளிக்கவில்லை. பிளானிங் வேறு, நான்-பிளானிங் வேறு. ஆனால் நான்-பிளானிங்கில் இருப்பதைக் கொண்டுபோய் எவ்வளவு சேர்த்து இருக்கிறார்கள் தெரியுமா ? 46 கோடி ரூபாய் தைரியமாக அதில் கொண்டுபோய் சேர்த்து இருக்கிறார்கள். எதுக்கு இருக்கிறதோ இல்லையோ அணை கட்டுகிறோமோ இல்லையோ ஆற்றில் கரை கட்டுகிறோமோ இல்லையோ இதில் கொண்டுபோய் சேர்த்து இருக்கிறார்கள். ஏன் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம், இதற்கு இத்தனை கோடி என்று அறிவியுங்களேன், அதில் என்ன கொஞ்சம் அப்படி மறைத்து இப்படி மறைத்து 'பகலில் போகிறவள் தட்டு கூடையை மறைப்பாள்' என்பது மாதிரி நைசாக கொண்டு போய் பிளானிங்கில் சேர்த்து இருக்கிறீர்கள். நான்-பிளானிங்கை கொண்டு வந்து வேறு எங்கு எங்கே சேர்த்து இருக்கிறார்கள் என்று கேட்டால் நான் தடவி தடவி பார்த்தேன் சார் எங்கும் இல்லை. இந்த புத்தகத்தின் மேல் பக்கத்தில் கூட கிடையாது சார். பெரும்பாலும் நாம் இந்த பட்ஜெட் மெமோராண்டாவை அதிகமாக பார்ப்பது கிடையாது. அந்த காலத்தில்





இப்படி காலேஜில் படித்து இருந்தால் நாம் எல்லாம் ஏன் சார் இந்த வேலைக்கு வருகிறோம். கோரிக்கை எண் 35-ல் 98 கோடி ரூபாயை கொண்டுபோய் சேர்த்து இருக்கிறார்கள். வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு—முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின்கீழ் பாலர் பள்ளி குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரிசி, பருப்பு, எண்ணெய் போன்ற பொருட்களுக்கு செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் கோரிக்கை எண் 30-ஐ பார்க்க. தினந்தந்தியை படிக்கிற மாதிரி இல்லையா சார் இது. 3 ஆம் பத்தி பார்க்க, 3 ஆம் பத்தியில் அப்படியே போய்கொண்டு இருந்தார்கள் 4 ஆம் பத்திக்கு வருக. மறுபடியும் 8 ஆம் பத்தி பார்க்க என்பது போல் இருக்கிறது. உடனே 35-வது கோரிக்கையைப் படித்தால் 30 ஆம் கோரிக்கைக்கு வருக என்று இருக்கிறது. 30 ஆம் கோரிக்கைக்கு வந்தால் இதில் உணவை கொண்டு வந்து கொடுத்து இருக்கிறீர்கள். நான் கேட்கிறேன் ஏன் சார் இப்படி செய்கிறீர்கள். 30 ஆம் எண் கோரிக்கை சமூகநலன். இதில் இன்னும் ஒன்றை நான் கேட்கிறேன், நாவலர் அவர்களை. ஒவ்வொரு டிமேண்டிலும் நீங்கள் பணம் கொடுத்து கீழே எக்ஸ்பிளனேஷன் கொடுத்து இருக்கிறீர்கள். நுகர்பொருளுக்கு ஏன் இன்கிரிஸ் ஆச்சு? 98 கோடி ரூபாய் கீழே எக்ஸ்பிளனேஷன் கொடுத்து இருக்கிறீர்கள். வரவு-செலவு மதிப்பீட்டில் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு நாங்கள் அவர்களிடம் சப்சிடி மாதிரி வாங்குகிறோம் குறைந்த விலையில் வாங்குகிறோம், அந்த நஷ்ட ஈட்டை ஈடு கட்ட இதிலிருந்து கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் கோரிக்கை எண் 30-க்கு அப்படி ஒரு எக்ஸ்பிளனேஷன் நோட் இதிலே உண்டா ? ஏன் இதில் அதை பைனான்ஸ் செகரட்டரி தயாரிக்கவில்லை. இதில் தான் நிறைய பணத்தை எடுத்து இருக்கிறார்கள். அதிலும் எவ்வளவு என்று கண்டுபிடிக்க முடியவில்லை சார். குழந்தைகள் நல ஒருங்கிணைப்பு மேம்பாட்டுப் பணி, ஊட்டச்சத்து திட்டம் 1 கோடியே 86 லட்சம் ரூபாய், தமிழ்நாடு சத்துணவுத் திட்டம் 9 கோடியே 28 லட்சம், அடுத்து செய்முறை சத்துணவுத் திட்டம் 41 லட்சம், குழந்தைகள் காப்பகம் உணவளித்தல் 80 லட்சம், அப்படி இதில் கொண்டு வந்து சேர்த்து இருக்கிறீர்கள். இதில் இன்னும் ஒரு சத்துணவு இருக்கிறது அது என்ன என்று எனக்குப் புரியவில்லை. பிளானிங்கில் ஒரு மினி சத்துணவு இருக்கிறது சார். எனக்கு ஒன்றும் புரியவில்லை சார், 7, 8 இடங்களில் இருக்கிறது நானும் படித்துப் படித்துப் பார்த்தேன். மண்டையை உடைத்துக் கொண்டேன். நாமா சாப்பிடுகிறோம் விடுடா அப்பா, ஆளை விடுடா அப்பா என்று ஆகிவிட்டது. மணி 5 வரை பார்த்தேன் சார் கிடைக்கவில்லை. என் சத்தே போச்சு சார். இதில் இன்னும் ஒரு குட்டி சத்துணவு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் மட்டும் இப்போது சொல்லி விடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஆக ஒரு தனி டிமேண்டின்கீழ் இந்த சத்துணவு வைக்கப்பட

வில்லை. அவர்கள் சொல்லியது மாதிரி காவல் துறை மற்றைய பாசனத் துறை என்ற அளவுக்கு இதைப்பற்றி நான் பதில் உரை கூறுகின்ற போது விவரங்களை விளக்கமாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால் பல்வேறு தலைப்பின்கீழ் சத்துணவு வருவதன் காரணமாக அந்த அந்த கோரிக்கைகளின் கீழேயே ஆகின்ற செலவுகளை நாம் குறிப்பிட்டு அதற்காக நாம் அவையினுடைய அனுமதியை பெறவேண்டி இருப்பதன் காரணமாக, கோரிக்கை எண்கள் 17, 28, 30, 31, 32, 35 ஆகியவற்றை அத்தனையையும் சேர்த்து 152 கோடியே 94 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய்க்கு மொத்தத்தில் நாம் கேட்டிருக்கிறோம். அதுபற்றி நான் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லலாம் என்றாலும்கூட, இப்பொழுது அது விடுபட்டுப் போய் விடவில்லை. ஆனால், ஒரே தலைப்பின கீழே வரவில்லையே தவிர, ஒரே கோரிக்கையின் கீழே வரவில்லையே தவிர, இந்த 152 கோடியே, 94 இலட்சத்து, 72 ஆயிரமும் மொத்தத்திலே எல்லா வகைகளிலேயும் போடப்படுகின்ற சத்துணவுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்ற விளக்கத்தை மட்டும் சொல்கிறேன். விரிவான விளக்கத்தை என்னுடைய பதிலுரையிலே சொல்லுகிறேன்.

(முற்பகல் 11-20)

திரு. ரா. உமாநாத் : இவ்வளவு பெரிதாகப் போட்டிருக்கிறீர்கள், அதிலேயே ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டிருக்கலாமே.

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளின் கீழே சத்துணவுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், சத்துணவுத் திட்டத்திற்கு என்று தனியான ஒரு அமைச்சரை ஏற்படுத்திய பிறகு, அது ஒரே கோரிக்கையாக வந்திருக்க வேண்டுமே தவிர, பல்வேறு அமைச்சர்களின் கீழே உள்ள இலாக்காக்களின் கீழே வருவது என்பது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்தை மேற்பார்வையிடுகின்ற அளவிற்கு இந்த அமைச்சரகம் இருந்தாலும்கூட, இதற்கென்று தனியாக ஒரு டிமாண்டை நாம் ஏற்பாடு செய்வோமேயானால்; அதற்குப் பிறகு இந்தச் சத்துணவுத் துறையினர் அந்தந்த துறையினருக்கு ஒதுக்கிக் கொடுக்கின்ற அளவிற்கு ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். ஏ. ஜி. போன்றவர்களின் அனுமதியைப் பெற்று அதற்குப் பிறகு டிமாண்டையே நாம் மாற்றி ஒரே டிமாண்டின் கீழ் கொண்டு வந்து, அதற்குப் பிறகு அந்தந்தத் துறைகளுக்கு ஒதுக்கித் தருகின்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். ஆகவே தான், இப்பொழுது பல்வேறு கோரிக்கைகளின் மூலமாக வருகிறது.



மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறுவதைப் போன்று, சென்ற ஆண்டு ஒட்டுமொத்தமாகவே நிதிநிலை அறிக்கையிலே ஒட்டுமொத்தமாக எவ்வளவு செலவாயிற்று என்று குறிப்பிடப்பட்டது. இந்த ஆண்டும் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் குறிப்பிடாமல் விடப்பட்டது என்றாலும், கோரிக்கைகளின் கீழே வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : நான் இரண்டு பிடித்தால் நாவலர் இரண்டு மூன்று பிடித்திருக்கிறார்கள். இன்னும் பார்த்தால் இரண்டு மூன்று டிமான்டுகளிலேகூட இருக்கும். சரி சொல்லட்டும் ; அதுபற்றி எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் நெடுமாறன் அவர்கள் அருமையான ஒரு கேள்வியைக் கேட்டார்கள். தனியாகச் சுவர் வைத்தாகி விட்டது. பிறகு தனிக் குடித்தனம் வைக்க வேண்டுமே தவிர, தனிக் குடித்தனம் ஒன்று, சாப்பாடு ஒன்று என்பது மாதிரி போய்க்கொண்டிருக்கக்கூடாது.

இப்பொழுது 188 கோடியோ என்னமோ சொன்னார் அதைக் கூட்டிப் பார்க்க வேண்டும். ஆனால் இதற்கு என தனியே ஏன் டிமான்ட் வைக்க மாட்டேன் என்கிறீர்கள் என்றால், தனி டிமான்ட் வைத்தால் ஆடிட்டர் ஜெனரலுக்குப் போக வேண்டும். அவரே சொன்னார். அதோடு மட்டும் போயிற்றா இதன் விவகாரம். இந்தச் சட்டமன்றத்திலே ஓட்டுப்போட்டு நாம் கொடுக்கின்ற பணத்தில்தான் இந்தச் சத்துணவுத் திட்டத்தை நடத்துகிறீர்களா ? கிடையாது.

முதலமைச்சர் நிதி என்று அதிலிருந்து எடுக்கிறீர்கள். முதலமைச்சர் நிதி எதற்காக இருக்கிறது ? முதலமைச்சர்தான் விரும்பி, தன் மனத்திற்குப்பட்டு, இரக்கப்பட்டு, தூக்கிக் கொடுப்பது. வெள்ளத்தால், வறட்சியால், கஷ்டம் வந்தால், தன்னுடைய கருணையினால் இதிலிருந்து கொடுப்பதற்காகப் பெறப்படும் நிதி அது. முதலமைச்சர் நிதி என்றால் அது அவர்களின் சொந்தப் பணம் அல்ல. கருணை உள்ளம் கொண்டவர்கள் அந்த முதலமைச்சர் நிதியிலே போடுகிறார்கள். ஆனால் அது கம்பல்ஷன் கிடையாது. தங்களது அன்பின் அடையாளமாகப் போடுவது, கருணையின் அடையாளமாகப் போடுவது முதலமைச்சர் நிதி. ஆனால் இப்பொழுது என்ன செய்கிறீர்கள் ? கசக்கிப் பிழிவதன் மூலம் பெறுவதாக இருக்கிறது முதலமைச்சர் நிதி. அந்த நிதியைச் சத்துணவுத் திட்டத்திற்காகக் கேட்கிறீர்கள்.

நான் பத்திரிகையிலே பார்த்தேன். மெட்ராஸ் கலெக்டர் என்ன செய்திருக்கிறார் ? எப்பொழுதோ நடத்த வேண்டிய நட்சத்திர இரவுக்காக நான் டிக்கெட் போடவில்லை என்று சொல்கிறார். காசு போடவில்லை என்று சொல்கிறார். அதை இன்றைக்குப் பத்திரிகையிலே மறுத்து எழுதுகிறார்கள்.

[திரு. துரைமுருகன்]

[1984 மார்ச்

இன்னும் மூன்று மாதங்கள் கழித்து அது என்றைக்கு நடக்குமோ தெரியாது. நான் கேட்கிறேன், இந்த நாட்டிலே ஒரு கலெக் டர், இந்த நாட்டிலே இருக்கிற விற்பனை வரி அதிகாரி, ஆர். டி. ஓ. க்கள், நம்முடைய தாசில்தார்கள், பி. டி. ஓ. க்கள் கிராம சேவக்குகள் ஆகியோர் இந்த டிக்கெட்களை விற்கிறார்கள். இவ்வளவு செய்து வசூல் செய்யப்படும் இந்தப் பணத்தை எவ் வளவு வசூல் செய்தார்கள் என்று கேட்க எங்களுக்கு உரிமை உண்டா இல்லையா ? ஏன் ? அது முதலமைச்சர் நிதியிலே போய்ச் சேருமேயானால் நாங்கள் கேட்க முடியாது.

நட்சத்திர இரவு நடத்துகின்ற கலெக்டருக்குச் செலவு எவ்வளவு? நட்சத்திரங்களுக்கு எவ்வளவு? ஆண் நட்சத்திரத்திற்கு எவ்வளவு ? பெண் நட்சத்திரத்திற்கு எவ்வளவு ? எவ்வளவு ரேட் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்க்ள் அன்றைய தினம், இந்த நட்சத்திர இரவுக்காக என்று எந்தக் கணக்கை யார் பரிசீலிப்பது ? வேதாளத்தின் வாயில் போன பணம் அல்லவா ? ஆகவே, இலட்சக்கணக்கில் அல்ல, கோடிக் கணக்கான ரூபாய், அதில் ஊழல் நடப்பதற்கு வழியிருக்கிறது. சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என் பதைப்போல, நம்முடைய நாவலர் அவர்கள் இம்மாதிரி விவகாரத்தில் ஈடுபடக் கூடாது. எனவே, அதிலே பணம் தருவார்களேயானால் முதலமைச்சருடைய நிதியின் கணக்கை இந்த மன்றம் தணிக்கை செய்யும். எங்களுக்குக் கேட்க உரிமை வேண்டும். அது ஆடிட்டர் ஜெனரலின் ரிப்போர்ட்டுக்குப் போக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி றேன்.

கவர்னர் உரை என்றால் என்ன ? அது நூலுக்கு ஒரு பாயிரம் போன்றது. பட்ஜெட் என்பது நூல் மாதிரி. கவர்னர் தன் உரையில் கோடிட்டுக் காட்டுவார் லைட்டாக பாயின்ட் 1. பாயின்ட் 2, பாயின்ட் 3 என்று படித்துக் காட்டுவார் கவர்னர், இப்போதுதான் சொன்னீர்கள். என்ன சொன்னீர்கள் ? கவர்னர் உரையிலேதான் சொன்னீர்கள். (Free Trade Zone) ஒன்று வைக்கிறேன் என்று ரொம்பப் பிரமாதமாகப் பேசி இருக்கிறீர்கள். ஆனால் அதற்காக ஒரு அணா ஒதுக்கி இருக்கிறீர்களா என்று பார்த்தால் காணவில்லை.

போன பட்ஜெட்டிலே, சார், மாவட்டம் பிரிப்பதே பெரிய பேச்சாகப் போய்விட்டது. அவரவர்களுடைய தொகுதி வேலைகள் எல்லாம் கூட கிடந்துவிடுகின்ற அளவுக்கு டைவர்ட் பண்ணிவிட்டீர்கள். எல்லோரும் வேறு பிரச்சினைகளையே விட்டுவிட்டார்கள். அவரவர்கள் மாவட்டம், மாவட்டம் என்று சொல்லி எந்த மாவட்டத்தைப் பிரிக்கலாம். என்றெல்லாம் சொல்லி எங்களுடைய ஊர் என்றெல்லாம் சொல்லிக்கொண்டி ருக்கின்ற வகையில் நிலைமையை மாற்றிவிட்டீர்கள். அப் புறம் என்ன ஆச்சு ? அதாவது இதுதான் உங்களுடைய சிந்தனா



1984 மார்ச் 8]

[திரு. துரைமுருகன்]

சக்தியிலே உதித்த புத்தம் புதிய திட்டம் என்ற வகையிலே மாவட்டங்களைப் பிரிக்கிறேன் என்று சொன்னீர்கள். அவ் வளவு. பெரிய திட்டத்திற்காக மாவட்டங்களைப் பிரிக்கின்ற திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு ? மாவட்ட நிர்வாகத்திற்கு என்று ஒதுக்கியதைத் தவிர வேறு ஒரு அணா கூட ஒதுக்கப்படவில்லை. ஆகவே விளம்பரத்திற்காக ஒன்றைச் சொல்வதும், ஜனங்களின் மத்தியிலே 10 நாட்களுக்கு அதே பேச்சாக இருப்பதும், அப்படிப் பேசியதற்குப் பிறகு விட்டு விடுவது என்ற வகையிலேதான் வேலைகளைச் செய்கிறீர்கள்.

இங்கே வந்து பத்திரிகையில் பார்த்தால்

Tamil Nadu Government's massive drive for creation of self-employment opportunities for technically trained youth

என்று எக்ஸ்பிரஸ், ஹிண்டு, தினமணி-இவை நம்முடைய ஊர் பத்திரிகை, மற்ற பத்திரிகைகளில் என்ன போட்டார்களோ தெரியவில்லை. பத்திரிகைகளில் போட்டார்கள். அப்படிப் போட்டு, நம்முடைய சாரதியின் படத்தையும் போட்டிருக்கி றார்கள், பரவாயில்லை, அவர் எங்கள் ஊர் மந்திரி. ஆகவே இதிலே நம்முடைய முதலமைச்சரும் இருக்கிறார், திரு. விஜய சாரதி அரிசன நலத்துறை அமைச்சரும் இருக்கிறார். இவர்கள் இரண்டுபேரும் இருக்கின்றபோது நான் என்ன ? என்று சீப் செக்கரட்டரியும் இருக்கிறார். ஆக இவ்வளவு பெரிய செலவு செய்து இவ்வளவு பெரிய திட்டம் போட்டு விளம்பரம் கொடுத்திருக்கிறீர்கள். இந்தத் திட்டம்

Tamil Nadu Government's massive drive for creation of self-employment opportunities for technically trained youth

என்று வந்திருக்கின்றது. இதை வைத்துக்கொண்டு, இது வந்த நாளிலே இருந்து இந்தப் பேப்பரைத் தூக்கி மடித்து வைத் துக் கொண்டு—இதெல்லாம் நாவலரிடம் படித்த பழக்கம்தான் அதை கட் பண்ணி வைத்துக்கொண்டு பார்க்கிறேன், பார்க்கி றேன். ஒரு அணா கூட கிடையாது. கடைசியில் படித்துப் பார்த்தால், என்ன என்று பார்த்தால் இது சென்ட்ரல் கவர்ன் மென்ட் ஸ்கீம். முழுக்க முழுக்க அந்த அம்மாவுடைய ஸ்கீம். ஆகவே இதிலே திருமதி இந்திராகாந்தி அவர்களின் படத்தைப் போட்டிருந்தால் சரி. அதாவது ட்ரைசம் ஃபார் வீக்கர் செக் ஷன்-க்கு என்று அதாவது பாலிடெக்னிக்குகளிலே படித்துக் கொண்டிருப்பவர்களுக்கென்று போடப்பட்டிருக்கின்ற திட்டம். அதாவது இது சென்ட் பெர்சன்ட் அவர்களுடைய ஸ்கீம்.

அப்படி இருக்கும்போது அவர்கள் கொடுக்கிறார்கள் என்று
இவர்கள் சொல்கிறார்களாம். அப்படி என்றால் சொல்கிற
வர்களுக்கே இவ்வளவு பெரிய விளம்பரம் என்றால், கொடுக்
கின்றவர்களுக்கு எவ்வளவு பெரிய விளம்பரம் போடவேண்டும்?

ஆக, இப்படி விளம்பரங்களைப் போட்டே கவர்ன்மென்டை
மூடிவிட வேண்டும் என்று முடிவு பண்ணிவிட்டீர்களா? ஒரு
நாளைக்கு ஒரு திட்டம்; நேற்று கூட மாண்புமிகு அமைச்சர்
திரு. குழந்தைவேலு அவர்கள் என்றைக்கு நம்முடைய
பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடக்கும் என்று அறி
வித்தார்கள். பஞ்சாயத்துத் தேர்தல் வந்தால் நம்முடைய ஊர்
ப்ரெசிடென்டை எல்லாம் சரிப்படுத்த வேண்டாமா என்றெல்
லாம் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆளும் கட்சியிலே
இருந்து பொதுச் செயலாளர் மற்றவர்கள் எல்லாம் பறக்கிறார்
கள். வேட்பாளர்களைத் தேடி. மழை வந்து விட்டது;
ஆகவே அது நின்று விட்டது; ஓஹோ சரி. நாம் நினைத்தது
கரெக்ட். இது வராது. வாராத் தேர்தல் பஞ்சாயத்துத்
தேர்தல் என்று கவியரங்கம் பாடிவிட்டார்கள்.

அடுத்து இன்னொன்று. இந்தத் தேர்தல் தப்பித் தவறி
ஒருக்கால் நடந்தால் என்ன நிலைமை? ஊராட்சி ஒன்றியத்
தேர்தல்கள் இரண்டு பகுதியாக நடத்தப்படும். ஒரு பகுதி
வாக்குப்பதிவு 19—4—84 அன்று. இன்னொன்று 23—4—84 அன்று.
இதற்கிடையிலே நான்கு நாட்கள் வித்தியாசம் இருக்கின்றது. ஏன்
இந்த வித்தியாசம், என்று கேட்டால் நாங்கள் திருநெல்வேலியிலே
இருந்து போலீஸை நார்த் ஆற்காட்டிற்குக் கொண்டு வருகி
றோம் என்று சொல்லலாம். ஆகவே அதனால் தப்பு இல்லை
என்று விட்டுவிடலாம். முனிசிபாலிட்டி தேர்தல் வாக்குப்பதிவு
28—4—84. அது வேறு. அதற்கு வேறு டைரக்டர், இதற்கு வேறு
டைரக்டர். ஆகவே ஓட்டு எண்ணுவது என்றைக்கு என்று
கேட்டால் 29—4—84 அன்று. அதாவது 19—4—84 அன்று
போட்ட ஓட்டு 29—4—84 வரை பெட்டிக்குள்ளே இருந்து அன்
றைக்குதான் எடுப்பார்களாம். What is the necessity.
10 நாட்கள் ஓட்டுப் பெட்டியிலே மூட்டை கட்டி வைப்பதன்
மர்மம் என்ன? திருச்செந்தூர் வருமா? தில்லுமுல்லு நடக்
குமா? ஓட்டுப் பெட்டி மாறுமா? இப்படி ஒரு சந்தேகத்திற்கு
இடத்தை நீங்களே ஏற்படுத்துகிறீர்கள். கையிலே காசு, வாயிலே
தோசை என்ற அளவிலே அதாவது ஆச்சு, போச்சு என்ற அள
விலே ஓட்டுப் போடு, எண்ணு, அவர் தோற்றார், இவர் ஜெயித்
தார், போங்கய்யா வீட்டுக்கு, போடுங்களய்யா மாலையை, அல்
லது வெட்டி மடியுங்கள், போலீஸ் ஸ்டேஷனுக்குப் போங்கள்.
என்றெல்லாம் போகவேண்டியது தானே. அப்படிச் செய்யா
மல் ஓட்டுப் பெட்டியினைப் பத்து நாட்கள் பாதுகாப்பது



யார் பொறுப்பு? நிலைமை என்ன? ஓட்டுப் பெட்டி மாறுமா, மாறாதா? எத்தனையோ மாற்றுகிறீர்கள், இது என்ன உங்களுக்கு பெரியது? ஓட்டுப் பெட்டிதானே, இதை மாற்ற முடியாதா? ஆகவே அந்தத் தேர்தல் நடக்காது. நடந்தால் அது ஊழலுடன் பிறக்கும். குண்டலத்தோடு பிறந்தான் கர்ணன்; வில்லோடு பிறந்தாள் சீதை; ஊழலோடு பிறந்தது பஞ்சாயத்துத் தேர்தல் என்றுதான் கொண்டு வருகிறீர்கள்.... (மணியடிக்கப் பெற்றது)........இதோ முடித்து விடுகிறேன். ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

நாவலர் இந்தக் கருத்தை ஒத்துக் கொள்வார் என்று கருது கிறேன். ஜனநாயகத்தில் ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி இருக்க வேண்டும்: கருத்துக்களைச் சொல்ல வேண்டும். கருத்துக்களுக்கு எதிர்க் கருத்து சொல்ல வேண்டும், இரண்டையும் மக்கள் கேட்க வேண்டும். நாட்டு மக்களுடைய மனதை ஈர்க்க வேண்டும். ஈர்த்ததற்குப் பிறகு மக்களைத் தன் பக்கம்தான் ஈர்க்க வேண்டும். அது தான் முறை. இன்றைக்கு என்ன தெரியுமா? கவர்ன்மென்ட் எல்லா லைப்ரரிகளுக்கும் ஒரு ஆர்டரை ஸ்டிரிக்டாகப் போட்டிருக்கிறார்கள். என்ன தெரியுமா சார்? பஞ்சாயத்துக்களிலே எல்லாம் முரசொலி வாங்கக் கூடாது; தினகரன் வாங்கக் கூடாது; விடுதலை வாங்கக் கூடாது. நாவலர் இந்த இடத்திலே இருந்திருந்தால் மனசு கஷ்டப்படும்; ஏனென்றால் விடுதலை வாங்கக் கூடாது—குங்குமம் வாங்கக் கூடாது; முத்தாரம் வாங்கக் கூடாது; தீக்கதிர் வாங்கக் கூடாது; ஜனசக்தி வாங்கக் கூடாது என்று எதிர்க் கட்சிகள் நடத்துகிற பத்திரிகைகளையெல்லாம் லைப்ரரியிலே வாங்கக் கூடாது என்று ஒரு ஆர்டரைப் போட்டு நசுக்குகிறார்கள்— இது ஜனநாயகத்தினுடைய படுகொலை என்று பொருள் அல்லவா?

(முற்பகல் 11-30)

ஒரு தடவை நாவலர் அவர்கள் காங்கேய நல்லூரில் பேசினார்கள். அப்பொழுது கோவிலில் மணி டாண், டாண் என்று அடித்தார்கள். அப்பொழுது நான் சின்ன பிள்ளை; எதிரிலே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். நெடுஞ்செழியன் பேசுகிறார். அவர் அறிவுக் கருத்துக்கள் மக்கள் மத்தியிலே புகுந்து அவர்களைத் தன் பக்கம் ஈர்த்து விடக் கூடாது என்று எண்ணுகிற ஆண்டவன் மணியை டாண், டாண் என்று அடிக்கச் சொல்கிறான். மணி ஓசைக்குப் பிறகு என் ஓசை கேட்கும் என்று சொன்ன நாவலரிடத்திலே அதையே சொல்கிறேன். நீங்கள் போடுகிற இந்தக் கட்டுத் திட்டத்தை மீறி தீக்கதிர் பாயும், ஜனசக்தி எழுந்திருக்கும், முரசொலி உதிக்கும், தினகரன் உதித்தே தீருவான் என்பதை மட்டும் மறந்து விடக் கூடாது. என்ன? இத்தகைய ஒரு ஜனநாயகக் கொடுமை எந்த நாட்டிலாவது நடப்பது உண்டா? சரி, கிடையாது.

அதற்குப் பிறகு இன்னொன்றையும் சொல்கிறேன். இந்தத் திட்டத்திலே சோஷியல் வெல்பேர் ஸ்கீம்ஸ் எங்காவது நடத்துகிறார்களா ? தொழிற்சாலை உண்டா ? சார், எங்கள் ஊரில் நிறைய மிலிட்டரிகாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பட்டாளத்திலே இருந்த போது, அந்தக் காலத்திலே நான் ராஞ்சியிலே என்ன பண்ணினேன் தெரியுமா என்று புளுகை விட்டுக் கொண்டே இருப்பான். மிலிட்டரி புளுகு என்று சொல்வோம். அந்த மாதிரி பாணியில் காகிதத் தொழிற்சாலை புகளூரில் ரூ. 196 கோடியில் வரும் என்று இப்படி 5 ஆண்டுகளாக பட்ஜெட்டைப் புரட்டினால் போதும் காகிதத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை. ரொம்ப போரடிக்கிறது சார். காகிதமும் வந்த பாடில்லை. இப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர வேறு ஏதாவது உண்டா ?

அரிசனங்களைப் பொறுத்த வரையில் ரூ. 303 கோடி செலவு செய்வதாகச் சொன்னீர்களே, பெரிய விளம்பரப்படுத்தினீர்களே, அண்ணா பிறந்த நாள் விழாவிலே விளம்பரம் கொடுத்தீர்களே, அதிலே 93,000 வீடுகள் கட்டப்பட்டன என்றும் 85,000 மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன என்றும் 700 மாணவர் இல்லங்கள் கட்டப்பட்டன என்றும் சொல்லியிருக்கிறீர்களே, ரூ. 303 கோடியில் செய்துள்ளதாகச் சொல்லி இருக்கிறீர்களே, எங்கே என்று கேட்டேன். நாவலர், வேளை வருகிற பொழுது நாளை ஒரு நாள் சொல்லப்படும் என்று சொன்னார். பட்ஜெட்டிலே இருக்கிறதா என்று பார்த்தால், இந்தப் பயல் கேட்டானே, அவனுக்காகவாவது போடுவோம் என்று போட்டிருக்கிறீர்களா என்று பார்த்தால், மூச்சே இல்லையே. விளம்பரமெல்லாம் செய்தீர்கள். சீனி சக்கர சித்தப்பா, நாக்கிலே வைத்து சுவைத்துப் பாரப்பா என்று எழுதிப் போட்டிருக்கிறீர்களே தவிர, இதிலே ஏதாவது ஒரு திட்டம் உண்டா ? ஒரு இண்டஸ்ட்ரி உண்டா ? அப்படி என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். (மணியடிக்கப் பெற்றது) ஆகையினாலே அந்தத் திட்டம் பொறுத்தவரையிலும் எதையும் செய்தது கிடையாது.

சமூக நல அமைப்புகள் மூலம் நடத்தப்படும் அரிசனங்களுக்கான பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு இதுவரையில் சத்துணவு கிடையாது. பழைய நிலைக்கே வந்தாயிற்று. இந்தத் திட்டத்திலே கூட அந்தப் பள்ளிக்கூடம் நடக்கிற அன்றைக்கு மட்டும் தான் சோறு. முன்பெல்லாம் மாதம் 30 நாளும் சோறு தீபாவளிக்கும் பொங்கலுக்கும் சோறு இருந்ததை எவ்வளவு லைட்டாக மாடிபை பண்ணி இருக்கிறார்கள் ? காமராஜர் அதைத்தான் செய்தார். காமராஜர் மதிய உணவு என்றார், நீங்கள் சத்துணவு என்கிறீர்கள். ஆனால் இன்னொன்றும் பார்க்க வேண்டும். இதிலே சத்துணவு என்றுதான் போட்டிருக்கிறீகள். ஆனால், வெளியேபோர்டில் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் என்று போட்டிருக்கிறீர்கள். Why not you put it up in th sam way here? முதலமைச்சருடைய சத்துணவுக்காக ஒதுக்கப்பட்டது என்று





ஏன் சொல்லவில்லை. இங்கே சத்துணவு. அங்கே வெளியிலே முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம். அதிலே ஏதாவது ஒரு கேஸ் போட்டால்தான் சரியாக வரும். ஆகவே, அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையிலும் அதுவும் சரியாக அமுலாகவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று. தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டுமானால் ஏற்கனவே ரோடு போட்டார்கள். அதைப் பற்றி ஒன்றே ஒன்று மட்டும் சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுகிறேன்.

False bills were submitted on road laying programmes under self-sufficiency schemes. In one case, as per records, within a week after the construction of a road was finished, it was repaired. When Auditors demanded an explanation, one official wrote t[illegible] saying that the road had been washed away by floods.

ரோடு போட்டிருக்கிறீர்களே எங்கே அப்பா ரோடு என்று கேட்டால் அது வெள்ளத்திலே அடித்துக் கொண்டு போய்விட்டது. தன்னிறைவுத் திட்டத்தினுடைய லாபம். ஆகவே ஒன்று சொல்ல வேண்டுமென்றால் இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை குன்ற வைத்து, தமிழ்க் கலாச்சாரத்தை அழிய வைத்து, தமிழ்க் கலாச்சாரம் என்றவுடன் ஒன்று நினைவுக்கு வருகிறது. நாவலர் அவர்களுக்குச் சொல்கிறேன். தமிழ்க் கலையும், பண்பாடும் என்பதில் சந்தி வர வேண்டுமா இல்லையா ? எனக்குத் தெரியவில்லை கேட்கிறேன். தமிழ்க் கலையும் பண்பாடும் என்று இருக்கிறது. ஆகவே தமிழ் வளர்ச்சியோ, தொழில் வளர்ச்சியோ, சமுதாய மேம்பாடோ, உருப்படியான திட்டமோ ஒன்றுமே இல்லாமல், இருப்பதை வாரியெடுத்து எல்லாவற்றையும் கலக்கி, இந்தச் சத்துணவிலே எல்லாவற்றையும் போட்டு கலக்குகிறீர்களே, அப்படி கலக்கிப் போட்டுக்கொண்டு வந்திருப்பது இந்த பட்ஜெட். இந்த நாட்டிலே ஏழை மக்களுக்கு, படித்த வர்க்கத்திற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு வழியற்று கொண்டு வந்திருக்கிற இந்த பட்ஜெட், ஒரு சாதாரண சினிமா நோட்டீசிற்கும் சம்பந்தம் இல்லாத, அதற்கு கூட ஒப்பிட முடியாத அளவிற்கு இருக்கிறது இந்த நிதி நிலை அறிக்கை. இதை தயாரிப்பதற்கு மாண்புமிகு மரியாதைக்குரிய என்னுடைய நாவலர் தேவையில்லை. முதல் வருடம் பி.ஏ., யில் ஆன்சிலரி சப்ஜெக்ட் எடுத்து படிக்கிற பையனே கூட போதும். அவனிடம் கொடுத்திருந்தால் இதை விட நல்ல பட்ஜெட்டை தயாரித்து இருப்பான் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 8

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்பாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகிற வாய்ப்பு பெற்றதற்கு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு உங்களுக்கு நன்றி தெரிவிக்கவும் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் இங்கே சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல முயன்றார்கள். பேச்சிலே இருக்கிற நியாயங்களைக் காட்டிலும் அவருடைய நடிப்பு பார்ப்பதற்கு நன்றாகவே இருந்தது. நகைச்சுவை இருந்ததே தவிர அதிலே நியாயங்கள் தெரியவில்லை என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஐந்தாவது பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 62 இலட்சம் வாக்குகளைப் பெற்று 1980 ஆம் ஆண்டு தேர்தலிலே மாபெரும் வெற்றியை பெற்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இன்றைக்கு படைத்திருக்கிற இந்த பட்ஜெட்டைத்தான் கடைசி பட்ஜெட்டாக இருக்கக் கூடும் என்று மாண்புமிகு உறுப்பினர் கருத்து தெரிவித்தார்கள். தேர்தல் வருகிறபோது வரட்டும். அப்படி ஒரு வேளை தேர்தல் உரிய நேரத்தில் வரவேண்டுமென்று சொன்னால் அடுத்த ஆண்டு ஓட் ஆன் அக்கவுண்ட்ஸ்' வருவதற்குரிய வாய்ப்பு நமக்கு இருக்கிறது இது கடைசி பட்ஜெட் என்று ஒருவேளை கேலி பேசுகிற வகையிலே சொல்லியிருப்பார்களானால் ஒன்றை தெரிவிக்க விரும்புகிறேன். இந்த பட்ஜெட் தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற சாவுப் பெட்டியிலே அடித்திருக்கிற கடைசி ஆணியாக—

The last nail struck on the Coffin of the D.M.K. Party—

இருக்குமென்று குறிப்பிட விரும்புகிறேன். திரும்பவும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சிக்கு வரும் என்று கட்டியம் கூறுகிற பட்ஜெட்டாக இது இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

ஏழை நடுத்தர மக்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிற பட்ஜெட்டாக இது இருக்கிறது. அரசு ஊழியர்களின் வேதனைப் பிணிகளை ஆற்றுகிற அரும் மருந்தாக இந்த பட்ஜெட் இருக்கிறது விவசாயிகள் வாழ்வில் ஒளி விளக்காக திகழ்கின்ற பட்ஜெட்டாக இது இருக்கின்றது. வருங்கால சந்ததியினர்களை மனதிலே வைத்துள்ள பட்ஜெட்டாக இது இருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டியாக இருக்கிற திட்டங்களைக் கொண்டிருக்கின்ற ஒரு பட்ஜெட்டாக இது இருக்கிறது. நம்முடைய பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் '' ஹ்யூமன் டெவலப்



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

மெண்டில் '' நாம் காட்டியிருக்கின்ற அக்கறை முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் இந்த ஆண்டில் அதிகம் என்று அனைத்து துறைகளிலும் இருப்பவர்களும், வல்லுநர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். திரு. துரைமுருகன் அவர்கள் பல்கிவாலா அவர்கள் எழுதிய ' வீ தி பீபிள் ' என்ற புத்தகத்திலிருந்து படித்துக் காட்டினார்கள். பதிலுரையாக ஹ்யூமன் டெவலப்மெண்டில் இந்த அரசு காட்டியிருக்கின்ற அக்கரையைக் குறித்து, அதே ' வீ தி பீபிள் ' புத்தகத்தில் 109-ஆம் பக்கம், மூன்றாவது பத்தியை அவரும் புரட்டி பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே சொல்கிறார்

Investment in human development is more productive than investment in physical assets and, moreover, it leads to a faster rate national growth. We have paid too little attention to human development in the past. Particularly in the fields of education, medical and public health, nutrition and family planning.

என்று அதே பல்கிவாலா அவர்கள் அதே புத்தகத்தில் ஹ்யூமன் டெவலப்மெண்ட் குறித்து நாம் காட்ட வேண்டிய அக்கறை பற்றி குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசுகள் எல்லாம் இப்படிப்பட்ட முறையில் ஹ்யூமன் டெவலப்மெண்டுக்காக அதிகமான அக்கறை அல்ல ஒரு அற்ப அக்கறை கூட சரிவரக் காட்டவில்லை, என்ற குற்றச்சாட்டைக்கூட அந்தப் புத்தகத்திலேயே 109-ஆவது பக்கத்திலே அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

1980-ம்ஆண்டில் மரியாதைக்குரிய இரயில்வே அமைச்சர் கேதார் பாண்டே அவர்கள் பாராளுமன்றத்திலே தந்த உறுதிமொழிக்குப் பின்னாலே இந்த ஆண்டு இரயில்வே பட்ஜெட் வெளியிடப்பட்டபோது மிகப் பெரிய எதிர்பார்ப்போடு தமிழக மக்கள் இருந்தார்கள். கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதை, மதுரை—தூத்துக்குடி அகல இரயில் பாதை, மெட்ராஸ் ரேப்பிட் டிரான்ஸ்போர்ட் ஸ்கீம் போன்றவற்றிற்கு அதிகமான அளவிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை என்ற குறை, மனஆதங்கம் நமக்கு நிறைய இருக்கிறது. தி பிக் டிரையாங்கிள் அல்லது தி கோல்டன் டிரையாங்கிள் என்று சொல்லக்கூடிய டெல்லி, கல்கத்தா, பம்பாய்க்கு காட்டப்படுகின்ற அக்கறை இந்த ஆண்டு இரயில்வே பட்ஜெட்டிலே தமிழகத்திற்கு காட்டப்படவில்லை என்ற மனஆதங்கம் நம்முடைய மக்கள் மத்தியிலே இருக்கிறது. அவர்களுக்கு ஆறுதல் தருகின்ற அளவிலே நம்முடைய பட்ஜெட் அமைந்து இருக்கிறது. 1984-85 பட்ஜெட் படி மத்திய அரசாங்கம் ஏறத்தாழ 873 கோடி ரூபாய்களை ஈட்டக்கூடிய அளவிற்கு

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

இருக்கிறது. அதே நேரத்தில் மாநிலங்கள் 73 கோடி ரூபாய் இழக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் ஏற்றுக் கொண்டுதான் இந்த அரசு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. நல்ல திட்டங்களை படைத்துத் தந்து கொண்டிருக்கின்றது என் பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகளை மத்திய மாநில உறவுகள் சீர் படுத்துவதன் மூலமாகவும், பொருளாதார உறவுகளை வலுப்படுத் துவதன் மூலமாகவும் நாம் செய்திட முடியும். என்கின்ற தன்மை யில் மாண்புமிகு நாவலர் அவர்கள் மிகச் சிறப்பாக இதிலே சொல்லியிருக்கின்றார்கள். நம்மைப் பொறுத்தவரை மைய மாநில அரசுகளின் பொருளாதார உறவுகள் எப்படியெல்லாம் வலுப்படவேண்டும் என்று பன்னெடுங்காலமாக வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

We have never failed in our duty on the national aspect. என்று நான் இங்கே சொல்ல வேண்டும்.

ஓவர் டிராப்டுக்களைப் பற்றி இங்கே பேசினார்கள். சில மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது அதிகப் பற்று நமக்கு எப்படி வந்தது என்று கேள்வி கேட்டார்கள்: அதிகப் பற்று வாங்குகின்ற காரணத்தால் நம்முடைய அரசாங்கம் ஆளத் தெரியாத அரசாங்கம் என்றோ, கையாலாகாத அரசாங்கம் என்றோ தவறான கணக்கு அவர்கள் வந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு மெத்தப் பணிவோடு நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஓவர்டிராப்ட் வாங்குவது என்பது இதுதான் முதன்முறை அல்ல. 1966-ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கம் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஓவர்டிராப்ட் அதிகமாக இருந்திருக்கின்றது. 1972-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது 64 கோடி ரூபாய் ஓவர் டிராப்ட் இருந்ததை பின்னாலே மத்திய அரசு கடன் கொடுத்து தீர்த்து வைத்த கதை நெஞ்சிலே நீங்காது நிற்கிறது. 1975-லே ஓவர் டிராப்ட் இருந்ததையும் நான் எண்ணிப் பார்க்கிறேன்.

நம்மைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநிலத்திலே இப்போது ஓவர்டிராப்ட் ஏற்படுவதற்கான காரணங்களைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலவையிலே விளக்கமாகச் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அதற்குள்ளே நுழைய விரும்பவில்லை என்றாலும், ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசுக்கு பற்றாக்குறை ஏற்படுகிறபோது நோட்டு அச்சடித்துக் கொள்ளலாம். வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்கிக் கொள்ளலாம். வெளிநாடுகளி லிருந்து வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தவோ அதற்கு வட்டி



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

கட்டவோ மீண்டும் வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்குகிற சூழ்நிலை மத்திய அரசுக்கு இருக்கிறது. மாநிலங்களுக்குத் தரவேண்டிய பங்கை மத்திய அரசாங்கம் குறைத்துக் கொண்டு அவர்களுக்கு இருக்கும் பற்றாக்குறையை சமாளிக்கும் ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது. இதெல்லாம் போதாதென்று வரிகளையும் ஏற்றிக் கொள்ளலாம். அது பட்ஜெட்டில் வரவேண்டுமென்று இல்லை. ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக அவற்றை வாங்கிக் கொள்ளலாம். அத்தகைய ஆற்றல் மத்திய அரசுக்கு இருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் 1982 ஆம் ஆண்டு இறுதி வரைக்கும் இப்படிப்பட்ட ஓவர் டிராப்ட் வாங்கும் சூழ்நிலை இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

1980-லே வறட்சி, 1982-83-லே வறட்சி என்று மாறி மாறி வந்தது. தமிழகமே காலியாகும் அளவிற்கு வறட்சி நிலைமைகள் இருந்தபோதிலும் நாம் அவற்றை திறமையாகச் சமாளித்து இருக்கிறோம். மைய அரசாங்கத் தில் இருந்து பெற்ற உதவித் தொகையோடு மாநில அரசாங்கமும் அதிக நிதியை ஒதுக்கி அதைச் சமாளித்த நிலைமைகள் இன்னும் நாட்டு மக்களின் நெஞ்சத்திலே நீங்காது நிற்கின்றன.

ஃபுட் சப்சிடி மட்டும் ஏறத்தாழ 100 கோடி ஆகியிருக்கிறது. அது மட்டு மல்லாமல் ஆண்டுதோறும் சத்துணவுத் திட்டம், பல்பொடி திட்டம், வெள்ள நிவாரணப் பணிகள் என்று அசாதாரண சூழ்நிலைகள் இந்த மாநிலத்தில் சாதாரணமாக எண்ணிப் பார்க்க முடியாத திட்டங்கள் மூலம் சமாளிக்கப்பட் டிருக்கின்றன. விவசாயக் கடன்கள், கூட்டுறவுக் கடன்கள் வகையில் 710 கோடி ரூபாய் அளவிற்கு நாம் தள்ளுபடி செய்திருக்கிறோம். எதிர்பாராது ஏற்பட்ட மின்வெட்டு காரணமாகவும் தொழில் முடக்கம் ஏற்பட்டு உற்பத்தி குறைந்து அதனாலே வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஓவர்டிராப்ட் பற்றி திரு. துரைமுருகன் சொல்கிறபோது நான் ஒன்றை நினைத்துக் கொண்டேன். பிராப்பர்ட்டி டாக்ஸ் 1974க்குப் பிறகு ரிவைஸ் செய்யப்பட வில்லை. Property tax s the major source of income for the local bodies அப்படிச் செய்யாததால் ஏற்படுகின்ற வருவாய் இழப்பைக்கூட அரசாங்கம் தான் சரிக்கட்ட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது.

தொடர்ந்து நம்முடைய பிளான் அவுட்லேயை நாம் அதிகப்படுத்திக் கொண்டே வந்திருக்கிறோம். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு வரி போட்டு இவைகளை சமாளித்துக் கொள்கின்றபோது என்ட்ரி டாக்ஸ் என்று நாம் சென்ற ஆண்டு கொண்டு வந்தோம். 15 கோடி, 20 கோடி ரூபாய் அதன் மூலம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம்

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

பற்றாக்குறையைச் சமாளிக்கலாம் என்று சொன்னால் இந்த நாட்டில் இருக்கிற பல்வேறு சங்கங்கள், வியாபார பெருங்குடி மக்கள் வேண்டாம் என்று சொன்னபோது அதை ஜனநாயக உணர்வோடு நாம் திரும்பப் பெற்றுக் கொண்ட நிலைமையை நான் உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

தமிழக அரசின் சார்பிலே மத்திய அரசாங்கம் எவற்றை எல்லாம் செய்ய வேண்டுமென்று பல்வேறு பிரச்சினைகளை யோசனையாக தெரிவிக்க நான் விரும்புகிறேன். இவை புதியவை அல்ல. ஏற்கெனவே தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எடுத்துச் சொன்ன கருத்துக்கள்தான். மைய அரசு மாநிலங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கும் கொள்கையில் மிகப் பெரிய மாற்றங்களை உடனடியாகச் செய்தாக வேண்டும். பின்தங்கிய மாநிலங்களுக்கு உதவி, கொஞ்சம் வளர்ந்து வருகிற மாநிலங்களுக்கு போதுமான நிதி இல்லை என்ற அந்த முறை மாற்றப் பட்டு, வளர்ந்து வருகிற மாநிலங்களுக்குக்கூட அதிகமான நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்று நான் மைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மைய அரசு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிதி என்பது திட்டவட்டமான சட்டங் கள் அடிப்படையில் இருக்க வேண்டுமே தவிர டிஷ்கிரிஷனரி பேசிசில் இருக்கக்கூடாது It should be on a statuter basis என்று நான் வலி யுறுத்த விரும்புகிறேன்.

ஒரு மாநிலம் வெள்ளத்தினாலோ, வறட்சியினாலோ பாதிக்கப் படுகிறபோது மைய அரசு. தருகின்ற ஒதுக்கீடு திட்ட ஒதுக்கீடு களுக்குக் கூடுதலாக இருக்க வேண்டுமே தவிர ஆண்டுத் திட்டங் களில் வைக்கின்ற அடிப்படையை நிறுத்திட வேண்டுமென்று நான் வேண்டுகிறேன்.

மைய அரசின் வளர்ச்சி நிவாரண நிதி 75 விழுக்காடு மானிய மாக இருக்க வேண்டும் ; 25 விழுக்காடு கடனாக கொடுக்கப்பட வேண்டும். வெள்ளம், புயல் நிவாரணம் 100 விழுக்காடு மானிய மாக இருக்க வேண்டும். நிதி ஆய்வுக்குழு மாநிலங்களுக்கு சரி யான பிரதிநிதித்துவம் தந்து, அதை நிரந்தரமானதாக ஆக்கிட வேண்டும்.

The State should have access to the Foreign Exchange in propor- tion to the Foreign Exchange component of the plan.

என்ற அந்த யோசனையைக்கூட நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன்.



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

மாநில அரசு கடன் தொகையைத் தள்ளுபடி செய்வதன் மூலமாக, இப்படிப்பட்ட பிரச்சினைகளில் மைய அரசு மாநிலங் களுக்கு கைகொடுக்கின்ற அந்த நிலைமையை ஏற்படுத்த முடியும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி நான் சொல்லுகிற போது இந்த மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குத் தானே சர்க்காரியா கமிஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கேட்கலாம். நியமிக்கப்பட்ட அந்த சர்க்காரியா கமிஷன் நல்ல தீர்ப்பு தரும் என்ற நம்பிக்கை தமிழக மக்களுக்கு நிறையவே இருக்கிறது. ஆனால் ஏழு மாத காலமாக சர்க்காரியா கமிஷன் ஒரே ஒரு கொஸ்டினேயரைத்தான் தர முடிந்திருக்கிறது என்று சொல்லுகிறபோது, இதிலே இன்னும் அதிகமாக வேகம் இருக்க வேண்டுமென்று மாநிலங்கள் எதிர்பார்ப்பதிலே நியாயம் இருக் கிறது. விரக்தியினுடைய விளிம்புக்கு இந்த எண்ணம் போய் விடாத அளவுக்கு சர்க்காரியா கமிஷன் தன்னுடைய பணியை விரைவிலே முடிக்க வேண்டுமென்று கூட நான் கேட்டுக் கொள் கிறேன்.

விலைவாசி உயர்வைப் பொறுத்த வரையில் இந்த மாநில அரசு பொறுப்பேற்ற நாள் முதல் மைய அரசுதான் பொறுப்பு என்று பல்வேறு நேரங்களிலே சுட்டிக்காட்டியுள்ள போதிலும் அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைகளை திறமையாகச் சமாளித் திருக்கிற உண்மையை நான் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கி கிறேன்.

அரசு ஊழியர்கள், கம்பெனித் தொழிலாளர்கள், நிலமற்ற விவசாயிகள் என்று மூன்று பிரிவுகளாக இருக்கக்கூடியவர்களுக்கு— 1974-ஆம் ஆண்டிலே ஒரு செலக்ஷன் கிரேடு அடிப்படை ஊழியர் பெற்ற சம்பளம் சென்னையிலே 397 ரூபாய். 1983-ஆம் ஆண்டு அது 856 ரூபாயாக உயர்ந்தது. அது 116 விழுக்காடு அதிகமாகி இருக்கிறது. மற்ற இடங்களில் 332 ரூபாய் என்று இருந்தது. இன்றைக்கு 783 ரூபாய் என்ற அள்வுக்கு இருக்கிறது. ஆக, நாம் அந்த அளவுக்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். ஏறத் தாழ 1983-ல் மட்டும் அகவிலைப் படியை 5 முறை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். 1978-லிருந்து 22 முறை, விலைவாசி உயர்வுக்கு ஏற்றபடி அரசு ஊழியர்களுக்கு விலைவாசி உயர்வை சமாளிப்பதற்காக, அகவிலைப் படியை உயர்த்திக் கொடுத்திருக் கிறோம்.

நிலமற்ற விவசாய கூலிகளுடைய உயர்வை மனதிலே வைத்துத் தான் தமிழக அரசு 18,716 நியாய விலைக் கடைகளைத் திறந்திருக்கிறது. காய்கறி விற்பனைக்குக் கூட நியாய விலைக் கடைகளை திறந்து வழங்கி வருகிறோம். விலைவாசி ஏற்றத் தினால் சாதாரண மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று நாம் எடுத்திருக்கிற முடிவினால் மிகப் பெரிய வெற்றி ஏற்பட்டிருக் கிறது.

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

அடுத்து, மொத்த விலைக் குறியீடு பற்றி ஒரு புள்ளி விவரத் தைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1978-79-ஆம் ஆண்டு 206.5 ஆக ஆல் இந்தியா மொத்த விலைக் குறியீடு இருந்தது. தமிழ்நாட்டில் அது 199.4 ஆக இருந்தது. 1979-80-ஆம் ஆண்டு 246.1 ஆக இருந்த மொத்த விலைக் குறியீடு தமிழ்நாட்டில் 225.2 ஆக இருந்தது. 1980-81-ஆம் ஆண்டு 278.4 ஆக இருந்த மொத்த விலைக் குறியீடு தமிழ்நாட்டில் 263.9 ஆக இருந்தது என்ற விவரத்தை நான் இங்கே தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

கன்ஸ்யூமர் பிரைஸ் இன்டக்ஸ் ஃபார் இண்டஸ்டிரியல் ஒர் கர்ஸ்—1960-ஆம் ஆண்டை பேசிசாக வைத்திருக்கிறார்கள். அதில் மாற்றம் வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பெர் காபிட்டா இன்கம்மைப் பொறுத்த வரைக்கும் 1974-79-ஆம் ஆண்டின் கரண்ட் பிரை ஸெஸ் 826 என்றும், கான்ஸ்டன்ட் பிரைஸ் 516 என்றும் இருக் கிறது. ஆனால் 1981-82-ஆம் ஆண்டில் பெர் காபிட்டா இன்கம் 1,373 ரூபாய் உயர்ந்திருக்கிறது. ஆட் கரண்ட் பிரைஸெஸ். அதைப்போன்று கான்ஸ்டன்ட் பிரைஸ் 667 ரூபாய் என்ற அள வுக்கு உயர்ந்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தையும் உங்கள் முன்னாலே வைப்பதை நான் பெருமையாக எண்ணுகிறேன்.

(முற்பகல் 11-50)

1866-ஆம் ஆண்டிலிருந்து பட்ஜெட் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து மார்ச் 31-ஆம் தேதி வரைக்கும் என்றிருக்கிறது. இந்த பட்ஜெட் ஆண்டை, பெரிய மாற்றத்தை, புரட்சிகரமான மாற்றத்தை நம்முடைய அரசு நவம்பர் 1-ஆம் தேதியிலிருந்து பட்ஜெட் துவங்குகின்ற மாற்றம் வந்தால். மிகப் பெரிய சாத னைகளை செய்ய வாய்ப்பிருக்கிறது. நம்முடைய ஆட்சியில் மேலும் பல சாதனைகளை சாதிக்க வாய்ப்பிருக்கிறது.

நம்முடைய ஆட்சியைப் பொறுத்தவரை, ஆண்டுக்காண்டு புதுப்புது திட்டங்களை பட்ஜெட்டிலே தந்துகொண்டிருக்கிறோம்.

1980-ஆம் ஆண்டிலே தன்னிறைவுத் திட்டம்.

1981-ஆம் ஆண்டிலே உலகத் தமிழ் மாநாடு.

1982-ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம்— இந்தியாவிற்கு வழி காட்டுகிற திட்டம்—தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக் கழக திட்டம்— [illegible] ாடித் திட்டம்.



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

1983-ஆம் ஆண்டிலே கிருஷ்ணா நதி நீர்த்திட்டம்.

1984-ஆம் ஆண்டு பட்ஜெட்டை நாம் புரட்டி பார்க்கிறபோது இந்த ஆண்டு அரசு ஊழியர்களுக்கும், விவசாயிகளுக்கும் நாம் தந்திருக்கிற திட்டங்கள், அனைத்து மாநிலங்கள் வைத்திருக்கிற பட்ஜெட்டைக் காட்டிலும், நம்முடைய மாநில பட்ஜெட் வழி காட்டியாக

Human resourses development-க்கு

வழி வகுக்கிற ஒரு பட்ஜெட்—ஆக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

45 மாதகாலத்தில் வியத்தகு சாதனைகளை புரிந்த இந்த அரசாங்கத்தை மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், இந்த மாமன்றத்திலோ அல்லது வெளியிலோ பாராட்டியிருக்கிறார்களா ?

சத்துணவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது, தட் டேந்தும் தரித்திர நாராயணர்களாக ஆக்கும் திட்டம் சத்துணவுத் திட்டம் என்று சொன்னார்கள். தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லும்போது யாருக்கு தன்னிறைவு என்று கேட்டார் கள் ? உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி கொச்சை மொழியில் ஏளனமாக கக்கூஸ் மாநாடு என்று சொன்னார்கள். அவர்கள் கார்யில் கலந்து கொள்ளவும் இல்லை. கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வரும் என்று அறிவித்தபோது, கெட்டிக்காரத் தம்பியும் அப்பாவி அண்ணனும் என்ற கதையைச் சொன்னார்கள். தண் ணீர் வருமா என்று எழுதினார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், நாங்கள் சிறைக்குப்போவோம் என்று சொல்லி, போராடி சிறைக்குச் சென்றார்கள். அதையும் பாராட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே அரசு ஊழியர்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி செய்தியாளர்களிடம் பேசும் போதும், அல்லது சட்டமன்றத்திலே பேசும்போதும் 5,000 தானே கொடுக்கிறார்கள் என்று கேலி பேசினார்கள். ஓய்வு பெற்ற போது ரூ. 10,000 அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது எந்த மாநிலத்திலும் இல்லை என்று சொல்கிறார்கள். இதை அரசு ஊழியர்கள் அனைவரும் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள், என். ஜி. ஜி. ஓ. சங்கத்தின் தலைவரான சிவ இளங்கோ போன்ற வர்கள் இந்த மாநில அரசு எல்லா மாநிலங்களுக்கும் வழியாக இருக்கிறது என்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாராட்டுகிற மனம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வராது. அதுமட்டுமல்ல, 1978-லிருந்து ஏறத்தாழ 27 முறை அகவிலைப் படிகளை உயர்த்திக் காட்டிய இந்த அரசாங்கம் ஓய்வு பெற்றால் ரூ. 10,000 என்று கூறியபோது வட்டிக் கணக்கைப் பார்த்தார்கள். இதே சட்டமன்றத்திலே ஆட்டைத் தூக்கி

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

மாட்டிலே போட்டு, மாட்டை தூக்கி ஆட்டிலே போட்டு, வட்டித் தொகை எவ்வளவு என்ற கணக்கை கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் பெரிய அதிர்ச்சி தரும் வகையில், புதியதாக சேர்ந்தவர்கள் ஏறத்தாழ ரூ. 30,000 பெறக்கூடிய அறிவிப்பை அரசு ஊழியர்கள் அனைவரும் வரவேற்றிருக்கிறார்கள். இதிலே மிக மிக முக்கியமான ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன். ஓய்வு பெற்றால் தருகின்ற பணத்தை ரிடையர்மென்ட் பெனிபிட் என்ற அடிப்படையிலே தரப்படும் என்று சொன்னால், அது இன்கம் டாக்ஸ் கணக்கிலே ஈர்க்கப்படலாம். அதை மாற்றி பிராவிடண்ட் பண்ட் கிராஜுவிட்டி என்று வருகிறபோது அதற்கு நோ இன்கம் டாக்ஸ். அந்த அடிப்படையிலே அரசு ஊழியர்கள் சேமிக்கும் பழக்கம் இல்லாதவர்கள். வாய்க்கும் வயிற்றுக்கும் கஷ்டப்படுகின்ற அந்த அரசு ஊழியர்கள் மாதம் ரூ. 20-க்கு சேமிக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். பிராவிடண்ட் பண்டிலிருக்கிற பணத்தை அவ்வப்போது லோனாக வாங்கிவிடுகிறார்கள். ரிடையர் ஆகும் போது ரூ. 2, 3 ஆயிரம் கூட கிடைப்பதில்லை. இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு முழு தொகையும் கிடைக்கும் வகையில் செய்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களின் குடும்பத்திலுள்ளவர்கள், என்னுடைய கணவன் ஓய்வு பெற்றால், என்னுடைய தந்தை ஓய்வு பெற்றால், பெரும் தொகை கிடைக்கும் என்று எதிர்பார்த்து வரவேற்றிருக்கிறார்கள். பெனிபிஷியரிஸ் வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் சிலர் இன்னும் கேலிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் இரண்டு முறை ஊதியக் குழுவை போட்டிருக்கின்ற ஒரே அரசாங்கம்—புரட்சித் தலைவருடைய அரசாங்கம். இது தவிர, ரிவிஷன் ஆப் ஸ்கேல்ஸ் ஆப் பே—அரசு ஊழியர்கள் 1978 ஆம் ஆண்டிலிருந்து போராடுகிறார்கள். எல்லா வழக்குகளையும் வாபஸ் பெற்ற அரசாங்கம் புரட்சித் தலைவருடைய அரசாங்கம் என்பதற்கு உதாரணமாகச் சொல்கிறேன்.

12 பேர்களுக்குக் கடுங்காவல் தண்டனை. 524 பேர்கள் மீது வழக்கு. எல்லா வழக்குகளையும் வாபஸ் பெறவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு போட்டு இருப்பதற்காக அரசு ஊழியர்கள் இன்றைக்குப் பாராட்டி மெச்சிக்கொண்டிருக்கிறார்கள். 1974-லே பட்டதாரி ஆசிரியர்கள் பட்ட பாட்டினை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். பட்டதாரி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தராத திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, அவர்களுடைய அவல நிலைமையை போக்கமுடியாமல் இருந்தது. தி.மு. கழகம், தற்போது பட்டதாரி தொகுதியிலே தேர்தல் நடைபெறுகிறபோது. அந்தப் பட்டதாரி வாக்காளர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு காத்திருக்கிறார்கள். இந்த அரசு வந்தபிறகுதான் பட்டதாரி ஆசிரியர்கள் மீது போட்ட வழக்குகளை, குட்டந்தை மாநாட்டிலே புரட்சித்தலைவராலே, 1978 ஆம் ஆண்டில் வாபஸ் பெறப்பட்டது. எனவே தேர்தல் எப்போது



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

வரும், புரட்சித் தலைவர் பின்னாலே எங்கள் பலத்தைக் காட்டுவோம் என்று, இந்த மாதம் 18 ஆம் தேதி, பட்டதாரிகளுக்கான தேர்தல் நடைபெறுகிறபோது, அத்தனை பேர்களும், சூளுரைத்து புரட்சித் தலைவர் ஆதரவு தெரிவிக்கின்ற அல்லது கழகம் தெரிவிக்கின்ற, அவருடைய கருணைக் கண்களைக் காட்டுகின்ற அந்த வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வோம் என்று பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமல்லாது, அத்தனை பட்டதாரிகளும் தயாராக இருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்கு 1971-72-லே 1 கோடி ரூபாயை ஒதுக்கியது. ஆனால் இன்றைக்கு 10 கோடி ரூபாய் என்று சொல்லி அறிவிப்பு எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. இப்படி ஒவ்வொன்றாக நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள் என்று சொல்கிறபோது, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிலே சரிந்து கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக்கழகம் எந்தத் திட்டத்தையும் பாராட்டாத சூழ்நிலைகளை நான் ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டினேன்.

அடுத்து நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதையுமே பாராட்டாத தி.மு. கழகம் இந்த மாவட்டங்களைப் பிரித்தது பற்றியா பாராட்டிவிடப் போகிறது. மாவட்டங்களைப் பிரித்தது பற்றி, இங்கே மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேசினார்கள். இதற்கு முன் எஸ்.பி. அம்புரோஸ் அவர்கள் தலைமையில் போட்ட தனி நபர் குழு, மாவட்ட வருவாய், நிர்வாக அறிக்கை 44 ஆம் பக்கத்திலே ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். 1973 ஆம் ஆண்டு நிர்வாகச் சீர்த்திருத்த ஆணைக்குழு, அடுத்த 7, 8 ஆண்டுகளுக்குள்ளாக, 6 புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டு, இம்மாநிலத்தில் மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 20 ஆக அமைக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்தது. ஆக, 1973 ஆம் ஆண்டிலே வழங்கப்பட்ட பரிந்துரைக்கு, 1973 ஆம் ஆண்டுக்குப்பிறகு, ஒரே ஒரு மாவட்டம் தவிர, வேறு அறிவிப்புகளை வெளியிடாத அரசாங்கம்தான் தி.மு. கழகம் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதற்குப் பின்னாலே இன்றைக்கு பல்வேறு மாவட்டங்களை பிரித்து, அண்ணா மாவட்டம் என்று வைத்தபோது, அண்ணாவை ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளே வைத்துப் பார்க்கவேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். ஏன் நிதி ஒதுக்கம் செய்யவில்லை என்று கேட்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பட்ஜெட்டிலே நிதி ஒதுக்காத போது, ரெவின்யூ அட்மினிஸ்ட்ரேஷன் அல்லது டிஸ்டிரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் என்று ஒரு தனி ஹெட் இருக்கிறதே, அதிலே வைத்துக்

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லையா? அதேபோல் ரிவைஸ்ட்
எஸ்டிமேட், அல்லது சப்ளிமெண்டரி பட்ஜெட் வருகிறபோது.
அதிலே சேர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லையா? நியூ
ஸ்கீம் என்று பார்ட் 2 ஸ்கீமிலே அறிவிக்கக்கூடிய அந்த வாய்ப்பு
இல்லையா? இன்றைக்கு ஒரு குழு போட்டிருக்கிறார்கள்.
அந்தக் குழு போய் விசாரித்து எப்படி பிரிக்கவேண்டும் என்று
தன்னுடைய அறிக்கையைக் கொடுக்கவேண்டும். அப்படி வரு
கிறபோது, ஒரு புது ஸ்கீமாக, பார்ட்-2-லே சேர்த்துக்
கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே
பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும்,
அதை அண்ணா மாவட்டமாக அறிவிக்காவிட்டால் போராட்
டம் வரும் என்று சிலர் வெளியிலேயே பேசியிருக்கிறார்கள். போ
ராட்டம் தேவையற்றது. ஆனால் ஒன்றை நான் சொல்ல
விரும்புகிறேன். அது எப்படிப்பட்ட போராட்டமாக இருந்
தாலும், செங்கற்பட்டு மாவட்டத்திலே உள்ள அத்தனை
மக்களும், ஆர்த்து எழுந்து, அதை சந்திக்கத் தயாராக இருக்
கிறார்கள். இங்கே கேட்கிறார்கள். அம்பேத்கார் பெயரிலே
காயிதே மில்லத் அவர்கள் பெயரிலே ஏன் மாவட்டங்கள் அமைக்க
வில்லை என்று கேட்கிறார்கள். நான் மெத்தப் பணிவன்போடு
ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
(குறுக்கீடு).

திரு. துரைமுருகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நண்
பர் பிராகரன் அவர்கள் பேசும்போது குறுக்கிடவேண்டும்
என்று நான் நினைக்கவில்லை. ஒரு விளக்கம், அவர்கள் விரும்
பினால் கேட்கிறேன். அண்ணா மாவட்டம் என்று செங்கை
மாவட்டத்திற்குப் பெயர் வைக்கவேண்டும் என்று போராடப்
போகிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். அப்படி தெரிவித்த
வர் கலைஞர்தான். ஆனால் அந்தப் போராட்டத்தை செங்கை
மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் ஆர்த்து எழுந்து எதிர்ப்
பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால், செங்கை
மாவட்டத்திற்கு அண்ணா பெயர் வைக்கக்கூடாது என்று
ஆர்த்து எழுந்து போராடப் போகிறாரா என்றுதான் நான்
விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : அண்ணாவினுடைய பெ
யரை எந்த மாவட்டத்திற்கு வைத்தாலும் பொருத்தமானது
தான். அண்ணாவினுடைய பெயர் திண்டுக்கல் மாவட்டத்
திற்கு என்று இருந்தாலும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு
என்று இருந்தாலும், அது ஒன்றுதான். அண்ணா அவர்கள்
இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் முழுவதற்கும், ஏன் உலக நாடு
களில், ஐக்கிய நாடுகளின் சபைகளிலே அண்ணாவின் பெயரை உச்சரிக்கக்
கூடிய அளவிற்கு அண்ணா அவர்களின் பெருமையையும், புகழையும் பரப்பித்



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

தலைவர் அவர்கள் இன்றைக்கு கட்டிக்காத்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் மக்களை திசை திருப்புவதற்காக, அல்லது மக்களைப் பிரித்து போராடுவதற்காகச் செய்யக்கூடிய சூழ்ச்சியாக இந்தப் போராட்டம் இருக்குமானால் செங்கற்பட்டு மாவட்ட மக்கள் அதைச் சந்திப்பார்கள் என்ற பொருள்படி நான் சொன்னேன். உங்கள் உண்மையான வாதத்திற்காக நான் ஒன்றை இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலே இருக்கக்கூடிய மீனம்பாக்கம் ஏர் போர்ட்டிற்கு. அண்ணா ஏர் போர்ட் என்று பெயர் வைத்தாக வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். அதை ஏன் நீங்களும் கேட்கக்கூடாது? அண்ணா ஏர் போர்ட் என்று அதற்கு பெயர் வைத்தாக வேண்டும் என்று நீங்களும் கேளுங்களேன். இதிலே நியாயம் இருக்கிறது என்று தமிழ்நாட்டு மக்கள் சொல்வார்கள்.

ஆனால் அதை விட்டு, இன்றைக்கு இந்த மாவட்ட பிரிவினை பிரச்சினையை வைத்து மக்களை பிரிக்க வேண்டும், ஜாதிகளை தூண்டிவிட வேண்டும், இன பிரிவுகளை வளர்க்க வேண்டும் என்று இன்னமும் அப்படிப்பட்ட நிலைமையிலேயே அந்தக் கழகம் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அப்படிப்பட்ட நிலைமைகளுக்கு துணை போவார்களேயானால், நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது தவறு. அண்ணாவின் பெயரை கட்சிக்கு வைத்தவர்கள் நாங்கள். அண்ணாவின் திருவுருவத்தை கொடியிலே பொறித்தவர்கள் நாங்கள். அண்ணாவின் பெயரால் தமிழகத்தின் ஆட்சியையே நடத்துகிறவர்கள் நாங்கள். அண்ணா வாழ்ந்த வீட்டை தமிழக அரசினுடைய நினைவுச் சின்னமாக ஆக்கியவர்கள் நாங்கள். பாரதத்தினுடைய குடியரசுத் தலைவரை வைத்து அந்த நினைவுச் சின்னத்தை திறந்து வைத்தவர்கள் நாங்கள். அண்ணாவின் பெயராலே ஒரு பல்கலைக் கழகம் இருக்க வேண்டும், வெளிநாட்டிலேயிருந்து வரக்கூடியவர்கள், மாணவர்கள், வட நாட்டிலேயிருந்து வரக்கூடிய மாணவர்கள், அண்ணா என்ற நாமத்தைச் சொல்ல வேண்டும். அண்ணா பல்கலைக் கழகம் என்று சொல்ல வேண்டும். நீ எங்கேயிருந்து வருகிறாய் என்று கேட்டால்,

**I can from Anna University**

**I hail from Anna University**

என்று எல்லா மாணவர்களும் சொல்லக்கூடிய விதத்திலே, பல்கலைக் கழகம் கண்டவர்கள் நாங்கள். உங்கள் ஆட்சியில், அண்ணா மேம்பாலம் தவிர, அண்ணா கலைக் கல்லூரியைத் தவிர டேன்ஜபிளாக, கான்கிரீட்டாக அண்ணாவினுடைய பெயரை நிலை நிறுத்த வேண்டும் என்ற அளவிலே ஏதாவது செய்தீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

சென்னை பல்கலைக் கழகத்திற்குப் போகிறார், புரட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் பட்டம் தருகிறார்கள். அப்பொழுதே உடனேயே புரட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கிறார்கள். அண்ணா பெயராலே ஆராய்ச்சி நடத்த வேண்டும். அவருடைய கருத்துக்கள் வெளியாக வேண்டும். அந்தக் கருத்து கருவூலங்கள் இந்த நாட்டு மக்களுக்கு இன்னும் அதிகமாக தெரிந்திட வேண்டும் என்பதற்காக 15 லட்சம் ரூபாயை, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் தருகிறேன் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அள்ளி வழங்கியிருக்கிறார்கள். அப்படி அண்ணா பெயராலே ஆராய்ச்சி நடத்துவதற்கு பல்கலைக் கழகத்திலே இடம் ஒதுக்கியது இந்த அரசினுடைய தலைவர், புரட்சித் தலைவர் அவர்கள்.

ஆனால், டாக்டர் பட்டம் பெற்றவர்கள், வேறு இடத்திலே பெற்றவர்கள், இப்படிப்பட்ட சூழ்நிலையை யோசிக்காதது ஏன் என்று கேட்க விரும்புகிறேன். சட்டசபைக்குள்ளேயே டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய உருவப் படத்தை, அவர்கள் ஆட்சியில் இருந்தபோதே, திறப்பதற்கு வாய்ப்பை இழந்தவர்கள், காயிதே மில்லத்துடைய படத்தை சட்டசபைக்குள்ளே ஆட்சியில் பொறுப்பேற்றிருந்த 7½ ஆண்டுக் காலத்தில் செய்ய முடியாதவர்கள், இன்றைக்கு அவர்களுக்காக வெளியிலே பரிந்து பேசுவதைப் பார்த்து தமிழக மக்கள் சொல்கிறார்கள், இந்தப் பாதை சரியான பாதை அல்ல, அண்ணாவின் பெயரை மறைத்தவர்கள் நீங்கள் என்று வெளியிலே இருக்கிற மக்கள் சொல்கிறார்கள். நீங்கள் ஆளுகிறபோது சென்னையிலே உங்கள் பெயரை வைத்துத் தானே நீங்கள் மாளிகையைக் கட்டினீர்கள்? ஆனால். அண்ணாவின் பெயரை நிலை நாட்டுகிற அளவுக்கு என்ன சாதனை செய்தீர்கள், எங்களுடைய அ. தி. மு. கழகத்தைப் போல என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களின் செல்வாக்கு, இந்தப் பெருந்தன்மையின் காரணமாகத்தான் வளர்ந்து கொண்டேயிருக்கிறது.

வளர்ந்து கொண்டேயிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சென்னை கிறிஸ்தவ கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் ஒரு பெரிய ஆராய்ச்சியை நடத்தியிருக்கிறார்கள். ஸ்டேட்டிஸ்டிக் டிபார்ட்மெண்ட்டைச் சார்ந்த மாணவர்கள் தமிழ்நாடு எங்கும் போனார்கள். தமிழ்நாடு எங்கும் போய் மிகத் தீவிரமாக ஒரு ஆராய்ச்சியை நடத்தினார்கள். தாம்பரம் கிறிஸ்துவ கல்லூரியில் இருந்து வரப்பட்ட அந்த விவரத்தை இங்கே நான் வைக்க விரும்புகிறேன். 1,800 பேர்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மாவட்டமாக அனுப்பி, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மாவட்டத்து மக்களையும் பார்த்து, பிறகு அவர்கள் தெரிவித்திருக்கிற ஒரு முடிவு. தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கு இன்றைக்கு மிகப் பெரிய செல்வாக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை நான் படிக்கிறேன்.



1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

Mr. M. G. Ramachandıan, the Chiaf Minister of Tamil Nadu is strongly supported by 48 persent of the people. Mrs. Indire Gandhi is strongly supported by 21 persent of the people, Mr. M. Karunanidhi, Leader of the D. M. K. and former Chief Minister of Tamil Nadu by 17 persent of the people.

என்று அவர்கள் புள்ளி விவரத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே தமிழக முதல்வர் அவர்களைப் பற்றிச் சொல்கிறபோது,

He gets . massive support from the poor and the uneducated from those living in hamlets small villagsse 55 persent of the women strongly support him. He has alo, supporters and well wishers in all sections of the population.

என்று தெரிவித்திருக்கிறார்கள். அதே மாதிரி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செல்வாக்கும் வளர்ந்து கொண்டே போகிறது ஆண்டுக்காண்டு என்ற புள்ளி விவரத்தையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். செல்வாக்கு வளர்கிறது என்று சொல்கிற போது மாற்றுக் கட்சி நண்பர்கள் கேலி சொல்லக் கூடும். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதே மன்றத்திலே 38 உறுப்பினர்களாக வந்த திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு 4 உறுப்பினர்களை இந்தப் பக்கம் அனுப்பி வைத்திருக்கிறது என்று சொன்னால், வெளியிலே இருக்கிற அந்தச் சரிவுதான் உள்ளே இன்றைக்கு தெளிவாக தெரிந்து கொண்டிருக்கிறது. வெளியிலே இருக்கிற தொய்வின் காரணமாகத்தான், உள்ளே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட திருப்திபடுத்த முடியவில்லை என்று அந்தச் செல்வாக்கை காட்டிக் கொண்டிருக்கிறது.

அடுத்து இருபது அம்சத் திட்டத்தைப்பற்றி ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திலே நான் பல யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். 20 அம்சத் திட்டத்திலே பல அரிய சாதனை களை நாம் தமிழ்நாட்டிலே புரிந்திருக்கிறோம். 20 அம்சங்களிலே 14 அம்சங்களிலே நாம் நல்ல சிறப்பான சாதனைகளை புரிந்திருக்கிறோம். தமிழ் நாட்டு மக்களுக்கு இதிலே மகிழ்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் மக்கள் கேட்கிறார்கள். **What is the direct incentive?** என்று. 20 அம்சத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் நாம். மத்திய அரசாங்கம், குடும்பக் கட்டுப்பாட்டிலே செய்திருக்கிற காரியங்களுக்காக நான்கு குரூப்களைப் பிரித்து இருக்கிறார்கள். அந்த நான்கு குரூப்பிலே மகாராட்டிரம் நம்முடைய குரூப்பிலே வருகிறது. சென்ற 1982-83 ஆம் ஆண்டிற்கு மகாராட்டிர மாநிலத்திற்கு அதற்காக இரண்டரை கோடி ரூபாய் இன்சன்டிவ் ஆக கேஷ் அவார்ட் தரப்பட்டு இருக்கிறது. அதைப்போலவே 20 அம்சங்களிலே ஒவ்வொரு அம்சத்திற்கும் 5 கோடி ரூபாது வீதம் என்று வைத்

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

வைத்து 20 அம்சத் திட்டத்திலே யார் சிறப்பாக எந்த மாநிலம் சிறப்பாக செயல்பட்..ருக்கிறதோ அந்த ரூப்பிற்கு ஒரு அம்சத்திற்கு 5 கோடி ரூபாய் என்ற இன்சன்டிவ் வைப்பாகளானால்—எப்படி குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்காக மகாராட்டிரத்திற்கு 2½ கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் அளித்ததோ அதைப்போன்று—தமிழ்நாடு 20 அம்சங்களிலே 14 அம்சங்களில் முன்னணியில் இருக்கிற காரணத்தினால் 14, ஐந்து கோடி ரூபாய்கள் மொத்தம் 70 கோடி ரூபாய் இந்த மாநிலம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அது ஒரு டைரக்ட் இன்சன்டிவ் ஆக டைரக்ட் அப்ரிசியேஷனாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதை நான் ஒரு யோசனையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்வித் துறையிலே பல்வேறு திட்டங்களை நாம் ஆண்டுக்காண்டு புதிய திட்டங்களை புதிய கோணங்களிலே தீட்டிவருகிறோம். அதிலே வியத்தகு சாதனைகளைச் செய்து வருகிறோம். தமிழ்நாட்டில் எபக்ட்டிவ் லிட்டரசி 1971-ஆம் ஆண்டிலே 39.46 ஆக இருந்தது. 1981-ஆம் ஆண்டிலே, 45.78 ஆக உயர்ந்திருக்கிறது. அகில இந்திய ரீதியிலே பார்க்கிறபோது 1971-இல் 29.45 ஆக இருந்தது. 36.17 ஆகத்தான் உயர்ந்திருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலம் 45.78 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இப்படி நாம் அகில இந்திய குறியீட்டைவிட அதிகமான அளவுக்கு முன்னேறுகிற நிலைக்கு வருந்திருக்கிறோம்.

இன்னொரு புள்ளி விவரத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவர் அவர்களின் உயிர்மூச்சாக அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற சத்துணவுத் திட்டத்தைப் பற்றி முதலிலே படித்தவர்கள் நம்பவில்லை. இந்தத் திட்டம் வெற்றிபெறுமா என்று கேட்டார்கள். ஆனால் முன்னாள் படைவீரர்களுக்கும் இந்த திட்டத்தின் நீட்டிப்பை செய்கிறபோது இராணுவ அதிகாரிகள் எல்லாம் இதைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நோபிள் லாரேட் மதர் தெரசா அவர்கள் பாராட்டுகிற அளவுக்கு மற்ற மாநிலங்கள் இதைப் பின்பற்ற வேண்டுமென்று அறிவிப்பு வந்திருக்கிறது. இதைப்பற்றி இதுவரையில் குறை சொன்னவர்கள் மெத்தப்படித்தவர்கள், பொருளாதாரம் தெரிந்தவர்கள் எல்லாம்கூட 10லிருந்து 15 வயதுவரை உள்ள குழந்தைகளுக்கும் இந்தத் திட்டம் நீட்டிக்கப்படும் என்ற அறிவிப்பு வந்தவுடனே அதை பாராட்டி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்தத் திட்டத்தால் இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டும் அல்ல, தேர்ட் வெர்ல்டு கன்ட்ரிஸ் என்று சொல்லப்படுகிற வளரும் நாடுகளில் ஹ்யூமன் டெவலப்மெண்டை இது உருவாக்கும் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.



[1984 மார்ச் 8] [திரு ஜே. சி. டி. பிரபாகரன்]

தொழில்களைப் பொறுத்தவரைக்கும் ஒன்றைச் சொல்லி
முடிக்கிறேன். மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டில் போடுகிற மூல
தனம் 10 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது 8 சதவீதம், தற்
போது, 4 சதவீதமாக அது குறைந்திருக்கிறது என்பது வருத்தத்
திற்கு உரிய ஒன்றாக இருக்கிறது. 1977-லிருந்து 1983-ஆம் ஆண்டு
வரை மீடியம் அன்ட் லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ் 449 தமிழ்
நாட்டிலே உருவாக்கியிருக்கிறோம். ஆண்டுக்காண்டு பல்வேறு
நிலைகளிலே 1980-ஆம் ஆண்டுலிருந்து லெட்டர் ஆப் இன்டட்
அதிகப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்காக ஒரு
கால அவகாசத்தை வைத்து உடனடியாக அவைகளைத் தரு
வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இதிலே ஒத்
துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி நிறுவனங்கள் துறை பொது மக்களால் பாராட்டக்கூடிய
அளவுக்கு தமிழ்நாட்டிலே நல்ல பணிகளைச் செய்து வருகிறது.
வடநாட்டிலே லோன் கிடைக்கவில்லை என்று சொல்வதைப்
போன்ற நிலைமைகள் தமிழ்நாட்டிலே இல்லை. இல்லாத நிலைமை
இருக்கிறது. ஜாதி மத உணர்வு பார்க்காது இன உணர்வு பார்க்
காது நாம் நியாயமாக செயல்படுகிற காரணத்தினாலே இந்தத்
துறை செய்கின்ற காரியங்களிலே குறியீட்டை எய்தியிருக்கிறது.
இது ஒரு ' Evaluation ' என்ற நிலையிலே உள்ள திட்டம்,
நம்முடைய தமிழ்நாடு இதிலே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்
காட்டாக இருக்கிறது. ஆனால் இதிலே அதிகாரிகள் போதாத
நிலை இருப்பதாக அறிகிறேன். அடிகுவேட் ஸ்டாப் இருக்குமா
னால் இந்தத் துறை இன்னும் நல்லப் பணிகளைச் செய்ய முடியும்.
சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் எம்ப்ளாய்மென்ட்
எக்ஸ்சேஞ்சிலே கம்ப்பியூட்டரைஸ் பண்ணக்கூடிய திட்டம் இருக்
கிறது. தமிழ்நாட்டிலே பதிவுசெய்து வேலைவாய்ப்புப் பெற்றவர்
கள் 1973-74 ஆம் ஆண்டில் 8.7 சதவீதமாக இருந்தது. 1982-
83-ஆம் ஆண்டிலே 13.7 சதவீதம் வேலைவாய்ப்பு அலுவலகங்
கள் மூலமாக வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்
கிறது.

(பிற்பகல் 12-10)

விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும் ஒரு குறிப்பு இருக்கி
றது. 1976 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள National Commission
on Agriculture Report ஒன்றை சொல்கிறது

'A common theme running through the preceding sections is the need to have a wide range of programmes to improve the conditions of agricultural labourers.'

லேபரர்ஸ் பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும்

'The strategy in the first phase ought to be to get the problem of poverty under control and to impart certain minimal economic strength to the class of agricultural labourers.'

லேபரர்ஸ் பற்றி அவர்கள் மேலும் சொல்கிறபோது

[திரு ஜே. சி. டி. பிரபாகரன்] [1984 மார்ச் 8

'We first describe a situ tion offering good scope for approaching the problems of agricultural labourers along the lines of labour in org nised industries.; என்று அன்றைக்கு National Comm ssion on Agriculture Report. சொல்லியிருக்கிறார்கள். அதை ஒட்டி தான் இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்களுக்கு உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய திட்டம் குஜராத்தில் இருக்கக்கூடிய சிறிய திட்டம் இன்றைக்கு 'காம்ரஹென்ஸ்வ் ஸகீமாக தமிழ்நாட்டில் உருவாக்குகிற போது விவசாய பெருங்குடி மக்கள் சொல்கிறார்கள் விடுதலை அடைந்த காலத்திலிருந்து எந்த அரசும் செய்யாத ஒரு சாதனை 'அன் ஆர்க்னைஸ்டு செக்டரில் இருக்கக்கூடிய விவசாய பெருங்குடி மக்களுக்கு நாம் போட்டு இருக்கக்கூடிய திட்டத்தை இன்றைக்கு வெகுவாக வரவேற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

அது போல் தான் நம்முடைய சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீர் வரும் என்று சொன்னோம். அப்போது சொன்னார்கள். கெட்டிக்கார தம்பியும் அப்பாவி அண்ணனும் என்று ஒரு கதையைச் சொன்னார்கள். கெட்டிக்கார தம்பி யார், அப்பாவி அண்ணன் யார் என்பது இந்த பட்ஜெட்டில் கிருஷ்ணா நிதி நீர் திட்டத்திற்கு 60 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதன் மூலமாக இந்த திட்டம் வெறும் விளம்பரம் அல்ல என்பது தெரியவருகிகது 1981-ஆம் ஆண்டு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 1984-ஆம் ஆண்டில் 60 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்கீடு பெறுவதன்மூலமாக கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை கொண்டு வந்தது அப்பாவி அண்ணன் அல்ல ஆற்றல் மிக்க அண்ணன் ஜனநாயக தலநாயகர் புரட்சி தலைவர் ஆக இருக்கிறார் என்பதை ஊரார் உணருகிறார்கள், சென்னை நகருக்கு குடிநீருக்கு கழிவுநீரை அகற்றுவதற்கு ஒதுக்கி இருக்கக்கூடிய 15 கோடி ரூபாயும், புதிதாக சேர்க்கப்பட்டு இருக்கிற வில்லிவாக்கம் பஞ்சாயத்து கொளத்தூர் பஞ்சாயத்து, திருமங்கலம் பஞ்சாயத்து, மேற்கு கே.கே. நகர் கோன்ற பகுதிகளுக்கு 15 கோடி ரூபாயும் இந்த பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவர் புகழ் பாடக்கூடிய இந்த நிதி நிலை அறிக்கையை பாராட்டி, வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு என். வரதராஜன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பின்னால் முடிக்கிறபோது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ''தொடர்ந்து நடைபோட்டுச் செல்லும் அரிமா, ஓரிடத்தில் நின்று' தான் ஏறு நடை போட்டு வந்த தொலைவைத் திரும்பிப் பார்த்து, தான் செல்ல வேண்டிய தொலைவை ஏறெடுத்துப் பார்க்குமாம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரிமா திரும்பிப் பார்த்து வந்த பாதியில் என்ன



1984 மார்ச் 8] ]திரு என். வரதராஜன்]

என்ன இடர்பாடுகள் இருந்தது என்பதை அறிந்து செல்கிறதா? அல்லது அது வந்த பாதையை கவனிக்காமல் செல்கிறதா என்பதை தான் இந்த நிதிநிலை அறிக்கையில் காண முடிகிறது. ஒருவேளை அரிமாவுக்கு சிந்தையிலே ஒரு குழப்பம் இருக்கிறது என்பதை தான் இந்த நிதிநிலை அறிக்கையில் காண முடிகிறது. இந்த நிதிநிலை அறிக்கை உள்ளபடியே ஏமாற்றக்கூடிய அளவுக்கு, மக்களை ஏமாற்றக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையை அவையில் படிக்கும்போது ஆளும் கட்சியின் சார்பாக கரகோஷம் போடுகிற அளவுக்கு எந்த திட்டத்தையும் வரவேற்ககூடிய அளவுக்கு இல்லை. ஒரு சமயம் கையை தட்டினார்கள் அதுவும் 1½ தட்டு தான். அத்தோடு நிறுத்தி விட்டார்கள். இன்றைக்குகூட நம்முடைய அருமை நண்பர் திரு. பிரபாகரன் அவர்கள் பேசுவதை நான் கூர்ந்து கவனித்தேன். அவர் இந்த பட்ஜெட்டுக்குள் நுழைந்து சொல்வதற்கு ஒன்றும் இல்லை என்ற அளவுக்கு தான் அவருடைய பேச்சு அமைந்து இருந்தது. நான் கேட்க விரும்புவது எல்லாம், இந்த உண்மையை சொல்வதற்கு ஏன் அச்சப்படுகிறார்கள். அதற்கு காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். இன்றுள்ள நிலைமையைப் பற்றி கவலைதரும்படியான புள்ளி விவரங்கள் நாட்டில் இருக்கிறது. 1981-82-ஆம் ஆண்டு தொழில் உற்பத்தி 8.6 சதவீதமாக இருந்தது 1983-84-ஆம் ஆண்டில் 4.5 சதவீதமாக குறைந்து இருக்கிறது இந்திய தொழில் உற்பத்தி,. அதில் தமிழ்நாடு எங்கே இருக்கிறது? இன்னும் ஒன்று 1982ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 கோடியே 92 இலட்சம் பேர் வேலையில்லாமல இருந்தார்கள். 1983-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 2 கோடியே 12 இலட்சம் பேர் வேலையில்லாமல் இந்த நாட்டில் இருக்கிறார்கள். இந்த அளவுக்கு வேலையில்லாத் துண்ட ட்டம் இந்த நாட்டில் வளர்ந்து இருக்கிறது.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். விலைவாசி உயர்வு என்பது 1973-ஆம் ஆண்டிலேயிருந்து 1983-ஆம் ஆண்டுமுடிய இந்த நாடு முழுவதும் 60 சதவீதம் உயர்ந்திருக்கிறது என்று புள்ளி விவரம் கூறுகிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், வரி எப்படி உயர்ந்திருக்கிறது என்ற புள்ளி விவரம் இருக்கிறது. மறைமுக வரி உயர்ந்து வருகிறது, நேர்முக வரி குறைந்து வருகிறது. நேரடி வரி, வரி வருமானத்தில் 17 சதவீதம், மறைமுக வரி 83 சதவீதம் என்ற அளவிற்கு நாட்டு மக்களைத் தாக்குகிறது.

இதில் உள்ள விசேஷம் என்னவென்றால், தமிழ்நாட்டில் வரித் துறையில் இருக்கின்ற நிலைமையைப் பற்றி நம்முடைய பொருளாதார நிபுணர் திரு. பி. நடராஜன் அவர்கள் வெளியிட்ட குறிப்பு ஒன்று இருக்கிறது. அதில், 1961 ஆம் ஆண்டில்

[திரு என். வரதராஜன்] [1984 மார்ச் 8

வருவாயில் 34 சதவீதம் நேரடி வரியாகவும், 66 சதவீதம் மறைமுக வரியாகவும் இருந்தது. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நேரடி வரி என்பது 7 சதவீதமாகவும், இன்றைக்கு மறைமுக வரி என்பது 93 சதவீதமாகவும் இருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய மறைமுக வரியே 83 சதவீதம்தான்; ஆனால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மறைமுக வரியோ இன்றைக்கு 93 சதவீதமாக உயர்ந்திருக்கிறது என்றால், நாட்டில் ஜனங்களின் மீது போடப்படும் வரியின் காரணமாக அவர்கள் எவ்வளவு கொடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள், விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

ஏற்கனவே உள்ள இந்தக் கடும் விலையேற்றம், கடும் வேலையில்லாத் திண்டாட்டம், கடும் தொழில் நெருக்கடி என்று இத்தகைய நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கும்போது அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் இருக்கிறோம். அதைப் பற்றி நீங்கள் சொல்ல முடியாமல் திணறுகிறீர்கள் என்பது இந்த பட்ஜெட்டைப் பார்த்தாலே தெரிகிறது.

இந்த நாட்டின் பல்வேறு பொருட்கள் 75 சதவீதம் விலை ஏறியிருக்கிறது. ரோடு போக்குவரத்தை நம்மால் கவனிக்க முடியவில்லை. ஏதாவது தொழில்கள் தமிழ்நாட்டில் வளர்ந்திருக்கிறதா? தொழில் வளர முடியாது. நீங்கள் விரும்பினாலும், இந்தியாவில் உள்ள சூழ்நிலையில் தொழில்களை வளர்ப்பதற்கான சூழ்நிலை இல்லை. அந்த நிலையில்தான் நாம் மிகப் பெரிய சிரமத்தில் இருக்கிறோம். அவற்றைப் பற்றி எல்லாம் சொல்வதற்கு இந்த பட்ஜெட் அஞ்சுகிறது. நான் கேட்கிறேன், மருத்துவமனைகளை விரிவாக்க முடியுமா? இருக்கின்ற டாக்டர்கள் லீவ் எடுத்துக் கொண்டு போகின்ற நேரத்தில் அந்த டாக்டர்களுக்கு மறு டாக்டர்கள் வர முடியுமா? நான் கேட்கிறேன், உள்ளாட்சி முழுக்க முழுக்க நொறுங்கிக் கிடக்கிறது. அதற்கு வேண்டிய நிதி ஆதாரம் இல்லாமல் சமூக நலக் காரியங்களை அது தொட முடியாது. நாங்களெல்லாம் வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்குப் போகிறோம். அங்கே பல அபிவிருத்திப் பணிகளை வற்புறுத்துகிறோம். ஆனால் கலெக்டர் கை விரிக்கிறார், பணம் இல்லை, ஆகவே, இதைச் செய்ய முடியவில்லை, அதைச் செய்ய முடியவில்லை என்று சொல்கிறார். ஆகவே, உள்ளாட்சிகள் நிதி ஆதாரம் இல்லாமல் சுருங்கிக் கிடக்கின்றன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கேட்கின்ற நாம், நமக்கிருக்கின்ற அதிகாரங்களில் ஒரு பகுதியை உள்ளாட்சித் துறைக்குக் கொடுக்காவிட்டால், விளக்குகள் எரியாது, ரோடுகள் இருக்காது. குடி தண்ணீர் இருக்காது. ஏதோ உலக வங்கியில் இருந்து பெற்று, தண்ணீர் கொடுத்து, அதைத் திருப்பிக் கட்டுகின்ற அந்த நிலை இந்த நாட்டு மக்களுக்கு எங்கே வரப் போகிறது? ஆகவே, புது வரி போடா விட்டால் பணம் கிடைக்காது.



1984 மார்ச் 8] [திரு என். வரதராஜன்]

பள்ளிக் கூடங்களைப் பார்த்தால், ஒரு வகுப்பு என்று பார்த்தால் 60, 70 குழந்தைகளைக் கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம். எத்தனைக் குழந்தைகளுக்குச் சத்துணவு போடுகிறோம் என்று பிரமாதமாகப் பேசுகிறார்கள். அதைப் பற்றிச் சொல்லுங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. அந்தக் குழந்தைகளின் கல்வி அறிவு என்ன ஆகும்? இதைப்பற்றி கல்வியமைச்சரவர்கள் என்ன சொல்வார்கள் அல்லது நாவலர் அவர்கள் பதில் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். க்க துப் பட்டம் பெற்று, வேலையில்லாத ஆசிரியர்கள் ஒரு ப டித்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க மு யவில்லை. இன்றைக்கு நாம் கேட்கிறோம். பத்தாண்டுகளுக்கு முன்பு படித்துப் பட்டம் பெற்றவர்கள் வாருங்கள், இப்பொழுது பட்டம் பெற்றவர்கள் வேண்டாம் என்று அந்த சீனியாரிட்டிபடி தான் வேலை கொடுக்கும் நிலையில் இருக்கிறோம். அது தான் நம்முடைய நிலைமை. அப்படியானால் பள்ளிகளுக்குப் புதிய ஆசிரியர்களைப் போட முடியாது. வள்ளுவப் பெருந்தகை அன்றைக்குச் சொன்னார், "செய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை" என்று.

இன்றைக்குக் கைத்தறி நெசவாளர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள்? கைத்தறித் துணிக்கு மார்க்கெட் இல்லை. புதிய கைத்தறித் துறை அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறினார்கள், இந்த ஆண்டு 100 கோடி ரூபாய்க்குக் கைத்தறித் துணியை விற்பனைக்காக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப் பெரு முயற்சி செய்கிறோம் என்று. நாம் வாங்கும் கைத்தறித் துணிகளுக்கே—கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. இது பற்றியெல்லாம் பட்ஜெட்டில் இருக்கிறதா?

இன்னொன்றையும் கேட்க விரும்புகிறேன். நாவலர் அவர்களுக்கு ஏன் இந்த அச்சம்? பெரிய அறிக்கையாகக் கொடுத்து இருக்கிறார்கள். தேர்தல் வருவதால் அப்படித் தயாரித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அறிக்கையிலே ஏதாவது ஒரு பக்கத்திலேயாவது, விலைவாசி உயர்வு தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொல்ல முடிகிறதா உங்களால்?

எதற்காக இவ்வளவு தூரம் பயப்படுகிறீர்கள்? உங்களால் சொல்ல முடியாது. அந்த அச்சம் உங்களுக்கு வந்திருப்பதால் இந்த அரிமாவுக்கு ஏதோ பிசகு ஏற்படுகின்றது. ஆகவே உங்களால் நிமிர்ந்த நடையோடு போக முடியவில்லை.

[திரு என். வரதராஜன்] [1984 மார்ச் 8

(பிற்பகல் 12-20.)

திரு. பிரபாகரன் அவர்கள் ஏதோ சொன்னார்கள். நான் படித்துப் பார்த்தேன். ஒன்றும் இல்லை. ஆனால் இதிலே ஒரு திட்டம் ரொம்பப் பிரமாதமான திட்டமாகச் சொல்லப்பட்ருக்கின்றது. அதாவது விவசாயிகளுக்காக காப்புறுதித் திட் ம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே இப்போது நீங்கள் எவ்வளவு வறுமையில் இருக்கிறீர்கள் என்பது தெரிகின்றது. இங்கே இதை மட்டும் அறிவித்ததன் காரணத்தால் தமிழ் நாட்டு மக்களுக்குக் கிடைத்த நன்மை என்ன? இதனால் எத்தனை ஆயிரம் தமிழ்நாட்டு விவசாயிகள் பயன் அடைந்திருக்கிறார்கள். ஆகவே இப்பேர்ப்பட்ட திட்டங்களைக் கொண்டெல்லாம் ஜனங்களையும், விவசாயிகளையும் ஏமாற்ற முடியாது. ஆனால் ஒரு மாநிலத்திற்கு எந்த அளவுக்கு முடியும் என்பதற்கு ஒரு எல்லை இருக்கின்றது. அதற்கு மேல் தாண்ட முடியாது. தாண்டுகின்ற இடத்திற்கு நீங்கள் வரவில்லை. ஆனால் இருக்கின்ற நிலைமைகளை வைத்துக் கொண்டு அந்த காப்புறுதித் திட்டத்தை உங்களால் அமல்படுத்த முடியவில்லை. இதுதான் இன்றைக்கு தொடர்ந்து தாலுக்காக்களிலும், மற்ற இடங்களிலும் உள்ள நிலைமை.

அடுத்து கடைசியாக இக் காப்புறுதித் திட்டத்திற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 கோடி ஒதுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. அதாவது செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் அதாவது அண்ணா பிறந்த நாளில் செயலுக்கு வரும் என்று அறிவிக்கிறீர்கள். ஆனால் உண்மை நிலைமை என்ன? அண்ணா பெயரையும் தவறாகத் தான் பயன்படுத்துகிறீர்கள். அதாவது அதற்கிடையில் தேர்தல் வந்துவிட்டால் பிரச்சாரத்தில் ஒன்றாக இதுவும் சேரட்டும் என்ற எண்ணத்தோடு தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றதே தவிர இதிலே வேறு என்ன நோக்கம் இருக்க முடியும்? இதை நிறைவேற்றுவதற்கு பணமும் ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆனால் ஏதோ எழுதுகிறீர்கள். இந்தத் தொழிலாளர் நலத் துறையில் உழவுத் தொழிலாளர்களுக்காகக் காப்புறுதித் திட்டத்தை ஏற்படுத்துகிறோம் என்று ஒரு சின்ன வரி எழுதுவதற்கு உங்களுக்குப் பேனா ஓடவில்லை. இன்றைக்குத் தமிழ் நாட்டிலே நிலப்பிரபுக்களிடத்திலே சிக்கித் தவிக்கின்ற தொழிலாளர்களுக்குச் சட்டக் கூலி கிடைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்கின்ற வகையிலே இந்தத் தொழிலாளர் நலத் துறையில் ஒரு பிரிவை உருவாக்க முடிகின்றதா உங்களால்? மேலும் உழவுத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் உற்பத்தியின் மூலம் தாங்கள் செலவழித்த தொகை திருப்பிக் கிடைக்கும் என்ற நிலைமை இருக்கின்றதா என்பதை எல்லாம் சிந்திக்க வேண்டாமா? ஆகவே நல்ல நிலைமைகளை ஏற்படுத்தாமல் காப்புறுதித் திட்டம்



1984 மார்ச் 8] [திரு என். வரதராஜன்]

என்று சொல்லி விடுவதால் மட்டும் தப்பித்துக்கொள்ளலாம் என்று கருதாதீர்கள். அப்படி வெறுமனே நினைத்துக் கொண்டு இருந்தால் திட்டம் தோல்வி அடையும். அப்படித் தோல்வி அடைந்தால் அது உங்களுக்குத் தோல்வி; ஆனால் தமிழ்நாட்டு மக்களுக்கு வேதனை என்பதை நான் இங்கே சொல்ல வேண்டி இருக்கின்றது.

அடுத்து சிறு தொழிலைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 1979 ஆம் ஆண்டிலே 22,254 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டன. இப்போது அதாவது 1983 ஆம் ஆண்டிலே 40,925 சிறு தொழில் பிரிவுகள் பதிவு செய்யப்பட்டன என்று சொல்கிறீர்கள். இது தான் தொழில் வளர்ச்சியின் அடையாளமா? பெருந் தொழில்களைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்கார் நமக்கு பட்டை நாமம் போட்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆனால் இரண்டு, மூன்று நாட்களாக நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். மத்திய சர்க்காரைப் பற்றி ஒரு இலேசான குரல் கூட கொடுக்கப்படவில்லை. அப்படி ஒரு இலேசான குரல் கூட வரவில்லை என்றால் என்ன காரணம்? அச்சம் தான் காரணம். தேர்தலுக்கான உறவு ஏற்படுகின்ற போது உங்களுடைய குரல் மங்குகின்றது. ஆனால் உறவுகள் எதுவும் இல்லை என்று வந்து விட்டால் அப்போது தான் அண்ணாவுடைய கொட்டேஷன் எல்லாம் வந்து சேருகின்றது உங்களுக்கு.

தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு நடந்த போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதிலே கலந்துகொண்டார்களே, அதிலே கையெழுத்திட்டார்களே, ஆனால் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்கின்ற போது ஏன் பின்வாங்குகிறீர்கள்? அதிலே அண்ணா அவர்களின் கொள்கையும் இருக்கின்றபோது ஏன் நீங்கள் பின்வாங்கவேண்டும். ஆகவே உங்களுடைய நிலைமை பெரும் நெருக்கடியில் கிடக்கின்றது.

இப்போது எப்படி எல்லாம் எழுதுகிறீர்கள் தெரியுமா? முன்பிருந்த தி.மு.க. அரசைக் கடுமையாகத் தாக்குகிறீர்கள். நீங்கள் என்ன எழுதுகிறீர்கள் தெரியுமா? தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று உள்ளவாறு 4,39,464 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று நீங்கள் எழுதுகிறீர்கள். ஏன் இவ்வாறு எழுதுகிறீர்கள்? உங்களால் சொல்ல முடியவில்லை. இது 1969 ஆம் ஆண்டுச் சட்டம். 1977 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலும் அந்தச் சட்டம் அமலுக்கு வந்ததற்குப் பிறகு எத்தனை பேர் குத்தகை விவசாயிகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று

[திரு என். வரதராஜன்] [1984 மார்ச் 8

உங்களால் சொல்ல முடியவில்லை. ஆகவே நான் கேட்கிறேன் குத்தகை விவசாயிகளைப் பதிவு செய்வதற்கு இந்தச் சர்க்கார் செய்த சிறப்பு முயற்சி என்ன? அதற்கான திட்ட ஒதுக்கீடு என்ன? ஒன்றும் இல்லை.

1969 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை உள்ள கிட்டத்தட்ட 15 ஆண்டு காலத்தில் மொத்தமாக 4 லட்சத்து 39 ஆயிரத்து 464 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் தமிழ்நாட்டிலே 20 லட்சம் குத்தகை விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே நிலப் பிரபுக்கள் கொள்ளை அடிக்கின்ற நிலைமை இருக்கின்றது. நிலப் பிரபுக்கள் விவசாயிகளைப் பயிர் செய்ய விடாமல் தடுக்கிறார்கள். ஆகவே அண்ணாவின் கொள்கையை வலியுறுத்துகின்ற இந்த அரசாங்கம் எப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்? அப்படி நல்ல பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்று உங்களால் சொல்ல முடியுமா?

அடுத்து வறுமைக் கோட்டிலிருந்து மக்களை உயர்த்துவதற்கான முயற்சி என்பதைப் படித்துப் பார்த்தபோது எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அது என்ன முயற்சி? நீங்களோ முன்னாலே கொண்டு வந்த ஒப்புதல் வராமலிருக்கிற பினாமி நிலச் சட்டத்தைக் கொண்டு வரத் தயாராகவில்லை. இத்தனை ஆண்டுகளாகத் தடுக்கப்பட்டு விட்டது. உச்ச வரம்புச் சட்டத்தின்படி விதி விலக்குகளை உடைத்து நிறுத்தி நிலத்தை எடுப்பதற்கும் தயாராகவில்லை. அவனுக்கும் 1/2 ஏக்கர், 1/4 ஏக்கர் கொடுப்பதற்கான திட்டமும் உங்கள் கையில் இல்லை. பின் தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள், அவர்களுக்கு எவ்வளவு புகழாரம் சூட்டினாலும் சரி, கிட்டத்தட்ட 1 கோடி பேர்கள் சேர்வார்கள். நீங்கள் ரூ. 40 கோடி கடன் வசதி செய்து கொடுப்பதால் நலிந்த பிரிவினர்களில் 50 சதவீதம் பேர்கள் வறுமைக் கோட்டிலிருந்து மேலே வருவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது என்ன ஜம்பிங்? மாயா ஜாலம்? அது எப்படி வரமுடியும்? இருக்கிற தொழிலுக்கே மின்சாரம் இல்லாமல், மூலப் பொருள் இல்லாமல், விற்பனைக்கு மார்க்கெட் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற பொழுது எப்படி வரமுடியும்?

அடுத்து உங்களிடத்திலே ஒரு விவரம் கேட்க வேண்டியிருக்கிறது. இந்த முதியோர் உதவித் தொகை பெறுவோர் 1,99,639 பேர்கள் என்று கொடுத்துள்ளீர்கள். நாவலர் அவர்கள் பதில் சொல்லும்போது சொல்ல வேண்டும். எந்தத் தேதியிலிருந்து 1,99,639 பேர்கள். மார்க்கண்டேயனுக்கு 16 வயது மாதிரி அது அப்படியே நிற்கிறது. வருகின்ற மனுக்கள் எண்ணிக்கை என்ன? நாம் கொடுத்தது எவ்வளவு? இன்று இந்த அரசாட்சி செய்யவில்லையென்ற குற்றச்சாட்டை மட்டும் சொல்கிறேன்



1984 மார்ச் 8] [திரு. என். வரதராஜன்]

என்று மட்டும் கருதக் கூடாது. நீங்கள் எதை மறைக்கிறீர்கள்? நம்மால் இவ்வளவுதான் கொடுக்க முடிந்தது; இனிமேல் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் நிதி ஆதாரங்கள் வேண்டும். அதற்கு மத்திய அரசாட்சி வற்புறுத்தப்பட வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய வயது முதிர்ந்தவர்கள் அநாதையாக இருப்பவர்கள், விவசாயத் தொழிலாளர்களாக இருப்பவர்கள், ஆகியோர்களுக்கு நிதி உதவியை நம்மால் அளிக்க முடியவில்லை என்பதைச் சொல்வதற்குத் தயங்குவதனால்தான் இதையே திரும்பத் திரும்ப எழுத வேண்டியிருக்கிறது. இதே சர்க்கார் திரும்ப வரப் போகிறது என்று சொல்கிறார்கள். இன்னொரு பட்ஜெட்டிலே எழுதினாலும் இப்படித்தான் எழுத முடியும்.

இன்னொன்று நான் கேட்கிறேன், இதையெல்லாம் ஏன் மறைக்க வேண்டும். மத்திய அரசு நமக்குப் போதுமான நிதி ஆதாரங்களைக் கொடுக்க மறுக்கிறது என்பதைச் சொல்ல வேண்டியதுதானே. இங்கே அனைத்தும் சரியாக நடைபெறுகிறது என்று சொல்கிறார்கள். எப்படி நடைபெற முடியும்? திரும்ப, திரும்ப ரேடியோவிலே நான் கேட்கிறேன். அமைச்சருடைய பேச்சிலே நான் கேட்டிருக்கிறேன், இந்த பட்ஜெட்டில் நிதி அமைச்சர் சொல்லும்போது சொல்கிறார். நான் மிகைப் பற்றை வாங்கியிருக்கிறேன், வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று. எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அதைப் பாவமான காரியமாக நினைக்கவில்லை. நிதி அமைச்சர்தான் ஏதோ பாவமான காரியமாக இந்தச் சட்டமன்றத்திலே சொன்னார். போன கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் ஒரு மாதிரியாகச் சொன்னார், வரவேற்கிறேன். எங்களுடைய நிதி ஆதாரங்களை எல்லாம் டில்லி கொண்டு போய்விட்டு எங்களுக்குக் கொடுக்காமல் இருந்தால் நாங்கள் நிதிப் பற்று வாங்காமல் இருப்பது தவிர்க்கக் கூடியதா? வாங்குவது தவறா என்று நம்முடைய முதலமைச்சர் நல்ல தொனியிலே, நல்ல குரலிலே சொன்னார். ஆனால், நம்முடைய முதலமைச்சர் சொன்னதற்கு முன்னாலே ஏற்கனவே அரசியல் ரீதியாக விழிப்படைந்த நம்முடைய நிதி அமைச்சரோ என்ன சொன்னார்? இல்லை, இல்லை, பற்றாக்குறை இல்லை, எல்லாம் சவுண்டாகத்தான் எங்களுடைய பொருளாதாரம் இருக்கிறது என்று சொன்னார். இப்பொழுது சவுண்ட் குறைந்திருக்கிறதா என்று கேட்கிறேன். இல்லை, நம்மால் நிறைவேற்ற முடியாது. இன்றைக்குப் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாமல் ஏதோ நீங்கள் சொன்னீர்களே, தென் மாவட்டங்களிலே பயங்கரமான மழை அடித்திருக்கிறதே, மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு இந்த பட்ஜெட்டில் ஒரு பைசாவாவது ஒதுக்கியிருக்கிறீர்களா? முடியாது. புதிதாக வரக்கூடிய ஆபத்து ரூ. 100 கோடி, ரூ. 150 கோடி செலவழித்தால் தான் பாதுகாக்க முடியும். ரூ. 13 கோடி கொடுத்தார்கள், டெல்லியிலே இருக்கக்கூடிய புண்ணியவான்கள். வறட்சிக்குத் தமிழ்நாட்டிற்கு ரூ. 13 கோடி கொடுத்தார்கள்.

[திரு. என். வரதராஜன்] [1984 மார்ச் 8

இதைக் கூடச் சொல்ல மறுக்கிறார்கள். மானியமாகக் கொடுத்தது எவ்வளவு? ரூ. 13 கோடியைக் கொடுத்தால் அவன் அழிந்து போயிருக்கிறானே, நொறுங்கிப் போயிருக்கிறானே, ஏன் இந்த பட்ஜெட்டிலே உதவி பற்றி குறிப்பிடவில்லை என்று கேட்கிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்களே பட்ஜெட்டிலே பற்றாக்குறை ரூ. 160 கோடி என்று கொடுத்திருக்கிறார்கள். மிகப் பற்றாக நீங்கள் உட்கார்ந்திருக்கிறீர்கள். உங்களுக்குப் பணம் இல்லையென்று நன்றாகத் தெரிகிறது. இந்தச் சூழ்நிலையிலே நாம் இன்றைக்கு ஏராளமாகப் பணம் செலவழிக்கிறோம் என்று சொன்னால் ஏமாற்றுவதில் கொண்டு போய் முடியாதா? எனக்கு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நடந்த ஒரு சர்ச்சை ஞாபகத்திற்கு வருகிறது. அதை நிதி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருக்கும் போது இராணுவ மந்திரி அங்கே பாராளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார்கள். எதிரிகளை தினம் தினம் இத்தனை இலட்சம் பேர்களைச் சாகடித்தோம் என்று. சில ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுந்து, அமைச்சர் பெருமக்களே, நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய இத்தனை இலட்சம் பேர்கள் அழிந்தார்கள் என்ற கணக்கையெல்லாம் பார்த்தால், மனித சமுதாயத்தினுடைய பூண்டே அழிந்திருக்க வேண்டுமே. உங்களுடைய கணக்குப் பொய்யாக இருக்கிறதே, இன்னும் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதே என்று கேட்ட கதையாக இருக்கிறது. ஆகவே உண்மை என்ன? நம்முடைய பட்ஜெட் பற்றாக்குறை பட்ஜெட். இன்றைக்கு மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது. நம்மால் காரியங்களை நிறைவேற்ற முடியவில்லை என்ற உண்மையை தமிழ்நாட்டு மக்களுடைய கண்களிலிருந்து மறைப்பது இந்த பட்ஜெட். அதுதான் நான் சொல்ல விரும்புவது.

அடுத்து நான் சொல்ல விரும்புவது இன்றைக்கு ரூ. 57 கோடிக்கு நீங்கள் புதிய வரி போட்டிருக்கிறீர்கள். இது எங்கே போய் நிற்கும்? ஏற்கனவே நீங்கள் சொன்னீர்கள், பெட்ரோல் மேலே வரி போட்டார்கள் அவர்கள், நாம் போடுகிற திட்டங்களை அது சீர்குலைக்கிறது என்று. இன்றைக்கு காலையிலே நான் ஒன்றை வானொலியிலே கேட்டேன். நம்முடைய மின்சார வாரியத்தினுடைய தலைவர் ஒன்றை அறிவித்து இருக்கிறார்.

(பிற்பகல் 12—30)

நாங்கள் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது; இங்கே சட்டசபை நடந்து கொண்டிருக்கிற போது அவர் ஒரு சட்ட சபையை நடத்துகிறார். பத்திரிக்கையில் அவருடைய அறிக்கையை விட்டிருக்கிறார்கள். இன்றைக்கு பெட்ரோல் விலை உயர்த்துகிற இந்த மறைமுக வரி எங்கே போய் நிற்கும்?



1984 மார்ச் 8] [திரு. என். வரதராஜன்]

இந்த 57 கோடி ரூபாய் நமக்கு வருவாய் என்று கணக்கு பார்த்தால் இந்த 2,000 கோடி ரூபாயிலே 55 கோடி ரூபாய் மத்திய அரசு மானியமாக தருகிறது. நாம் 170 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் போட்டிருக்கிறோம். இதிலே இருக்கிற வருவாய் இனமே 1,400 கோடி ரூபாய் தான். இதிலே 57 கோடி ரூபாய் என்றால் எவ்வளவு பணம் உயர்கிறது வரியிலே? இன்றைக்கு சில நூறு ரூபாய்களுக்கு பற்றாக்குறை இருந்தாலும் பரவாயில்லை. புதிய வருமானத்திற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இந்த வரி இன்றைக்கு ஆபத்தான நிலையை உருவாக்கும் என்ற பார்வை இல்லாததால் நிச்சயமாக பணவீக்கத்தை உருவாக்கும். விலையேற்றத்தை உருவாக்கும். நெருக்கடியை உருவாக்கும். இந்த பட்ஜெட் சாதாரண மக்களுக்கு உதவிடாது. (மணியடிக்கப்பெற்றது). தலைவர் அவர்கள் பெல் அடிக்கிறார்கள். நம்முடைய தலைவரிடம் நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த பட்ஜெட் அறிக்கையிலே விவசாயிகளுக்கு உதவித் தொகை கொடுப்பதற்காக வழி இருக்கிறதா? இன்றைக்கு நமக்கு 200 கோடி ரூபாய் தேவை. தமிழ் நாட்டிலே விவசாயிகள் புதியதான ஒரு ஆபத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு பயிர்கள் அழிந்திருக்கலாம். கால்நடைகள் அழிந்திருக்கலாம். அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டும். அவர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வழி இருக்கிறதா என்று கேட்க வேண்டியிருக்கிறது, அடுத்து உயர்மட்டக் குழு மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக ஏகமனதாகக் கொடுத்திருக்கிற அறிக்கை. விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடனிலே ஒரு பகுதியை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னது. அதற்கு அவர்கள் 75 கோடி ரூபாய் வரையிலும் செலவாகும் என்று அலுவலர்கள் எல்லாம் கலந்து கொண்டு கொடுத்த அறிக்கை. அந்த அறிக்கை அமலாக்கப்படுமா? இந்த பட்ஜெட்டிலே அதற்கு இடம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து குடும்ப அட்டைகளுக்கு 2 கிலோ தான் கொடுக்கிறோம். இன்றைக்கு 20 கிலோ கொடுக்கவேண்டுமென்று நாம் சொல்கிறோம். இந்த ஆண்டு உணவு உற்பத்தி சிதையும் வருமானம் குறையும். அப்படி இருக்கிறபோது 20 கிலோ குடும்ப அட்டைக்கு கொடுத்தால் தான் விலையேற்றம் இல்லாமல் சாதாரண மக்கள் வெளியே வாங்கி சாப்பிடுவதை தடுக்கிற முறையிலே அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க முடியும். நிவாரணம் அளிக்கக்கூடிய அந்தவழி இந்த பட்ஜெட்டிலே இருக்கிறதா?

அடுத்து விவசாயிகளின் விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை என்று சொல்கிறோம். இன்றைக்கு தமிழ் நாட்டிலே இருக்கிற பல கிராமங்களிலே நீங்கள் கொடுக்கக்கூடிய குவிண்டாலுக்கு 167 ரூபாய் நெல் விலை இருக்கிறதே, ரூ.132 மத்திய அரசு நிர்ணயித்தது; நாய் வறட்சி மற்றும் வெள்ளத்திற்கு உதவித் தொகையாக கொடுக்கிற 35 ரூபாய்; ஆக

167 ரூபாய் இனறைக்கு திருநெல்வேலி மாவட்டத்தில் வெள்ளத் தால் சிக்கித் தவிக்கிற அந்த விவசாயிகளுக்கு கொடுத்தால் அவர்கள் நெல்லை விற்கத்தயாராக இருக்கிறார்களே! அதற்கான பண ஒதுக்கீடு இந்த பட்ஜெட்டிலே இருக்கிறதா ? என்று கேட் கிறேன்.

இன்றைக்குப் பினாமி நிலச் சட்டத்தைக் கொண்டு வந்து, உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்கான பண ஒதுக்கீடு இதிலே இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். ஆகவேதான் இப்போது வந்திருக்கிற பட்ஜெட்டைப் பற்றி நான் சொல்ல வேண்டுமென்றால் சாதா ரணமாக நம்முடைய இநத் மிகைப்பற்று என்பதைப் பற்றிக் கூட இந்த பட்ஜெட்டின் உரையிலே தொகுப்புரை வழங்குகிற போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். அதை மத்திய சர்க்கார் வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்மால் கட்ட முடியாது. இதில் முக்கியமானது என்னவென்றால் நீங்கள் இந்த வழியில் சென்றால் புதிய வரிகளைப் போட வேண்டியிருக்கும். பண வீக்கத்திற்கு எண்ணெய் ஊற்ற வேண்டி யிருக்கும். அதற்கு மாறாக இன்றைக்கு ஒரு காரியம் நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அண்ணா அவர்கள் காலத்திலே அவர்கள் என்ன கனவுகண்டார்களோ அந்தக் காரியம் நடந்துகொண்டிருக்கிறது. தேசத்தினுடைய காங்கிரஸ் அல் லாத மாநிலங்கள், தேசத்தினுடைய எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு இன்றைக்கு நிர்ப்பந்தித்து — சர்க்காரியா கமிஷன் எப்படி வந்தது ? நான் பிரபாகரன் அவர்களைக் கேட்கிறேன். தயாள குணத்தினாலா வந்தது ? தேசத்தினுடைய எதிர்க் கட்சிகளுடைய ஒன்று பட்ட இயக்கம், தேசத்தினுடைய ஜன நாயகத்தின் ஒன்றுபட்ட முயற்சியால், மாநிலங்களுடைய எழுச்சி யின் காரணமாகத் தான் இன்றைக்கு கண் துடைப்பாக போட் டிருக்கிறார்கள். அதை எதிர்த்து நடத்தும்படியான ஒற்றுமை இயக்கத்திலே நீங்கள் விலகி நின்றால் ஜனநாயகத்தைத் தாக்கு வீர்கள் அப்படிப்பட்ட பயங்கரமான தவறு செய்கிற பாதையி லிருந்து, தடம் புரளுகின்ற பாதையிலிருந்து நீங்கள் திரும்பிவிட வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நிச்சயமாக அந்த நிலையில் இருந்து ஒரு மாறுதல் வேண்டும். ஒரு சிறிய கதை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். உங்களுக்கு ஏன் இந்த நினைப்பு வருகிறது என்பதற் காகச் சொல்கிறேன். ஒரு சிறிய ராஜா. அவர் ஒரு முடிதிருத்து கிற தொழிலாளியோடு ஒரு நாள் பேசுகிறபோது கேட்டார். இரவு நேரங்களில் அவர் நகரைச் சுற்றிப் பார்த்து மக்களின் குறைகள் அறிந்து கொண்டு வந்து சொல்லும்படி கேட்டார். அந்த முடிதிருத்தும் தொழிலாளி சொன்னானாம், இந்த நாட்டில் உள்ள மக்கள் எப்படியிருக்கிறார்கள் என்றால், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு எலுமிச்சம்பழம் அளவிற்கு குறையாமல் தங்கம் வைத்திருப்பதாகச் சொன்னானாம். ராஜாவுக்கு





ஆச்சர்யமாக இருந்தது. நாம் இரவு எல்லாம் சுற்றிப்பார்த்த போது மக்கள் தங்களுடைய கஷ்டங்களைச் சொல்லியிருக்கிற போது, இவன் இப்படிச் சொல்வதால், இவனிடத்தில் தங்கம் இருக்கவேண்டும் என்று நினைத்து, 'அவனிடத்தில் மக்களை அனுப்பி தங்கம் வாங்கிக்கொள்ளச் சொன்னானாம். அதன் பிறகு ஒரு நாள் அந்த முடிதிருத்துகிற தொழிலாளியைக் கூப் பிட்டு, இன்றைக்கு மக்கள் எப்படியிருக்கிறார்கள் என்று கேட்டாராம். அதற்கு அவன் பதில் சொன்னான். இன்றைக்கு ஊரிலே உள்ள மக்கள் பட்டினியாலும், பசியாலும் வாடிக்கொண்டு இருக்கிறார்கள் என்று. என்ன அடிப்படையில் இந்த உணர்வு அவனுக்கு வந்தது என்றால், அவனுடைய நிலைமையை மனதில் கொண்டு அவன் சொல்லியிருக்கிறான். அதைப் போலவே மத்திய அரசோடு நீங்கள் உறவு கொண்டு இருக்கின்ற காரணத்தால் இப்படிச் சொல்கிறீர்கள். இந்த பட்ஜெட் பெரிதாக இருக்கிறது. பெரிய உரையாக இருக்கிறது. எங்கள் ஊரிலே சொல்வார்கள், உப்பியிருந்தால் ஊதுகாமாலை என்று, இது ஒரு பொருளாதார ரத்த ஊதுகாமாலை என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களாலே சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை நான் பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் மூன்றாண்டு காலம் தொடர்ந்து வறட்சி இருந்த போதிலும், சமீப காலத்தில் இயற்கைச் சீற்றத்தால் வெள்ளம ஏட்பட்டு பல இடங்களில் சேதம் எற்பட்ட போதிலும் பட்ட காலிலே படும் என்று சொல்வார்களே அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தபோதிலும், ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை தமிழகத்தில் இருக்கிற கோடிக்கணக்கான மக்களை வாழ்விக்கின்ற வகையிலே வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்கள் பாராட்டுகின்ற வகையிலே நம்முடைய நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் முதலில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை என்றும் இந்த அரசு எதுவுமே செய்யவில்லை என்றும் பேசியிருக்கிறார் கள். அவர் இந்த நேரத்தில் சேர்வாரோடு சேர்ந்ததின் விளைவோ என்னவோ இதிலேயுள்ள பல நல்ல திட்டங்களை வரவேற்காமல் கோடானுகோடி ஏழை மக்கள் வருந்துகின்ற வகையிலே கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. கோபால்] [1984 மார்ச் 8

வறட்சிப் பணிகளின் கீழ் ஏறத்தாழ ரூ. 46 கோடி செலவில் 21,726 குழாய்க் கிணறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஆட்சியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, உண்ண உணவும், உடுக்க உடை, இருக்க இருப்பிடம் அனைவருக்கும் தேவை என்பதை அவர்கள் எதிர்க்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த வகையிலேதான் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு ஜனதா சேலையும் வேஷ்டியும் 10 கோடி ரூபாய்ச் செலவில் வழங்குவதற்கு மாண்புமிகு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆணையிட்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாசன வாயில்களைப் பழுதுபார்த்து சீரமைப்பதற்காக ரூ. 17.31 கோடி ஒதுக்கப்பட்டதும் புரட்சித் தலைவர் ஆட்சியில் தான். என்பதை பணிவோடு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, 5 கோடி ரூபாய்ச் செலவில், கிணறு, குளங்களைத் தூர் வாருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அவர்களுக்கு பணிவன்போடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அவர்கள் பேசும்போது சொன்னார்கள், விவசாயத்திற்காக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். தொழிலாளர்களுக்கு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை நான் பணிவன்போடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு வேளாண்மைத்துறையிலே விதை பதப்படுத்தும் பிரிவை 8 இலட்சம் ரூபாய் செலவில் வலுப்படுத்தவும் விதைப் பண்ணைகளில் 18 இலட்சம் ரூபாய் செலவில் பாசன வசதிகளைப் பெருக்கவும் இந்த நிதிநிலை அறிக்கையிலே திட்டமிடப்பட்டுள்ளது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருச்கிறேன்.

கால்நடைகளுக்குச் சிறந்த முறையில் மருத்துவ வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் புதிதாக 26 கால்நடை மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல. கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஏழை எளிய விவசாயிகள், நலிந்த மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக 1984-85 ஆம் ஆண்டிலே 500 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல. 150 இலட்சம் ரூபாய் செலவில் காரைக்குடியில் ஒரு பால்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 மார்ச் 8] திரு. சி. கோபால்]

அது மட்டுமல்ல, உழவுத் தொழிலாளர்களுக்கு காப்புறுதித் திட்டத்தை அமைத்துக் தந்தது இந்த அரசுதான். நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் நலிந்த பிரிவினருக்கும் தொழிலாளர் நலத்துறையிலே ஒரு தனிப்பிரிவை உருவாக்குவதன் மூலமாக அவர்களுடைய நலனிலே அக்கறை கொண்டு, அவர்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதன் மூலமாக அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்தித் தரவேண்மென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்படுகிறது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துச் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, தொழில் செய்யும்போது ஒரு விவசாயி உயிரிழந்து விட்டால் அவன் குடும்பத்திற்கு நிலைமைக்கு ஏற்ப 5,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை அளிக்கப்படும் என்ற உறுதி இந்த நிதிநிலை அறிக்கையில் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அரசு கொண்டுவந்திருக்கிற இத்தகையத் திட்டம் மேற்கு வங்கத்திலே இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் அருமைச் சகோதரர் துரைமுருகன் அவர்கள் நடித்துப் பேசினார். நையாண்டி செய்து பேசினார். நான் ஒன்றை மட்டும் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உணவுப் பொருள் பொது விநியோக முறையிலே எந்த அளவுக்கு இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், பொது விநியோகமுறையில் அரிசி வழங்க வெளி அங்காடிகளிலிருந்து மிக அதிகமான அளவுக்கு அரிசி கொள்முதல் செய்து, வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து கொண்டுவந்து, இங்கே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு விநியோகம் செய்வதன் மூலம் 100 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படுகிறது. அந்தக் கூடுதல் செலவை சமாளித்துக் கொண்டு, 3 ஆண்டுக் காலமாக தொடர்ந்து இந்த நாட்டிலே வறட்சி இருந்தாலும், தேவையான முறையிலே, சரியான முறையிலே பொது விநியோக முறையை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு என்பதை பணிவன்போடு எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. சி. கோபால்] [1984 மார்ச் 8

1967 ஆம் ஆண்டு தேர்தலை சந்தித்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் சில வாக்குறுதிகளை கொடுத்தது, பேரறிஞர் அண்ணா அவர்கள் படி அரிசி இலட்சியம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னால் கோவையிலும் சென்னையிலும் படி அரிசித் திட்டத்தை அமுல்படுத்தினார்கள். ஆக, தமிழ்நாட்டில் படி அரிசித் திட்டத்தை இந்த இரண்டு மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்திய வகையில் ஏற்பட்ட இழப்பு 7 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். ஆனால் கலைஞர் கருணாநிதி அவர்கள் தமிழக முதலமைச்சராக வந்த பின்னால் அந்த 7 கோடி ரூபாயைக் கூட சரி செய்ய முடியாமல், ஒரு ஆட்சியை நடத்த முடியாமல், ஏழை மக்களுக்கு விநியோகித்து வந்த படி அரிசித் திட்டத்தை நிறுத்திவிட்டார்கள். தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியை மூடி மறைத்து விட்டார்கள்; குழி தோண்டி புதைத்து விட்டார்கள். 7 கோடி ரூபாயை சீர் செய்து, ஆட்சி நடத்த வக்கற்றவர்கள் இன்றைக்கு பல கோடி ரூபாயைப் போட்டு ஏழை எளிய மக்களுக்கு நன்மை அளிக்கும் முறையில் பொது விநியோக முறையைச் செயல்படுத்தி, அதன் காரணமாக 100 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்றாலும் தொடர்ந்து அதை நடத்திக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அரசைப் பார்த்து நடித்துக் காட்டுகிறார்கள்; நையாண்டி செய்து பேசுகிறார்கள், கேவலமாகப் பேசுகிறார்கள் என்றால் இன்று அவர்களோடு சேருவதற்கு துடித்துக் கொண்டிருக்கும் வரதராஜன் அவர்கள் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

ரூ. 7 கோடி நஷ்டத்தைத் தாங்கிக் கொள்ளாது அந்தத் திட்டத்தை கைவிட்டவர்கள், இன்று புரட்சித் தலைவர் போடுகின்ற திட்டங்களை எல்லாம் கேலி செய்கிறார்கள் என்று சொல்லும் போது நாங்கள் வருந்துகிறோம்.

சத்துணவுத் திட்டத்தைப்பற்றி பேசும்போது சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 20 கோடி கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். • உண்டி கொடுப்போர் உயிர் கொடுப்போர் என்று சொல்வார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பாராட்ட மாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள், தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை செல்லுகின்ற இடங்களிலெல்லாம், எடைக்கு எடை வெள்ளியும், எடைக்கு எடை பணத்தையும் கொண்டு வருகிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் வள்ளல் தன்மை பெற்றவர்கள். புரட்சித் தலைவர் அவர்கள் வறுமை என்றால் என்ன என்று தெரிந்து வைத்திருக்கிற காரணத்தால், தான், எவ்வளவோ கோடி பணமானாலும், பரவாயில்லை. இந்த நாட்டிலே படிக்கின்ற மாணவர்கள், ஆர்வமும், ஆற்றலும் பெற்று எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய மாணவர்கள், அவர்கள் அறிவு இழந்து, ஆற்றல் இழந்து வறுமையிலே சிக்கி பாதிக்கப்படக் கூடாது என்ற நிலைமைகளை உணர்ந்து வைத்துத்தான் இன்று பல கோடி செலவில் சத்துணவுத் திட்டத்தை எவ்வளவு கோடி பணமானாலும் பரவாயில்லை, இந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்ற நிலைமையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர், இந்தத் திட்டத்தின் மூலமாக, ஏழை எளிய மக்கள் பல லட்சக் கணக்கில்- ஏறத் தாழ 65 இலட்சம் பிள்ளைகளுக்கு ஒரு வேளை உணவு கொடுக்க வேண்டுமென்று இந்த ஆண்டில் மேலும் ரூ. 20 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.



1984 மார்ச் 8] [திரு. சி. கோபால்]

ஆனால் தொழிலாளர்களுக்கு என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள்? நான் கேட்கிறேன். மத்திய அரசாங்கத்தின் சார்பிலே ஒரு நிதி நிலை அறிக்கையை தயார் செய்து அறிவித்தார்கள். அங்கே பெட்ரோல் விலை கூடிவிட்டது என்பதற்காகவும், நிலக்கரி விலை கூடிவிட்டது என்பதற்காகவும் ரூ. 10-க்கு மேலே பிரயாணம் செய்கின்ற டிக்கெட்டுகளுக்கு கூடுதலாக ரூ. 2 போட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே தமிழகத்தில் ஒரு போக்குவரத்துக் கழகம் நடந்து கொண்டிருக்கிறது. நாம் பல மாநிலங்களிலே பார்க்கிறோம் அங்கே நிர்ணயிக்கப்படுகின்ற அந்த பஸ் போக்குவரத்து விலையை விட, பிரயாணிகள் கட்டணத்தைவிட, இன்று இந்திய நாட்டிலேயே குறைவாக பஸ் கட்டணம் உள்ள மாநிலம் தமிழகம் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது- என்பதை நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் பேசுகிறார்கள்.

ரூ. 9 கோடிக்கு 1983 செப்டம்பர் திங்கள் 1 ஆம் தேதியிலிருந்து போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஊதியம் உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதைக் கூட பாராட்டுவதற்கு உங்களுக்கு மனம் இல்லையென்று சொன்னால் புரட்சித் தலைவருடைய ஆட்சியை எப்படியாவது வீழ்த்த வேண்டுமென்றும், அவருடைய ஆட்சிக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் இருக்கின்றனவே ஒழிய, பாராட்டுவதற்குக் கூட மனம் இல்லாத வகையிலே இன்று இருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் ஓய்வு பெற்றுச் செல்லும் போது, ரூ. 10,000 கிடைக்கின்ற வகையிலே இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. மேற்கு வங்கத்திலே இந்தத் திட்டம் இருக்கிறதா கர்நாடக மாநிலத்திலே இந்த திட்டம் இருக்கிறதா? ஆந்திர மாநிலத்திலே இந்தத் திட்டம் இருக்கிறதா ? இல்லை, திராவிட முன்னேற்றக் கழகதைச் சார்ந்தவர்கள் இதற்கு முன்னால் ஆண்டபோது, இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை கையாண்டது உண்டா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இனி புதியதாக அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகிறவர்கள் ஓய்வு பெறுகிறபோது,

கிட்டத்தட்ட, கூட்டு வட்டியும் சேர்ந்து ரூ. 30,000 பெறுகின்ற
இந்த நிலைமையை உருவாக்கித் தந்திருக்கின்றது.
பட்ட அரசு ஊழியர்களுக்கு வாழ்வு அளிக்கின்றது. அப்பேற்
அறிமுகப்படுத்தியது எங்களுடைய புரட்சித் தலைவருடைய திட்டத்தை
தான் என்பதை ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சியினர் இங்கே பல இடங்களுக்குப்
போய் பேசுகின்றபோது இங்கே தொழில் முன்னேற்றம் இல்லை
என்று பேசுகிறார்கள். அவர்களுக்கு ஒரு கருத்தைச் சொல்ல
நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாநிலத் திட்டங்களுக்காக
மத்திய அரசு 20 சதவீத உதவித் தொகையைத் தான் அளித்து
வருகிறது. அப்படி அளிக்கப்படுகின்ற உதவித் தொகையில் கூட
முதல் திட்டத்திலிருந்து இந்த சதவீதம் குறைந்து கொண்டே
வருகிறது என்பதை டில்லியில் அவர்கள் எடுத்துச் சொல்வார்களே
யானால், இங்கே பல திட்டங்கள் பயனுள்ள வகையில் நிறைவேறும்
என்பதை அவர்களுக்குப் பணிவன்போடு எடுத்துச் சொல்லக்
கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தினுடைய செலவு ரூபாய் 3,150
கோடியாக இருக்கவேண்டும் என்று திட்டம் முதலிலே இருந்
தாலும்கூட முதல் 3 ஆண்டுகளிலே இந்த மாநில அரசு திட்டப்
பணிக்களுக்காக ரூபாய் 1,821 கோடி ரூபாய் செலவு செய்திருக்
கிறார்கள். அனுமதித்த செலவை விட ரூபாய் 511.61 கோடி
அதிகமாகச் செலவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே
நான் அவருக்குப் பணிவன்போடு எடுத்துச்சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன். மாநில அரசுகளுக்குக் கொடுக்கவேண்டிய
அந்த சதவீதத்தை உயர்த்திக் கொடுக்கிறபோது புரட்சித்
தலைவர் அவர்களுடைய அரசு இன்னும் பல திட்டங்களைத்
தீட்டுவதற்குக் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை டெல்லியிலே
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்
வார்களானால் அது பயனுள்ள வகையிலே அமையும் என்பதை
இந்த நேரத்திலே நான் பணிவன்போடு எடுத்துச்சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

குறிப்பாக தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிப் பேசுகிற
போது மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் நையாண்
டித்தனம் செய்து பேசினார்கள். நான் ஒன்றை மட்டும் அவருக்கு
ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இந்த மாமன்
றத்திலே ஏசிப் பேசினாலும் அரசு விழாக்களிலே அவருடைய
தொகுதியிலே நடைபெறுகிறபோது தன்னிறைவுத் திட்டத்தின்
மூலமாக விழாக்கள் நடைபெறுகிறபோது, அங்கே பேசிய
மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் எந்த அளவிற்குப்
பாராட்டுகிறார்கள் என்பதும், மாவட்ட ஆட்சித் தலைவரை
பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதும், அந்தப் பகுதியிலே





உள்ள மக்கள் தெரிந்து வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்,
எனவே அவர்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பேசும்
தன்மையைக் கைவிடவேண்டும் என்று நான் இந்த நேரத்தில்
அவருக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். 'தம்பி வா
தலைமை ஏற்கவா என்று அண்ணா அவர்கள் பாராட்டித் தெரிவித்த
தற்கு இணங்க, அந்தத் தலைவருடைய திட்டத்திற்கு ஏற்ப மாண்பு
மிகு நடமாடும் பல்கலைக் கழகம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்
கள் இங்கே நிதிநிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். இந்திய
நாட்டிற்கே வழிகாட்டியாக விளங்குகின்ற பல திட்டங்களை
ஏற்றுக்கொண்டு இருக்கின்ற நிதி நிலை அறிக்கையாக இது
இருந்துகொண்டு இருக்கிறது என்று சொல்லி, வரவேற்று நான்
அமைகிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் பேசு
கிறபோது, பல நல்ல திட்டங்களை நாம் நிறைவேற்றுகிறோம்
என்று சொன்னார்கள், நான் கேட்க விரும்புவது எல்லாம்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வரு
வதற்கு முன்னாலேயே இந்த பட்ஜெட்டிலே மானியக் கோரிக்
கைகள் எல்லாம் வருகிறது. இந்த மானியக் கோரிக்கைகளாக
வருகிற வரவினங்களும் செலவு செய்து கொண்டு, இந்தச் செல
விலேயிருந்து அந்தச் செலவுக்கு மாற்றுகிறோம், அந்தச் செல
விலிருந்து இந்தச் செலவிற்கு மாற்றுகிறோம், பலவிதமான
அபிவிருத்திப் பணிகளைச் செய்கிறோம். ஆனால் நமக்கு புதிய
வருவாயோ மத்திய சர்க்கார் கொடுக்கவில்லை. நமக்கும் புதிய
வருவாய் வருவதற்கு இடமில்லை. ஆகவே ஜனங்களுக்கு
அதிகமான நன்மை செய்யக்கூடிய அளவிலே தான் மாநில சர்க்கார்
இருக்கிறது. மத்திய சர்க்கார் நாசிக்கிலே நோட் அச்சடிப்
பதைப் போல மாநில சர்க்கார் எங்கேயாவது தனியாக நோட்
அச்சடித்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக சர்க்கார் இன்றைக்கு செலவழித்துக் கொண்டிருக்கிறதா?
என்ற விவரத்தை எனக்குத் தெரிவிக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை
அறிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் என்று
கருதுகிறேன். கடந்த ஆண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்
கள் 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை
சபையிலே படித்துக் காட்டிய நேரத்திலே, அந்த அறிக்கையிலே
பக்கம் 8-லே சொல்லப்பட்டிருக்கிற ஒரு விவரத்தை இங்கே ஞாப
கப்படுத்தலாம் என்று நான் கருதுகிறேன். ''மானியங்கள் என்ற
போர்வையில் மத்திய அரசு அதனிடம் சாட்டையை வைத்துள்ளது.
ஏனெனில் மத்திய அரசு அதன் உத்தரவின்படி மானியங்கள்
வழங்குகிறது. திட்டத் தொகையைப் பொறுத்தவரையில் நிதித்

தொடர்புகள் மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.
செய்யப்பட வேண்டும். நமக்குச் சேரவேண்டியதை நம்மிடமிருந்து
கொள்ளை போகக்கூடாது. மாநிலங்களுக்கும் மத்திய அரசாங்
கத்திற்கும் உள்ள தொடர்பு மறு ஆய்வு செய்யப்படவேண்டும்''
என்று மதிப்பிற்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம்
ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் நாள் அன்று சட்டமன்ற மேலவை
யிலே பேசியதை 1983-84 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையினை
வழங்கிய நேரத்திலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த
அடிப்படையிலே பார்க்கிற நேரத்திலே 1984-85 ஆம் ஆண்டுக்
கான நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கக்கூடிய
மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் இந்த அறிக்கையிலே சொல்லப்
பட்டு இருக்கக்கூடிய திட்டங்கள் தமிழகத்தினுடைய வளர்ச்சிப்
பணிகளுக்கான நடவடிக்கைகள் தொழில் வளர்ச்சி, கல்வி
வளர்ச்சி, சமூக நலம் போன்றவைகளுக்கான திட்டங்களை இந்த
அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்களா என்றால் உண்மையிலே
சொல்லப்படவில்லை. அதற்கு மாறாக 1983-84 ஆம் ஆண்டுக்
கான நிதி நிலை அறிக்கையிலே அவர்கள் என்ன சொல்லியிருந்
தார்களோ, அதையே தான் மறு பதிப்பாக 1984-85 ஆம்
ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது
என்று நான் சொல்லக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த அறிக்கையில் சொல்லியிருக்கக்கூடியவைகளிலிருந்து
மிகவும் முக்கியமாக நான் சொல்லவிரும்புவது, தமிழகத்
தினுடைய வளர்ச்சிக்காகவும், தமிழகத்தினுடைய தொழில்
வளர்ச்சிக்காகவும், அடிப்படையாக இருக்கக்கூடியவைகளை
கொண்டு வந்து செய்வதற்கு நம்முடைய அரசாங்கம் தவறி
யிருக்கிறது. அவைகளைப் பற்றி இங்கே எதுவுமே சொல்லப்பட
வில்லை. மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெறவேண்டிய
நன்மைகளைக் கூட கேட்பதற்கு தயங்கியிருக்கிறார்கள் என்ற
குற்றச்சாட்டை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான திட்டங்களை மத்திய
அரசாங்கம் தீட்டக்கூடிய நேரத்தில், மத்திய அரசிடம் இந்த
மாநில அரசுக்கான தொழில் வளர்ச்சி மற்றும் கல்வித் துறை
யிலே இருக்கக்கூடிய அபிவிருத்திகள் மற்றும் பல நடவடிக்கைகள்
பற்றி, இந்த அரசாங்கம் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்கள்
என்ன ? எப்படிப்பட்ட திட்டங்களை ஆலோசனைளை கொடுத்
திருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில்
சொல்லப்படவில்லை. அது மட்டும் அல்ல, 8 வது நிதிக்கமிஷன்
பற்றியும் அது குறித்து இந்த மாநில அரசினுடைய கருத்துக்கள்
பற்றியும் இந்த சபையிலே எதுவும்வைக்கப்படவில்லை. எட்டாவது
நிதிக் கமிஷனிடத்திலே என்ன சொல்லியிருக்கிறோம் என்பதைப்
பற்றிக் கூட, இந்த நிதி நிலை அறிக்கையிலே, நாவலர் அவர்கள்
சொல்லாமல் இருப்பது உண்மையிலேயே வருத்தத்தை தருகிறது





தெலுங்கு கங்கா நதிநீர் திட்டம் சம்பந்தமாக
அத்தோடு தெலுங்கு கங்கா நதிநீர் திட்டம் சம்பந்தமாக
30 கோடி ரூபாயை தமிழக அரசு ஆந்திர அரசுக்கு கொடுத்தி
ருக்கிறது. இப்போது அங்கேயிருக்கக்கூடிய பிரச்னை 30 கோடி
ரூபாயை கொடுத்திருந்தாலும் கூட, ராயலசீமா பகுதியிலே உள்ள
மக்கள் தெலுங்கு கங்கா நதிநீர்த் திட்டத்தை நடத்தக் கூடாது
என்று கிளர்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த
திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா என்றே தெரிய
வில்லை. இந்தத்திட்டம் நிறைவேறாமல் இருந்தால் 30 கோடி
ரூபாயினுடைய நிலைமை என்ன?

மக்களுக்கு இதனால்
சென்னையிலே குடியிருக்கக்கூடிய மக்களுக்கு இதனால்
குடி தண்ணீர் வசதி கிடைக்குமா என்ற ஐயப்பாடு எழுந்திருக்
கிறது. ஆந்திர மாநிலத்திலே அந்த மக்கள் கிளர்ச்சி நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நிதியிலிருந்து 30 கோடி
ரூபாய் ஒதுக்கிக்கொடுத்தும் விட்டோம். எனவே தெலுங்கு
கங்கா நதிநீர் திட்டம் நடைபெறுமா இல்லையா என்ற சந்
தேகம், கேள்விக்குறியாக எழுந்திருக்கிறது. மதிப்பிற்குரிய
நாவலர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே இதற்கு
பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இருக்கக்கூடிய
இப்போது இந்திய நாட்டுக்கும் தமிழகத்தில் இருக்கக்கூடிய
கடலோரப் பகுதிகளுக்கும் ஒரு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்
கிறது. அமெரிக்க ஏகாத்திபத்தியம் கடல் ஓரப் பகுதிகளை, தன்னு
டைய ராணுவ தளமாக மாற்றிக் கொண்டிருக்கிற நேரத்தில்,
இலங்கைக்கு அருகாமையில் இருக்கக்கூடிய திரிகோணமலையிலே
அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய கடற்படை தளத்தை
வைத்துக்கொண்டிருக்கிற நேரத்திலே சேது சமுத்திர திட்டத்தை
அமுலாக்க வேண்டும் என்று பாராளுமன்றத்திலும், சட்ட
மன்றத்திலும், பல்வேறு முறைகளில் எங்களுடைய
கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும், அதே
நேரத்தில் பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் எடுத்துச்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுக்
இந்திய நாட்டுக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுக்
கொண்டிருக்கிற நேரத்தில், சேது சமுத்திரத் திட்டத்தை அமுல்
நடத்தக்கூடிய மத்திய அரசாங்கம் ஏன் இன்னும் இந்தத் திட்டத்
தைக்கொண்டு வரத் தயக்கம் காட்டுகிறார்கள் என்று இந்த
அரசாங்கம் கேட்கத் தவறியிருக்கிறது. அதைப்பற்றி இந்த
அறிக்கையிலேயும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. நம்முடைய
இந்த ஆபத்தான சூழ்நிலையில் சேது சமுத்திரத் திட்டத்தை
உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசாங்கம்
எடுக்க வேண்டும், அதற்கான நடவடிக்கைகளையும் மேற்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [1984 மார்ச் 8

அடுத்து, இந்த அறிக்கையிலே, வறட்சி, புயல் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டதற்கு, மத்திய அரசாங் கம் கொடுத்திருக்கக்கூடிய நிதியை விட அதிகமாகவே மாநில அரசாங்கம் செலவு செய்திருப்பதாக சொல்லியிருக்கிறார்களே தவிர, அதனால் பெரிய பலன் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை.

கடந்த மூன்று ஆண்டுக்காலமாக, தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மக்கள், வெள்ளத்தினாலும், வறட்சியினாலும் மாறி மாறி பாதிக்கப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக கடந்த 2 தினங்களாக, பெய்த பெருமழையின் காரணமாக, திருநெல்வேலி மாவட்டம், திருச்சி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்கள் எல்லாம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக் கின்றன. போக்குவரத்து உள்பட துண்டிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்திருக்கிறது. நம்முடைய நாவலர் அவர்கள் கூட காலையிலே அதுபற்றி பேசும்போது சொன்னார்கள். நான் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம் இப்படி மாறி மாறி வெள்ளமும் வறட்சியும் வந்து தமிழக மக்கள் மேலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக நீண்ட தொலை தூர பார்வையோடு ஒரு திட்டத்தைப் போட்டு மைய அரசிற்கு கொடுப்பதற்கு தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்தி ருக்கிறதா? அப்படி இருந்தால் என்ன போட்டிருக்கிறது? அல்லது அதற்கான நடவடிக்கைகள் ஏதாவது மேற்கொண்டிருக்கிறார் களா என்பதைப் பற்றியெல்லாம் இந்த அறிக்கையிலே சொல்லப் படவில்லை. அதற்காக எந்தத் தொகையும் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்படவும் இல்லை. அது மட்டும் அல்ல. மத்திய அரசாங்கம் தமிழக அரசாங்கத்திற்கு வெள்ள நிவாரணத் திற்காக 5 கோடி ரூபாயை ஒதுக்கி தந்திருக்கிறார்கள் என்பதற் காக மத்திய அரசாங்கத்தைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00.)

இந்தக் கடுமையான மழையினால், வெள்ளத்தினால் பல்வேறு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய நேரத்தில் மக்களை பாதுகாக்க வேண்டிய பணி அரசுக்கு இருக்கிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் விவசாய கூலிகளுக்கு வேலையில்லை. பாலங்கள் உடைந்திருக்கின்றன. சோலைகள் பழுதடைந்திருக்கின்றன. வாகனங்கள் செல்ல முடிய வில்லை வீடுகளை இழந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமையில் மத்திய அரசாங்கம் 5 கோடி ரூபாய் கொடுத்த வுடனே பாராட்டியிருக்கக் கூடிய இந்த அரசாங்கம் எதிர்காலத் திலே இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் சீராக்குவதற்கும் செப்பனிடுவதற்கும் கூலி விவசாயிகளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் வீடு கட்டும் திட்டத்தை நிதிநிலை அறிக்கை யிலே அறிவிக்கவில்லை. மத்திய அரசாங்கத்திடம் அதிகமான தொகையைக் கேட்பதற்கு ஏன் இந்த அரசாங்கம் தயங்குகிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.



1934 மார்ச் 8] [திரு. எம். ஆறுமுகம்]

கடலோரப் பகுதிகளிலே போக்குவரத்து அதிகரிக்கப்பட வேண்டும். கடலோரப் பகுதிகளிலே போக்குவரத்தை அதிகரிப் பதால் குறைந்த செலவில் பயணம் செய்யக் கூடிய நிலைமையை உருவாக்க முடியும். மக்களுக்கும் வசதியாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட நிலைமையை விரைவிலே உருவாக்கவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட்டிலே என்ன சொல்லி யிருக்கிறார்களோ தேர்தலுக்காக மத்திய அரசாங்கம் கொடுத் திருக்கக்கூடிய பட்ஜெட்டிலே கிட்டத்தட்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் துண்டு விழுகிற நிலைமை இருப்பதைப் போல் மாநில அரசாங்கம் தேர்தலை முன்னிட்டு இந்த பட்ஜெட்டைத் தயாரித் திருக்கிறார்கள். இது துண்டு விழுகிற பட்ஜெட்டாக இருந்தாலும் 56 கோடி ரூபாய்க்கு வரி போட்டுள்ளீர்கள். எதிர்காலத்திலே தமிழகத்திலே வளர்ச்சிக்கான திட்டப் பணிகளை இந்தப் பட் ஜெட்டிலே எங்களால் பார்க்க முடியவில்லை, மத்திய அரசின் பட்ஜெட்டில் சொல்லப்பட்டுள்ளதை நீங்களும் சொல்லியுள்ளீர் கள். அடிப்படையான மாற்றங்கள் எதுவும் இல்லை, திட்டங்கள் இல்லை. மத்திய அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டவில்லை. அலங்கார வார்த்தைகள் சாதாரண ஏழை எளிய மக்களுக்குப் பயன் அளிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மையைப் பற்றிச் சொல்லப்பட்டு இருக்கிறது. வேளாண்மையிலே வளர்ச்சி ஏற் பட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் விவசாயிகள் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. நேரடியாகக் கொள்முதல் செய்வதில் உங்களுக்கு என்ன தயக்கம்? தனியார்கள் கொள் முதல் செய்வதாலே விலையேற்றம் ஏற்படுகிறது. அரசாங்கமே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 17,500 நியாயவிலைக்கடைகள் மூலமாக அரசாங் மே விநியோகம் முழுமையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் அப்படிப்பட்ட கொள்கையை கையாள வேண்டும். வறட்சியும் வெள்ளமும் மாறி மாறி வரக்கூடிய இந்த நேரத்திலே நியாய விலைக் கடைகளில் அரிசி இல்லை, கோதுமை இல்லை, மண் ணெண்ணெய் இல்லை, தேங்காய் எண்ணெய் இல்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. ஒரு புறம் விலைகள் ஏறிக் கொண் டிருக்கின்றன. கிராமப் புறங்களிலே உள்ள மக்களுக்கு நியாய விலைக் கடைகளிலே அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தாமல் வேளாண்மையிலே வளர்ச்சி ஏற் பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் விளை பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படவில்லை. அதைச் செய்வதற்கு ஏன் மறுக்கிறீர்கள்? வறட்சியும் வெள்ள மும் தொடர்ந்து இருந்து வருகின்ற நேரத்திலே விவசாயிகள் தொடர்ந்து பெரும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்ற நேரத்திலே தஞ்சை மாவட்டம் வெள்ளத்தாலேயும் கோவை மாவட்டம்

[திரு. எம். ஆறுமுகம்] [1984 மார்ச் 8

வறட்சியினாலேயும் மற்ற மாவட்டங்கள் எல்லாம் வெள்ளத் தாலும் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கின்ற நேரத்திலே விவசாயிகளின் கடன்களை ஏன் ரத்து செய்யவில்லை ? முதல் அமைச்சர் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வோம் என்று அறிவித்தார்கள். ஆனால் திருப்பி நான் கேட்க விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கை யிலே விவசாயிகளுடைய கடன்களை ஏன் ரத்து செய்யவில்லை? என்று கேட்க விரும்புகிறேன். எனவே விவசாயிகள் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட் டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குக் கொடுத்து வந்த கடன்கள், எல். டி. பாங்குகள் மூலமாகக் கொடுக்கப்பட்ட கடன்கள் கொடுக் கப்படுவதில்லை.

அடுத்து பாசனம் என்ற தலைப்பு இருக்கிறது. பாசனத்திற் காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை உண்மையிலேயே போதாது. தமிழகத்திலே இப்போது குளங்குட்டைகள் எல்லாம் குடிசை களாக மாறி விட்டன. இப்போது குளமும் கிடையாது. குட்டை யும் கிடையாது. மழைக் காலத்திலே வருகின்ற தண்ணீரை எங்கே தேக்கி வைக்கப் போகிறீர்கள் ? ஏரி குளங்களை ஆழப்படுத்தக் கூடிய நிலைமையும் இல்லை. கசிவு நீர்க் குட்டைகளைக் கட்டக் கூடிய திட்டமுமில்லை. இதைப் பற்றி பல்வேறு கட்டங்களிலே இந்த அவையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

இருக்கக்கூடிய 10 பாசனத் திட்டங்களில் பாண்டியாறு பொன் னம்புலா திட்டம் என்பது 2 வது திட்டமாக வைக்கப்பட்டு இருக்கிறது. கேரள அரசோடும் கர்நாடக அரசோடும் பேச்சு வார்த்தை நடத்துகிறோம் என்று பல்வேறு கால கட்டங்களில் இந்த அவையில் சொல்லப்பட்டு இருக்கிறது. மிகப் பெரிய திட்டம் பாண்டியாறு-பொன்னம்புலா திட்டம். இந்தத்திட்டத்தை முடிவாக அமுலுக்கு கொண்டு வருவார்களானால் பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், அதேபோல் சேலம் மாவட்டத் தில் ஒரு பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் பயன்படக் கூடிய முறையில் இருக்கும். எனவே இந்தத் திட்டம் கைவிடப்பட்டதா? அல்லது இந்தத் திட்டத்தை அமுல் நடத்த மத்திய அரசை வற்புறுத்தி நீங்கள் நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறார்களா என்பதைப் பற்றி இந்த அறிக்கையில் சொல்லவில்லை. எனவே கசிவு நீர்க் குட்டைகள் கட்டுவது, குளங்கள் அமைப்பது, ஏரி குளங்களை ஆழப்படுத்துவது அதேபோல் பல்வேறு பெரிய அணை கள் கட்டுவது போன்ற திட்டங்களை இந்த அறிக்கையில் சொல் லாமல் இருப்பது விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளர் களுக்குப் பலன் அளிக்காது. எனவே இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்வது எல்லாம் 10 திட்டங்களில் இருக்கக் கூடிய பாண்டியாறு பொன்னம்புலா திட்டத்தை உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவதற்கு மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 8] [திரு. எம். ஆறுமுகம்]

அதே போல் பரம்பிக்குளம்-ஆளியாறு விரிவாக்கத் திட்டத் திற்கு சில கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக இந்த அறிக்கையில் இருக்கிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை விரிவாக்கக் கூடிய முறையில் இப்போது பல்லடத்தில் ஒரு பகுதியும், கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அவிநாசி தொண்டாமுத்தூர் போன்ற பகுதியிலும் உண்மையிலேயே எந்தவிதமான பாசன வசதியும் இல்லாமல் வறட்சியினால் பாதிக்கப்பட்டு வருகிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு விரிவாக்கத் திட்டத்தை எடுத்துக் கொண்டு இருக்கும் இந்த நேரத்தில் பல்லடத்தில் ஒரு பகுதியில் பாயக்கூடிய பி.ஏ.பி. வாய்க்காலை அவிநாசி பகுதிக்கும் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக அதிகமாக தொகையை ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தொழில் வளர்ச்சி பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்பட்டு இருப்பது உண்மையிலேயே வருத்தப்படக் கூடியது. 1967-ஆம் ஆண்டில் காங்கிரஸ் அல்லாத ஒரு சர்க்கார் தமிழகத்தில் ஏற்பட்டதற்குப் பின்னால் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குன்றிவிட்டது. 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னால் பெரிய தொழிற்சாலைகள் தமிழகத்தில் அமைக்கப்படவில்லை. இந்த அறிக்கையில் சொல்லியிருப்பது புகளூரில் ஆரம்பிக்கக்கூடிய ஒரு காகித தொழிற்சாலை மட்டும்தான். கடந்த நிதிநிலை அறிக்கையிலும் அதைப்பற்றி சொல்லியிருக்கிறீர்கள். இப்போதும் அதைச் சொல்லியிருக்கிறீர்களே தவிர அதற்கு மாறாக புதிய தொழிற்சாலைகள் எதுவும் ஆரம்பித்து வேலை வாய்ப்புத் தரக் கூடிய முறையில் திட்டத்தைச் சொல்லவில்லை. அதற்கு மாறாக டிட்கோ, சிட்கோ மூலமாக பல ஆயிரக்கணக்கான சிறிய சிறிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக் கிறீர்கள். தமிழகத்தினுடைய நிலை என்ன ? தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. மீன் பிடிக்கக் கூடிய தொழிற்சாலைகள் ஒழிந்தே போய்விட்டன. தீப்பெட்டித் தொழிற்சாலைகளை மூடி விட்டார்கள். இன்று ஏக போக முதலாளியாக இருக்கக் கூடிய விம்கோ தீப்பெட்டித் தொழிற் சாலைக்கு மத்திய அரசால் அதிகமாக லைசன்ஸ் கொடுக்கப்பட்டு கோவில்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள தீப்பெட்டித் தயாரிக்கக் கூடிய சிறிய சிறிய தொழிற்சாலைகளும், அதில் பணி புரியக்கூடிய தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு அந்தத்தொழிலே நசிந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் நீங்கள் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளைப் பாதுகாக்க வேண்டுமா வேண்டாமா ? தமிழகத்தில் இருக்கக்கூடிய நிலைமை என்ன ? பல தொழிற் சாலைகளை மூடக்கூடிய அபாயங்கள் உள்ளன. உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணா என்பது போல் புதிய தொழிற் சாலைகளை ஆரம்பிப்பது ஒரு பக்கம் இருந்தாலும் இருக்கக்கூடிய தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசின் கொள்கை என்ன ?

[திரு. எம். ஆறுமுகம்] [1984 மார்ச் 8

இப்போது தமிழகத்தில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. தமிழகத்தில் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். தமிழகத்தில் பி. அண்டு சி. மில், நெல்லிக் குப்பம் சர்க்கரை ஆலை, கரூர் மில்ஸ், எஸ். ஆர். சி. மில்ஸ், தமிழ்நாடு ஸ்பின்னிங் மில், பத்மா மில், ஜனார்த்தனா மில், ஈரோடு கந்தசாமி நூற்பாலை, குமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்டம், நமனசமுத்திரம் மில்ஸ், நாச்சியம்மை காட்டன் மில்ஸ், தேனூர் சிவகாமி மில்ஸ், திருச்சி அமராவதி அங்காடி, அம்பத்தூர் என். எஸ். கே. பாடி ஒர்க்ஸ், இந்தியா போர்ஜ், திருநீர்மலை எல்போர்ஜ், சென்னை தியாசாபிகல் சொசைட்டி, குரோம்பேட்டை கார்த்திக் காட்டன் வாஷிங், குவாலிடி இண்டஸ்ட்ரீஸ், மாதவரம் சதர்ன் அலாய் பவுண்டரீஸ், தர்மபுரி லாஸ்கேக் ஸ்டீல், திருவாரூர் தவிட் டெண்ணை ஆலை, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ், சென்னையில் ரானே மோட்டார்ஸ், ஓல்டாம் பேக்டரி, இந்தியா ஒயர் அண்ட் ஆட்டோ காம்பனன்ட்ஸ், ஆம்கேஸ் டூல் கம்பெனி. ஆக இப்படிப் பட்ட பெரிய கம்பெனிகள் எல்லாம் மூடிக் கிடக்கக்கூடிய இந்த நேரத்தில் ஏதோ இங்கே தொழில் வளர்ச்சி இருக்கிறது என்று சொல்வது வருந்தக்கூடியதே தவிர வேறு இல்லை. இன்று இருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி மிகவும் குன்றி இருக்கிறது. அது மட்டும் அல்லாமல் இந்த ஆலைகளை எல்லாம் திறப்பதற்கு தொழிலாளர் நலத்துறை நட வடிக்கை எடுக்காமல் தூங்குமூஞ்சி மடமாக செயல் பட்டுக் கொண்டு இருக்கிறது என்று தான் சொல்ல முடியும். தொழி லாளர்கள் பிரச்சினையை தீர்க்கவில்லை. மூடப்பட்ட ஆலைகள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்த அரசு சரியான கொள்கையை கடைபிடிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி தேக்கம் மற்றும் பீடித் தொழில் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இவைகளை எல்லாம் இந்த அரசு மூடி மறைக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து கல்வியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பட் ஜெட்டில் கல்விக்காக ஒன் தேர்டு ஒதுக்கப்பட்டதாகச் சொல்லி யிருக்கிறார்கள். என்ன நிலைமை? தமிழகத்தில் இருக்கின்ற கல் விக்கூடங்கள் எல்லாம் இன்றைக்கு வியாபார ஸ்தலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.



1984 மார்ச் 8] [திரு. எம். ஆறுமுகம்]

[பிற்பகல் 1-10]

தனியார் பாலிடெக்னிக்குகளைத் தொடங்குவதற்கு லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. எல்லாயிடங்களிலும் போராட்டம்; ஹாஸ்டல் பெசிலிட்டிஸ் இல்லை; ஆசிரியர் களுக்குப் பாதுகாப்பு இல்லை; சமபளம் வாங்காமல் வேலை செய்கின்ற நிலைமை என்று இப்படிப்பட்ட மோசமான நிலைமை கள் இருக்கின்றன.

குடிதண்ணீர் வழங்கும் திட்டம் சம்பந்தமாகச் சொல்ல விரும்பு கிறேன். திருப்பூர் 2-ஆம் குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அதற்குப் பிறகு, மேட்டுப்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரும் அந்தத் திட்டம் எப்பொழுது முடிவுபெறும் என்று தெரியவில்லை. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அவினாசியில் ஒரு பகுதிக்கும், திருப்பூர் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். எனவே திருப்பூர்-2 ஆம் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக அமலாக்க வேண்டும், நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக பட்ஜெட்டில் தொகை ஒதுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். கிராம மக்களுக்கு குடி நீர்த்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. பாலுச்சாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாசித்தளித்த 1984–85 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து, ஆயிரம் ஆயிரம் அனாதைக் குழந்தைகளுக்கு அன்னம் கொடுத்து, அண்ணாவின் இலட்சியக் கொள்கையைத் தமிழகத் தில் நிறைவேற்றி, அண்ணாவின் அன்புத் தம்பியாய் தமிழக ஆட்சிக் கட்டிலில் இருந்து செங்கோலாட்சி நடத்தி வரும், இதய தெய்வம், புரட்சித் தலைவரை வணங்கி என் உள்ளத்தில் பட்ட ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க எண்ணுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாமன்ற உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இங்கே ஒன்றைக் கூறினார்கள். தேனூரில் உள்ள சிவகாமி மில் மூடியிருப்பதாகச் சொன்னார்கள். அது பட்டவர்த்தனமான பொய் என்பது என் கருத்து. அதை மூடுவதற்கு காரணமே இந்தக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் என்பதை நான் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவன் என்பதால் கூறிக் கொள்கிறேன். முதலாளிகளுக்கு உறுதுணையாக இருந்து அந்த மில்லை மூட வைத்து, இப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகம் ஈடுபட்டு அந்தத் தொழிலாளர்கள் வேலை செய் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, சிவகாமி மில் மூடப்படவில்லை என்று சொன்னார்கள். இதே மில் மூடப்பட்டு, தொழிலாளர் துணை ஆணையாளரால் பல மூன்ற பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டு வருகின்றன என்பதை உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தத் தேனூர் சிவகாமி மில் முதலாளியிடம் * * * * அவர்கள் அங்கே முதலாளியோடு சேர்ந்து கொண்டு வேலைக்குச் சென்றார்கள். ஆனால் அங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஈடு பட்டது. அந்தத் தொழிலாளர்களின் கோரிக்கையை அவர்கள் நிறைவேற்றாத காரணத்தால்தான் சிவகாமி மில் இவ்வளவு நாட்களாக மூடிக்கிடந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமர்சம்) * * * என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஏ. பாலுச்சாமி : மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை மாற்றுக் கண்ணோட்டத்தோடு பார்த்து, இந்த நிதி நிலை அறிக்கை ஏழை விவசாயிகளுக்கோ, மற்றதரப்பட்டவர்களுக்கோ எந்தவித நன்மையும் பயக்காது என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மாற்றான் தோட்டத்து மல்லி கைக்கும் மணம் உண்டு என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தத்துவத்தை வைத்து இந்த நிதிநிலை அறிக்கையைக் காண வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டை இதுவரையில் அநேகம் பேர் ஆட்சி செய்திருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் 'ஆட்சி செய்யும் இந்த நேரத்தில்தான், புண்ணியவான் ஆளுகின்ற பொற்காலம் என்று ஏழை மக்கள் அனைவரும் போற்றிப் புகழ்கின்றார்கள் என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





அண்ணா இந்தத் தமிழக மக்களுக்கு, உழைக்கும் மக்களுக்கு
என்ன செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தாரோ அத்தனை
யையும் புரட்சித் தலைவர் அவர்கள் செய்துகொண்டு வருகின்றார்
கள், என்பதை மறுக்கவும் முடியாது, மறைத்திடவும் முடியாது
என்ற கோணத்தில்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
இந்த நல்ல சாதனைளை உள்ள நிதி நிலை அறிக்கையை
வகுத்துள்ளார்கள்.

ஏழை மக்களின் ஏந்தலாக, ஏழை எளியவர் வணங்கும் இதய
தெய்வமாகத் தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் நல்ல திட்
டங்களைக் கொடுக்கும் நாயகராக இன்று புரட்சித் தலைவர்
அவர்கள் நல்ல பல திட்டங்களைச் செய்து வருவதன் காரணத்
தால் வெளி மாநிலத்தவர்கள் கூட போற்றிப் புகழ்கின்றார்கள்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எத்தனை ஆண்டு காலம் ஆட்சி செய்தோம் என்ற கணக்கைப்
பார்ப்பதைவிட, நாம் ஆட்சி செய்ததற்குள் ஏழை எளிய மக்க
ளுக்கு எத்தனைவிதமான நன்மைகள் செய்தோம் என்ற கணக்
கைப் போடுபவன்தான் நல்ல அரசியல் தலைவன் என்ற அண்ணா
வின் சித்தாந்த மனோபக்குவம் கொண்டவர்தான் புரட்சித்
தலைவர். தமிழக முதல்வர் அவர்கள் அந்த அடிப்படையில்
தான் ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு
வந்தார்கள். ஆனால் அந்தச் சத்துணவுத் திட்டத்தை எதிர்க்
கட்சி வரிசையில் உள்ள ஒருசிலரைத் தவிர மற்ற கட்சிகள் எல்
லாம் இந்தத் திட்டம் நல்ல திட்டம் என்று கூறினார்களா
என்றால் இல்லை. அல்லது இத்திட்டம் ஓர் நல்ல திட்டம் என்று
வாய்மூடிகளாக இருந்தார்களா என்றால் அதுவும் இல்லை. பிர
தான எதிர்க்கட்சியின் தலைவராக இருந்த கலைஞர் கருணாநிதி
அவர்கள் என்ன கூறினார்கள்? இந்தத் திட்டம் என்ன திட்டம்?
குழந்தைகளைப் பிச்சை எடுக்க வைக்கும் திட்டம் என்று
நையாண்டி வார்த்தைகளால் விமர்சனம் செய்தார்கள். மேலும்
இந்தத் திட்டத்தைக் கொண்டுவரக்கூடாது என்றும், இந்த
நாட்டில் மக்கள் இந்த திட்டத்தை நல்லமுறையில் ஆதரிக்கக்கூடாது
என்றும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். பல்லிகளை அடித்
துப் போட்டு குழந்தைகளின் சத்துணவிலே சதி செய்யவில்
லையா என்பதை எல்லாம் இந்த மாமன்றம் நன்கு அறிந்திருக்
கின்றது. சத்துணவு சாப்பிட்ட குழந்தைகளுக்கு வாந்தி,
மயக்கம்' என்று பொய் வதந்திகளைப் பரப்பவில்லையா? சத்
துணவு சாப்பிட்ட பிள்ளைகள் செத்து மடிந்தார்கள் என்ற
பொய்ப் பிரச்சாரத்தைச் செய்யவில்லையா என்பதை எல்லாம்
இங்கே இந்த மாமன்றத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள்' அனை
வரும் அறிந்திருக்கிறார்கள் என்பதை நான் மெத்தப் பணி

* மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. ஏ. பாலுச்சாமி] [1984 மார்ச் 8

வோடு தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி பல எதிர்க்கட்சியினர் எல்லாம் கூறிக்கொண்டே இருந்தநிலைமையில் திட்ட ஜொலிக்கும் வைரம் போன்று இன்று தமிழக மக்கள் அனைவரும் இதனை வரவேற்கிறார்கள். இன்று இந்தத் திட் டம நல்ல முறையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை உணருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பொதுவுடைமைச் சித்தாந்த வார்த்தைகளைப் பேசும் கம்யூ னிஸ்ட் கட்சிக்காரர்கள் இதுபோன்ற திட்டத்தை அவர்கள் ஆட்சி செய்யும் மேற்கு வங்காளத்தில் கொண்டுவர முடிந்ததா ? அல்லது அவ்வாறு கொண்டுவரப்போகிறார்களா என்று நான் அவர்களி டத்திலே கேட்கிறேன். ஆகவே ஏதோ அவலை இடித்தவன் உரலைக் கழுவிச் சுரண்டுவதைப் போல் இன்று குறைகளை மட்டும் அள்ளி வீசாதீர்கள் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சத்துணவுத் திட்டத்தை நாட்டுமக்கள் அனைவரும் போற்றுகின்றார்கள். அதே நேரத்தில் மக்கள் அனைவரும் பல கோணங்களில் புரட்சித் தலைவரை பரந்த எண் ணத்தில் பலதரப்பட்ட தலைவர்களாகக் காண்கிறார்கள். அண்ணா கண்ட சமதர்மவாதியாகப் புரட்சித் தலைவரைக் காண்கிறார்கள். சாந்தி கண்ட கிராமராஜ்யக் கனவை நிறை வேற்றும் காந்தியவாதியாகப் புரட்சித் தலைவரைக் காண்கிறார் கள். சோசலிசத் தத்துவவாதியாகப் புரட்சித் தலைவரை மக்கள் மதிக்கிறார்கள். கம்யூனிஸச் சித்தாந்தத்தின் பொது உடமைப் பூங்காவாகப் புரட்சித் தலைவரின் புனிதத் தன்மையை பலதரப்பட்ட மக்கள் அனைவரும் போற்றிப் புகழ்கின்றார்கள். இயேசுவைப் போன்று புரட்சித் தலைவர் அவர்கள் புனிதத் தன்மை படைத்த நல்ல தொண்டராக இருக்கிறார்கள் என்று இன்று மற்ற மாநிலங்கள் போற்றுகின்ற அளவில், உலகம் போற்றுகின்ற அளவில் ஒரு நல்ல தொண்டராக அவர்கள் இருக் கிறார்கள்.

ஏழை எளிய விவசாயிகளுக்காகப் பயிர் காப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக் கிறார்கள். இந்தத் திட்டத்தை கொண்டு வருவேன் என்று தேர்தல் காலத்திலே வாக்குறுதி கொடுத்தார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை இன்று நிறைவேற்றுகிறார் புரட்சித் தலை வர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள் இன்னும் ஒரே ஒரு நிமிஷம்தான்.



1984 மார்ச் 8]

(பிற்பகல் 1—20)

**திரு. ஏ. பாலுச்சாமி :** ஏழை விவசாயிகளின் உயிர், உடைமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டால் ரூபாய் 10 ஆயிரம் வழங்கும் திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் 1984—85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கொண்டு வந்துள்ளதை ஏழை விவசாயிகள், நடுத்தரப்பட்ட விவசாயிகள் அனைவரும் பாராட்டுகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்காக நான்தான் என்று கூறி விவசாயிகள் சங்கத்தை வைத்து அரசியல் நோக்கத்திலே, அரசியல் மோகத்தினால் அரசியல் களத்திலே இருக்கின்ற பெரியவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் இந்தத் திட்டத்தை பாராட்டக்கூடாதா ? இதுபோன்ற நல்ல மனப்பக்குவம் இல்லையே என்றுதான் வேதனைப்படுகின்றோம்.

மேலும் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஊர் ஊராக நடக்க ஆரம்பித்துள்ளார்கள். இவர்கள் போகின்ற ஊர்களில் எல்லாம் இவர்களது பிரச்சார வாசகங்கள் என்ன தெரியுமா? இடி அமின் ஆட்சி தமிழகத்தில் நடக்கின்றது. இந்த இடி அமின் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சி இன்னும் எத்தனை காலத்திற்கு என்ற ஒரு வினாவை வேறு கிளப்பி விட்டிருக்கிறார். இதைக் கிளப்பியது யார் ? இந்தத் தமிழகத்தை 7 ஆண்டுக் காலம் இடி அமீன் போன்று ஆட்சி நடத்திய கலைஞர் கருணாநிதி அவர்கள் காருண்யத்தைப் பற்றி கசாப்பு கடைக்காரன் பேசுவதைப் போல், கொலை பாதகம் செய்பவன் அன்பு நெறியை உபதேசம் செய்வதைப் போல், கலைஞர் கருணாநிதி அவர்கள் இடி அமீன் ஆட்சியை உதாரணம் காட்டிப் பேசலாமா என்று இந்த மாமன்றத்தில் உள்ள நல்ல எண்ணம் கொண்ட உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன். இடி அமீன் யார் என்று இந்த மாமன்ற உறுப்பினர் அனை வருக்கும தெரியும். தனக்கென்று தானாகச் சிலை வைத்தவர் தான் இடி அமீன். அரசு கட்டிடங்களுக்குத் தனது பெயர்ப் பலகையைச் சூட்டச் சொன்னவர்தான் இடி அமீன். தானே ராசா, தானே மந்திரி என்று ஆட்சி நடத்தியவர்தான் இடி அமீன். இந்த மாமன்ற உறுப்பினர்களை வேண்டிக் கேட்கின் றேன். கலைஞர் கருணாநிதி ஆட்சிக் காலத்தில் தனக்கென்று சிலை வைத்தவர் கலைஞர் கருணாநிதியவர்களாகும். அது போன்று அரசு அலுவலகக் கட்டிடங்களுக்குத் தனது பெயரை சூட்டி பெருமை அடைந்தவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

## 7. அறிக்கை அளித்தல்

### விதி 106-ன் கீழ் வெள்ள நிவாரணம் பற்றிய அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 106-ன்கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவையினுடைய தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 106-ன் கீழ் 6—3—1984 மற்றும் 7—3—1984 இரண்டு தினங்களில் பெய்த மழையினால் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பற்றிய அறிக்கையினை அவைக்கு அளிக்கின்றேன்.

மதுரை மாவட்டம்—

வைகை நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு (Capacity) 71 அடி. அதில் 7—3—1984 அன்று 66 அடி நிரம்பியது.

நேற்று (7—3—1984) இரவு 69,000 கியூசெக்ஸ் தண்ணீர் வைகையில் விடப்பட்டது. இன்று காலை (8—3—1984) 14,000 கியூசெக்ஸ் மட்டுமே தண்ணீர் விடப்படுகிறது.

திருமங்கலத்தில் 62.22 மில்லி மீட்டர் மழை பெய்திருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வட்டங்கள் நான்கு. அதாவது, பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு ஆகிய வட்டங்களாகும். அதிகமாக மழை பெய்தது பெரியகுளம் வட்டத்திலாகும்.

மொத்தக் குடிசைகள் சேதமடைந்தது, இப்பொழுது வந்த கணக்குப்படி 458 என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1,000 மக்கள் ஆரப்பாடி, தேவன்பட்டி முதலிய பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 19,254. இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

7—3—1984 அன்று 8,000 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. இன்றும் (8—3—1984) உணவுப் பொட்டலங்கள் வழங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

இதுவரை இம்மாவட்டத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதம் 11. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை மூன்று.

தேனி—உசிலம்பட்டி சாலையில் உடைப்பு ஏற்பட்டு, போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் சரி செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

தற்போது வைகையின் தண்ணீர் வடிந்து விட்டது. அபாயகரமான நிலைமை இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்த்துறை அதிகாரிகளும் மற்ற அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று நிவாரண வேலைகளில் நேரிடையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இராமநாதபுரம் மாவட்டம்—

6—3—1984 அன்று காலை வைகை நீர்த்தேக்கத்தில்
மஞ்சளாறு வராக நதி மூலம் 43,000 கியூசெக்ஸ் தண்ணீர் திறந்து
விடப்பட்டது. வைகைத் தண்ணீர் இல்லாமலேயே மானா
மதுரை, சிவகங்கை, பரமக்குடி நீர் நிலையங்களில் தண்ணீர்
முழு அளவை எட்டியது. வைகை ஆற்றின் தண்ணீர்
வந்து விழும் இராமநாதபுரம் பெரிய குளத்திலும் (Ramnad
Big Tank) சுமார் 6 அடி தண்ணீர் இருந்தது. ஆகவே
முன் நடவடிக்கையாக சத்திரக்கோட்டை கண்மாயும், இராம
நாதபுரம் பெரிய குளத்திலுள்ள தண்ணீரையும் வைகை நீர்
வரும் என்று எதிர்பார்த்து திறந்துவிடப்பட்டன. ஆனால்,
இராமநாதபுரம் பெரிய குளத்தில் இன்னும் தண்ணீர் வந்து சேர
வில்லை. இதற்குச் சேதமும் ஏற்படவில்லை. இராமநாதபுரத்
திலுள்ள பல நீர்த்தேக்கங்கள் அதன் உச்சநிலையை அடைந்து
விட்டன. அதனால் திறந்து விடப்பட்டன. அதனால் வார்டி
ராப் நகராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கிராமங்கள் தண்
ணீரால் சூழப்பட்டிருக்கின்றன. 35 நீர்நிலையங்களில் உடைப்பு
கள் ஏற்பட்டிருக்கின்றன. 15 கிராமங்கள் தண்ணீரால் சூழப்
பட்டிருக்கின்றன. விருதுநகர் வட்டத்தில் மங்களபுதுக்குடியில்
உள்ள குளம் உடைந்தது. தாழ்வான பகுதிகளில் மக்கள் பாது
காப்பான இடங்களுக்குச் செல்லும்படி எச்சரிக்கப்பட்டிருக்
கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றுமுள்ள வரு
வாய்த்துறை அதிகாரிகளும் துயர் துடைப்புப் பணியில் தீவிரமாக
ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதுவரை கிடைத்தத் தகவல்கள்படி இராமநாதபுரம்
மாவட்டத்திலே 7 பேர் உயிரிழந்தனர். 6 பேர்கள் காணாமல்
போய்விட்டனர். சுமார் 10,000-லிருந்து 15,000 குடிசைகள்
வரை பாதிக்கப்பட்டுள்ளன. 7—3—1984 அன்று 11,500
உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. ஸ்ரீவில்லிப்புத்
தூரிலிருந்து இரண்டு இந்திய கடற்படை ஹெலிகாப்டர்கள்
20,000 உணவுப் பொட்டலங்களுடன் இன்று (8—3—1984)
காலை கிளம்பி பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உணவுப் பொட்ட
லங்கள் போட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முழுச்
சேதங்களின் விவரங்கள் கணக்கிடப்பட்டு வருகிறது. உடனடி
யான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கணக்கிட்டப்
பின் மேலும் தகுந்த நிவாரணங்கள் வழங்க இந்த அரசு நட
வடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
பொதுவாக எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்று
முள்ள அதிகாரிகளும் துயர் துடைப்புப் பணியை போர்க்கால
அடிப்படையில் மேற்கொள்ளவேண்டுமென்று அரசு கேட்டுக்
கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1984 மார்ச் 8

6. வரவு செலவுத் திட்டம் 1984—85—பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1984—85 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை சொல்லலாம் என்று கருது கிறேன். இப்போது இந்த மாமன்றம் நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்திலே இயற்கையினுடைய பாதிப்பால் பல மாவட் டங்களில் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது; விவசாயிகளுக்கு விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சிறிது நேரத்திற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வைத்தார்கள். இந்த நேரத்திலே நமது அரசு மிக கவனத்துடனும், கண்காணிப்புடனும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும். விவ சாயப் பெருங்குடி மக்கள் அரசின் மூலம் பெற்றிருக்கிற கூட் டுறவுக் கடன்களையும், மற்ற கடனகளையும், ஒத்திவைத்து, நிலவரி பாக்கிகளை ரத்துசெய்து அவர்களுக்கு உதவிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன. சாரணம் சென்ற ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள், இந்த ஆண்டில் இயற்கை யினுடைய சீற்றத்தால் வெள்ளத்தினால் மிக மிக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் இதனை அரசிற்கு வருகின்ற தகவல்களும் கூறுகின்றன. ஏழை எளிய மக்களை சாக்கிற இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லமுறையில் உதவிகளைச் செய்து அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல விவசாயத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டிருக்கிறார்கள். பயிர், பாதுகாப்பு என்று ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். பயிர் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று நீண்டகாலமாக இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் பேசி வரு கிறார்கள். அது இந்த ஆண்டுதான் தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அறிக் கையில் நிதிநிலைமை இன்னும் குறைவாக இருக்கிறதால், நிதி நிலைமையை இன்னும் உயர்த்தி, 'மேழிச்செல்வம் கோழைப் படாது,' என்ற எண்ணத்தை இந்த அரசு கடைபிடித்து ஆண்டு தோறும் விவசாயத்தில் பாதிக்கப்பட்டு வாழ்கிற ஏழை விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசு அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி அதைக் காலந்தாழ்த்தாது உடனடியாக நிறைவேற்ற வேண்டு மென்று நான் சார்ந்திருக்கிற பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்,



1984 மார்ச் 8]

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனு மதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : சிறு பாசனத் திட்டத் தைப் பொறுத்த வரையில், அரசு ஒதுக்கியுள்ள நிதி போதாது. அரசுக்கு நிதிப்பற்றாக்குறை இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இருப்பினும் முக்கியமான திட்டங்களை நிறை வேற்ற அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியில் மலட்டாறு திட்டம் நீண்டகாலமாக நிறை வேற்றப்படாமல் இருந்து வருகிறது. இந்த பட்ஜெட்டில் அது வரும் என்று எதிர்பார்த்தேன். இந்த பட்ஜெட்டிலே அது வந்த தாகத் தெரியவில்லை. இன்றைக்குப் பெய்த மழையின் காரண மாகவும், தொடர்ந்து 17 நாட்களாகப் பெய்த மழையின் காரண மாகவும், அந்த மலட்டாறில் தண்ணீர் ஓடி, அந்த மழைத் தண்ணீர் வீணாகக் கடலில் போய் சேரும் நிலைமையுள்ளது. ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றினால் நல்லது. அதன் காரணமாக அந்தப் பகுதியில் இருக்கும் 25 கிராமங்கள் பலன் அடையும். 25,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். ஆகவே, அந்த மலட்டாறு திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு ஏழை எளிய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், ஏகபோக முதலாளிகள் வர்க்கம் வாழ்ந்துகொண்டு இருக்கிறது. மத்திய அரசும், மாநில அரசும் நிலச் சீர்திருத்தச் சட்டம், நில உச்ச வரம்புச் சட்டம் என்று கொண்டு வந்திருந்த போதிலும், ஏழை எளிய மக்களுக்கு அத னால் எந்தவிதமான நன்மையும் ஏற்படவில்லை. அவர்களுக்கு ஒழுங்கான முறையில் கிடைக்க வேண்டிய நிலம் கிடைக்கவில்லை. இதை உற்று நோக்குகிற போது பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற முறையில் தான் அரசு இருக்கிறது. ஆகவே, அந் அந்தத் திட்டம் தோல்வியடைந்து இருக்கிறது. ஆகவே, அந் தச் சட்டங்களை மறு பரிசீலனை செய்து, விவசாய மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் நிலம் கிடைக்க உத்தரவாதம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு விலை நிர் ணயம் செய்யும் அதிகாரம் விவசாயிகளிடத்தில் இல்லை. அதன் விலையை நிர்ணயம் செய்பவர்கள் வணிகர்கள்தான். ஆகவே, இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்வதற்கான செலவைக் கணக்கிட்டு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; தற்போது ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 165 கொடுக்கிறார்கள். அதற் கும் மேலே கூடுதலாக அரசு தொகை கொடுப்பதை வரவேற் கிறேன். இருந்தாலும் தனியார்கள் 200 ரூ. என்று வணிகத்

துறையில் சென்றால் சொல்கிறார்கள். ஆகவே, உற்பத்தி செய்த விவசாயிக்கு அந்தப் பலன் கிடைக்கின்ற வகையில் வழி வகைகளைச் செய்ய வேண்டும். இதை நம்முடைய அரசு மத்திய சர்க்காருக்கு வலியுறுத்தி அந்த அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், உழைக்கும் வர்க்கம் உழைத்து வதங்கும் நேரத்தில், வணிகப் பெருமக்கள் நல்ல நிலையில் வாழ்கிறார்கள். இது அரசுக்குத் தெரியும். இந்த மாமன்றத்தில் இருக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆகவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முறையில், அந்த விலை நிர்ணயம் செய்யும் பொறுப்பை உற்பத்தி செய்கிறவர்களுக்கு வழங்குவதற்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நீண்ட நெடுங்காலமாக ஒரு திட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதாவது அங்கே கப்பல் போக்கு வரத்தை சீர் செய்யக்கூடிய இராமேஸ்வரம் பகுதியில் சேது சமுத்திரம் திட்டம் நீண்ட நெடுங்காலமாக கேட்பாரற்று இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மத்திய சர்க்கார் சர்வே செய்தது, இன்னும் திட்டம் வரவில்லை. போன ஆண்டு வரும் என்று எதிர்பார்த்தோம்; வரவில்லை. இந்த ஆண்டும் எதிர்பார்த்தோம். இந்த ஆண்டில் கூட அதற்கு நிதி ஒதுக்கப்பட வில்லை. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் மிக மிக பின் தங்கிய நிலையில் இருக்கிற இராமநாதபுரம் மாவட்டம் வளம் கொழிக்கும் ஒரு மாவட்டமாக மாறிவிடும். அங்கே உழைப்புக்கு ஆள் ஏராளமாக உள்ளார்கள். கிட்டத்தட்ட 50,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க அந்தத் திட்டம் பேருதவியாக இருக்கும். அது மட்டுமல்லாமல் மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் பெருமளவுக்கு நிதி கிடைக்கும். எனவே, அந்தத் திட்டத்தை இந்த ஆண்டிலாவது செயல்படுத்த தேவையான நிதியை ஒதுக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியை பொறுத்தவரையில் இந்த ஜனவரி மாதம் 31-ஆம் தேதி ஆரம்பித்த மழை பிப்ரவரி 19-ஆம் தேதிதான் ஓய்ந்தது. அதன் பிறகு 28-ஆம் தேதி பெய்ய ஆரம்பித்த மழை இன்னும் தொடர்ந்து பெய்துகொண்டே இருக்கிறது. கடும் மழையினால் எல்லா விவசாயமும் அழிந்து விட்டது என்று நேற்றைய தினம் எனக்கு செய்தி வந்திருக்கிறது. நீண்ட காலமாகவே அந்தப் பகுதி விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லாத பகுதி. அந்த விவசாயமும் இப்போது முழுமையாக அழிந்துவிட்டது. அதனால் ஆயிரக்கணக்





கான விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு எந்தவிதமான
தொழிலும் இல்லாமல் கையை பிசைந்துகொண்டு வீணே இருக்கி
றார்கள். விவசாய நிலங்கள் கூட பெருமளவுக்கு பாதித்து
விட்டன. வேறு தொழில் செய்வதற்கும் அங்கே வாய்ப்பு
இல்லை வணிகப் பெருக்கமும் இல்லை. 90 சதவீதம் மக்கள்
விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். அங்கே பெரும் நஷ்
டம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இதிலே நம்முடைய அர
சாங்கம் தீவிர கவனம் செலுத்தி, அந்த விவசாயப் பெருங்குடி.
மக்களை வாழவைக்க ஏதாவது வழிவகை செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கால்நடையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்
கள். எங்கள் பகுதியில் அநேகமாக கால்நடைகள் அழிந்துபோய்
விட்டன. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில்,
5,000 கால்நடைகளுக்கு மேல் இறந்துவிட்டதாக நேற்றைய
தினம் எனக்கு தகவல் வந்திருக்கிறது. வருவாய்த் துறை அமைச்
சரவர்கள் அங்கே ஏற்பட்ட சில சேதங்களைப் பற்றிச் சொன்
னார்கள். இன்னும் சேதத்தைப் பற்றிய விவரம் முழுமையாகத்
தெரியவில்லை. கிருதமால் நதி, குண்டாறு, ராமனேரி, நாரா
யணகாவேரி எல்லாம் வெள்ளக் காடாகி காட்சியளிக்கிறது.
ஆகவே, அங்கே பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதில்
சந்தேகமில்லை. வெள்ளப் பெருக்கத்தினால் கால்நடைகள்
எல்லாம் இறந்துவிட்டன. இப்போது அங்கே மூன்று கால்நடை
ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. இன்னும் அங்கே இரண்டு கால்
நடை ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். மேலும், இப்போது அங்கே இருக்கிற கால்நடைகளுக்கு
நோய் பரவிக்கொண்டிருக்கிறது. கால்நடை ஆஸ்பத்திரிகளில்
தேவையான மருந்து இல்லை என்று டாக்டர்கள் சொல்வதாக
வும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே, உட
னடியாக தேவையான மருந்துகளை அந்த மருந்தகங்களுக்கு
அனுப்பி, கால்நடைகளுக்கு பரவுகின்ற நோயைத் கட்டுப்படுத்தி
அந்தக் கால்நடைகளை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை விவாதத்தில் பல நல்ல
கருத்துக்களைச் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு
நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு இருக்கிறேன். கிட்டத்தட்ட
4 ஆண்டு காலமாக இல்லாத அமைதி இன்றைக்கு இந்த மன்
றத்தில் இருக்கிறது. ஏனென்றால் ஒரு உறுப்பினர் பேசும்போது
மாற்றுக் கருத்து வராமல், அடுத்த உறுப்பினர் மறுப்பு தெரி
விக்காமல் இருந்தார்கள். இந்த முறையை நான் பாராட்டு
கிறேன். இந்த நிலை இந்த மாமன்றத்தில் தொடர்ந்து இருக்க
வேண்டும். இந்த மரியாதையும், கண்ணியமும் என்றைக்கும்
இருக்க வேண்டும் என்று நான் சார்ந்திருக்கிற அகில இந்திய
பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பாக தெரிவித்து, பேச வாய்ப்
பளித்ததற்கு நன்றி தெரிவித்து என் உரையை முடிக்கிறேன்.
ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9—3—1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

114. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி - நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 3—10—1983-ஆம் நாளிட்ட 1459-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

115. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26—10—1983-ஆம் நாளிட்ட 1519-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

116. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந் திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 26—10—1983-ஆம் நாளிட்ட 1520-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைப்க்க பெற்றது].

117. 1982-83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரக்குக் கிடங்கு கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (தமிழ்) [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

118. 1983-ஆம் ஆண்டிற்கான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் ஒன்பதாம் ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

ஏதுவுமில்லை.

136225

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS,

### IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasanthan Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12
10. Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli 1.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15. Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathipagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18. Javakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajantha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26. Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1. Jain Book Agency, New Delhi.
2. Inter National Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.